தமிழக கள்ளர்

வரலாறு

கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன்

வெளியீடு

வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம்

வெள்ளலூர் நாடு

நூல் விபரம்

நூல் பெயர்	:	தமிழக கள்ளர் வரலாறு
ஆசிரியர்	:	கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு 2018 (இணையம்)
பக்கங்கள்	:	282
அளவு	:	24 X 19 செமீ.
விலை	:	₹.400/-
உரிமை	:	நூல் ஆசிரியருக்கே
அச்சிட்டோர்	:	ஆப்பிள் பிரிண்டர்ஸ்
		எண் : 18, வைத்தியநாதன் ஐயர் முதல் தெரு,
		செனாய் நகர், மதுரை - 600 020.
		தொலைபேசி எண் : +91 452 - 4500 977
		அலைபேசி எண் : +91 9488 460 977

பதிப்புரிமை மற்றும்

தொடர்புக்கு : மு.ராதாகிருஷ்ணன்

1/436, உறங்கான்பட்டி அஞ்சல்,

மேலூர் வட்டம்,

மதுரை மாவட்டம் - 625 109

அலைபேசி எண் : +91 94860 61394

ஆசிரியர்

என் எண்ணங்கள்

இளவயது முதலே மனதில் உருவான எண்ணத்தை அசைபோட்டு எத்தனையோ நூல்கள், ஓலை முறிகளைப் படித்து, செவிவழிச்செய்தி கேட்டறிந்து ஏராளமான ஆதாரங்களைச் சேகரித்து என்னுடைய இலட்சியப் படைப்பாக இந்நூலை உருவாக்கியுள்ளேன். இவ்வாறு அவற்றில் உள்ள மிகைகளை நீக்கி ஓரளவுக்கு அக்கால நிகழ்வுகளை உய்த்துணர வேண்டியுள்ளது, அவற்றையெல்லாம் துருவித்துருவி ஆராய்ந்தேன். விபரம் தெரிந்த பெரியோர்கள் அறிஞர்கள் பலரைச் சந்தித்துப் பேசித்தெளிவுபெற்றேன். அதன் பின்னரே இப்பெரும் பணியை மேற்கொள்ளும் துணிவு பிறந்தது.

வரலாறு என்பது உண்மையில் இலக்கியமேயாகும். உண்மை நிகழ்ச்சிகள் நல்ல முறையில் விளக்கப்படுமாயின், கற்பனைக் காவியத்தைவிட சிறப்பாகவும் சுவையுடையதாகவும் அமையும்.

இலக்கியம் படைக்க வரலாறு வேண்டும். வரலாறு எழுத இலக்கியம் வேண்டும். குறைகளையும் நிறைகளையும் மிகைப்படுத்திக் கூற இலக்கியம் இடமளிக்கிறது. எனவே இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு வரலாற்றை உணர முற்படும்போது, இந்த மிகை அம்சத்தை தள்ளிவிட்டே பார்க்க வேண்டும்.

குறைகளை அடியோடு மறைப்பதோ, நிறைகளை மிகைப்படுத்துவதோ கூடாது. குறைகளும், நிறைகளும் கொண்டவனே மனிதன். மனிதன் என்பவன் கறுப்பு, வெள்ளை, வண்ண நூல்களைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடை என்பர் அறிஞர் பெருமக்கள்.

எந்தவொரு செயலும் வெற்றிபெற வேண்டுமானால் இறைவனின் ஆசியும் துணையும் வேண்டும். எனவே வெள்ளலூர் நாட்டுத்தெய்வங்களான ஸ்ரீ ஏழைகாத்த அம்மன், ஸ்ரீ வல்லடிகார சுவாமி, ஸ்ரீ கருங்கல் மந்தைச்சுவாமி எனது குலதெய்வங்களான, ஸ்ரீ முத்துப்பிடாரி அம்மன், ஸ்ரீ நாட்டார் மூர்த்தி அய்யனார் மற்றும் எனது தாயின் குலதெய்வமாகிய ஸ்ரீ காளமேகப்பெருமாளையும் மற்ற நாட்டுத் தெய்வங்களையும், கள்ளழகர் கோவில் ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பணசாமி, ஸ்ரீ மாயாவுதாரசுவாமி அவர்களையும் வணங்கி துணைக்கு அழைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தேன். எழுத ஆரம்பித்தவுடன் இவ்வரலாற்றுக்கு என்னோடு இத்தெய்வங்களுக்கும் பொறுப்பும், உரிமையும் உண்டு. ஏனென்றால் அவர்களும் என்னோடு இந்த வரலாற்றுக்காக எனக்கு வழி காண்பித்து, என் முன்னே செல்கிறார்கள் என்பது என் நம்பிக்கை.

வெள்ளலூர் நாட்டின் விடிவெள்ளி, சட்டம் வகுத்தவரும், முதல் பெரியம்பலகாரரான தெய்வத்திரு. வீரணன் அம்பலகாரருக்கும், அண்டி வந்தோரை ஆதரித்தும், அவர்களுக்கு நிலையான இடம் கிடைக்க காரணமாயிருந்தவருமானவரும், வெள்ளலூர் நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் முக்கிய பொறுப்பு ஏற்றவரும், நீதியின் பெருமையை நிலை நாட்டியும், சிறுபான்மையினர் நலத்தில் எப்பொழுதுமே தனது எண்ணமாய்க் கொண்டு செயலாற்றி வந்தவரும், எனது பாட்டனான மாவீரன் கட்டக்காளை அம்பலகாரர் அவர்கட்டும். இந்நாளில் எங்களது கட்டக்காளை வகையறாவின் பெருமையை தெரியவைத்தவரும், தன் மூத்த மகனாகவே பாவித்து என் வளர்ச்சியில் பெருமிதம் கொண்ட எனது அய்யா கட்டக்காளை தெய்வத்திரு.க.சோ.வேலாயுதம் அம்பலம், இளங்கச்சி, உறங்கான்பட்டி அவர்களுக்கும் எனது பாசமிகு மைத்துனர் தெய்வத்திரு.மு.சண்முகம் அம்பலகாரார், உறங்கான்பட்டி அவர்களுக்கும் எனது தந்தை தெய்வத்திரு. க.பெரி முத்தையா அம்பலம், தாய் தெய்வத்திரு. கண்ணம்மாள் அம்மாளுக்கும்,

எனது மூத்த புதல்வன் என்றும் நினைவில் வாழும் ராஜேஸ் கண்ணன், (கணிணி வல்லுனர், விரிவுரையாளர்) அவர்களுக்கும் இந்த நூலை சமர்ப்பிக்கிறேன்.

எனது வாழ்வில் உறுதுணையாக இருந்து, இந்நூல் எழுதும் போது அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய என் மனைவி சற்குணத்திற்கும், இளையபுதல்வன் விஜய் ஆனந்திற்கும் B.C.S., BL., வழக்கறிஞர் அவர்களுக்கும், மகளில்லா குறையை தீர்க்க வந்த மருமகள் சுதந்திரா தேவி M.A., M.Phill, Sub Inspector of Police அவர்களுக்கும், எனது பேரன்கள் செல்வன்.ருத்ரவேலன் மற்றும் மணிபாரதிக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சோர்ந்து போன நேரத்தில் எல்லாம், எனக்கு தைரியம் சொல்லி, இந்நூலை தொடர்ந்து எழுத எனக்கு உற்சாக மூட்டிய வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம், வெள்ளலூர் நாடு நிர்வாகிகளான திரு.ம.ராமையா அம்பலம் (சூறாவளி, வேங்கைப்புலி கரை) உறங்கான்பட்டி, திரு.கி.கதிரவன் அம்பலம் (சிட்டன் வகையறா, சாயும்படைதாங்கி கரை) புலிமலைப்பட்டி, திரு.சுப.கிட்டு (எ) கிருஷ்ணன் அம்பலம் (நரியன் வகையறா, செம்புலி கரை) குப்பச்சிப்பட்டி, திரு.நாட்டார். செ.வீ.ராஜ்குமார் அம்பலம் (நண்டன் கரை), கூட்டுறவுபட்டி, திரு.கா.கந்தசாமி அம்பலம் B.E., மொந்தைஉறங்கான் வகையறா, சலுப்புலி கரை, உறங்கான்பட்டி மற்றும் இவர்களோடு இணைந்து இந்நூலை சிறப்பாக அச்சிட்டு, நூலாக்கி வெளியிட எனக்கு பேருதவி செய்த, எனது உறவினரும், நண்பருமான திரு.இரா.மணிகண்டன் அம்பலம், ஆப்பிள் பிரிண்டர்ஸ் (மதுரை மற்றும் சிவகங்கை) அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நூலில் அலங்கரித்துள்ள பாண்டிய நாட்டுக்கோவில்கள், கள்ளர்நாட்டுகோவில்கள் போட்டோக்களும் எடுத்து தந்து உதவிய திரு.ஆ.சிவராமன், சுமங்கலி வீடியோஸ் உறங்கான்பட்டி அவர்களுக்கு நன்றியை தெரிவிக்கிறேன்.

என் லட்சியப்பணியை நன்றாகச் செய்த மன நிறைவுடன் வாசகர்கள் முன் இந்நூலைப் படைத்துள்ளேன். மேற்கொண்ட பணியில் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளேன் எனபதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இனி வாசகர்களாகிய உங்களுடையதாகும்.

வணக்கம்

கட்டக்காளை மு.இராதாகிருஷ்ணன்

ஆசிரியர்

நாளும் செய்வோம் நல்ல தொண்டு ! என்றும் வேண்டும் தங்கள் இன்ப அன்பு ! !

நல்லாசிரியர் அரிமா, **சொ.பகீரதநாச்சியப்பன்**

தொண்டு நெறிச்செல்வர்

தென்மண்டலத் தலைவர் : உதவிக்கரம் மாற்று திறனாளர் நல்வாழ்வுச்சங்கம்

மாவட்ட மதிப்புறு செயலர் : சேவா சமாஜம் (Guide of Service)

மாவட்ட மதிப்புறு செயலர் : சிறை மீண்டோர் உதவிச்சங்கம் (Discharge Prisioners Aid Society)

தலைவர் : இராசராசன் கல்வி மற்றும் பண்பாட்டுக் கழகம், சிவகங்கை மாவட்டம், பதிவு எண் : 199/1986

15, மேகலை தெரு, செந்தமிழ்நகர், சிவகங்கை, (அஞ்சல்) (மாவட்டம்) செல் : 94434 66499

மடல் எண் : 31/2017 நாள் : 21.05.2017

அணிந்துரை

தமிழக கள்ளர் வரலாறு என்னும் நூலின் படைப்பாளி மு.இராதாகிருஷ்ணன் அவர்கள். அன்னாரை ஈன்றெடுத்தவர்கள் வெள்ளலூர் நாடு தந்த மாபுகழ் கொண்ட முத்தையா அம்பலம் மாசற்ற கண்ணம்மாள் ஆகியோர், உறங்கான்பட்டி என்னும் விழிப்புடைய கிராமத்தைச் சார்ந்தவர்கள்.

இராதாகிருஷ்ணன் அவர்கள், சிறுகை நீட்டி, இட்டும் தொட்டும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து துள்ளித் திரிகின்ற காலத்தில், கல்வியில் கவனம் கொண்டு தன்னை மத்திய சுங்கம் மற்றும் கலால் துறையில் சிப்பாயாக (காவலர்) பணிசேர்ந்து, படிப்படியாக பல பதவி உயர்வு பெற்று, ஆய்வாளாராக உயர்த்தி பணியாற்றிப் பெருமை சேர்த்தவர், அவர் சிறந்த எழுத்தாளராக நிலைத்து வாழ்பவர்.

அன்னாரின் முதல் படைப்பு வெள்ளலூர் நாட்டு கள்ளர் வரலாறு. வெள்ளலூர் நாட்டு தெய்வத்தின் திருவருளால், தற்போது தமிழகக் கள்ளர் வரலாறு எழுதியுள்ளார். அவரை ஊக்கப்படுத்தியது இராசராசன் கல்வி மற்றும் பண்பாட்டுக் கழகம்.

1930 களில் தஞ்சை நடுக்காவேரி நற்றமிழ் ஆசான்; உரையரசர்; நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் கள்ளர் சரித்திரத்தை நூலாக்கினார். அதன் வழி நூல் தமிழகக் கள்ளர் வரலாறாகும்.

தான் பிறந்த மண்ணின் சிறப்பும், குலத்தின் பெருமையையும் வாழ்கின்ற தமிழ் மக்கள்: வருகின்ற சந்ததியினருக்கு, எடுத்துச் சொல்லவும் எழுதப்பட்ட நூல்கள்தான் கள்ளர் சரித்திரம், தமிழக கள்ளர் வரலாறு போன்ற நூல்களாகும்.

இந்த நூலாசிரியர், சாதிகள் எப்படி தோன்றின. நம்முடைய கடவுள் வழிபாடு, ஆகியவற்றில் ஆரியம் எப்படிக் கலந்தது? முடியுடைய வேந்தர்களாக நம்மவர்கள் அரசாண்டது, ஆங்கிலேயர் காலத்திலும் தன்னிகரில்லா தமிழர்கள் ஆட்சி புதுக்கோட்டை மன்னர்களால் ஆளப்பட்டு, உரிமைபெற்ற இந்தியாவில் ஆண்ட தமிழ் வேந்தர்களில் இவர்களே முன்னிற்பவர்களாக இருந்தது பற்றியும், இலவச கல்வித் திட்டத்தையும், ஊராட்சி முறைகளையும் செயல்படுத்தி தந்தவர்களில் இவர்களே முகவரிகளாக திகழ்கிறார்கள் என்பதையும், நூலாசிரியர் “தனது நிறுத்துதல்”, என்னும் உத்தியில் கூறியிருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது.

கள்ளர் இனத்தில் காவிரிக்குக் கல்லனை கட்டிய சோழமன்னர்கள் அவர்தம் உலக அதிசய தஞ்சைப் பெரிய கோவில், கங்கை கொண்ட சோழபுரம், ஈழநாடு கொண்டது, தாய்லாந்து கண்டது என்ற வரலாற்று உண்மைகளை சங்க இலக்கிய மேற்கொள்களோடும்; கல்வெட்டுக்கள் வாயிலாகவும்; பகிர்ந்திருப்பது நூலாசிரியர் கட்டக்காளை மு.இராதாகிருஷ்ணனின் ஆழந்த ஆராய்ச்சியையும், இந்த நூலைப் படிப்பவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள இயலும்.

“தத்துவ ஞானிகள் கூட தன்னை அறிதல் வேண்டும்” “தன் மூதாதையர்களை உணர வேண்டும்”, என்று பகரும் போது பாரில் சிறந்த நாம் பிறந்த குடியின் பெருமையை அறிந்து கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும்.

“குடிசெய்வல் என்றும் ஒருவற்குத் தெய்வம்

மடிதற்றுத் தானமுந் துறும்”.

என்ற வான்புகழ் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, தெய்வம் தன் குடியை உயர்வடையச் செய்வேன் என்பவர்களுக்கு, தன் ஆடையை வரிந்து கொண்டு முன் நின்று அருள்பாலிக்கும் என்பதையும், நூலாசிரியர் கட்டக்காளை மு.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நற்றமிழ் ஆசான் பகீரதன் நாவாறப் பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன்.

வளர்க அவரது வரலாற்று வரிகள்.....

உயர்க அவர்தம் புகழ் ! ! !

வாழ்க வளமுடன்

சிவகங்கை

21.05.2017

சொந்தங்களில் ஒருவன்



(சொ.பகீரத நாச்சியப்பன்)

மயில்ராயன்கோட்டை நாட்டார்

apple
printers

வாழ்த்துரை

சரித்திரக் கதைகளில் எவ்வளவு சரித்திரம் இருக்க வேண்டும் என்பது பற்றிய சர்ச்சைகள் உள்ளன. எழுதுபவர் கட்டாயமாக அந்தக் கால கட்டத்தில் இருந்தவரல்ல, மற்றொரு காலத்தவர். சரித்திர ஏடுகளும், குறிப்புகளும் குறையுள்ளவை, வேறுபடுபவை.

எனவே சரித்திர சம்பவங்களின் இடைவெளியை நிரப்ப வேண்டியது. கட்டாயமாகிறது. அதில்தான் சவாலும் உள்ளது. அப்படி எழுதும்போது நடையும், சம்பவங்களும் இப்படித்தான் நடந்தது என்றில்லாமல், இப்படி நடந்திருக்கலாம் என்று காட்டும் சாகசம்தான் முக்கியம்.

இந்த உத்தியின்படி பெரும்பாலான வரலாறுகள் எழுதப்படுகின்றன. அவ்வாறு எழுதப்படுகின்ற நூலானது கல்வியறிவு தந்து, நடைமுறை நிலை தெரிவித்து, கடமைகளைக் காட்டி, உரிமைகளைச் சேர்த்து, பொருளாதாரத்தை வளர்த்து, வரலாற்று உண்மைகளை எடுத்துரைத்து, பண்பாடு, கலாச்சாரத்தைக் காக்கும் செயற்பண்புகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். தமிழக கள்ளர் வரலாறு அத்தனையும் கொண்ட வரலாறாக இருக்கின்றது.

கள்ளர்களுக்கு நூற்றுக்கணக்கான பட்டம் இருப்பதை அறிந்து அதற்குண்டான காரணமும், விளக்கம் கொடுத்திருக்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது. மேலும் ஆட்சிமுறை பற்றியும், நீர் மேலாண்மை பற்றியும் தெளிவாக விளக்கியிருப்பது, படிக்கும்போது ஆச்சரியப்பட வைக்கிறது.

வரலாறு படித்தால்தான், வரலாறு படைக்க முடியும் என்பதை ஆசிரியர் உணர்த்தியிருக்கிறார்.

இந்நூல் ஆசிரியரான திரு.கட்டக்காளை மு.இராதாகிருஷ்ணன் அவர்களின் முதல் நூலான வெள்ளலூர் நாடு வரலாறு நூல் வெற்றியடைந்தது போல் இந்நூலும் வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

இரா.மணிகண்டன்
M.A., D.P.T.,

www.appleprinters.in

Door No : 18 Vaithiyanathan iyyer 1st Street, Shenoy Nagar, Madurai - 20. Tamil Nadu, India.
Office : +91 452 - 4500 977, Mobile : +91 9488 460 977
E-mail : applemdur@gmail.com

வாழ்த்துரை

கடல் அலைகள் நின்று போவதில்லை, தொடர்ந்து கொண்டே இருக்கும், அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அதுபோல்தான் கள்ளர் இனத்தின் பெருமையும், வரலாறும் மறைக்கப்பட்டதைப்போல், பல உண்மைகளும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டு வந்துள்ளது. சுதந்திர போராட்டத்தில் கள்ளர் சமுதாய மக்களின் பங்கு வெளிச்சத்திற்கு கொண்டுவராமல் போனது வருத்தமானதுதான். காலம் கடந்து கள்ளர் இன வரலாறு எழுதப்படுகிறதை அறியும்போது பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

யூகிக்க முடியாத அளவு பெருமையும், மேன்மையும், புகழும் கொண்டது இந்த கள்ளர் இனம். இவ்வினத்தில் பிறந்த ஒவ்வொருவரும் பெருமை கொள்ளும் அளவுக்கு சோழ மன்னர்களின் புகழ் மேலோங்கி உள்ளது.

தமிழக கள்ளர் இனத்தின் பெருமையும், சிறப்பும் இந்நூலில் மிகவும் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்நூலிற்காக அரும்பாடுபட்டு நல்லபல கருத்துக்களையும், வரலாற்று உண்மைகளையும் மிக ஆழமாக பதிவுசெய்துள்ளார் நூலாசிரியர் கட்டக்காளை மு.இராதாகிருஷ்ணன் அவர்கள்.

அன்னாரது பணி மென்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

கள்ளர் சமுதாயத்தின் வாழ்வியல் மற்றும் வரலாறு பற்றிய ஒரு அறிய பொக்கிசமாக இந்நூல் திகழும் என்பதில் எந்த ஐயமுமில்லை. இது போன்ற படைப்புகள் கள்ளர் சமுதாயத்தின் வைரக் கற்களாகும்.

வாக்கிலே கள்ளர் வாழ்விருக்கும்
வீர
உணர்விலே கள்ளர் உயிர் இருக்கும் ! ! !

என்பர் அறிஞர் பெருமக்கள்.

வீரமும், விவேகமும் நிறைந்த கள்ளர் மக்களின் வரலாற்று நூல் வெற்றி பெற எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

நன்றி

வணக்கம்

திருமதி. சுடர்விழிசேதுபதி B.E., M.B.A.,

கன்னிமார்பட்டி, வெள்ளலூர் நாடு (இ) துபாய்

வாழ்த்துரை

இன்றைய சம்பவங்கள், நாளைய சரித்திரம். காலத்தின் போக்கிலே, மதிப்பீடுகளும், அளவுகோல்களும் மாறுதலடைகன்றன. ஆனாலும் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தனித்தன்மைமிக்க அளவுகோலுண்டு. அந்த அளவுகோளையும், மதிப்பீட்டையும்தான் சரித்திர வல்லுநர்களும், சரித்திர கதாசிரியர்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றனர்.

ஒவ்வொரு சரித்திர நூல்களும், மறைந்துவிட்ட அல்லது மறந்துவிட்ட ஒரு நாகரிகத்தின் அடையாளத்தையும், அளவுகோல்களையும் நமக்கு அறிமுகப்படுத்துகிற பலகணியே.

தமிழக வரலாற்றில் சோழர் ஆட்சியே பேரரசாக விளங்கியது. வட இந்தியாவில் பேரரசுகள் தோன்றி வீழ்ச்சியடைந்த வேளை தென்னகத்தில் சோழ அரசு பலம் பெற்ற பேரரசாக பல நூற்றாண்டுகள் வரை நீடித்தது.

இந்தியாவுக்குள் நுழைந்த கிரேக்கர்களை ஓட ஓட விரட்டிய மௌரியப் பேரரசின் கைகள், வட இந்தியா மட்டுமின்றி தெற்கே கர்நாடகம் வரைக்கும் நீண்டன. ஆனால் சந்திரகுப்தர் தொடங்கி வேறு எந்த மௌரியப் பேரரசாலும் தமிழ்நாட்டைத் தொடக்கூட முடியவில்லை. அதற்கு காரணம் மூ வேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொண்டாலும் அயலாரைத் தமிழ்நாட்டு சிம்மாசனத்தில் அமரவைக்க துளி கூட இடம் கொடுக்கவிலலை அதிலும், சோழர்கள் பிற்காலத்தில் வடக்கேயும் கடல் தாண்டியும் புலிக்கொடியை உயரப் பறக்கவிட்டார்கள். சோழர்கள் காலத்தில் அடக்கமே பெண்களின் சிறந்த குணமாக இருந்தது. கற்பு, ஒழுக்கம், பெண்களின் அணிகலன் என்று போதிக்கப்பட்டது.

அந்த காலத்தில் நிலவிய மோசமான ஒரு பழக்கம், கனவன் இறந்த உடன் கட்டை ஏறுதல். இராசராசனின் தாய் வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறி தன் உயிரைப் போக்கியிருக்கிறார். இதற்காக அக்காலத்தில் வானவன் மாதேவியார் மிகவும் போற்றப்பட்டிருக்கிறார்.

தன் தாய் உடன் கட்டை ஏறியதை கண்டு மிகவும் மனம்நொந்து இனிமேல் யாரும் உடன்கட்டை ஏறக்கூடாது என இராசராசன் கட்டளையிட்டு, பின்பற்றப்பட்டது.

இன்றைய தலைமுறையினருக்கு நம் இனத்தின் வீரத்தையும், பண்பாட்டையும், பெருமைகளையும், ஆசிரியர் அவர்கள் தமிழக கள்ளர் வரலாறு மூலமாக நமக்கு எடுத்துக்கூறியுள்ளார். இதுபோல் இன்னும் பல ஆசிரியப்பெருந்தகைகள் மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட நம் இன பெருமைகளை வெளிக்கொணர வேண்டுமென்பது எனது தாழ்வான வேண்டுகோள். இந்த வரலாற்று நூலை எழுதிய ஆசிரியர் உறங்கான்பட்டி கட்டக்காளை மு.இராதாகிருஷ்ணன் அவர்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

நன்றி,

வணக்கம்,

பா.திருநிறைச்செல்வம் பார்த்திபன் B.Sc.,

உறங்கான்பட்டி

படைப்பாளிக்கு பாமாலை

சங்கத் தமிழ் வளர்த்த புண்ணிய பூமியாம்
மங்காப் புகழ்கொண்ட மாமதுரை கிழக்கே
வடகலை வேள்வி நாடு வள்ளல்கள் நிறைந்தநாடு
வீரம் செறிந்த நாடு வெள்ளலூர் நாட்டிற்குள்ளே
உத்தமர் பலர்வாழும் உறங்கான்பட்டி நகர்தனிலே
நாட்டிற்கு நல்லகரை நாடறிந்த பெரியகரையாம்
நயமுடையோர் போற்றுகின்ற நய்க்கான் கரை தனிலே
பெரும் புகழ் பெருமை கொண்ட கட்டக்காளை வகையறா
பெயர் நிலைக்க வாழ்ந்து வந்த பிரியமுள்ள தம்பதியர்
"முத்தையா, கண்ணாத்தாள்" ஈன்றெடுத்த முதற்பிள்ளை
முக்குலத்து வரலாற்றை முடிந்தவரை கற்றறிந்து
முன் நிற்கும் "கள்ளர்" வரலாற்றுக் காவியத்தை
காலத்தே அழியாக் கருவூலப் பெட்டகமாய்
கற்பவர் மனதில் கண்ணாடியாய் ஒளிவீசும்
அற்புதப் படைப்பாய் ஆக்கிய நல்ஆசிரியரை
அன்புடன் வணங்கி, அழியாப் புகழ்பெற வாழ்த்துகிறேன்.

வாழ்த்துப்பா பாடும்

இராம. தங்கையா B.Sc.,

மின்வாரிய அலுவலர் (ஓய்வு)

பொருளடக்கம்

வ.எண்	தலைப்புகள்	பக்க எண்
1.	தமிழர்கள் வரலாறு, மதம், இனம்	3
2.	பண்டைத் தமிழ் மக்கள்	5
3.	முக்குலத்தோர்	7
4.	களவீரர்	10
5.	மனுநீதிச்சோழன்	12
6.	இராசராச சோழன்	14
7.	மூப்புக்குறி அல்லது மூப்புரிமை	16
8.	இராசேந்திர சோழன், கங்கை கொண்ட சோழபுரம்	18
9.	முதல் இந்தியன்	22
10.	ஆரவாரம் இல்லாத அதிசய தேர்தல்	23
11.	கல்லணை, வீராணம் ஏரி	30,31
12.	இராசராசனின் நீர் மேலாண்மைத்திறன்	34
13.	விஜயாலயச் சோழர்	44
14.	நட்பு	49
15.	வரப்புயர	55
16.	சோழரது ஆட்சியில் பேராசிரியர் மாதச்சம்பளம்	60
17.	சோழர் ஆட்சி அரசர் பட்டியல்	68
18.	சேக்கிழார்	71
19.	குலதெய்வ வழிபாடு	77
20.	தொண்டைமான் (பல்லவர்)	82
21.	சிவகங்கை தோன்றிய வரலாறு	88
22.	வைத்தியலிங்கத் தொண்டைமான்	90

பொருளடக்கம்

வ.எண்	தலைப்புகள்	பக்க எண்
23.	இராசராசனின் வழித்தோன்றல்	102
24.	வான் கலந்த மாணிக்கவாசகர்	103
25.	தமிழகத்தில் கள்ளர் நாடுகள்	110
26.	மதுரை நாட்டுக்கள்ளர்கள்	115-133
27.	சல்லிக்கட்டு	134
28.	பொருள் மாறிய தமிழ்ப்பழமொழிகள்	142
29	இந்த நாள் இனிய நாள்	147
30	கள்ளர் குலப்பட்டங்கள்	152-178
31	தமிழ் வளர்ச்சியில் சோழர்கள்	182
32	வெள்ளலூர் நாட்டின் சுதந்திர வேட்கை, இனப்படுகொலை	184-189
33	பல்லாங்குழி புகட்டும் பாடம்	197
34	வேகமும் விவேகமும்	200
35	அசோகரை ஏன் நினைவில் வைத்திருக்கிறோம்?	202
36	தலைமை கொள்	209
37	பொறுப்புணர்வு	214
38	சோழர்களது செப்பேடுகள்	221
39	தஞ்சைப் பெரியகோயில் பாடல்	224
40	திருக்கோயில்கள் வண்ணப்படங்கள்	

தமிழக கள்ளர் வரலாறு

கி.பி. முதலாம் நூற்றாண்டில்தான் ஆரியர்கள், மக்கள் செய்துவந்த குலத்தொழில் பிரிவையே சாதிப்பிரிவுகளாக்கி மக்களிடையே உயர்வு-தாழ்வு கற்பிக்கத் தொடங்கினர். இதைக்கண்டு மனம் குமுறி தெய்வப்புலவர் திருவள்ளுவர் முதன் முதலில் பின்வருமாறு கூறுகிறார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு

ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்

- குறள் 972

பிறப்பினால் அனைவரும் சமம், மக்கள் செய்கின்ற செய்தொழில் வேற்றுமையால் உயர்வு தாழ்வு கற்பிப்பது ஒவ்வாது என்பது பொருளுரை.

திருவள்ளுவர் காலம் கி.மு.31 - கி.பி. 36. எனவே, இவர் காலத்திற்கு முன், குலத்தொழில் பெயராலேயே மக்கள் அழைக்கப்பட்டனரேயன்றி சாதிப்பெயரால் அல்ல என்பது தெளிவாகிறது. டாக்டர் கே.கே.பிள்ளை அவர்களின் தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் (பக்கம் 161) சங்க காலத்திலேயே கி.மு.வில் இப்படி இருந்ததாக கூறுகிறார்.

தழிழக வரலாற்றை பொதுவாகவும், தமிழ் இலக்கிய வரலாற்றை சிறப்பாகவும் நோக்கினால் தமிழின் வளர்ச்சியும், இன வளர்ச்சியும் வெவ்வெறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்திருப்பதைக் காணலாம். சங்க காலத்தில் தமிழ் இலக்கியங்களின் பகுப்பு அகத்திலும், புறத்திலும் அடங்கிய உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகும். ஈண்டு முடிவுடைவேந்தர்கள் முத்தமிழ்போல் இயல், இசை, இயக்கம் கொண்டும் காமம், வெகுளி, மயக்கம் நீக்கியும், உண்மைப் பொருளான பதி, பசு, பாசம் நின்றும் அரசர் குலமான சூரிய, சந்திர, அக்கினி குலம் கண்டும், அவரவர் மாலையான பனம்பூ, அத்திப்பூ, வேப்பம்பூ கொண்டும், முக்கனியைப்போல் இன் சுவை தந்தும், அரசாண்ட பெருமைக்குரிய வரிசையில் தலையாய சிறப்புக்குரிய பேரரசன் மாமன்னன் இராசராச சோழன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும்.

தொன்மைத் தமிழகத்தில் பலநூற்றுக் கணக்கான சைவ, வைணவக் கோயில்கள் நிறைந்து காணப்பட்டாலும், கட்டிடக் கலை மாண்பிற்கு தஞ்சைப் பெருவுடையார்கோயில், நுண் கலைக்கு கலங்கரை விளக்காகும். தற்பொழுது நமது கைகளில் தவழும் இந்நூல் ஓரளவிற்கு நமது இன உணர்வை வெளிப்படும் கருவூலமாகத் திகழும். மறைந்தும், மறைக்கப்பட்டும் வருகின்ற கள்ளர் உறவுமுறைகளின் பட்டப்பெயர்களின் பண்பை மீட்டெடுத்து ஒன்றுபட முயற்சிக்கும் செயல்.

கள்ளரினம் நெல்லிகாய் மூட்டை அல்ல, இது ஓர் வலிமை படைத்த ஆலமரம்.

மண்ணுலகில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் மூத்தகுடியே, நீ அரசாண்ட வீரயினம், கள்ளரினமே நிமிர்ந்து பார், வானளாவிய பெருவுடையான் கோயிலை, நீ வாழ்ந்த வரலாற்றுப்படி நிலைகள் நன்கு தெரியும். அடிமை உணர்வு சுக்குபொடியாகும். அன்றும், நாம் முன்னோடிகள்தான், இன்றும் நாம் வழிகாட்டிதான், அதனால்தான் கலைக்கும், பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் நாற்றங்கால் நாம் என்பது புலப்படும்.

“கள்ளர் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு

அன்பே அவருடை மொழியாகும். அமிழ்த வீரமே அவருடைய மரபாகும்.

மானம்பெரிதென வாழ்ந்திடுவார், மற்றவர்க்காகப் பாடுபடுவார்

தானம் வாங்கிடக் கூசிடுவார், தம்மிட உள்ளதைத் தந்திடுவார்.

ஒழுங்கும் ஒழுக்கமும் உயிர் எனப்பேசிடுவார், குடிமையும் குடிப்பிறப்பும்

போற்றிடுவார்! அவர் தான் கள்ளர். அவர் தான் கள்ளர்.

பழங்காலை மேவாதே, புதுக்காலை வெட்டாதே என்ற கொள்கையுடைய நம் மக்களிடையே முழுமையான குலசரித்திரம் என்று ஒன்று இதுவரை இல்லை. பல பேருடைய குலசரித்திரங்களும் ஒரே அச்சில் வார்த்தெடுப்பாற்போல், படித்ததாகத்தான் தானே இருந்து வருகின்றன. எவர் குலத்தைக் குறித்தேனும் சில சரிதைப் பகுதி முதலியன வெளிவந்திருக்குமாயின் அவை கர்ண பரம்பரையில் வந்ததாயிருக்கின்றதேயொழிய ஆராய்ச்சியாளர் தன் ஆராய்ச்சியின் பயனை அறுதியிட்டு கூறிய முடிவுகளாக இல்லை. இவர்கள் எந்த நிலையினர், ஏனையோர் பழக்க வழக்கங்களும், இவர்கள் பழக்க வழக்கங்கங்களுள் எத்தகைய தென்பதை அறிந்து கொள்ள இந்த முயற்சி உதவுமானால், அதுவே யாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு கைகூடியதாகும் என்று கருதுவோம். உலகிலேயே மிகப்பெரிய அறிவு தன்னைப்பற்றி தெரிந்து வைத்திருப்பதுதான். அதாவது தன்னையும் தன் குடும்பம், தன் சமூகம், தன் பண்பாடு, தன் நாடு போன்றவற்றையும் தெரிந்து வைத்திருப்பதுதான். நமது நாட்டார்கள் பல நூறு வருட வாழ்க்கையை தங்கள் மூளையில் இன்னும் சுமந்து கொண்டிருக்கிறார்கள். என்பதைப் பார்க்கும் பொழுது வியப்பாக இருக்கிறது. சமூகத்தின் அங்கம் தான் சாதி. அது ஒரு தனித்த அமைப்பல்ல. ஒவ்வொரு சாதிக்கும் சில தனித்தன்மைகள் இருந்தாலும், அந்த சாதி மட்டும் சமூகத்தில் தனித்து இயங்க இயலாது. அதனால் தமிழ்ச் சமூகத்தைப்பற்றி ஒரு பொதுவானயாராலும் அவர்களின் சொந்த சாதியைப்பற்றி புரிந்து கொள்ள இயலாது என்பதை உணர்ந்து தமிழ்ச் சமூகத்தின் பொது வரலாற்றிலிருந்து தனது இனவரைவுகளுக்குள் உள்ளே செல்ல முடியும்.

வரலாறு என்பது கடந்த காலத்தின் பதிவு என்பது மட்டுமல்ல, நிகழ்காலத்தின் தொடர்ச்சியும், எதிர்காலத்தின் கணிப்பும் கூட.

ஒரு சமூகத்தின் அரசியல் வரலாற்றை எழுதாமல், அதன் பண்பாட்டை மட்டும் விளக்குவ தென்பது அடித்தளம் இல்லாமல் கட்டுவது போலாகும். கள்ளர் இனத்திற்கு ஒரு தனித்தன்மை அரசியல் உண்டு. இம்மக்கள் தனித் தன்மை கொண்ட சாதியாக இருப்பதால் இவர்களுக்கென்று ஒரு நெடிய அரசியல் வரலாறு உள்ளது.

தமிழர்கள் வரலாறு, மதம், இனம்

ஆதிகாலத்திலேயே தோன்றியது தமிழர்குலம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே முன் தோன்றிய மூத்தகுடி எனப் புகழப்படும் தமிழரின் வரலாறு மிகத்தொன்மையான காலத்திலேயே ஆரம்பமாகியது.

பாரதம் முழுவதுமே திராவிடர்கள் பரவலாக வாழ்ந்து வந்துள்ளனர். சிந்து சமவெளியில் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் வட்டெழுத்துகளுடன் கூடிய மண் கலங்களையும் கற்சிற்பங்களையும் பயன்படுத்தி வந்தனர். தெற்கே இலங்கையையும் சேர்ந்து இருந்த நிலப்பரப்பு லெமூரியா என அழைக்கப்பட்டது.

வடக்கே கைபர் கணவாய், போலன் கணவாய் வழியாக ஆரியர்கள் பாரதத்திற்கு நுழைந்து காட்டுமிராண்டித்தனமாக தாக்கி, தங்களின் ஆளுமையை நிலை நிறுத்திக் கொண்டதால், திராவிடர்கள் மெல்ல மெல்ல தெற்கு நோக்கி குடிபெயர்ந்தார்கள், தள்ளப்பட்டார்கள்.

தெற்கே வந்த திராவிடர்கள் சேர சோழ பாண்டியரென தென்னகப்பகுதிகளை ஆட்சி புரியலாயினர். முதலில் இலங்கையும், தென்னிந்தியாவும் ஒன்றாக இருந்தபோது பற்றுளியாறு, குமரிக்கோடு மலைகள் இருந்தன. தொன்மதுரையில் முதல் சங்கம் இருந்தது. ஆழிப்பேரலை, கடற்கோளால் (சுனாமி) பற்றுளியாற்றின் வழியே கடல் உட்புகுந்த தென்தமிழகமும் இலங்கையும் தனித்தனியே கடலால் பிரிக்கப்பட்டன. பின் கபாடபுரம் பாண்டியர்களின் தலைநகரமாகியது. இடைச்சங்கம் கூடி தமிழாய்ந்த பெருநகரம் அது,

இந்தக்காலம் வரை நம் வழிபாட்டுத் தலங்களாக போற்றி வந்த கந்தழி, கொடிநிலை முதலிய இடங்களில் யாகம் செய்யும் முறையை மேற்கொண்டால், அந்த இடங்கள் புனித மடையும் என வடக்கில் இருந்து வந்த ஆரியர்கள் தமிழ் மன்னர்களிடம் பலவாறு எடுத்துச் சொல்லி, அவர்களின் மனங்களில் இடம்பெற ஆரம்பித்தனர். பின்னர், தமிழ் மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர்கள் ஆரியர்களுக்கு வழிபாட்டுத் தலங்களை புனருத்தாரணம் செய்ய அனுமதித்தனர்.

தமிழ்ப்புலவர்கள், அறிஞர்கள், தமிழ்மன்னர்கள் ஆதரவுடன் நடைபெறும் ஆரியர்களின் யாகங்களால், நமது பண்பாடு சிதைந்து விடக்கூடும். நம் மக்கள் வழிபடுகின்ற இடங்களில் பிற இனத்தவர்களின் தாக்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்று அரசவைகளில் எடுத்துக்கூறினர். மேலும் பண்பாட்டு அடையாளங்களை நாம் இழக்க நேரிடும். அதே சமயம் ஆரியர் வகுக்கும் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் நாமும் பின்பற்ற வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடுவோம் என தமிழ் அரசுகளை எச்சரித்தனர்.

ஆனால் அரசர்களோ, ஆன்றோரைக் கலந்து முடிவெடுக்காத அரசுகளும், அரசனும், அரசாட்சியும் நிலைப்பது கடினம் என்றனர். அதே சமயம் பிறரைப்பார்த்து நாம் முன்னேற வேண்டும் என்பதையும் மறந்து விடக்கூடாது. நம் மக்களும் ஒரு கட்டுப்பாடான முறையில் வாழவேண்டும் என ஆரியர்களின் சொல் மயக்கத்தாலும், வசீகரமான முறையாலும் அவர்களுக்கு இடம் கொடுத்தனர்.

ஓரினம் என வாழ்ந்த தமிழக மக்களிடையே இனவேறுபாடும் மெல்ல, மெல்ல நுழைந்தது. தமிழர்களுடைய வாழ்க்கையில் இந்த மாற்றங்கள், கடுமையாகத் தாக்கத் தொடங்கின. எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டன. ஆதிகாலத்தில் எந்த சமயப்பிரிவும் இல்லை. அவரவர் விரும்பியபடி இயற்கையையும், முன்னோர்களையும் வணங்கி வந்தனர். பின் காடுகளில் வாழ்ந்தவர்கள் மரங்களையும், மலைகளில் வாழ்ந்தவர்கள் மலைகளையும், வயலில் உழைத்து வாழ்பவர்கள் சூரியனையும் போருக்குச் செல்பவர்கள் கொற்றவை என்ற சக்தியையும் வழிபட்டனர். அவரவர் குடும்பங்களில் இறந்தோரை நினைவாக நடுகல் நிறுத்தி வணங்கினர். இதனால் அடுத்தவரின் மனத்தைப் புண்படுத்தாத ஆன்மீகமே அப்போது நிலவியது.

பின்னர் ஆரியர் வருகைக்குப் பின், பலகாலம் திட்டமிட்டு, இந்து மதத்தை உருவாக்கினர். சிவனை வழிபடுவோர் சைவர் எனவும், திருமாலை வழிபடுவோர் வைணவர் எனப் பிரிந்தனர். காப்பியங்கள் எழுதப்பட்ட காலம்வரை, இந்து மதத்தைப்பற்றி எந்த குறிப்புகளும் இல்லை. சமண, பௌத்த மதங்கள் இருந்து வந்தது குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் சைவம், வைணவம், சாக்தம் போன்ற மதங்களையும் புலவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஆரியர்கள், சமண பௌத்த மதங்கள் தமிழகத்தில் பரவி வேரூன்றிவிடக்கூடாது என்பதற்காக, மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் வழிபடும் கடவுளரையும், தாம் வணங்கும் கடவுளரையும் ஒன்றாக்கி புராணக் கதைகள் உருவாக்கினர். தமிழர்கள் வணங்கிய முருகக் கடவுளையும், ஆரியர் வணங்கிய சுப்பிரமணியக் கடவுளையும் ஒன்றாக்கிவிட்டனர். முல்லை நிலத்து மக்கள் வணங்கிய மாயோனையும் அவர்கள் வணங்கிய துவாராக கிருஷ்ணனையும் ஒன்றாக்கினர். நம் துர்க்கையை, பார்வதியின் வேறு வடிவம் எனக்கூறி, பார்வதியின் தமையன் விஷ்ணு என உறவு முறையும் கற்பித்தனர். சைவத்தையும், வைணவத்தையும் இரு நெறிகளாக்கி இந்து மதத்தை உருவாக்கிவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல, கடவுளின் பெயரைக் கூறி மன்னர்களிடமிருந்து பொன், பொருள் நிலங்கள் பெற்றனர். கடவுளரின் உருவங்களுக்கு நகைகள் அணிவிக்கும் மரபும் வளர்ந்தது. பண்பாட்டு சிதைவு மிகப்பெரும் அளவில் மக்களைத் தாக்கியதால், சோழர்கள் நகைகள் அணிவிக்க இயலாத சிவலிங்க வழிபாட்டை அறிமுகப்படுத்திப் பெரும் கோயில்களை எழுப்பினர்.

இரண்டாம் தமிழ்ச்சங்கம் வளர்த்த கபாடபுரமும் கடற்கோளால் (ஆழிப்பேரலை) அலைக்கழிக்கப்பட்டது. மக்கள் அங்கிருந்து பலவித கஷ்டங்களையும் அனுபவித்து, எண்ணற்ற மக்களை ஆழிப்பேரலையால் இழந்து, வடக்கு நோக்கிப் பயணப்பட்டு மிகச்சிறந்த கட்டமைப்புடன், சுற்றிச் செல்லும் வீதிகளை அடுக்கடுக்காக அமைத்து இப்போதைய மதுரையை உருவாக்கினர். பாண்டியர்கள் இங்குதான் மூன்றாவது தமிழ்சங்கம் உருவாக்கினார்கள்.

மூன்று சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்தனர் பாண்டிய மன்னர்கள், தமிழ்மொழிக்கும், தமிழ் புலவர்களுக்கும் ஆற்றியவைகளைப் பாராட்டுவதற்கும், பெருமைப்படுத்துவதற்கும் யாருக்கும் ஓர் ஆயுட்காலம் போதாது. அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டு அதற்கான ஏற்பாடுகளையும் முறையாகச் செய்து அரும்பெரும் பணிகள் ஆற்றியுள்ளனர். கடைசியாக இராமநாதபுரம் மன்னர் வழி வாரிசான பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நான்காம் தமிழ்சங்கமும் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவரது பாட்டன் வழி பாஸ்கர சேதுபதி உதவியால்தான், சுவாமி விவேகானந்தர் அவர்கள் அமெரிக்கா சென்று இந்து மதத்தின் தனித்தன்மை பற்றி உறையாற்றியது உலகப்புகழ் பெற்றது. ஆன்மீகத்தில் புதிய சிந்தனை உருவாகக் காரணமாயிருந்தது என்றால் மிகையாகாது. மேல் நாட்டினர் புதிய பார்வையுடன், புதிய கோணத்துடன் இந்து மதத்தை காண ஆரம்பித்தனர்.

பண்டைத்தமிழ் மக்கள்

திராவிட இனக்குழுமத்தின் பிரதான இனம் தமிழ் இனம் ஆகும். இவர்கள் வடவேங்கடம் முதல் தென்குமரி வரை பரவி வாழ்ந்தனர். இயற்கைச்சூழலுக்கேற்ப வாழ்வியல் முறையை அமைத்து வாழ்ந்து வந்தனர். இப்புவியானது மலையும், காடும், பள்ளத்தாக்கும், கடற்கரையாகப் பகுக்கப்பட்டு நானிலமாக பிரிக்கப்படுகிறது. இதில் மலையும் காடும் பருவநிலை மாற்றங்களால் வறண்டு போகும் பொழுது வறண்ட நிலங்களும் உருவாகின்றன. இந்த இயற்கைப்பிரிவுகளையே பழந்தமிழர்கள் முறையே குறிஞ்சி, முல்லை , மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகை நிலங்களாகவும் வகைப்படுத்தினர்.

ஐந்து வகை நிலங்கள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகை நிலங்களின் பூகோள தட்ப வெப்ப இயற்கைச்சூழலுக்கேற்ப, அதில் வாழக்கூடிய மக்கள் பல இனக் குழுக்களாய் பிரிந்து வாழ்ந்தனர்.

குறிஞ்சி நிலம் :

மலையும், மலை சார்ந்த பகுதி குறிஞ்சி. இதில் வாழ்பவர்கள் குன்றவர் அல்லது குறவர் எனவும் மலைப்பகுதிகளில் வேட்டையாடி பிழைப்பு நடத்துவதனால் வேட்டுவர் எனவும் அழைக்கப்படடனர்.

முல்லை நிலம் :

காடும், காடு சார்ந்த இடம் மலைப்பகுதியான குறிஞ்சிக்கு அடுத்தாற்போல் அமைந்துள்ளது. இதில் வாழக்கூடிய மக்கள் ஆயர் அல்லது இடையர் எனப்பட்டனர். மலை சார்ந்த குறிஞ்சிக்கும் பள்ளத் தாக்குச்சார்ந்த மருதத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்ததனால், இதில் வாழ்ந்தவர்கள் இடையர் எனப்பட்டனர்.

மருதநிலம் :

நீர்வளம் நிறைந்த செழிப்பான நிலம் மருதநிலம் எனப்பட்டது. இதில் வாழ்ந்தவர்கள் உழுதுண்டு வாழ்ந்ததனால் உழவர் என அழைக்கப் பெற்றனர். அந்நிலத்தின் தலைவரான வேந்தைனையே தெய்வமாய் வழிபட்டனர். மருத நிலத்தின் தலைமை இனம் களமர் (கள்ளர்)

நெய்தல் நிலம் :

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். மீன்பிடித்தொழில் செய்து வந்த காரணத்தினால் இந்த மீனவர்கள் நுளையர், பரதவர் எனப்பட்டனர்.

பாலை நிலம்:

மழைப்பொழிவு குறைந்த பகுதிகளில் நிலம் வறண்டு காணப்படும். அவ்வகை நிலங்களில் பாலுடைய இலைகளைக் கொண்ட கள்ளி, கற்றாழை, பனை, வேம்பு போன்ற செடி கொடிகள் விளையுமாதலால், அவ்வகை நிலம் பாலை நிலம் எனப்பட்டது. அந்நிலத்தின் வாழ்வோர் எயினர் எயிற்றியர், மறவர், குரும்பர், கள்ளர் எனப்பட்டனர். இவர்கள் போர் வீரர்களாக, போரில் வெற்றி தருபவர்களாக கருதப்பட்டனர். இவர்கள் பெண் தெய்வமானவரை கொற்றவை எனப் பெயிரிட்டு வணங்கினர்.

தமிழகத்து சாதிகள்

சங்க காலத்திலேயே நிலைபெற்றிருந்தாலும் பிற்காலச்சோழர்களது ஆட்சிக் காலத்தில் தான் சாதி அமைப்பு வேரூன்றி இறுகத்துவங்கியது. இதில் முக்குலத்தோர் என்ற கள்ளர், மறவர், அகமுடையோர் இவர்களுக்குத்தான் அரசியல் கலை, நீதி, கோயில்கள், அரண்மனைகள், ஆற்று நீர்ப்பாசனம் மற்றும் சமூக வளர்ச்சியில் அதிக இடமுண்டு என்றால் மிகையாகாது.

முக்குலத்தோர்

தமிழர்களின் வரலாற்றில் முக்குலத்துக்கு முக்கிய இடமுண்டு. மூன்று என்பதிலேயே தமிழர்களுக்கு தனியாத தாகமுண்டு, முத்தமிழ், முக்கனி, முப்புரம் என்பது போலவே முக்குலம் என்பதுவும்,

சேரர் - அகமுடையார் (சேர்வை)

சோழர் - கள்ளர் (நாட்டார்கள்)

பாண்டியர் - மறவர் (சேதுபதிகள்)

கௌதம முனிவரின் மனைவிக்கும் இந்திரன் என்ற தேவனுக்கும் பிறந்த மூவரே கள்ளன், மறவன், அகம்படியன் என்று தனித்தும் தேவனுக்கு பிறந்ததால் தேவர் என்றழைக்கப்பட்டனர்.

தேவர் என்றால் தெய்வமனைவர், கடவுள் தன்மையர், இனியவர், உயர்ந்தவர், வீரம் செறிந்தவர் என்று பொருள்.

அகநானூற்றிலே :

கள்வர் பெருமகன் - தென்னன். என மதுரைக் கணக்காயனார் ஒரு பாண்டியனை குறித்துள்ளதாக கூறப்படுகிறது. சங்ககாலத்திலேயே கள்வர் என்ற பெயர் இருந்ததாகவும், கள்வர் குலத்தவர் அரசராயிருந்தன என்பதும் தெரியவருகிறது. கி.பி.14ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்கபூர் முதலிய முகம்மதியர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்தபோது கோயில்களை இடித்து பல கொடுமைகள் செய்தனர். அப்பொழுது மக்கள் அனைவரும் கள்ளர்களிடம் சரண் புகுந்து ஊர்க்காவலை கள்ளர்களிடம் ஒப்படைக்கவே, மக்களனைவரையும் பாதுகாத்தனர் என்பது கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது. நமது அழகர் கோவிலும் அப்படித்தான் காப்பாற்றப்பட்டது. ஆயிரக்கணக்கான கள்ளர் பெருமக்கள் தங்களது குலதெய்வமான கள்ளழகர் கோவிலை காப்பாற்ற வீரமரணமடைந்ததாக வரலாறு கூறுகிறது.

"**கள்வனென் கிளவி கரியோனென்ப**" எனத் திவாகரமும், "**கடகரிப் பெயரும் கருநிற மகனும், கர்க்கடக விராசியும் ஞெண்டும் கள்வன்**" எனப் பிங்கலத்தை கூறுவதிலிருந்து கள்வன் எனுஞ்சொல் கருநிறமுடையோன் என்னும் பொருளில் தொன்று தொட்டு வழங்கியுள்ளன என்பது புலனாகிறது. ஆரியர் தமிழரைக் கரியவரென்று "**இருக்கு**" வேதமந்திரத்தில் கூறுகின்றனர். இந்திரனுக்கும் **கரியோன்** எனப்பெயரிருக்கிறது. சோழனும் கருநிறம் பற்றியே மால் என அழைக்கப்படுகின்றான். இவற்றால் இந்திர குலத்தவர் எனினும் கள்வர் குலத்தவர் எனினும் இந்திய பழங்குடியினரான தமிழ் என்பதே பொருள் எனத் தெரியப்படுகிறது. ஆரிய வடமொழி அமரகோசத்தில் சத்திரிய வர்க்கத்தில் பகைவன் எனும் பொருளில் கூறப்படுகிறது. இங்ஙனம் ஆரியர்கள் தமக்குப் பகைவர் என்று அழைக்கப்பட்ட பழந்தமிழரே கள்வர் என்னும் சொல்லுக்கு பொருளாய் நிற்றல் என அறியப்படுகிறது.

சீவக சிந்தாமணி 741-ம் செய்யுளில் **கள்ளராற்புலியை வேறு காணிய** என்னுந் தொடருக்கு அரசரைக்கொண்டு **சீவகனைப் போர்க்காணவேண்ட** என புலவர் நச்சினார்கினியர் பொருள் கூறியிருக்கிறார். கள்ளர் என்னும் சொல்லுக்கு **அரசர்** என்னும் பொருள் கருதப்படுகிறது. சீவகனப்புலியென்று கூறியதால்கேற்ப அரசரைக் கள்ளர் என்றார் எனின் அப்பொழுதும் வீரத்தின் மேம்பட்டார் என்னும் பொருள் பற்றியே கள்வர் அல்லது கள்ளர் என்னும் குலப்பெயர் தோன்றியதென்பது பழைய ஆதாரத்துக்கும் யூக அனுபவங்கட்கு ஒத்தாயிருக்கின்றது. இதனை மறுப்பதற்கு எவ்வகையான காரணமும் இல்லை.

கள்ளர்கள் பலர் குழுக்களாக தொண்டை நாட்டினின்றும், சோழ நாட்டினின்றும் பாண்டி நாட்டில் குடியேறி கள்ளர் என்னும் பெயருடன் தன்னரசாக ஆட்சி புரிந்து வந்தனர். பல்லவராயர், தொண்டைமான் கள்ளர் என்னும் பெயர்கள் ஒரே வகுப்பினராவர். நடுவுநிலையுடைய அறிஞர் எவரும் கள்ளர், பல்லவர் வகுப்பினரே என்று ஏற்றுக்கொள்வர்.

ஒரு காலத்தில் தொண்டை மண்டலத்தோடு, சோழ மண்டலத்தையும் ஆட்சிபுரிந்து வந்த பல்லவ சக்கரவர்த்திகள் பின்பு பேரரசாட்சியை இழந்து சிற்றரசர்களாகவும், சோழர்களிடம் அமைச்சர்களாகவும் தண்டத்தலைவர்களாகவும் இருந்து சோழர்களோடு ஒன்றாக கலந்து விட்டனர். இவர்களுடன் பிறந்த அஞ்சாமையும், வீரமும் ஒழிந்து விடவில்லை என்பது வரலாறு. குறிப்புகளாலும், கருணாகரத் தொண்டைமானது வரலாறும் இதனை வலியுறுத்திகிறது. (தென்னிந்திய சாசன புத்தகம் இரண்டாவது தொகுதி, முதற்பகுதி 22 வது சாசனத்தில்) சோழர்கள் கிபி 12-ம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்து வந்திருக்கின்றனர்,

சோழப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, சோழர்களான கள்ளர்கள் சிற்றரசர்களாகவும், ஜமீன்தாரிகளாகவும் இருந்துவந்து பின் காலச்சக்கர ஓட்டத்தில் தங்களுக்குள் ஏற்பட்ட முரண்பாட்டால் சிலர் வெளியேறி, ஒருசில சிறிய குழுக்களாக பாண்டிய நாட்டுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். தங்களுடைய அபரிதமான வளர்ச்சியாலும், விவேகத்தாலும் கள்ளர்கள் தாங்கள் அதிகமுள்ள பகுதிகளில் சிறுசிறு நாடுகளாக எல்லைகளை வரையறுத்து, அவை கள்ளர்கள் நாடு என வழங்குகின்றன. இந்நாடுகளுக்கெல்லாம் கள்ளர் வகுப்பினரே தலைவராயினர். கள்ளர்களுக்கு நாட்டார், அம்பலகாரர், தேவர் என்னும் பெயர்கள் பொதுவாக வழங்கப்படுகிறது.

ஈ.தர்ஷ்டன் என்பார் எழுதிய **தென்னிந்திய சாதி வகுப்பு வரலாறு** என்னும் புத்தகத்தில் மதுரை கள்ளர் நாடுகளைப்பற்றி காணப்படுகின்றன. பாண்டி நாட்டில் உள்ள கள்ளர்களைப்பற்றி கல்லல் ஸ்ரீமத் மணிவாசக சரணாலய சாமிகளும், சிவகங்கை சிரஞ்சீவி எஸ்.சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் நன்கு ஆராய்ந்து, பழக்கவழக்கம், கலாசாரம், பண்பாடு, திருவிழாக்கள், கிராமசபை ஆட்சி (நாடு) ஆகியவைகளை பற்றி தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

களப்படை:

எதிரி நாட்டில் ஊடுருவி வேவு பார்ப்பதும், கலகம் ஏற்படுத்துவதும், எதிரியின் பொருளாதாரத்தைத் தகற்பதற்காக திடீர் திடீர் என தாக்கி யாரும் எதிர்பாராத நேரங்களில் செல்வங்களை கொள்ளையடிப்பது, பாதுகாப்பு அரண்களை தாக்கி வெற்றியை எளிதாக்குவது. இவர்களுக்கு களப்படை என்ற பெயரமைத்து நாளடைவில் கள்ளர் படையாகியது. கள்ளர் இனமாக கருதப்படுகின்றனர். களத்தில் நின்று, எதிரியை நேருக்குநேர் எதிர்த்துப்போர் செய்ததாலும், களம் காணும் கள்வர் எனப்பட்டனர்.

மறப்படை:

நாட்டின் எல்லைகளை காப்பது, உள்நாட்டில் சட்டம் ஒழுங்கை காப்பது, போர்காலங்களில் போரில் கலந்து போரில் வெற்றியை ஈட்டுவது. இவர்களை மறப்படை என அழைத்து மறவர் இனமாக அழைக்கப்படுகின்றனர்.

அகப்படை:

கோட்டையின் உட்பகுதி, அரண்மனை பின் உட்பகுதிகளை பாதுகாப்பது, அரண்மனை உயர் அதிகாரிகளுக்கு உதவியாக இருக்கும் படை அகப்படை என்றும், பின் அகம்படியார் என்ற சேர்வை இனமாக அழைக்கப்படுகின்றனர்.

இந்த மூன்று பிரிவினரும் பின்னர் சேர, சோழ, பாண்டியர் என்ற பெயரில் தமிழகத்தை 3-ஆக பிரித்து ஆட்சி செய்தனர். அகம்படியர் சேரர்களாகவும் சேர நாட்டையும், கள்ளர்கள் சோழர்களாக சோழநாட்டையும், மறவர்கள் பாண்டியர்களாக பாண்டிய நாட்டையும் பரந்து கிடந்த அகண்ட தமிழகத்தை சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்து வந்துள்ளனர். இவர்களுக்கு மணவினை போன்றவைகளும் நடைபெற்று தமிழகம் தழைத்தோங்கியது. விவசாயம் தொழில் அயல்தேச வணிகம் ஆகியவை செழித்திருந்துள்ளது. பல படையெடுப்புக்கள் நடத்தி வடக்கே இமயம் வரையும், கடல் கடந்து பல கீழை நாடுகளையும் வென்று ஆட்சி செய்து வந்ததாக வரலாறு தெளிவாக கூறுகிறது. அந்த நாடுகளில் தமிழக கலாச்சாரம் பரவ காரணமாக இருந்தனர். மேலை நாடுகளில் ரோமாபுரி வரை வணிகங்கள் செழிப்புடன் நடைபெற்று வந்துள்ளது. உள் நாட்டில் நீதி, நிர்வாகம், உட்கட்டமைப்பு, உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு வந்துள்ளது. உலகம் புகழும் அளவுக்கு இந்து மதத்தை பரப்பியும் கோயில்கள் கட்டி உரிய பூஜைகளும் முறையாக நடைபெற்று மானியங்களும் கொடுக்கப்பட்டன. அனைத்து வகுப்பினர்களையும் அரவணைத்து அவரவர்களுக்கு உரிய அந்தஸ்து, பதவி, மரியாதைகள் கொடுத்து வந்துள்ளனர்,

களவர்

'களம்' என்ற சொல்லில் இருந்து பெறப்படும், 'களம்' என்றால் போர்க்களம் சார்ந்த மக்கள் என்று பொருள். களவர் புள்ளி வைத்து எழுதும் போது களவர் என்றும் பின் கள்வர் என்றும் மறுவியது என்று மயிலை சீனி வெங்கடசாமி தனது களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகம் என்ற வரலாற்றுநூலில் தெள்ளத் தெளிவாககுறிப்பிடுகிறார். (1975 வருட முதற்பதிப்பு பக்கம் 10)

கள்ளர்கள் போர்க்களம் சார்ந்த மக்கள் (Warriors) என நிரூபிக்கும் பாடல்கள் வருமாறு (இலக்கியத்திருட்டு)

1. ஒழுங்கு படைவிடக் கள்ளர் படர் தந்ததுபோல (கலித்தொகை-81)

2. கள்ளராள் புலியை வேறு காணிய (சீவகசிந்தாமணி பாடல்741)

பொருள் : அரசனைக்கொண்டு சீவகனைப் போர் காணவேண்டி..

(நச்சினார் இனியர் உரை)
(கள்ளர் - அரசர்புலி - சீவகன்)

களவீரர்

பண்டைக்காலம் முதல் போர்க்களம் சென்று போரிடுவதையே வாழையடி வாழையடியாக குலத்தொழிலாக செய்து வந்தவர்களை, அவர்களது குலத்தொழில் பெயராலேயே 'களவீரர்' என அழைத்தனர். களவீரர் என்ற சொல்லே களவர் என மருவியது புள்ளி வைத்து எழுதும் போதும் கள்ளர் என்றனர் என்று புலவர் நச்சினார்கினியர் பொருள் எழுதியுள்ளார்.

இதை உறுதிப்படுத்தி இரா.பூங்குன்றன் தமிழக வரலாற்றுக் கண்ணோட்டங்கள் (பக்கம் 49, 52) என்ற நூலிலும், வரலாற்று ஆராய்ச்சி பேரறிஞர் திரு.தி.வை.சதாசிவ பண்டாரத்தார் ஆய்வில் எழுதியுள்ளதை (பக்கம் 118 வரிகள் 11-32) முனைவர் ச.கிருட்டிணமூர்த்தி, முனைவர் ச.சிவகாமி ஆகியோர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

"ஒழுங்கு படைவிட கள்ளர்

படர்தந்தாற்போல்"

என கலித்தொகை 81வது பாடல் கள்ளர்களை போர்க்களம் சார்ந்த இனம் எனக்குறிப்பிடுகிறது.

"களவர் கோமான், மழபுலம் வணங்கிய

மாவண்புல்லி விழுச்சீர் வேங்கடம்"

இதைப் பாடியவர் மாமூலனார் ஆவார். அசோகச் சக்கரவர்த்திக்கு முன் வாழ்ந்தவர் கி.மு. 272-232 முற்பட்ட காலத்திலேயே வேங்கட நாட்டை கள்ளர் குல அரசர் புல்லி அரசாண்டுள்ளார் எனக் குறிப்பிடுகிறார். தென்னாட்டுப் போர்க்களம் என்ற நூலில் (பக்கம் 49) ஆசிரியர் அப்பாத்துரை M.A.L.T. மேலும் விறல் போர்த்தொண்டையார் வேங்கடத்து உம்பர் என்றும் பாடுகிறாரர்.

"புடைகெட ஒற்றின் ஆகிய வேய்புறம் முற்றின் ஆகிய புறத்துறை (தொல்காப்பியம் புறம் 61) பொருள்: பகை நாட்டிற்குள் சென்று ஒற்றறிந்து வந்த ஒற்றர்களை கள்ளர் என பகை நாட்டினர் (இன்றைய இந்திய அரசின் வெளிநாட்டு Spy agent என்ற R.A.W அமைப்பைப் போன்றவர்கள்) கூறினர்.

இது தவிர பகை நாட்டில் உள்நாட்டு கலவரம் ஏற்படுத்தல், பொருளாதாரத்தை சிதைத்தல், பல செல்வங்களை கவர்ந்து தனது நாட்டுக்கு எப்படியாவது கொண்டு வருவது கள்ளர்களின் பணி என தொல்காப்பியர் உரைக்கிறார். இதை இளம்பூரணார் உரையில் எடுத்துச் சொல்லப்படுகிறது என்பதை அறிகிறோம்.

கள்ளர் என்றால் அரசர்

கள்ளர் என்றால் அரசர் என்று பொருள் என புலவர் நச்சினார்க்கினியார் எழுதியுள்ளார். கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே கள்ளர்கள் நாடாண்டுள்ளனர். மகாவீரர் (கி.மு. 599-527) காலத்தில் நாடாண்ட கள்ளர் குல அரசர்கள் சீவக அரசகுமாரன் மீது போர் தொடுத்தனர் என்ற வரலாற்று செய்தியினை திருத்தக்கத்தேவர் சீவகசிந்தாமணி நூலில் பாடல் 741-ல் தெரிவித்துளளார். (சீவகன், மகாவீரர் காலத்தவர் என வரலாற்று ஆசிரியர் மயிலை சீனி வெங்கடசாமி தனது களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகம் என்ற நூலில் பக்கம் 134-ல் எழுதியுள்ளார்)

ஐம்பெரும் காப்பியங்களில் முதலில் போற்றி எண்ணப்படுவது சீவகசிந்தாமணி என்கிறார் தமிழறிஞர் உ.வே.சாமிநாதய்யர்.

கி.பி.1802 வரை குடிக்காவல், தலக்காவல், திசைக்காவல், பாதைக்காவல், தளவாய்க்காவல், கோட்டைக்காவல் ஆகிய பொறுப்புகளை கள்ளர் குலத்தலைவர்கள் (நாட்டார் அம்பலகாரர், தேவர்) கவனித்து வந்தனர். இக்காவல் செய்யும் தலைவர்களுக்கு மக்கள் கட்டுப்பட்டனர். ஆதாரம் (முக்குலத்தோர் சரித்திரம் பக்கம் 274)

பின் கி.பி 1803-ல் வெள்ளையர் படைத்தளபதி மார்ட்டின் இக்காவல் பொறுப்புகளை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக்கு மாற்றினார். தாசில்தார், வருவாய் அதிகாரிகள், (நாட்டாண்மை, கணக்குப்பிள்ளை, தலையாரி) மாவட்ட ஆட்சியர், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகிய பதவிகளை முதன் முதலில் உண்டாக்கி நியமித்தார். இதற்கு முன் கள்ளர்கள் ஆட்சி செய்த பகுதிகளில் கள்ளர் தலைவர்களே ஆட்சி செய்தனர்.

முக்குலத்தோரைத்தவிர, (கள்ளர், மறவர், அகமுடையார்) வேறு எந்த இனத்தவரையும் 'தேவர் இனம்' என தமிழக அரசு பிரகடனம் செய்யவில்லை.

G.O.M.S No 38, Dt 11.09.1995, The Govt. of Tamilnadu, (backward Classes and (Most Backward Clases Welfare Dept) declared the Mukkulathor, Kallar, Maravar and Agamudayar as Thevar.

சோழப்பேரரசு

சோழர்களுடைய காலம் தமிழகத்தின் வரலாற்றில் ஒரு பொற்காலமாக எண்ணப்படவேண்டும். என்பதில் ஐயமில்லை. குடியுயர்விலும் இறைப்பணியிலும், ஆட்சிப்பணியிலும் கண்ணுங்கருத்துமாக இருந்து சோழ மன்னர்கள் ஆக்க வேலைகள் பல ஆற்றியுள்ளனர். மொழி வளர்ச்சியும், இலக்கிய வளர்ச்சியும் என்றுமே இல்லாத பல படிகள் ஏற்றமுற்றிருந்தன. தமிழுக்குப் பொன்றாகப் புகழையும் பொலிவையும் தேடித்தந்த மாபெரும் இலக்கியப் படைப்புகள் சோழர் காலத்தில் தோன்றியுள்ளன.

மனுநீதிச் சோழன்

காவிரியின் பெருமையில் ஈடுபடாதவரே கிடையாது. நினைத்தாலும் புண்ணியம் தரும் என்பது முன்னோர் வாக்கு. கைலாயத்தில் பார்வதி பரமசிவர்களின் திருக்கலியாணத்தில் வந்த கூட்டம் தாங்காது வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. பூமி சாய்ந்தது. சிவபெருமான் தென்னாட்டிற்கு அகத்தியரையும் உலோப முத்திரையையும் அனுப்பினார். பூமி சமமாக நின்றது. கைலையிலிருந்து அகத்தியர் வரும்போது தனது கமண்டலத்தில் கங்கையை நிரப்பி வந்தார். விநாயகர் அந்தக் கமண்டலத்தைத் தட்டிவிட அது காவிரியாகப் பெருகி வந்தது. வளைந்து வளைந்து காவிரி ஓடி வந்த அழகு பூமிதேவி ஒரு அழகிய முத்துமாலை அணிந்த மாதிரி விளங்கியது என்றார் கவிஞர்.

நதி மலையிலிருந்து உண்டாயிற்று. அம்மை பராசக்தியும் மலையிலிருந்து உண்டானவர். நதி, தருமம் வளர நாட்டில் செழிப்பை உண்டாக்கியது. அம்மையும், செழிப்பை உண்டாக்கி அறம் வளரச் செய்கிறாள். எனவே இறைவனது பாகம் பிரியாத பராசக்தியின் அருள் நிறைந்த கருணைபோல் விளங்கியது. காவிரி. நெஞ்சமாகிய நிலத்திலே பக்தியாகிய விதையை ஊன்றி சாந்தமென்னும் வேலியிட்டு ஞானப்பயிர் உண்டாக்குவர் உத்தமச் சிவபக்தர்கள். சோழ நாட்டில் பயிர்கள் முதிர்ந்து தலைவணங்கி நின்ற தன்மை இறைவனை வணங்கும் பக்தர்களைப் போல் தோன்றியது.

பொருள் ஈட்டுவோன் தன் வருமானத்தை ஆறு பங்குகளாக்கி முதல் பங்கை அரசாங்க வரியாகச் செலுத்த வேண்டும். நாட்டில் சட்டம் ஒழுங்கு முதலானவற்றைக் காப்பது அரசாங்கமாதலின், முதற்பங்கை அரசிற்கு அளிக்க வேண்டும் என்று வரி செலுத்துவது நம் கடமை. செலுத்தாமலிருப்பது குற்றம். செலுத்தாவிட்டால், அரசு அதைக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளும் என்ற உண்மையை அரசு கொள்

கடன் என்பதின் மூலம் அறிவுறுத்தினர். ஏனைய ஐந்து பங்குகளை முறையே பிதிர்க்கடன், தெய்வ காரியங்கள், விருந்தினர். சுற்றத்தாருக்கு வழங்கிக் கடைசிப் பங்கைத்தான் தனக்கு எடுத்துக்கொள்வது வழக்கம் என்று காட்டினர். என்பது தமிழ்மறை. சோழ தேசத்து மக்கள் இம்முறையில் வாழக்கை நடத்தினர் என்றார் அந்தக் கவிஞர்

நாட்டில் செழுமையும் செல்வமும் நிறைந்திருந்ததால் நல்லன எல்லாம் நிரம்பி விளங்கியது. மக்கள் மலர்ந்த முகங்களுடன் இனிய கீதங்களைப் பாடி மகிழ்ந்தனர். எங்கும் திருமகளின் பார்வை பட்டுச்செழுமையும் செல்வமும் மிகுந்தன, எங்கும் தெய்வீகமான திருவிழாக்கள்! விருந்துகள்! சாதிகள் என்பவை தொழில்களை முன்னிட்டு உண்டாயின. உயர்வு தாழ்விற்காக அல்ல! நாட்டில் ஒவ்வொரு சாதியினரும் தமது தொழில்களை ஒழுங்காகச் செய்தனர். குழந்தைகள் இல்லாத வீடே கிடையாது. பறவைகளும் விலங்குகளும் பகையொழிந்து வாழ்ந்தன. யாவரும் இறைவனது ஐந்தெழுத்தான (சிவாயநம) நாமத்தை பாடினர். எனவே நாட்டில் வியாதியும் கிடையாது என்கிறார்.

திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டார் மனுநீதிச்சோழன். மனு என்பவர் எழுதிய தர்ம நூலைக்காத்து தன் பெயரால் மனுநீதி விளங்கச் செய்தார். அரசனின் மகன் ஒரு நாள் தேரிலேறிக்கொண்டு திருவாரூர் ராஜவீதியில் வந்தான். தருமம் தனிச்சிறப்புடையது. எவருக்கும் மாறாதது. தரும வழியில் நடக்கும் சிலருக்கு ஏற்படும் இன்னல்களைக்கண்டு தருமமே வருந்துவது வழக்கம். நாடாள வேண்டிய நல்ல தினத்தில் இராமன் காடாளப்புறப்பட்டபோது **“தருமம் பின் இரங்கி ஏங்க”** எனப்பாடுகிறான் கம்பன். அந்த முறையில் தருமதேவதை மனுமகராசனைச் சோதிக்க வந்தது போலும்! மனிதர் தான் வருவதைக் காணாத வண்ணம் ஒரு பசுங்கன்று திடீரென்று எதிர்பட்டு, தேரின் சக்கரத்தின் அடியில் அகப்பட்டு நசுக்குண்டு இறந்தது. அது கண்டு இரங்கித் துயருற்றுக் கதறும் தாய்ப்பசுவின் நிலையைக் கண்டு அளவிலா வருத்தம் கொண்ட இளவரசன் “என் தந்தையான உத்தமனுக்குப் பழியுண்டாகுமாறு செய்த பாதகனாகி விட்டேன்” என வருந்தி அதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய இயலுமா? என அறிய வேதம் படித்த பெரியோர்களைத் தேடிச்சென்றான். கன்றைப் பிரிந்த தாய்ப்பசு அரண்மனை வாசலையடைந்து, தமது குறையை மக்கள் கூற வேண்டுமானால் அரசனை அழைப்பதற்கான ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது.

கன்று இறந்த செய்தியைக் காவலர் அரசனுக்கு அறிவித்தனர். மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல் என்பதை மீறித் தன்னிடம் இதை மறைத்து வைத்த மந்திரிகளை இகழ்ச்சியுடன் அரசன் நோக்கினான்.

கன்றைப் பிரிந்து துயரமடைந்த பசுவைக் கண்டு அரசன் பதைத்தான். ஏதாவது வேத முறையிலே பரிகாரம் செய்து விடலாம் என்றனர். அரசன் அதுகேட்டு பரிகாரம் செய்தால் கன்றை இழந்த பசுவிற்கு ஆறுதல் கிட்டுமா? நான் என் மகனை இழப்பேன் என்பதற்கு அஞ்சி நீங்கள் பரிகாரம் செய்யுமாறு கூறுகிறீர்கள். தரும தேவதை இதை ஒப்புமா? அரசன் தன்னாலோ, தன்னைச் சேர்ந்தவர்களாலோ, தன் பகைவர்களாலோ, திருடர்களாலோ, மிருகங்களாலோ ஏற்படும் பயத்தைத் தீர்த்து தருமத்தை நிலைநாட்டுவது கடமையன்றோ!

மானிலம் காவலனாவான் மன்னுயிர் காக்கும் காலை
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்: கள்வரால்: உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?

(இந்தப்பாடலை ஆங்கிலமொழி பெயர்ப்புடன் அச்சிட்டு எல்லா அரசாங்கங்களுக்கும் வழங்கினால் உலகமக்கள் நிம்மதியுடன் வாழ வழி பிறக்கலாமல்லவா? மன்னவன் மக்களின் துயரை நீக்கக் கடமைப்பட்டவன். இயலாவிட்டால் தானும் அத்துயரில் பங்குகொள்ள வேண்டுமென்பது கவிஞரின் திருவுள்ளம்! (அவரும் ஒரு அமைச்சராக இருந்தவரன்றோ!) திருவாரூரில் பிறந்தவரெல்லாம் சிவகணங்கள் ! ஒருவரைக் கொன்றாலும் பாவமன்றோ? எனக்கூறி, தன் மந்திரிகளில் ஒருவனை அழைத்து இளவரசனைத் தேர்க்காலில் இட்டு அரைக்குமாறு ஏவ, அது செய்ய அஞ்சிய அம்மந்திரி தன்னையே அழித்துக்கொண்டான். அது கெண்ட மனுச்சோழன், தனக்கு ஒரே மகன் என்பதை மறந்தான். தரும வழி நடப்பது தன் கடமை என எண்ணித் தன் மகனைத் தானே தேர்க்காலில் இட்டுக் கொல்லத் தீர்மானித்தான். தருமம் தவறாது அரசாட்சி செய்வது எளியதல்ல என்கிறார் கவிஞர். மகனைத் தேர்க்காலில் இட்டு அரைக்கச் செய்தபோது மக்கள் கண்ணீர் விட்டனர். உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கெல்லாம் நீதி என்பது சமம், தன் மகனானாலும் செய்த தவறுக்கு தண்டனை அளித்து தாய்ப்பசுவுக்கும் நீதி வழங்கி, செயல்படுத்தி உலகச் சரித்திரத்தில் அழியாப் புகழ்பெற்றான் சோழப்பேரரசன் மனு நீதிச்சோழன்

இராசராச சோழன் (கி.பி. 985 - 1014)

இராசராசன் உலகப்பெருமன்னர்களில் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சாதனையாளன். போர் ஆற்றல், படைப்பு, மக்கள் நலம் பேணுதல் ஆகிய அனைத்திலும் சிறந்து உயர்ந்தவன்.

மன்னர் ஆட்சியிலும் இன்றைய மக்களாட்சி முறைக்கு குறையாத ஆட்சி நடத்தியவன். இன்றைய ஊராட்சி முறைக்கு முன்னோடி ஆவான்.

உத்தம சோழனுக்குப் பிறகு, இராசராசன் அரியனை ஏறினான். பல்லாண்டுகள் இளவரசனாக அமர்ந்திருந்து, ஆட்சிப்பொறுப்புக்கள் பலவற்றை ஏற்று நடத்தி அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றிருந்தான். சோழப் பரம்பரையின் பேரையும் புகழையும் பன்மடங்கு உயர்த்திவிட்டவன் இராசராசன்.

இராசராசனின் இயற்பெயர் அருண் மொழித்தேவன். பட்டம் தேவர், குலம் கள்ளர்

இராசராசன் காலத்திலும், மகன் ராஜேந்திரசோழன் காலத்திலும் தமிழரின் மரபும், பண்பாடுகளும் கடல் கடந்து சென்று மக்கள் கருத்தைக் கவர்ந்தன.

சோழ நாட்டை, பல போர்களினால் அடைந்த வெற்றியால் விரிவுபெற்று மிகப்பெரியதொரு பேரரசராக வரலாற்றில் திகழவைத்த பெருமை மாமன்னன் இராசராசனையே சாரும்.

இப்பேரரசன் தன் வாழ்க்கையில் எய்திய மாபெரும் வெற்றிகளை நோக்கும்போது இவன் நெடுந்தோற்றமும், உடற்கட்டும், மேனியழகும் பேராற்றலும், நுண்ணறிவும், கலைப்பயிற்சியும், சிறந்த நிர்வாகத்திறனும் வாய்க்கப்பெற்றிருக்க வேண்டும் என்று எளிதில் ஊகித்தறியலாம்.

சோழப்பரம்பரையிலேயே மாமன்னன் இராசராசன் மிகச்சிறந்த ஒரு வெற்றி வீரனாகத் திகழ்ந்தான். இணையற்ற சமயப்பற்றும், கலைத்திறனும் வாய்க்கப்பெற்றிருந்தான். இராசராசன் எழுப்பிய தஞ்சைப்பெருவுடையார் கோயிலானது சோழப்பேரரசின் பெருமையையும், சீரையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் அழியாச்சின்னமாக இன்றளவும் நிமிர்ந்து நிற்கின்றது. இக்கோயிலின் சிற்ப எழிலை எக்கோணத்திலும் கண்டுகளிக்கலாம்.

பெருவுடையார் கோயில் 500 அடி நீளமும், 200 அடி அகலம் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது. வெளி நுழைவாயிலை அடுத்து 250 அடி சதுரத்தில் முற்றம் ஒன்று அமைந்துள்ளது. கோயிலின் கருவறையின் மேல் வடிவ அமைப்பிலும், அழகிலும், உயரத்திலும் வியப்பூட்டும் சிற்ப கைத்திறனிலும் உலகப்புகழ்பெற்ற விமானம் உயர்ந்து நிற்கின்றது.

கோயிலைச்சுற்றி பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. தன்னைச் சுற்றியுள்ள கட்டட அமைப்புகள் அனைத்தையும் குன்றச் செய்து, தான்மட்டும் வானுயுற ஓங்கி நெடுந்தொலைவு காட்சியளிக்கும் இவ்விமானத்தின் பேரெழிலை இச்சிறு கோயில்கள் எள்ளளவும் மறைப்பதில்லை.

தஞ்சைப்பெரிய கோயில் 216 அடி உயரம், தமிழ் மொழியில் உயிர், மெய் எழுத்து 216 தமிழ் மொழியின் மேல் பற்றால் இராசராசன் கோயிலின் உயரத்தை 216 அடியாக்கியுள்ளான். கோயிலின் விமானத்தில் உள்ள 8 டன் (8000 கிலோ) இக்கல் ஒரே கல்லால் அமைந்தவை. கோயிலின் விமானத்திற்கு கொண்டு செல்ல 8 மைலுக்கு சாரம் அமைத்து முன்னும் பின்னும் யானைகள் இழுத்தும், தள்ளியும் சென்றதாம். ஆயிரக்கணக்கானவர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனராம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஒரே சமயத்தில் எழுப்பப்பட்டதாகும். இக்கோயிலின் அமைப்பின் ஒழுங்கு, மாண்பு, எளிமை சிற்பச்சிறப்பு ஆகியவற்றைச் சொற்களால் விளக்குவது இயலாது.

கருவறைக்குள் நிறுவப்பட்ட பிரகதீஸ்வரர் சிவலிங்கத் திருமேனி மிகவும் பெரியது. காண்போர் கண்களையும், நெஞ்சையும் விரியச்செய்யும். கோயிலில் அமைக்கப்பட்டுள்ள நந்தியும் மிகப்பெரியது ஒற்றைக்கல்லால் ஆனது. என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் காணக்கூடிய மிகப்பெரிய நந்தி உருவங்களில் இது இரண்டாவதாகும்.

நிலங்களை முதன் முதலாக அளந்து வரி விதித்த இராசராசனை உலகளந்த சோழன் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து கைப்பற்றப்பட்ட விலை மதிப்பற்ற நவமணிகளையும், அணிகலன்களையும், தான் கட்டிய பெருவுடையார் கோயில் இறைவனின் பாதத் தாமரையில் வைத்து வழிபட்ட தன்மையை கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தண்-செய்-ஊர் என்னும் தமிழ்ச் சொற்கள் ஒன்றாகித் தஞ்சாவூர் என்று மாறியது. தண்-குளிர்ந்த செய்-நன்செய் நிலம். நீர் நிரம்பிய வயல்களை உடைய ஊர் என்று பொருள்படும் ஊர் தஞ்சாவூர். சோழர் காலத்தில் ஊர்ப்பெயர்களுக்கு விளக்கம் கற்பித்தத்தன்மையை வரலாற்றில் காணலாம்.

இராசராசன் காலத்தில் பெண்களும், குழந்தைகளும் சிறுபாடு (சிறுசேமிப்பு) செய்யும் பழக்கம் மேற்கொண்டிருந்தனர் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது.

அரசாங்கத்தின் சக்தி கணக்கில் வரும் பூஜ்யத்தைப்போன்றது. மக்களின் சக்தி ஒன்று என்ற எண்ணைப் போன்றது. ஒன்றும் பூஜ்யமும் இணையும் போது பத்து என்ற எண் தோன்றுகிறது.

அதாவது மக்களின் சக்தியும், அரசாங்கத்தின் சக்தியும் சேரும்போது மகத்தான ஒரு பெரிய சக்தி விளைகிறது. இரண்டையும் பிரித்துவிட்டால் மக்களின் சக்தி ஒன்றாகச் சிறுத்து விடும். அரசாங்கத்தின் மதிப்போ சூன்யமாகிவிடும். இதை நன்றாக உணர்ந்து ஆட்சி செய்தவன் இராசராச சோழன் ஆவான்.

மூப்புக்குறி அல்லது மூப்புரிமை

சோழர்களின் இராசராச சோழனின் இயற்பெயர் அருண்மொழித்தேவன் பட்டம் தேவர், குலம் கள்ளர்.

கி.பி 970-ல் இளவரசராக இருந்த அருண்மொழித்தேவனே முடிசூடி மன்னனாக சோழப்பேரரசை ஆள வேண்டும் என குடிமக்கள் முதல் சிற்றரசர்கள், அதிகாரிகள்வரை அனைவரும் ஏகமனதாக விரும்பினர்.

ஆனால், இளவரசர் அருண்மொழித்தேவனோ "மூத்தவருக்கே அரசுரிமை. அதுவே முடியாட்சியின் மரபுரிமை". தனது பெரிய பாட்டனார் கண்டராதித்த தேவரின் மகனும், தனது சிறிய தந்தையுமாகிய மதுராந்தகத்தேவரே மூத்தவர், அரசாளுவதற்கு முன்னுரிமை உடையவர்.

எனவே, மூத்தவராகிய மதுராந்தகத்தேவர் இருக்கும்போது இளையவனாகிய நான் இச்சோழ பேரரசை ஏற்பது அநீதி. நீதி-நெறியின்றி, நேர்மை-நியாயம் சிறிதுமின்றி, இப்பேரரசை ஏற்கமாட்டேன்.

“மதுராந்தகத் தேவர் இருக்கும்வரை, இச்சோழப் பேரரசை மனதால் கூட தீண்டமாட்டேன்' எனக்கூறி அனைவரின் விருப்பத்தையும் ஏற்க மறுத்துவிட்டார்.

அருண்மொழித்தேவனுக்கு அனைத்து அனுகூலங்கள் இருந்தும், தன் சிறிய தந்தையின் முன்னுரிமையை மதித்து, தனக்கு கிடைத்த அரிதில் சோழப்பேரரசை, தனது சிறிய தந்தையான மதுராந்தகத் தேவருக்கு விட்டுக் கொடுத்தார்.

மேலும்,தன் சிறிய தந்தையை சோழ அரியணையில், அமர்த்தி,அவருக்கு உத்தம் சோழத்தேவர் என்ற பெயரும் சூட்டி, மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி தன் கைகளாலேயே முடி சூட்டி வைத்தார்.

இப்படிப்பட்ட உயரிய மரபு மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வெள்ளலூர் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.வளவுத்தலைவர் என்ற வளவுத்தலசி பட்டம் 'இருந்தார் மூப்பு' என்ற அடிப்படையிலேயே தான் இன்றுவரை அப்பழக்கம் இருந்து வருகிறது.அவர் மூலம்தான் காரணம் மரியாதைகள் கோவில்களிலும், விழாக்களிலும் காலங்காலமாக வழங்கப்பட்டு வருகிறது. இராசராசனின் பெருமைக்குரிய மரபை வெள்ளலூர் நாட்டார்கள் இன்றளவும் கடைப்பிடித்து காப்பாற்றி வருகிறார்கள். வளவுத் தலைவர் என்பவர் அப்பகுதி கள்ளர் இனத்தலைவரை குறிக்கும் சொல்.

ஏர் உழும்போது, முதலில் செல்லும் ஏர் சரியாக சென்றால்தான், பின்னால் வரும் ஏர் சரியாக வரும் என்பார்கள்.

மூத்தோர் சொல்லும் முதிற் நெல்லிக்காயும் முன்னே கசக்கும், பின்னே இனிக்கும் என்பர், முன்னோர்கள் மூத்தவர்களின் அனுபவங்கள் நமது வாழ்க்கைக்கும் நல்ல செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருக்கும்.

அதன்பின் அருண்மொழித்தேவன் பல நாடுகளை வெற்றிகண்டு எல்லையை விரிவுபடுத்தியும், பல நாடுகளை வென்றும் சோழ அரசை பேரரசாக்கினார்.கி.பி.985ல் தனது சிறிய தந்தைக்குப்பின் இராசராசசோழன் என்ற பெயரில் சோழச்சக்கரவர்த்தியாக முடிசூட்டிக்கொண்டான். சிறந்த ஆட்சியும் செய்தான். உலகப் புகழ்பெற்ற தஞ்சைப்பெரிய கோவிலையும் கட்டினான் என்று வரலாறு நமக்கு எடுத்துரைக்கிறது.(திருவாலங்காடு செப்பேடு S.I, Vol.III No.205 Verse 69 மற்றும் திருவிடைமருதூர் கல்வெட்டு Ibid No 128/131/150 (பிற்கால சோழர் வரலாறு பக்கம் 67,72) பொன்னியின் செல்வன் பாகம் 5, செம்பியின் மாதேவியார் கண்ட கோவில் தல வரலாறு பக்கம் (4)

எனவே தான், சமுதாயத்தில் அண்ணன் தம்பிகள் பாகம் செய்யும் போது அண்ணனுக்கு மூப்புக்குறி என்று சில இடங்களை கூடுதலாக பிரித்துக் கொடுப்பது இதற்குத்தானோ!.

இராசேந்திர சோழன் (கி.பி. 1014 - 1044)

இராசேந்திர சோழன் சீரிலும், சிறப்பிலும், வீரத்திலும், நிர்வாகத்திறனிலும் தன் தந்தை இராசராசனையும் மிஞ்சி நின்றான். மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் சொல் என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிற்று, இவனது அரசியல், தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்ற பழமொழிக்கேற்ப ஆட்சி செய்தான்.

போரில் மட்டுமின்றிக் கல்வி, கலை, சமயத்தொண்டு ஆகிய துறைகளிலும் இராசேந்திர சோழன் இணையற்றுத் திகழ்ந்தான். அவனால் படைக்கப்பட்ட கலைக்கூடமான கங்கை கொண்ட சோழபுரத்தையே தன் தலைநகரமாகக் கொண்டு கலை வளர்ச்சிக்கான பணிகள் பலவற்றை புரிந்து வந்தான்.

இராசேந்திரனின் கல்வெட்டு மெய்கீர்த்திகளுள் ஒன்று கடாரத்துப் போரை விளக்கமாகப் பாராட்டி புகழ்கின்றது.

அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி சங்கிராம விசையோதடதுங்கவர்மன் ஆகிய கடாரத்து அரசனை வாகையம் பொருகடல் கும்பக்கரியோடும் அகப்படுத்து, உரிமையின் பிறக்கிய பெருந்திப்பிறக்கமும், ஆர்த்து அவன் அக நகர்ப் போர்த்தொழில் வாசலில் விச்சாகிரத் தோரணமும் மொய்த்து ஒளிர் புனைமணிப் புதவமும், கனமணிக் கதவமும்... தொடுகடல் காவல் கடுமுரண் கடாரமும்... மாபெரும் தண்டால்... இராசேந்திரன் கைக்கொண்டான் என்பது அக்கல் வெட்டு கூறும் செய்தியாகும்.

கடாரத்து மன்னனிடமிருந்து கைப்பற்றிய முதல் நாடு ஶ்ரீ விஜயமாகும். அது சுமத்திராவில் உள்ளது. அதற்கு இப்போது பாலம்பங் என்று வழங்கி வருகின்றது. பிறகு அவன், அவனுடைய மெய்கீர்த்தியில் கண்டுள்ள ஏனைய கிழக்காசிய நாடுகளை வென்று திறைகொண்டான் (கப்பம்). கடாரத்தை பற்றி கலிங்கத்துப் பரணியிலும், பட்டினப்பாலையிலும் நச்சினார்க்கினியார் குறிப்பிடுகின்றார். பிங்கலத்தை நிகண்டும் இவருடைய கூற்றத்தை உறுதிப்படுத்துகின்றது.

அக்காலத்தில் கடாரம் மிகவும் சிறந்ததொரு துறைமுகப்பட்டினமாக விளங்கியது. ஆகவே கடராத்தின் மேல் அவன் கொண்ட வெற்றியானது சோழர், சீனர் வாணிகத்தின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்துவிட்டது.

கங்கை கொண்ட சோழபுரம்

இது இராசேந்திர சோழனால் புதிதாக அமைக்கப்பட்ட பெரிய நகரம் ஆகும். அவனது தலைநகரமே இதுவேயாகும். வட நாடுகளை வென்ற பெருமைக்கு அறிகுறியாக - கங்கை வரை இருந்த நாடுகளை வெற்றி கொண்டதற்காகவே கங்கை கொண்ட சோழபுரம் நகரை கட்டினான். தஞ்சைப்பெரிய கோயிலைப்போல் கங்கை கொண்ட சோழேச்சரம் என்னும் அழகு மிக்க கோயிலைக்கட்டினான். சோழ கங்கம் என்னும் வியக்கத்தக்க ஏரி ஒன்றை வெட்டினான்.

இந்நகர் இன்றைய அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் இப்பொழுது சிற்றூராக இருக்கின்றது. கங்கை நீரைக்கொண்டு, தான் புதிதாகக் கட்டிய தலைநகரையும் கோயிலையும், ஏரியையும் தூய்மைப்படுத்தினான் என்று அறியப்படுகிறது. அக்காலத்தில் இக்கங்கைப் படையெடுப்பு மக்களால் வரவேற்கப்பட்டது. திரு. J.M.S. பிள்ளையின் சோழர் கோயில் பணிகள் என்ற நூலிலும் (பக்கம் 44-45) கலைமகள் (M.E.R. 1932, பக்கம் 50, VOl II பக்கம் 326) என்ற புத்தகத்திலும் குறிப்பிடப்படுகின்றது.

சோழர்களின் அரசியல் செயல்பாடுகள்

சோழர்களின் அரசியல் இன்றைய நாகரிக அரசியல் போன்றது. நாடு முழுவதும் நிலங்கள் அளக்கப்பட்டு வகை வகையாக பிரிக்கப்பட்டன. வரியை வசூலிக்க பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள் எல்லாவகை வரிகளும் கவனிக்க உயர் அலுவலர் குழு அமைக்கப்பட்டது. தனித்தனி அலுவலர்கள், எல்லா மண்டலங்களையும் சேர்ந்த பலதுறையை கவனிக்க பேரலுவாளர் எனப் படிப்படியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். (R.D.O, D.R.O. & Collector). இராசராசனின் அரசியல் அமைப்பு வியத்தகு வண்ணம் அமைந்திருந்தது. ஊர் அவைகள், ஊராட்சியைக் குறைவற நடத்தின. ஒவ்வொரு மண்டலத்திலும் திறம்பட்ட படைகள் நிறுத்தப்பட்டன. (Armed Reserve Police) எல்லைப்புறங்களிலும் காவல் படைகள் (B.S.F) இருந்தன. புகழ்பெற்ற கப்பற்படை (Navy) இணையின்றி இயங்கியது.

சுருங்கக் கூறின் இன்றைய இந்திய அரசியல் சட்டத்திற்கு சோழர்களின் அரசியல் முன்னோடியாக இருந்தது என்றால் மிகையாகாது.

மேலும் குடிஆட்சி முறையில் குடவோலைச் சீட்டு மூலம் மக்கள் பிரிதிநிதிகளை தேர்ந்தெடுப்பது, மதசார்பற்ற சமயக் கொள்கை, சிறுபான்மையினரை அரவணைத்து செல்வது போன்றவையாகும்.

கடிகை என்னும் கல்லூரி சர்வகலாசாலைகள், அதில் பயிலும் மாணவர்களுக்கு, உதவித்தொகை, ஆசிரியர்களுக்கு தகுந்த ஊதியம் தந்து கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததை அறிய முடிகிறது.

வேளாண்மைக்கு ஆறுகளிலிருந்து பிரிவு வாய்க்கால்கள் வெட்டி உரிய காலத்தில் நீர் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், அவ்வப்போதும் ஏரி, குளங்கள் தூர்வாரியும், பராமரிப்பு வேலைகளும் முறையாக நடந்து வந்திருக்கின்றதை அறிய முடிகிறது.

இயற்கை இடர்பாடு காலங்களில் தேவையான அவசர உதவியும், பின் அதற்கான இழப்புத் தொகையும், வாழ்வாதாரத்துக்கான வழிமுறைகளையும் கண்டறிந்து செவ்வனே சோழ அரசு செயல்படுத்தியுள்ளது.

மழையின்றி நாடு முழுவதும் ஏற்படும் தொடர் பஞ்சங்களை சமாளிக்க, மக்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதற்கு அரசுநிதிக்களஞ்சியத்தில் (Treasury) தனி நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

சாலைகள், ராஜபாட்டை சாலைகள் (நெடுஞ்சாலைகள்) சிறு சிறு ஊர்களுக்கு தொடர்பான சாலைகள் முறையாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்பட்டன.

ஏற்றுமதி, இறக்குமதி சில பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அந்த மன்னனின் பெயரும் சுங்கம் தவிர்த்த சோழன் என்று அழைக்கப்பட்டது. இன்றைய அரசாங்கமே ஏற்றுமதி இறக்கு மதிக்கு வரிச்சலுகைகள் அளிப்பது கூட, சோழர்களின் வரிக்கொள்கை அடிப்படையில்தான் என்பது, சோழர்களின் அறிவார்ந்த சிந்தனை என்று பெருமைப்பட வைக்கிறது.

மரம் வளர்த்தல் :

பல வடிவில் பயன்தரும் மரங்கள் வளர்த்துக் கொள்வதற்கு ஊர்களுக்கும், ஊரில் உள்ள கோயில்களிலும் வளர்த்துக்கொள்ள அந்தந்த நிர்வாகத்திற்கு உரிமையுண்டு. காவும் (சோலையும்) தெங்கும் (தென்னையும்) கமுகும் (பாக்குமரமும்) பனைமரம், பலாமரம், மாமரம் தமனகமும்,(மரிக்கொழுந்து, இருவேலி, வெட்டிவேர். மூன்றும்) செண்பகமும், செங்கழுநீரும் உள்ளிட்ட மரவகைகள் வைத்துக் கொள்ளும்படி அந்தந்த நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. மரம் வைத்தல் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்று உணர்ந்து இன்றுபோல் அன்றும் வலியுறுத்தப்பட்டது.

இராசேந்திர சோழன் கடல் கடந்து தமிழ் வழிபாட்டுப் பாடல்களைப் பரவச்செய்தார். இன்றும் கடாரம், சாவகம், சயாமில் அரசர் முடிசூட்டு விழாவில்போது ஜின் ஜா, திரிபாவ, திருவெம்பாவை (திருப்பாவை, திருவெண்பாவை) பாடப்படுகின்றன. லோரிபாவ பாடல்கள் (ஏலே எம்பாவாய்) என அவற்றை அழைக்கின்றனர்.

தமிழர் பண்பாடு வழிபாட்டுப் பாடல்கள் தென்கிழக்கு ஆசியாவில் பரவின. சிறந்த கப்பல்படையின் துணை கொண்டு கடாரத்தரசனாகிய விசயோத்துங்கனை வென்றார். அங்கு கப்பற்படையை நிலை நிறுத்திக்கொண்டு அங்கிருந்து ஸ்ரீ விஜயம், பண்ணை மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தமாலிங்கம், இலாமுரிதிதேசம், நக்காவரம் ஆகிய கடல் கடந்த இடங்களை கைப்பற்றினார்.

இந்தியா முழுவதும் கடல் கடந்து கப்பற்படையைச் செலுத்தி அயல்நாடுகளின் தமிழரின் ஆட்சியை நிறுவிய இராசேந்திரசோழன், தமிழரின் வழிபாட்டு முறையை பண்பாடு முதலியவற்றை அயல் நாடுகளில் வேரூன்றச் செய்தான்.

பிறகாலத்தில் கப்பற்படையினால் உலகம் முழுவதும் ஆதிக்கம் செய்த பிரிட்டிஷ் அரசினைப் போன்றே நம்நாடும் கப்பற்படையினரால் சாதித்திருக்கமுடியும். ஆனால் தமிழகத்துக்கு உரிய உட்பகை இராசேந்திர சோழனை செயல்படவிடாமல் தடுக்கிவிட்டது.

சோழர் குலத்தையும், சாம்ராஜ்யத்தையும் தக்க வைத்துக்கொள்ள பல்வேறு சூழ்ச்சிகளை முறியடிக்கும் பணியிலேயே ஈடுபட நேர்ந்தது. தமக்குப் பின்னர் சோழர் குலத்தைக் காப்பாற்றுவதற்கும்,

வெற்றி கொண்ட நாடுகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், தம்முடைய நான்கு புதல்வர்களுக்கும் பேரரசின் நான்கு பகுதிகளாக பிரித்துக் கொடுத்து ஆட்சி புரிவதற்கு ஏற்பாடு செய்தான்.

இதனால் தென்னகம் முழுவதும் சோழ வம்சத்தின் ஆட்சி நிலவியது. எனினும் சோழப்பேரரசின் பெருமையும் கட்டுக்கோப்பும் மேலும் வளர இம்முறை துணை புரியவில்லை .

அப்போதிருந்த சூழ்நிலையில் தம் புதல்வர்களைத் தனித்தனிப் பகுதிக்கு அரசர்களாக்கிய சோழர் குலத்தைக் காப்பாற்றும் மிகச் சிறந்த அரச தந்திரமாகக் கருதப்பட்டது.

நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக தம் மனைவி வீரமாதேவியுடன் சென்றவர், தொண்டை மண்டலத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் பிரமதேயம் என்னும் ஊரில் எதிர்பாராதவிதமாக திடீரென்று உடல்நலம் குன்றி இறைவனடி சேர்ந்தார்.

அவருடன் அரசி வீரமாதேவியும் உயிர் துறந்தார். அரசி வீரமாதேவியின் தமையனும், சோழர் படைத்தளபதிகளுள் ஒருவனான மூவேந்த வேளாண் அங்கு ஒரு தண்ணீர்ப்பந்தல் நிறுவியதாகக் கல்வெட்டு கூறுகிறது. (Annual Report on South Indian Epigraphy 1915-16)

பாரதத்தின் பெரும்பகுதியிலும் கடல்கடந்த நாடுகளிலும், சோழ சாம்ராஜ்யத்தை நிறுவி தமிழரின் பெருமையை அயல் நாடுகளில் ஒலிக்கச் செய்த பேரரசர் இராசேந்திர சோழரின் சமாதி அங்கே கேட்பாரற்றுச் சிதிலமடைந்து ஒரு கல் மேடைபோல் காட்சியளிக்கின்றது என்பது மிகவும் வருத்தமான செய்தி.

இராசேந்திர சோழன் வென்ற அயல் நாட்டுப் பகுதிகள்

1. கடாரம் - மலேசியாவின் மேல்கரைத் தென்பாகம் (இன்றைய மியான்மாரின் ஒரு பகுதி)
2. ஸ்ரீ விஜயம் - சுமத்ரா தீவின் சொர்ணத்தீவு
3. பண்ணை - சுமத்ராத் தீவின் பெனை எனும் பகுதி
4. மலையூர் - மலையூர் ஆற்றுப்பகுதி
5. மாயிருடிங்கம் - மலேசியாவின் நடுப்பகுதி
6. இலங்காதேசம் - மலேசியாவின் கீழ்த்தென்பகுதி
7. பப்பாளம் - கிராபூந்திக்கு அருகில் உள்ள பகுதி
8. தமாலிங்கம் - மலேசியாவின் கீழ்க்கரை

9. இலாமூரித்தேயர் - சுமத்ராவின் வடபகுதி

10. நக்காவரம் - நிக்கோபர்த்தீவுகள் (இன்றைய இந்தியாவின் அந்தமான் நிக்கோபர் தீவுகள்)

11. சயாம் - கம்போடியா (இங்குதான் உலகப்புகழ்பெற்ற அங்கோவர்ட் கோயில் உள்ளது, சோழமன்னனால் கட்டப்பட்டது. இப்பொழுது UNESCO-வினால் பராமரிக்கப்படுகிறது.

12. தாய்லாந்து - இங்கும் அரசர் முடிசூட்டும் விழாவின்போது இன்றளவும் திருப்பாவை, திருவெண்பாவை பாடப்படுகிறது.

13. பாலித்தீவுகள் - இந்தோனேசியாவுக்கு அருகில் உள்ள ஒரு தீவு, இங்கு இன்றுவரை தமிழர்களின் பண்பாடும், வழிபாடுமுறையும் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இன்று உலகின் தலைசிறந்த சுற்றுல்லா தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

முதல் இந்தியன்

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த குடி மரபு ஆராய்ச்சியாளர் திரு.பிச்சைப்பெருமாள் பேராசிரியர் (Genealogist) அவர்களுடைய ஆராய்ச்சி முடிவில் கள்ளர் பிரிவில் உசிலம்பட்டிக்கு அருகில் உள்ள ஜோதிமாணிக்கம் என்ற ஊரில் வாழும் பிறமலைக்கள்ளர் திரு.விருமாண்டி என்பவருக்கு M130Y என்ற ரத்த மரபு இருந்ததாக அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. மனிதன் முதன் முதலில் தோன்றிய இடம் ஆப்பிரிக்கா கண்டம், அங்கிருந்துதான் அவன் உலகின் பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து வந்துள்ளான். சுமார் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக மனிதன் தோன்றியதாக அறிய வருகிறது.

முதன் முதலில் தோன்றிய மனிதனின் ரத்த மரபும் (Blood Gen) நமது உசிலம்பட்டிக்கு அருகிலுள்ள ஜோதிமாணிக்கம் ஊரில் வாழும் திரு.விருமாண்டி என்பவருடைய ரத்த மரபும் DNA கட்டமைப்பு M130Y ஒன்றாக உள்ளதாக ஆராய்ச்சியின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் திரு.மெக்காலே எழுதிய (Histiry of India) இந்திய வரலாற்றில் முதல் இந்தியன் (First Indian) கள்ளர்கள் தான் எனக்கூறுகிறார். அவரை மட்டுமில்லாமல் மேலும் 12 பேருக்கு ரத்த மரபு சோதனை செய்ததில் M130Y என்ற உலகில் முதல் மனிதனின் ரத்த மரபு இருந்ததாக உறுதி செய்யபபட்டுள்ளது. திருவாளர் லூயிஸ் டோமன்ட் என்ற நூலாசிரியரும் தன்னுடைய South Indian Sub Caste (தென்னிந்திய ஜாதி வரலாறு) லும் குறிப்பிடுகிறார்.

அண்மையில் ஸ்டார் விஜய் தமிழ் தொலைக்காட்சியில், சரித்திர ஆராய்ச்சியாளர் திரு.ராஜநாராயணன் அவர்கள் திரு.விருமாண்டி மற்றும் ஆராய்ச்சியாளர் திரு.பிச்சைப்பெருமாள் (Genealogist, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) அவர்களையும் பேட்டி கண்டு ஒளிபரப்பி உள்ளது. இங்கிலாந்தில் உள்ள லண்டன் BBC யும் இதை உறுதிப்படுத்துகிறது. இவை யாவும் பிறமலைக்கள்ளர் வம்சாவளியும் வழிபாட்டு முறையும் என்ற ஆண்ட வம்சம் ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது. (ஆவணப்பட இயக்குநர் திரு.கு.ரத்தினசாமி MA., அவர்கள்)

இதை எதற்கு இங்கு குறிப்பிடுகிறோம் என்றால் பிறமலைக்கள்ளர் நாடு உருவாக்கும் போது மதுரை கிழக்குப்பகுதியிலிருந்து பல கள்ளர் பிரிவுகள் புலம் பெயர்ந்து பிறமலைக் கள்ளர்களோடு ஒன்றறக்கலந்து பிறமலைக் கள்ளர் நாடுகளை உருவாக்கியுள்ளனர். அதில் வெள்ளலூர் நாட்டிலிருந்து திரு.தூங்காத்தேவர், மேலநாட்டிலிருந்து நரசிங்கதேவர் நரசிங்கம்பட்டி, கள்ளந்திரி பிச்சைஅம்பலம் மற்றும் பல புலம் பெயர்ந்த கள்ளர்களால் பிறமலைக் கள்ளர்களின் முதல் நாடான திடியன் நாடு மற்றும் இதர ஏழு நாடுகளும் உருவாக்கப்பட்டது என அறியப்படுகிறது, எனவே உலகின் முதல் மனிதனின் ரத்த மரபு சோழ நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வந்த கள்ளர்களுக்கு உண்டு விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் கள்ளர்கள்தான் முதல் இந்தியன் என தெரியவருகிறது.

ஆரவாரம் இல்லாத அதிசய தேர்தல்

பரபரப்பான இப்போதைய தேர்தல் காலத்திற்கு உரிய மசாலாக்கள் ‘எதுவும்’ இல்லை.

காதுகளை செவிடாக்கும் பிரசார கோஷங்கள் கிடையாது.

“உங்களது பொன்னான வாக்குகளை எனக்குப்போட்டால் நாட்டில் பாலும் தேனும்ஆறாக ஓடச் செய்வேன்” என்ற மாயாஜால வாக்குறுதிகளுக்கு இடம் இல்லை.

கூட்டனி அமைப்பதற்கோ, தேர்தலின்போது வாக்குகளை மக்களிடம் இருந்து பறிப்பதற்கோ, பண பேரம் பேசுவதற்கு வாய்ப்பே கிடையாது.

இதை எல்லாம் விட, நான் தான் வேட்பாளர் என்று யாரும் தேர்தல் களத்தில் குதித்துவிட முடியாது.

ஆனாலும் தேர்தல் நடந்தது.

அமைதியான முறையில், எந்தவித ஆடம்பரமோ, ஆரவாரமோ இல்லாமல், பலவித கடுமையான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது.

இந்த அதிசயம், சுமார் 1000 அண்டுகளுக்கு முன் தமிழ் மண்ணில்தான் அரங்கேறியது.

ஜனநாயக முறைப்படியான தேர்தலுக்கு உரிய அனைத்து விதிகளையும் உலகுக்கே அறிமுகப்படுத்திய அந்த தேர்தல், தமிழகத்தில் சோழர் கால மன்னர்களால் நடத்தப்பட்டது.

விஞ்ஞான உலகத்தில் தற்போது எவ்வளவோ வளர்ச்சிகளை நாம் பெற்றுள்ளோம். தகவல் தொழில்நுட்பமும் பெருகி உள்ளது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை வாக்குச்சீட்டுகள் அடிப்படையில் தான், மக்கள் தங்கள் வாக்குகளை செலுத்தி மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்தனர். ஆனால் தற்போது அப்படி அல்ல. மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் வந்து விட்டது.

வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட காலத்தில் தேர்தல் முடிவுகள் முழுமையாக தெரிய ஓரிரு நாட்கள் ஆகும். ஆனால் தற்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், வந்த பின்னர் ஒரே நாளில் அதுவும் சில மணித்துளிகளில் முடிவுகள் தெரிந்து விடுகிறது.

ஆனால் மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட தேர்தல் இப்போதைய தேர்தல்கள் போல் அல்ல.

தற்போதைய தேர்தல்கள் போல அடிதடி, வன்முறை இன்றி, முறைகேடுகள் இன்றி, கள்ள ஓட்டுகள் இன்றி சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. தேர்தலில் முடிவுகளும் ஓரிரு நிமிடத்திலேயே அந்த காலத்தில் தெரிந்து விடும்.

மன்னராட்சி காலத்தில் நடத்தப்பட்ட இந்த தேர்தலை குடவோலை முறை என்பார்கள். இந்த தேர்தல் 9-ம் நூற்றாண்டு முதல் 16-ம் நூற்றாண்டு வரை நடை முறையில் இருந்துள்ளது.

இதற்கான ஆதாரங்கள் உத்திரமேரூர் உள்ளிட்ட சில இடங்களில் உள்ள கல் வெட்டுகளிலும், செப்புத் தகடுகளிலும் உள்ளன. கி.பி.907 முதல் 955 வரை அண்ட வீரநாராயண பராந்தகதேவ பரகேசரிவர்ம சோழராஜா என்ற முதலாம் பராந்தகன் காலத்திய கல்வெட்டுகள் உத்திரமேரூரில் உள்ளது. சென்னையில் இருந்து தென்மேற்கே 85 கிலோ மீட்டர் தொலைவில் காஞ்சீபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த சிறிய கிராமத்தில் தமிழர்களின் பண்டைய வரலாற்றை பறைசாற்றும் அரிய பொக்கிஷங்கள் உள்ளன. இங்குள்ள ஸ்ரீ சுந்தரவரதராஜர்கோவில், சிவன்கோவில் ஆகியவற்றில் உள்ள புராதன கல்வெட்டுகளில் அந்த காலத்தில் நடந்த தேர்தல்கள் பற்றியும், அந்த தேர்தல்களை எப்படி நடத்தினார்கள், அதற்கான நடத்தை விதிமுறைகள் என்னென்ன என்பது பற்றியும் விரிவாக, தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இதில் 2 விதமான கல்வெட்டுகள் இருக்கின்றன. முதல் கல்வெட்டு சுருக்கமாகவும், 2-வது கல்வெட்டு விரிவாகவும் இருக்கின்றது. உத்திரமேரூர் கல்வெட்டுக்கு 50 ஆண்டுகள் முந்தைய தஞ்சை மாவட்டம் செந்தலை என்ற சந்திரலேகா சதுர்வேதி மங்கலம். முதலாம் ஆதித்திய சோழன் கல்வெட்டுகளில் ஆட்சி நிர்வாக தேர்தலில் ‘குடும்பு’ என்ற வார்டு முறை அமல்படுத்தப்பட்டது குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

மயிலாடுதுறை வட்டம் தலைஞாயிறு என்ற ஊரில் உள்ள குற்றம் பொறுத்தீசுவரர் கோவில் கல்வெட்டுகளிலும் தேர்தல் நடைமுறை பற்றிய வாசகங்கள் காணப்படுகின்றன.

தற்போது மாவட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, என்று இருப்பதைப்போன்று அப்போதும் ஊராட்சி அமைப்புகள் இருந்தன. அப்போது சம்வத்சரவாரியம் அல்லது ஆட்டை வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம் ஆகியவற்றுக்கு தலைவர்கள் தேர்தல் நடைபெற்றுள்ளது.

இந்த தேர்தலுக்கு குடவோலை முறை என்று பெயர். குடவோலை என்பது கிராம நிர்வாக சபை உறுப்பினரை தேர்ந்து எடுக்க பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தேர்தல் முறை.

உத்திரமேரூர் பகுதியில் உள்ள கிராமத்தை பகுதிவாரியாக 30 குடும்புகளாக பிரித்து ஒவ்வொரு குடும்பிலும் ஒருவர் என்ற அடிப்படையில் தகுதியானவர்களின் பெயர்களை மக்கள் கூடி, ஓலைச்சுவடிகளில் எழுதுவார்கள். பின்னர் அதை மொத்தமாக மண்பாண்டத்தால் செய்யப்பட்ட குடம் போன்ற பானையில் போடுவார்கள்.

அந்த ஓலையை யாதும் அறியாத சிறுவன் அல்லது சிறுமியை அழைத்து எடுத்து உறுப்பினர்களை தேர்வு செய்வார்கள். அந்த சிறுவன் அல்லது சிறுமி குடத்தில் இருந்து ஓலையை எடுத்து மத்தியஸ்தர் ஒருவரிடம் கொடுப்பார். அவர் அந்த ஓலையை தனது ஐந்து விரலையும் அகல விரித்து உள்ளங்கையில் வாங்க வேண்டும். அதன் பின்னர் அவர் தேர்வு செய்யப்பட்டவரின் பெயரை வாசிப்பார்.

இவ்வாறு 30 ஓலைகளில் 30 பேரின் பெயர்கள் எடுக்கப்பட்டு வாசிக்கப்படும். இதில் 12 பேர் சம்வத்சரவாரிய தலைவர்களாகவும், 12 பேர் தோட்ட வாரிய தலைவர்களாகவும், 6 பேர் ஏரி வாரிய தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பேரில், வயதாலும், கல்வியினாலும் மூத்தவர்கள் 12 பேர் மேலாட்சி செய்ய அதாவது சம்வத்சர வாரியத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இதே போல் சதுர்வேதிமங்கலத்தை சுற்றி உள்ள புறநகர் குடியிருப்புகளான 12 சேரிகளுக்கு 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் பஞ்சவார வாரியம் (இது ஒருவகை வரி) தலைவர்கள் 6 பேரும், பொன் வாரியத்துக்கு 6 தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த குழுக்கள் அப்போதைய அரசாணைப்படியே தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பின்படி அரசு அதிகாரி ஒருவரும் உடன் இருப்பார். பொன்வாரியம் என்பது பொன்னின் தூய்மையை பரிசோதிக்கும். பணிவாரியாக வரவேண்டிய நெல்லை வசூலிக்கும் பணி பஞ்சவார வாரியத்தை சேர்ந்தது ஆகும்.

குடவோலை முறை பற்றி பேசும் முதல் கல்வெட்டு 12 வரிகளையும் 2-வது கல்வெட்டு 18 வரிகளையும் கொண்டது ஆகும். முதல் கல்வெட்டில் ஒவ்வொரு ஆண்டும் சில விதிமுறைகளின்படி தேர்தல் நடைபெற வேண்டும் என குறிப்பிடப்பட்டு உள்ளது. பின்னர் 14 அண்டுகளுக்குப்பின்னர்

இடையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதால் இடையில் ஏதோ சிக்கல் ஏற்பட்டிருக்கலாம் என தோன்றுவதாக அமைகிறது.

இந்த தேர்தலில் தேர்ந்து எடுக்கப்படுபவர்களின் பதவிகாலம் ஒரு ஆண்டு ஆகும். அவர்களது பதவி முடிந்ததும், அந்த சபையில் உள்ள அனைத்து அங்கத்தினர்களும் பதவி விலகி விடுவார்கள்.

அதன் பிறகு, ஊர் மத்தியஸ்தர்களால் நியமிக்கப்படும் 'தர்மகிருத்ய சபை' என்ற பொதுவான அமைப்பின் கீழ் ஆட்சி நிர்வாகம் வந்துவிடும். அந்த சபையினர் தான் அடுத்த தேர்தலை நடத்துவார்கள். இந்த மத்தியஸ்தர்கள் சபை எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் விதி முறைகள் கூறப்பட்டுள்ளன.

குடவோலை முறை தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதற்கு முதலில் ஊர் பெரியவர்கள் கூடி சில சட்டதிட்டங்களை வகுத்து இருக்கிறார்கள்.

பின்னர் தத்தனூர் மூவேந்த வேளாண் என்ற அதிகாரி ஒரு முறையும். ஸ்ரீவங்கஸோமாசி கிரமவித்த பட்டன் என்ற அதிகாரி ஒருமுறையும் மன்னரால் அங்கு அனுப்பப்பட்டு அந்த சட்ட திட்டங்களை சரிசெய்து ஒப்புதல் கொடுத்து இருக்கிறார்கள்

சந்திர சூரியர்கள் உள்ளவரை நாட்டு மக்களின் நலனுக்காக இந்த தேர்தல் முறை கடைபிடிக்கப்பட வேண்டும் என்று உத்திரமேரூர் கல்வெட்டில் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

ஆனால் நமது துரதிருஷ்டம், எப்போதோ அந்த அருமையான தேர்தல் முறை வழக்கொழிந்து ஆரவாரமான ஆர்ப்பாட்டமான தேர்தல் நடைமுறை அமலுக்கு வந்துவிட்டது.

தேர்தலில் போட்டியிட கல்வித்தகுதி அவசியம்

சோழமன்னர் காலத்தில் நடைபெற்ற குடவோலை முறையில் உறுப்பினர்களாக போட்டியிடுபவர்களுக்கு தகுதிகள் உண்டு.

அந்த தகுதிகள் வருமாறு :-

1. கால்வேலி நிலம் இருக்க வேண்டும்.

2. சொந்த வீட்டுமனை இருக்க வேண்டும்.

3. 35 வயது முதல் 70 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். ஊராட்சி என்பது பொது மக்களின் வாழ்வை வளமாக்குவது. ஆதலின் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல்பட்டவர்களே தேவை. 35 வயதுக்கும் குறைந்தவர்களின் கையில் பொதுமக்களின் வாழ்வை பாதிக்கும் ஆட்சியை ஒப்படைக்க முடியாது என்பது அந்தக்காலத்து அனுபவம். 70 வயதுக்கு மேல் ஆட்சியை அடுத்த தலைமுறையினருக்கு விட்டுக்கொடுத்து தாங்கள் ஒதுங்கி விடவேண்டும்.

4. ஒரு குறிப்பிட்ட கல்வி வரம்பு வரை (சாஸ்திரம், வேதங்கள்) தேர்ச்சி பெற்றவர்களே தேர்தலில் நிற்க முடியும்.

5. ஒரு வேதமும் கற்காதவர்கள் எனில் 1 வேலி நிலமும், சொந்த வீடும் வைத்திருக்க வேண்டும்.

6. உடல் வலிமை மற்றும் மன வலிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

7. கட்டாயம் வரி செலுத்துபவராக இருக்க வேண்டும்.

தற்போதைய தேர்தலில் வேட்பாளர்கள் போட்டியிடுவதற்கு எந்தவித கல்வித்தகுதியும் தேவைஇல்லை. ஆனால் மன்னர்கள் காலத்தில் போட்டியிடுபவர்கள் கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும். அதாவது வேதம், சாஸ்திரம் போன்ற கல்வியை அவர்கள் கற்றிருக்க வேண்டும். அதபோல் ஒருவர் எத்தனைமுறை வேண்டுமானாலும் வாரிய தலைவர் ஆக முடியாது. ஒரு முறை போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மீண்டும் தேர்தலில் நிற்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தகுதி பற்றி கல்வெட்டில் கூறப்பட்டுள்ள வாசகங்கள் வருமாறு :

1. காணி நிலத்துக்கு மேல் இறை (வரி) நிலமுடையான். (சொந்த நிலம், வீடு வைத்துள்ள படித்தவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும்).

2. தன் மனையிலே அகமெடுத்துக் கொண்டிருப்பவர்.

3. அறுபது பிராயத்தின் கீழ் முப்பது பிராயத்தின் மேற்பட்டார். (இந்த விதி சில ஆண்டுகளில், எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)

4. வேதத்திலும், சாஸ்திரத்திலும், காரியத்திலும் நிபுணர் என எண்ணப்பட்டிருப்பவர்.

5. அர்த்த சுத்தமும், ஆத்ம சுத்தமும் உடையவார்.

6. மூவாண்டினிப்புறம் (மூன்று ஆண்டு) வாரியம் செய்திலாதார்.

7. வாரியம் செய்தொழித்த பெருமக்களுக்கு ஆத்ம பந்துக்கள் அல்லாதார்.

தகுதி அற்றவர்கள் போட்டியிட தகுதி உள்ளதைப்போல் தகுதி அற்றவர்களும் இருந்துள்ளனர். அது வருமாறு :-

1. வாரியங்களுக்கு கணக்கு காட்டாது இருந்தவர்கள்.

2. கையூட்டு செய்தவர்கள் வாழ்நாள் முழுவதும் தேர்தலில் நிற்க முடியாதவர்கள் ஆவர்.

3. பிறரின் பொருட்களை பறித்தவர்கள்.

4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவி காலத்தில் இடையில் தவறு செய்தால் உடனே பதவியில் இருந்து விலக்கப்படுவார்கள். மேலும் பிறர் பொருளை அபகரித்தவர்கள், பிறர் மனையை அபகரித்தவர்கள்,

பஞ்சமா பாதகங்கள் புரிந்தவர்களுக்கு, எந்த விதத்திலும் துணை போனவர்களும், தேர்தலில் கட்டாயம் நிற்க முடியாது.

அந்தக்காலத்தில் மிகப் பெரிய தவறு செய்பவர்களை "கழுதை மேல் ஏற்றி ஊர்வலமாக கொண்டு. செல்வார்கள். எனவே, கழுதைமேல் ஏறினோரையும், கூடலேகை செய்தாரையும் (பொய்க் கையெழுத்து போட்டவர்களையும்) குடவோலையில் இடம் பெறாததாகவும்" என்று கல்வெட்டில் கூறப்பட்டு இருக்கிறது.

அத்துடன் கையூட்டு (லஞ்சம்) பெற்றவர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் தேர்தலில் எந்தக்காலத்திலும் போட்டியிட முடியாது. அத்தகைய நெருங்கிய உறவினர்கள் யார் - யார் என்ற பட்டியலையும் கல்வெட்டில் கொடுத்து இருக்கிறார்கள்.

அதாவது, குற்றச்செயலில் ஈடுபட்டவரின் தந்தை, பிள்ளை, சகோதரர், மாமனார், மைத்துனர், சகோதரியின் கணவர், சகோதர சகோதரிகளின் பிள்ளைகள், அவர்களது பிள்ளைகள், அத்தை பிள்ளை, மாமா, மாமா பிள்ளை, தாயாரின் சகோதரிபிள்ளை ஆகிய அனைவரும் எந்த தேர்தலிலும் போட்டியிட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் யார்?

அந்தக்கால குடவோலை முறை தேர்தலில் யாரும் தானாக விரும்பி தேர்தலில் போட்டியிட முடியாது.

தேர்தலில் போட்டியிடுவதற்கான அனைத்து தகுதிகளும் பெற்றவர் யார் என்பது, அந்தந்த ஊரில் உள்ள பெரியவர்களுக்குத் தெரியும்,

அத்தகைய தகுதி உடைய அனைவரின் பெயரையும் ஓலையில் எழுதி குடத்தில் போடுவார்கள். அவர்கள் தான் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆவார்கள். அவ்வாறு எழுதிப்போடப்பட்ட ஓலைகளில் இருந்து, சிறுவன் அல்லது சிறுமி எடுத்துக்கொடுக்கும் ஓலையில் பெயர் உள்ளவர்தான் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.

சட்டம் - நீதி - மனிதாபிமானம்

சோழ நாட்டில் ஒரு நீதிமன்றமொன்று சற்று வித்தியாசமான வழக்கொன்றை சந்தித்தது.

வயதான பெண்மணியொருவர், தோட்டம் ஒன்றில் ஒரு சில பழங்களை திருடியதாக அத்தோட்ட பொறுப்பாளரினால் வழக்கு தொடரப்பட்டார்.

வழக்கை மிகக்கவனமாக செவியுற்ற நீதிபதி, அம்மூதாட்டியிடம் விசாரித்த பொழுது, அவர் இப்படி கூறினார்.

நான் களவாடியது உண்மைதான், எனது சிறிய பேரன் பசிக்கொடுமையால் வாடுகிறான். வேறுவழியின்றி இச்செயலைச் செய்தேன் என்று தனது தவறை ஒப்புக்கொண்டார்.

இதைக்கேட்டது நீதிபதி.....

என்னை மன்னிக்க வேண்டும், சட்டத்தின் முன்னால் நான் உங்களை வேறுபடுத்தி பார்க்க முடியாது.

எனவே உங்களுக்கு அபராதமாக பழங்களின் விலையை விட 500 மடங்கு விதிக்கிறேன். இதை கட்டத் தவறினால் இரண்டு வருடம் சிறையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு தீர்ப்பளித்துவிட்டு நீதிபதி, தன்னுடைய தலைப்பாகையை கழற்றி அங்கு குழுமியிருந்த மக்களைப் பார்த்து...

“இங்குள்ள ஒவ்வொருவர் மீதும், நான் 500 காசு வீதம் தண்டனையாக இடுகின்றேன். காரணம்!!! இந்த ஊரில் ஒரு சிறு குழந்தை உணவின்றி பட்டினியால் வாடுவதற்கும், அதன் காரணமாக குழந்தையின் பாட்டி தவறான செயலை செய்யும் சூழலை உருவாக்கியதற்காகவும், உங்களுக்கு இத்தண்டணையை அளிக்கின்றேன் என்று உத்தரவிட்டு, நீதிமன்ற உதவியாளர் மூலமாக, அங்குள்ள அனைவரிடமும் தண்டனைப் பணத்தை வசூலித்தார்.

இதில் தோட்டத்தின் பொறுப்பாளரும் அடங்குவார். இவ்வாறு சேர்ந்த பணத்தில் நீதிமன்றத்திற்கு அபராதத் தொகையை செலுத்திவிட்டு, அம்மூதாட்டியை தண்டணையிலிருந்து விடுவித்துவிட்டு, மீதிப்பணத்தை அவரிடம் கொடுத்து அவரது கஷ்டத்திற்கு பயன்படுத்தும்படி கூறி, அங்கிருந்து சென்றார்.

சட்டம்-மனிதாபிமானம்-நீதி ஒன்றுக்கொன்று கைகோர்த்து தர்மத்தை நிலைக்க வைத்துவிட்டன!

நீதிபதி என்றால் இவர்போல சட்டத்தையும், மனிதாபிமானத்தையும் ஒருங்கே கையாள வேண்டும். இந்த முன்னுதாரணமான நீதிபதியை அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள் வாழ்த்தினார்களாம்.

ஒருவனுடைய குற்றத்தை அவன் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், தானே ஒப்புக்கொண்டால், அந்த குற்றத்தை தகுந்த வழிகளாலேயே, அவன் ஏன் எதற்காக செய்தான் என்று ஆராய்ந்து அதற்குரிய தண்டனையை குற்றத்திற்கு தகுந்தபடி வழங்கவேண்டும்.

அதுமட்டுமில்லாது அவன் மீண்டும் குற்றங்கள் செய்யாதிருக்க, நல்வழிக்கு செல்வதற்கு வாழ வழி ஏற்படுத்த வேண்டும், இது வேந்தனின் கடமையாகும்.

மக்கள் தங்களது பொறுப்புகளை அவரவர் உணர்ந்து, செயல்பட்டு வரச்செய்வது தலைவர்களின் கடமையாகும். ஒவ்வொரு மனிதனுடைய செயலும் சமுதாயத்தின் கட்டுப்பாட்டையும், அமைதியையும் குலைப்பதாயிருக்கக்கூடாது.

சமுதாயத்தின் கட்டுக்கோப்பு குலையாமலும், சத்தியம், நீதி, நேர்மையோடு உழைத்து மக்களை வாழ வைத்துக்கொண்டிருப்பதே நாட்டின் நோக்கமாயிருக்க வேண்டும்.

அதனால் என்னவோ, தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினை அழித்திடுவோம். என மகாகவி பாரதி கூறினாரோ?

கல்லணை உருவாவதற்கு காரணம்

சேரர்களும், சோழர்களும், பாண்டியர்களும் பெண்எடுத்து, பெண்கொடுத்து உறவு பூண்டிருந்தார்கள். சேரமன்னரின் மகன் ஆட்டணத்தி சேரனை மருமகனாக்கிக் கொண்ட கரிகாற் சோழர், ஆடிப்பெருக்கு விழாவைக்காண காவிரியாற்றங்கரைக்குக் குடும்பத்துடன் சென்றார். காவிரிப்பெருக்கில், கணவனும், மனைவியும் தனியாக நீராடும்போது கரிகாற் சோழனின் மருமகன் ஆட்டணத்திசேரன் அடித்துச் செல்லப்பட்டான் வெள்ளப்பெருக்கில். கணவனைத் தேடிக்கொண்டு சோழனின் மகளான ஆதிமந்தி கரையினிலே ஓடினாள். காவிரி கடலோடு கலக்கின்ற பூம்புகார் வரை சென்றாள். அங்கு மருதி என்பவள் ஆட்டணத்தியைக் காப்பாற்றியதை உணர்ந்து நன்றிகூறி வணங்கினாள். பின்னர் தன் கணவனுடன் அரண்மனைக்குத் திரும்பினாள்.

பல இடங்களிலும் வீரர்கள் தேடியும் மருமகனும், மகளும் கிடைக்காததை கேள்வியுற்று கரிகாற்சோழர் மிகவும் துயருற்ற நிலையிலிருந்த மன்னனின் முன் இளவரசி ஆதிமந்தியும் அவரது கணவரும் வந்து நின்றார்கள். நடந்தவைகளை அறிந்தவுடன் மன்னன் ஒரு முடிவுக்கு வந்தார்.

நீண்ட நாளாகவே காவிரியில் வரும் வெள்ளம் வீணாகக் கடலில் வீழ்வதைத் தேக்கிப் பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை இந்த நிகழ்வு தீவிரப்படுத்தியது. அதனால் வெள்ளப்பெருக்கைத் தடுக்கவும், காவிரிநீரைப் நீர்பாசனத்திற்குப் பயன்படுத்தவும் கல்லணை கட்டினார்.

கல்லாலும், களிமண்ணாலும் கட்டப்பட்டது கல்லணை. ஆற்றில் மணல்மேல் மிகக்கனமான கற்களை வரிசையாக அடுக்கிவிட்டால், நீர் வர வர அடியில் உள்ள ஆற்றுமணல் மேல் நோக்கி வந்து அடித்துச் சென்றுவிடும். கற்கள் அடியில் ஆழமாக சென்று பாறையில் உட்கார்ந்து கொள்ளும், அதன் மேல் ஆற்று ஓரம் உள்ள களிமண்ணை குழைத்து, நன்றாக வெயிலில் காயவைத்து அவற்றை பல அடி ஆழத்தில் நிரப்பி, அதன் மேல் கருங்கல்லை பரப்பி அடிமட்டம் (Foundation) அமைக்கப்பட்டது. அதன்மேல் நீளமாகவும், சரியான அகலமாகவும் கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து இடையில் ஒருவிதமான பசையுடன் கூடிய அந்த ஆற்றின் பகுதி களிமண்ணை செலுத்தி காய்ந்தவுடன் எக்காலத்திற்கும் உறுதியாக பாதுகாப்பாக அமையும்படி கட்டினார்களாம்.

இவ்வாறு கட்டப்பட்ட அணை உலகில் இரண்டேதான். ஒன்று எகிப்து நாட்டில் உள்ளது. மற்றொன்று நம் கல்லணைதான். எகிப்தில் உள்ள அணை இப்பொழுது சற்று பழுதடைந்த நிலையிலுள்ளதாம். ஆனால் நமது கல்லணை கட்டப்பட்டபோது எந்த நிலையிலிருந்ததோ, அப்படியே (1300) ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் நிலைத்து உறுதியாக நிற்கின்றது.

எந்தவித நவீன தொழில் நுட்பமும் இல்லாத காலத்தில் கட்டப்பட்ட அணையான கல்லணையையும், அதன் கட்டமைப்பும் உலகமே ஆச்சரியத்துடன் பார்க்கிறது. தமிழர்களின் அக்கால அறிவியல் நுட்பத்திற்கு இதுவே மிகப்பெரிய சான்றாகும். தமிழர்களை தலைநிமிர வைத்துள்ளது.

கல்லணை கட்டியதும் கரிகாலரைப் புகழாதவர்களே இல்லை எனலாம். அம்மன்னனைப் பெற்றவள் புண்ணியவதி என்று நாடே புகழ்ந்தது எனக் கூறுவார்கள். நல்ல நேரத்தில் மகன் பிறந்தால் மிகப்பெரும் பேரரசு அமைப்பான் என சோதிடர்கள் கூறியதால், கரிகாலச்சோழனின் அன்னை, தம்மை தலைகீழாகக் கட்டிவிடுமாறு கூறி, நல்லநேரம் வரும்வரை கடுமையான வலியுடன் பொறுத்துக்கொண்டு கரிகாலனைப் பெற்றாள், அதனால் மகனை ஈன்றதும் இறந்தாள் !

தாயிற் சிறந்த கோயிலும் இல்லை என்பது எவ்வளவு பெரிய உண்மை? கரிகாலச்சோழரின் அன்னை செய்தது மிகப்பெரும் தியாகம். தன் கணவர் இளஞ்சேட்சென்னி சோழன் போரில் வீரமரணமடைந்ததைக் கேள்வியுற்றும், தாம் கர்ப்பவதி என்பதால் உயிர் சுமந்து உலவினாள். அக்காலத்தில் உடன்கட்டை ஏறுவதுதானே மரபு. கரிகாலனை ஈன்றெடுப்பதற்காகவே உயிர் சுமந்தாள். அவளுடைய அண்ணன் ஆதரவாக இருந்தார். தாய்முறை சகோதரனான பெருஞ்சோழர் ஆட்சியை கவனித்துக் கொண்டார். ஆனால் அவருக்கு நிரந்தரமாக அரசு ஆட்சி செய்யும் பேராசை வந்தது. அதனால் குழந்தை கரிகாலனைக் கொல்வதற்கு பல சூழ்ச்சிகள் செய்தார். ஒரு முறை சிறுவன் கரிகாலன் இருந்த அறைக்கு தீ வைத்துவிட்டார்.

தன் தாய்மாமனான இரும்பிடர்தலையாரால் காப்பாற்றப்பட்டு, காட்டிற்கு கொண்டு சென்று தலைமறைவாக ரகசியமாக வளர்க்கப்பட்டார். கரிகாலர் வளர்ந்து பெரியவனாகி பெரும்படை திரட்டி நாட்டைக் கைப்பற்றினார். அரண்மனையில் வைக்கப்பட்ட தீயால் ஒரு கால் கருகிவிட்டதால் கரிகால் சோழன் என்றழைக்கப்பட்டார்.

வீராணம் என்ற வீரநாராயணன் ஏரி

கொள்ளிடத்தில் ஓடிவரும் காவிரியாற்றைப் பார்த்தவாறே இராசாதித்தச் சோழருக்கு பல்வேறு எண்ணங்கள் எழுந்தன.

கரிகாற்சோழன், சோழப்பேரரசை விரிவாக்கியதைப் போன்றே, விரிவாக்க வேண்டுமென்றும், கல்லணை கட்டி மாறாது புகழ் கொண்டதுபோல, தானும் செயற்கருஞ்செயலைப்புரிய விரும்பினார்.

தனது அமைச்சரிடம் கல்லணையைப்போல் இங்கு ஒரு அணையைக்கட்டலாமா? அல்லது ஏரி வெட்டி மழை நீரையும், ஆற்றுநீரைத் திருப்பி நீரைத் தேக்கலாமா? என்று வினவினார்.

அரசே, ஏரி வெட்டுவதுதான் சிறந்தது. ஆற்று நீர் ஓட்டம் இல்லாத பகுதியிலும் விவசாயம் செய்து மக்கள் பலனடைவார்கள். போர்ப்பயிற்சி பெறும் லட்சக்கணக்கான வீரர்கள், தினந்தோறும் சில நாழிகை ஏரி வெட்டினால் போதும் மிகப்பெரிய ஏரியை உருவாக்கிவிடலாம். (வீராணம் ஏரி அமைக்கப்பட்ட விவரம் (Travancore Archacologicals Series Vol III No: 34 மூலம் தெரிய வருகிறது) இப்பகுதி மக்கள் புன்செய் விவசாயத்திலிருந்து நன்செய் விவசாயம் செய்து பலனடைவார்கள்.

மிகப்பெரிய அளவில் ஏரி வெட்டப்பட்டு நெடுங்காலத்திற்கு மக்கள் பயன்பெறுவதற்கு வகை செய்யப்பட்டது. இப்பொழுது அந்த வீராணம் ஏரியிலிருந்து ராட்சதகுழாய் மூலம், சுமார் 220 கிலோமீட்டர் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்கிறது.

1971-ல் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போரில் நாம் வெற்றி பெற்றதும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்த (இன்றைய பங்களாதேஷ்) சுமார் ஒரு லட்சம் பாகிஸ்தானிய படையினர் இந்தியாவிடம் சரணடைந்தனர். அவர்களுக்கு நாம், போர் மரபுப்படி சரணடைந்த எதிரி வீரர்களுக்கு உணவு. உறைவிடம் அளித்து பாதுகாப்பாக வைத்திருந்தோம்.

சரணடைந்த பாகிஸ்தானிய வீரர்களை வைத்து கடலில் வீணாக கலக்கும் கங்கை நதி நீரை கால்வாய்கள் வெட்டி, அதன் மூலம் காவிரியில் இணைத்து, வரும் வழியில் உள்ள மாநிலங்களையும், தமிழகத்தையும் வளப்படுத்தலாம் என பொறியியல் வல்லுனர்கள் கூறியதை இந்திய அரசு ஏற்கவில்லை, ஏற்றிருந்தால் நமக்கு தண்ணீர் பிரட்சினை வந்திருக்காது.

பாகிஸ்தானும் மேலும் மேலும் நம்மைத் தொடர்ந்து தொந்தரவு கொடுத்திருக்க மாட்டார்கள். சிறு சிறு போர்கள் நம்மீது நடத்தியிருக்க மாட்டார்கள்.

தக்கோலம் எனும் இடத்தில் இராசாதித்த சோழருக்கும், ராஷ்டிரகூடத்து மூன்றாம் கிருஷ்ணதேவனும், பூதகனும் இணைந்து நடத்திய போரைப்பற்றி இவ்வாறு வியந்து வர்ணிக்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

பாண்டவருக்கும் கௌரவருக்கும் நடந்த குருசேத்திரப்போரைப்போலும், இராமாயண யுத்தம்போலவும் நிகழ்ந்தது. கடல் போன்ற சேனைகள் பல்வித வியூகம் அமைத்து பத்து தினங்களுக்கு மேல் தீவிரமாக நடந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிற்றரசர்கள் படைகளைத் தலைமை நடத்தி சோழரின் படைகளுக்கு வெற்றிமுகம் காண வைத்தார்கள்.

அப்போது பகைவன் பூதகன் சமாதானக்கொடி ஏந்தியவாறு இராசாதித்த சோழரை நோக்கியவாறு வந்தான். இராசாதித்த சோழர் போர் நிறுத்த சங்கினை முழங்குமாறு ஆணையிட்டார்.

கூப்பிய கையினுள்ளே படைக்கல ஆயுதமும் இருக்கும், எனக் காலம் காலமாக எச்சரிக்கப்பட்டும் பிறரை நம்பி ஏமாந்தவர்கள் பலர்.

இறைவா! பகைவரை நான் பார்த்துக்கொள்கிறேன் கைவணங்கி வரும் பகைவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், எனப்பெரியோர்கள் பலவித அறிவுரை கூறப்பட்டும் நம்பி ஏமாறுகின்றவர்கள் இருக்கின்றார்கள். நம்பிக்கை துரோகங்களை வாழ்க்கையில் சந்தித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆண்களை வளர்க்கும்போதே, மனத்துணிவையும், துரோகங்களை அடையாளம் காணும் இயல்பையும், அதைத்தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவத்தையும் சேர்த்தே பயிற்றுவிக்கவேண்டும்.

தோழமை பாராட்டி, நட்புக்கரம் நீட்டி, சமாதானக்கொடி ஏந்தி வந்த பகைவனை வரவேற்றார் இராசாதித்த சோழர்.

ஒரு யானை மீது அமர்ந்தபடி வந்த பகைவன் பூதகன் இராசாதித்த சோழரின் மீது கூப்பிய கையிலிருந்து எதிர்பாராதவிதமாக நஞ்சு தோய்ந்த அம்பை எய்துவிட்டான்.

யானை மீது அமர்ந்தபடியே போர்களத்தில் வீரமரணமடைந்தார் இராசாதித்தசோழர். சோழர்ப்படை வீரர்கள் திகைத்தனர், செய்வதறியாது பதைத்தனர். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பின்வாங்கி எதிரி ஓடிவிட்டான். சோழப்படை வீரர்களும் எதிரிகளை அவர்கள் எல்கைவரை சென்று விரட்டியடித்தனர்.

"யானை மீதுஞ்சிய சோழன்" என்ற பட்டத்தை வீரமரணம் அடைந்தபிறகும் இராசாதித்தசோழன் பெற்றுப் புகழடைந்தான்.

கரிகால சோழரும், இராசாதித்த சோழரும் கட்டுவித்த கல்லணையும், வெட்டுவித்த வீரநாராயணன் ஏரியும் (வீராணம் ஏரி) போன்ற வேளாண்மைத்தொழில் வளமடைய செய்த பணிபோல் அவர்களுக்குப் பின் வந்த அரசர்களோ, அரசுகளும் தமிழகத்துக்கு செய்யவில்லை என்பது வருந்தத்தக்கது.

நதி நீர்ப்பிரட்சினையில் தமிழகத்துக்கு எப்பொழுது விடிவு காலம் வருமோ? இறைவனுக்குத்தான் வெளிச்சம்!

இராசராச சோழனின் நீர் மேலாண்மைத் திறன்

ஒரு நாட்டின் வளமைக்கும், வலிமைக்கும் அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது நீராதாரமே ஆகும். ஒரு நாடு வளம் பெற்ற நடாகவும், கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் சிறந்தும் திகழ வேண்டுமாயின், நிலையான நீர் வளத்தினைப் பெற்றிருக்க வேண்டும். இதனை உணர்ந்தே ஔவையார்.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக்குடி உயரும்
குடி உயரக்கோல் உயரும்
கோல் உயரக்கோன் உயரும்

என்று பாடினார்.

வள்ளுவரும் தன் குறளில்,

நீரின்றியமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு.

என்று நீர் வளத்தின் அவசியத்தை உணர்த்துகின்றார்.

தொடக்க காலத்தில் ஆற்றங்கரைகளில்தான் மனித நாகரிகம் தோன்றி வளர்ந்தது. மனித இனம் பல்கிப்பெருகி பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல நேர்ந்த பொழுது, தான் வாழும் இடங்களில் ஆண்டு முழுவதும் நீர்வளம் குறையாது இருக்க வேண்டும் என்பதற்காக குளங்களும், ஏரிகளும், ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுகளும் அமைக்கத் தொடங்கினர். இந்நிலை படிப்படியாக உயர்ந்து சோழர்கள் காலத்தில் உச்சநிலையினை எய்தியது.

சோழ மண்டலம் வலிமையும், பொலிவும் பெற்றுத் திகழ்ந்தமைக்கு சோழ மன்னர்களின் நீர் மேலாண்மைத்திறனும் ஒரு காரணமாகும். இலக்கியங்களும், கல்வெட்டுகளும் சோழ மண்டலத்தில் வெட்டப்பெற்ற ஆறுகள், ஏரிகள் கட்டப்பெற்ற அணைக்கட்டுகள் பற்றி ஏராளமாகக் குறிப்பிடுகின்றனர். வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியாறும், அதன் கிளையாறுகளும் சோழ நாட்டை என்றும் வளம் குன்றா நாடாகத் திகழச்செய்தன. சோழ நாடு சோறுடைத்து என்று புகழ்ந்து பேசவைத்தது. இந்நாட்டை காவிரி நாடு. பொன்னி நாடு என்று புலவர்கள் போற்றினர்.

இளங்கோவடிகள்,

வலியன்றவன் வளநாடு மகவாய் வளர்க்குந்தாயாகி

ஊழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி

எனப் போற்றுகின்றார்.

பொருநராற்றுப்படையில் முடத்தாதமக் கண்ணியார் எனும் புலவர், கரிகாற் பெருவளத்தானைப் பாடும்பொழுது.

சாலி நெல்லின் சிறைகொள் வலி

யாயிரம் விளையுட்டாகக்

காவிரி புரக்கும் நாடு கிழவோனே

என்று காவிரியின் வளம் பெற்று விளங்கும் சோழ நாட்டினையும், அத்தகு வளம் பொருந்திய நாட்டை கரிகாலன் ஆட்சி புரிவதையும் சிறப்பிக்கின்றார். இப்பெருமன்னனே சோழ மண்டத்தில் காடு கொன்று (அழித்து) நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கினான் என்று பட்டினப்பாலையில் கட்டியலூர் உருத்திரங்கண்ணனார் பாடுகிறார். மேலும் இம்மன்னன் காவிரியின் இருபுறமும் கரை அமைத்தான் எனும் செய்தி கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் விக்கிரமசோழனுலாவில் பொன்னிக்கரை கண்டபூபதி எனும் பாடல் வரியாலும், எவ்வாண்டில் இச்சீரிய செயலைச் செய்தான் என்பதை. தொக்க கலியின் மூவாயிரத்துத் தொண்ணூற்றில் மிக்க கரிகால வேந்தனுந்தான்-பக்கம் அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை கண்டான் மலைக்கும் புயத்தாணும் வந்து, என்னும் பழைய வெண்பாவினாலும் அறிய முடிகிறது. புண்ணிய குமாரனின் நூற்றாண்டின் முற்பகுதியில் வெளி வந்த கங்கைகொண்ட சோழனுடைய திருவாலங்காடு செப்பேடுகளிலும், வீரராசேந்திர சோழனுடைய கன்னியாகுமரி கல்வெட்டிலும் கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. சோழர்கள் காலத்தில் காவிரிக்கரையினைப் பராமரிப்பதற்காகக் காவிரிக்கரை வினியோகம் எனும் வரி வசூல் செய்யப்பெற்றதை திருப்பழனம் மற்றும் திருச்செந்துறை கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதும் நச்சினினார்க்கினியர் வெண்ணுக்கரை எள்ளுப்பாறு என்று உரை எழுதுகின்றார். வெண்ணாற்றில் படகுகளில் எள் பொதி ஏற்றிச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். கி.பி.1783 இல் இந்தியாவிற்கு வந்தவர் கர்னல் காலின் மெக்கன்சி, இவர் சோழர் வரலாற்றில் பதின்மூன்று ஆவணங்களைத் தொகுத்துள்ளார். அதில் கரிகாலனுக்கு பின்னர் வந்த சோழ மன்னனான விண்ணன் என்பவனே விண்ணாற்றினை வெட்டினான் என்று குறிப்பிடுகின்றார். விண்ணாறே, வெண்ணாறு என மருவியது. அப்பகுதியில் விண்ணனூர்ப்பட்டி என்ற பெயரில் ஒரு ஊர் இன்றும் உள்ளது. இத்தகு சிறப்பு வாய்ந்த வெண்ணாற்றில், திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் கச்சமங்கலம் என்னும் ஊரில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. இந்த அணை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பெற்றிருக்கலாம். இந்த அணையிலிருந்து வெண்ணாறு செல்லும் வழியில் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்குக் குன்றுகள் நிறைந்துள்ளன. இக்குன்றுகளை வெட்டி அகற்றி இயற்கையான முறையில் ஒரு தடுப்பணை அமைத்துள்ளனர். இவ்வணையின் இரண்டு பக்கமும் மதகுகள் அமைத்து மேடான பகுதிகளுக்கு நீரைக்கொண்டு சென்று பாசனம் செய்துள்ளனர். இடது பக்கம் பிள்ளை வாய்க்கால் எனும் கால்வாய் அமைத்து வீரசிகாமணிப் பேரேரியில் நீரினைத்தேக்கி அப்பகுதி வளம் பெறச்செய்துள்ளனர். வலது பக்கம் ஆனந்தக் காவேரி என்னும் கால்வாய் வெட்டுவித்து அதன் மூலம் முன்னர் ராஜசுந்தரி சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப்பட்ட கள்ளப்பெரம்பூர் ஏரியில் நீரினைச் சேமித்து, பேராறுகளின் கிளையாகப் புதிய ஆறுகள் வெட்டுவதற்கு இயலாத நிலப்பரப்புகளில் ஆங்காங்கே பெரும் ஏரிகள் அமைத்து சோழ நாட்டை வளப்படுத்தியுள்ளனர். செந்தலைக்கல்வெட்டால் அறியப்படும் முதல் பராந்தகன் வெட்டுவித்த மிகப்பெரும் ஏரியான வீரசிகாமணிப் பேரேரியினைப் (அள்ளூர்-அழிசிக்குடி) பராமரிக்க அமண்குடியில் இருந்த சமணர்களுக்கு இம்மன்னன், நிவந்தங்கள் (கொடை) அளித்த செய்தியினை அறிய முடிகின்றது. மேலும் இக்கல்வெட்டு இந்த ஏரியினைப் பராமரிக்கும் பொறுப்பை ஆரம்பவீரன் என்பவன் மேற்கொண்டான் எனவும், இதற்குப் பொருளுதவி அளித்தவர் புத்தாமூர் எனும் ஊரில் சமணப்பள்ளி ஒன்றை நிருவகித்த கனகசேன பிடாரர் என்றும் குறிப்பிடுகின்றது. முதலாம் இராசேந்திர சோழனின் படைத்தளபதியான இலங்கையை வெற்றி கண்ட ஜெயமூரி நாடாள்வான் என்பவன் இவ்வேரியினைப் பராமரிப்பு செய்ததையும் செந்தலைக் கல்வெட்டு கூறுகின்றது.

பிற்காலச் சோழ மன்னர்கள் பல்வேறு ஆறுகளையும், ஏரிகளையும் அமைத்ததற்கானச் சான்றுகளைக் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. தஞ்சைக்கு வடபுறத்தில் ஓடும் வடவாறு வீரசோழ வடவாறு என்றும். கொள்ளிடம் பேரணையில் இருந்து பிரிந்து வடக்கே ஒடி வீரநாராயணன் (வீரணம்) ஏரியில் கலக்கும் வடவாறு மதுராந்தக வடவாறு என்றும், கல்வெட்டுச் சாசனங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவ்விரண்டு ஆறுகளும் வீரசோழன், மதுராந்தக சோழன் எனும் சிறப்புப் பெயர் பெற்ற முதல் பராந்தக சோழனால் வெட்டப்பட்டிருத்தல் வேண்டும். இதேபோல் மண்ணியாற்றுக்கும். குஞ்சரமல்லன் பேராறு என்று பெயர் வழங்கியிருத்தலால், குஞ்சரமல்லன் என்ற முதல் பராந்தகனே இந்த ஆற்றினை திருத்தியமைத்து நாட்டிற்குப் பயன்படச் செய்திருக்க வேண்டும். கோனேரிரசபுரத்திற்கு அண்மையில் ஓடும் கீர்த்திமான் ஆறு முதலாம் இராசராசனால் வெட்டப் பெற்றதாகும். முடிகொண்ட ஆறும், வீரசோழனாறு வீரராசேந்திரனாலும், விக்கிரமனாறு, விக்கிரமசோழனாலும், சோழ நாட்டை வளம் பெறச்செய்யும் பொருட்டு வெட்டப்பெற்றனவாகும்.

தஞ்சைச் செம்புலநாடு என்று அழைக்கப்பட்ட சோழ மண்டலத்தின் ஒரு பகுதி ஏரியூர் நாடு என்றே வழங்கப்பட்டதை முதல் இராசராசனின் கல்வெட்டால் அறியமுடிகின்றது. வட ஆற்காடு மாவட்டம் சோழ சிங்கபுரத்திற்கு அருகில் சோழ வாரிதி என்ற ஏரியும் சிதம்பரத்துக்கு மேற்கே உடையார் குடியில் முதல் இராசாதித்த சோழனால் வெட்டப்பெற்று இன்றும் மிகப்பெரும் நிலப்பரப்பினை தன்னுள் அடக்கியிருக்கும் வீராணம் ஏரியும் அவ்வப்பகுதிகளை வளம் பொழியச்செய்துள்ளன. தென்னார்க்காடு மாவட்டம் உலகபுரத்திலுள்ள கண்டாரதித்துப் பேரேரி, கண்டரார்தித்த சோழனாலும், திருச்சி மாவட்டம்

திருமழபாடி அருகே கண்டராதித்த சோழரின் மனைவி செம்பியன் மாதேவியால் வெட்டப்பெற்ற செம்பியன் மாதேவிப் பேரேரியும், உத்தமசோழனால் வெட்டப்பெற்ற செம்பியன் மதுராந்தகப் பேரேரியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

சுந்தர சோழன் மற்றும் அவரது புதல்வி குந்தவையால் வட ஆற்காடு மாவட்டம் பிரம்மதேசம் என்னும் ஊரில் முறையே சுந்தர சோழப்பேரேரி, குந்தவைப்பேரேரி என்னும் இருபெரும் ஏரிகள் வெட்டப்பெற்றுள்ளன. திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வட்டத்தில் உள்ள முனியூரில் குலோத்துங்க சோழனால், குலோத்துங்க சோழப்பேரேரி வெட்டப்பெற்ற செய்தியினை அவ்வூர்க் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது.

சோழ மண்டலம் முழுவதும் வெட்டப்பெற்ற ஏரிகளைப் பராமரிக்க ஏரி வாரியம் எனும் அமைப்பினை ஏற்படுத்தி திறம்பட பராமரித்தனர். இவ்வாறு ஏரிகளைப் பராமரிக்க இறையிலி நிலங்களும், பொருட்களும் வழங்கப்பெற்றன. ஏரி ஆயம் எனும் வரியும் வசூலிக்கப்பெற்றது. இவ்வாரியத்தின் நிருவாகப் பொறுப்புகளை மேற்கொள்ளும் வாரிய உறுப்பினர்கள் ஊதியம் பெறாமல் சிறப்புப் பதவியாகவே கருதி பணி செய்து வந்தனர். ஆனால், அவர்களுக்கு உதவி புரியவும், ஆவணங்களை முறையாக வைத்திருக்கவும் ஊதியம் பெற்ற பணியாளர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவர்கள் மத்தியஸ்தர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு ஒரு நாளைக்கு நான்கு நாழி நெல்லும், ஓர் ஆண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு வேட்டியும் கொடுக்கப்பெற்ற செய்திகளைக்காண முடிகின்றது.

ஊர்ச்சபையினர் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் துவங்குமுன்னர் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட ஏரிகளில் தூர் எடுத்து அவற்றை ஆழப்படுத்தினர். கிராமசபைகள் தங்களின் முக்கியக் கடமையாக இதனைக் கருதின. ஒவ்வொரு ஏரிக்கும் தனிக் கட்டளைகள் அமைக்கப்பட்டிருந்தன. சோழர்கள் ஆட்சியில் ஆறுகளில் பொங்குநீர் உள்ள காலங்களில் பாசனத்திற்கு எவ்விதத் தடையும்மின்றி நீர்ப் பாய்ச்சிக் கொண்டனர். நீர் தட்டுப்பாடுள்ள காலங்களில் அவரவர் நிலங்களின் விழுக்காட்டிற்கேற்ப வரிசையிட்டு பங்கு விகிதப்படி நீர்பாய்ச்ச வேண்டுமென்று வரைமுறைகள் வகுத்திருந்ததை திருப்பதியில் உள்ள தமிழ்க்கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. நிலங்கள் விற்கப்படும் பொழுதும், தானம் கொடுக்கும் பொழுதும் அந்நிலங்கள் எந்த ஆறு, ஏரி, குளம் இவற்றின் பாசனம் பெற்றது என்று ஆவணங்களில் குறிப்பிடும் வழக்கமும் இருந்தது.

தமிழர்தம் வீரத்தையும், பெருமையினையும், அப்பெருமக்களின் வரலாற்றினையும் உலகிற்குப் பறைசாற்றியவன் மாமன்னன் இராசராசன் என்றால் அது மிகையன்று. அம்மன்னன் பெற்ற வெற்றிகள். வென்ற நாடுகள், அவனது கொடை உள்ளம், பொறியியல் நுட்பம் மிக்க கோயில்கள், இசை, ஓவியம், நாட்டியம் எனப்பல்வேறு கலைகளுக்கு அவன் அளித்த ஆக்கம் எண்ணிலடங்கா, அதனால் வளர்ந்த கலைச்சின்னங்கள் இன்றும் நம் முன்னே சோழ மண்டலத்தின் பல்வேறு ஊர்களில் நின்று நிலைத்திருப்பதைக் காணமுடிகின்றது. அருங்கலைகளை வளர்த்ததோடு நில்லாமல், நிருவாகத்திலும் மிகச்சிறந்த ஆற்றல் பெற்று விளங்கினான் மாமன்னன் இராசராசன்.

அதனாலேயே இம்மன்னன் கொண்ட பட்டப்பெயர்கள் ஏராளம். அவைகள் அபய குல சேகரன், அழகிய சோழன், இரவிகுல மாணிக்கம், இரவிவம்ச சிகாமணி, இராச சர்வஞ்ஞன், இராச மார்த்தாண்டன், உத்துங்கதுங்கன், உலகளந்தான், உய்யக்கொண்டான், கேரளாந்தகன், சிங்களாந்தகன், சிவபாத சேகரன், சோழகுல சுந்தரன், திருமுறைகண்ட சோழன், தெலிங்க குலகாலன், நிகரிலிச்சோழன், நித்த விநோதன், பண்டிதசோழன், பாண்டிய குலாசனி, மும்முடிச்சோழன், ஜனநாதன் என்றெல்லாம் அழைக்கப்பட்டான்.

இராசராசன் தன் ஆட்சிக்காலத்தில் நீர் ஆதாரங்களான எண்ணற்ற ஏரிகள், குளங்கள், கால்வாய்களை வெட்டுவித்து, அதனை முறையாகப் பராமரிக்க நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்தி நிருவாகம் செய்ய பல்வேறு நிருவாகக் குழுக்களை நியமனம் செய்து வேளாண் பொருளாதாரமும், கால்நடைச் செல்வங்களும் பெருக வழிவகை செய்தான் என்பதை அவனுடைய மெய்கீர்த்திகள் (கல்வெட்டு) எடுத்தியம்புகின்றன. நீர் அறுவடை, நீர்ச்சேமிப்பு, நீர்ப்பங்கீடு என்ற வகையில் ஏராளமான பணிகளைச் செய்தவன் இராசராசன்.

நிலம் நெளி மருங்கின் நீர்நிலைப் பெருகத் தட்டோரம்ம இவண் தட்டாரே (பு:18 28-29)

நீர் நிலைகளைக் காப்பவனே தன் குடிப்பெருமையினைக் காப்பான் என்னும் புறநானூற்று வரிகளுக்கேற்ப, தன்னுடைய பட்டப்பெயரான உய்யக்கொண்டான் எனும் பெயரில் ஒரு கால்வாயினை வெட்டுவித்து, அதன்மூலம் நிறைவேற்றிய நீர் மேலாண்மைத் திட்டத்தினைக் காண்போம்.

பரந்துபட்ட சோழ மண்டலத்தை மாமன்னன் இராசராச சோழன் (கி.பி.985-1014) தான் சூடிய பட்டப்பெயர்களால் பல வளநாடுகளாகப் பிரித்தான். அவற்றுள் ஒரு வளநாடு பாண்டிய குலாசனி வளநாடு என்பதாகும். இவ்வளநாட்டில் பல நாடுகளும், கூற்றங்களும் அடங்கியிருந்தன. அவ்வாறு திகழ்ந்த பாண்டிய குலாசனி வளநாட்டு நாடுகளில் ஒன்றே ஏரியூர் நாடு என்பதாகும். தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டு, வல்லம் ஏகௌரி அம்மன் கோயில் கல்வெட்டு போன்ற இராசராசன் காலத்துச் சாசனங்களில் இவ்வேரியூர் நாடும், அதில் அடங்கியிருந்த சில ஊர்களும் குறிக்கப்பெறுகின்றன. கருவுகுல வல்லம் (வல்லம்) விண்ணனேரி எனும் மும்முடிச்சோழ நல்லூர் (விண்ணூர்ப்பட்டி), விக்கிரமசோழ சதுர்வேதி மங்களம், புலிக்களம், இடைக்குடி போன்ற ஊர்கள் குறிக்கப்பெறுகின்றன. ஏரியூர் நாடு என்பது காரணப்பெயராகும். ஏரிகள் அதிகம் இப்பகுதியில் இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டிருக்கும்.

ஏன்? இங்குள்ள ஏரியூர் நாட்டிற்கு மாயனூரிலிருந்து கால்வாய் வெட்டி நீரினைக் கொண்டு வரவேண்டும். வெண்ணாற்றிலிருந்து கால்வாய் வெட்டக்கூடாதா? ஏன் காவேரியிலிருந்து கால்வாய் வெட்ட வேண்டும்? என்ற கேள்வி எழலாம். இங்குதான் மாமன்னனின் நிலவியல் (புவி) அறிவு அவண் பல்துறை வித்தகன் என்பதைப் பறைசாற்றுகின்றது. வெண்ணாற்றின் தென்கரையில் உள்ள இந்நாட்டுப் பகுதிக்கு காவிரியாற்றின் நேரடிப் பாசனம் இல்லாமல் இருந்தது. இதற்குக் காரணம் காவிரி மற்றும் வெண்ணாறு ஆகிய ஆறுகள் ஓடும் பகுதியிலிருந்து இந்நாடு நில மட்டத்தில் உயரமான இடத்தில்

உள்ளதால் பாசனத்திற்கு வசதியே இல்லாமல் இருந்தது. அதனால் இந்நாடு முழுவதும் பல ஏரிகள் வெட்டப்பெற்று அவ்வேரிகளில் தேங்கும் நீரால் இப்பகுதியில் வேளாண்மை நடைபெற்றது. தமிழ்நாட்டில் இந்த அளவுக்கு மிக அதிகமான ஏரிகள் உள்ள ஒரு பகுதி கிடையாது.

மாமன்னன் இராசராசனின் மகத்தான சாதனைகளுள் ஒன்று காவிரியின் தென்கரையில் குளித்தலைக்கு மேற்கே பத்துகல் தொலைவிலுள்ள மாயனூர் என்னுமிடத்திலிருந்து ஒரு கால்வாயினை வெட்டி அதன் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள காவிரியின் தென்கரை ஊர்களான பழையூர், அணலை, புலிவலம், சோமரசம்பேட்டை போன்ற ஊர்களுக்கு பாசன வசதி செய்ததோடு, அந்த கால்வாயை ஏரியூர் நாட்டுப் பகுதிக்கு கொண்டுவந்து, அங்கு திகழ்ந்த பேரேரிகளுக்கு இணைப்பு தந்து அவ்வேரிகளுக்குப் பாசன வசதி செய்துள்ளான். அவன் வெட்டுவித்த அக்கால்வாய்களுக்கு அவனது பட்டப்பெயரான உய்யகொண்டான் என்ற பெயரைச் சூட்டினான். இன்றளவும் அப்பெயர் நிலைபெற்று அழைக்கப்பெற்று வருகின்றது. உய்யகொண்டான் என்பதற்குப் பொருள், பிழைக்குமாறு அருள் செய்தான் எனத் தமிழ் அகர முதலி சுட்டுகின்றது.

அம்மன்னன் வகுத்த அந்த ஏரியூர் நாடு, பின்னர் ஏரிமங்கல நாடு என்ற பெயரால் அழைக்கப் பெறுகின்றது. இந்நாட்டில் தற்போது இராயமுண்டான்பட்டி, வெண்டயம்பட்டி, வையாபுரிப்பட்டி, சுரக்குடிப்பட்டி, காங்கேயம்பட்டி, சோழகம்பட்டி, விண்ணனூர்பட்டி, வேலிப்பட்டி, புதுப்பட்டி போன்ற ஊர்கள் திகழ்கின்றன. இவை அனைத்தும் உய்யக்கொண்டான் வாய்க்காலின் பாசனத்தால் வளம்பெறுகின்றன. உய்யக்கொண்டான் வாய்க்கால் இராயமுண்டான்பட்டி பேரேரிக்கு நீர் தந்து, அதன் தென்கரை வழியாக ஓடி வெண்டையம்பட்டி ஏரியையும் நிரப்பி, பின்பு கோட்டபட்டி, ஆவாரம்பட்டி வரை சென்று அங்குள்ள சிறு சிறு ஏரிகளை நிரப்பி, மீதமுள்ள நீர் வெண்ணாற்றில் சேர்ந்துவிடும்படி அமைக்கப்பட்டுள்ளது. ஏரிகளை அடுக்குத்தொடராக அமைத்தது, அம்மன்னனின் சாதனைகளில் மிகப்பெரும் ஒன்றாகும்.

சோழநாட்டின் நீர் குறித்த ஆய்வில் கற்சிறை என்ற சொல் மிகவும் கூடுதலாக அறியப்படுகிறது. பாண்டிய நாட்டிலும் இச்சொல் புழக்கத்திலிருக்கத்தான் செய்கிறது. தொல்காப்பியம், பத்துப்பாட்டு முதலான சங்க நூல்களில் இந்தக் கற்சிறையைப் பற்றியக் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பெருகி ஓடும் ஆற்றுநீரை சிறைப்படுத்தி தேவைப்படும் காலங்களில் பயன்படுத்தும் தொழில் நுட்ப ஏற்பாட்டுக்கு கற்சிறை என்று பெயர். இது கற்களால் கட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. சோழநாட்டின் பல இடங்களில் கற்சிறைகளின் மூலம் ஆற்றுநீர் தேக்கப்பட்டு ஏரிகளுக்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.

சோழர்களின் சிறப்புகளில் ஏரிக்கரைகளும் குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றன. வீராணம் ஏரி கடல்போன்ற நீர்ப்பரப்பைக் கொண்டது. இதன் அமைப்பு முறை பற்றிய வியப்பிலிருந்து இன்னமும் ஆய்வாளர்களால் விடுபட முடியவில்லை. வீராணம் ஏரிக்கரையை ஒரு தருணத்தில் வெட்டிப்பார்க்கும் சூழல் ஏற்பட்டது. ஆனால் கரையை வெட்டிப்பிளக்க முடியவில்லை. ஏன் என்று யோசித்துப் பார்க்கும்போது அரை மண் பற்றிய சங்ககாலக் குறிப்புகள் ஞாபகத்துக்கு வந்தன என்றனர் ஆய்வாளர்கள். நமது ஏரிகள் பல நூற்றாண்டுகள் எந்த விதமான அழிவுமற்று பயணம் செய்தவை. இதன் கரைகள் உள்ளூரில் எடுக்கப்பட்ட மண்ணால் கட்டப்பட்டவை தான்.

முற்காலத்தில் ஏரிகளின் கரைகளை களிமண் கொண்டு, உட்சுவர் அமைக்கும் வழக்கம் உலகின் பல நாடுகளில் இருந்திருக்கிறது. தமிழக ஏரிகளின் அமைப்பு அவ்வாறு இல்லை. அவை அந்தந்த ஊர்களிலேயே மண்ணெடுத்துக் கட்டப்பட்டவை. ஆனாலும், இவை நீர் கசிவற்று, அழிவற்று இன்றும் பெரும் வெள்ளத்தைத் தாக்குப்பிடித்து நிற்கின்றன. இது தான் நீரியியல் அறிஞர்களுக்குப் பெரும் வியப்பைத் தருகின்றது. இதில் மறைந்துள்ள ரகசியங்களில் ஒன்றுதான் அரைமண். மண்ணை அரைத்து, கரைகளை அமைத்திருக்கிறார்கள் என்பதை இதன்மூலம் உணர்ந்துகொள்ள முடிகிறது. கரை அமைக்கும் மண்ணில் எவற்றை எல்லாம் கலந்திருக்கிறார்கள் என்பது இன்னும் அறிந்துக்கொள்ள இயலவில்லை.

சோழகங்கம் என்னும் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு அருகில் அமைந்த பொன்னேரி இராசேந்திர சோழன் கங்கை வரை சென்று வெற்றி பெற்றதால் உருவானதுதான் இந்த பேரேரி. கங்கையின் வெற்றியாக கங்கை நீர் கொண்டுவந்து இந்த ஏரியில் ஊற்றப்பட்டதாக திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. இதற்குத் தேவையான நீரும் கொள்ளிடத்திலிருந்து வாய்க்கால் வெட்டி பொன்னேரிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தன் தந்தையின் பெயரில் இராசராசன் வாய்க்கால் என்று இதற்கு இராசேந்திரன் பெயர் வைத்துள்ளான். இதன் மதகுகள் நீர்ப்பாசன முறைகள் நம்மைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தக் கூடியதாக இருக்கின்றன. வாய், வாய்த்தலை, தலைவாய் முதலான நீர்க்கால்கள் இதில் அமைக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் ஆய்வாளர்கள் பொன்னேரியின் சோழர்கால மதகு எப்படி உள்ளது? என்பதை ஆராய்வதற்கு, மதகை ஆய்வு செய்து பார்த்தார்கள். சுட்டச் செங்கற்களால் கட்டப்பட்ட மதகு இது. அடிப்பகுதி கருங்கல் பலகைகளால் மூடப்பட்டுள்ளது. துளை ஒன்றின் வழி தண்ணீர் வெளிவந்து ஒரு தொட்டியிலே தேங்கி பின்னர் அது நிரம்பி வெளியேறுகிறது.

சோழநாட்டில் மடை, மதகு முதலிய சொற்களுடன் குமிழ், தூம்பு என்னும் சொல்லும் பயன்படுத்தப் படுகின்றன. நீண்ட குழாய் போன்ற அமைப்பில் நீர் மறைந்து, மீண்டும் குழாய் வழியாக நீர் குமிழ்களுடன் வெளியேறுவதால், இதற்கு குமிழ் என்று பெயர். குமிழ் பற்றிய கல்வெட்டுகள் பல தகவல்களைக் கூறுகின்றன.

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையின் பன்னிரெண்டாம் கதையான அறவணர்த் தொழுக்காதை என்னும் பகுதியில் புத்த தேவன் தோற்றம் பற்றி கூற வரும் கூலவாணிகன் சாத்தனார்.

பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி

இரும்பெரு நீத்தம் புகுவது போல

அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்

உளமலி யுவகையொருயிர் கொளப்புகும்.

என்கிறார்.

அதாவது பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய் வழியாக தேக்கப்பட்ட நீர் வெளியேறி, மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும். அதுபோல, சிறிய செவித்துளை வழியே நல்ல அறக்கருத்துக்கள் மக்களின் உள்ளத்தைச் சென்றடையும் என்று கூறுகிறார் சாத்தனார்.

அதாவது ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஏரிகளிலும், குளங்களிலும் இருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன. நீர் மேலாண்மை செய்தியை கடத்தித் தருகிறது. இத்தகைய மதகு அமைப்புதான் குமிழ், தூம்பு என்பதாகும்.

பழந்தமிழ் மக்களின் நீர் மேலாண்மை செயல்பாட்டில் இந்த குமிழ், தூம்பு அறிவியல் சார்ந்த மிக நுட்பமான பயன்பாடுடைய படைப்பாகும்.

மேலைநாட்டவரின் மதகு அமைப்புகளின் மேல் நம்மவர்கள் கொண்ட நாட்டத்தால், நமது பண்டைய தொழிற்நுட்பத்தை புறக்கணித்தோம், குமிழ்கள் அழிந்தன. அதனால் என்ன ஆயிற்று தெரியுமா? ஏரிகள் மேடிட்டுத் தூர்ந்தன. நீர் வளம் குன்றலாயிற்று.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நீர் நிலைகளை ஏரி, பேரேரி, குளம், பெருங்குளம், கண்மாய், ஏந்தல், தாங்கல் என்ற பெயர்களால் குறிப்பிடுவது வழக்கம். ஏரிகளின் வடிவமைப்பு கரைகளின் அமைப்பு முறை ஆகியவை பற்றிய குறிப்புகள் இலக்கிய படைப்புகளில் ஆங்காங்கே காணப் பெறுகின்றன. எட்டாம் நாள் சந்திர பிறை அமைப்பில், ஏரிகளின் வடிவமைப்புகள் திகழவேண்டும் என்பது பல இலக்கிய குறிப்புகள் வலியுறுத்துகின்றன. அந்த அமைப்பில் தான் இன்றும் பல ஏரிகள் திகழ்கின்றன. ஆறுகளில் இருந்து கால்வாய் மூலம் பெறப்படும் நீரும், ஓடைகள் மூலமும் வந்தடையும் மழைநீரும் ஏரிகளில் தேக்கப்பட்டு, தேவைக்கேற்ப குமிழ், தூம்புகள் மூலம் விளை நிலங்களுக்கு நீரை பகிர்ந்தளிக்கும் முறையை மேற்கொண்டனர். ஏரியின் முழு கொள்ளளவு நீர் மட்ட உயரத்தைக் கணக்கிட்டு, கரையின் ஒரு பகுதியில், அந்த உயர அளவில் சிறு வடிகால் அமைப்பு ஏற்படுத்தி அதன் மூலம் மிகுநீரை வெளியேற்றி வந்தனர். இந்த அமைப்புக்கு கலிங்கு என்று பெயர். எவ்வளவு வெள்ளம் வந்தாலும் ஏரியின் கொள்ளளவுக்கு மேல் வரும் நீரை தடையின்றி (மறுகால்) கலிங்குக் கால்வாய் மூலம் அருகிலுள்ள ஆறுகளில் வடியுமாறு செய்தனர்.

கலிங்கு அமைப்புகளால் ஏரிக்கரையில் உடைப்புகள் ஏற்படாது. மேலும் ஏரிக் கரையின் உயரம், அகலம் ஆகியவை எவ்வளவு இருக்க வேண்டும். கரைக்கு வெளியே குறிப்பிட்ட தூரம் வரை உள்ள நிலத்தை யாரும் ஆக்கிரமித்தல் கூடாது போன்ற கடுமையான நெறிமுறைகளை பின்பற்றினர். சோழர்கள் எண்ணற்ற ஏரிகளை நாடு முழுவதும் வெட்டிவித்து, மழைநீரை சேமித்து வேளாண்மைக்கு பயன்படுத்திய காரணத்தால் தான், பண்டைய தமிழகம் வளமுடன் திகழ்ந்தது. நிலத்தடியின் நீர்மட்டம் ஒருபோதும் குறையாமல் இருந்தது. ஊர் நிர்வாகத்தில், ஏரி வாரியம் என்ற அமைப்பு முக்கிய அங்கம் வகித்தது. ஆண்டுதோறும் ஏரிகளை பராமரிக்க குளப்பட்டி என்ற பெயரால் நிலமளித்து, அதன் வருவாயிலிருந்து ஏரிகளைக் காக்க வகைச்செய்தனர்.

கலிங்குகள் வடிகாலாக விளங்கியதைப் போன்றே குமிழ்கள் பாசனக் கால்வாய்களுக்கு மதகுகளாக விளங்கின. ஏரிக்கரைகளிலிருந்து எந்தந்த இடங்களில் பாசன கால்வாய்கள் பிரிந்து செல்கின்றனவோ, அந்த இடத்திலிருந்து 200 அல்லது 300 மீட்டர் தொலைவில் ஏரிக்குள் குமிழ்கள் அமைக்கப்பட்டன. ஏரியின் தரைமட்டத்தில் மிக வலுவுள்ள கருங்கற்கள் கொண்டு, ஒரு தளம் அமைத்து அதன் நடுவே கருங்கல் பெட்டி ஒன்றினை அமைப்பர். அப்பெட்டியின் அடிமட்டத்திலிருந்து ஒரு சுருங்கக் கால்வாயினை, கருங்கல் அல்லது செங்கல் கொண்டு பூமிக்கு கீழாக உருவாக்கி, அதனை ஏரிக்கரைக்கு கீழாக கொண்டு சென்று, கரைக்கு வெளியே பாசனக் கால்வாய் தலைப்பில் வெளித்தோன்றுமாறு அமைப்பர். கருங்கல் பெட்டியின் மேற்பக்கம் நீர் வெளியேறுவதற்கான துளையையும் பக்கவாட்டில் வண்டல் படிந்த சேறு வெளி ஏறுவதற்கான சேறோடித்துளைகள் என்ற சிறிய நீர் துளைகளை அமைப்பார். கல்பெட்டியின் இருமடங்கும் ஏரியில் தேக்கப்படும். அதிகப்படியான நீரின் கொள்ளளவு உயரத்தைவிட சற்று உயரமான அளவில் இருகருங்கல் தூண்களை நிறுத்துவர். இரு குறுக்குவிட்ட கற்களை அத்தூண்களுடன் இணைப்பர். கல்பெட்டியின் நீரோடு துளைக்கு நேராக, இரு குறுக்குவிட்ட கற்களிலும் துளையிடுவர். நீண்ட கம்பி அல்லது மரக்கழியினை அத்துளை வழியே செலுத்தி அதன் அடி முனைவில் கல்பெட்டியின் மதகு, மதகு வாயில் (துளையில்) சரியாகப் பொருந்தும், அளவுக்குரிய அடைப்புக்கல் ஒன்றினை இணைப்பர். கம்பி அல்லது மரக்கழியினை மேலிருந்து இயக்குவதன் மூலம் நீர் செல்லும் தூம்பு துளையினை மூடுவதும். திறப்பதும் இயலும், கல்பெட்டி மற்றும் தூண் அமைப்புகளை குமிழ் என்றும் இவைகளுக்கு கீழாகச் செல்லும் நீர் வெளியேறும் சுருங்கை வழியினை தூம்பு என்றும் குறிப்பிடுவர்.

இந்த மதகு அமைப்பில் குறிப்பிடத் தக்க சிறப்பு அம்சமாக விளங்குவது சேறோடிதுளைகளே ஆகும். பெருவெள்ளப் பெருக்குகளால் ஏரியினை வந்தடையும் நீரில், வண்டல் இருப்பதால் ஆண்டுதோறும் ஏரியின் தரைமட்டப்பகுதியில் வண்டல் சேர்ந்துகொண்டே இருக்கும். அவற்றை வெளியேற்றாமல் விட்டுவிட்டால், சில ஆண்டுகளில் ஏரி தூர்படிந்து மேடிட்டுவிடும். ஆண்டுதோறும் நீர் முழுவதையும் வெளியேற்றி விட்டு தூர் வாருதல் என்பது இயலாத காரியம். மேலும் தூர் வாருவதற்கு ஆகும் செலவும் அதிகம். இவ்வாறு இல்லாமல் அவ்வப்போது ஏரியின் தரைமட்டத்தில் சேகரமாகும் வண்டலை, நீரோடு கலக்கி வெளியேற்றி விட்டால் வண்டல் படிந்து மேடாகாது. இதற்கென தனிக் கருவிகள் தேவையில்லை. இதனைச் செய்வதுதான் குமிழிதூம்பின் வேலையாகும்.

நீர்ப்பாசனத்திற்காக குமிழியின் அடைப்புகள் திறக்கப்படும் பொழுது நீர் மிக வேகமாக சுழித்துக் கொண்டு கல்பெட்டி வழியே நீர் தூம்புக்குள் செல்லும். அதே நேரத்தில் நீர் சுழல் மூலம் கலக்கப்படும் நீரில் வண்டல் கலந்து சேராக வெளியேற்றப்படும். நீரின் வேகத்தால் சேறோடி துளைமூலம் உள்ளே இழுக்கப்பட்டு, பாசன நீரோடு கலந்து சென்றுவிடும். இதனால் 90 விழுக்காடு நல்ல நீரோடு 10 விழுக்காடு சேறும் கலந்து வெளியேறுவதால், ஏரியின் தரைமட்டத்தில் வண்டலும் படியாது. அதே நேரத்தில் பாசன நீரில் வண்டல் கலப்பதால் வயல்களுக்கு நல்ல உரமாகி, பயிர்களுக்குப் பயன்படும். இத்தகு தொழில்நுட்ப யுத்தி மேலை நாட்டவர் அமைத்த திருகு மதகுகளில் இல்லை. அதனால்தான் பெரும்பாலான ஏரிகள் காலப்போக்கில் மேடிட்டு அழிந்தன. மேலும் அத்தகைய மதகுகளின் உதவியால் ஏரியின் முழு கொள்ளளவு நீரினை சேமிக்க இயலாது.

காவேரியின் கிளையாறான கொள்ளிட பேராற்றின் வடகரையில் அமைந்த தேவார தளம் திருமழபாடி என்பதாகும். மழபாடியுள் மாணிக்கமே என சுந்தரர் போற்றிய திருகோயில் திகழும் ஊராகும். இவ்வூரினையொட்டி அமைந்த ஓர் ஊருக்கு, தன் பெரிய பாட்டன் சிவஞான கண்டராதித்த தேவரின் பெயரினைச்சூட்டி, கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்று அழைத்தான் இராசராசன். தன் பெரிய பாட்டியார் செம்பியன் மாதேவியார் பெயரில் மிகப்பெரிய ஏரியினை வெட்டுவித்து, பல நூறு ஊர்கள் தடையில்லா நீர் பாசனம் பெற வழிவகுத்தான். அந்த ஏரியில் சிறந்ததொரு குமிழ் தூம்பினை அமைத்து அதற்கு இராசராசன் என்ற பெயரை சூட்டியதோடு, அதிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுத்துச் செல்லும் வாய்க்காலுக்கு இராசராசன் வாய்க்கால் என்ற பெரினையும் சூட்டி பராமரித்தான் என்பதை திருமழப்பாடி கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன.

புதுக்கோட்டை திருகோகர்ணம் சிவலாயத்தில் உள்ள இராசராச சோழனின் 9 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கவிரக்குளம் என்னும் பேரேரி பற்றிய செய்தியினைக் கூறுகின்றது. தற்போது திருவேட்பூரில் திகழும் கவிநாட்டு ஏரியே முன்னர் கவிரக்குளம் என்று அழைக்கப்பட்டது. முற்கால பாண்டியர் காலத்திலிருந்து பேணிக்காக்கப்பெற்ற அந்த ஏரியில் இராசராசனின் உயர்நிலை அலுவலராகத் திகழ்ந்த மேற்கிள்ளி மங்கலத்து அரிகுலகால பிறமாதிராயன் குமிழ்த் தூம்பு ஒன்றினை புதிதாக அமைத்தான். அதிலிருந்து நீர் பாயும் வாய்க்காலினையும், சீர் அமைத்துத் தந்ததோடு ஆண்டுதோறும் அவற்றைப் பராமரிக்க குளப்படியாக நிலமும் அளித்தான். அதன் வருவாயிலிருந்து குமிழியைப் பராமரிக்கும் உரிமையை அந்த நாட்டார் வசமே ஓலைச்சாசன உரிமையோடு ஒப்படைத்தான். பிற்காலத்தில் யார் ஒருவர் அந்த குமிழியை அழிவிலிருந்து காப்பாற்றினாலும் அவர்களின் திருவடியினை என் தலையின் மீது வைத்து போற்றுகிறேன் என்று அக்கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளது. ஏரியினைக் காக்கும் பொறுப்பு அந்த நாட்டு மக்களிடமே வழங்கப்பட்டதோடு அதனைப் பராமரிக்க நிரந்தர வருவாய் வழி ஏற்படுத்தியதும் போற்றுதற்குரியதாகும்.

சோழ நாட்டில் திகழும் பல ஏரிக்கரைகளையும், ஆற்றின் கரைகளையும் வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்படும்போது, காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர் துறந்த பலரை அவர்கள் இறந்த (பட்ட) இடங்களிலோ அல்லது அய்யன், பிடாரி கோயில்களிலோ, கல்நட்டு இறந்தவர் (பட்டவர்) வழிபாடு செய்வது மரபாக உள்ளது. சோழர், பாண்டியர் கல்வெட்டுகளில் இவ்வாறு நீர் நிலை காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர் நீத்தவர்கள் உதிரப்படி என்னும் பெயரில் நிலம் கொடையாக வழங்க பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மற்றவர்களை காப்பதற்காகத் தன் இன்னுயிரை ஈந்தவர்களை காலம் காலமாய் போற்றும் தமிழ் பண்பாட்டு மரபினை இத்தகு சின்னங்கள் வாயிலாக நாம் காணமுடிகிறது.

விஜயாலயச் சோழர் (கி.பி. 846-861)

பிற்காலச்சோழப் பேரரசுக்கு அடிகோலியவர் விஜயாலயச் சோழர். மண்ணியாற்றங்கரையில் திருப்புறம்பியத்தில் சோழரும், பல்லவரும், கங்கரும் ஒரு புறத்திலும், மறுபுறத்தில் பாண்டியரும், முத்தரையரும் தத்தம் படைகளோடு போருக்காக அணிவகுத்து நின்றனர். இப்போர்தான் சோழர்களுக்கு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தி பிற்காலச் சோழப் பேரரசு அமையக் காரணமாயிருந்த திருப்புறம்பியப்போர் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றன.

வெட்டி வீழ்த்தப்பட்ட வீரர்களின் உடலிருந்து வெளியேறிய குருதி வெள்ளம்போல் பாய்ந்தது. அந்தக்குருதி பாய்ந்த களத்தை மிதித்துக் கொண்டே, போர்புரிந்த வீரர்கள் யுத்தகளத்தை சேறாக்கினர். அப்போது போரில் சோழர்களுக்கு ஆதரவாக போரிட்ட கங்க மன்னர் பிருதிவிபதி மரணமடைந்தார். போர்க்களம் அதிர்ந்தது. கங்க மன்னன் பிருதிவிபதி மிகச்சிறந்த வீரன், போரில் அங்குமிங்கும் குதிரையில் மின்னலென பாய்ந்து, ஆங்காங்கே வீரர்களை வழி நடத்திச் செல்வதில் கெட்டிக்காரர் என்று கருதப்பட்டார். எதிர்பாராதவிதமாக அந்த மிகப்பெரிய அசம்பாவிதம் நடந்தது, போர்க்களமே அதிர்ந்தது, அன்றைய போர் முடிவடைந்தது.

மறுநாள் விடியற்காலையிலேயே பாசறை முன்னர் வீரர்களை விஜயாலயச்சோழர் அணிவகுக்கச் செய்தார். போரினால் ஏற்பட்ட உடல் பாதிப்பால் தன்னால் சரியாக நடக்க முடியாது. என்றாலும் உடலெங்கும் விழுப்புண்கள் ஏற்பட்டிருந்தாலும் அறுபது வயதிலும் தளராத மனத்துடன் வீரர்களுக்கு வீர உரையாற்றினார்.

படை வீரர்களே! போரில் விழுப்புண்கள் எல்லாம் விழுமிய புண்களாயிற்றே? நாளை நீங்கள் மனைவி, மக்களிடமும், ஊராரிடமும் நெஞ்சில் உடலில் ஏற்பட்ட விழுப்புண்களை பெருமிதத்துடன் காண்பிக்க வேண்டாமா? வைரமாலை, தங்கமோதிரம் அணிந்தவனை விட உங்களை மதிப்புடன் அனைவரும் காண்பார்களே? அந்தப்பேறு கிட்டுவது போர்க்களத்தில் அல்லவா? உடலெங்கும் அறுபத்தாறு விழுப்புண்களைத் தாங்கிய நிலையில், நடக்க முடியாத நிலையில் படைக்குத் தலைமையேற்றுச் சென்றார். காயங்கள், அங்கீனங்கள், போரின் அடையாளமல்ல, புகழின் அடையாளம் போரில் கலந்துகொள்ள முடியாமல், பாதிக்கப்பட்ட வீரர்கள், போர் புரியும் முன்னணி வீரர்களுக்கு முடிந்த உதவிகளை செய்யும்படி அனைத்துத் தரப்பு வீரர்களையும் உற்சாகப்படுத்தினார். இப்போது என்னால் குதிரையில் அமர்ந்து போர் புரிய இயலாத நிலைமை விழுப்புண்கள். இந்த நிலையிலும்கூட இன்று நான் போரில் கலந்து கொள்ள விரும்புகிறேன். எனது இருகால்களும் பாதிக்கப்பட்டு நடக்க முடியாததால், இரண்டு வீரர்கள் எனக்குத் தோள்தந்து தூக்கிச்செல்லுங்கள். இதோ புறப்பட்டுவிட்டேன் போருக்கு. பதர்கள், கோழைகள் எல்லாம் பாசறையில் பதுங்கி உயிர் காத்துக்கொண்டு நடைப்பிணங்களென வாழுங்கள்! மலையெனத் திரண்ட தோளுடைய தீரர்கள் வீரத்துடன் போர்புரிய வாருங்கள் என்றார்.

குறுநில மன்னர் இருவர் விஜயாலயச்சோழனை தோளில் சுமந்தபடி வாளேந்திச்சென்றனர். விஜயாலயச் சோழர் போர்க்களத்தில் சென்ற இடமெல்லாம் எதிரிகளின் தலைகள் உருண்டன, குதிரைகள்

குற்றுயிரான இதைப்பார்த்த ஒவ்வொரு சோழவீரரும் பன்மடங்கு ஊக்கத்துடன் பத்து வீரர்களுக்குச் சமமாக போர் புரிந்து வெற்றித் தேவதை ஆசியால் வெற்றிக்கனியை சோழர்கள் சுவைத்தனர். எதிரியின் படைகள் பின்வாங்கி புறமுதுகிட்டு ஓடின. எதிரிகள் தங்களது பல பகுதிகளையும் இழந்தனர் என வரலாற்றாசிரியர்கள் எழுதுகிறார்கள், முத்தரையர்கள் தஞ்சையை இழந்தனர்.

சிறிய பகுதியில் சிற்றரசாக இருந்த சோழர், பின் தஞ்சை, பழையாறை ஆகிய பகுதிகளைச் சேர்த்து மண்ணியாறு, அரிசிலாறு, கொள்ளிடம் காவிரி பாயும் பெரும்பகுதிக்கு விஜயாலயச்சோழர் மன்னராகப் பட்டம்பெற்றார். சோழப்பேரரசு உருவாயிற்று. பின்னர் மாபெரும் மன்னர்களால் கடல் கடந்தும் சோழ சாம்ராஜ்யம் விரிவடைந்தது.

அதற்கு, அன்று உடல் பாதித்திருந்தாலும், உடலில் அறுபத்தாறு விழுப்புண்கள் போரினால் ஏற்பட்டிருந்தாலும், நிற்க முடியாத நிலையிலும், மனம் ஊனமடையவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டில் பிற்காலச் சோழப்பேரரசுக்கு அடித்தளம் இட்டவர் வீரப்பெருமகன் விஜயாலயச் சோழத்தேவரே.

உடற்கூறுகள், பாதிக்கப்பட்டு வேறுபட்டு இருப்பது ஒரு சிறுதடைதான். மனம் ஊனம்தான் மனிதனுக்கு தாண்டமுடியாத தடை, எனவே மாற்றுத்திறனாளிகள் மனத்தடைகளை உடைத்தவர்கள் என்பதே உண்மை. (திருப்புறம்பியம் போரின் விபரங்கள்; உதயேந்திரம் செப்பேடுகள் -II Verse 18. SI . I Vol II .76 மற்றும் வரலாற்று ஆய்வாளர் திரு.வை.சதாசிவப்பண்டாரத்தார் பக்கம் 34 விஜயலாயச் சோழர் நூல் SI No-I, Vol-III P.No-205)

உடல் ஊனமடைந்து வெற்றியடைந்து சோழப்பேரரசை நிறுவக்காரணமாயிருந்த விஜயாலயச் சோழரைப்பற்றி எதற்காக இப்போது இங்கே குறிப்பிடுகிறோமென்றால், எனது முதல் நூலான வெள்ளலூர் நாடு வரலாறு நூலில் நம்பிக்கை தளராத செந்தில்குமார் (செம்புலிகரை தம்பட்ட மலைப்பட்டி, வெள்ளலூர நாடு) என்ற உடல் ஊனமுற்ற, மாற்றுத்திறனாளி வாழ்க்கையில் பல கஷ்டங்களை கடந்து தன்னையும், தன்குடும்பத்தையும் எவ்வாறு உழைத்துக் காப்பாற்றி வருகிறார் என்பதே. அந்தக் கட்டுரையில் உடல் ஊனமுற்றவர் என்பதால் மனம் தளராமல் உழைத்து, தடைகளை வென்று, ஊனம் உடலில்தான், மனத்தில் இல்லை என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

இதைப்பற்றி சிலர், அவர்கள் மனத்தில் ஊனங்கொண்டு, இவனுக்கெல்லாம் வரலாற்றில் இடம் கொடுக்கலாமா? அபத்தம் என பலவகைகளில் குறை கூறித்திரிகிறார்கள். அவர்களுக்கு ஒன்று கூறுகிறேன். இன்றைய காலகட்டத்தில் அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு தொழில் தொடங்க மானியம் நிறைந்த கடன்கள் பேரூந்து, இரயில்களில் விமானங்களில் பயணம் செய்ய சலுகைகள், முதலுரிமை என பல்வகையான மனிதாபிமான உதவிகளை சமுதாயத்தோடு இணைந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

எனவே, நானும் ஒரு மனிதாபிமானம் உள்ள சராசரி மனிதன் என்பதால் என் பங்களிப்பை அவர்களுக்கு அளித்துள்ளேன். இதில் யாருடனும் சமரசம் செய்து கொள்ள விரும்பவில்லை.

தமிழகம் வந்த கங்கை

புதிதாக ஒரு வீடு கட்டுகிறோம். அதைத் தூய்மைப் படுத்திய பிறகுதான் குடியேறுவோம்.

வீட்டுக்கே இப்படியென்றால், ஊருக்கு? நம்மைப்போன்ற பொதுமக்களே இப்படியென்றால் பேரரசர்களுக்கு?

கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரைத்தை அமைத்தவர் முதலாம் இராஜேந்திரசோழன். அங்கே குடியேறுவதற்கு முன்னால், அவ்வூரையே புனிதப்படுத்தி எண்ணினார். அதற்காக கங்கை நீரைக் கொண்டு வர நினைத்தார்.

இந்திய வரைபடத்தில் தமிழகம் எங்கே இருக்கிறது. கங்கை எங்கே இருக்கிறது என்று பாருங்கள் நடுவில் எவ்வளவு தூரம்? சரியான சாலை வசதிகள் வாகனங்களெல்லாம் இல்லாத அன்றைய சூழ்நிலையில், அது எந்த அளவுக்கு சிரமமாக இருந்திருக்கும்?

இன்றைக்கு தமிழகம், கங்கை பாயும் இந்திய நாட்டில்தான் இருக்கிறது. அன்றைக்கு அப்படியில்லை, இராஜேந்திர சோழன் செல்லும் வழியெல்லாம் பல்வேறு தேசங்கள், வெவ்வேறு மன்னர்கள் என்னதான் நல்ல நோக்கமென்றாலும் தங்கள் நாட்டின் வழியே இன்னொரு நாட்டின் படைகள் செல்ல அனுமதிப்பார்களா?

இராசேந்திர சோழன் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. பயண திசையிலிருந்த மன்னர்கள், அவர்களுடைய நாடுகளை எல்லாம் வென்று கொண்டே சென்றார். கி.பி.1019-ல் தொடங்கி சுமார் இரண்டாண்டுகளுக்குத் தொடர்ந்த இந்தப் படையெடுப்பில் சக்கரக்கோட்டம் ஒட்டரதேசம், கோசலம், தக்கணலாடம், வங்காளதேசம், உத்திராலாடம் என்று பல நாடுகளைக் கைப்பற்றியது சோழர்படை.

இந்தப் பயணத்தின்போது, ஒருமுறை அவர்கள் வேகமாகப் பெருக்கெடுத்து ஓடும் நதியொன்றைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது அங்கே பாலங்கள் இல்லை. தற்காலிகப்பாலம் அமைத்து, நதியைக் கடக்க நேரமில்லை என்ன செய்வது?

சோழனின் படைத்தலைவனுக்கு ஒரு யோசனை பிறந்தது. நம்மிடம்தான் இத்தனை யானைகள் இருக்கின்றனவே, அவற்றை ஆற்றில் வரிசையாக நிறுத்துங்கள் என்றான்.

அப்புறமென்ன? அந்த யானைகளுக்கு மேலே ஒரு பாலம் பிறந்தது. சோழப்படை அதைக்கடந்த சென்றது. கடைசியாக அவர்கள் கங்கைக்கரையைச் சென்றடைந்தார்கள். புனித கங்கை நதிநீரைக் குடங்களில் சேகரித்துக் கொண்டார்கள். அந்தக் குடங்களை தோற்றுப்போன பகையரசர்களைக் கொண்டே வரச் செய்தார்கள்.

இப்படி நெடுந்தொலைவுக்குத் தமிழர்களின் பெருமையைப் பரப்பிய இராசேந்திர சோழன், கங்கை நீரைக்கொண்டு தன்னுடைய புதிய நகரத்தைப் புனிதப்படுத்தினார். அதன்பிறகு அந்நகரில் இருந்து

உலகம் போற்றக்கூடிய நல்லாட்சி புரிந்தார். இதனைக் குறிப்பிடும் விதமாக, அந்த ஊரே கங்கை கொண்ட சோழபுரம் என்று அழைக்கப்படுகிறது. அவ்வரசனுக்கும் கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் அமைந்தது.

இராசேந்திர சோழனின் வடக்குப் படையெடுப்பால், தமிழர்களின் நாகரிகம் வங்காள நாட்டில் புகுந்தது என்கிறார் ஆய்வாளர் தி.வை.சதாசிவப்பண்டாரத்தார்.

சோழன் படையோடு சென்ற ஒரு தலைவன், வங்காளத்திலேயே தங்கிவிட்டதாகவும் அவனுடைய வழியில் வந்த சாமந்த சேனன் என்பவன் பின்னர் வங்காளத்தை சிறப்புற ஆண்டதாகவும் குறிப்பிடுகிறார்.

நகரைப் புனிதப்படுத்தச் செய்த ஒரு படையெடுப்பு, தமிழர் நாகரிகத்தை நெடுந்தொலைவுக்குக் கொண்டு செல்வதாகவும் அமைந்துவிட்டது வியப்புதான்!

தன்னம்பிக்கை

வலிமைமிக்க தன்னம்பிக்கைதான் பயத்தையும், தோல்வியையும், கவலையையும் வெற்றி கொள்ளும் சக்தி வாய்ந்த சாதனம். அனைத்து வெற்றிகளின் அடிப்படை ரகசியம் தன்னம்பிக்கை மிக்க மனிதனாகச் செயல்படுவதுதான், இந்த உலகில் உங்கள் கவலைகளை வென்று வெற்றிகரமான மனிதனாக நீண்ட காலம் வாழ தன்னம்பிக்கையுடன் சிந்தியுங்கள். அதன்படி செயல்படுங்கள் வெற்றி நிச்சயம்.

பதினெட்டு படிகள் :

நட - அதிர்வின்றி

பேசு - பணிவாக

உண்ணு - அளவாக

சுவாசி - ஆழமாக

தூங்கு - அமைதியாக

உடுத்து - அழகாக

செயல்படு - அச்சமின்றி

உழை - உண்மையாக

சிந்தி - சுயமாக

நம்பு	-	சரியாக
பழகு	-	நாகரிகமாக
திட்டமிடு	-	முன்னதாக
ஈட்டு	-	நேர்மையாக
சேமி	-	சிறிதாவது
செலவிடு	-	யோசித்து
நேசி	-	பேதம் கடந்து
படி	-	முடிவின்றி
மரணி	-	பயமின்றி

எவன் ஐயத்தையும், அச்சத்தையும் வெற்றி கொண்டானோ, அவன் தோல்வியை வென்றுவிட்டான். அவனுடைய வெற்றி நோக்கமே, ஒரு மகத்தான சக்தியாக விளங்குகின்றது. அவ்விதத் துன்பங்களும் துணிச்சலுடன் எதிர்த்து நிற்கப்பெறுகின்றன. அறிவுடன் வெற்றி பெறப்படுகின்றன. அவனுடைய செயல்கள் சரியானபடி பயிர் செய்யப்பட்டதால், அவை பெரும் மரமாகி காய்த்து சுவைமிக்க பழங்களையே அளிக்கின்றன.

நாம் பிறக்கும்போதே நமக்கென எந்த ஆற்றலும் வந்துவிடுவதில்லை. என்னால் எந்த ஆற்றலும் வந்துவிடுவதில்லை. என்னால் எந்த மனிதனையும் விட பெரிதாகச் சாதிக்க முடியும். குறைந்தபட்சம் வேறுயாரும என்னைவிட உயர்ந்தவர்கள் அல்ல. இவ்விதமான திடமான முடிவை நாம் ஒவ்வெருவரும் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் பெருமைமிகு சாதனைகளைச் செய்து, நாம் பிறந்ததின் தத்துவத்தை (Self - Actualiasation) அடைய முடியம். இதை நாம் உணர வேண்டும்.

இன்றைய சூழலில் மட்டுமல்ல, எந்த நாளிலும் எல்லாவற்றிருக்கும் காரணம் தன்னம்பிக்கைதான் உலகம் சுழல்வதே தன்னம்பிக்கையால்தான். முயற்சிக்கு தன்னம்பிக்கை கட்டாயம் தேவை. தன்னம்பிக்கை தான் தெய்வம் என்றால் முயற்சிதான் நீங்கள் செய்யும் தெய்வ வழிபாடு...... இப்படி இரண்டும் இருந்தால் வெற்றியின் காட்சி உங்களுக்கு அருகில் இருக்கிறது என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.

எவ்விதமாக ஒரு சிங்கமானது, தன்னுடைய கூரிய நகங்களைப் பதிய வைத்து அடையாளம் உண்டாக்குகிறதோ, அது போன்றே நான், என்னுடைய மன உறுதியால், தன்னம்பிக்கையால் என்னுடைய பெயரை உலக வலாற்றில் பதிய வைக்க விரும்புகிறேன். இந்த உக்கிரமான ஆசையினாலே நான் சூழப்பட்டிருக்கிறேன். அந்த ஆசையே என் உடலெங்கும் ஊடுருவிச்சென்று நிலைத்திருக்கிறது.

ஆக்கப்பூர்வமான மனநிலை, ஆக்கப்பூர்வமான செயல்முறை, ஆக்கப்பூர்வமான விடா முயற்சி.... இந்த மூன்றையும் வளர்த்துக்கொண்டால், நம் இலட்சியத்தில் வெற்றி கிடைக்கும். இந்த மூன்றிலும் கவனம் செலுத்துங்கள். பெரும் வெற்றியாளனாகத் திகழ வேண்டுமானால், பழைய வெற்றிப்பாதைகளை விட்டு, புதிய பாதையில் நடைபோடவேண்டும். வெற்றி நிச்சயம். தயங்கியவனால் சிலந்தி வலையைக்கூட அசைக்க முடியாது. ஆனால் துணிந்தவன் இரும்பு வளையைக்கூட முறித்துவிடுவான். பிற்காலச் சோழப்பேரரசை அமைக்கப்பாடுபட்ட விஜயாலயச்சோழன், வலுவான பாண்டியர்கள், முத்தரையர்கள் மற்றும் பல அரசர்களை வென்று, சோழப்பேரரசுக்கு வலுவான அடித்தளம் அமைத்தான் என்பது மிகையன்று.

நட்பு

அன்பு ஈனு ஆர்வமுடமை அதுஈனும்

நண்பென்னும் நாடாச் சிறப்பு.

அன்பின் பரிமாற்றமே நட்பாகும். நட்பின் வளர்ச்சிக்கு அன்பே துனைவாகும். நட்பு என்பது இன்சொல், கனிவான முகம், நெகிழும் மனம், உதவும் கரம் மன்னிக்கும் குணம், விட்டுக் கொடுக்கும் பண்பு இவற்றில் இருந்து பிறப்பதேயாகும்.

நட்பு என்பது சிறிது நேரம் முகமலர்ந்து பேசிப்பிரிவதன்று. அன்பால் மனதோடு பழகுவது, இன்னல்களையும் தாண்டி சுகமான நட்பைத் தருவது நட்பு. நல்ல தீர்வுகளுக்கு உயிர் தருவது நட்பு. நட்பை அகநட்பு, குடும்ப நட்பு, புற நட்பு என மூவகையாக வகைப்படுத்தலாம்.

அகநட்பு

‘முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு’.

முகம் மட்டும் மலரும்படி பழகுவது நட்பாகாது என திருவள்ளுவர் கூறுகிறார். அன்போடு உள்ளுணர்வுடன் பழகுவதே நட்பாகும். உயிரும் மெய்யும் இணைந்து, உயிர்மெய் எழுத்தாவது போல, அகவாழ்வில் ஆணும் பெண்ணும் இசைந்திருந்தால்தான் அன்பெனும் நட்பு மலரும். வாழ்வில் நட்பெனும் பண்பிருந்தால் இறுக்கமான சூழலையும்மாற்றி, சலனமில்லாத வளமான வாழ்வைப்பெறலாம்.

இரு கை இணைந்தால் நேசம் உருவாகும். வாழ்வில் அன்பினை வெளிப்படுத்தவில்லை எனில், கட்டாந்தரையில் இட்ட தண்ணீர்போல் வறண்டு விடும். அன்பினை நேசமாக வெளிப்படுத்தினால் இல்லறம் நல்லறமாகும்.

கூறாத அன்பு, பிறக்கும் இடத்திலேயே மறைந்துவிடும்.

பெற்றோரிடம் காட்டாத நேசம்

உடன்பிறப்புகளை நாடாத உள்ளம்

துணையிடம் சொல்லாத பாசம்

குழந்தையிடம் தேடாத அரவணைப்பு

இவையனைத்தும் பயனற்றது.

மனதில் தோன்றும் அன்பை புதைத்துவிடாது, நட்புடன் வார்த்தைகளால் வெளிப்படுத்தினால் வாழ்வு மலரும். புத்துணர்ச்சி பெறும் உயர் பதவியில் இருந்த ஒருவர் தன் துணைவியின் பிரசவ நேரத்திலோ, இக்கட்டான நேரத்திலோ, நோய்வாய்ப்பட்டு இறக்கும் நேரத்திலோ, தான் நிறைவு செய்யாத நேரத்தை மிகவும் மனம் வேதனைப்பட்டு, வருந்தி மற்றவர்களிடம் பகிர்ந்து இருந்தார். பிரிவு காட்டி நட்புடன் இருக்க வேண்டிய காலங்களை இழந்து, பிரிவு ஏற்படும்போது வருந்தி மனத்துயர் அடைவதில் பயன்இல்லை.

காலத்தே மழை பொழிந்தால், உயிருக்குப்பயன். காலத்தே அன்பு காட்டினால் உறவுக்கும் பயன். கோப்பெருஞ்சிசோழன் - பிசிராந்தையார் நட்பு எக்காலக்கட்டத்திலும், உலகத்தின உயர் நட்பாக பேசப்படுகிறது.

குடும்ப நட்பு :

குடும்பத்தில் நட்பு விரியும்போது உறவு பலப்படுத்தப்படும். தவறு இழைப்பதும், விவாதம் செய்வதும் மனித வாழ்வில் இயல்பாகும். அதை மறந்து மன்னித்து, அன்பு காட்டினால் பல உறவுகள் இணைந்த இல்லறம் இனிமையாகும்.

அன்பின் வழியது உயர்நிலை அதுஇலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு.

தற்போது பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையே எண்ணப் பகிர்வு குறைந்துவிட்டது. நேரமின்மை காரணமாக இருந்தாலும், மனம் இருந்தால் வழிவகுத்து உணர்வுகளை பரிமாறிக்கொள்ளலாம். எண்ணப் பரிமாற்றத்தால் பல சிக்கல்களுக்கு தீர்வு காணலாம்.

அதற்கு சிறந்த உதாரணம் கண் பார்வை இழந்தவர்களுக்கு பிரெய்லி எழுத்து முறையை கண்டுபிடித்தவர் பிரெய்லி பிரான்சில். ஒரு சிறு கிராமத்தில் பிறந்த பிரெய்லி, சிறு வயதிலேயே இரு கண் பார்வையை இழந்தவர். கண்பார்வை இல்லை என்பதாலேயே அவர் தாய் தந்தையர் மிகவும் பாசமுடன்

அரவணைத்து வளர்த்து வந்தனர். பெற்றோரின் தொலை நோக்குப்பார்வையால், பார்வையற்றோர் பயிலும் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

அப்பள்ளியில் படிக்கும்போது தொட்டுப்படிக்கும் எழுத்துக்கள் புரிந்து கொள்ள முடியாமலிருந்தாலும் புத்தகங்கள் தடிமனாக இருந்தாலும், கையாள்வதற்கு கடினமாக இருந்தது.

அரவணைப்பு

பிரெய்லின் பெற்றோர் அன்புடன், நட்புடன் தங்களது மகனை வழி நடத்தி சென்றதால், பார்வையற்றோருக்கு விழிகளாக பிரெய்லி முறையை தந்தார் லூயி பிரெய்லி. தகுந்த அரவணைப்பு வெற்றியை காண உதவும். அரவணைப்பின்றி வளரும் குழந்தைகள், அரண் ஏதும் இன்றி பல இன்னல்களை சுமப்பார்கள். குழந்தைகள் நாணல் போன்றவர்கள், தெளிவான பாதை இல்லையெனில் வளைந்து விடுவார்கள், கூடா நட்பு வந்து சேரும்.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும்.

கூடா நட்பானது. இறப்பது போன்ற இன்னலைத்தரும் என்று வள்ளுவம் உரைக்கிறது.

முதுமைக்கு முக்கியத்துவம்

குடும்ப நட்பில் முதுமைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். முதுமை என்பது இளைப்பாறும் காலம். அவர்களை சுமையாக கருதாது, அவர்களும் சுமைதாங்கியாக இருந்தவர்களே என்பதை நினைத்து, இனிய உறவென ஏற்று, நட்பு பாராட்ட வேண்டும். அவர்களின் தனிமையை மாற்ற நட்பெனும் கரத்தை நீட்டவேண்டும். மழலையும், முதுமையும் தனிமையை தவிர்க்க விரும்பும் பருவம். அப்பருவத்தில் துணையாக நிற்க வேண்டும். இராசராசசோழன், முதியவரான தனது சிறிய தந்தை மதுராந்தகசோழருக்கு முடி சூட்டி, தனக்கு கிடைத்த அரச வாய்ப்பையும் மறுத்து, முதுமைக்கு முக்கியத்துவம் தந்தார் என்பது நினைவு கூறத்தக்கது.

புற நட்பு

அன்பெனும் நட்பு அகத்தில் மட்டும் தோன்றுவதல்ல, புறத்திலும் தோன்றும். இறைவன் மனிதனோடு, மனிதன் இறைவனோடு, மனிதனோடு மனிதன் மற்ற உயிரினங்களோடு என்று பல நட்பு வட்டங்கள் உள்ளது. நட்பு வாழ்வின் லாப, நட்டத்தை கணக்கிடாது. அன்பால் மலரும் நட்பு என்றும் ஊன்றுகோலாய் வரும்.

பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படியை வயதான அம்மாளுக்காக இறைவன் ஏற்றது. இறைவன் மனிதன் மீது கொண்ட நட்பு, ரத்தம் வழியும் சிவனின் கண்ணிற்கு, தன் கண்ணை தந்த கண்ணப்ப நாயனார் கொண்ட அன்பு, இறை மீதுள்ள நட்பு.

பிசிராந்தையார் என்னும் புலவர், முகம் காணாத கோப்பெருஞ்சோழனின் மீது கொண்ட நட்பால், பாண்டிய மண்டலத்தில் இருந்து சோழநாட்டிற்கு சென்று, மன்னனுடன் வடக்கே நோன்பிருந்து உயிரைவிட்டது, மனிதன், மனிதன்மீது கொண்ட நட்பு.

காக்கை, குருவி எங்கள் சாதி என்று பாடிய மகாகவியும், வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறிய வள்ளலாரும்

‘யாவர்க்கும் ஆம் இறவற்கு ஒரு பச்சிலை

யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்கும் ஆம் உண்ணும்போது கைப்பிடி

யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே!

என உரைத்த திருமூலரும், உயிர்களிடம் தங்களின் அன்பால், நட்புணர்வை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

சுமந்து பெற்ற பிள்ளைபோல், வளர்க்கும் பயிர்கள் தண்ணீர் இன்றி மடிந்துபோனால் உயிர் பிரிவதைப்போல், மனம் உடைந்துபோகும் விவசாயிகள் காட்டும் அன்பு, பயிர்கள் மீதுள்ள அன்பு.

அன்பெனும் மலரில் நட்பு மவுனமாக மென்மையாக வளரும். நட்பு மலரும்போது அன்பு உன்னத நிலையை அடையும், எனவே அனைவர் மீதும் அன்பு கொள்வோம்.

வாழ்க்கையை ருசிக்க புரிந்து கொள்வோம்

இன்றைக்கு பல குடும்பங்களில் பிரட்சினைகள் வருவதற்கும், நிம்மதி இழப்பதற்கும் காரணம் புரிந்து கொள்ளாமையே! ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழந்தால் வாழ்க்கை இனிக்கும்.

சங்க இலக்கியத்தில் வரும் ஒரு காட்சி ஆண், பெண், இரு மான்களுக்கு அளவுக்கு அதிகமாக தாகம் ஏற்பட்டது. ஆனால், அந்தக்காட்டில் உள்ள சுனையில் ஒரு மான் மட்டுமே குடிக்க நீர் உள்ளது. ஆண்மான் குடிக்காமல், பெண் மானைக் குடிக்கச் சொன்னால் குடிக்காது. எனவே, ஆண் மான் நீரைக் குடிப்பதுபோல் பாவனை செய்ய, பெண் மான் குடித்தது.

இக்காட்சி கணவன் மனைவிக்காக விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற கருத்தை நன்கு உணர்த்துகின்றது. (ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது இந்தக் கதை)

மணமான புதிதில், கணவன் மனைவி நடந்து செல்லும்போது, மனைவியின் காலில் கல் தட்டியது. உடனே சனியன் பிடித்த கல் என்று கல்லைத் திட்டினான்.

சில ஆண்டுகள் சென்றது. அதே கணவன், மனைவியை மீண்டும் கல் தட்டியது, உடன் கணவன், சனியனே கல் இருக்குது, பார்த்து வரக்கூடாதா? என்று மனைவியைத் திட்டினான்.

ஏன் இந்த மாற்றம், எப்போதும் மனைவியை நேசிக்கும் உள்ளம் கணவனுக்கு இருக்க வேண்டும்.

பாராட்டாத கணவன்

மனைவி உணவு பரிமாறினாள், உணவில் உப்பு குறைவாக இருந்தது. உடன் கணவன் தட்டை விட்டெறிந்து கோபத்தில் கத்தினான். சரியான உப்புபோட்டு சுவையாக இருந்தபோது என்றுமே பாராட்டாத கணவன், உப்பு குறைவு என்ற குறை கண்டதும் கோபப்படுவது ஏன்?

சமைப்பது மனைவி என்றாலும், சாப்பிட்டு விட்டு சுவையாக இருந்தால், மனம் திறந்து பாராட்ட வேண்டும். பலருக்கு இந்த பாராட்டும் எண்ணம் இருப்பது இல்லை. பாராட்டிப்பாருங்கள், மகிழ்ச்சியில் மனைவி இன்னும் சுவையாக சமைப்பார்.

ஆணாதிக்கச் சிந்தனை

ரத்தத்தில் ஊறிவிட்ட ஆணாதிக்க சிந்தனையை, கணவன் அறவே அகற்றிவிட்டால் குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாகும்!

குடும்ப மகிழ்ச்சி என்பது புரிந்து கொள்வதில்தான் உள்ளது. பணத்தில் இல்லை மகிழ்ச்சி. ஏழை கணவன் , மனைவி இருவர் மிதிவண்டியில் இடுப்பில் கை வைத்து மகிழ்வாக பயணம் செய்வதை பார்த்து இருக்கிறோம். ஆனால் பணக்கார கணவன் மனைவி இருவரும் விலை உயர்ந்த காரில் மகிழ்ச்சி இல்லாமல் இருவரும், இரண்டு ஓரங்களில் அமர்ந்து பயணம் செய்வதையும் பார்த்து இருக்கிறோம்.

மனைவிக்கும் மனசு உண்டு, கருத்து உண்டு, காது கொடுத்து கேட்க வேண்டும் மதிக்க வேண்டும். கலந்து பேசி முடிவெடுத்தால் முடிவில் நன்மை இருக்கும். கணவனுக்கு மட்டும் இதை கூறவில்லை, மனைவிக்கும் சேர்த்துத்தான், இவை அறிவுறுத்தப்படுகிறது. கணவன், மனைவி இருவருக்கும் புரிதல் என்பது மிக மிக அவசியம்.

நேர்மை வழியில்

மனைவியும், கணவனும் வருமானம் அறிந்து அதற்கு மீறிய எதையும் கேட்கக்கூடாது. செலவழிக்கக்கூடாது விரலுக்கு தகுந்த வீக்கம் என்பார்களே அதுதான்.

மனைவி கேட்பதால், ஆசைப்படுவதால் அதற்காக குறுக்கு வழியில் சம்பாதித்தேன், லஞ்சம் வாங்கினேன் என்று சொல்லும் கணவர்கள் பலர் உண்டு. இந்த நிலை மாற வேண்டும்.

கணவன் வட்டிக்கு கடன் வாங்கி பகட்டுக்காக பல ஆயிரம் ரூபாய்க்கு பட்டுச்சேலை வாங்கித் தருவதைவிட, கடன் வாங்காமல் நூறு ரூபாய்க்கு கைத்தறிச்சேலை வாங்கித் தந்தாலும், அதை மகிழ்வோடு ஏற்கும் மனம் மனைவிக்கு வேண்டும். இதுதான் புரிதல், இருப்பதை வைத்து சிறப்புட வாழ்வது என்பது நேர்மையான வழியில் உழைத்துப் பணம் ஈட்ட வேண்டும்.

மனதில் நிம்மதி

நிம்மதி என்பது வெளியில் இல்லை. நம் மனதில் உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பிரபல எழுத்தாளர் மெர்வின், சந்தனக்கட்டை வீரப்பன்போல பெரிய மீசை வைத்து இருப்பார். அதற்கு அவரே சொன்ன காரணம்.

எனக்கு தலை வழுக்கையாக உள்ளது. எல்லோரும் என்னை அடையாளப் படுத்தும்போது, சொட்டைத்தலையன், வழுக்கைத் தலையன் என்றனர். மீசையை பெரிதாக வளர்த்தேன், மீசைக்காரர் என்றனர். இதில் வாழ்வியல். தத்துவமும் உள்ளது.

இழந்த ஒன்றுக்காக வருந்துவதைவிட, இருப்பதை செம்மைப்படுத்துவது மேல் என்றார். நம்மில் பலர் இழந்ததற்காக வருந்தி, கவலையில் காலம் தாழ்த்தி வருகிறோம். அதனை விடுத்து, இருப்பதற்குள் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

ஆசையே அழிவு

ஆசையே அழிவுக்கு காரணம் என்றார் புத்தர். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசைகள்தான் கௌரவர்கள் அழிவுக்கு காரணம் என்கிறது மகாபாரதம்.

பேராசை பெருநஷ்டம் என்ற பொன்மொழியும் உண்டு. ஆசையின் காரணமாக பலர் நிம்மதி இழந்து, தவித்து வருகின்றனர். ஆசையையும், தேவைகளையும் குறைத்து புரிந்து கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும். வாழ்க்கையை இஷ்டப்பட்டு வாழவேண்டும், கஷ்டப்பட்டு வாழக்கூடாது.

காலணி இல்லை என்று வருந்துபவர், கால்களே இல்லாதவர்களைப் பார்த்து ஆறுதல் கொள்ள வேண்டும். கணவன் வேலைக்கு வெளியில் சென்றுள்ளான். மனைவி இருந்த மாவில் 12 இட்லிகள் வேக வைத்து வைத்திருந்தாள். கணவன் தன் நண்பனுடன் இல்லம் வந்து, இவருக்கும் சாப்பாடு வை என்றான்.

இருவருக்கும் தலா 4 இட்லி வைத்துவிட்டாள். மீதுமுள்ள 4 இட்லி தனக்கு இருக்கட்டும் என் நினைத்துக்கொண்டாள், மனைவியின் முகம் பார்த்து கணவன் புரிந்து கொண்டான்.

இன்னும் இரண்டு இட்லி சாப்பிடுங்கள் என்று வைக்க வந்தாள். கணவன் சொன்னான் 4க்கு மேல் யார் சாப்பிடுவார்? எனக்குப் போதும் என்றான். கணவனின் நண்பனிடம் அண்ணன் நீங்கள் 2 இட்லி சாப்பிடுங்க என்று வைக்கப்போனாள். நான் எப்போதும் 3 இட்லி தான் சாப்பிடுவேன், சுவையாக இருந்தால் ஒரு இட்லி கூட சாப்பிடுவேன், இது போதும் எனக்கு என்றான் நண்பன்.

கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும். நானே பெரியவன் என்ற அகந்தை விடுத்து, அன்பு செலுத்தி வாழ்ந்தால் வாழ்க்கை வசந்தமாகும்.

வரப்புயர

ஒரு நாடு என்றால் அது எப்படி இருக்க வேண்டும்? நாட்டை ஆள்பவர்கள் எதற்கு முக்கியத்துவம் தரவேண்டும்? "மக்கள் எப்பொழுது மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் வாழ்வார்கள்?" போன்ற பல வினாக்களுக்கு இக்கட்டுரையில் விடை காணலாம்.

எல்லா வளமும் கொண்ட நாடே நாடு

ஒரு நாட்டின் வளர்ச்சியானது இடைவிடாத முயற்சியாலும், கடினமான உழைப்பினாலும் கிடைக்கலாம். முயற்சி செய்து கிட்டும் பலன்களைவிட இயற்கையிலேயே கிடைக்கும் எல்லா வளங்களையும் உடைய நாடு, சிறந்த நாடாகும்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளத்தரு நாடு"

(குறள் : 739)

ஒரு நாட்டின் சிறந்த உறுப்பு எது? பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன் நாட்டிற்குச் சிறந்த உறுப்புகளாகத் திகழ்வதை நெகிழ்வுடன் மொழிகிறார்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு"

(குறள் : 737)

ஒரு நாட்டிற்குத் தேவை ஆறு, கடல், வளர்ந்தோங்கிய நீண்ட மலைத்தொடர், வரும்புனலாம் மழை மற்றும் வலிமைமிகு அரண். இவைதான் ஒரு நாட்டிற்குச் சிறந்த உறுப்புகளாகும்.

ஒரு நாடு எப்பொழுது சிறந்த நாடு என்று பாராட்டப்படும்?

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

(குறள் : 734)

அண்டை நாட்டோடு தொடர்ந்து சண்டையிட்டால் நாட்டின் வளம், வருவாய், பொருளாதாரம், வளர்ச்சி அத்தனையும் தளர்ச்சியடையும்; தாழ்வுறும்; மக்கள் வாழ்வு பாழ்பட்டுவிடும். பசிப்பிணி உள்ள நாடும், நோயால் துன்புறும் நாடும் நல்ல நாடு என்று கூறமுடியுமா? பசி, நோய், பகை இம்மூன்றும் இல்லாத நாடே சிறந்த நாடாகும். உயர்ந்த நாடாகும்.

ஒரு நாட்டிற்கு சிறந்த அரண் எது?

முக்காலத்திற்கும் பொருந்தும் முப்பால்மொழியில் மிகவும் அழகாக வள்ளுவர் நாட்டிற்கான அரண்களை அழகுப்படப் பழகுமொழியில் மொழிந்துள்ளார்.

"மணீநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்"

(குறள் : 742)

மணிபோல் நிறத்தினையுடைய நீரும், வளமான மண்ணும், மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதே அரணாகும்.

இக்குறட்பாக்களால் நாம் தெரிந்து கொள்ளும் கருத்துக்கள் யாவை? வள்ளுவர் ஒரு நாட்டிற்குத் தேவையான வளங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கூறியுள்ள கருத்துக்கள். இன்னும் பலகோடி ஆண்டுகள் சென்றாலும் பொருந்தும். அதுதான் வள்ளுவனின் தனிச்சிறப்பு.

நல்ல நீர், நல்ல மழை, வளமான மண், நீண்டமைந்த மலைத்தொடர், குளிர்ந்தகாடு இவை அனைத்தும் ஒருங்கே கொண்டதுதான் நாடு. இவை இல்லாத நாடு, நாடாகாது; அவை சுடுகாடேயாகும். எப்படிப்பார்த்தாலும் ஒரு நாட்டின் வளர்ச்சி, ஒரு நாட்டின் மகிழ்ச்சி, ஒரு நாட்டின் எழுச்சி, ஒரு நாட்டின் குளிர்ச்சி அந்த நாட்டில் உள்ள நீர்வளத்தால்தான் அமைகின்றன. என்று தெள்ளத் தெளிய விளங்குகிறது.

உணவெனப்படுவது நிலத்தோடு நீரே

சங்க இலக்கியம் தமிழர்களின் தங்க இலக்கியம். மனிதன் இன்பம் பொங்க வாழும் வகை சொல்லும் உன்னத இலக்கியம். மன்னனையும், குடிமக்களையும் எப்படி வாழவேண்டும் என்று சொன்ன உன்னத இலக்கியம்.

நீர் இன்றி அமையாது உலகு! இது வள்ளுவரின் வாய்மொழி, நீர் இன்றி அமையாது உடல்! இது சங்கத் தமிழ்ப் புலவனின் பொன்னுரை. நீர் இன்றி வாழாத உடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவார். உணவால் உள்ளதுதான் உடல். ஆகையால்தான் நாம் உடலை பிண்டம் என்கிறோம். "சோற்றால் அடித்த பிண்டம்" என்ற சொற்றொடர் இன்றும் வழக்கில் உள்ளது. உணவானது நிலத்தில் விளைகின்றது. அந்த நிலத்தில் விளையும் உணவுக்கு ஆதாரமாக இருப்பது நீர் ஆகும்.

நீரையும், நிலத்தையும் ஒன்றாகச் சேர்த்தவர்தான், இப்புவியில் உடலையும், உயிரையும் படைத்தவர் ஆவார். நெல்லை விதைத்துவிட்டு வானத்தை அண்ணாந்து பார்க்கும் புல்லிய புன்செய் நிலம் (மானாவாரி நிலம்) மிகுதியாக இருப்பினும், அதை ஆளும் அரசனின் முயற்சிக்குப் பலன் இல்லை.

அரசனானவன் நிறைய நீர்நிலைகளை உண்டாக்க வேண்டும். பள்ளமான இடத்தில் வெள்ள நீரை, நீண்ட கரைகட்டி நீரைத் தேங்கச் செய்து ஏர் சிறக்க மன்னன் உதவுதல் வேண்டும். ஏர் சிறந்தால் மக்கள் சீர் மிகுந்து வாழ்வார்கள். நீரைத்தேக்கி வைத்து வளத்தைக் கூட்டுவதே மன்னனுக்குத் தலையாயப் பணி. அப்படிச் செய்யும் மன்னனை மக்கள் வாழ்த்துவர். மன்னனும் மூவகை இன்பங்களைப் பெற்றுப்புகழடைவான். இல்லை என்றால் புகழ்பெறாது மடிவான். மன்னனுக்கு மூவகை இன்பம் என்பது செல்வம், வெற்றி, இறவாப்புகழ் பெறுவதாகும்.

உழவுத்தொழிலை உயர்த்துவதே ஆள்வோரின் மணியான பணி; அந்தப்பணியே அவனுக்குச் சேர்க்கும் அணி; இல்லாவிட்டால் என்றும் பிணி என்ற உண்மையை ஒரு சில பாடல்கள் மூலம் உணரலாம்.

எத்தனையோ மன்னர்கள் தமிழகத்தை ஆண்டார்கள்: மாண்டார்கள்: ஆனால் கரிகாலன் மட்டும் இன்றும் வாழ்கிறான்! ஏன்? அவன் கட்டிய கல்லணை: அவன் வெட்டிய குளங்களும், விவசாய வளர்ச்சிக்கு செய்த செயல்களும்தான் வரலாற்றில் என்றும் அழியாத புகழையும், இடத்தையயும் கரிகாலனுக்குக் கொடுத்துள்ளன.

ஒரு அரசன் நல்ல நாட்டைக் காணவேண்டுமானால், அவன் பேணவேண்டிய கடமைகளை ஒரு புலவர் வலியுறுத்திப்பாடினார். இப்பாடல் புறநானூற்றில் பதினெட்டாம் பாடலாக வருகிறது. பாடிய புலவர் குட புலவியனார் என்றும் புடமிட்ட செந்தமிழ்ப்பாவலர்.

ஏர் செய்யும் உழவனின்றிப் போர் செய்யும் வீரனில்லை

நாட்டைக் காக்க போர் வீரர்கள் அவசியம். அந்தப் போர்வீரர்களைக் காக்க ஏர்வீரர்கள் அவசியம். இதைத்தான் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற திரு.லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் “ஜெய்ஜவான்: ஜெய்கிசான்!” என்று முழங்கினார். உழவர்படை இல்லை என்றால் எந்தப் படையும் இல்லை என்பது தெளிவாகும். அந்த உழவிற்கு ஆதாரம் நீராகும். புறநானூற்றில் 35-ஆம் பாடலில் மீண்டும் ஒரு கவிஞன் புவி ஆளும் வேந்தனுக்கு நீர் நிலைகளை உண்டாக்கும்படி உரைத்துள்ளான்.

“தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்”

என்று ஒரு பழமொழி உள்ளது. ஆள்வோரையே அந்நாட்களில் தட்டிக் கேட்கும் நடைமுறையை அக்காலப் புலவர்கள் கடைப்பிடித்து வந்துள்ளார்கள். ஆட்சியாளரின் தயவிற்காக அவர்கள் ஒரு பொழுதும் தாழ் பணிந்து பல்லக்குத் தூக்கிகளாக இருந்ததில்லை. அரசர்களின் ஆடம்பரங்களையும், ஆர்ப்பாட்டத்

தவறுகளையும் தட்டிக்கேட்டு, அம்மன்னர்களின் தலையில் குட்டி குறைகளை எடுத்துச் சொல்ல, ஒரு நாளும் அப்புலவர்கள் தயங்கியதே இல்லை. ஆட்சியாளர்களின் தயவிற்காக மயங்கியதும் இல்லை.

அரசனின் வெண்கொற்றக்குடை வெயிலை மறைப்பதற்காக அல்ல. காட்சிக்கு எளியவனாகவும், குடிமக்கள், அரசனை அண்டிக் குறைகளைச் சொல்லும்படியாகவும் அரசன் ஆட்சி செய்ய வேண்டும். அரசனுடைய வெண்கொற்றக்குடை, வருந்தி வரும் மக்களின் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அளிப்பதற்காக உள்ளதாகும்.

பனைமரத்துத்துண்டுகள் போல் யானைகளை வெட்டி வீழ்த்தி, கொடும்பகைவர்களை வென்று போர்க்களத்தில் எக்காளமிடும் வெற்றி எப்படிக் கிடைத்தது?

உழும் கலப்பை நிலத்தில் உழுது காலத்தில் விளைந்த நெல்லின் மூலமாகத்தான் அரசனுக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஏர்க்களத்தில் கிடைக்கும் வெற்றியின்படியே போர்க்களத்தில் வெற்றி கிடைக்கும்.

மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாது போயினும், விளைச்சல் குறைந்தாலும், செயற்கையாக விளைச்சல் இல்லாமல் போனாலும், மக்களிடையே இயல்பில்லாதவையான செயற்கை தோன்றினாலும், மன்னனையே உலகம் பழிக்கும்.

மன்னன் அதனை நன்றாக உணரவேண்டும். புறம்கூறுவாரின் உறுதியற்ற, பயனற்ற சொற்களைப் புறம் தள்ள வேண்டும். ஏரைக்காப்பவரின் குறை களைந்து அவர்களின் குடியைக் காக்க வேண்டும். அதுபோல் மற்ற குடிகளையும் மன்னன் காப்பாற்ற வேண்டும். அதனால் பகைவர்களும் அரசன் அடியைப் போற்றுவார்கள்.

ஏர்க்களத்தில் நிகழும் விளைச்சல்தான், ஏர்க்களத்தில் குவியும் வைக்கோல் போர்கள்தான், போர்க்கள வெற்றிக்கே அடிப்படை என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

அரசன் வழி தடுமாறும்பொழுது வெள்ளைக்குடியார் அவனை நல்வழிப்படுத்த எவ்வளவு அழகாகச் சொல்லோவியம் தீட்டியுள்ளார்.

போர் வெறியிலும், புகழ் போதையிலும் நாட்டை மறந்து இருந்த அரசனை நெறிப்படுத்தவும், உழவர்களை ஊக்குவிக்கவும், வெள்ளைக்குடியார் பாடிய பாடல் பொருள் பொதிந்தது.

இந்நாட்களில் ஆட்சியாளர்கள் இப்படி ஒரு அறிஞன், நாட்டில் நடைபெற வேண்டிய பணியைச் சுட்டிக்காட்ட முடியுமா? அவர்களைத் தட்டிக்கேட்க முடியுமா?

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானும் கெடும்"

(குறள் : 448)

என்பது வள்ளுவம். வள்ளுவர் வாக்கைத் தள்ள முடியுமா?

உலக இன்பங்களில் சிறந்தது எது?

சோழன் அவைக்களத்தில் பலர் குழுமி இருந்தனர். குழுமியிருந்த அத்தனைபேரும் தமிழ்ச்சுவை உணர்ந்த பெரும்புலவர்கள். சோழன் புலவர்கட்கெல்லாம் விருந்து வைத்தான். வாய் விருந்துண்டபின் செவி உணவை உண்ண மன்னன் விரும்பினான். அந்த அவையில் கம்பர், ஔவையார், ஒட்டக்கூத்தர் போன்ற பெரும் புலவர்கள் குழுமி இருந்தனர்.

சோழன் கம்பரை நோக்கி, உலக இன்பங்களில் சிறந்தது எது? என்று கேட்டான்.

கங்கை நீரும், சூரியனின் ஒளியும், தாயின் உறவும், மங்கையிடம் காணும் சுகமும்போல் உலகில் இல்லை மன்னா என்று பாடினார்.

"இதனைக் கேட்ட ஔவையார், கம்பர் பாடிய பாட்டு தவறான பாட்டு", என்று விடையளித்தார்.

மழைநீரைப்போல் சிறந்த நதியில்லை; கண்ணின் ஒளிபோல் வேறு ஒளியில்லை; பொருளைப்போல் உறவுமில்லை; சோழன் குலோத்துங்கன் உறவைவிடச் சுவையான, சுகமான உறவு வேறு ஒன்றும் இல்லை என்று ஔவையார் பாடிச் சோழனை மகிழச் செய்தார். மழைநீரைப்போல் சிறந்த நதி வேறு இல்லை என்ற ஔவையின் பொன்மொழி ஈண்டு கவனிக்கத்தக்கது.

சோழன் குலோத்துங்கனுக்குத் திருமணம் சீரும், சிறப்பாக நடந்தது. அரசனின் திருமணத்திற்குப் பல அறிஞர் பெருமக்கள் வந்திருந்தனர் தமிழர் மரபுப்படி திருமணம் முடிந்ததும், அரசனை அறிஞர்கள் வாழ்த்துப் பாமாலைகள் பாடினர்

ஔவையாரின் முறையும் வந்தது. அவர் அரசனைப் பார்த்து வரப்புயர என்று சுருக்கமாகச் சொல்லி தமது வாழ்த்துப்பாவை முடித்துவிட்டார். அவையில் உள்ள அறிஞர்கள் இதன் பொருள் தெரியாமல் தவித்தனர். அரசனும் ஏனைய புலவர்களும் ஒட்டக்கூத்தர் முகத்தினைப் பார்த்தனர்.

அதற்கு ஒட்டக்கூத்தர் பின்வருமாறு கூறினார்.

வரப்புயர நீருயரும்; நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோன் உயரும்.

என்று பொருள் கூறினார். சுருங்கச்சொல்லி விளங்க வைப்பது தமிழ் மரபு. திருக்குறளின் பெருமைக்கே காரணம் அதன் சுருக்கம். அரசனும் பிற அறிஞர்களும் ஔவையாரது வாழ்த்தைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

இன்றைய காலகட்டத்தில் பருவ மாற்றத்தினால் மழை குறைவாகப் பொழிவதாலும், ஆறுகளில் நீர்வரத்து குறைவு ஏற்பட்டுள்ளதால், நிலத்தடி நீர் மட்டம் மிக மிகக் கீழே சென்றுகொண்டிருக்கிறது. நிலத்தடி நீரை உயர்த்த ஆங்காங்கே தடுப்பணைகளும், கசிவுக்குட்டைகளும், குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் தூர்வாரப்பட்டு, செப்பனிட்டு கிடைக்கும் நீரை சேமிக்க முயற்சி செய்ய வேண்டும். மக்களின் ஒத்துழைப்போடு, அரசு தீவிரமாக செயல்பட்டு இப்பணியைச் செய்தால்தான் தமிழகத்தில் குடிநீராவது கிடைக்கும்.

இல்லையேல், கவிஞர் வைரமுத்து கூறியதுபோல் தண்ணீருக்காக மாநிலங்களுக்கிடையே போர் ஏற்பட்டு, நாடுகளுக்குள்ளே போர் உருவாகி, மூன்றாவது உலகப்போராகிவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதை உணர்ந்து போர்க்கால அடிப்படையில் துரிதமாக செயல்படுத்தவேண்டும்.

சோழ மன்னர்கள் ஆட்சியில் பேராசிரியர் மாதச்சம்பளம் ரூ.2.32 இலட்சம் ஆச்சரியமாக இருக்கிறதா?

தமிழகத்தில் கி.பி. 846 முதல் கி.பி.1279 வரை மேலாக ஆட்சி செய்த பிற்கால சோழர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழையும், வேத சாஸ்திரங்களையும் வளர்ப்பதில் அதிக அக்கறை காட்டினர்.

கற்றலும், கற்பித்தலும் செம்மையாக இருக்கவேண்டும் என்பதற்காக உண்டு உறைவிடக் கல்விக்கூடங்களை ஊக்கப்படுத்தினர். அங்கு பயிற்றுவிக்கும் குருமார்களுக்கு தாராளமாக ஊதியம், அளித்ததுடன் மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கினர்.

சோழர்கள் ஆட்சியின்போது கல்லூரிப் பேராசிரியர்களுக்கு தலா மாதம் 15 கழஞ்சு பொன், 600 படி நெல் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. அதாவது தற்போதைய மதிப்பு ரூ.2.32 லட்சம் இதற்கான ஆதாரங்கள் விழுப்புரம் மாவட்டம், எண்ணாயிரம் கோயில் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

(அழகிய சிங்கப்பெருமாள் கோயில்)

சோழர் காலத்தில் எண்ணாயிரம், திருப்பாதிரிப்புலியூர், திருப்புவனை, திருமுக்கூடல், திருவாவடுதுறை திருவொற்றியூர், பாகூர் உள்ளிட்ட இடங்களில் உயர் கல்விக்கூடங்கள் இருந்ததாக கல்வெட்டுத்தகவல்கள் கூறுகின்றன. எண்ணாயிரத்தில் இருந்த கல்லூரியில் 3 வேதங்கள் உட்பட 11 வகையான பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன.

இங்கு ‘பிரம்ம சாரியம்’ என்று அழைக்கப்படும் இளநிலை மாணவர்கள் 270 பேர், சாத்திரம் என்று அழைக்கப்படும் முதுநிலை மாணவர்கள் 70 பேர் என ஒரு கல்வி ஆண்டுக்கு 340 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

ஆசிரியர் மாணவர் விகிதம்%

உயர்கல்வியில் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 1.20 ஆக (1/20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்) இருக்க வேண்டுமென இன்று பல்கலைக்கழக மானியக்குழு (U.G.C) தற்போது வலியுறுத்துகிறது. இதை சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பே சோழர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்பது வியப்பு அளிக்கிறது.

கற்றல், கற்பித்தல் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கு தாராளமான ஊதியம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் முறையையும் சோழர்கள் நடைமுறையில் வைத்திருந்தனர். இளநிலை ஆசிரியர்கள் தலா 3 பேருக்கு நாளொன்றுக்கு அரை கழஞ்சு (ஒரு கழஞ்சு = 5.33 கிராம்) பொன், 2 குலுணி, 4 நாழி (20 படி) நெல் ஊதியமாக தரப்பட்டுள்ளது.

முதுநிலை ஆசிரியர் ஒருவருக்கு நாளொன்றுக்கு அரை கழஞ்சுபொன், 2 குலுணி, 4 நாழிநெல் ஊதியமாகத் தரப்பட்டது. மாதத்துக்கு 15 கழஞ்சு பொன், 600 படி நெல், அதாவது அப்போதைய கல்லூரி முதுநிலை, ஆசிரியர்கள் இப்போதைய மதிப்பில் ரூ.2,32,220/- ஒரு மாதச் சம்பளம் வாங்கியிருக்கின்றனர். தற்போது கல்லூரிப் பேராசிரியரின் குறைந்த பட்சம் சுமார் ரூ.70 ஆயிரம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல இளநிலை மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 6 படி நெல், முதுநிலை மாணவர்களில் தலா 25 பேருக்கு நாளொன்றுக்கு பொன் அரை கழஞ்சு (ஒரு கழஞ்சு=5.33 கிராம்) 2 குலுணி 10 படி நெல் ஊக்கப்படியாக வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி வளாகத்திலேயே மாணவர்களுக்கான விடுதிகள், சில பொறியியல், தொழில் நுட்பக்கல்லூரி வளாகத்தில் ஆசிரியர் குடியிருப்புகளும் இருந்திருக்கின்றன. சோழர்கள் ஆட்சியின் கீழ் அந்தக் காலத்திலேயே கல்லூரி வளாகத்தின் அருகில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விடுதிகள் இருந்ததையும் எண்ணாயிரம் கோயில் கல்வெட்டுக்கள் தெளிவாகப்படம் பிடித்து காட்டுகிறது என்பது ஆச்சரியத் தகவலாக, சோழர்கள் கல்விக்கு செய்த சேவை தமிழர்களுக்கு பெருமையைச்சேர்க்கின்றது!

அழகின் அடையாளம்

அழகு ஆபத்தானது என்ற எண்ணம் பொதுப்புத்தியில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ரசனைதான் அழகு பற்றிய வரையறைகளை உருவாக்குகிறது. ஒரு பண்பாட்டினுடைய அழகு குறித்த எண்ணங்கள் இன்னொரு பண்பாட்டிற்குப் பொருந்தக்கூடியது இல்லை. ரசனை உருவாக்கத்தில் பொருளாதாரம் வர்க்கம் மற்றும் சமயம் (மதம்) முக்கியமான பங்கு வகிக்கின்றன.

மகாலெட்சுமி மாதிரி பொண்ணு இருக்கா! என்று வரையறை செய்வதன் பின்னே இருப்பது, சமயம் உருவாக்கிய அழகியல்தானே!

அழகை மேம்படுத்துவாகக் கூறி பெரும் சந்தைகடை விரிக்கப்படுகிறது. வெள்ளை அல்லது சிவப்பு நிறத்தோல்களே அழகானவை, கருப்பு மாற்றப்படவேண்டிய நிறம், கருப்பு நிறத்தை ஒருவருக்கும் பிடிக்காது... என்ற தவறான எண்ணங்கள் ஊடகங்கள் வழியே தொடர்ந்து ஆழமாக பதிய வைக்கப்படுகின்றன.

சென்னையில் ஒரு அருங்காட்சியத்தில் இருந்த முதியவர் ஒருவர், அங்கு வந்த ஒரு பையனிடம் உனது ஊர் எது? எனக்கேட்டிருக்கிறார். சைதாப்பேட்டை என்று பதில் சொன்னதும், அதைக்கேட்கவில்லை உன் தந்தையின் ஊர் எது? எனக் கேட்டிருக்கிறார் சென்னை என்றான்.

உனது பாட்டனின் பாட்டன் எந்த ஊரில் பிறந்தார்? தமிழகத்தில் எந்தப் பகுதியிலிருந்து நீங்கள் புலம்பெயர்ந்து சென்னை வந்தீர்கள்? உனது பூர்வீக ஊர் எது? என கிழவர் திரும்பக் கேட்டுள்ளார்.

எனது பூர்வீகம் பற்றி எதுவும் தெரியாது என்ற இளைஞனின் பதிலால், அந்த முதியவரை உலுக்கி எடுத்தது. படித்தவர்கள் கூட தனது பூர்வீகத்தைப்பற்றி தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டாமல் இருப்பது மேலும் தங்களது குழந்தைகளுக்கு இனம், மொழி, பூர்வீகம் பற்றி எடுத்துச்சொல்லாது மிக வருத்தமளிக்கிறது என்றாரம் அந்தப் பெரியவர். தன் இனம், கலாச்சாரம், பண்பாடுதான் மனிதனின் அழகை உயர்த்துகிறது, நிறமல்ல.

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும், அவரது இனம், ஏதாவது ஒரு வகையில் சிறப்பு நிறைந்ததாக இருக்கும். குறையும் இருக்கும், குறையை மட்டுமே நினைத்து வருத்தப்படக்கூடாது. எது திறமையோ அதை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் தனது தாய்தான் பேரழகி, அந்தந்த தாய்க்கோ தன் பிள்ளைகள்தான் அழகி, அழகன்கள் இந்த எண்ணம் உலகெங்கும் ஒன்று போலத்தான் இருக்கிறது. அதுபோலத்தான் இனம், பண்பாடு, கலாச்சாரம். இது குறித்த மற்ற வரையறைகள் யாவும் பண்பாடு, கலாச்சாரம் உருவாக்கிய அடையாளங்களோ!

இறைத்தத்துவம்

கடவுள் ஒருவர் உண்டு, உயிர் என்பது ஒன்று உண்டு. அது தன்னைத்தான் அறியக்கூடாமலும் இறைவனை அறியக்கூடாமலும் அதைத் தடைசெய்யும் இருள் ஒன்று உண்டு என்பது கடவுள் பற்றிய சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும்.

இறைவனைப் பதி என்றும், உயிரைப் பசு என்றும், இருளைப் பாசம் தடை, தளை, ஆணவம் என்று கூறுவர். ஆணவ இருளில் சிக்குண்டு உழல்கின்ற உயிர்களிடம் இறைவனுக்கு அருள் சுரக்கின்றது. அதனால் அவன் அவற்றுக்கு உடலையும், உலகத்தையும், இன்ப, துன்பங்களை துய்க்கும் ஆற்றலையும் விளங்குகின்றான். இவை மூன்றும் உயிர்களுக்கு சிறுவிளக்கைப்போல் உதவுகின்றன.

சிறு விளக்கின் ஒளியில் உயிரானது தன்னைப்பற்றியும், தன் சூழ்நிலைப்பற்றியும் சிறிது விளக்கங்கண்டு, பிறகு கதிரவனின் பேரொளி போன்ற, முழுமையான பேரறிவை அடையவேண்டும். அதற்காக உயிரானது மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுக்க வேண்டும்.

ஆணவம், தன்மம் மாயை என முப்பொருளாகப் பிரியும் இவ்வுலகம் உயிரும், உயிரில்லாத பொருளாகக் காட்சியளிக்கின்றது.

இக்காட்சியை தோற்றுவிப்பதற்குத்தான் படைப்பு என்று பெயர்.

உயிர்கள் ஆக்கப்படுவதுமில்லை, அழிக்கப்படுவதுமில்லை. இறைவன் என்று உண்டோ, அன்றே உயிர்களும் உண்டு. இறைவன் ஒருவன், உயிர்கள் எண்ணிலடங்கா. செம்பிடத்தே களிம்பு இருப்பதைப்போல், உயிர்களிடத்தில் ஆணவ மலம் உடன் கலந்து இருக்கின்றது. களிம்பு நீங்கின செம்பு ஒளிவிட்டுச் சுடர்வதைப்போல், மலம் என்ற ஆணவம் நீங்கின், உயிர் ஞான ஒளி விளக்க முற்றுப்பேரின்பம் எய்தும்.

செம்பினிடத்தில் களிம்பானது ஏன், எப்போதும் உண்டாயிற்று என்னும் கேள்விக்கு விடை கிடையாது. அதைப்போல உயிர்களுக்கு மலம் என்ற ஆணவம் ஏன் உண்டாயிற்று? எப்பொழுது உண்டாயிற்று என்ற கேள்விகளுக்கும் விடையில்லை. உயிரில்லாத பொருளான இவ்வுலகம் காலத்தின் இறுதியில் நுண்பொருளாய் பின்பு ஆற்றலாய் மாறி ஒடுங்கும்.

ஒவ்வோர் உயிருக்கும் இறைவன் உலகையும் உடலையும் படைத்துக் கொடுக்கின்றான். அது அவனுடைய படைத்தல் தொழில், பிறவி எடுத்த உயிர்களைப் பாதுகாத்து வருகின்றான். அது அவன் காத்தல் (அளித்தல்) தொழில். உயிரானது பிறவியின் பயனை அறியாமல் வீண்காலம் கழித்து இறப்புக்குள்ளாவது அவனுடைய அழித்தல் தொழில். உயிரானது முற்பிறவிகளையும், குழந்தைப்பருவத்தையும் மறந்து விடுவது, மறப்புத் தொழில்.

இறுதியாகப் பக்குவம் பெற்ற உயிர், கடவுளின் ஞானம் பெற்று, மெய்ஞ்ஞானம் கை வந்து இறை ஒளியில் இரண்டறக்கலந்துவிடுவது, அவனுடைய அருளுந்தொழிலாகும்.

இந்த ஐந்து தொழிலும் ஒவ்வோர் உயிரினிடத்திலும் நிகழ்வதைப்போலவே உலகப் படைப்பிலும் நிகழ்வதுண்டு. ஆற்றலாக மாறி இறைவனிடத்தில் ஒடுங்கிய மாயையானது அவனுடைய ஆணையால் விரிவுற்று அண்டங்களாகவும், உலோகங்களாகவும் தோற்றமுறும்.

இறைவன் தனித்து நிற்கின்றான். உயிர்களிடத்திலும் காணப்படுகின்றான். உயிரில்லாத சடப்பொருள்களிடத்திலும் காணப்படுகின்றான். இம்மூன்று நிலைகளையும் இறைவன் வேறாயும், ஒன்றாயும், உடனாயும், உறையும் நிலைகண்ட இறைச்சித்தாந்தம் கூறும் இத்தத்துவத்தையே

அகர முதல எழுத்து எல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு.

என வள்ளுவர் கூறுகிறார்.

உயிர் எழுத்து என்னும் உயிர் முத்தானது தனித்து இயங்கும். ஏனைய உயிர் முத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றுடன் கலந்து இயங்கும். மெய்யெழுத்துகள் தனித்து இயங்கும்.

இறைவனின் ஐந்தொழில் தத்துவமே நடராச உருவத்தின் தத்துவமாகும். இறைவன் நடராசர் திருவுருவத்தில் அமைந்துள்ள உடுக்கை படைப்பைக் குறிக்கின்றது. அபயகரம் காத்தல் (அளித்தல்) தொழிலைக்குறிக்கின்றது. நெருப்பு அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. ஊன்றிய பாதம் மறைப்பையும், தூக்கிய திருவடி அருளுந்தொழிலையும் குறிக்கின்றது.

நற்செயல், நல்லொழுக்கம், உள்ளத்தில் அமைதி, விரிந்த தடையுறாத பேரறிவு, ஆகிய பேராற்றலால் ஒருவர் தம் உடம்பை பொன் உடம்பாக்கியது ஆகிய, ஐந்து தொழில் கூத்து நடராசப்பெருமான் நிகழ்த்துகின்றான்.

எனவேதான் சோழர்கள் உலகம் போற்றும் சிவன் கோயில்களை நிர்மாணித்து பராமரித்து வந்தனர். தஞ்சைப் பெரியகோயில், கங்கை கொண்ட சோழீச்சரம், தில்லை நடராசர் போன்றவைகள் குறப்பிடத்தக்கது.

கடவுளர்கள்

சிவபெருமான், திருமால் ஆகிய கடவுளரின் வழிபாடு பலவகையாகப் பெருகிவிட்டது. சிவபெருமான் என்ற தத்துவம், இருபத்தைந்து மூர்த்திகளாக விரிவுற்றது. திருமாலை இராமனாகவும், கண்ணணாகவும் மக்கள் வணங்கி வரலாயினர். சிதம்பரத்தையடுத்த ஸ்ரீ முஷ்ணம் என்னும் ஊரில் ஸ்ரீ வராக மூர்த்தியாகவும், நரசிங்கப் பெருமாள் கோயிலிலும், சோளிங்கபுரத்திலும் நரசிங்க மூர்த்தியாகவும், ஸ்ரீரங்கத்தில் திருவரங்கனாகவும் திருமால் காட்சியளிக்கின்றனர்.

விநாயகர், முருகன், காளியம்மன். மாரியம்மன், பிடாரியம்மன், சப்தமார், கன்னிகள், துர்க்கை, சீதை, அனுமன், அறுபத்து மூவர் ஆகிய தெய்வங்களின் வழிபாடும் தமிழகத்தில் பெருகிவிட்டன.

தங்களுடைய வேண்டுதல், எண்ணங்கள் நிறைவேற வேண்டும் என்று சுவாமியின் முன்பு பிரார்த்தனை செய்து கொண்டு காணிக்கை செலுத்திக் கொள்ளும் பழக்கம் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே காணப்படுகின்றது.

இலக்கியம்

சோழர் காலத்தில் தமிழ் வளர்ச்சியானது மிக உயர்நிலையை எட்டி இருந்தது. அவற்றின் சீரும், சிறப்பும் இன்றளவும் மங்காமல் ஒளிர்ந்து வருகின்றன.

சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்துக்கே பெருமையையும், புகழையும் ஈட்டித்தந்தவர்கள் ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி, சேக்கிழார், திருமங்கையாழ்வார், திருத்தக்கத்தேவர், கருவூர்த்தேவர் ஆகிய மாபெரும் புலவர்கள்.

கல்வியிலும் கவித்திறனிலும், கற்பனை வளத்திலும், கருத்து ஆழ்த்திலும் சொல்லாட்சியிலும் அக்காலத்தில் சிறந்த புலவராக கருதப்படுவர் கம்பர் ஆவார். அவர் இயற்றிய இராமாயணம் தமிழிலக்கியத்துக்கு மணிமுடியாக அமைந்துள்ளது. காலத்தை வென்று என்றும் சீரிளமை குன்றாது ஒளிர்ந்து வருகின்றது.

கட்டடங்களும், சிற்பங்களும்

சோழர் காலத்தில் நகரங்கள் மிகப்பெரியவை, திட்டமிட்டு (Planned) அமைக்கப்பெற்றவை. நகரங்களில் குடிமக்கள் வாழும் இடங்கள் வேறாகவும், அங்காடித்தெருக்கள் வேறாகவும் நிறுவப்பட்டிருந்தன. இன்ன இடத்தில், இன்ன வகையான வீடுகள்தான் கட்டலாம் என்றும், இன்ன இடத்தில் இன்னவர்கள் இத்தனை மாடிகளுடன் வீடுகள் கட்டவேண்டும். கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்ட செங்கலைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று ஒழுங்கு முறைவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. அரசிடம் முறையான வரைபடத்துடன் கூடிய முன் அனுமதி (Building Plan Prior Approval) அரசு நகர அமைப்பு அலுவலரிடமிருந்து (Town Planing Officer) வாங்கித்தான் கட்டவேண்டும்.

தஞ்சை மாநகரமானது உள்ளாலை என்றும் புறப்பாடி என்றும் இரு பிரிவுகளாக அமைந்திருந்தது. உள்ளாலையில் மன்னர், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் அவர்களுக்குறிய அரண்மனை, மாளிகைகள் மற்றும் ஏனைய குடியிருப்புகளும் இருந்தது.

புறப்பாடியில் பேரங்காடிகள், சிற்றங்காடிகள் கடைத்தெருக்கள் இருந்தன. அரண்மனைப் பணியாளருக்கான சிலபகுதியில் புறப்பாடியில் ஒதுக்கப்பட்டிருந்தன. கதவுகளில் கூட, வீடுகளின் கதவு இலக்கமும் ஒன்றுவிடாமல் பொறிக்கப்பட்டிருந்தன.

சோழர்களுக்கு ஏற்பட்ட புகழையும் பெருமையையும், மன்னர்களின் சிவத்தொண்டையும், மற்ற சமயங்களின் வளர்ச்சிக்கும், அந்நாளைய சிற்பிகளின் கைத்திறனையும் எடுத்துக்காட்டி பெருமிதத்துடன் வானோங்கி நிற்கும் தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழீச்சரம் கோயில் அமைப்பும் தாங்கி நிற்கிறது என்றால் மிகையாகாது.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் சிவபெருமானின் உடல்கட்டும், திண்மையையும் காட்சியளிக்கின்றன. கங்கைகொண்ட சோழீச்சரத்தில் சிவசக்தியும் அன்பும், அருளும், மென்மையும், நெகிழ்ச்சியும் தளும்பி வழிகின்றன.

இவ்விரு கோயில் அமைப்புகளிலும் சோழரின் தனிப்பட்ட சிற்ப முறையானது உன்னத நிலையில் காணப்படுகின்றது. மற்றும் ஐராவசேசுரர் கோயிலும், தாராசுரம் திரிபுவனேசுவரர் கோயிலும் சோழர் காலச்சிற்ப முறையின் சிறந்த படைப்புகளாகும்.

கோயில்களில் கல்லாலும், வெண்கலத்தாலும் ஆக்கப்பட்ட சிலைகள் வைக்கப்பட்டன. வெண்கலச் சிலைகள் யாவற்றிலும் அழகிலும், அமைப்பிலும், தத்துவ விளக்கத்திலும் மிகச்சிறந்து விளங்குகிறது.

கடவுளர் படிமங்கள் கல்லிலும், செம்பிலும் மனிதத் தோற்றத்தில் வடிவவகைக்கப்பட்டுள்ளன. எனினும் உடல் அமைப்பிலும், முகப்பொலிவிலும் தெயவீகச்சாயல் விளங்குமாறு படைக்கப்பட்டிருப்பதை காணும்போது சோழர் காலத்தில் சிற்பிகளின் கலைப்பண்புகளையும், கைவன்யையும் போற்றிப்பாராட்ட வேண்டியவர்களாக உள்ளோம்.

சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் ஆகியவற்றின் படிமங்கள் கல்லிலும், வெண்கலத்திலும் வடிக்கப்பெற்றுப் பல கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றின் தோற்றத்தில் அமைதியும், அடக்கமும், ஆராஅன்பும், அருளும், பேரின்பச்செம்மாப்பும் பொலிவதைக்காணலாம். அவை சோழர்காலத்தின் கைத்திறனையும், நுண்ணறிவையும், ஆகமப்பயிற்சியையும் எடுத்துக்காட்டுகின்றன.

சோழர் காலத்தில் ஓவியக்கலையும் சிறப்புற்றறு விளங்கிற்று என்பதற்கு இலக்கியக்குறிப்புகளும் கோயிற் சுவரோவியங்களும் சான்று பகர்கின்றன.

உணவு வகைகள்

மக்களின் உணவு பலவகைப்பட்டதாக இருந்தது. உணவுப்பண்டங்களில் அரிசியே சிறப்பிடம் பெற்றிருந்தது. முல்லையரும்புபோலும், கொக்கு நகம்போலும், அறுத்த சங்குபோலும் சோறு வெண்மையாகவும், மெலிந்தும், நீண்டும் இருக்கும்.

பாற்சோறு, அக்கார அரிசில், புளிங்கறி பேன்ற பலவகையான சோறுகள் சமைக்கப்பட்டன. காய்கறிகளைப் பொறித்தும், துவட்டியும் தாளித்தும் கூட்டு வைத்தும் உண்பர். சோற்றுடன் கட்டித்தயிரும், ஆடைத்தயிரும் கலந்து கொள்வதுண்டு, அரிசி மட்டிலுமின்றிப் பயறு வகைகள், சோளம், திணை, அவரை, மலையரிசி, வரகு, கம்பு, எள், உளுந்து ஆகியனவும், பலாக்கனி ஆகியவை மக்கள் விரும்பி உண்டவை. அந்நாளைய மக்கள் கட்டுச்சோறு உண்ணும் வழக்கம் இருந்தது. பழச்சாறில் இஞ்சியை ஊறவைத்து உண்பதுண்டு

புல்லரிசி, அல்லக்காயரிசி, மூங்கில்அரிசி, கேழ்தோரை என்ற அரிசி வகைகள், காய், கிழங்கு, பழம், வள்ளிக்கிழங்கு, மலைவாழைப்பழம் அகியவற்றை முனிவர்கள், உண்டு வந்தார்கள் என்று அறியமுடிகிறது.

மருத்துவம்

மருத்துவம் நன்கு வளர்ச்சியுற்றிருந்து. நோயை மருந்தினாலும், அறுவையினாலும் (Operation) தணிப்பதற்கு அக்கால மருத்துவர்கள் பயிற்சி பெற்றிருந்தனர். குடிமக்களும், தவசிகளுக்கும் மருத்துவம் செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மருத்துவர்களுடைய பிழைப்பிற்க்கு நிலங்கள், குடியிருப்புகள், மருத்துவமனைகள் அளிக்கப்பட்டன. பல நகரங்கள், பெரிய கிராமங்கள் ஆகிய இடங்களில் நடைபெற்று வந்தன. அக்கால மருத்துவர்கள் பல அரிய மூலிகைகளின் பயனையும் அறிந்திருந்னர்.

சோழர்களுடைய காலம் தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலமாக எண்ணப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. குடி உயர்விலும், இறைப்பணிகளிலும் கண்ணுங்கருத்துமாக இருந்து சோழ மன்னர்கள் ஆக்க வேலைகள் பல ஆற்றியுள்ளனர். மொழி வளர்ச்சியும், இலக்கிய வளர்ச்சியும் என்றுமே இல்லதாபடி ஏற்றமுற்றிருந்தன. தமிழுக்குப் பொன்போல் புகழையும், பொலிவையும் தேடித்தந்த சோழர்களுடைய காலம்தான் என்றால் மிகையாகாது.

பக்தி இலக்கியம் வளர்த்த சோழர்கள்

சோழர் காலம் முன்புவரை தமிழகத்தில் கோயில்கள் சுண்ணாம்பு சாந்திலும், சுட்ட செங்கற்காலும் கட்டப்பட்டன சோழ மன்னர்கள் தலையெடுத்த காலத்திற்குப் பிறகுதான் கோயில்கள் யாவும் கற்றளிகளாக மாற்றப்பட்டன.

கோயில்களின் அனைத்துக் கட்டுமானங்களையும் கற்களைக் கொண்டு கட்டுவதுதான் கற்றளி ஆகும். அவ்வாறு கட்டப்பட்டதால்தான் அக்கோயில்கள் பல நூற்றாண்டுகளைக்கடந்து பழமைக்கும், வரலாற்றுக்கும் சான்றாக விளங்குகின்றன.

சோழர்காலத்தில் கோயில்கள் கட்டுவது என்பது இயக்கமாகவே நடந்து அரசர்களும், அரச குடும்பத்தினரும் கோயில் திருப்பணிகளில் தங்களை மனமுவந்து ஈடுபடுத்திக் கொண்டனர். அரசுப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்கு கோயில்களுக்கு பங்களிப்பு செய்தனர். குடிமக்களும் கோயில் காரியங்களில் ஈடுபட்டனர்.

ஒவ்வோர் ஊரிலும் சைவ கோயில்கள் கட்டப்பட்டன. ஒரு சில ஊரில் வைணவக்கோயில், சமணக் கோயில் கட்டப்பட்டன. இராசராசன் கட்டிய தஞ்சைப்பெரிய கோயிலும், இராசேந்திர சோழன்கட்டிய கங்க கொண்ட சோழீச்சரம் சோழர்காலக் கோவில் கட்டுமானங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

சோழர்களின் அவர்களுடைய ஆட்சிக்குப்பட்ட பகுதியில் ஆயிரக்கணக்கான கோயில்கள் கட்டப்பட்டன. சோழ மன்னர்கள் சைவ சமயத்தின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தனர்.

கோயில்களில் இடையறாது வழிபாடுகளும், பூசைகளும் தொடர்ந்து நிகழ வேண்டும் என்பதறகாக, ஏராளமான அளவு நிலம் தானமாக வழங்கப்பட்டது. கோயில்களில் இறைவனுக்கு அணிவிக்க நகைகள் தானமாக வழங்கப்பட்டது. கோயில் விழாக்களில் இசைக்கவும் நடனமாடவும் கலைத்தொழில் புரிவோர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு நூறு கலன் விளையக்கூடிய நிலம் அளிக்கப்பட்டது.

சோழர்கள் போரில் வென்ற இடங்களிலும், காவிரிக்கரையோரங்களிலும் எண்ணற்ற கோயில்களைக்கட்டினர். மன்னர்களும் குடிமக்களும் ஆலயம் கட்டுவதிலும், ஒரு சேர ஈடுபட்டுச் சமயத்தொண்டர்களாய் விளங்கினர், அதனால் நாடெல்லாம் பக்தி மணம் கமழ்ந்தது.

சோழ மன்னர்களின் இத்தகைய நிலைப்பாட்டினால் பக்தி இலக்கியம் பெருகியது. பக்தி இலக்கியங்களில் தமிழ் தழைத்தோங்கியது, பின்னர் வந்த வீரமா முனிவர் போன்ற வெளிநாட்டவரும் இதைப்பின்பற்றி இலக்கியம் படைத்தனர்.

சோழர் ஆட்சி அரசர் பட்டியல்

1. சிபிச்சக்கரவர்த்தி
2. முசுகுந்தன்
3. காத்தன்
4. தூங்கெயிலெறிந்த செம்பியன்
5. ஏழாரன் - மகனை முறை கண்டசோழன்
6. இளஞ்சேட் சென்னியின் தமையனார்.
7. முதற்கரிகாலன் - இளஞ்சேட் சென்னியின் மகன்.
8. சோழர் நலங்கிள்ளி
9. நெடுங்கிள்ளி
10. கிள்ளி வளவன்
11. கோப்பெருஞ்சோழன்
12. இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி
13. தித்தன்
14. போர்வைக் கோப்பெருநற்கிள்ளி
15. வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளி
16. முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி
17. இரண்டாம் கரிகாலன் (கல்லணை கட்டியவன்)
18. சோழன் நல் உருத்திரன்
19. நெடுமுடிக்கிள்ளி
20. இளங்கிள்ளி

களப்பிரர் ஆட்சி (300-600), பல்லவர் வம்சம் தனியே, பல்லவர் வரலாறு திரையன். (இளந்திரையன்) சோழர்கள் சிற்றரசர்களாக ஆங்காங்கே வாழ்ந்தனர்.

21. கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்

22. மணி முடிச்சோழன்

23. பாண்டியன் மருகன் சோழன்

24. சோழனார் உலகப்பெருமனார் (களப்பிரரை எதிர்க்கத் துணிதல்)

25. குமாரதுங்கன்

26. விஜலாயச்சோழன் கி.பி.846-871

27. முதல் ஆதித்த சோழன் கி.பி. 871-907

28. முதற் பாரந்தகன் கி.பி. 907-925

29. இராசாதித்தன் 925-940

30. அரிஞ்சயன் 940-956

31. சுந்தரசோழன் 956-970

32. மதுராந்தக உத்தமசோழன் 970-985

33. அருண்மொழித்தேவன் (இராசராசசோழன்) 985-1014)

34. இராசேந்திரசோழன் 1014-1044

35. இராதிராசன் 1044-1051

36. இரண்டாம் இராசேந்திரன்சோழன் 1051-1063

37. முதற்குலோத்துங்கன் 1063-1120

38. விக்கிரம சோழன் 1120 - 1135

39. இராசகேசரி குலோத்துங்கன் 1135-1150

40. பரகேசரி விக்கிரமசோழன் 1150-1163

41. இராசகேசரி இராசாதிராசன் 1163-1178

42. பரகேசரி குலோத்துங்கன் 1178-1218

43. இராசகேசரி இராசராசன் 1218-1256

44. பரகேசரி இராசேந்திரன் 1256-1279

பின் சோழ நாட்டை பாண்டியர்கள் கைப்பற்றினர்.

ஆங்காங்கே சோழ மன்னர்கள் சிற்றரசர்களாக வாழ்ந்தார்கள்.

45. 1) சைவ வீரபிரதாப சோழன் (மைசூர், பங்களூர்) 1301

46 2) வீரசம்பன் (காஞ்சி) 1314

47 3) சோழ நாராயணன் (திருவானக்கா) 1462

48 4) சோழ மகிபதி (திருவரங்கம்) 1530

49 5) உருத்திரதேவ சோழமகாராசன் (கும்பகோணம்) 1554

(இவையாவும் கல்வெட்டுக் குறிப்புக்கள்).

சேக்கிழார்

'இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்' என்று ஒரு பாடல் வரி உண்டு; இதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர், சேக்கிழார் பெருமான்.

சென்னை அருகே, குன்றத்தூரில் அவதரித்தவர் சேக்கிழார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் அருள்மொழித்தேவர். செய்யுள் இயற்றுவதில் பெரும் புலமை பெற்றிருந்தார். இதைக் கேள்விப்பட்ட அப்பகுதியின் குறுநில மன்னன் அநபாயச் சோழன், அவரை தன் முதல் அமைச்சராக நியமித்து, 'உத்தமச் சோழப்பல்லவராயன்' என்ற பட்டம் கொடுத்தார்.

சிவபக்தியில் சிறந்து விளங்கிய சேக்கிழார், கும்பகோணம் அருகிலுள்ள திருநாகேஸ்வரர் கோவிலைப் போன்று, தன் பிறந்த ஊரான குன்றத்தூரிலும் கோவில் கட்டி, அதற்கு, திருநாகேச்சரம் என்று பெயரிட்டு மகிழ்ந்தார்.

ஒரு சமயம், அரசவையில் புலவர் ஒருவர், சமணர்களின் காவியமான, 'சீவகசிந்தாமணி'யைப் படித்தார். அதைக் கேட்டு, அந்நூலின் சுவையைப் பாராட்டினார், மன்னர். உடனே சேக்கிழார், 'மன்னா..... இந்நூலில், காதலைத் தவிர வேறு என்ன இருக்கிறது.... இதனால், வாழ்க்கைக்கு என்ன பயன்.... இந்த நூலை படிப்பதன் மூலம், இம்மைக்கும், மறுமைக்கும் நன்மை கிடைக்குமா அதையேன் மானிடர்கள் படிக்க வேண்டும். சிவபெருமான், தன் அடியவர்களுடன் நடத்திய லீலைகளைக் கேட்டால், எப்பிறவிக்கும் பலனுண்டு..... என்றார். அதுகேட்ட மன்னன், 'அந்த அடியவர்களின் வரலாற்றை எங்களுக்கு சொல்லுங்கள்.... என்றார். சேக்கிழாரும் அவர்களின் வரலாற்றை சுவைபட எடுத்துரைத்தார். அந்த வரலாறுகளை நீங்களே காவியமாக வடியுங்கள்... எனச் சொன்ன சோழவேந்தன், அவருக்கு வேண்டிய பொருள் கொடுத்து, சிதம்பரத்துக்கு அனுப்பி வைத்தார்.

சிதம்பரம் சென்ற சேக்கிழார், நடராஜரிடம், எம்பெருமானே..... உன் அடியவர்களின் புகழ்பாடும் நூலை இயற்ற வந்துள்ளேன். இந்த நூலுக்கு தாங்களே அடியெடுத்து தர வேண்டும்... என வேண்டினார். அப்போது, உலகெலாம்... என்ற சொல், சேக்கிழார் காதில் விழ, அதையே முதல் சொல்லாகக் கொண்டு, உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்.... என்று ஆரம்பித்து, பெரிய புராணத்தை பாடி முடித்தார். அதில், **63 நாயன்மார்களின் வரலாறு** இடம் பிடித்தது.

இதையறிந்த சோழமன்னன், சிதம்பரம் வந்தார். நடராஜர் கோவிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில், சேக்கழார் தன் நூலை அரங்கேற்றம் செய்ய, 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. பின், சேக்கிழார் சிதம்பரத்திலேயே தங்கி நடராஜருக்கு சேவை செய்து, முக்தி பெற்றார். அவரது குருபூஜை வைகாசி பூசத்தன்று நடைபெறும்

மனிதனாகப் பிறந்தவன், இந்த உலகம் உள்ள வரை, தன் நினைவாக பூமியில் ஏதேனும் விட்டுச் செல்ல வேண்டும். அவ்வகையில் காலத்தால் அழியாத காவியமாக, **பெரியபுராணம்** இன்றும் விளங்குகிறது. சேக்கிழாரும் நம் மனதில் நிறைந்திருக்கிறார் !

மனித வாழ்வை மேம்படுத்திய மாட்டு வண்டிகள்

தமிழர் வாழ்வில் கால்நடைகள் வசிக்கும் பங்கு அளப்பரியது. பண்டைத்தமிழ்குடியினர் பலவகை வாழ்க்கை முறைகளை உடையவர்களாகப் பகுத்துப்பார்ப்பார்கள். வேளாண் குடியினர், ஆயர்குடியினர், வேட்டைக்குடியினர் என்ற மூவகை குடியினர் ஆவார்கள். இம்மூவகைக் குடியினருக்கும் விலங்கினைச் சார்ந்து வாழ்ந்த ஒரு தொடர்பு முறை இருப்பதை உணரலாம்.

வேளாண் குடியினர் விலங்குகளைப் பழக்கி பயிர்த்தொழிலில் ஈடுபடுத்தியவர்கள். ஆயர்குடியினர் விலங்குகளை மேய்த்து வாழ்பவர்கள். வேட்டைக்குடியினர் விலங்குகளை வேட்டையாடி உண்டு மகிழ்ந்தவர்கள்.

ஆக, பண்டைய தமிழர்கள் வாழ்வில் விலங்குகள் தவிர்க்க முடியாத பங்களிப்பாக இருந்திருக்கின்றன. இதில் மாடுகளின் பங்கு முதன்மையானது. மாடுகளில் பசுக்கள் பால் கறக்கவும், காளைகள் வண்டி இழுக்கவும் பயன்பட்டன. மாடுகள் இல்லாத தமிழர் வாழ்வை எண்ணிப்பார்ப்பது கடினம்.

இயந்திரவியல் நுட்பங்கள் அறியாத பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் விலங்குகளைப் பழக்கும் கலையை அறிந்திருந்தனர். வீடுகளில் மூக்கணாங்கயிறிட்டு வளர்க்கப்பட்ட மாடுகள் உழவுத்தொழிலுக்கும் வண்டி இழுக்கவும் பயன்பட்டன. மனித வாழ்க்கையில் சக்கரத்தின் கண்டுபிடிப்புதான் மிகவும் இன்றியமையாதது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

வெறும் சக்கரத்தால் ஆன வண்டிகளை மனிதர்களே இழுத்துப்பார்த்தனர். அவ்விடத்தில் வலிமை பொருந்திய விலங்கான மாடுகளை வண்டி இழுக்கப்பயன்படுத்தினால் பெருஞ்சுமைகளை எடுத்துவரலாம் என்று கண்டுபிடித்தனர். இளமை முதலே ஒரு காளைக் கன்றை வளர்த்துப்பழக்கி வண்டியில் பூட்டி இழுக்கச் செய்தமையால்தான், தமிழர்களின் உழவு வாழ்க்கை முன்னேற்றப்பாதையில் செல்லத் தொடங்கியது.

மாட்டுவண்டி செய்யும் கலையைத் தமிழர்கள முற்காலத்திலேயே அறிந்திருந்தனர். பல்வேறு மரப்பொருள்களும் கொஞ்சம் இரும்பும்தான் அவ்வண்டி செய்வதற்குத் தேவையான பொருள்கள். வேளாண் மக்கள் தத்தம் வீடுகளில் கால்நடைகளையும் மாட்டு வண்டிகளையும் வைத்திருந்தனர். எந்த வசதிகளும், வாய்ப்புமில்லாத கடந்த நூற்றாண்டு வரை, தமிழர்களின் போக்குவரத்து சாதனமாகப் பயன்பட்டது மாட்டு வண்டி.

“பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்”

- குறள் 475

பொருள் : மென்மையான மயிலிறகை ஏற்றியுள்ள வண்டியும், அம்மயிலிறகையே அளவுக்கு மிகுதியாக ஏற்றினால் அச்சு முறிந்து விடும்.

என்று வள்ளுவர் எழுதிய குறள், மாட்டுவண்டியைப் பற்றியது என்பதன் மூலம் அதன் தொன்மை விளங்கும்.

தச்சர்கள் மாட்டு வண்டி செய்யும் கலையை அறிந்தவர்களாக இருந்தனர். மாட்டுவண்டி செய்வதற்கென்றே உறுதியான மரங்களைப் பயன்படுத்தினர். சக்கரத்தில் பயன்படுத்தப்படும் வட்டவடிவமான விளிம்புப் பகுதிக்கு வட்டை என்று பெயர், அதை உறுதிமிக்க தேக்கு மரம் அல்லது தேக்குக்கு இணையான மரத்தில் செய்தனர். அதனால் மிகுதியான பாரத்தையும் வண்டியில் ஏற்றமுடியும். வட்டையிலிருந்து மையத்தில் உள்ள 'குடம்' என்னும் சக்கர நடுமையத்திற்கு வரும் கட்டைகள் 'ஆரக்கால்' எனப்படும்.

குடக்கட்டையில் துளையிடப்பட்டிருக்கும், இவ்வாறு இரண்டு சக்கரங்களுக்கும் இடையில் இருசுக்கட்டைதான் இணைப்பாகப் பயன்படும். இக்கட்டை உறுதியாகவும் இருக்க வேண்டும் குடத்துளையில் அச்சுக்கம்பியை நுழைத்து அச்சாணி பொருத்தியிருப்பார்கள்.

சக்கரத்தின் வெளி, வெளிம்புக்கு இரும்புத்தகட்டினால் ஆன பட்டையைக் கட்டுவார்கள். அந்த பட்டையும் அச்சும் அச்சாணியும் மட்டுமே, மாட்டு வண்டியின் இரும்புப் பொருள்கள், மற்றவை எல்லாம் மரப்பொருட்கள். இருசின்மேல் அமைந்திருக்கும் மரச்சட்டம் பாரச்சட்டம் எனப்படும். அது வண்டியின் முன்பின்னாக நீண்டிருக்கும். பாரச்சட்டத்தின் முனையில் நுகத்தடி கட்டப்படும், நுகத்தடியின் இருமுனைகளிலும் வண்டியை இழுக்க காளைகளைக் கொண்டுவந்து பூட்டாங்கயிற்றால் அக்காளைகளின் கழுத்தில் பூட்டுவார்கள்.

அவ்வாறு பூட்டுவதால் வண்டியை இழுக்கும்போது காளைகள் வண்டியைவிட்டு விலகாமல் இருக்கும். நுகத்தடியின் நடுவில் வண்டியை நிலை நிறுத்துவதற்குரிய ஏர்க்குச்சி (ஏர்க்கால்) இருக்கும். வண்டியின் மேல் முதுகில் கோணி எனப்படும் அள்ளைப்படல் போட்டுக்குட்டி (கட்டிக்) கொள்வார்கள். நகராமல் இருக்க ஏர்க்காலையும் நுகத்தடியையும் நடுப்பகுதியில் கயிற்றில் கட்டப்பட்டிருக்க இருமடங்கும் முளைக்குச்சிகள் பொருத்தப்பட்டிருக்கும். வண்டியை ஓட்டுபவர் வண்டியின் கழுத்து போன்ற பகுதியில் அமர்ந்து கொள்வார்.

பண்டைக்காலத்தில் பயணங்களுக்கும், வாணிபத்திற்கும் மாட்டுவண்டிகள்தான் பயன்படுத்தப்பட்டன. அவை மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் காரணிகளாக இருந்தன. வசதி படைத்தவர்கள் கூடு அமைந்துள்ள கூண்டுவண்டி, பெட்டிவண்டி, அரைவண்டி, (வில்வண்டி) பயன்படுத்தினார்கள்.

மாட்டுவண்டிக்கு அதிக அளவு பராமரிப்பு தேவையில்லை. அவ்வப்போது அச்சாணிக்கு இடுவதற்கென்று வண்டி மையை இடுவார்கள். உழவுத்தொழிலில் மீதான வைக்கோல்களும், தாவர அறுவைகளும் மாட்டுத் தீவனமாகின்றன.

மாடும், மாட்டு வண்டியும் பண்டைக்காலம் தொட்டு தமிழர் வாழ்வில் பிரிக்க முடியாத அங்கமாக இருந்திருக்கின்றன. இன்று அவ்வண்டிகள் அருகிப்போய்விட்டன என்பது கவலையளிக்கக்கூடிய

செய்தியாகும். நவீன தொழில் நுட்பத்தில் இலகுரக வாகனங்கள், கனரக வாகனங்கள் பயணத்திற்கும், பொருட்களை விரைவாக எடுத்துச் செல்வதற்கும் வந்துவிட்டபடியால், காலத்தின் மாற்றத்தால் மாடு, மாட்டுவண்டிகள் காணாமல் போய்க்கொண்டிருக்கிறது. வருத்தமான விஷயமானாலும் அதிவேகமாக சொல்லக்கூடிய உலகத்தில், வேறு வழியில்லை என்பதுதான் அர்த்தங்கலந்த உண்மையாகியுள்ளது.

முக்திக்கு வித்திட்டவர்கள்

சங்க காலத்தில் பண்டைத்தமிழரின் வீரம், காதல், மன்னரின் வெற்றிச்சிறப்பு, கொடைத்தன்மை மணவாழ்க்கை, செங்கோண்மை, அறம், பொருள் இன்பம் ஆகியவற்றைத் தேனினும் இனிய செஞ்சொற்களால் பெரும் புலவர்கள் பாடியிருக்கின்றனர்.

ஆயினும் ஆன்மாவைப்பற்றியோ, அது வீடு பேறு அடையும் வழி (முக்தி) பற்றியோ சங்கப்பாடல் எதுவும் வாய்திறக்கவே இல்லை.

இம்மையினும் (உலகம்) சிறந்த ஒன்று உண்டு என்று கூறிப்பக்தி மார்க்கத்தைப் புகுத்தி முக்திக்கு வித்திட்டவர்கள் சோழர் காலத்தில் வாழ்ந்த சமயச் சான்றோராவர். தனிமனிதனைப்பற்றி பாடும் சங்க இலக்கியப்போக்கு மாறி பக்தி மார்க்கம் தழைக்கலாயிற்று. அப்புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமாளிகைத்தேவர், திருமூலர், காரைக்கலம்மையார், சேக்கிழார் திருமங்கையாழ்வார், திருதக்கதேவர், கருவூர்த்தேவர் போன்றவர்கள்.

பொறுமையின் முக்கியத்துவம்

ஒரு ஊரில் பலகலைகளிலும் சிறந்த வீரன் வாழ்ந்து வந்தான். அவ்வீரனின் வீட்டில் எலித்தொல்லை அதிகமாயிருந்தது. குறிப்பாக ஒரு முரட்டு எலி, அந்த வீட்டில் இருந்த உணவுப் பொருட்களைத்திருடித் தின்றபடியே இருந்தது. வீட்டுப்பூனையால் அந்த எலியைப் பிடிக்கவே முடியவில்லை. அத்துடன் அந்த வீட்டுப்பூனையை அந்த எலி பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியது. ஆகவே அந்த வீரன் தனது அண்டை வீட்டில் இருந்த பூனைகளை கொண்டு வந்து முரட்டுஎலியைப் பிடிக்க முயற்சி செய்தான்.

இரண்டு பூனைகளும் முரட்டு எலியைத் துரத்தின. ஆனால், எலி ஆவேசமாகப் பாய்ந்து தாக்கி அந்த பூனைகளையும் காயப்படுத்தியது. முடிவில் தானே எலியைக் கொல்வது என முடிவுசெய்து பல வகைகளில் முயற்சி செய்தான். பலன் இல்லை, இறுதியாக ஒரு தடியை எடுத்துக் கொண்டுபோய்த் துரத்தினான்.

எலி அவனிடம் இருந்து தப்பி தப்பி ஓடியது முடிவில் குளியல்அறை பொந்துக்குள் ஒளிந்து கொண்டபோது அவன் குனிந்து அதனைத் தாக்க முயற்சித்தான். வேறொரு வழியாக எலி வெளியே வந்து அவன் மீது பாய்ந்து தாக்கியது. அதில் அவன் காயம் அடைந்தான். ஒரு முரட்டு எலியை நம்மால் பிடிக்க முடியவில்லை. நாமெல்லாம் ஒரு பெரிய வீரனா? என அவமானம் அடைந்தான்.

அவனது மன வேதனையை அறிந்த ஒரு நண்பர், அருகில் உள்ள மலையில் ஒரு கிழட்டு பூனை இருக்கிறது. அந்தப் பூனையால் எந்த எலியையும் பிடித்து விட முடியும்!. என ஆலோசன சொன்னார்.

அவனும் வேறு வழியில்லாமல் அந்தகிழட்டுப் பூனையைத் தேடிப்போய் உதவிகேட்டான். பூனையும் உதவி செய்வதாக ஒத்துக்கொண்டது. அதன்படி அந்த கிழட்டுப் பூனை அவன் வீட்டுக்கு வருகை தந்து வீட்டை ஆராய்ந்தது. பூனை இருப்பதை அறிந்த எலி, தயங்கித் தயங்கி வெளியே வந்தது. கிழட்டுப்பூனை தன் இடத்தை விட்டு நகரவேஇல்லை. எலி தைரியமாக அங்கும் இங்குமாக ஓடுவதும் வெண்ணெய்க் கட்டிகளைத் திருடித் தின்பதுமாகயிருந்தது.

மற்ற பூனைகளாவது எலியைத் துரத்த முயற்சியாவது செய்தன. இந்தக் கிழட்டுப் பூனையோ இருந்த இடத்தைவிட்டு அசையவே மறுக்கிறது என அவ்வீரன் அதன் மீது எரிச்சல் அடைந்தான். ஒரு நாள் முழுவதும் அந்தப்பூனை அசையாமல் அப்படியே இருந்தது.

மறுநாள் வழக்கம்போல் எலி வளையை விட்டு வெளியே வந்தது. சமையலறையில்போய் இனிப்பு உருண்டைகளை ஆசையாக தின்றுவிட்டு மெதுவாக திரும்பியது.

திடீரென பாய்ந்த கிழட்டு பூனை ஒரே அடியில் அந்த எலியைப் பிடித்து கடித்துகொன்று போட்டது. அப்பொழுது அந்த வீரன் அதை எதிர்பார்க்கவேயில்லை. இவ்வளவு முரட்டு எலியை ஒரே அடியில் அந்த கிழட்டுப்பூனை எப்படி வீழ்த்தியது என வியப்படைந்தான்.

இந்த செய்தியை அறிந்து கொண்ட மற்ற பூனைகளெல்லாம் ஒன்று கூடி எப்படி முரட்டு எலியைக்கொன்றாய்? இதில் என்ன சூட்சுமம்? எனக் கேட்டன.

“ஒரு சூட்சுமும் இல்லை பொறுமையாகக் காத்திருந்தேன். நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை எலி நன்றாக அறிந்திருந்தது. ஆகவே தன்னை தற்காத்துக்கொள்ள பழகியிருந்தது. நான் நிதானமாக, பொறுமையாக காத்துக்கிடந்தபோது, அது என்னை செயலற்றவன் என நினைத்துக் கொண்டது.

ஆயுதத்தைவிட பலமடங்கு வலிமையானது நிதானம். எதிரி நாம் செய்யப்போவதை ஊகிக்க முடிந்தால் அது நமது பலவீனம். வலிமையானவன் தனது சரியான சந்தர்ப்பத்துக்காக காத்துக்கொண்டுதான் இருப்பான்! என்றது கிழட்டுப்பூனை. அப்போது மற்றொரு பூனை கேட்டது, நான் பாய்ந்து தாக்குவதற்கு பல ஆணடுகள் பயிற்சி எடுத்திருக்கிறேன், என் நகங்கள கூர்மையானவை. ஆனாலும், ஏன் அந்த முரட்டு எலியை என்னால் கொல்ல முடியவில்லை?

உன் பலத்தைப் போலவே எலியும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பழகியிருக்கிறது. எல்லா எலிகளும் பூனைகளுக்கு பயந்தவை இல்லை. நான் ஒரு பூனை என்ற அகம்பாவம் உன்னிடம் மேலோங்கியிருக்கும். ஆகவே, ஒரு எலி திரும்பி தாக்க முயற்சிக்கிறது என்றவுடனே நீ பயப்படத் தொடங்கியிருப்பாய். ஆகவே உன்னைதுரத்தி அடித்து எலிகாயப்படுத்தியது.

ஆவேசமாக கூச்சலிடுபவர்கள், கோபம் கொள்கிறவர்கள், அவரசக்காரார்கள் தங்களின் பலவீனத்தை உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டுகிறார்கள். பலவான் தனது பேச்சிலும் செயலிலும் அமைதியாகவே இருப்பான், உலகம் அவனை கேலியும்கூட செய்யக்கூடும். ஆனால் தகுந்த நேரத்தில் அவன் தன் திறமையை நிரூபித்து வெற்றியடைவான் என்றது கிழட்டுப் பூனை.

மாபெரும் வீரர்களுக்கு மட்டுமில்லை, சாமானியர்களுக்கு இந்த கதை பொருந்தக்கூடியதே! மற்ற பூனைகளிடம் இல்லாத ஒரு தனித்திறமையும் கிழட்டுப் பூனையிடம் கிடையாது. ஆனால், அது தன் பலத்தை மட்டும் நம்பாமல், எதிரியின் பலவீனத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டது. வாய்ச்சவடால் விடுவதைவிட காரியம் செய்து முடிப்பது முக்கியம், என அனுபவம் அதற்கு உணர்த்தியிருந்தது. காத்திருப்பது முட்டாள்தனமில்லை என அந்தப்பூனை உணர்ந்திருந்தது.

வீட்டில், அலுவலகத்தில், பொது வெளியில் நாம் எதற்கும் அவசரம் காட்டுகிறோம். கோபத்தில் கத்தி கூப்பாடு போடுகிறோம். நம்மைவிட வலிமையானவர்கள் நம் முன்னே இருக்கிறார்கள் என அறியாமல் சவால் விடுகிறோம்.

அறிவை துணையாகக் கொண்டவர்கள் அளந்து பேசுவார்கள். எதையும் செயவதற்கு முன்பு நிதானமாக அணுகுவார்கள். கோபத்தால் ஒரு பயனும் இல்லை. வீண் விரோதமே எழும் என அறிந்திருப்பார்கள். ஆயிரம் வார்த்தைகளைக் கொட்டி இறைப்பதை விடவும், மவுனமாக நடந்து ஜெயித்துவிட முடியும் என உணர்ந்திருப்பார்கள்.

போர்கலைப் பயிலும் வீரர்களுக்கு உடல்மட்டுமில்லை, மனமும் பயிற்றுக்கப்பட வேண்டியது என கற்றுத் தருகிறார்கள். மனதின் உறுதிக்கும் வடிவமிருக்கிறது. அதைக் கையாளத் தெரியும் போதுதான் ஒருவன் முழு வீரனாகிறான் என்றே அறிவுறுத்துகிறார்கள்.

கிராமப்புறங்களில் பார்த்திருக்கிறோம், அற்பர்கள் தெருச்சண்டையிடுவார்கள். பத்துப்பேரை அடித்துப்போடும் வலிமை கொண்டவன் கைகட்டி பார்த்துக்கொண்டே இருப்பான்.

பைபிள் கதையில் வரும் பலம்பொருந்திய மிகப்பெரிய உருவம் கொண்ட கோலியாத்தை, தாவீது வென்றது வெறும் கவண் கல்லை வீசித்தான். தற்பெருமை கொண்டவனை வீழ்த்துவதற்கு ஒரு சிறுகல் போதும் என்பதன் அடையாளம் அது.

வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்களில் இல்லை. மனத்தெளிவும், நிதானமும், தகுந்த நேரத்தில் தன் திறமையை முழுமையாக வெளிப்படுத்துவதே ஆகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட இந்தக்கதை, எக்காலத்துக்கும் பொருத்தமான வழிகாட்டுதலே ஆகும்.

குல தெய்வ வழிபாடு

மனிதன் கொண்ட நம்பிக்கைகளுக்கு எல்லாம் ஒரு வடிகாலாக அவனது இறைவழி திகழ்கின்றன. பண்டைத்தமிழர்கள் தன் வாழும் நிலத்தின் தன்மை, அதன் தேவைக்கு ஏற்ப இறைவனை இயற்கையின் அடிப்படையில் உருவாக்கிவழிபட்டனர். மண், காற்று, ஆகாயம், நெருப்பு, மழை போன்ற பஞ்சபூதங்களை வழிபட்டனர். அச்சத்தின் காரணமாக வழிபாடு தோன்றிற்று. மேலும் மின்னல், இடி, மரம் போன்றவைகளையும் இறைவனாக நம்பினான்.

நம்பிக்கை

நம்பிக்கை மக்களால் உருவாக்கப்படுகின்றன. தனி மனித உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை மேலும் மேலும் வளர்க்கின்றன. அவை காலங்காலமாக தொடர்கின்றன. பெரும்பாலும் அச்ச உணர்வினாலேயே நம்பிக்கைகள் தோன்றுகின்றன. வாழ்வில் ஏற்படும் சில செயல்களுக்கு காரணம் கற்பிக்க முடியாது.

நம்பிக்கைகள் அசைக்க முடியாத உரம் பெறுகின்றன. நம் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கும் என்று தோன்றின என திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. தொடர்ந்து நிலைபெற்றுவிடுவதால் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி இந்த நம்பிக்கைகள் என்று கூறலாம்.

சிறுதெய்வங்கள்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்களுக்கிணங்க நம் நாட்டில் தெய்வ வணக்கமும், முன்னோர்களைச் சிறு தெய்வங்களாக வழிபட்டு வருவதும் ஆதிகாலந்தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

இறைவனின் அருளைப்பெற மனிதன் மேற்கொள்ளும் செயல்முறைகளே தெய்வ வழிபாடாகும். ஆதிகால மனிதன் இயற்கையின் செயல்களுக்கு பொருள் புரியாமல் பயத்தினால் வழிபடத் தொடங்கினான். பின் காலம் செல்லச் செல்ல இயற்கை சக்திகளுக்கும், பொருள்களுக்கும் மனித உருவம் அமைத்து வழிபடத் தொடங்கினான். இதுவே பின்னர் தெய்வ வழிபாடாகவும், சிறு தெய்வவழிபாடாகவும், சிறு தெய்வ வணக்கமாகவும் மலர்ந்தது.

கிராமங்கள் சூழப்பட்டிருக்கும் இடங்களில் அதிகமாகவே சிறு தெய்வ வழிபாடு மிகுந்து காணப்படுகிறது. உலகில் சிறு தெய்வவழிபாடு மிகுந்து காணப்படுகிறது. உலகில் சிறு தெய்வவழிபாடு இல்லாத நாடோ ஊரோ இல்லை என்று கூறலாம்.

குலதெய்வ வழிபாடும், வேதக்கடவுளோடு தோடர்பில்லாத ஊர்த்தெய்வ வழிபாடும் இச்சிறு தெய்வழிபாட்டில் அடங்கும். வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடு என நான்கு வகைப்படும் இவற்றின் முதல் மூன்றும் சிறு தெய்வ வழிபாட்டில் அடங்கும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குடும்பத் தெய்வம் உண்டு. வீட்டில் யாருக்காவது நோயுற்றால் குடும்பத் தெய்வத்திற்கு பூசை செய்வர். பிள்ளைகளுக்கு குடும்ப தெய்வத்தின் பெயரை வைப்பர். பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை இல்லாதது. சிறு தெய்வங்களுள் அய்யனாரும், அம்மனும், கருப்பணசாமி, முனிஸ்வரன் மக்களிடம் செல்வாக்கு பெற்ற தெய்வங்களாகும்.

சிறு தெய்வங்களின் பண்புகள்

சிறு தெய்வங்கள் என்பன வைதீக மரபையும், ஆகம விதிமுறைகளையும் சாராதவையாகும். அவற்றுள் பெரும்பாலும் கிராமக் கோவில்களை வசிப்பிடங்களாகக்கொண்டன. உயிர்ப்பலிகளால் திருப்தி பெறுபவை. பாடல்கள், மந்திரங்கள் கிடையாது. சாமியாடுவதும் வாக்குச்சொல்வதும் இயல்பு. விலங்குகளின் இரத்தம் மற்றும் புலால் ஆகியன இத்தெய்வங்களுக்கு படைக்கப்படுகின்றன. ஆண், பெண் தெய்வங்களுக்கு தனித்தனி கோயில்கள் உண்டு.

சிறு தெய்வங்களின் உருவ அமைப்பு

கோயில்களின் அமைப்பும் அங்குள்ள தெய்வங்களின் உருவ அமைப்பும் பல்வேறு வகையாக அமைந்திருக்கின்றன. எண்ணெய் பூசப்பட்ட சிறுகற்கள், சிறிய சதுரமான மண்பீடங்கள், மண்ணால் செய்யப்பட்ட கோபுர வடிவங்கள், கோபுர வடிவங்களில் முழு உருவச்சிலைகள், கருங்கல்லில் முழுஉருவம் செதுக்கப்பட்டு எண்ணெய் பூசப்பட்டிருத்தல், செம்மண் ஓடால் ஆன சிலைகள், ஆலமரம், வேப்பமரம், பனைமரம், இலந்தைமரம், பூவரசு மரம் முதலிய மரங்களில் சந்தனம், குங்குமம் பூசப்பட்ட நிலையில் தெய்வமாக வணங்கப்படுதல்.

சிறு தெய்வங்கள் ஊர்தெய்வம், இனதெய்வம், குலதெய்வம், இல்லுறைத்தெய்வம், என பாகுபாடு செய்யப்பட்டு மக்களால் வழிபடப்பெறுகின்றது.

சமுதாயப் பண்பாடு

சிறு தெய்வவழிபாடு நாட்டுப்புற மக்களின் உயிர்நாடியாக விளங்கும் பண்பாட்டை வளர்க்கும் சாதனமாக விளங்குகிறது.

பண்டைய மக்கள் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு நன்மைகளைப் பெறவும், மகிழ்ச்சியாக இருக்கவும் விரும்பினர். மழைபெய்யவும், பயிர் வளரவும், நோய்நொடிகள்வராமல் இருக்கவும், கடல்கோள், புயல்போன்ற இயற்கை விபத்துக்கள் நேராமல் இருக்கவும் வழிபாட்டினை நடத்தினர். இவற்றின் தொடர்ச்சியாகச் சிறு தெய்வவழிபாடு சமுதாய பண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்தது.

பண்பாடு என்பது மரபின் அடிப்படையில் உருவானது ஆகும். மரபு என்பது எழுதப்படாத சட்டம் சமூக ஒருமைப்பாட்டால் உருவாகும். இம்மரபுகள் சமுதாய நலன்கருதி ஏற்பட்டவை. பண்பாடு என்பது பண்படுதல், பண்படுத்தல் என்று பொருள்படும் ஒரு சமுதாயத்தில் உள்ள வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடாகும்.

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது பண்பாடே, கலைகளிலும், சடங்குகளிலும் பண்பாடு காணப்படும். குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும் சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் சிந்தனை வெளிப்பாடும் பண்பாடாகும். பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது.

சமுதாயம் என்பதற்கு கூட்டம் மக்கள் தொகுதி, இனம், சபை, சங்கம், கூட்டம் பொதுவான மக்களின் திரள் என அகராதிகள் பொருள் கூறுகின்றன.

பெயரிடுதல்

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு குலதெய்வம் இருக்கும். இத்தெய்வங்களை வழிபடுதல் தங்கள் குடும்பங்களையும் காப்பதோடு ஊரையும் காக்கவேண்டும் என உயர்ந்த எண்ணத்தோடு வழிபடுகின்றனர்.

பொதுவாக மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு குலதெய்வங்களின் பெயர்கள், முன்னோர்களின் பெயர்களைச் சூட்டி மகிழ்வது வழக்கமாக உள்ளது. இப்படிப் பெயரிடுவது அன்பின் நெருக்கத்தையும், அவர்கள் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக அமைகின்றது.

ஓர் இனத்தில் பிறந்து மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்கள் தம்முடைய உயரிய பண்பாலும் அரும்பெரும் செயலாலும், அறம் நிறைந்த வாழ்க்கையாலும் அவர்கள் இறந்த பின்னர் குலதெய்வமாக்கப்பட்டு வழிபடப்படுன்றனர். அவர்களின் பெயர்களை தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டுவதன் மூலம் அவர்கள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையும், அன்பும் வெளிப்படுகிறது.

படையல்

மக்கள் அனைவரும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இறைவனை வணங்குகின்றனர். நம்மை மீறிய சக்தி ஒன்று உண்டெனவும், அது இறை என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. அசைக்க முடியாத நம்பிக்கை மக்களிடம் நிலவுகிறது. இதனால் அவர்கள் தாம் வணங்கும் தெய்வங்களை முழுவதும் உணர்வுப் பூர்வமாகவே வழிபடுகின்றனர்.

மக்கள் தம்மை வாழ வைக்கும் தெய்வத்திற்கு நன்றி செலுத்தும்விதமாகவும், வாழ்நாள் முழுவதும் உணவு, செல்வம் போன்றவைத் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், பிணி நீங்கவும், வாழ்வுக்கு ஆதாரமான வேளாண்மை சிறப்புற வேண்டியும் விளை பொருட்களையும், உணவுப் பொருட்களையும் தெய்வத்துக்குப் படைத்து, படையல் இடும் பழக்கத்தை ஏற்படுத்தினர் எனலாம்.

சமய வேறுபாடின்றி அனைத்து வழிபாட்டு முறைகளிலும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகவே படையல் படைக்கப்படுகிறது.

சிறுதெய்வமாக இருந்தாலும், மக்களின் வாழ்க்கை முறையோடு இயைந்துவிட்ட காரணத்தால் எந்த சுப நிகழ்ச்சிகள் நடந்தாலும், இனிதே நடைபெற வேண்டியும், மேலும் வளமான வாழ்க்கை பெருகவும், படையலிட்டு வணங்கும் முறையே மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

கிராமங்களின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் கோயில் காடுகள் பெரும்பங்கு வகித்துள்ளன. மனித இனம் தோன்றி வளர்ந்து வேளாண்மைச் சமூகமாகக் குடியிருப்பதற்கு முன் வேட்டையாடி உணவு சேகரிக்கும் குழுக்களாக இருந்த காலத்திலேயே மரங்களை வணங்க ஆரம்பித்தனர். மக்கள் வேளாண்மைச் சமூகமாக மாறிய பின் கோட்டைகள் அடைத்து, அரசோ சில காலங்களில் கோட்டையைச்சுற்றி நீர் அரணும், (அகழி) வன அரணும் (காடுகள்) அமைத்து எதிரிகளிடமிருந்து பாதுகாப்புத் தேடியதுடன் சுற்றுச்சூழலையும் பாதுகாத்துள்ளனர். வன அரணில் (காடுகள்) எல்லை தெய்வங்கள், (காவல்) அதனையடுத்து கோயில் காடுகளும் இருந்துள்ளன.

கோயில் காடுகளில் தாவரங்கள், மரங்கள் பெரும்பாலும் மண்ணுக்குரியதாகவும், வறட்சி தாங்கி நிற்கக் கூடியதாகவும் இருந்து வந்துள்ளன. பூமத்திய ரேகையை ஒட்டியப் பகுதிகளில் அடர்த்தியான காடுகள் இருந்தாலும் அவை வெப்பபிரதேசத்திற்கு உரியதாகவும், அதிக மழைப்பொழிவு இல்லையென்றாலும் நீண்ட காலத்திற்குத் தாக்குப்பிடித்து உயிர் வாழக்கூடிய தாவரமாகவும் இருந்து வந்துள்ளன. மேய்ச்சல் வெளிகளும் ஊருக்குப் பொதுவாக இருந்துள்ளன.

ஒவ்வொரு ஊரினுள் அந்த மண்ணுக்குரிய மரங்கள் வளமாக வரும். குறிப்பிட்ட ஒரு மரம் அதிகமாக இருந்த காரணத்தினால் அந்த ஊர் அந்த மரத்தின் பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம் என நம்புவதற்கு இடமுண்டு. கடம்பவனம் (மதுரை) ஆலங்குடி, பனங்குடி, போன்ற ஊர்ப்பெயர்கள் குறிப்பிட்ட மரங்கள் அதிகமாக அடர்ந்து வளர்ந்திருந்த காரணத்தினால் எற்பட்டிருக்கலாம் என்பதற்கான வரலாறுகள் கூறப்படுகின்றன.

தலமரங்கள்

ஒவ்வொரு கோயிலுக்கும் அல்லது ஒவ்வொரு குறிப்பிட்ட ஊருக்கும் அதற்குரிய அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. வன்னிமரம், விளாமரம், வேம்பு, அரசு, மா, கூகை போன்ற மரங்கள் ஒரு குறிப்பிட்ட கோயிலுக்கு உரியதால், குறிப்பிட்ட தலத்திற்கு உரியதாக இருந்துள்ளது. அந்த மரத்தையொட்டி அல்லது அதைச்சுற்றி புனித இடமாகக் கருதி அந்த மரத்தையும், கோயிலையும் இணைத்து மக்கள் வணங்கி வந்துள்ளனர். கோயிலுக்கு உரிய மரங்களில் இருந்து தழைகள் பறிக்கத்தடை செய்து அதைப் புனிதமாக்கியதாலும் மேலும் அந்த மரங்களைக் காக்கவும், அதன் மூலம் சுற்றுச் சூழலை காக்கவும் ஆவண செய்துள்ளனர்.

ஆறு மற்றும் குளங்களின் கரைகளில் ஆலமரம், அரசமரம், வேப்பமரம் போன்ற பெரிய மரங்கள் இருப்பதுண்டு. அவற்றிலிருந்து கிளைகளை வெட்டாமல் பாதுகாப்பதற்காக அவற்றில் கெட்ட ஆவிகள்,

பேய்கள் அல்லது ஏதாவது ஒரு சாமி குடியிருப்பதாக பரம்பரை கதைகள் அல்லது நம்பிக்கைகளை உலவ விடுவதின் மூலம் கிராமப்புறங்களில் அம்மரங்களை காத்துள்ளனர். இம்மரங்கள் நீர் நிலைகளின் கரையில் இருப்பதாலும், ஊர்மக்கள் அவற்றிலிருந்து கால்நடைகளின் தீவனங்களுக்காக இலை, தழைகள் வெட்டாமல் காக்கப்படுவதாலும், பெரிய அளவில் வளர்ந்து பல தலைமுறைகளுக்கு நிழல் தருவதுடன் சுற்றுச் சூழலை பாதுகாப்பதாகவும் இருந்தள்ளன. அதே போல் அரசமரமும், வேப்பமரமும் நிழல் தரும் மரங்களாகவும், அதிகப் பிராணவாயு (ஆக்ஸிஜன்) வழங்கும் மரங்களாகவும் இருப்பதால் இவ்விரு மரங்களையும் இணைத்து வைத்திடுவர். இவ்வாறு இணைந்திருக்கும் இடங்களைப் புனிதத் தலங்களாக மாற்றி, நம்பிக்கை அடிப்படையில் சுற்றுச் சூழலை பாதுகாத்துள்ளனர்.

மேய்ச்சல் வெளிகள்

மரங்கள் இல்லாத கோயில் காடு, உள்ள இடங்களில் புற்கள் வளர்ந்திருந்தாலும் அவ்விடங்களை ஊர் மாடுக்களுக்காக மேய்ச்சல் வெளியாக மாற்றி கோயில்களுக்கென நேர்ந்து விடப்பட்டுள்ள ஆடு, மாடுகள் அவற்றின் விருப்பம்போல, மேய்ந்து திரிவதற்காக ஒதுக்கி வைத்துள்ளனர். அதனால் இக்காடுகளில் ஆடு, மாடுகள் மிதித்து தரையை இலக்கி தங்களது சாணங்களை அவ்விடத்தில் போடுவதால் எக்காலத்திலும் புற்கள், தாவரங்கள் செழித்து வளர்ந்து கரையைப் பசுமையாக்கும் நிலையில் வைத்திருந்தனர்.

இப்பொழுது காடும் இல்லை, ஆடு, மாடுகளும் அதிகமாகக் காணவில்லை, அப்படியே இருந்தாலும் அவரவர்கள் நிலத்திலேயே இருந்து வருகின்றன.

கோயில்களில் பிற பண்பாடுகள்

கோயில்களில் கல்வெட்டுக்கள், ஓலை முறிகள், பட்டயங்கள் ஆகியவைகள் பாதுகாத்ததன் மூலம் பிற்காலத்தில் வரலாறு உருவாக்க உதவியுள்ளனர். அத்துடன் ஊர் நடுவே கோயில்கள் இருப்பதால் போர்க்காலங்களிலும், இயற்கை சீற்றங்களிலும் மக்கள் பாதுகாப்பாக இருக்கவும், குழந்தைகள், பெண்கள் வயதானவர்கள் பாதுகாப்பாக வைக்கும் இடங்களாகவும், செல்வ வளங்களை பாதுகாக்கும் இடமாகவும், உணவு தானியங்களைச் சேர்த்து வைக்கும் இடங்களாகவும் பராமரித்து வந்துள்ளனர்.

தேவையான குடிநீரைச் சேமித்து வைக்கும் குளங்களும் ஊருணிகளும், அதன்மூலம் ஊரில் நிலத்தடி நீர் வற்றாமல் இருக்கும் முறைகளிலும் புனிதக்குளங்கள் கோயிலுக்கு உரிய இடங்களில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. இதன் எச்சங்கள் இன்றும் கோயில்களை சுற்றிக் காணலாம்.

கோயில் காடுகள் என்ற பெயரில் மக்கள் இயற்கையை அழிப்பதிலிருந்து பாதுகாப்பதுடன் மரங்கள் நம்பிக்கைகளின் அடிப்படையில் செழித்து வளரவும், அதன் மூலம் இயற்கை வளங்களும், சுற்றுச் சூழலில் நிலைத்திருக்கவும், வழிவகை செய்துள்ளனர்.

இயற்கையின் சுழற்சி, இயற்கை பாதுகாக்கப்படுவதின் மூலம் வருங்கால சந்ததியினரின் வாழ்விற்கு நல்ல வழிகளை ஏற்படுத்த முயற்சிப்போம்.

தொண்டைமான் (பல்லவர்)

சோழர்களின் ஒரு கிளையினரே பல்லவர்கள். சோழமன்னன் மணிபல்லவத்திற்கு (சுமத்ரா) சென்றபோது, அங்கு பீலிவளை என்ற வளவணார் மகளை மணக்கிறான். அவர்களுக்குப் பிறந்த புதல்வன் இளந்திரையன். இவன்தான் தமிழகத்தில் பல்லவபேரரசை நிறுவக் காரணமாயிருந்தான். தனது தாய் இறக்கும் தருவாயில், சோழமன்னனே உனது தந்தை என மகனிடம் கூறினாள், மேலும் தனது தந்தை, தாயிடம் கொடுத்த சோழப்பேழையும் தந்துவிட்டு இறக்கிறாள். அந்த சோழ மன்னன் நெடுமுடிக்கிள்ளி (கி.பி. மூனறாம் நூற்றாண்டு)

தாய் இறந்த பிறகு தாயின் அணிகலன்களும், தந்தையின் சோழர்மரபிற்குரிய இலச்சினையான ராஜமுத்திரையும் கொண்ட மோதிரத்தையும் அணிந்து கொண்டு தமிழகம் நோக்கி மரக்காலத்தில் வருகிறான். தமிழகத்துக்கு அருகில் கடலின் சீற்றத்தால் கப்பல் மூழ்கும் தருவாயில் பேழைப்பெட்டியையும், சில முக்கியப்பொருள்களையும் எடுத்துக்கொண்டு சில மரக்கட்டைகளை இணைத்து கடலில் நீந்துகிறான். புயலும், மழையும் ஓய்ந்தபின் தொடர்ந்து நீந்திக் கரை சேர்ந்தபின் நினைவிழந்தான்.

கடலில் எழுந்த பெரும் புயற்காற்று பூம்புகார் நகரை பெருமளவு சிதைத்து தன்னுள் இழுத்துக்கொண்டது கடல். கரையோரமாக நடந்துவந்த முதியவர் ஒருவர் நெஞ்சத்தின் அலைகள்! தமிழகத்திற்கே இது ஒரு சோதனைக்காலம் போலும். தென்தமிழகத்தில் கண்ணகியின் சினத்தினால் மதுரை நகரே தீக்கிரையாகிவிட்டது. இங்குச் சோழ நாட்டில் காவிரிப் பூம்பட்டினத்தை கடல் கொண்டுவிட்டதே! இனித் தமிழகம் என்னவாகும்? எனத்தனக்குள் புலம்பியவாறே கடற்கறையில் நடந்து வந்த முதியவர் மயங்கிக்கிடந்த இளந்திரையனைக் கண்டார். நாக்கில் வறட்சியால் பேச இயலாத நிலையிலிருந்த இளந்திரையனுக்கு தன்னிடமிருந்த தண்ணீரை புகட்டினார். நீர் அருந்தியதும் தெளிவுபெற்று களைப்பு நீங்கியவானாக எழுந்து அமர்ந்து மெல்லிய குரலில் இது சோழ நாடுதானே? நான் இப்போது எங்கு இருக்கிறேன் என வினவினான். நான் உடனே அரண்மனைக்குச் சென்று சோழ மன்னனைச் சந்திக்க வேண்டுமென்று கூறினான்.

இளந்திரையனின் கையில் உள்ள சோழர் இலச்சினை மோதிரத்தையும், பேழையைத்திறந்து பார்த்தபோது பொன்னால் செய்த அணிகலன்களையும், சோழரின் அரசமுத்திரையையும் பார்த்து, இவன் சோழ வம்சத்தைச் சார்ந்த இராசபரம்பரை என்று யூகித்துக்கொண்டார்.

அரண்மனைக்கு உடனடியாக செல்லவேண்டுமென்று இளந்திரையன் கூறியது, அரண்மனையா? எங்கே இருக்கிறது? ஆழிப்புயலால் (சுனாமி) புகார் நகரமே அழிவுற்றது. இந்த கடற்கோளால் ஒருசிலர் மட்டும் உயிர் பிழைத்தனர் என்று கூறினார். ஒரு வாரமாக, நீ மயங்கிய நிலையில் இருந்தாய் மன்னரும், மகாராணியும் எங்கிருக்கிறார்கள் என யாருக்கும் தெரியாது என்றார். நீங்கள் யார்? என இளந்திரையன், முதியவரிடம் கேட்டபோது சோழநாடு செழிப்பாக இருந்த அண்மைக்காலம் வரை நான் அமைச்சராக இருந்தேன். இப்போது நான் அமைச்சர்தான் நாடும், அரண்மனையும் கடற்கோளுக்கு இரையான பின்னர் எந்த நாட்டிற்கு அமைச்சரென்று சொல்லிக் கொள்வது?

ஐயா, தாங்கள் அமைச்சரென்பது உண்மையானால் சோழமன்னர் நெடுங்கிள்ளி மணிபல்லவத்திற்கு வந்து தங்கியிருந்ததை அறிவீர்கள் என்று நம்புகிறேன். நான் மணிபல்லவத்திலிருந்து வருகின்றேன். அங்கு வளவணார் மகள் நாகர் கன்னிகை பீலிவளையின் மகன் நான். என் தாய் இறந்தவுடன் தந்தையைக் காண்பதற்கு என் பாட்டனாருடன் சோழநாட்டிற்கு வந்தேன். கடற்புயலால் கப்பல் கவிழ்ந்தது, என் பாட்டனார் என்ன ஆனாரோ?

என்ன, என்ன, வளவணார் மகளுடைய குமாரனா? உன் தோற்றத்தையும் சாயலையும் பார்த்தவுடன் சோழ மன்னரின் சாயல் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டும், முத்திரை மோதிரத்தைப் பார்த்தபோது யூகித்தேன். தம்பி இனி எதுவும் கூற வேண்டாம். அரசகுலத்தில் வாரிசாக நீ வந்துவிட்டாய்.

ஊழித்தீயால் உலகம் அழிந்தாலும், பிரளய வெள்ளத்தால் பேருலகம் அழிந்தாலும் சோழர்குலம் நிலைத்து வளரும் எனக்கூறுவது எவ்வளவு உண்மை? நீ பட்டத்துக்குரிய இளவரசே! இதில் ஐயமில்லை நம் அரசர் எங்கேயாவது இருந்தால் நிச்சயம் பூம்புகாருக்கு வருவார். அப்போது நாம் மீண்டும் சோழப்பேரரசை நிறுவலாம்.

இப்போது இங்கும் பேரழிவு ஏற்பட்டு உள்ளதால், சீரமைக்க இயலாது. சற்று வடக்கு நோக்கிச் சென்று புதிய அரசை உருவாக்கி நிலைநிறுத்தி விடலாம் என்றார் அமைச்சர்.

இளவரசே, தாங்கள் ஆதொண்டைக் கொடியால் காப்பாற்றப்பட்டதால், தொண்டைமான் இளந்திரையன் என அழைக்கலாம் என்றார். அந்த வம்சத்தில் வந்தவர்கள் பின்னால் தொண்டைமான் பட்டம் கொண்டு தமிழக கள்ளர் பிரிவில் ஒரு பிரிவாகினர்.

மணிபல்லவத் தீவிலிருந்து வந்தாலும், சூரியவம்சமான சோழர் குலத்தின் 'பகலவன்' குலத்தைச் சேர்ந்தவன் என்பதாலும் இளந்திரையன் உருவாக்கிய அரசு, பல்லவர் அரசு என அழைத்தனர்.

இறைவனின் கருணையும், காலநிலையும் சரியாக அமைந்ததால், அந்தப் பல்லவ அரசு பேரரசாக வளர்ச்சியுற்றது.

பாரதத்தின் தலைசிறந்த நகரத்தில் ஒன்றான காஞ்சிபுரம் உருவாக்கப்பட்டு பல்லப்பேரரசுக்கு தலைநகராகியது. பல்லவ மன்னர்களின் வம்சத்தினர் தொண்டை நாட்டிலும், நடு நாட்டிலும் சிற்றரசுகளாக இருந்து, பின் பேரரசர்களாக உயர்ந்தனர்.

குடவரைக் கோயில்கள் மகாபலிபுரம், கோயில்ளில் சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் பல்லவர் காலத்தில் சிறப்புப் பெற்றன.

புதுக்கோட்டை தொண்டைமான் அரசர்கள்

'தோட்டி முதல் தொண்டைமான் வரையில்' என்று வழங்குகிற பழமொழி. மூவேந்தருக்குப் பின் தொண்டைமானே தமிழ்நாட்டு மக்களில் தலைவர் என்பதனைப் புலப்படுத்த நிற்கும் தொண்டை மண்டலமாகிய பல்லவ நாட்டினின்றும் குடியேறிய பல்லவராயர் அல்லது தொண்டைமான் என்னும் பட்டமுடைய அரசர் பலர். குளத்தூர், அறந்தாங்கி முதலிய இடங்களில் பல நூற்றாண்டுகளின் முன்பே அரசாட்சி செய்து வந்தார்கள். அம்பு கோவிலில் தொண்டைமான் வழியினர் ஆட்சி செய்த பின் 17-ஆம் நூற்றாண்டிலிருந்து புதுக்கோட்டை அரசராயினர். இவர்கள் ஆட்சிபுரிந்த நாடுகள் இவைகள் என்பதாகும்

'ஆலங் குடிநா டமரா பதிநாடு
கோலங் கடுவன் குடிநாடு - மேலான
செங்காட்டு நாடு திருப்போரை யூர்நாடு
மங்காத வல்ல வளநாட - கொங்காரும்
மெய்யமலை நாடு மேவுசந்த்ர ரேகை நா
டையன் கொடுங்குன் றணிநாடு - செய்யசீருக்
கோளக் குடிநாடு கோனா டெனப் புரந்தே
ஆளப் பிறந்த வசர்கோன்'

என்பது விளக்கும்.

கீழ்க்கண்ட அரசர்கள் புதுக்கோட்டையை தலைநகரமாக ஆக்கி ஆட்சி செய்தார்கள்.

1) இரகுநாதராய தொண்டைமான் (1686-1730)

2) விஜயரகுநாதராய தொண்டைமான் (1730-1769)

3) இராயரகுநாத தொண்டைமான் (1769-1789)

4) இராஜா விஜயரகுநாத தொண்டைமான் பகதூர் (1789-1807)

5) இராஜா விஜயரகுநாதராய தொண்டைமான் பகதூர் (1807-1825)

6) ஹிஸ் எக்சலென்சி இராஜா ரகுநாத தொண்டைமான் பகதூர் (1825-1839)

இவர் மிகச்சிறந்த நீதிமன்னர். பல தர்மங்களை செய்தவர், சீரிய அறத்தொண்டு ஆற்றியவர். 1830-ல் ஆங்கிலேய அரசாங்கத்தாரால் 'ஹிஸ் எக்சலென்சி' என்னும் பட்டம் அளிக்கப் பெற்றனர்.

7) ஹிஸ் ஹைனெஸ் ஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜா இராமச்சந்திர தொண்டைமான் பகதூர் (1839-1886)

1866-ல் நீதிமன்றங்கள் இவரால் திருத்தி அமைக்கப்பட்டன.

அவை :

1. மேல்முறையீட்டு நீதிமன்றம் (Appeal Court)
2. மூன்று நீதிபதிகள் உள்ள செஷன்ஸ் நீதிமன்றம்
3. ஸ்மால் காஸ் கோர்ட் (சிறு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம்)
4. ஐந்து முன்சீப்பு கோர்ட்டுகள்

சிறந்த நிர்வாகத்திற்காக இலாகாக்கள் பிரிக்கப்பட்டன.

1. வரிவசூல் (வருவாய்)

    1) கிராமம் 2) வட்டம்

2. காவல் துறை
3. சிறைச்சாலைத்துறை
4. தபால்துறை
5. பொதுப்பணித்துறை
6. கலால்துறை
7. வனத்துறை
8. நீதிமன்றங்கள்
9. நகரமைப்புத்துறை

8) ஹிஸ் ஹைனெஸ் ஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பகதூர் ஜி.சி.ஐ.இ. (1886 முதல் 1921 வரை)

இம்மன்னன், 1902-இல் 30 உறுப்பினர்கள் அடங்கிய மக்கள் பிரதிநிதி சபை அமைக்கப்பட்டது. மக்களுடைய குறைகளையெல்லாம் தீர்த்து வைப்பது இச்சபை பெரிதும் உதவியாக இருந்து வந்தது. 1907-இல் இருந்து இதில் 18 உறுப்பினர்கள் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மன்னர் காலத்தில் புதுக்கோட்டை நாடு பலவழியிலும் சீர்திருத்தம் செய்து மேல்நிலைக்கு கொண்டுவரப்பட்டது. 1911 டிசம்பர் 12-இல் தில்லி மாநகரில் நடந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பெருமகன் முடிசூட்டு விழாவுக்கு இவ்வரசரும் அழைக்கப்பட்டார்.

1913-இல் இவர் பட்டத்திற்கு வந்த இருபத்தைந்தாவது ஆண்டுவிழா புதுக்கோட்டையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது இவருக்கு ஜி.சி.ஐ.இ. (கிராண்ட் கமாண்டர் ஆப் தி இண்டியன் எம்பையர்) என்னும் பட்டம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் அளிக்கப்பட்டது.

இவ்வரசர் தமது சமஸ்தானத்திற்குச் செய்த சிறப்புடைய நன்மைகளாவன :

1. புதுக்கோட்டைச் சீமையில் வேளாண்மையை வளப்படுத்தற் பொருட்டுக் கால்நடை மருத்துவ சாலையும், கால்நடைக் காட்சியும் ஏற்படுத்தியதுடன், விதையும் உழவுமாடுதல் வாங்குவதற்குக் குடியானவர்களுக்கு, வட்டியின்றிப் பணம் கொடுத்துதவ ஏற்பாடு செய்தார்.

2. பல சாலைகளையும், வெள்ளாற்றுப் பாலத்தையும் உண்டாக்கி வாணிகம் பெருகும்படி செய்தார்.

3. பத்திரங்களைப் பதிவு செய்வதற்குத் தொலைவிலுள்ளோர் புதுக்கோட்டைக்கு வரும் வருத்தம் நீங்கும்படி, காப்புக்களரிகள் (ரிஜிஸ்தர் ஆபீஸ்கள்) பல இடங்களில் ஏற்படுத்தினார்.

4. புதுக்கோட்டை நகரத்தில் ஒரு பெரிய ஆங்கில மருத்துவ, சாலையும் மற்றும் பல வைத்திய சாலைகளும் ஏற்படுத்தினார்.

5. நகரத்தில் வீதிதோறும் குழாய்கள் வைத்துப் புதுக்குளத்திலிருந்து நல்ல தண்ணீர் வரும்படி செய்தார்.

6. குழந்தைகள் குறைவான கட்டணத்தில் படிக்கும்படி ஊர்தோறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் அமைத்தார். (அப்பொழுது சமஸ்தானத்தில் 600 பள்ளிக்கூடங்கள் இருந்தன).

7. தொழிற்சாலை, விவசாயசாலை முதலின ஏற்படுத்தினார்.

8. எளியவர்கள் அதிக வட்டிக்குப் பணம் வாங்காது, தொழில் செய்து வாழ்வதற்கு உதவியாகக் கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தினார். (அப்பொழுது இச்சங்கங்கள் சுமார் 100 வரை நடைபெற்று வந்தன).

9. நீதிமன்றத்தில் பெரிய வழக்குகளை விசாரிக்கும்போது நீதிபதிகளுக்கு உதவியாக இரண்டு அல்லது மூன்று உதவியாளர்கள் (அஸெஸர்கள்) இருந்து நியாயம் வழங்க ஏற்பாடு செய்தார்.

10. மக்கள் பிரதிநிதி மன்றம் ஏற்படுத்தினார்.

9) மாட்சி பொருந்திய விஜயரகுநாத துரைராஜ தொண்டைமான் பகதூர் (1922 முதல் இந்திய சுதந்திரம் அடையும் வரை)

இம்மன்னர் புதுக்கோட்டை நகர மன்றத்திற்கு 8 உறுப்பினர்களும், புதுக்கோட்டை சட்டசபைக்கு 35 உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என 1922-இல் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி, சிறப்பாக பின்பற்றப்பட்டு வந்தது. இன்னும் புதுக்கோட்டை நாடு முழுவதும் அன்றைய நாளிலேயை அனைவருக்கும் இலவசக்கல்வி ஏற்படுத்தி பெரும் புகழடைந்தார். அவருக்கு பின் வந்த அரச வம்சாவழியினர் தீவிர அரசியலில் ஈடுபட்டு மக்கள் தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

புதுக்கோட்டை நாடு, சிறிதாயிருப்பினும் தமிழ்நாட்டு முடியுடை வேந்தர்களாகிய சேரர், சோழர், பாண்டியர் ஆட்சிகளுக்குப் பின்பு, இதுவே தமிழர்களின் அரசாக, சுதந்திரம் அடையும் வரை விளங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அம்மன்னர்களைப்போலவே, புதுக்கோட்டை மன்னர்களும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு சிறப்புடையதாக பணியாற்றி வந்தனர். சர் வில்லியம் பிளாக்பர்ன் கூறியபடி சுதந்திரத்திற்கு முன் இந்திய மன்னர்களிலேயே மிகவும் அதிகாரமுள்ளவர்கள். தமது நாட்டிற்குள் குற்றவாளிகட்கு எவ்வகைத் தண்டனையும் விதிக்க உரிமையுள்ளவர்கள். (ஆங்கிலேயே அரசு இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும்போதே) உயர்நீதி மன்றம்போல் நீதிமன்றங்களை தாமே ஏற்படுத்தி நடத்தும் உரிமைவாய்ந்தவர்கள். ஆங்கிலேய அரசுக்கு சிறிதும் கப்பமோ, வரியோ செலுத்தாத பெருமைப்பெற்று, இந்திய நாட்டு ஏனைய மன்னர்களிலும் சிறந்து விளங்கினார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், முதன் முதலாக தனது நாட்டை சுதந்திர இந்தியவுடன் தானே முன்வந்து இணைத்தவர் புதுக்கோட்டை மன்னர் என இந்திய அரசால் பெருமையுடன் போற்றப்பட்டது. அவர்தம் வாரிசுகளுக்கு தகுந்த மரியாதை, அந்தஸ்து தொடர்ந்து அரசால் அளிக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கை தோன்றிய வரலாறு

வரலாற்று சிறப்பும், அரசியல் சிறப்பும் மிகுந்த நகரான சிவகங்கை உருவானது ஒரு சுவராசியமான விசயமாகும். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு சிவகங்கை மிக பெரிய காடாக இருந்தது. அப்போது, சிவகங்கையை அடுத்த நாலுகோட்டையில் குறுநில மன்னராக இருந்த சசிவர்ண பெரிய உடையாத்தேவர் ஒருநாள் தற்போது சிவகங்கை அமைந்துள்ள காட்டுப்பகுதிக்கு வந்தார். அப்போது அங்கு ஒரு பெரிய வேங்கை நின்றுகொண்டு இருந்தது.

அதனை கண்டு அஞ்சாமல் அங்கு சென்று பார்த்தபோது, அந்த வேங்கை மறைந்து அதற்கு பதிலாக முனிவர் தவத்தில் இருப்பதைக் கண்டார். ஆச்சிரியமடைந்து அருகில் சென்று பயபக்தியுடன் முனிவரை வணங்கி ஆசிபெற்ற சசிவர்ண பெரிய உடையாத்தேவர், முனிவரின் வேண்டுகோளின்படியே அந்த காட்டுப்பகுதியை அழித்து சிவகங்கை நகரை உருவாக்கியுள்ளார்.

முனிவர் தவம் செய்த இடத்தில் மிகப்பெரிய குளம் வெட்டப்பட்டது. அந்த குளத்தின் மேற்கு பகுதி மூலையில் மன்னரது அரண்மனை அமைக்கப்பட்டது, அந்த குளம் சிவகங்கை தெப்பக்குளம் என்று அழைக்கப்படுகிறது. சசிவர்ண தேவர் கட்டிய அரண்மனை இன்றும் பழைய அரண்மனை என்ற பெயரில் சிவகங்கை நகரின் கம்பீரத்தை பறைசாற்றி கொண்டுள்ளது.

குளத்தின் மேற்கு பகுதியில் கௌரிவிநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டது. இந்த மூன்றும் தான் சிவகங்கை நகரின் முதல் அமைப்புகளாகும். இதன் பின்னர் இதை சுற்றிதான் சிவகங்கை நகரம் உருவாகியது. இராமநாதபுரம் சமஸ்தானத்தை சேர்ந்த அகிலாண்டேஸ்வரி நாச்சியார் சசிவர்ணத் தேவரின் மனைவி ஆவார். அவர் திருமணமாகி நாலுகோட்டைக்கு வரும்போது தங்களது குலதெய்வமாகிய ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து வந்து வணங்கி வந்துள்ளார்.

சிவகங்கையில் பழைய அரண்மனையை அமைத்தபோது, அந்த மண்ணை கொண்டு வந்து வைத்து ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலை அரண்மனைக்குள் அமைத்துள்ளனர். பொதுமக்களின் உபயோகத்திற்காக மன்னர் குடும்பத்தினர் தெப்பக்குளத்தை அமைத்துக் கொடுத்தபோது, ராணியின் உபயோகத்திற்காக அந்தப்புறத்திற்குள் ஒரு சிறிய குளத்தை அமைத்துள்ளனர். அந்த குளத்திற்கும் தெப்பக்குளத்தில் இருந்து தண்ணீர் வரும் வகையில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. 300 ஆண்டுகளை கடந்த பின்னரும் இன்னும் பழைய அரண்மனைக்குள் உள்ள அந்த குளத்திற்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் அந்த தண்ணீர் வரும் பாதை எங்குள்ளது என்பதை இதுவரை காணமுடியவில்லை. இதேபோல் ராணியின் அந்தபுரம் அருகேயும், குளத்திற்கும் இடையே அமைந்துள்ள உடைமாற்றும் அறையின் மேல்பகுதியில் மூலிகைகளை கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அந்த ஓவியங்கள் இன்றுவரை புத்தம் புதியது போலவே காட்சி அளிக்கின்றன.

இந்த அரண்மனையின் மிக முக்கியமான சிறப்புகளில் ஒன்று அரண்மனையின் மேலே உள்ள பகுதியில் நின்று பார்த்தால் 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள காளையார்கோவில் காளீஸ்வரர் கோவில் கோபுரம் தெரிவதை காணலாம்.

கம்பர் சமாதி அடைந்த நாட்டரசன்கோட்டை

கி.பி.9ம் நூற்றாண்டில் பிற்பகுதியில் சோழநாட்டில் தேரழுந்தூரில் கம்பர் வாழ்ந்து வந்தார். காளிகோவில் பூசாரியாக இருந்த அவருக்கு காளியின் அருளால் புலமை சிறப்பேற்பட்டது, இதனால் அரசர்களின் மதிப்பை பெற்றார். இந்நிலையில் கம்பரின் ஒரே மகன் அம்பிகாபதி சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கன் மகள் அமராவதியை காதலித்தான். இதனால் கோபமுற்ற சோழ மன்னன் அம்பிகாபதிக்கு மரண தண்டனை விதித்தான்.

இதையறிந்த அமராவதி அம்பிகாபதியின் பிரிவை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டாள். மகளை இழந்ததால் கோபம் கொண்ட சோழமன்னன் கம்பரை நாடு கடத்த உத்தரவிட்டான். இதனால் கம்பர் பாண்டியநாடு வந்தார். மகனைப் பிரிந்த சோகத்தால் எங்கும் தங்க மனமில்லாமல் சென்று கொண்டே இருந்தார். அவ்வாறு செல்லும்போது காளையார்கோவில் அருகே உள்ள முடிக்கரை சமீனை காண விரும்பினார். அதற்காக நாட்டரசன்கோட்டை அருகே உள்ள ஒத்தையடிப் பாதையில் சென்று கொண்டு இருந்தார்.

அப்போது அங்கே மாடு மேய்த்து கொண்டிருந்த சிறுவர்களிடம் தம்பிகளா, இந்த வழி எங்கே போகிறது என கம்பர் கேட்டார். அதற்கு அந்த சிறுவர்கள் இந்தவழி எங்கும் போகாது. நாம் தான் அந்த வழியில் போக வேண்டும் என்றனர். இதனை கண்டு அதிர்ச்சி அடைந்து நின்ற கம்பரைப் பார்த்து, நீங்கள் எங்கே போக வேண்டும் என மாடு மேய்க்கும் சிறுவர்கள் கேட்டனர். அதற்கு கம்பர் நான் முடிக்கரைக்கு போக வேண்டும் என்று கூறினர். உடனே சிறுவர்கள், அடிக்கரையைப்பற்றி போனால் முடிக்கரை செல்லாம் என்று தெரிவித்தனர். உடனே கம்பர் தம்பிகளா நான்தான் கவிஞர் என்றிருந்தேன் நீங்கள் என்னை விட திறமையானவர்களாக உள்ளீர்கள் என்று கூறி மீண்டும் வழியைக்கேட்டார்.

உடனே சிறுவர்கள் நீங்கள் நிற்குமிடம் கண்மாய் ஓரம். இந்த கண்மாயின் அடிக்கரையில் இருந்து கண்மாய் முடியும் வரை சென்றால் நீங்கள் கேட்கும் முடிக்கரை என்ற ஊர் உள்ளது என்றனர். மாடுமேய்க்கும் சிறுவர்களிடம் உள்ள புத்திகூர்மையை கண்ட கம்பர், இந்த மண்ணில் ஏதோ விசேசம் உள்ளது. நாம் இங்கு கற்க வேண்டிய விஷயம் நிறைய உள்ளது.

எனவே இந்த பகுதியில் தங்க வேண்டுமென தீர்மானித்து அங்கேயே தங்கிவிட்டார். அந்த இடம் தான் தற்போது நாட்டரசன்கோட்டை ஊராகும். நாட்டரசன்கோட்டையில் தங்கிய கம்பர், அங்குள்ள மக்கள் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு இலவச சித்த வைத்தியம் செய்து இலக்கியப் பணிகளையும் ஆற்றி வந்தார். அங்குள்ள சிறுவர்களிடம் மிகுந்த அன்பு கொண்டு அவர்களிடம் சித்து விளையாட்டும் விளையாடி வந்தார். ஒரு நாள் சிறுவர்களிடம் தம்பிகளா இனி என்னை யாரும் பார்க்க முடியாது,

பெரியவர்களிடம் கூறிவிடுங்கள் என்று சொல்லி விட்டு, ஆடுகள் அடைக்கப்படும் இடத்திற்கு சென்றார். அதன்பின் அப்படியே மாயமாகிவிட்டார்.

அதன்பின் தகவல் அறிந்து அங்கு வந்த ஊர்பெரியவர்கள் கம்பர் மறைந்த ஜீவசமாதி ஆன இடத்தை வணங்கி, அங்கு ஒரு கல்லை நட்டு வணங்கி வந்தனர். இச்சம்பவம் நடந்தது கி.பி.9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆகும். அதன் பின்னர் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு கம்பர் ஜீவசமாதி அடைந்த இடத்திற்கு சொந்தக்காரரான ஆவிச்சி செட்டியார் கம்பர் சிறப்பை போற்றும் வகையில் கம்பர் பீடத்தை மையமாக வைத்து கம்பருக்கு கோவில் எழுப்பினார். அதன் பின்னர் ஆவிச்சி செட்டியார் வழிவந்த கம்பர் ராமநாதன்செட்டியார், கண்ணப்பசெட்டியார் என 5-வது தலை முறையாக கம்பர் கோவிலை நிர்வகித்து கம்பருக்கு சிறப்பு சேர்த்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தியலிங்கத் தொண்டைமான்

பாண்டிய மண்டலத்தில உள்ள பட்டமங்கலம் நாடு விடுதலைப்போருக்கு வித்திட்ட மாபெரும் கள்ளர் இனத்தலைவர்களை உருவாக்கியது.

அந்நாளில் அவர்களில் வைத்தியலிங்கத் தொன்டமான், காலஞ்சென்ற சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதரிடம் மதிப்பும் மரியாதையும் பெற்றவர். பட்டமங்கலத் தலைவராக இருந்ததால், திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப்பெருமாள் கோயில் மற்றும் பட்டமங்கலம் ஸ்ரீ மதியழகு சௌந்தரநாயகி அம்மன், ஸ்ரீ மதியாத கண்ட விநாயகர் கோயில், ஸ்ரீ வடக்கு வாய்ச்செல்வி அம்மன் விழாக்கள் நடத்தி, திருத்தேர் செய்து ஓட விட்டபடியால், அவருக்கு மன்னரிடமும், குடிமக்களிடமும் மதிப்பும், மரியாதையும், செல்வாக்கும் ஓங்கியிருந்து வந்தது.

அத்தோடு மட்டுமில்லாமல் பக்கத்து நாடுகளில் நடக்கும் தீர்க்க முடியாத வழக்குகளை, அந்தந்த நாட்டின் அழைப்பின்பேரில் சென்று முறையான தீர்ப்புக்களையும் வழங்கி வந்துள்ளார்.

தெய்வ பக்தி உள்ள சிவகங்கை மன்னரும், பின்னால் வந்த பெரிய மருதும், அவரிடம் தனிப்பட்ட மரியாதை கொண்டிருந்தனர்.

காளையார்கோயிலில் முன்பு ஆங்கிலேயருடன் நடந்த போரில் சிவகங்கை அரசர் முத்துவடுகநாதர் வீரமரணம் அடைந்தபின், சிவகங்கை அரசி வேலுநாச்சியார் பல இடங்களில் மறைந்து வாழ்ந்து திப்பு சுல்தான் மற்றும் கள்ளர் நாட்டு குறுநில மன்னர்களான அம்பலகாரர்களின் உதவியால் மீண்டும் சிவகங்கைச் சீமை, அரசியின் வசம் வந்தது.

ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியால், ஒரு குறிப்பிட்ட தொகையை கப்பமாக கட்டும்படி கூறி, பெரியமருதுவுக்கு சிவகங்கையை ஆளும் பொறுப்பை ஆங்கிலேயர் ஒப்படைத்தனர்.

ஆனால் அரசி வேலுநாச்சியார், இது சின்ன மறவர் சீமை என்று கூறி தனது வாரிசாக படமாத்தூர் உடையணத்தேவன் என்ற சிறுவனை சுவீகாரம் எடுத்து, அச்சிறுவனுக்குத்தான் பட்டம் கட்ட வேண்டும் என்று முயற்சி செய்தார். ஆனால், பெரிய மருது அதைத் தட்டிக்கழித்தார். அச்சிறுவன் ரகசியமாக சிறை வைக்கப்பட்டான்.

அரசி வேலுநாச்சியார் மிகவும் மனம் நொந்து, உடல் நலமும் பாதிக்கப்பட்டு, பிரெஞ்சு நாட்டுக்குச் சென்று சிகிச்சை செய்துகொண்டு திரும்பி வந்தும், உடல்நிலை சீரடையாமல் அந்தக் கவலையிலேயே இறந்தார்.

இறக்கும்முன் பட்டமங்கலம் நாட்டுத்தலைவரான வைத்தியலிங்கத் தொண்டைமானுக்கு ஓலையில் மூலம் விபரங்களை தெரிவித்து, சிறையிலிருக்கும் சிவகங்கை இளவரசனை காப்பாற்றி எப்படியாவது சின்ன மறவர் சீமையான சிவகங்கைச் சீமையில், உடையணத் தேவனுக்கு பட்டம்கட்டி மன்னனாக்கவேண்டும் உருக்கமாக எழுதியிருந்தார்.

அதன்படி சிறையிலிருந்து ரகசியமாக தப்பிக்கவைத்து பட்டுக்கோட்டை அறந்தாங்கியில் பொறுப்புள்ள கள்ளர் தலைவர்களிடம் ஒப்படைத்தார்.

சில காலம் கழிந்தபின், சின்ன மருதுவுக்கு இவ்விஷயம் தெரிந்து, மிகக் கோபங்கொண்டு பட்டமங்கலத் தலைவர் வைத்தியலிங்க தொண்டைமானுக்கு, ஒரு கொலையில் நீங்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், அப்புகாருக்கு தாங்கள்நேரில் வந்து தங்களுடைய பிரதிவாதங்களை விபரமாகக் கூறுமாறு ஓலை பறந்தது.

பெரிய மருது, நாட்டின் நிர்வாகத்தைப் பற்றி அவ்வளவாக கவலைப்படுவதில்லை. வேட்டைகளிலும், விளையாட்டுக்களிலும் காலம் கழித்தார். கோயில் திருப்பணிகளையும் கவனித்து வந்தார். அதனால் சின்னமருதுவே, தன் தலையின் அசைவே நாட்டின் சட்டமெனக்கருதும் தலைவனாக நடந்து கொண்டார்.

சின்னமருது விளக்கம்கேட்டு அனுப்பிய ஓலை, மரண ஓலைதான் என்பது வைத்தியலிங்கத்துக்கும், நாட்டில் உள்ள அனைவருக்கும் தெரிந்துவிட்டது. அவரோடு பட்டமங்கலத்து நாடே செல்ல முன்வந்தது. ஆனால், அவரோ அதைத் தடுத்து, நான் இராசவிசுவாசி, நான் இன்று பழைய மன்னர் குடும்ப வாரிசிக்கு உதவுவது, மருதுபாண்டியருக்கு ராசத்துரோகமாகத் தெரிகின்றது.

விசுவாசம் - துரோகம் என்பது காலத்துக்கு காலம் மாறும் என்பதை உலகம் எத்தனையோ முறை கண்டுள்ளது. இதையும் காலம்தான் நிர்ணயிக்க வேண்டும் என்றாராம் வைத்தியலிங்க தொண்டைமான்.

ஆங்கிலேயர் இன்று மருதுபாண்டியருக்கு நண்பராயிருப்பது, நாளை அவர்களுக்குப் பகையாக மாறலாம், அன்று விசுவாசம் துரோகமாகலாம்,

என்னை ராசத்துரோக குற்றம் செய்தவன் என்று முத்திரை குத்தினால், அவர்களது முத்திரை கிழிந்து சுயரூபம் தெரிந்துவிடும்! அதனால்தான் திசை திருப்புகின்றனர் என்றாரம்.

போகவேண்டாம் என மக்கள் தடுத்தும் நான் ஏன் பயப்படவேண்டும்? சின்ன மருதுவைத்தானே பார்த்து விளக்கம் அளிக்கப்போகிறேன். ஆறிலும் சாவும்! நூறிலும் சாவு! அதனால் நான் கோழையாக ஓடி ஒளிந்து கொள்ளப்போவதில்லை.

சின்ன மருதுவைக்காண வேண்டி வைத்திலிங்கத் தொண்டைமான் திருப்பத்தூர் கோட்டைக்குள் நுழைந்தார். ஆனால் சின்ன மருது அங்கு இல்லை.

என்ன செய்யவேண்டுமோ அதைக்கோட்டைத் தலைவருக்கு கூறிவிட்டு அவர் வெளியேறி சிவகங்கை சென்றுவிட்டார். கோட்டையில் சின்ன மருது இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு தொண்டைமான் அதைவிட்டு வெளியேறும்போது, கிழக்கு வாயிலில் நூற்றுக்கணக்கான வீரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

அவரைச் சிறைப்பிடிக்க அவர்கள் நினைத்தார்களா? அல்லது சிரச்சேதம் செய்ய முனைந்தார்களா? அவர்கள் கைகளில் உள்ள வாட்கள் சூரிய ஒளிபட்டு ஏதோ கதை சொல்வதுபோல கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

அவர்களைக் கண்டதும் தொண்டைமான் கடும் சீற்றம் கொண்டார். அவர் ஆங்காரமிட்டுச் சிரித்த சிரிப்பு கோட்டைக்குள்ளேயே எதிரொலித்தது.

வீரர்களோ, அச்சத்துடன் அவரைச்சுற்றி நெருங்கிக் கொண்டிருந்தனர். காரணம் அவரும் தன் வாளில் கை வைத்ததால்தான்.

வீரர்களே! உங்களுக்கு வாட்களை ஒழுங்காகப் பிடிக்கத் தெரியவில்லையே! சுழற்றத்தான் தெரியுமா?

இதோ பாருங்கள் இப்படிப்பிடிக்க வேண்டும்! என்று கூறியவாறு தனது இடையிலிருந்த வாளை உருவினார்.

அவரது வாளில் சூரிய ஒளிபட்டு பளபளத்தது. அது யார் யாரைப்பழி வாங்கக் காத்திருக்கிறதோ, வீரர்கள் பதற்றத்துடன் அப்படியே நின்றுவிட்டனர்! ஒருசிலர் பின் வாங்கினார்.

கோட்டைத் தலைவன் இதைக்கேட்டதும் பதறினான். கோபம் எல்லை மீறியது. பாய்ந்து கொல்லுங்கள் என்றான். வைத்தியலிங்கத் தொண்டைமானோ ஒரு பெரும் சிரிப்பு சிரித்து, ஒரு நாளும் உங்கள் வாட்கள் என் உடம்பை தீண்டமுடியாது. ஒரு வீரனின் வாள்தான் என்னைத் தீண்ட வேண்டும் இதோ இதைப்போல!

அவர் தனது வாளை உயரத் தூக்கியவர், அப்படியே தன் மார்பிலேயே அதைப் பாய்ச்சிக்கொண்டார். இரத்தம் ஊற்றுப்போல மேலே பீய்ச்சி அடித்தது. அதுவே அந்த மாவீரனின் வீரத்தை மெச்ச, பன்னீர் தெளிப்பது போல சாரலாகப் பொழிந்தது.

அவரது குலதெய்வமான கோட்டைக்கருப்பர் கோயில் முன்பாகவே அந்த மாவீரனின் உடல் சரிந்தது. அனைவருமே அலறித் திக்பிரமை பிடித்து நின்றுவிட்டனர். அந்தச் சமயத்தில் அவரைப் பின்பற்றி வந்த அவரது வீரர்கள், குடிமக்கள் சிலர் இக்காட்சியைக்கண்டு அலறி ஐயோ, தலைவரே உங்களுக்காக இந்தக்கதி.

எப்படிபபட்ட மாவீரன்! இராசகுடும்பத்தின் மேல் விசுவாசம் கொண்டவரை இராசத்துரோகியாக சித்தரித்து அவரது வாழ்க்கையையே முடித்துவிட்டது.

இச்செய்தி மருதரசர் இருவருக்கும் தெரிந்ததும், பெரிய மருது கடும் சீற்றம் கொண்டு, சின்ன மருது மேல் கோபம் எல்லை மீறியது.

கோபத்தில் தன்முன் இருந்த மேசையைக் காலால் எட்டி உதைத்ததால் பழங்கள், பாத்திரங்கள் எல்லாமே உருண்டோடின.

வைத்தியலிங்கத் தொண்டைமான் எப்படிப்பட்ட மாவீரன்! தனது தம்பி சின்ன மருதுவால்தானே அவர் சாக நேர்ந்தது என அளவற்ற கோபமும் அடைந்தார்.

நீ அளவுக்கு மேல் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டாய்! எனக்குத் தெரியாமலே இப்படிப்பட்ட காரியங்களுக்கு காரணமாகிவிட்டாய். இதன் பலனை கூடியவிரைவில் நாம் அனுபவிக்க நேரிடும் என்பதை நீ உணரத் தவறிவிட்டாய்,

நமக்கு எதிராகச் சதிசெய்தார் எனக் கேள்விப்பட்டு சிறை செய்யத்தான் உத்தரவிட்டேன் எனக்குறுக்கிட்டு சின்னமருது கூற, இதைக்கேட்டு பெரிய மருது சீறினார்.

சிறை செய்ய உத்தரவிட்டாயா? அல்லது சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டாயா? அதற்கு சின்ன மருது மௌனமாக நின்றார்.

வீரத்தை நீ மதிக்கவில்லை, தன்னை மீறிய வீரன், தோன்றக் கூடாது என்ற அகம்பாவம் உன் அறிவுக்கண்களை மூடிவிட்டது. காலம்தான் உன் செயலுக்கு, உனக்கு அதைப்பாடமாகப் போதிக்கப் போகிறது.

இப்படிப்பட்ட வீரர்கள் ஒவ்வொருவராக, ஒவ்வொரு கள்ளர் நாட்டிலும், நாம் இழந்து கொண்டிருந்தால் சிவகங்கைச் சீமையின் சிறப்பு என்னாகும்? இது சீரழியத்தான் நீ வழி வகுத்திட்டாய். சிவகங்கைச் சீமையில் உள்ள கள்ளர் நாட்டு அம்பலகாரர்கள் நமக்கு பாதுகாப்பு என்பதை உணரத்தவறிவிட்டாயே.

மன்னவன் என்பவன் குடிமக்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். இப்படி அழிக்க அல்ல, ! போ, போ! என் முன் நில்லாதே என்ற பெரிய மருதுவின் கர்ச்சனை அரண்மனை மண்டபத்தில் ஒலித்தது.

பெரிய மருதுவின் கோபத்தையே பார்த்து அறியாத வீரர்கள், ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டது என்பதை மட்டும் உணர்ந்து கொண்டனர்.

சின்ன மருது மௌனமாக வெளியேறிக் கொண்டிருந்தார். அவரால் அண்ணனிடம் அதற்குமேல் எதிரே நின்று பேச முடியாது என நினைத்து திரும்பிவிட்டார்.

வைத்தியலிங்கத் தொண்டைமான் மாவீரனல்லவா! தனது புத்தி சாதுர்யத்தால் இடர்பாடுகளை நீக்கி காளையார்கோயில் தெப்பக்குளம் கட்டத்துணை புரிந்ததோடு, திருத்தேர் ஓடக்காரணம் இருந்தவரல்லவா, ! தனது தம்பி சின்ன மருதுவின் கோபத்தால், வீரர்கள் கையில் சிக்காமல் தன்னையே மாய்த்துக் கொண்ட கவரிமான் அல்லவா! என நினைத்து பெரிய மருதுவால் அந்த மாவீரனின் இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதன் விளைவு கள்ளர் நாடுகளிடமும் ஒலித்தது. பெரிய மருதுவுக்காக சுதந்திர வேட்கை கொண்ட கள்ளர் நாட்டு அம்பலகாரர்கள் சற்று அமைதிகொண்டனர்.

சின்ன மருதுவின் தன்னிச்சையான செயல்பாடுகளால், அடுத்தடுத்து பெரிய மருதுவுக்கு பிரட்சினைகளை உருவாக்கியது. மேலும் இது நடந்த சிறிது காலத்திற்குள் சிவகங்கைச் சீமையை அடுத்தடுத்து இன்னல்கள் சூழ ஆரம்பித்தன.

வெள்ளையரால் சிறைபிடிக்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை சிறையிலிருந்து தப்பித்து, சிவகங்கை நாட்டுக்கு வந்தபோது, அவரை வரவேற்ற சின்னமருது அடைக்கலம் கொடுத்ததோடல்லாமல், விருந்து வைத்து மகிழ்ந்தார் என்ற தகவல் ஆங்கிலேயருக்கு தெரிந்தது. அது அவர்களுக்கு கோபமூட்டியதோடு, சிவகங்கைச் சீமையின் உண்மையான இளவரசன் இருக்குமிடம் அறிந்து தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர்கள் கோரியதற்கு, பெரியமருது சிவகங்கைச் சீமை தன்னுடையது என வாதிட்டார்.

அதுவே இறுதியில் போராக மூண்டது. போரில் தோற்று சங்கராபதிக்கோட்டையில், சங்கராபதி கோட்டைத்தலைவனான கள்ளர் இனத் தலைவர் முத்துக்கருப்பத்தேவர் என்ற அரவாத்தேவன் பாதுகாப்பில் மருது சகோதர இருவரும் மறைந்து வாழ்ந்தனர். இதையறிந்த ஆங்கிலேய அரசின் கர்னல் அக்னியூ தலைமையில் சங்கராபதிக் கோட்டையை முற்றுகையிட்டனர். கோட்டைத்தலைவரான முத்துக்கருப்பத்தேவர் என்ற அரவாத்தேவர், மருது சகோதரர்களை காப்பதற்கு வீரத்துடன் போரிட்டார். ஆங்கிலேயரின் கடுமையான போரின் முடிவில், அரவாத்தேவர் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட பின்தான் மருது சகோதரர்களை ஆங்கிலேயர்களால் கைது செய்யமுடிந்தது.

சிவகங்கை சீமையின் வேலுநாச்சியாரால் பட்டம் சூட்டப்பட்ட உண்மையான இளவரசனை பட்டமங்கலம் தலைவர் வைத்தியலிங்கத் தொண்டைமான்தான் காப்பாற்றி வருகிறார் என்று சின்னமருதுவிடம் உளவு சொன்ன காத்தான் என்பவன்தான், மருதுபாண்டியர் இருவரையும், ஆங்கிலேயரிடமும் காட்டிக் கொடுத்தான்.

சிவகங்கை அரச வம்சத்துக்காகப் பாடுபட்ட வைத்தியலிங்கத் தொண்டைமான் திருப்பத்தூரின், கிழக்குப் பகுதியில் தன் மார்பில் வாளைப் பாய்ச்சி வீர மரணமடைந்தாரே, அதே திருப்பத்தூரின் மேற்குப் பகுதியில் புளியமரத்தில் மருதுபாண்டியர் இருவரும் தூக்கிலிடப்பட்டனர். இதில் என்ன விசேடமென்றால், காட்டிக் கொடுத்த காத்தானும் தூக்கிலிடப்பட்டான்.

மருதுபாண்டியரின் வேண்டுகோளுக்கிணங்க காளையார் கோயில் ஸ்ரீ சொர்ண காளீஸ்வரர் சந்நதிக்கு எதிரே இருவரும் அடக்கம் செய்யப்பட்டனர்.

பெரிய மருது தான் சொல்லினால் சொன்ன தானங்களையும், முள்ளினால் எழுதிய மானியங்களையும் எந்தக் காலத்திலும் பறிமுதல் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டதை ஆங்கிலேயே தளபதி கர்னல் அக்னியூ ஏற்றுக்கொண்டான். அது இன்றும் தொடர்கிறது.

சிவகங்கை சீமை உண்மையான அரசவாரிசை ஆங்கிலேயர்கள் தேடிப்பிடித்து, அறந்தாங்கியில் வளர்ந்த உடையணத்தேவனை சிவகங்கை மன்னனாக, கௌரிவல்லப உடையணத்தேவர் என்ற நாமகரணம் சூட்டப்பட்டு முடிசூட்டப்பெற்றார்.

இது வரலாறு

வைத்தியலிங்கத் தொண்டைமானின் வீரத்தை மெச்சி கௌரிவல்லப உடையணத்தேவர் மன்னரும், பட்டமங்கலம் நாடும் இணைந்து திருப்பத்தூர் கோட்டைக் கருப்பர் கோயிலில் சிலைவடித்து தின பூசை செய்தனர். அதுவும் இன்றளவும் நடந்து வருகிறது.

சிவகங்கைச் சீமையின் உண்மையான வாரிசை சிறையிலிருந்து தப்பிக்க வைத்தும், ரகசியமாக வாழ்வதற்கு உதவி செய்தும், இறுதிவரை வைத்தியலிங்க தொண்டைமானுக்கு உறுதியாக இருந்த முத்தழகி அம்மாள் வாரிசுகள் புதுப்பட்டியில் சுமார் நூறு வீட்டுக்காரர்கள் இன்றும் தொண்டைமானை இறைவனாக வணங்கி கிடா-கோழி வெட்டி படையல் செய்து வருகிறார்கள்.

வைத்தியலிங்க தொண்டைமான் பட்டமங்கல வாரிசுகளில் ஒருவரே காலம் சென்ற இலங்கை அமைச்சர் சௌமிய மாதவத்தொண்டைமான் என்பது பலருக்கு இன்றும் தெரியாது. அவரே இரண்டாம் முறை கோட்டைக் கருப்பர் கோயிலில் வைத்தியலிங்க தொண்டைமான் சிலையை செப்பனிட்டுத் திறந்து வைத்துள்ளார்.

காலத்தால் மறைக்கப்பட்ட அவரது வீர வரலாற்றை அந்தச் சிலை இன்றும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

வரலாறு எழுதுபவர்கள் உண்மைகளை மறைத்தோ, தெரியாமலோ உருவாக்கி வைத்துள்ளார்கள். கள்ளர் நாட்டு அம்பலகாரர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக முதல் குரல் சுதந்திரத்துக்காக கொடுத்தவர்கள், போராடியவர்கள், தங்களது இன்னுயிர்களை தந்தவர்கள் என்பதை வேண்டுமென்றே திட்டமிட்டு மறைக்கப்பட்டன. இவ்வினம் எந்த வழியிலும் முன்னேறக்கூடாது மேலே வந்துவிடக்கூடாது. வளர்ந்து விடக்கூடாது என்பதில் ஆதிக்க வரலாற்று ஆய்வாளர்கள் மிக கவனமாக செயலாற்றி வருகிறார்கள், இனிமேலாவது, இவ்வினத்திற்கு விழிப்புணர்வு ஏற்பட்டு தங்கள் இனம் ஆற்றிய பங்களிப்பை, தங்களது வாரிசுகளுக்கு எடுத்துரைத்து, வரலாற்றில் நமது இனம், மாபெரும் சக்தி என்பதை நமது இளைய தலைமுறையினருக்கு எடுத்துரைக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை என உறுதிகொள்ள வேண்டும்.

பெரியாறு அணை உருவானது

1875-ல் மதுரை திரு.கலெக்டர் வில்லியம் காரே அவர்கள் அனைத்து அதிகாரிகள் கூட்டத்தை கூட்டினார். அதில் மாவட்டத்தின் நீர்ப்பாசன ஏற்பாடுகள் கடும் வறட்சியால் உருவாகியுள்ள சூழ்நிலை மக்களின் இடப்பெயர்வு புதிய புதிய நோய்கள் பரவி வருவது என்பது விவாதத்திற்கான குறிப்புகள் இருந்தன. இம்மாவட்டத்தின் நீர்த்தேவையானது வைகை நதியை மட்டுமே இருக்கிறது. ஆனால் வைகையில் மழைக்காலங்களில் கூட விவசாயத்திற்க்கான தேவைகளைப்பூர்த்தி செய்யுமளவிற்கு நீர் கிடைப்பதில்லை. வைகையின் குறுக்கே சிறிய, பெரிய தடுப்பணைகள் எதுவும் கட்டப்படாத நிலையில் உள்ளது. நமது மாவட்டத்தில தாலுக்காக்களின் அடிப்படையில் எத்தனை கண்மாய்கள் உள்ளன? அவற்றினால் பாசனத்திற்கு எவ்வளவு நீர் அளிக்கப்படுகிறது. இந்தப்பகுதிகளில் சராசரி மழையளவு என்ன என்ற புள்ளி விபரங்களை அறிக்கையின் இறுதிப்பகுதியில் இணைந்திருந்தார்.

இம்மாவட்ட விவசாயம் வைகை நதியை மட்டுமே நம்பியுள்ளது. ஆனால் வைகையை இப்பொழுது உள்ளதை விட அதிக நீர்வரத்து உள்ள நதியாக மாற்றினால் தான், இப்பகுதி விவசாயத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று முடிவு செய்து, திருவாங்கூர் நாட்டிலிருந்து (கேரளா) பெரியாறு நீரை வைகை நதிக்குத் திருப்பி விடுகின்ற மாபெரும் திட்டம் உருவானது (திட்டத்தை உருவாக்கிய நீர்பாசன பொறியாளர் திரு.ஏ.மார்க்கெத்திற்கு தலை வணங்கி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.) திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட மலைப்பகுதிகளில் மூன்று வற்றாத நதிகள் மேற்கு நோக்கி ஓடி அரபிக்கடலில் வீணாகக் கலக்கின்றன.

வைகை உருவாகும் மலைப்பகுதிகளுக்கு சற்று உயரத்தில் ஓடும் இந்த நதிகளின் குறுக்கே தடுப்புக்களை உருவாக்கி அணைகளைக்கட்டி கிழக்குப்பக்கம் கூடலூர் வழியாகத் திசை திருப்பி சுருளி நதியுடன் சேர்த்துவிட்டால் அது வைகையில் வந்து கலந்துவிடும். அதனால் மேற்குக்கடலில் பயனற்று கலக்கும் தண்ணீர் இம்மாவட்டத்தின் உயிர்நாடியாக மாறும்.

இவ்வகைத் திட்டத்தை நடமுறைப்படுத்த இரண்டு நூற்றாண்டுகளாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1798 - ல் ராமநாதபுர சமஸ்தான வல்லூநர் முத்து இருளப்பபிள்ளை பெரியாற்றுத்தணணீரை கம்பம் பள்ளத்தாக்கிற்கு திருப்பி விடுவதாக ஆய்வு செய்துள்ளதை நாம் அறிய வந்துள்ளோம். அவர்தான் இத்திட்டத்தின் முன்னோடி என்றே கூறலாம். பின்னர் பிரிட்டிஷ் அரசு சில முயற்சிகள் எடுத்துள்ளது. ஆனால் முக்கியமாக 1807 - ல் மதுரைக் கலெக்டர் திரு.பெரீஸ் வைகை நதிநீரைப் பெருக்க திருவிதாங்கூர் மலைப்பகுதியில் ஏதாவது செய்ய இயலும் எனக்கண்டறிய, அவரே அடர்ந்த காடுகளுக்குள் பலநாட்கள் சென்று ஆய்வு செய்துள்ளார்.மேற்குறிப்பிட்ட திட்ட நகல் சம்பந்தமாக மேலும் தெளிவும் விளக்கமும் அரசாங்கத்திற்கு தேவைப்பட்டதால் கேப்டன் ஸ்மித், கேப்டன் பென்னிகுக் இருவரிடமும் இப்பணி மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கொஞ்சம் மாறுபட்ட மதிப்பீடு மற்றும் செயல்முறை சம்பந்தமாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அதன்படி பென்னிகுக் தனது பணியினை அடர்ந்த காட்டுப்பகுதியில் கொடிய விலங்குகளுக்கு நடுவில் பிரமாண்டமாக கட்டுகிற மிகச்சவாலான நிறைந்த வேலையில் பென்னிகுக் தலைமையிலான பொறியாளர்கள் ஈடுபட்டு அணை கட்டுவதற்கு பூர்வாங்க பணிகளை மேற்கொண்டனர்.

மனித நடமாட்டமே இல்லாத அந்த மலையுச்சி காட்டுப்பகுதியில் நதியைக் குறுக்காகப் பிளந்து தடுப்புஅணை கட்டுவதற்கு ஆரம்பப்பணிகளை துவங்கினர். காற்றுக்கூட உள்ளே நுழைய முடியாதபடி பசுமையால் மூடியிருந்த கானகத்திற்குள் மனிதன் ஊடுருவி உயர்ந்த மரங்களையும் செடிகொடிகளையும் வெட்டி அழித்து, பொறியாளர்கள் குறியிடப்பட்ட அந்த இடத்தில் நதியின் இரண்டு பக்கமிருந்த மலைப்பாறைகளை உடைத்து எடுக்கும் பணி துவங்கியது.

அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் நதியின் ரகசிய மொன்றைக் கண்டறிந்த சொன்னவர்கள் வன மைந்தர்களான பளியர்களே. அவர்கள் தான் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ராமநாதபுரம் சமஸ்தான அமைச்சர் முத்து இருளப்பபிள்ளைக்கு இந்த இடத்தைக் காட்டினார்கள். வைகையின் ஊற்று வறண்டு கிடந்த கோடைக்காலத்தில் இந்த மலையிலிருந்து தண்ணீர் பெற எதுவும் செய்ய முடியாதா? என்று அவர் இறைஞ்சிக் கேட்டபோது, வருஷநாட்டுப் பளியர்கள்தான் உச்சி மலையில் தண்ணீர் ஓடும் இந்த இடத்தைக் காட்டினார்கள். தெற்குச்சீமையின் தாகம் தணிக்க அவர் பலயோசனைகள் செய்து திட்டம் போட்டார். காலம் நதியில் உருளும் கூழாங்கல்லாய் உருண்டு ஓடியது போல் எதுவும் நடந்தேறவில்லை.

1871-ல் அணை கட்டப்படும் இடத்தில் நிகழும் அளவற்ற மரணம் பெரும் அதிர்ச்சி தருகிறது. கடும் நோய்களினாலும் மிருகங்கள் காட்டு விஷப்பூச்சிகள் மழையினால் நிமோனியா, மலேரியா ஆகியவையினால் நூற்றுக்கணக்கானோர் இறந்தனர்.

இந்த வனாந்திரத்தில் இருந்து போராட யாரும் முன்வரவில்லை. எனவே சீப் இஞ்சினியர் முறைப்படி ஆவணங்களில் திட்டம் கைவிடப்பட்டதற்கான காரணங்களைப்பதிவு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டதாக பாதர் ஜேம்ஸ் தேக்கடியிலிருந்து செப்டம்பர் 3-ம் தேதி வருட் 1875 அன்று கடிதம் மூலமாக அறியவருகிறது. கொடிய பஞ்சங்களும், கணக்கற்ற மரணங்களும் இந்த மண்ணை விட்டு அவ்வளவு எளிதில் அகலப்போவதில்லை.

பென்னி குயிக்

அடுத்த பத்தாண்டுகளில் பெரும்பஞ்சம் ஏற்படவில்லை. பென்னிகுயிக் மீண்டும் அரசிடம் பெரியாறு அணைகட்ட அனுமதி கோரினார். அனுமதியும் கிடைக்கவில்லை. ஆனால் தானே சொந்த செலவில் செய்வதாக அரசிடம் அனுமதி வாங்கி இங்கிலாந்து சென்று தனக்குன்டான சொத்தையெல்லாம் விற்று அதன்மூலம் முல்லைப்பெரியாற்றில் தடுப்பணை கட்டும் பணி கடும் இன்னல்களுக்கிடையில் நடந்தேறி வந்தது. மன்னனே மறைந்தாலும் தெய்வங்கள் மறையாதது. அதன் கட்டுப்பாட்டுக்குள் இருந்து மனிதர்கள் ஒரு போதும் வெளியே வரமுடியாது. கூரையைப்பிய்த்துக்கொண்டு கொடுக்கும் தெய்வம் போல் பென்னிகுயிக் இருந்தார். அரசே முடியாது என்ற அணைத்திட்டத்தை தனது விடாமுயற்சியால் போராடி மக்களின் பலம் உயிர்த்தியாகம் போன்றவற்றால் உருவானது என்றால் இம்மக்களிடையே கடவுளின் ஆசியாக பென்னிகுயிக் இருந்தார்.

மதுரை மாவட்டத்தில் பெரியார் நீர்

பெரியாறு அணை கட்டி முடியும் தறுவாயில் இருந்தது. அடுத்த ஆண்டிற்குள் தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற நிலையில் எந்தெந்த பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் அளிப்பது என்பதைப்பற்றி மாவட்ட நிர்வாகம் கடந்த இரண்டாண்டுகளாகப் பல்வேறு ஆய்வுகளைச் செய்து முடிவெடுத்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான நிலங்களில் வளம் பெருகும்.

எந்த நூற்றுக்கணக்கான கிராமங்கள்? என்ற கேள்விக்கு மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பில் ஒரு பட்டியல் இருந்தது. அந்த வேலையை படுமும்முரமாக செய்து கொண்டிருந்தனர். இந்தியர்களை விட எல்லாவிதத்திலும் தந்திரமிக்கவர்களாகவே ஆங்கிலேயர்கள் இருந்தனர். அவர்கள் தான் முதலில் பெரியாற்று நீரை வைகையின் தென்பகுதிக்கு கொண்டு செல்வதா, அல்லது வடபகுதிக்கு கொண்டு செல்வதா என்பதைத் தீர்மானித்தார்கள். தென்பகுதிக்கு ஒருசொட்டு நீர் கூட போய்விடாமல் முழுக்க வட பகுதிக்கு கொண்டு செல்ல தீர்மானித்தனர்.

இது நாள் வரை அரசாங்க சட்டத்திட்டத்துக்குக் கட்டுப்படாமல் முறையாக வரி கட்டாமல் நிர்வாகத்திற்கு எந்த ஒத்துழைப்பும் தராமல் இருந்த மேலூர் வெள்ளலூர் பகுதிகளை நோக்கி பெரியாற்று நீரை கொண்டு சொல்ல முடிவு செய்தனர். அடர்ந்த காடாய்க் கிடந்தமேலூர் வெள்ளலூர் பகுதியில் இருந்த மனிதர்கள் ஒவ்வொருவராய் வெளியேறிவந்தனர். ஏற்கனவே ஆங்கிலேய அரசு இம்மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியின்படி முறையாக வரிக்கட்டுவோம். சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடுவோரை நாங்களே பிடித்து தருவோம் என்று தீர்மானம் நிறைவேற்றித் தருகின்ற பகுதிகளுக்கு பாசனப் பகுதியாக சேர்க்கப்பட்டன.

இதன்படி மேலூர் வெள்ளலூர் பகுதிகள் பெரியாறு பாசனப் பகுதிகளாக சேர்க்கப்பட்டன. பொறியாளர் ஹென்றி விச்சும், சக அதிகாரிகளும் அந்தந்த பகுதிகளுக்கு நில அளவினை அறிந்து வாய்க்கால்

வெட்டுவதற்கு வரைபடங்களைத் தயார் செய்தனர். பல ஆண்டுகளாக ஐரோப்பிய நிர்வாகத்திற்கு எதிராக நின்று கொண்டிருந்த இம்மக்களின் வெறுப்பைத் தண்ணீர் ஊற்றி அணைக்க முடியுமென்று கலெக்டர் வின்ஸ்லோவும், இஞ்சினியர் ஹென்றி விச்சும் கணித்தது சரியாக நிறைவேறிக் கொண்டிருந்தது. விவசாயத்திற்கான முழுப்பகுதியும் தீர்மானிக்கப்பட்டபின் வாய்க்கால்கள் வெட்டும் பணி மும்முரமாக நடைபெற்றது. வடகரை முழுவதும் அதில் ஈடுபட்டனர்.

கூலிக்காக மட்டும் வேலையாக அது இல்லை. பெரிய வாய்க்காலிருந்து கிராமத்து கண்மாய்க்கு வரும் துணை வாய்க்காலினை ஒரு ஊர், ஒரே இரவில் வெட்டிகொண்டுபோனதெல்லாம் கலந்த வேலையாக அது நடந்தது. பெரும் பெரும் வாய்க்கால்களை மக்கள் இரவு பகலாக தோண்டிச்சென்றனர். அது நம்பிக்கை குரல்கள் கிராமத்து மந்தைகளில் ஒலிக்கத்தான் செய்தன. ஆனால் அதையும் தாண்டி வாய்க்கால்கள் கண்மாய்களை வந்தடைந்தன.

சென்ற நூற்றாண்டில் யூசுப்கானும், கேப்டன் ரூம்ளேயும் மதுரை மாவட்டத்தில் எண்ணிலடங்கா கள்ளர் இன மக்களை கொன்று குவித்தனர். பெரியாற்று நீர் தேங்கிக்கிடந்த கிராமங்கள் அரசின் கட்டமைப்புக்குள் கச்சிதமாய் பொருத்த இளகிக்கொடுத்தன. கணன்று எரிந்த நெருப்பை அரபிக்கடலில் கலக்க வேண்டியதண்ணீர் வந்து அணைத்தது. அந்த ரத்த வரலாற்றை பெரியாற்று நீர் வேண்டிய மட்டும் உள்ளே போய் கழுவித் தீர்த்தது. சம்சாரித்தனம் மிகுந்த இப்பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் அரசு நிர்வாகத்திற்கு நம்பிக்கையை கொடுத்து நூற்றாண்டாக இருந்த சட்டம் ஒழுங்குப் பிரச்சனையையே மாறியதே எனக்கூறலாம். கொழும்பு, ரங்கூடனுக்கு வேலைக்குப்போன மக்கள் அனைவரும் ஊருக்கு திரும்பி வர ஏற்பாடு செய்ய வேண்டும். சாணத்தை வயலுக்கு உரமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

எருவாட்டி தட்டி எரிக்கக்கூடாது என்று கள்ளர் நாட்டுக்கூட்டங்களில் முடிவு எடுக்கப்பட்டன. (ஆசிரியர் சு.வெங்கடேசன், காவல்கோட்டம் என்ற நூலிலிருந்து) ஊரின் கதை தெரியாதவனுக்கு ஊர்ப்புத்தி வராது. ஊர்ப்புத்தி வராதவனுக்கு மனித புத்தி வராது. இந்த ஊரைத் தெரியவேண்டுமென்றால் தலைமுறை தலைமுறையாக இருக்கும் கதைகளைப் புரிந்து கொண்டால் மட்டுமே முடியும். சில மனிதர்கள் பதராகப்போய்விடுகின்றனர், சிலர் கொத்துக் கொத்தாக விளைந்து நிற்கின்றனர்.

கதைதான். இந்தக்கதை அறுந்து போனால் ஊர் அறுந்து போகும், ஊரும் கதையும் வேறல்ல. கதையும் உயிரும் வேறல்ல, கதை மறந்த பொழுது உயிர்களெல்லாம் அழிந்ததால் கதையே உயிரென்றானது. கதை மண்ணிலிருந்து துவங்குகிறது. மண்ணைப்பற்றியே பேசுகிறது. மண்ணும் கதையும் பிரிக்க முடியாத உருவாகக் கொண்ட கருவில் பிறந்தவர்கள்தான் கள்ளர் நாட்டார்கள்.

நமது பயணம்

மண் சார்ந்து, மக்கள் சார்ந்து, மக்களது பண்பாடு, கலை, இலக்கியம், சார்ந்து நமது பயணம் பயணிக்க வேண்டும். ஒரு சம்பவம் நடந்தால் அதன் பின்னனி என்ன?

நிகழ்கால சம்பவத்துக் காரணம் என்ன? எதிர்காலத்தில் அதனால் ஏற்படும் தாக்கங்கள் என்ன? என்பதையெல்லாம் ஆராய்ந்து விவாதித்து மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய கடமை நமது பயணத்தில் உள்ளது. மக்களது முன்னேற்றத்துக்கான சுயநலம் தவிர்த்து, பொது நலம் கொண்ட அர்ப்பணிப்பு உணர்வு தேவை என நமது பயணம் எடுத்துரைக்கவேண்டும்.

வடக்கே தலை வைத்து படுக்கக்கூடாது ஏன்?

பூமியின் வட, தென்பகுதிகள் காந்த துருவமாக இருப்பதை நாம் அறிவோம். இதேபோல் மனிதசரீரமும், ஆகர்ஷன சக்திக்கு உட்பட்டதாகவே உள்ளது.

உடம்பில் உள்ள இரும்பு சத்தின் காரணமாக, உடல் முழுவதும் ஆகர்சன சக்தி படர்ந்து இருக்கிறது.

சரீரத்தின் வடதுருவம் தலை. நாம் தெற்கே தலை வைத்துப்படுத்தால், பூமியின் தென்துருவமும் தலையின் வடதுருவம் ஒன்றையொன்று ஈர்த்து, சரீரத்தின் காந்த சக்தி கெடாமல் காக்கிறது.

இதற்கு மாறாக, வடக்கில் தலை வைத்து படுத்தால் பூமியின் வடதுருவத்துடன் நம் உடலின் வட துருவம் சேராமல் ஒன்றையொன்று தாக்கி, உடலுக்கு தொடர்ச்சியான காந்த சக்தி கிடைப்பது தடைப்படும். இதனால் உடலின் இயற்கை தன்மை மாறுபடும், இது நம் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

எனவே, வடக்கில் தலை வைத்து படுக்கக்கூடாது. இதை மூட நம்பிக்கை என்று புறக்கணித்தல் கூடாது.

“நற்செயல்களில் ஈடுபடுங்கள்”

கடவுள் மனிதனுக்கு நல்ல புத்தியையும் அதை செயல்படுத்தும் சக்தியையும் கொடுத்துள்ளார். அதை பயன்படுத்தி நற்செயல்களில் மட்டுமே எப்போதும் ஈடுபடவேண்டும்.

பணம், பேச்சு இரண்டிலும் அளவாகவும், நிதானமாகவும் இருக்கவேண்டும், அவசியமில்லாத விஷயம் பற்றி பேசுவதோ, வீணாகப் பணம் செலவழிப்பதோ தீமையில்தான் முடியும். அதேபோன்று, குடும்ப கடமைகளை வீட்டு, சமூக சேவையில் ஈடுபடுவது நல்லதல்ல, குடும்பத்தினரையும் புறக்கணித்து, சமூக சேவை செய்பவன் பிற்காலத்தில் வருந்த நேரிடும். நல்ல விஷயங்களுக்கு சமூக சேவை செய்யலாம். மனிதநேயமே, மனிதனை கடவுளாக்கும்.

கோயில் வழிபாடும் கடவுளுக்கு நைவேத்யம் படைப்பதும் பூஜைகள் செய்வதும் அவருக்கு நன்றி செலுத்துவதன் அடையாளமே! கடவுளின் அருள் இல்லாமல், உலகில் சிறு புல்லைக்கூட படைக்கும் சக்தி நமக்கு கிடையாது.

உடுத்தும் ஆடை அழுக்கில்லாமல், சுத்தமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம், ஆனால் மனத்தூய்மையை யாரும் பொருட்படுத்துவதில்லை கடவுளைச் சரணடைவதும் தியானம் செய்வதும் மனதைத் தூய்மைப் படுத்த உதவும்.

பாவம் தீர வழிதெரியாமல் அலைகின்றனர் மனிதர்கள். கணப்பொழுதில் நம் பாவத்தைப்போக்கும் பொருள் ஒன்று உள்ளது. அதுதான் கடவுளின் திருநாமம், நாக்கு பெற்றதன் பயன், பக்தியுடன், கடவுளின் பெயரைச் சொல்வதற்கு மட்டுமே!

வெளியில் மகிழ்ச்சியைத் தேடி அலைகிறான், உண்மையில், மகிழ்ச்சி மனதில் இருந்துதான் பிறக்கிறது. அதைத் தொடர்ந்து கொள்ளமுடியாமல் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறான்.

வாழ்வில் ஒழுக்கம் ஏற்பட்டுவிட்டால், அதன்பின் நம்முடைய ஒவ்வொரு செயலிலும், நேர்த்தியும், அழகும் வெளிப்படத்தொடங்கும். அதனால் ஒழுக்கத்தை உயிராக மதித்துப் போற்றுங்கள்.

சத்தியம் என்பது வாக்கும், மனமும் ஒன்றுபடுவது மட்டுமல்ல, மனதில் தோன்றும் நல்லெண்ணத்தை பேச்சில் வெளிப்படுத்துவதே! அதனால், எல்லாருக்கும் நன்மையே உண்டாகும்,

தேவைகளை அதிகரித்து கொண்டேபோனால் நிம்மதியாக வாழ முடியாது, அதேபோன்று மனதில் போட்டி, பொறாமை இருக்கும்வரை மனநிறைவு ஏற்படாது. இருப்பதைக்கொண்டு திருப்தியாக வாழ்வதே சிறந்தது.

கடவுளைச் சிந்தித்தும் செய்யும் எந்த செயலும் நற்பலனைக் கொடுக்கும். அறியாமல் செய்தாலும்கூட வழிபாட்டுக்கான பலன் நிச்சயம் கிடைக்கும்,

வாழ்க்கையை லாப-நஷ்ட கணக்கு பார்க்கும் வியாபாரிபோல கருதுவது கூடாது. பிறருடைய துன்பத்தைத் தீர்க்க நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்.

எடுத்துச் சொல்வதைவிட, எடுத்துக்காட்டாக விளங்குவதே சிறந்தது, பிறருக்கு உபதேசம் செய்யவிரும்பினால், அதற்கு முதலில் தன்னைத் தகுதிப்படுத்துக்கொள்வது அவசியம்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கடவுள் குடியிருக்கிறார். ஆனால், ஒருவரை ஒருவர் வணங்கும்போது அந்த கடவுளை வழிபடுவதாகவே கருதவேண்டும்.

இராசராசனின் வழித்தோன்றல்

குடிசெய் லென்னு மொருவதற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்.

- குறள்

உலகத்தில் எவ்வகையான நற்செயலுக்கும் ஊக்கமும், உணர்ச்சியும் இன்றியமையாதன. மக்கள் அவற்றை அடைதற்குரிய சாதனங்கள் பலவற்றிலும் அவர்களது முன்னோரைப் பற்றிய அறிவும், நினைவும், சிறந்தவை.

பிற்காலச் சோழர்களில் சோழப்பேரரசை நிறுவியதும், அறிவிலும், ஆற்றலிலும், அழகிலும் சிறந்து விளங்கியவன் அருண்மொழித்தேவன் என்றழைக்கப்பட்டும், அரியணை ஏறியதும் இராசராச சோழன் என்ற மாமன்னனே.

இராசராசன் பெருநெறி கொண்டு முறையாக அரசாட்சி செய்தவன். சிறியன சிந்தியாதான் என்ற கம்பனின் வாக்கிற்கு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கியவன். சிவனடி மறவாச் சிந்தையோன், அருங்கலைவிநோதன், பல்துறை அறிவும் நிரம்பிய நல் அறச்-செல்வன் பொன்னை எல்லாம் கோயில் திருப்பணிக்கும் சமூக அறப்பணிக்குமே அர்ப்பணித்தவன். இவையெல்லாம் இன்றும், நின்று அவன் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில், சோழவழித் தோன்றல் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வெள்ளலூர் நாட்டைச் சேர்ந்த உறங்கான்பட்டி கட்டக்காளைத்தேவன் வகையறாவைச் சார்ந்த வே.பார்த்திபன் அம்பலம் என்பவர் மீண்டும் இராசராசனோ என்று நினைக்கும் வகையில் கோயில் திருப்பணிகள், கல்விப்பணி, சமுதாயப் பணிகள் விளம்பரமின்றி ஆற்றி வருகிறார்.

வெள்ளலூர் நாட்டில் திருக்கோயில்கள் புதிதாககட்டினாலும், புனரமைத்து குடமுழுக்கு செய்தாலும் விழாக்குழுவினர் கேட்காமலோ, கேட்டோ மிகப்பெரிய தொகைகளை உபயமாக நன்கொடை அளித்து எந்தவித சுயவிளம்பரமுமின்றி, சத்தமில்லாமல் செய்து வருகிறார்.

உறங்கான்பட்டியில் அரசு ஆரம்பப்பள்ளி, அரசு மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளுக்கு அவர் ஆற்றிய நற்பணிகளான, அடிப்படைக் கட்டமைப்பு, குடிநீர் வசதிகள், கலை அரங்கம் போன்ற கல்விப்பணிகள் குறிப்பிடத்தக்கவை. அவர்களது தந்தை க.சோ.வேலாயுதம் அம்பலம், இளங்கச்சி அவர்கள் உறங்கான்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை அளித்துள்ளார் என்றால் மிகையாகாது. தந்தையின் வழியில் கல்விப்பணிச் சேவைகள் தொடர்கின்றார்.

இன்றைய உலகில் சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மக்களுக்கு இன்றியமையாதது. உறங்கான்பட்டியில் காலை, மாலை வேளைகளில் தலா 15,000 (பதினைந்தாயிரம்) லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீர், (R.O. Plant) சுத்திகரிப்பு நிலையம் மூலம் இலவசமாக வழங்கி வருகிறார். மின்கட்டணமே பல்லாயிரக்கணக்கான ரூபாய் மாதம் கட்டிவருகிறார் என்றால் தெரிந்து கொள்ளுங்கள்.

உறங்கான்பட்டி இப்பகுதியில் உள்ள ஊராட்சிகளில் 13 ஊர்களை அடக்கிய பெரிய ஊராட்சியாகும். இந்த கிராமங்களோடு சுற்று வட்டாரத்திலுள்ள மக்களும் தங்கள் குடிநீர் தேவைக்காக இவர்களின் சுத்திகரிக்கப்பட்ட நிலையத்திலிருந்துதான் இலவசமாக எடுத்துச் செல்கிறார்கள்.

அரசு ஆற்றவேண்டிய பணியைத்தானே முன்வந்து, மனமுவந்து அவரும் அவரது மனைவி திருமதி. திருநிறைச்செல்வமும், பெருமைமிகு சமுதாயப் பணியை தொடர்ந்து, இடையறாது ஆற்றிவருகிறார்கள்.

இவரது முன்னோரான கட்டக்காளை அம்பலகாரர் சிறந்த நீதிமான், சிறந்த தளபதி, சிறுபான்மையினர் அரவணைத்தவர். திக்கற்று வந்தவர்களுக்கு ஆதரித்து, இடங்கொடுத்து நிலபுலன் அளித்து வாழ வழி செய்தவர்.

வெள்ளலூர் நாட்டின் விடிவெள்ளி, சட்டம், விதி, நாட்டுக்கட்டமைப்பு உருவாக்கிய சட்டமேதையும் முதல் பெரிய அம்பலகாரரான தெய்வத்திரு. வீரணம்பலகாரருடன், தெய்வத்திரு. கட்டக்காளை அவர்களும் இணைந்து, வெள்ளலூர் நாட்டை பல வழிகளில் முன்னேற்றம் காணவைத்தார்கள்.

அந்த கட்டக்காளை அம்பலகாரரின் வழித்தோன்றலே திரு.வே.பார்த்திபன் அம்பலம் அவர்கள்.

அறப்பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி, செய்திட நல்உணர்வுகள் முக்கியம், அவருடைய மூதாதையரின் ரத்தமரபிலுள்ள உணர்வே இத்தகைய பணிக்கு வித்திட்டது. செயல்படுத்தியது என்றால் மிகையாகாது.

திரு.வே.பார்த்திபன் அம்பலம் அவர்கள் திருக்கோயில்களுக்கு நன்கொடை, கல்விப்பணி, சமுதாயப்பணி ஆகியவைகளுக்கு வாரி வழங்கிய கொடையும், செயலாற்றிய தன்னலமற்ற, செயலும் இன்றும், என்றும் இவர்கள் புகழ் பாடிக்கொண்டிருக்கும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

வான் கலந்த மாணிக்கவாசகர்

திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகரை ஆட்கொண்டார் இறைவன். இறையின்பத்தில் திளைத்த மாணிக்கவாசகர் தம்மை மறந்தார். பகல் இரவாவதும் மறந்தார். தாம் பாண்டிய நாட்டின் முதலமைச்சர் என்பதையும் மறந்தார். பாண்டிய மன்னனுக்காகக் குதிரைகள் வாங்கவே பொன் கொண்டு வந்ததையும் மறந்தார். எத்தனைக்காலம் அப்படியிருந்தாரோ தெரியவில்லை, கொண்டு வந்த பொன்னும் காப்பாரில்லாமல் கரைந்தது. குதிரைகள் எப்போதும் வரும் என்ற பாண்டிய மன்னரின் ஓலையைக் கண்டதும் துணுக்குற்றார். இறைவனிடம் சென்று முறையிட்டார். இறைவன் ஆணைப்படி “ஆவணிமூல நன்னாளில் குதிரைகள் வரும்” என்று பதில் ஓலை அனுப்பினார்.

குதிரைகளுடன் தான் பின்னே வருதாகவும், முன்சென்று அரசனுக்குச் சொல்லும்படியும் இறைவன் மாணிக்கவாசகரைப் பணித்தான். மாணிக்கவாசகர் வந்து பல நாட்கள் ஆன பின்னும் குதிரைகள் வரவில்லை, கோபங்கொண்டு மாணிக்கவாசகரைக் கொடுஞ்சிறையிலிட்டான் பாண்டிய மன்னன். இறைவனின் கருணையை நினைத்து, திருவருள் துணைகொண்டு, துன்பங்களைப் பொறுத்தார் மாணிக்கவாசகர்.

நன்றும் பிழையே நீயே செய்வாய்!

கடமை தவறாத முதலமைச்சரான மாணிக்கவாசகர் இறைவன் ஆட்கொண்ட பின் கடமை தவறியதற்கு இறைவனே பொறுப்பு! இதை இறைவனும் அறிவான். இத்திருவிளையாடலை மாணிக்கவாசகரின் ஒரு அற்புதான திருவாசகம் நமக்கு அறிவிக்கின்றது. “நன்றே செய்வாய்! பிழை செய்வாய்! அனைத்தும் சிவார்ப்பணம்! நானோ இச்செயல்களின் நாயகன் என்றார். மாணிக்க வாசகர்.

கொண்டு வந்த பொன்னுக்கு, குதிரைகள் வாங்கவிடாமல் செய்த இத்திருவிளையாடல் மூ லம் இறைவன் மனிதகுலத்துக்குச் சொல்லும் முக்கியச்செய்தி, “இப்பூமியின் வளங்கள் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்காகத் தரப்பட்டவை. அவ்வளங்களைக் கொண்டு குதிரைகள் உள்ளிட்ட படைபலங்கள் பெருக்கி பிறநாடுகளின் மீது படையெடுத்து அமைதியை அழிப்பதும், அவர்தம் பொருட்களைக் கவர்வதும் நீதியற்ற செயல்கள்” என்பதே.

பட்டினிச்சாவு கண்டும் சிந்தை கலங்காதோர்

பல நாடுகளில் சகமனிதர்கள் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கும்போது, ராணுவத்தளவாடங்களை வாங்க, உலகப்பொருளாதாரத்தின் பெரும்பகுதி செலவிடப்படுவது கொடுமை. மனிதகுல மேம்பாட்டுக்கான அறிவியல் தொழில்நுட்பத்தை ராணுவ ஆயுதங்களையும், போர் முறைகளையும் கூர்செய்யப்படுத்துகிறோம், நாடு தேசபக்தி என்ற பெயர்களால் மனிதக்குலம் செய்யும் பைத்தியக்காரத்தனத்தின் உச்சம் இது.

பிளவுபடாத இந்தியாவின் ஒரு குடும்பத்து மனிதர்கள் விடுதலை, மதம், தேசபக்தி என்ற பெயர்களில் ஒருவருக்கு ஒருவர் பகையாளியானார்கள். மனிதருக்குள் அன்பென்னும் பூப்பூத்தால், ஆயுதங்கள் வாங்கும் பணத்தில் பசிப்பிணி போக்கும் தொண்டாக மலர்ந்திருப்பார்கள்.

நீதி மறந்த மனிதகுலம்

அறிவு வளர்ந்ததாகப் பீற்றிக்கொள்ளும் மனிதகுலம், அணு ஆயுதங்கள் பூமிக்குச் செய்யும் பேரழிவைச் சொல்லி மாளாது.

இனக்குழுக்களாக இயற்கையோடு வாழ்ந்த மனிதன், இப்புவியில் யானை முதல் எறும்பு வரையான அனைத்து உயிர்களின் வாழும் உரிமையைக் காத்து வாழ்ந்தான். இறைவனின் திருவிளையாடல்கள், இயற்கை, நீதியை மறந்த மனித குலத்தை நெறிப்படுத்தவே என்பதை உணர்வோம்.

தவறே செய்யாத மாணிக்கவாசகரை ஆட்கொண்டு, பொதுப்பணத்தைக் காக்கும் கடமையிலிருந்து தவறச்செய்தான் இறைவன். இதற்கு, அவனே பொறுப்பு என்பதால்தான் குதிரைகள் வரும் என்று பாண்டிய மன்னனுக்கு ஓலை அனுப்புமாறு மாணிக்கவாசகரைப் பணித்தான் இறைவன்.

நீதிக்கு தலைவணங்கிய இறைவன்

தான் ஆட்கொண்ட மாணிக்கவாசகரைப் பொதுப்பணத்தைக் கையாடிய குற்றத்துக்காக பாண்டிய மன்னன் சிறையிலிட்டபோது இறைவன், உடனே குதிரைகள் கொண்டு வந்து காப்பாற்றவில்லை. அரச நீதியின்படி, தவறுக்கான தண்டனையை மாணிக்கவாசகர் அனுபவிக்கட்டும் என்று விட்டுவிட்டான். பின் நரிகளை ஏன் பரிகளாக்கி (குதிரை)கொண்டு வந்தான் இறைவன்?

கடமையை நிறைவேற்றிய இறைவன்

மன்னன் பொதுப்பணத்தின் காவலன் மட்டுமே! பொதுப்பணம் மக்களுக்கான நலப்பணிகள் செய்யவே தவிர, மண்ணாசை கொண்டு போர் செய்ய அன்று. இதை உணர்த்தவே நரிகளைக் பரிகளாக்கி (குதிரை) கொடுத்தான் இறைவன்.

மணிக்கணக்காக வெகுவிரைவாகச் செல்லும் திறன் கொண்ட குதிரைகள் மனிதனுக்கு எளிதில் கட்டுப்படுகின்றன. ஆனால் தந்திரம் குணம் நிறைந்த நரிகளை மனிதனால் பழக்கப்படுத்தவே முடியாது.

எனவேதான் உண்மையான குதிரைகளுக்குப் பதிலாக நரிகளை குதிரைகளாக்கி கொடுத்தான் இறைவன். குதிரைகளை மன்னனிடம் ஒப்படைத்துக் கயிறு மாற்றியதுடன் ஒப்பந்தம் முடிந்து விட்டது. தான் ஆட்கொண்ட மாணிக்கவாசகரின் கடமையை இறைவன் நிறைவேற்றிவிட்டான்.

நீதி தவறிய மன்னன்

குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறி ஓடியதும் மன்னன் சிந்தித்திருக்க வேண்டும். குதிரைகளைக் கொண்டு வந்தவன் இறைவனே என்பதே அறிந்திருக்கவேண்டும். மண்ணாசையால் மக்களை அழிக்க முயலும் தன்தவறை உணர்ந்திருக்க வேண்டும். (குதிரைகளை நரிகளாக்கிய இடம்தான் நரிமேடு மதுரை நகரின் வடபகுதியில் அமைந்துள்ளது).

மாறாக மாணிக்கவாசகரை கடும் வெயிலில் வைகை ஆற்றின் சுடு மணலில் நிற்க வைத்துக் கொடுமை செய்தான் பாண்டிய மன்னன். மாணிக்கவாசகரை காக்கும் பொருட்டு, உடனே பெருமழை பொழியவைத்து வைகை ஆற்றில் பெரும்வெள்ளம் பொங்கச் செய்தான் இறைவன்.

ஆற்றின் கரை உடைந்து மதுரை நகர் வெள்ளக்காடாகியது. வீட்டிற்கு ஒருவர் வந்து வைகைக்கரை உடைப்பை சரிசெய்ய ஆணையிட்டான் மன்னன்.

புட்டுக்கு மண் சுமந்த இறைவன்

புட்டு விற்கும் மூதாட்டியின் கூலியாளாய் வந்த இறைவன், மண்வெட்டி, சுமந்து, ஆற்றின் கரை உடைப்பை அடைக்காமல் இருப்பதைக்கண்டு, மூதாட்டியின் கூலியாளாக வந்த இறைவனின் முதுகில் கோபத்துடன் ஓங்கி சவுக்கால் அடித்தான் பாண்டிய மன்னன்.

இறைவனின் முதுகில் பட்ட அடி, மன்னன் உள்ளிட்ட வாழும் அனைவரின் முதுகிலும் அடிபட்டது. அனைத்து உயிர்களிலும் இறைவனே கலந்துள்ளான் என்பதையும், அனைத்து உயிர்களின் நலனுக்கும் ஆள்பவனே பொறுப்பு என்பதையும் உணர்த்தியது இத்திருவிளையாடல்.

விரிந்து பரந்த இந்த உலகத்துக்கு, ஈசன் நெற்றிக்கண் உடைய கடவுள், மனிதர்களின் பாவங்களைப்போக்க கலிகாலத்தில் மதுரையின் மண்ணைத் தன் தோளில் சுமந்தான் இறைவன். ஏழை மூதாட்டி கொடுத்த புட்டைக் கூலியாககொண்டு, மன்னன் கொடுத்த சவுக்கடியை வாங்கி கொண்டு, மனிதர்களின் பாவங்களைப்போக்கத் தன் பொன்மேனியில் புண் சுமந்தான்.

இதை உணர்ந்த பாண்டிய மன்னன், மாணிக்கவாசகரிடம், தன் பிழை பொறுத்து, மீண்டும் முதலமைச்சராகப் பணி ஏற்க வேண்டினான். மன்னனை வாழ்த்திய மாணிக்கவாசகர், திருப்பெருந்துறைக்கு இறைப்பணி செய்ய விடுவிக்குமாறு வேண்டி, அவ்வண்ணமே விடைபெற்றார். அதற்குப்பின் இறைவனின் படைப்பில் மனிதனைப் பற்றி மாணிக்கவாசகர் இவ்வாறு கூறுகிறார்!

1. இறைவன் மனிதனுக்கு ஏன் தலையைப் படைத்திருக்கிறான்?

   பெரியோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்களைக் கண்டதும் தலை வணங்கத்தான்.

2. வாய் எதற்கு படைத்தான்?

   பிறரை வாழ்த்தத்தான்.

3. நெஞ்சம் ஏன் இறைவன் படைத்தான்?

   நல்லதை நினைப்பதற்கும், நற்செயல்கள் செய்ய எண்ணுவதற்கும், செயல்படுத்துவதற்கும், ஏழை எளியவர்களை ஆதரிக்க கருணை கொள்வதற்காகவும், எதிரியையும் மன்னித்தருளும் பண்புக்கும்.

பாண்டியர்களின் கல்விப்பெரும்பணி

மூன்று தமிழ் சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். பாண்டிய மன்னர்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் புலவர்களுக்கும் ஆற்றிய பெரும்பணிகள் அளப்பரியது. அனைவரும் கல்விபெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர் பாண்டிய மன்னர்கள். அவர்களில் மன்னர் அறிவுடைநம்பி அத்தகைய சான்றாண்மை மிகுந்தவர். மக்களுக்காகவே மன்னர்கள் பலர் வாழ்ந்தனர்.

திருவள்ளுவரின் உலகப்புகழ்பெற்ற திருக்குறளும், கம்பரின் ராமாயணமும் பாண்டிய அரசவையில் அரங்கேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ராமாயணம்-பாரதம்

ராமாயணத்தில் சீதைபட்ட கஷ்டத்துக்கு நிகரான கஷ்டத்தை இந்த உலகத்துல எந்த பெண்மனியும் பட்டதில்ல.... அதனால்தான் என்னவோ இன்றும் கிராமங்களில் உன் பொஞ்சாதியை எந்த சூழ்நிலையிலும், யார் முன்னாளையும் விட்டுத்தந்துரக்கூடாது. குடி வந்த மவ அழுதா, குலமே நாசமாகி போய்விடும்!

பொம்பள தண்ணி மாதிரி.... ஊத்தி வைக்கிற பாத்திரத்துக்கு ஏத்தமாதிரி தன்னை மாத்திக்குவா ஆனா, ஆம்பளை அப்படியில்லை, பன்னீரையே ஊத்தி வைச்சாலும், அவன் வடிவத்தை மாத்திக்கிடமாட்டான்... என்று கம்பராமாயணத்தோடு, தங்களது (சொந்த வாழ்க்கையின் அனுபவத்தையும்) சொந்த ராமாயணத்தையும் பெரியோர்கள் சொல்லி அங்கலாய்ப்பார்கள்.

குத்துயிரும், குலை உயிருமா கிடக்கிறான் கர்ணன்... இந்தப்பக்கம் அவனை வீழ்த்துன பெருமிதத்தில் நிற்கிறான் அர்ச்சுனன். தகவலறிந்த குந்தி, தன் கர்ப்பகுலையே அறுந்துயோக மகனே கர்ணா.. என்று கத்திட்டு ஓடி வற்றா......நம்ம தாய், எதிரியோட மரணத்துக்கு, எதுக்கு இப்படி அழறா? ன்னு பாணடவர்கள் அண்ணன்-தம்பிகளுக்குப் புரியல.

என்ன நடக்கப்போகுது, இனி... கர்ணன் தன் அண்ணனு தெரிஞ்ச பின், பாண்டவர்கள் என்ன செய்யபோறாங்க... துரியோதனன் என்ன செய்யப்போறான். இதல்லாம் அடுத்த வகுப்புல பார்ப்போமா என்பார் தமிழய்யா

ஏதோ புதுசா நடக்கப்போவுது போல, மனசு கிடந்து அங்களாய்க்கும்.

அந்தக் காலத்தில் பெரியவர்கள் முற்றத்திலோ, திண்ணையிலோ உட்கார்ந்து சிறுவர்களுக்கு கூறும் போது, கதை கேட்கும் சிறுவர்களை, சொல்லும்போதே கதைக்குள் பயணப்படும் விதமாக வியப்பில் ஆழ்த்தும். இரவில் கண்மூடி படுத்தால், கனவில் வந்து அத்தனை வேடமும் தரித்து அந்த இரவை தாலாட்டுவர் கதை சொல்லி....

இப்படிப்பட்ட கதைகளை நித்தமும் சொல்லமாட்டார்களா என்று ஏக்கமாயிடும்.

கால ஓட்டத்தில் இப்படிப்பட்ட தன்மையும் மாறிவிட்டது. வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரை நிறைந்த கதைகள், பண்பாடு, கலாச்சாரம் நிறைந்த நெறிமுறைகளை கூறுவதற்கும் இன்றைய தாய் தந்தைக்கோ, பெரியோர்களுக்கோ தெரியவில்லை. சொல்வதற்கு நேரமும் இல்லை.

கம்யூட்டர், செல்போன் ஆகியவைகளில் விளையாட்டு, வாட்ஸ்அப், பேஸ்புக், டுவிட்டர்களில் அடிமையானதால் சிறுவர்களுக்கு கேட்பதற்கோ, அறிவதற்கோ நேரமில்லை, நாட்டமில்லை...

விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சி வாழ்க்கைக்கு தேவையானதை உடனடியாகத் தந்தாலும், நமது உணர்வு, பாசம், பண்பாடு, கலாச்சாரம், மொழி வரலாறுகளை மாற்றியதை எப்ப உணரப்போவோமோ?

திருமணமான பெண்கள் மெட்டி அணிவது அவசியமா?

பெண்கள் அணிய வேண்டிய மங்களப் பொருட்களுள் மெட்டியும் ஒன்று. திருமணமானதும் கால்கட்டை விரலுக்கு அடுத்த விரலில்தான் மெட்டி அணியவேண்டும். காரணம், இந்த விரலில்தான் கருப்பையின் நரம்பு நுனிகள் வந்து முடிகின்றன. நடக்கும்போது மெட்டி அழுத்தப்படுவதால், கருப்பை வளர்ச்சிக்கு இந்த அழுத்தம் பெரிதும் உதவுகிறது.

மேலும் வெள்ளி உலோகமானது நரம்பு சக்தியை இழக்காமல் காக்கிறது. எனவே, வெள்ளி மெட்டியையே அணிய வேண்டும் என முன்னோர்கள் நமக்கு அறிவுறுத்தியதும், சொல்லுகின்ற காரணங்களும், விஞ்ஞானப்பூர்வமான உண்மை என்பதை உணர்ந்த கொள்வோமே, தெரிந்து கொள்வோமே!

முயற்சி

1. சுயமுயற்சிக்கு கண்டிப்பாக பலன் உண்டு, வரலாறு காட்டும் உண்மையும் இதுதான்.
2. உற்சாகத்துடன் முயற்சி செய்வோருக்கு, எல்லா கதவுகளும் உடனே திறக்கும்.
3. விடாமுயற்சி என்னும் நெருப்புப்பொறி, உன்னிடம் இருந்தால், விதி என்னும் காற்றும் உனக்குத் துணை புரியும்
4. முயற்சி, வளர்ந்து தேயும் நிலவு அல்ல, மேலே வளர்ந்தபடி இருப்பது.
5. முயற்சித்தும் பலனில்லை என்பவன் சோம்பேறி, சரியாக முயற்சிக்கவில்லை என்பதே பொருள்.
6. முயற்சி என்பது புள்ளி, விடாமுயற்சி என்பதுகோலம், வெறும் புள்ளியை ரசிக்கமுடியாது.
7. சும்மா இருப்பதைவிட, ஏதாவது ஒருமுயற்சியை செய்வது சாலச்சிறந்ததாகும்.

ஐந்து தூண் திருக்கண்

மதுரை மக்கட்கு திருக்கண் என்னும் தீந்தமிழ்சொல் நன்கு தெரியும். சித்திரைத் திருவிழா கள்ளழகர் ஆற்றில் இறங்குதல், நானூறுக்கும் மேற்பட்ட வரவேற்புத் தோரண வாயில்கள் அமைத்த திருக்கண்!

பிற பகுதிகளில் மண்டபம் அல்லது சாமி இறங்குமிடம் என்றும் அலங்காரம் செய்யப்பட்ட இடம் என்றும் சொல்லப்படும். மண்டபங்களை திருக்கண் என்று அழைப்பார். திரு என்றால் எல்லாம் ஒருங்கமைந்த அழகு, கண் என்றால் இடம் திருவிழாவின் திருக்கண் எனப்படுகிறது. மாடமதுரையில்-கூடல் மாநகரில் சாதாரணமாக மண்டபம் என்றால் குறைந்த அளவு நான்கு கால்கள் நிறுத்தப்படும். ஒரு பந்தல் அமைக்க, ஒரு சுற்றில் கட்ட குறைந்த அளவு நான்கு தூண்கள் நிலைநிறுத்தப்படும்.

ஆனால் குறளாசான், ஐந்து கால் கொண்ட மண்டபத்தை திருக்கண்ணை அடையாளம் காட்டுகிறார்.

பெருமை, பண்பு, சால்பு போன்ற சொற்கள் உயர்வையும், சிறப்புடைமையும் குறிப்பன. பெருமையைவிடப் பண்பு மேலானதாக கருதப்படுகிறது. பண்பினைக் காட்டிலும் சால்பு உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது. அறிஞர்கள் கூடியிருக்கும் இடத்தில் கூட “ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களே” என்று சம்பிரதாயமாக விளக்கப்படுவதைக் கண்டிருக்கிறோம். சான்றோர் என்னும் சொல் தூய்மையின் உச்சக்கட்ட நிலையின் என்ற பொருள் தரும் சொல், சால்பு என்பதை அடிச்சொல்லதாகக் கொண்டதாகும்.

திருவள்ளுவர் சால்பு பற்றி இவ்வாறு விளங்குகிறார்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து-சால்பு ஊன்றிய தூண்

- (குறள் : 983)

அன்பு=சுற்றமும் நட்பும் மீதான அன்புணர்வு

நான்=மாந்தர்க்குச் சிறப்பதரும் நாணுதல்

உடைமை (ஒவ்வாதன் ஆற்றாது அமைதல்)

ஒப்புரவு=எல்லோரிடமும் பரிவுணர்வு

பூண்டிருத்தல் : (உலகத்தோடு ஒட்ட ஒழுகலும் பரிவு காத்தலும்)

கண்ணோட்டம்=நயத்திரு நாகரீகம் பேணல்

வாய்மை=தீதிலாச் சொல்லும், செயலாற்றலும்.

இந்த ஐந்தும் வலிவான தூண்கள் இதன் மேல் அமையும் அமைப்பின் வலிவு, வனப்பு, உழைப்பு, உறுதி, காப்பு ஆகியன சால்பு ஆகும். சால்பு என்பதை எந்த ஆங்கிலச் சொல்லால் ஈட்ட முடியம்?

சாறுதல் = நிரம்புதல், எல்லா நலமும், வளமும் நிரம்பியிருத்தல் சால்பு, அதைக் கொண்டிருத்தல் சால்புடைமை: சால்பு கொண்டுள்ளோர் சான்றோர்!

ஐந்து கால் - ஐந்து தூண் ஊன்றிய திருக்கண் நம் இடம் ஆகட்டுமே.

எனவே, வெள்ளலூர் நாட்டில் ஸ்ரீ ஏழைகாத்தஅம்மன் திருவிழாவின்போது, தலைநகரான வெள்ளலூரில் இருக்கும் அம்மன் வீட்டிலிருந்து ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோயிலுக்கு, அம்மனை அழைத்து வரும்போது, வழியில் நயத்தான்பட்டி விலக்கில் அம்மன் கோயிலுக்கு இடது புறமும், ஸ்ரீ வல்லடிகாரசுவாமி கோயிலுக்கு வலது புறமும் சாலைகள் பிரியும். அந்தப் பிரிவில் சாமி சற்று இளைப்பாறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது திருக்கண்.

அதனால்தான் அந்த இடத்தை திருக்கண் என்று அழைக்கிறார்களோ!

தமிழகத்தில் கள்ளர் நாடுகள்

தமிழகம் முழுவதும் 93 வகை கள்ளர் நாடுகள் இருப்பதாக திரு.குமாரசாமி அவர்கள் தனது செப்புப்பட்டயத்தில் குறிப்பிடுகின்றார்.

திருவாளர் S.குமாரசாமி மேல்கொண்டார் அவர்கள் ஓர் செப்பு பட்டயத்திலிருந்து எழுதிய கள்ளர் நாடுகள். இப்பட்டயம் கலியபதம் 4434, சாலி வாகன சகாப்தம் 1255 விக்ரம் ஸ்ரீ தை மாதம் 15-ம் தேதி திங்கட்கிழமை, பூச நட்சத்திரமும், பிரதமை திதியில் எழுதப்பட்டதாக அதிலிருந்து தெரிய வருகிறது

சோழமண்டல, தொண்டை மண்டல கள்ளர் நாடுகள்

இம்மண்டலங்களில் உள்ள கள்ளர் நாடுகளின் எல்கைகளை சரிவர கணிக்க முடியவில்லை. அறிந்தவர்களும் சரியாக விளக்க முடியவில்லை. ஏனென்றால் சிற்றரசுகள், பேரரசுகள் ஆகியவைகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் எல்கைகள் பல இடங்களில் விரிந்தும் குறைந்தும் இருந்து வந்துள்ளது. பாண்டிய மண்டலத்தில் உள்ள கள்ளர் நாடுகள் தன்னரசு நாடுகளாக இருந்ததால் தொடர்ந்து இன்றுவரை அதன் எல்கைகள் எந்தவித மாற்றங்கள் இல்லாமல் இருந்து வருகிறது.

எனவே சோழமண்டல, தொண்டைமண்டல கள்ளர் நாடுகளின் பெயர்களை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தந்தி நாடு
2. மனைப்பள்ளி நாடு
3. அய்வூர் நாடு
4. அஞ்சுமுக நாடு
5. ஏரிமங்கல நாடு
6. மேலத்துவாகுடி நாடு
7. கீழத்துவாகுடி நாடு
8. கொற்கை நாடு,
9. செங்குள நாடு
10. மேல்செங்குள நாடு,
11. கீழ் செங்குள நாடு,
12. பூளியூர் நாடு
13. செங்கணி நாடு
14. பிரம்பை நாடு
15. கானம்பூண்டி நாடு
16. சித்தர்குடி நாடு
17. மேலமகா நாடு
18. கீழ்வெங்கை நாடு
19. குலமங்கல நாடு
20. சித்து பத்து நாடு
21. பனையக்கோட்டை நாடு
22. காசாங்கோட்டை நாடு
23. தென்னம நாடு

24. ஒக்கு நாடு

25. ஒரத்த நாடு

26. பட்டுக்கோட்டை வளநாடு

27. கறப்பிங்கா நாடு

28. அஞ்சுவண்ணப்பத்து நாடு

29. கல்லாக்கோட்டை நாடு

30 அய்யலூர் நாடு

31. தென்பத்து நாடு

32. மத்தச்செருக்குடி நாடு

33. அன்னவாசற் பத்து நாடு

34. குண்ணுவாரந்தய நாடு

35. கோட்டைபத்து நாடு

36. பிங்களக்கோட்டை நாடு

37. மேலப்பத்து நாடு

38. பெரியகூத்தப்ப நாடு

39. அறந்தாங்கி கீழாநெல்லி நாடு

40. வடுவூர் நாடு

41. திருமங்கலக்கோட்டை நாடு

42. பாப்பா நாடு

43. முசிரி நாடு

44. பின்னையூர் நாடு

45. விற்குடி நாடு

46. அம்பு நாடு

47. ஆலங்குடி நாடு

48. நிசிலி நாடு

49. நாலு நாடு

50. காசா நாடு

51. கோனூர் நாடு

52. சுந்தர நாடு

53. மருங்கை நாடு

54. வாகரை நாடு

55. நீர்வதி நாடு

56. வாராப்பூர் நாடு

57. பெருங்களூர் நாடு

58. வித்தி நாடு

59. வத்தனாக்கோட்டை நாடு

60. தென்மலை நாடு

61. வடமலை நாடு

62. குணடாகோயில் நாடு

63. சோத்துப்பாலை நாடு

64. மின்னாத்தூர் நாடு

65. நொடியூர் நாடு

66. அண்டக்குள நாடு

67. செருவாசல் நாடு

68. திருபத்து நாடு

69. அஞ்சிநில நாடு

70. ஆமையூர் நாடு

71. கிளியூர் நாடு

72. மழை நாடு

73. காவல் நாடு

74. காவிக்கோவல் நாடு

75. வல்ல நாடு

76. மாலை நாடு

77. தெருபோகி நாடு

78. இரும்பு நாடு

79. முத்து நாடு

பாண்டிய மண்டல கள்ளர் நாடுகள்

1. மேல நாடு

2. நடுவி நாடு (பழைய நாடு)

3. சிறுகுடி நாடு

4. வெள்ளலூர் நாடு

5. நாலூர் நாடு

6. அஞ்சூர் நாடு

7. ஆறூர் நாடு

8. மயில்ராயன்கோட்டை நாடு

9. பட்டமங்களம் நாடு

10. பாகனேரி நாடு

11. கண்டர் மாணிக்க நாடு

12. குன்னங்கோட்டை நாடு

13. கீழக்குடி நாடு (கற்பக நாடு என்ற பிற மலைக்கள்ளர் நாடு)

14. பதினாலு நாடு

மதுரை நாட்டுக்கள்ளர்கள்

மதுரை நாட்டுக்கள்ளர்கள் தங்களது ராணுவத்தன்மை காரணமாக, தங்களது நாடுகள் அமைப்பைத் தற்காத்துக் கொண்டனர். அக்கள்ளர் நாடுகள் அரசியல் ரீதியாக எந்த ஒரு மேல் ஆதிக்கத்திற்கும் கட்டுப்படாத தன்னரசு நாடுகளாய்த் திகழ்ந்தன. அவை மதுரையிலிருந்த மைய அரசிற்கு எந்த ஒரு வகையிலும் வரியோ, கிஸ்தியோ செலுத்தவில்லை என கிறிஸ்துவ மதப்பிரசாரத்திற்காக தமிழகத்துக்கு வந்த இயேசு சபைப் பாதிரியார்கள் குறிப்பிடுகின்றனர்.

யாராவது வரிக்கேட்டு வந்தால், வானம் பொழிகிறது. பூமி விளைகிறது. நாங்களும், எருதுகளும் உழைத்து அறுவடை செய்கிறோம். அப்படி இருக்கையில் அதன் முழுப்பயனையும் நாங்கள் தான் அனுபவிக்க வேண்டும். எங்களுக்கு இணையான உங்களுக்கு (மன்னர்களுக்கு) ஏன் கட்டுப்படவேண்டும்? ஏன் வரி கொடுக்க வேண்டும்? என மறுத்தனர் இவ்வாறு கள்ளர் நாடுகளின் அரசியல் தனித்தன்மையாக திகழ்ந்ததால், பிற்காலத்தில் நாடுகள் அமைப்பு என்பது கள்ளர்களுக்கு மட்டும் உரித்தான சமூக அரசியல் மற்றும் புவியல் அமைப்பாக நிலைபெற்றுவிட்டது.

அதனால் தான் 17-18ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலிருந்து சமயப்பணி செய்வதற்காக தமிழகம் வந்த இயேசு சபைப்பாதிரியார்கள் தாங்கள் வாழுகின்ற பகுதிகளைப் பல நாடுகளாய்ப் பிரித்து வாழ்வது கள்ளர்களுக்கு மட்டும் உரிய வழிமுறை எனத் தங்களது குறிப்புகளில் பதிவு செய்து விட்டனர். மார்டின் பாதிரியார் அவர்கள் டீ - வில்லட்டி பாதிரியார் அவர்களுக்கு 08.11.1709-ல் எழுதிய கடிதத்தை மேற்கோள்காட்டி திரு. சத்தியானந்த ஐயர் மதுரை நாயக்கர் சரித்திரம் (இணைப்பு) அனெக்சர் 304-305-ல் குறிப்பிடுகிறார். மேலும் திருவாளர் தாஸ்டன் என்ற வரலாற்று ஆசிரியர் தனது தென்னிந்திய சாதித் தொகுப்பு நூலில் பிரிவு 1909-லும் குறிப்பிடுகிறார்.

மதுரை மண்டலம் :

மதுரை நகருக்கு கிழக்குப்பகுதியில் அழகர் கோவில் மலையிலிருந்து புதுக்கோட்டை கடற்கரை அமைந்துள்ள பகுதி வரை மதுரை மண்டலம் என அழைக்கப்பட்டது. இப்பகுதியில் சுமார் 15-க்கு மேற்பட்ட கள்ளர் நாடுகள் இருந்து வந்ததாக தெரியபடுகிறது. கி.பி.11.-ம் நூற்றாண்டில் சோழர்கள் பாண்டிய நாட்டை கைப்பற்றிய பொழுது மேற்படி பகுதியைக்காப்பதற்காக சோழநாட்டிலிருந்து ஒரு சிலர் கள்ளர் வகுப்பினரை குடியேற்றினர். அவர்கள் வம்சத்தவர்களே இப்பாண்டிய நாட்டுக்கள்ளர்கள் என, தனது மக்கள் தொகை கணக்கெடுப்புப் பதிவேட்டில் பிரான்சிஸ் என்ற ஆங்கில அதிகாரி கூறுகிறார்.

ஆனால் கள்ளர்களது குடியேற்றம், எந்த மன்னர்களாளோ அல்லது எந்த மன்னர்களுக்காகவோ ஏற்பட்டது அல்ல. அவர்கள் ஒரு சுதந்திரமான இனக்குழுக்களாவர்கள். அதனால் அவர்கள் தன்னெழுச்சியாகவோ அல்லது சுயமாகவோ வந்து பாண்டிய மண்டலத்தில் குடியேறினர் என பிளாக்பென் என்ற ஆங்கில வரலாற்றாசிரியர் கூற்று ஏற்கத்தக்கதாக உள்ளது.

கள்ளழகர்

கள்ளழகர் யார்? தெய்வமா? குறுநில மன்னரா? நீண்ட நாள் என்னுள் எழுந்த கேள்விக்கு இன்றுதான் (23.05.2017) விடை கிடைத்தது. அழகர்கோயில் அருகில் உள்ள மாங்குளம் கிராமத்தில் வாழ்ந்து வரும் **திரு.ம.பாரதிவாசு** அவர்களால் எனது சந்தேகத்துக்கு, தெளிவுற விளக்கம் கிடைத்தது.

கள்ளர் குலத்தைச் சார்ந்தவர்கள் சிவகோத்திரம் என்றும், சிவனை வணங்குபவர்கள் என வேதியர்கள் கூறுவார்கள். கள்ளர்கள் கருப்புச்சாமி, வெள்ளைச்சாமி, அய்யனார், காளியம்மன், மாரியம்மன், பிடாரியம்மன், எல்லைக்காவல்தெய்வம், கிராமதேவதைகள், முன்னோர்கள்முதலிய சிறு தெய்வங்களை தங்களது குலதெய்வமாக வணங்கி வருகிறார்கள். மேலும் விழாக்காலங்களில் கிடாய், கோழி வெட்டி தங்களது தெய்வமாக கருதப்படும் சிறு தெய்வங்களுக்கு அசைவப் படையல் படைப்பார்கள்.

அழகர்கோயில் 108 வைணவத் தலங்களில் ஒன்றானதாக கூறப்படுகிறது. வைணவத் தலங்களில் அசைவப் படையல் படைக்க அனுமதியில்லை. பின் எப்படி வைணவத் தலமாகிய அழகர்கோவில் கோட்டைக்குள்ளே ஆடு, கோழி வெட்டி படையல் செய்யப்படுகிறது. மேலும் கள்ளழகர், மேலநாட்டு மன்னர் என்பதுவும் கள்ளர்களின் முன்னோர், தெய்வம் எனவும் பாரதிவாசுவின் விளக்கத்தால் தெள்ளத்தெளிவாகியது.

அழகர் என்றால் அழகானவர், என்று பொருள் பின், ஏன் அவருக்கு சுந்தரராஜா எனப்பெயர் சூட்டப்பட்டது. பாண்டிய நாட்டில், கள்ளர் நாடுகளில் ஒன்றான மேலநாட்டிற்கு மன்னராக இருந்து வந்தவர் அழகர். மேல நாட்டுக்கள்ளர்கள் சோழ மண்டலத்திலிருந்து சுமார் 1300 வருடத்துக்கு முன் இன்றைய இடத்திற்கு (மேல நாடு) புலம் பெயர்ந்து வந்தவர்கள் என்பது வரலாறு.

மேல நாட்டிற்கு உட்பட்ட பகுதிதான் அழகர்கோயில், மேலநாட்டின் அரண்மனையே இன்றைய அழகர் கோயிலே. அழகர் மன்னர் சிறந்த வீரர், வளரி போன்ற ஆயதங்களை திறம்பட கையாள்பவர். வளரி என்பது எதிரியைச் சரியாகத் தாக்கிவிட்டு, மீண்டும் வீசியவன் கைக்கே திரும்பி வந்து விடும். (பூம்ராங்போல்) கள்ளழகர் சிலையில் அவர் பயன்படுத்திய ஆயுதமான வளரி என்ற ஆயுதமும் உள்ளது. வளரி ஆயுதத்தை தயாரித்த ஊரே வளரிபட்டி மருவி வெள்ளரிப்பட்டி என்று அழைக்கப்படுகிறது. பாண்டி மண்டல கள்ளர் நாடுகளில் அழகர் மன்னர் பெரிதும் போற்றப்பட்டார்.

பெரியோர்கள், சான்றோர்கள், மன்னர்கள் இறந்தவுடன் அவர்களுக்கு நடுகல், சிலை வைத்து தெய்வமாக கருதி வழிபடுவது கள்ளர்களின் பழக்கம். அழகர் மன்னர் இறந்தவுடன் தெய்வமாக சிலை

வடித்து, அவரது அரண்மனையையே கோயிலாக்கி இப்பகுதி மக்கள் வழிபட்டு வந்தனர். மேல நாட்டு அரண்மனையே அவர் பெயரின் நினைவாக அழகர் கோவிலாகி, பின்னர் வாணாதிராயர்களால் பெரிதாக விரிவடைந்தது. வாணாதிராயர்கள் அழகர்கோயிலை தலைநகராக கொண்டு, நாயக்கர்களின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரியத்தின் தாக்கம் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள காலத்தில், அது கோயில்களிலும் எதிரொலித்தது. அழகர் -சுந்தரர்-ராஜா-ராஜப்பெருமாள் ஆகி சுந்தரராஜப்பெருமாள் ஆனார். ஆக, அழகர்ராஜா சரியான அர்த்தத்துடன் சுந்தரராஜராக ஆக்கி, பின் பெருமாளையும் இணைத்துவிட்டனர்.

இப்பகுதி மக்கள் இதை கடுமையாக எதிர்க்கவும், வேறுவழியின்றி அன்றைய பாண்டிய அரசு கள்ளர்களின் தெய்வம் அழகர்தான் என்ற உண்மையை உணர்ந்து சுந்தரராஜப்பெருமாள் பெயரை கள்ளழகர் என்று மாற்றினர் என அறியவருகிறது.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், ஆதிக்க சக்திகள் மீண்டும் ஒன்று சேர்ந்து, மீண்டும் கள்ளழகரை, சுந்தரராசப்பெருமாள் என்றும், தமிழர் தெய்வமான முருகனின் ஆறாவது படையான பழமுதிர்சோலை என்ற பெயரை, திருமாலிருஞ்சோலை என்றும் மாற்றினர்.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேல நாட்டைச் சேர்ந்த, நரசிங்கம்பட்டி அம்பலகாரரும் மற்ற கள்ளர் நாட்டு அம்பலகாரர்கள் இணைந்து நீதி மன்றம் சென்று வழக்கில் வெற்றி பெற்று மீண்டும் கள்ளழகர், பழமுதிர்சோலை என்று அழைக்கப்பட வேண்டும் என நீதிமன்ற உத்தரவு பெற்றனர் என்பதும் தெரியவருகிறது. அதன்படி, அழகர்கோயில் தெய்வத்தை கள்ளழகர் என்றும், திருமாலிருஞ்சோலையை பழமுதிர்சோலை என்றும் வழங்கி வருகிறது. அதனால்தான், அழகர் கோயில் அனைத்துத் திருவிழாக்களும் சிறப்புற நடைபெற்றுவர, மேல நாட்டுக் கள்ளர்களின் பெரும் பங்களிப்பு உள்ளது என்பது தெள்ளத்தெளிவாகிறது.

அதனால்தான் கள்ளழகர் சித்திரைத் திருவிழாவின்போது மதுரை வரும். நிகழ்வின்போது அம்பலகாரர் மண்டகப்படி (அவுட்போஸ்ட்) கள்ளழகருக்கு முதல் மண்டகப்படியாக அமைந்தது. மேலநாட்டு கள்ளர்களை (அம்பலகாரர்கள்) பெருமைப் படுத்துவதற்கே என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது மதுரை நகரம் பெரிதும் விரிவடைந்ததால் அவுட்போஸ்ட்டுக்கு முன் வடக்கு பகுதியில் நிறைய மணடகப்படிகள் உருவாகிவிட்டன. மேலும் சித்திரைத் திருவிழாவின்போது (வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி) மதுரை செல்லும் கள்ளழகருக்கு பாதுகாப்பாக கூடவே சென்று அழைத்துவரும் உரிமை மேலநாட்டுக் கள்ளருக்கு மட்டுமே. மன்னன் எங்கு சென்றாலும் பாதுகாப்பது குடிபடைகளின் கடமைகளில் ஒன்று என்பது நினைவு கூறத்தக்கது.

இனிமேலாவது மறைக்கப்பட்ட, திரிக்கப்பட்ட உண்மைகளை அறிந்து கொண்டு, நமது வருங்கால சந்ததியினருக்கு எடுத்துரைப்போமாக !

மேல நாடு :

இது ஐந்து தெருவாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. மேலைத்தெரு நரசிங்கம்பட்டி முதலிய 8 ஊர்களையும், தெற்குத்தெரு முதலிய 8-ஊர்களையும், வடக்குத்தெரு வல்லாளப்பட்டி முதலிய 27 ஊர்களையும், பத்துக்கட்டு தெருவானது சிட்டம்பட்டி முதலிய 10 ஊர்களையும், தெற்குப்பகுதி நாட்டுத்தெருவானது திருவாதவூர் முதலிய 8 ஊர்களையும் கொண்டது. மேல நாட்டுக்கள்ளர்கள் அழகர் கோயில் திருவிழாக்களில் பெரும்பங்கு வகிக்கின்றனர். மேலநாடு முழுவதும் ஆறு பகுதிகளாகவும், ஒவ்வொரு பகுதியும் பல கிராமங்களாகவும் ஒவ்வொரு கிராமமும் பல மந்தைகளாகவும், ஒவ்வொரு கரைக்கு ஒரு அம்பலமும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பெரிய அம்பலகாரரும் நியமிக்கப்படுகின்றனர். வடக்குத்தெருவின் பெரிய அம்பலகாரர் மேல நாட்டிற்கே பெரிய அம்பலகாரராய் கருதப்படுகிறார். இவர்கள் தந்தை வழியில் பல கரைகளாக உள்ளனர். ஒவ்வொரு கரையும், ஒரு பங்காளிகளாய் கருதப்படுகின்றனர். அக்கரைகளின் அடிப்படையில் திருமண உறவுகள் செய்கின்றனர். (மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தின் மேற்குப் பகுதி)

நடுவி நாடு (அ) பழைய நாடு :

கள்ளர் நாடுகளில் மையப்பகுதிகளில் அமைந்துள்ளதால் இது நடுவி நாடு எனவும் சுமார்,1000 வருடங்களுக்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து வந்த கள்ளர்கள் முதன் முதலில் குடியேறிய நாடு என்பதால், இது பழைய நாடு எனவும் அழைக்கப்படுகிறது. இந்நாடு 18 ஊர்களைக்கொண்டது. மேலூர் இதன் தலைநகரமாகும். இந்தப்பூர்விக 18 பட்டிகள் இன்று பல கிராமங்களாகப் பெருகி உள்ளன. இவர்கள் மத்தியில் தந்தை வழியில் 12 கரைகள் உள்ளன. இந்த 12 கரைகளும் 7 கரை 5 கரைகளாகப் பிரிக்கப்பட்டு இரு தொகுதிகளாக இருக்கின்றன. இந்த ஏழு கரைகளில் சொக்கன் கரையைச்சார்ந்த அம்பலகாரர், பெரிய அம்பலகாரராக தேர்வு செய்யப்படுகின்றார். மீதி ஒரு தொகுதியிலுள்ள இளமண்கரை சார்ந்தவர் பெரிய அம்பலகாரர் ஆவார். (மதுரை மாவட்டம், மேலூர் நகர் மற்றும் நகரைச் சுற்றியுள்ளப் பகுதிகள்)

மேலூர் நகரில் உள்ள காஞ்சிவனம் கோயில் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும்.

வெள்ளலூர் நாடு:

சிறுகுடி நாட்டை வடக்கு எல்லையாகவும் அஞ்சூர் நாட்டை தெற்கு எல்லையாகவும், மல்லாக்கோட்டை நாட்டை கிழக்கு எல்லையாகவும், நடுவி நாட்டை மேற்கு எல்லையாகவும் கொண்டுஅமைந்திருப்பது வெள்ளலூர் நாடாகும். இந்நாடு தற்போதைய மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தின் தென்கிழக்குப் பகுதியிலும், சிவகங்கை வட்டம் இடையமேலூர் உள்வட்டத்திற்குள்ளும் பரவி அமைந்திருக்கின்றது. அறுபது கிராமங்களை உள்ளடக்கியது. இந்நாட்டின் அனைத்து சமுதாய மக்களுக்கும் பொதுவான தலைவர், பெரிய அம்பலகாரர் ஆவார்.

வெள்ளலூர் நாடு 5 மாகாணமாகவும், ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஊரின் தலைமையில் இயங்கி வர, அதற்குண்டான எல்லைகள் வரையறுக்கப்பட்டன. நாட்டிலுள்ள 11 கரைக்கும் 1 வீதம் 11 அம்பலகாரர்களும், அவர்களுக்கு உதவியாக 11 இளங்கச்சிகளும் இருக்கவேண்டுமென்று விதிகள் கொண்டு வரப்பட்டன. பின்னர் 2 அம்பகாரர் மற்றும் 2 இளங்கச்சி என்று விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி 22 அம்பலகாரர்கள், இளங்கட்சிகள் என்று ஏற்பட்டது.

அனைத்துக் கரைகளுக்கும் சம அந்தஸ்து தரப்பட்டுள்ளது. அம்பலப்பட்டம் சுழற்சி முறையில் அந்தந்த கரையில் தேர்ந்தெடுக்கப்பட்டும், பெரிய அம்பலகாரர் பட்டமும் ஏற்கனவே பொறுப்பில் உள்ள 22 கரை அம்பலகாரர்களிலிருந்துதான் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. வாரிசு பரம்பரை முறையில் எந்தவித பட்டமும் நியமிக்கப்படுவதில்லை. அனைவருக்கும் வாய்ப்பு என்ற ஜனநாயக குரல் இன்று வரை இந்நாட்டில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மற்றெந்த கள்ளர் நாடுகளிலும் அம்பலப்பட்டம் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதில்லை குறிப்பிடத்தக்கது.

மாகாணக்கூட்டங்களும், நாட்டுக்கூட்டங்களும் கூட்டுவதற்கு முறையான விதிகள் வகுக்கப்பட்டன. மாகாணக்கூட்டம் என்பது அந்த மாகாணத்தில் தலைமை ஊரில் அம்பலகாரர் தலைமையில் குடிகள் கூடுவது. நாட்டுக்கூட்டம் என்பது நாட்டுத் தலைவராகிய பெரிய அம்பலகாரர் தலைமையில் 22 அம்பலகாரர்கள், இளங்கட்சிகள் மற்றும் குடிமக்களும் கூடுவதுண்டு, சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளும் நாட்டுசட்டத் திட்டங்கள் படி (பழக்கப்படி) தீர்வு காண்பது பழக்கமாக இருந்து வந்துள்ளது. இந்த வழக்கம் இன்றைய இந்திய அரசியல் சட்டத்திற்கு முன்னோடியாக இருந்தது என்பது மிகையாகாது. இந்த பழக்க வழக்கங்கள் மற்றும் சட்டத்திருத்தங்களும் உருவாக மூலக் காரணமாயிருந்தவரும் வெள்ளலூர் நாட்டு சிற்பி என்றழைக்கப்படும் சாயும் படைதாங்கி வீரணனம்பலாகாரர் என்ற பெருமகனார்தான் என்பது வரலாறு.



தெய்வத்திரு.வீரணன் அம்பலகாரர்
முதல் பெரிய அம்பலகாரர்
வெள்ளலூர் நாடு

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்

- குறள்-959

நிலத்தின் இயல்பினை அதனிடம் முளைத்த முளை காட்டும், அவ்வாறே நல்ல குலத்தில் பிறந்தவர்களது இயல்பினை, அவர் வாய்ச்சொற்கள் எடுத்துக்காட்டும். வெள்ளலூர் நாடு மற்றும் அதன் மக்கள் இருக்கும் வரை, அவரது பெயர் இருக்கும் என்பதை இன்றுவரை நிலை நிறுத்தப்படுகிறது.

போரில் கலந்து கொண்ட வீரர்களின் போர் நடவடிக்கையை வைத்தே வெள்ளலூர் நாட்டில் கள்ளர்களில் பிரிவுகள் ஏற்பட்டதாக வரலாறு.

1. மூண்டவாசிகரை

மூண்டுவந்து (சுற்றி வளைத்து) எதிரியின் படையினரை தாக்கியதால் மூண்டு வாசி. மூண்டவாசி ஆகியது. குதிரை - முண்டுதல் சுற்றி வருதல், போரில் மூண்டு மூண்டு சண்டை செய்வது.

2. வேங்கைப்புலி - தற்கொலைப்படை

புலி பாய்வதுபோல், நேருக்குநேர் போர்புரிவது எதிரியின் கால்களை துணிந்து, குனிந்து வெட்டியதால் கால்களை வெட்டியவர்களே, கால், கால் வெட்டியவர்களை, காக்கா வெட்டி என்ற பெயர் உருவாக காரணமாக இருந்தது.

3. சமட்டி கரை - சமட்டி என்ற ஆயுதத்தை (சுத்தியல்)

ஆயுதத்தை பயன்படுத்தி எதிரியை வென்றதால்

4. நய்க்கான்கரை

நடுநிலையாக நின்று படையை நடத்தி சென்றதால், நாயகன் என்ற பெயரே மருவி நய்க்கான் கரையானது.

பழக்க வழக்கத்தில் உயர்ந்தவர்களாக வாழ்ந்தவன், உயரியமான பண்பாட்டுக் கூறுகளை கொண்டவர்கள், சமுதாய ஒழுங்கைப் பேணியவர்கள்.

5. சாயும்படைதாங்கி

போரில் காயப்படும் வீரரை தாங்கி மருத்துவம் மற்றும் உதவிகள் செய்வது - சாயும் படை தாங்கி எதிரிகள் அடிக்க வந்ததைக் கண்டு படைகள் பயந்து, புறமுதுகிட்டு ஓடும்போதும், படைகள் தோல்வியுடன் சாய்ந்து போகும்போதும், சோர்வு அடையாமல், மீண்டும் படைகளைத்திரட்டி வெற்றி வாகை சூடியவர்கள்.

6. வெக்காலி புலி - இவர்கள் படைபலத்தைப் பெருக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்கள். கூர்மையான கனமான போர் வாளால் எதிரியை இரண்டாக வெட்டுபவர்கள். வெள்ளலூர் நாட்டில் கிடாய் வெட்டி என்ற பட்டமும் இவர்களுக்கு உள்ளது.

7. சலுப்புலி - சாமிப்புலி - சலிப்புத்தட்டாமல் போர் செய்யக்கூடியவர்கள்.

8. திருமான் - திருமகன் - அழகு பொருந்திய தோற்றம் உடையவர்கள்.

9. செம்புலி - பார்த்தால் பயப்படக்கூடிய செம்மை நிறப்புலி தோற்றமுடைவர்கள்.

10. நண்டன் கோப்பன் - போரில் சண்டையிடும் பொழுது நண்டுப் பிடியாக அமுக்கி அவர்களுடைய கழுத்தை நெறிப்பார்கள்.

11. பூலான் மழுவராயன் - போர்க்களத்தில் எங்குநோக்கினாலும் இவர்கள் தனித்தன்மையுடைவர்கள், மனப்பிராயம் என்ற பெயர் திரிந்து மலைபிராயன் என்றாயிற்று எனக்கூறுவர், மழவராயன் என்றும் கூறுவர். (மூவேந்தர் குல தேவர் வரலாறு ப.141)

தங்களது பெரும்பாலான கரைகளுக்கு புலி என்று சேர்த்து வைத்ததைப் பார்க்கும் போது சோழர்களின் புலிக்கொடி பெயர் வருவதால், இவர்கள் சோழர்களின் வழித் தோன்றல் என்று தெள்ளத்தெளிவாகிறது. மழவராயன் என்ற பெயர் சோழ மண்டலத்தில் பல இடங்களில் பயன்படுகிறது.

ஸ்ரீ கருங்கல் தெய்வம், ஸ்ரீ ஏழைகாத்த அம்மன், ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமி ஆகியவை நாட்டு தெய்வங்களாக வணங்கப்பட்டு, முறையே வைகாசி, புரட்டாசி, மாசி மாதங்களில் நாட்டு திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நாட்டுத் திருவிழாவிற்கு நாள் வைத்துவிட்டால் (நாள் குறித்தல்), அன்றைய நாளிலிருந்து திருவிழா முடியும் வரை விரதம் இருந்து அசைவ உணவு சமைப்பதும் இல்லை, சாப்பிடுவதும் இல்லை. இட்லி, வடை, தோசை மாவு அரைப்பதில்லை. ஏனென்றால் அரைத்த மாவுப்பலகாரங்கள் சாப்பிடுவதில்லை. எண்ணெய் பலகாரங்கள் செய்வதில்லை. வெள்ளலூர் நாட்டு மக்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் மேற்படி விரதமுறையை தவறாமல் கடைபிடித்து வருகிறார்கள். இந்நாட்டு மக்களில் பலர் புலம் பெயர்ந்து சிவகங்கை நகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான அல்லூர், சேந்திஉடையநாதபுரம், நத்தபிரக்கி, பனையூர், மீனாட்சிபுரம், மானாமதுரை ஆகிய பகுதிகளிலும் மதுரை நகர், மதுரை மாவட்டம், மேலூர், அலங்காநல்லூர், தெத்தூர் புதூர், கொளுஞ்சிப்பட்டி, நாட்டார் மங்களம், தேனிமாவட்டம் பல்லவராயன்பட்டி, அய்யம்பட்டி, சுற்றுவட்டார பகுதிகளிலும் திண்டுக்கல் மாவட்டம் தேவதானப்பட்டி, அணைக்கரைப்பட்டி, திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும் ஆங்காங்கேயும், நாகை மாவட்டம் சீர்காழியை சுற்றியுள்ள பகுதிகள், சிதம்பரம், நெய்வேலி, கோவை, சென்னையிலும் பரவி வாழ்ந்து வருகின்றனர். மேலும் மணிப்பூர் மாநிலம் மோரேயிலும், வெளிநாடுகளில் மியான்மர் (பர்மா) நாட்டில் பல பகுதிகளிலும் ஸ்ரீ லங்கா, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு நாடுகள் (UAE) குவைத், சவுதி அரேபியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளிலும் நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுகுடி நாடு (சேருங்குடி நாடு)

சீரும், சிறப்பும் கொண்ட நாடு சிறுகுடி நாடு.

இந்நாடு பாண்டிய நாட்டின் வடபகுதியிலும் பிரான்மலை எனப்படும். பறம்பு நாட்டிற்குத்தெற்கேயும், மல்லாக்கோட்டை நாட்டிற்கு மேற்கேயும், பழைய நாட்டிற்கு கிழக்கேயும் அமைந்திருக்கின்றது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் தொண்டைமண்டலத்திலிருந்து வந்த கள்ளர் குலத்தைச்சார்ந்த மூன்று பிரிவினர் சேர்ந்து வாழ்ந்ததால் சேருங்குடி நாடு என அழைக்கப்பட்டது. இவர்கள் தாங்கள் வணங்கும் குலதெய்வங்களில் அடிப்படையில் திருமண உறவு வைத்துக்கொள்கின்றனர். முன்பு வெள்ளலூர் நாட்டின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டனர். வெள்ளலூர் மன்னான் சின்னாண்டித்தேவனால் சிறுகுடியார்கள் துரத்தப்பட்டு அப்பகுதி மீட்கப்பட்டது. இதனுடைய ஒரு பகுதி வெள்ளலூர் நாட்டிற்கு மேற்கே எல்லையாக அமைந்துள்ளது. (மதுரை மாவட்டம், மேலூர் வட்ட வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகள்)

மயில்ராயன் கோட்டை நாடு (மல்லாக்கோட்டை)

வடக்கே பறம்பு நாடு என்ற ஐந்து நாட்டையும், மேற்கே சிறுகுடி நாட்டையும், தென் மேற்கே வெள்ளலூர் நாட்டையும், கிழக்கே பட்டமங்கலம் நாட்டையும் எல்லைகளாக கொண்டு அமைந்திருக்கின்ற கள்ளர் நாடு மல்லாக்கோட்டை நாடு எனப்படும் மயில்ராயன் கோட்டை நாடு. இந்நாடு சிவகங்கை வட்டத்தில் உள்ளது.

சுமார் 1000 வருடங்களுக்கு முன்பு தமிழகத்தின் வடக்குப்பகுதியிலிருந்த வள நாட்டிலிருந்து நரசிங்கத்தேவன், மண்ணத்தேவன், பொன்னத்தேவன், வல்லாளத்தேவன் சீறும்புலித்தேவன் என்ற ஐந்து பேர் தலைமையில் கள்ளர்கள் கூட்டம் தெற்கு நோக்கி வந்தது. இப்பகுதிக்கு வரும்போது மயில் ஒன்று இவர்களது வேட்டை நாய்களை எதிர்த்து சண்டையிட்டது. அதனால் இப்பகுதி வீரமிக்கது எனக்கருதி இங்கு குடியமர்ந்தனர். அதனால் மயில் ஆட்சி செய்கின்ற பகுதி எனப் பொருள் படுகின்ற வகையில் இப்பகுதிக்கு மயில்ராயன் கோட்டை நாடு எனப்பெயரிட்டனர். அப்பெயர் மல்லாக்கோட்டை என மருவியது. இப்பகுதியில் ஏற்கனவே பெருமளவு வாழ்ந்து வந்தவர்கள் கார்காத்த வெள்ளாளர்கள், இவர்களுக்குள் நடந்த சிறு சிறு மோதலில் கார்காத்த வெள்ளாளர்கள் தாக்குப்பிடிக்காமல் வெளியறேினர். அதற்கு பிறகு கள்ளர்கள் தங்களது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தன்னரசு நாட்டை உருவாக்கினர்.

இம்மயில்ராயன்கோட்டை நாடு எட்டுத்தலைமைக்கிராமங்களாகவும் இரண்டு வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைமைக்கிராமத்திற்கும் பல துணை கிராமங்களும், ஒவ்வொரு வட்டத்திற்குள்ளும் பல கிராமங்களும் உள்ளன. இந்நாடு சிவகங்கை வட்டத்தில் உள்ளது.

இந்த 10 தலைமைக்கிராமங்களுக்கும், ஒவ்வொரு பெரிய அம்பலகாரர் உள்ளார். அவர்கள்வம்சாவளி அடிப்படையில் அப்பொறுப்பினை ஏற்கின்றனர். இந்த 10 பெரிய அம்பலகாரர்களும் ஒன்று கூடி வடவன்பட்டியில் நாட்டு விவகாரங்களை கலந்து ஆலோசித்து நல்ல முடிவுகளை எடுப்பர். வடவன் பட்டியிலுள்ள திருவிடை அய்யனார் கோவிலும் மல்லாக்கோட்டையிலுள்ள சந்திவீரன் கோவிலும் நாட்டின் பொதுக்கோவில்களாக கருதப்படுகின்றன. அவற்றை முறையே மாசி மாதம், ஆனி மாதம் 10 நாட்கள் விழா எடுத்து வழிபடுகின்றனர். புவியியல் அடிப்படையில் 10 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதோடு மயில்ராயன்கோட்டை கள்ளர்கள், தந்தை வழியில் பல கூட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் பங்காளிகள் ஆவார். அதனால் ஒரே கூட்டத்தில் திருமண உறவு கொள்வதில்லை. இவர்கள் மத்தியில் அறுபதிற்கும் மேற்பட்ட கூட்டங்கள் உள்ளன.

நாலூர் நாடு

இந்நாடு கிழக்கே ஆறூர் வட்டவகை நாட்டினையும், மேற்கேயும், தெற்கேயும் அஞ்சூர் நாட்டினையும் வடக்கே வெள்ளலூர் நாட்டினையும் எல்லைகளாக உள்ளன. இன்றைய சிவகங்கை ஒன்றியத்தில் பரவி அமைந்திருக்கிறது, இவர்கள் மயில்ராயன்கோட்டை நாட்டிலிருந்து பிரிந்து வந்தவர்கள் எனக்கூறப்படுகிறது. இந்நாடு தமறாக்கி, அரசனூர், கிளாதிரி, இலுப்பக்குடி என நான்கு கிராமங்களைக்கொண்ட நாடு

ஆகையால் நாலூர் நாடு என அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு தலைமைக்கிராமங்களுக்கும் பல உட்கிராமங்களைக் கொண்டிருக்கின்றன. தமறாக்கி இந்நாட்டின் தலைமைக் கிராமமாகும் இங்குள்ள அய்யனார் கோயிலும் நாட்டின் பொதுவான கோயிலாக கருதப்படுகின்றன. இவற்றிற்குக் கார்த்திகை மாதம் மது எடுப்புத்திருவிழா நடத்தப்படுகின்றது. இந்நாலூர் நாட்டுக்கள்ளர்கள் தந்தை வழியில் பல கூட்டங்களாகப்பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே கூட்டத்தை சேர்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். நான்கு தலைமைக்கிராமங்களுக்கும் நான்கு பெரிய அம்பலகாரர்கள் உள்ளனர். தமறாக்கியின் பெரிய அம்பலகாரர் நாட்டின் பெரிய அம்பலகாரர் ஆக கருதப்படுகிறார். இவர்கள் வம்சாவளி அடிப்படையில் பெரிய அம்பலகாரர் பொறுப்பினை பெறுகின்றனர். இந்நாடு சிவகங்கை வட்டத்தில் உள்ளது.

அஞ்சூர் நாடு

தெற்குப்பகுதியிலுள்ள கடைசி கள்ளர் நாடாகும். ஐந்து தலைமைக்கிராமங்களை உள்ளடக்கிய நாடாகையால் அஞ்சூர் நாடு எனப்படுகின்றது. இதில் ஏனாதி, பூவந்தி, கீரனூர், சுண்ணாம்பூர் ஆகிய மூன்று ஊர்களிலும் கள்ளர்கள் வாழ்கின்றனர். செம்பூரில் கோனார்களும், மடப்புரத்தில் நாடார்களும் மிகுதியாக வாழ்கின்றனர். அதனால் முதல் மூன்று ஊர்களில் உள்ள அம்பலங்கள் கள்ளர்களும், செம்பூரில் கோனார்களும், மடப்புரத்தில் நாடார்களும் அம்பலங்களாக உள்ளனர். திருப்புவனத்தில் உள்ள சௌந்திர நாயகி புஷ்பனேஸ்வரர் ஆலயத்தில் இந்த அம்பலங்களுக்கு முதன்மை அளிக்கப்படுகிறது.ஏனாதி இந்நாட்டின் தலைமைக் கிராமமாகும். ஏனாதி அம்பலகாரர் நாட்டின் பெரிய அம்பலகாரராய் கருதப்படுகிறார். இங்குள்ள ஸ்ரீ தன்னாயிர மூர்த்தி அய்யனார் கோவில் அஞ்சூர் நாட்டிற்கு பொதுக்கோயிலாகும். இந்த அஞ்சூர் நாட்டுக்கள்ளர்கள் தந்தை வழியில் பல கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்காளிகளாவர். இந்நாடு சிவகங்கை வட்டத்தில் உள்ளது.

ஆறூர் வட்டவகை நாடு

இந்நாடு தெற்கே சிவகங்கை அரண்மனைப்பகுதி, வடக்கே மயில்ராயன்கோட்டை நாட்டையும், கிழக்கே பாகனேரி நாட்டையும், மேற்கே வெள்ளலூர் நாட்டையும், நாலூர் நாட்டையும் எல்லைகளாகக்கொண்டு அமைந்தள்ளது. இன்றைய சிவகங்கை வட்டத்தில் அமைந்துள்ளது.

ஆறூர் நாடு வடக்கு வட்டவகை, தெற்கு வட்டவகை என இரண்டு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ளது. (மொத்தம் 22 1/2 கிராமம்) நாலுகோட்டை கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்ட 11 1/2 கிராமங்கள் வடக்கு வட்டவகை, (ஒக்கூர், பிரவலூர், புதூர்) என்றும் ஒக்கூர் கிராமத்தை தலைமைக் கிராமமாகக்கொண்ட 11 கிராமங்கள் தெற்கு வட்டவகை (இடையமேலூர், ஈசனூர், சாலூர்) என்று அழைக்கப்படுகின்றது. பேரணிப்பட்டி 1/2 கிராமம். நாலுகோட்டை கிராமத்தின் பெரிய அம்பலகாரர் தெற்கு வட்ட வகையின் நாட்டு அம்பலகாரராகவும், ஒக்கூர் கிராமத்தின் பெரிய அம்பலகாரர் வடக்கு வட்டவகையின் நாட்டு அம்பலகாரராகவும் கருதப்படுகின்றனர். இந்நாட்டுக் கள்ளர்கள் தந்தை வழியில் பல வகையறாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே வகையைச்சார்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். சோழபுரம் சிவன்கோவில் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும். சிவகங்கை மன்னர்களின் பட்டாபிசேகமும், ஆறூர் வட்டவகை அம்பலகாரர்களுக்கும் சோழபுர சிவன்கோவிலில்தான் பட்டம் கட்டப்படும்.

பட்டமங்கலம் நாடு

இந்நாடு பாகனேரி நாட்டை தெற்கேயும், மேற்கே மயில்ராயன்கோட்டை நாட்டையும், வடக்கே பூங்குன்ற நாட்டையும், கிழக்கே கண்டர மாணிக்க நாட்டையும் எல்லைகளாகக் கொண்டு பரவியுள்ளது. இப்பகுதி சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ளது. இந்நாடு ஆறு, தெருக்களாகப் பிரிக்கப்பட்டு ஆறு தெருவிற்கும் 22.5 உட்கடை கிராமங்கள் உள்ளன. ஒரே கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் பங்காளிகளாக கருதப்படுகின்றனர். சில கூட்டங்கள் பங்காளி கூட்டம் எனவும் மாமன், மைத்துனன் கூட்டம் எனவும் அழைக்கப்படுகின்றனர். பட்டமங்கலத்தில் உள்ள ஸ்ரீ மதிகண்ட விநாயகர், ஸ்ரீ அழகுசுந்தரி அம்பாள் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும். திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமியநாராயண பெருமாள் கோயில் தேர்த்திருவிழாவில் பட்டமங்கலம் நாட்டாருக்கும், மல்லாக்கோட்டை நாட்டாருக்கும் முதன்மை அளிக்கப்படுகிறது. சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் கோவில் தேர்த்திருவிழாவின் போது தேர் நிலைக்கு இழுத்துச்செல்ல முடியாமல் போனதால், பல கள்ளர் நாடுகளுக்கு பறை சாற்றி, தேரை இழுக்க அழைப்பு விடப்பட்டது. அப்பொழுது வெள்ளலூர் நாட்டைச்சார்ந்த நாய்க்கான் தேவன் வகையறா, கட்டக்காளை அம்பலகாரர் தனது படையுடன் சென்று தேரை இழுத்து நிலைக்கு கொண்டு வந்து நிலையத்தில் அமர்த்தியதால், கட்டக்காளை அம்பலகாரர் பெயரால் ஒரு வடமும், ஒரு காரணமும் உண்டு என்று கூறப்படுகிறது.

பாகனேரி நாடு

இந்நாடு தற்போதைய சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காளையார்கோவில், கல்லல், திருப்பத்தூர் சிவகங்கை ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியது. இந்நாடு இங்கு வாழும் மக்களால் ஒரு வகை தன்னாட்சி முறையில் பேணிக் காக்கப்பட்டுவருகிறது.

தென்பாண்டிச் சிங்கம்
வாளுக்குவேலி அம்பலம்

இந்நாடு 22.5 கிராமம் உள்ளடக்கியதாகும் ஸ்ரீ புல்வநாயகி அம்மன் இந்நாட்டின் பொதுத்தெய்வமாகும். நாட்டின் தலைவர் நாட்டார் எனப்படுகின்றனர். பாகனேரிக் கள்ளர்கள் இவர்களது திருமண உறவுகள் தாய் வழியில் வருகின்ற கிளைகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. தாய் மாமனும், சகோதரி மகளும் ஒரே கிளையைச் சேர்ந்தவர்களாய் கருதப்படுகின்றனர். அதனால் தாய்மாமன் சகோதரி மகள் திருமணம் இவர்கள் மத்தியில் கடுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டின் அம்பலகாரராய் இருந்த வாளுக்குவேலி அம்பலகாரர் சிறந்த சுதந்திர போராட்ட வீரராகவும், அனைத்து பாண்டிய நாட்டு கள்ளர் நாடுகளை ஒருங்கிணைத்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக சுதந்திர போராட்டம் நடத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னர் மருதுபாண்டியர் சகோதரர்களுக்கு அரணாகவும், சிவகங்கை சீமை காவலனாகவும் திகழ்ந்தவர் வாளுக்குவேலி அம்பலகாரர் என்றால் மிகையாகாது. எதிரிகளின் சூழ்ச்சியால், சதியால் அவர் மரணமடைந்தபின்தான் ஆங்கிலேயர்களால் சிவகங்கை சீமையை வெல்ல முடிந்தது. வாளுக்குவேலி அம்பலம் தென்பாண்டிச் சிங்கம் என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

கண்டர் மாணிக்கம் நாடு

'கண்டு கொண்ட மாணிக்கம்' என்ற சொல்லே 'கண்டர் மாணிக்கம்' என மருவியது. மேற்கே பட்டமங்கலம் நாட்டையும், கிழக்கே பாளைய நாட்டையும், வடக்கே ஏழுர்-பத்து நாட்டையும், தெற்கே குண்ணங்கோட்டை மற்றும் பாகனேரி நாட்டையும் எல்லைகளாக கொண்டு கண்டர் மாணிக்கம் நாடு அமைந்திருக்கிறது. இந்நாடு சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி பகுதிகளில் பரவி அமைந்திருக்கின்றது. அருள்மிகு. கண்டுகொண்ட மாணிக்க நாச்சியார் அம்மன் மற்றும் அருள்மிகு. ஆதிரமிளகி அய்யனார் ஆகிய தெய்வங்கள், இந்நாட்டின் தெய்வங்களாக வணங்கப்படுகிறது.

இந்நாடு 13.5 தாய்க்கிராமங்களை உள்ளடக்கியது. இப்போது 30க்கு மேற்பட்ட கிராமங்களாகப் பெருகி இருக்கின்றன. இவர்கள் தந்தை வழியில் பல வகைகளாகப் பிரிந்துள்ளனர். ஒரே வகையைச்சார்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியைச் சார்ந்த சில கள்ளர்கள், சிட்டன் மற்றும் கிழவன் மகன் ஆண்டி தலைமையில் இங்கிருக்கிறவர்களிடம் ஏதோ முரண்பாடு ஏற்பட்டு வெளியேறி, தென் மேற்கு நோக்கி வெள்ளலூர் நாட்டில் உள்ள புலிமலைப்பட்டிக்கு அருகில் புலிமலையோரம் வந்து தங்கியதாகவும் கூறப்படுகிறது. இவர்களை புலிமலைப்பட்டியில் வாழ்ந்து வந்த சாயும் படைதாங்கி வகையறாவைச் சார்ந்தவர்கள் தங்களுடன் பங்காளிகளாக இணைத்துக்கொண்டதாகவும் தெரிய வருகிறது. அவர்களுக்குரிய அம்பலத்தனமும், பூஜாரித்தனமும் கொடுத்து வெள்ளலூர் நாட்டுக்கள்ளர் என்ற அந்தஸ்தை கொடுத்ததாக அறியப்படுகிறது. இன்று வரை இப்பிரிவினர்கள் உடன்பிறப்புகள் போல் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது வந்தாரை வாழ வைக்கும் பண்பு வெள்ளலூர் நாட்டினரிடம் உயர்ந்தோங்கி இருப்பதாக கருதப்படுகிறது.

சிட்டன் வகையறா மற்றும் கிழவன் மகன் ஆண்டி வகையறாவைச்சார்ந்த பங்காளிகள் அனைவரும் வருடத்திற்கு ஒரு முறை தங்கள் முன்னோர்கள் வணங்கிய தெய்வங்களை கண்டரமாணிக்கத்திற்கு அருகில் உள்ள பெருச்சிகோயில் ஸ்ரீ சுகந்தவன ஈஸ்வரனையும், ஸ்ரீ பைரவசாமியையும், ஸ்ரீ ஒற்றைச்சனீஸ்வரையும் கோயிலுக்கு வெளியில் அமைந்தள்ள ஸ்ரீ கருப்பணசுவாமி தெய்வத்துக்கும் முறைப்படி, பூஜை செய்து பொங்கல் வைத்து, காலாஞ்சி மரியாதைகள் அடைந்து வருகிறார்கள். மறு நாள் அவ்வூருக்கு அருகில் உள்ள ஸ்ரீ கலிதீர்த்த அய்யனார் தெய்வத்திற்கு கிடாய் வெட்டி, சமையல் செய்து அவ்வூரில் உள்ளவர்களை அழைத்தும், வெள்ளலூர் நாட்டிலுள்ள தமது உறவினர்களையும் அழைத்தும் பெரிய விருந்து உபசாரம் செய்கிறார்கள். குலதெய்வ வழிபாட்டுக்கு எந்த அளவுக்கு உயர்ந்த மரியாதை இடம் கொடுக்கிறார்கள் என்பது வருடா வருடம் இந்தச் சிட்டன் மற்றும் கிழவன் மகன் ஆண்டி வகையறாக்கள் தங்கள் குலதெய்வங்களை (சாயும் படைதாங்கி கரை, வெள்ளலூர் நாடு) வணங்கி வருவது என்பதே மிகச் சிறப்பாக பேசப்படுகின்றது.

பதினாலு நாடு

சிவகங்கை நகரத்திலிருந்து கிழக்குப் பக்கமாக புதுக்கோட்டை கடற்கரை வரை பரவியுள்ள கள்ளர் நாடுகள். பதினாலு நாடுகள் என அழைக்கப்படுகின்றன. இது இன்றுள்ள சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை வட்டம், திருப்பத்தூர் வட்டம், ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் வட்டம். திருமயம் வடடம், அறந்தாங்கி வட்டம் போன்ற பகுதிகளில் பரவி அமைந்துள்ளது. இந்நாடு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உஞ்சனை நாடு, செம்பொன் மாரிநாடு, தென்னிலை நாடு, இரவு சேரி நாடு என அமைந்துள்ளது. பிற்காலத்தில் தங்களது பூர்வீகக்குடிப் பகுதியிலிருந்து பாசிக்குடி நத்தம் வளநாட்டிலிருந்து உறவினர்கள் பலர்வந்து தங்கியதால் அவர்களுக்கும் நாடுகளைப்பகிர்ந்து கொடுத்ததில் 14 நாடுகள் உருவாயின. மேற்கூறிய நான்கு நாடுகள் மையநாடாக இருந்த போதிலும், ஒவ்வொரு நாட்டிற்கும், சில உள்நாடுகளும், சில சேர்க்கை நாடுகளும் உள்ளன. இந்த நான்கு மைய நாடுகளுக்கும், ஒவ்வொரு பெரிய அம்பலகாரர்கள் உள்ளனர். இந்த நான்கு பெரிய அம்பலகாரர்களும் 14 நாடுகளுக்கும் தலைமை அம்பலகாரர்களாகக் கருதப்படுகின்றனர். இதுபோக ஒவ்வொரு கிராமத்திற்கும் பெரிய அம்பலங்கள் உள்ளனர்.

மேற்கூறிய நாடுகள் மட்டுமில்லாமல், பூங்குன்றம் நாடு, ஏழுர்பத்து நாடு, பனங்குடி நாடு போன்ற கள்ளர் நாடுகளும் உள்ளன. அவைமட்டுமில்லாமல் கொட்டகுடி, பதினெட்டான்குடி, சூரக்குண்டு, ஆட்டுக்குளம், நாவினிப்பட்டி வண்ணாம்பாறைப்பட்டி போன்றவை நாட்டு அந்தஸ்தினை பெறாமல் தங்களுக்குள் தனி அம்பலங்களை உருவாக்கிக்கொண்டு, தனிக்குழுக்களாக இருக்கின்றனர். மதுரை நகரத்தின் கிழக்கு நுழைவு வாயிலிருந்து புதுக்கோட்டை கடற்கரை வரை பரவி வாழ்கின்ற மதுரை மண்டலத்துக் கள்ளர்கள் தாங்கள் வாழ்ந்த பகுதிகளைத் தங்களுக்குள் பல நாடுகளாகப் பிரித்து அவற்றில் அம்பலம் என்ற அதிகாரம் உருவாக்கி, தங்களைத் தாங்களே நிர்வாகித்துக்கொண்டு, வாழ்ந்து வந்ததால், நாட்டுக் கள்ளார்கள் அல்லது நாட்டார்கள், அம்பலகாரர்கள் எனப் பொதுவாக அறியபடுகின்றனர்.

பிறமலைக்கள்ளர்

மதுரை நகரத்து மேற்குப் பகுதியில் வாழ்கின்ற பிறமலைக்கள்ளர்கள் மேல்நாட்டுக் கள்ளர்கள் என்றும் ஆணையூர்க் கள்ளர்கள் என்றும் ஆய்வாளர்களால் அறியப்படுகின்றனர். இன்றைய மதுரைமாவட்டம் உசிலம்பட்டி வட்டம், சேடப்பட்டி, திருமங்கலம் வட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், சோழவந்தான் வட்டம், ஆகிய பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதி பூர்வீகமானாலும், மதுரை புற மாவட்டம், தேனி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ஆகிய பகுதிகளில் பரவி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பிறமலைக்கள்ளர் என அழைக்கப்படுகின்றனர்.

மதுரைக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள கள்ளர் நாடுகளிலிருந்து பல கள்ளர் குழுக்களுக்குள் ஏற்பட்ட அம்பல அந்தஸ்து, இவைகளினால் ஏற்பட்ட முரண்பாட்டால் வெளியேறி மேற்கு நோக்கி புலம் பெயர்ந்து, பல புதிய பகுதிகளை உருவாக்கி அதை 8 ஆகப்பிரித்து 8 நாடுகளாக கொண்டு பிறமலை கள்ளர் நாடு என்ற நாட்டை தோற்றுவித்தனர். இந்நாடு எட்டு நாடுகளாகவும் இருபத்திநான்கு உபகிராமங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. எட்டு நாடுகள் 1. திடியன், 2. வாலாந்தூர், 3. புத்தூர், 4. கருமாத்தூர், 5. பாப்பாப்பட்டி, 6. கொக்குளம், 7. வேப்பனூத்து, 8. தும்மக்குண்டு.

இவர்கள் அம்பலம் என்ற அமைப்பிற்கு பதிலாக 'தேவர்' என்ற அடமொழியோடு வாழ்கிறார்கள். தங்கள் ஊர்களில் உள்ள பொது அமர்வு கல்லிற்கு 'அம்பலக்கல்' என பெயரிட்டுள்ளனர்.

இக்கள்ளர்கள் பொதுவாக விவசாயம், காவல்காரர், படைவீரர் போன்ற தொழில்களில் ஈடுபாடு கொண்டு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டனர். தான் வாழுகின்ற பகுதிகளில் உள்ள நிலங்களை உழுது பண்படுத்தி பயிரிட்டு வாழ்கிறார்கள். வணிகர்கள், பெரும் விவசாயிகள் ஆகியவர்களுக்கு சிறந்த காவல்காரர்களாக இருந்தார்கள். அரண்மனைக் காவல்காரராகவும் நகரக்காவல்காரராகவும், கிராமக் காவல்காரர்களாகவும் நாட்டின் எல்கைக்காவல்காரனாகவும் காவல் தொழில் செய்து, கண்ணும் கருத்துமாக காத்து வந்தார்கள். அதனால் தான் காவல் தெய்வங்களாக கருப்புச்சாமி, அய்யனார்சுவாமி, அம்மன் சுவாமிகள், கிராமத்தேவதைகளை தனது குலத்தெய்வங்களாக வணங்கி வருகிறார்கள்.

தன் நாட்டிற்கு சிறந்த போர் வீரனாக சிறந்து விளங்கி, படைகளில் பல உயர்ந்த பதவிகளில் பணியாற்றியுள்ளனர். கள்ளன் என்பவனே காப்பவனே. தனக்குக்காவலில் கொடுக்க வேண்டிய கூலியை கொடுக்காமலோ, ஏமாற்றினாலோ, அது தனக்குரியது என்றே எடுத்துச்செல்வான். அதை மற்றவர்கள் கொள்ளையடிப்பது என்றும் கள்ளனுக்குரிய தொழில் எனவும் கூற ஆரம்பித்தனர். ஒரு பேரரசனுக்கு தனக்குத்தரவேண்டிய கப்பமோ, வரியோ மற்ற சிற்றரசன் தராவிடில், தராத நாட்டின் மீது படையெடுத்து மக்களைத் துன்பப்படுத்துவது, கொள்ளையடிப்பது சரி என்று கூறும் போது கள்ளர்கள் தங்களுக்குள் தரவேண்டிய கூலியை அதிகாரவர்க்கத்தினர் தரமறுக்கும்போது வேறு வழியின்றி, இரவில் கொள்ளையடித்தார்கள் அது சரி என அவர்களுக்குப்பட்டது.

பிரிட்டிசார் நம்மைச் சட்டப்படி சுரண்டவில்லையா? நம்மை வென்று இந்நாட்டை ஆட்சி செய்து, நம்மை அடிமையாக்கி, கொள்ளையடித்து, மக்களைத் துன்புறுத்தியவர்களையெல்லாம் இந்த நாட்டின் வரலாறு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இம்மண்ணின் மைந்தன் செய்தால் மட்டும் அவனை கள்வன், திருடன், கொலைகாரன், கொள்ளைக்காரன் என்று ஆதிக்க சக்திகள் அழைப்பது எவ்வகையில் சரி? உலகில் எங்கெங்கு வெள்ளையருக்கு எதிராக சுதந்திரப்போராட்டம் நடந்தாலோ, அந்த நாட்டில் ஏதாவதொரு வகையில் மக்களை குற்றவாளி என்று அடையாளப்படுத்துவது ஐரோப்பியருக்கு கைவந்த கலை.

அதுபோல் 1918-ல் பிரிட்டிஷ் அரசு தமிழகத்தில் பிறமலைக் கள்ளர்களை குற்றப் பரம்பரையாக சர்வாதிகாரமாக உத்தரவிட்டது. என்னகொடுமை? ஒரு நாட்டில் ஒரு சாதியினர் முழுவதும் குற்றப்பரம்பரையினர் என அறிவிக்க பிரிட்டிஷாருக்கு உதவியாக இருந்தது யார்? ஆதிக்க சக்திகள் தான். இப்பிறமலைக்கள்ளர்களை அடக்கிவிட்டால் ஆங்கிலேயரிடம் நாம் நினைத்ததையெல்லாம் சாதிக்கலாம் என்று எண்ணத்துடன் தூண்டியவர்கள் யார்? ஆதிக்க சக்திகள்தான்.

1920-ல் கைரேகைச்சட்டத்தை எதிர்த்த பிறமலைக்கள்ளர்களை பெருங்காமநல்லூரில் குருவியை சுடுவது போல் வெள்ளையர்கள் சுட்டுக்கொன்றார்கள். சுமார் 19 பிறமலைக் கள்ளர்களான விடுதலை வீரச்சிங்கங்களை சுட்டுக்கொன்றது. ஜாலியன்வாலாபாக் படுகொலை போன்றது என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். தண்ணீர் கொடுக்க வந்த மாயக்காள் வீர மறத்தியையும் இரக்க

மில்லாமல் சுட்டுக்கொன்றார்கள். இப்பகுதியில் சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாக நடந்த போர் என்றே கூறலாம். அதன்பின்பு நூற்றுக்கணக்கானோர் கை கால்களில் விலங்கிடப்பட்டு அடித்தே பல மைல் தூரம் இழுத்துச்செல்லப்பட்டனர், பலருக்கு ஆயுள் தண்டனையும், சில வருடம் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது. தேவர் பெருமகனார் கடும் முயற்சியின் விளைவாக 1947-மே 30-ம் தேதியன்று அரசு குற்றப்பரம்பரைச் சட்டத்தை ரத்துசெய்தது. இதன்மூலம் சுமார் 36 ஆண்டுகாலம் இம்மக்கள் தாங்கள் வாழ்கின்ற கிராமங்களையே திறந்த-வெளி சிறைச்சாலையாக அனுபவித்த கொடிய சட்டம் முடிவுக்கு வந்தது. பின் இவர்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புத்துறை, கள்ளர் நல பொது நிதி துவக்கப்பட்டு கள்ளர் வளர்ச்சிக்கு கல்விச்சாலைகள் முழுமையாக செயல்பட ஆரம்பிக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப்பின் அரசு பிறமலைக்கள்ளர்களுக்கு கல்வி மற்றும் பொருளாதார சலுகைகள் அளிக்கப்பட்டன. அதன் விளைவாக நன்கு படித்து ஆசிரியர்களாகவும் பல துறைகளிலும் உயர்ந்த இடத்தை அடைய ஆரம்பித்துள்ளார்கள். வீரமும், விவேகமும் கொண்ட பிறமலைக்கள்ளர்கள் குற்றப்பரம்பரைச்சட்டத்தால் மற்ற இனத்தால் பின்தள்ளப்பட்டிருந்தாலும், இம்மக்கள் மன உறுதியோடு மற்ற இனத்தார் அளவுக்கு உயர்ந்து. இன்று தமிழகத்தில் எத்துறையிலும் தவிர்க்க முடியாத சக்தி ஆக உருவாகி வருகிறது இவ்வினம் என்றால் மிகையாகாது.

1. திடியன் (முதல் நாடு) : நாட்டின் (தலைவர்) பெரிய தேவர் தூங்காத்தேவர்

1. திடியன் சோனைக்கருப்பு கோயிலை குலக்கோயிலாக வணங்கும் அம்பட்டையன்பட்டி காமாட்சித்தேவர் கூட்டம்

2. கருமாத்தூர் கழுவநாதன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பேயத்தேவர் கூட்டம்

3. உச்சம்பட்டி 18ம் படி கருப்புக்கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பிச்சாத்தேவர் கூட்டம்

4. உச்சம்பட்டி தென்கரை முத்தையா கோயிலை குலக்கோயிலாக வணங்கும் வாரமிளகித்தேவர் கூட்டம்

5. பொறுப்பு மேட்டுப்பட்டி வாலகுருநாதன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் நல்லாத்தேவர் கூட்டம்

6. (i) திடியன் சோனைக்கருப்புக் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் ஏராத்தேவர் கூட்டம்

(ii) திடியன் தென்கரை முத்தையாக் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பெத்தராமத்தேவர் கூட்டம்

7. கருமாத்தூர் கழுவநாதன் கோயிலைக் குலக்கோயிலாக வணங்கும் வசக்கழுவத்தேவர் கூட்டம்

8. (i) வலங்காங்குளம் கண்ணாத்தாள் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் மெய்யத்தேவர் கூட்டம்

(ii) வலங்காங்குளம் அழகர்கோயிலை குலலக்கோயிலாக வணங்கும் பூண்டித்தேவர் கூட்டம் வலங்காங்குளம் கடசாரி

2. வாலாந்தூர் நாடு (இராஜதானிக்கு முதல் நாடு) : நாட்டின் (தலைவர்) பெரியதேவர் : ஆரியபட்டி சின்னிவீரத்தேவர்

1. சங்கம்பட்டி அங்காளஈஸ்வரியை குலக்கோயிலாக வணங்கும் மொந்தகுட்டித் தேவர் மக்கள் இரண்டு பங்காளி கூட்டம்

2. சொக்கத்தேவன்பட்டி திருவேட்டை ஐயனார் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் கட்டக்கிடாய்த்தேவர் கூட்டம்

3. சக்கிலியாங்குளம் பெத்தணசாமியைக் குலக்கோயிலாக வணங்கும் வெள்ளையாண்டித்தேவர் கூட்டம்

4. ஆரியபட்டி கல்யாண கருப்புசாமியைக் குலக்கோயிலாக வணங்கும் சின்னிவீரத்தேவர் கூட்டம்

5. கன்னியம்பட்டி காமாட்சியம்மனை குலக்கோயிலாக வணங்கும் சின்னக்காமத்தேவர் கூட்டம்

3. புத்தூர் நாடு : நாட்டின் (தலைவர்) பெரிய தேவர் : பின்னத்தேவர்

1. புத்தூர் பூங்கொடி ஐயனாரை குலக்கோயிலாக வணங்கும் நல்லூத்தேவன்பட்டி பின்னத்தேவர் கூட்டம்

2. கருமாத்தூர் கழுவநாதன் கோயிலையும், புத்தூர் வீரபத்திரன் கோயிலையும் குலக்கோயிலாக வணங்கும் ராமசாமித்தேவர் கூட்டம்

3. நாவார்பட்டி நல்லதங்காள் கோயிலைக் குலக்கோயிலாக வணங்கும் ஒச்சான் படிவுத்தேவர் கூட்டம்

4. வடுகப்பட்டி கருப்புக்கோயிலைக் குலக்கோயிலாக வணங்கும் பெரும்புலி அழகாத்தேவர் கூட்டம்

4. கருமாத்தூர் நாடு : நாட்டின் (தலைவர்) பெரிய தேவர் : பெரியகுரும்பத்தேவர்

1. கருமாத்தூர் கடசாரி நல்லகுரும்ப ஐயனை குலக்கோயிலாக வணங்குமு நான்கு குரும்பத்தேவர் நான்கு பங்காளி கூட்டம் மற்றும் ஐந்து தாய் மக்கள் ஐந்து பங்காளி கூட்டம்

2. கருமாத்தூர் பொன்னாங்கன்வாசலில் ஒச்சாண்டம்மன் எனும் அருள்பெயர் விளங்கும் ஆங்கால ஐயனை குலக்கோயிலாக வணங்கும் கரிசல்பட்டி ஆறுபங்காளி கூட்டம் மற்றும் செட்டிக்குளம் தடியத்தேவர் இரண்டு பங்காளி கூட்டம்

3. கருமாத்தூர் கோட்டைமந்தை கொத்தாள பெரியகருப்புக் கோயிலைக் குலக்கோயிலாக வணங்கும் கேசத்தேவர் மற்றும் பருசபுலித்தேவர் எனும் இரண்டு பங்காளி கூட்டம்

4. கருமாத்தூர் காக்குவீரன கருப்புக்கோயிலைக் குலக்கோயிலாக வணங்கும் இரணிய சோழத்தேவர் மக்கள் ஏழு பங்காளிக் கூட்டம்

5. பாப்பாப்பட்டி நாடு : நாட்டின் (தலைவர்) பெரியதேவர் : பகாத்தேவர்

பாப்பாப்பட்டி ஒச்சாண்டம்மன் எனும் அருள் பெயர் விளங்கும் ஆச்சிகிழவி ஆண்டாயி கோயிலைக் குலக்கோயிலாக வணங்கும் பகாத்தேவர், கீரித்தேவர் மக்கள் பத்துத்தேவர் கூட்டம்

6. கொக்குளம் நாடு : ஆறுகரை நாட்டின் (தலைவர்) வெரியத்தேவர்

1. கொக்குளம் ஆதிசிவன் கோயிலையும், பேய்காமன் கருப்பசாமி கோயிலையும் குலக்கோயிலாக வணங்கும் வெரியத்தேவர் கூட்டம்

2. கொக்குளம் ஆதிசிவன் கோயிலையும் பேய்காமன் கருப்பசாமியை குலக்கோயிலாக வணங்கும் கட்டபின்னத்தேவர் கூட்டம்

3. கொக்குளம் ஆதிசிவன் கோயிலையும் பேய்காமன் கருப்பசாமியை குலக்கோயிலாக வணங்கும் கருப்பத்தேவர் கூட்டம்

4. கருமாத்தூர் கழுவநாதன், விருமன் பேச்சியம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் சடச்சித்தேவர் கூட்டம்

5. கருமாத்தூர் கழுவநாதன், விருமன் பேச்சியம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் சேத்தூரான் கூட்டம்

6. கொக்குளம் காமாட்சியம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் கன்னித்தேவர் கூட்டம்

7. வேப்பனூத்து கள்ளப்பட்டி நாடு : நாட்டின் (தலைவர்) பெரியத்தேவர் : வெள்ளைப்பின்னத்தேவர்

வேப்பனூத்து மலைராமனையும், வெண்டிமுத்தையா கருப்புக் கோயிலை குலக்கோயிலாக வணங்கும்

1. வெள்ளைப்பின்னத்தேவர் 2. நல்லாத்தேவர் 3. மாயக்கட்டத்தேவர் எனும் மூன்று பங்காளிகள் கூட்டம்

8. தும்மக்குண்டு நாடு : நாட்டின் (தலைவர்) பெரியத்தேவர் : சின்னாங்கி உடையாத்தேவர்

தும்மக்குண்டு மூணுசாமி எனும் அருள் பெயர் விளங்கும் ஆங்கால ஐயனை குலக்கோயிலாக வஙண்கும்

1. சின்னாங்கி உடையாத்தேவர் 2. வெள்ளைஒச்சாத்தேவர் 3. கருத்தஒச்சாத்தேவர் எனும் மூன்று பங்காளிகள் கூட்டம்

1. விக்கிரமங்கலம்

கருமாத்தூர் கழுவநாதன் ஐயன், பேச்சிவிருமன் கோயிலை குலக்கோயிலாகும் விக்கிரமங்கலம் கருப்பு கோயிலை காவல் தெய்வமாக வணங்கும் ஆண்டித்தேவர் ஐந்து பங்காளிகள் கூட்டம்

2. நாட்டார்மங்கலம்

நாட்டார்மங்கலம் ஆதிசிவன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் உலாகத்தேவர், உண்டாத்தேவர், ஒச்சாத்தேவர் எனும் மூன்று பங்காளி கூட்டம்

3. அய்யனார்குளம்

அய்யனார்குளம் கடசாரி நல்ல குரும்ப ஐயன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் குள்ளத்தேவர், சின்னத்தேவர் எனும் இரண்டு பங்காளி கூட்டம்

4. கொடிக்குளம்

கொடிக்குளம் நல்லதங்காள் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் படிவுத்தேவர், பிறவித்தேவர் எனும் இண்டு பங்காளி கூட்டம்.

5. முதலைக்குளம்

முதலைக்குளம் மூணுசாமி ஒச்சாண்டம்மன் என்று அருள்பெயர் விளங்கும் ஆங்கால ஐயன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பல்லாக்கு ஒச்சாத்தேவர், தண்டில் ஒச்சாத்தேவர் எனும் இரண்டு பங்காளி கூட்டம்.

6. பன்னியான்

1. பன்னியான் முத்துக்கருப்பசாமியையும், கருமாத்தூர் கழுவநாதன் ஐயன் கோயிலையும் குலக்கோயிலாக வணங்கும் மேலத்தெரு ஐந்து பங்காளிகள் கூட்டம்

2. கருமாத்தூர் கழுவநாதன் ஐயனை குலக்கோயிலாக வணங்கும் கிழக்கு தெரு நான்கு பங்காளிகள் கூட்டம்

7. வடிவேல்கரை (கீழக்குயில்குடி)

கருமாத்தூர் கழுவநாத ஐயன் கோயிலை குலக்கோயிலாகவும் கீழக்குயில்குடி மலையடி கருப்பு கோயிலை காவல் தெய்வமாகவும் வணங்கும் மூன்று பங்காளி கூட்டம்

8. தனக்கன்குளம்

கருமாத்தூர் கழுவநாத ஐயன், பேச்சி விருமனையும் அழகர்கோவில் கள்ளழகரையும், குலக்கோயிலாக வணங்கும் இரண்டு பங்காளி கூட்டம்

9. விளாச்சேரி

1. கருமாத்தூர் கழுவநாத ஐயன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் குப்பையாண்டித்தேவர் மூன்று பங்காளி கூட்டம்

2. விளாச்சேரி ஆதிசிவன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் வெள்ளையத்தேவர் நான்கு பங்காளிகள் கூட்டம்

10. சாக்கிலிப்பட்டி

1. கருமாத்தூர் கழுவநாத ஐயன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பேய்கலுவத்தேவர் கூட்டம்

2. கருமாத்தூர் பொன்னங்கன் வாசல் ஒச்சாண்டம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் ஒச்சாத்தேவர் கூட்டம்

11. தோப்பூர்

நாட்டார்மங்கலம் ஆதிசிவன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் சுப்பத்தேவர், பெருமாத்தேவர் இரண்டு பங்காளி கூட்டம்

12. சூடாப்புளியங்குளம்

வாலாந்தூர், அங்காள ஈஸ்வரியை தாய்வழியில் சீதனமாகப்பெற்று குலக்கோயிலாக வணங்கும் பெரிய சூடாத்தேவர், சின்ன சூடாத்தேவர் எனும் இரண்டு பங்காளி கூட்டம்

13. சாத்தங்குடி

மதுரை மாடக்குளத்திலுள்ள ஐயனார் கோயிலில் பிடிமண்ணை எடுத்து சாத்தங்குடியில் ஐயனார் கோயில்கட்டி குலக்கோயிலாக வணங்கும் மலையப்பிள்ளைதேவர், உலகாப்பிள்ளைதேவர், வளந்தான்பிள்ளைதேவர் எனும் மூன்று பங்காளிகள் கூட்டம்

14. கப்பலூர்

கப்பலூர் கலியுக ஐயனையும் சாலையம்மனையும் குலக்கோயிலாக வணங்கும் இராமுத்தேவர் இரண்டு பங்காளிகூட்டம்

15. மேல்நாடு செட்டிகுளம்

கருமாத்தூர் கடசாரி நல்லகுரும்ப ஐயனை தாய்வழியில் சீதனமாகப்பெற்று மேல்நாடு செட்டிகுளத்தில் கோயில் கட்டி குலக்கோயிலாக வணங்கும் இரண்டு பங்காளிகூட்டம்

16. அல்லிகுண்டம்

அல்லிகுண்டம் வாலகுருநாதன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் விக்கிலமங்கலத்தை பூர்விகமாக கொண்ட விருமப்பிள்ளைத்தேவர் மக்கள் பங்காளி கூட்டம்

17.மானூத்து

1. கருமாத்தூர் கழுவநாத ஐயன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் முதலித்தேவன் கூட்டம்
2. மாணூத்து பெத்தனக்கருப்பசாமி கோயிலை குலக்கோயிலாக வணங்கும் வெள்ளையத்தேவன் கூட்டம்
3. மானூத்து காத்தாண்டம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் சித்திரான் கூட்டம்

18. காளப்பன்பட்டி

1. காளப்பன்பட்டி கருப்புகோயிலை குலக்கோயிலாக வணங்கும் கூலக்குன்னத்தேவர் கூட்டம்
2. காளப்பன்பட்டி ஆதிசிவன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பனிக்கத்தேவர் கூட்டம்

19. பூசலப்புரம்

பூசலப்புரம் மூணுசாமி ஒச்சாண்டம்மன் என்று அருள்பெயர் விளங்கும் ஆங்கால ஐய்யன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் நான்கு பங்காளி கூட்டம்.

20. பெருங்காமநல்லூர்

1. நாட்டார்மங்கலம் ஆதிசிவன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் இரண்டு பங்காளி கூட்டம்
2. வாகைக்குளம் கல்யாணகருப்பசாமி கோயிலை குலக்கோயிலாக வணங்கும் கல்யாணித்தேவர் கூட்டம்
3. நரியம்பட்டி காத்தாண்டம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் சித்திரான் கூட்டம்

21. மதிப்பனூர்

மதிப்பனூர் மூணுசாமி ஒச்சாண்டம்மன் என்று அருள்பெயர் விளங்கும் ஆங்கால ஐய்யனை குலக்கோயிலாக வணங்கும் ஏழு பங்காளி கூட்டம்

22. கச்சிராயிருப்பு

1. கச்சிராயிருப்பு தென்கரை முத்தையா கோயிலை குலக்கோயிலாக வணங்கும் வாரமிளகிதேவர் கூட்டம்

2. கொடிப்புலி கருப்பு கோயிலை குலக்கோயிலாக வணங்கும் பெரிய கட்டையன் கூட்டம்

23. காடுபட்டி

சிந்துபட்டி அங்காளஈஸ்வரி கோயிலை குலக்கோயிலாக வணங்கும் அருதிவீரத்தேவர் நான்கு பங்காளி கூட்டம்

24. வடபழஞ்சி

சித்தாழை சுந்தரவள்ளியம்மன் கோயிலை குலக்கோயிலாக வணங்கும் கோலி வைரத்தேவர் கூட்டம்

சல்லிக்கட்டு - கேள்விகள் - சிந்தனைகள்

சல்லிக்கட்டு பற்றியும் அதற்கு உச்சநீதிமன்ற விதித்த தடை பற்றியும், ஏராளமான கட்டுரைகளும், சிந்தனைகளும் வெளியாகியுள்ளன. (2017-சனவரியில் தமிழக சட்டமன்றத்தில் ஒரு மனதாக சல்லிக்கட்டு நடத்த தீர்மானம் சட்டமாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசு ஆதரவுடன் குடியரசுத் தலைவரின் ஒப்புதல்பெற்று தடையின்றி சல்லிக்கட்டு நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து தமிழகமெங்கும் சல்லிகட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.)

சுருக்கமாகச் சொன்னால் அறுவடை காலத்தில் கொண்டாடப்படும் விளையாட்டு சடங்கு இது. மேலும் ஜாதி, மத, இனவர்க்க, வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டது என்று வந்து விட்டது.

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த விளையாட்டு இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த விளையாட்டுக்கென வளர்க்கப்படும் சிறந்த காளைகள், தழுவ முயற்சிக்கும் வீரர்கள் என இரு தரப்பினரும், ஒவ்வொரு ஆண்டும் இந்த விளையாட்டை அனைத்து மக்கள் முன்னிலையிலும் நடத்துகின்றனர்.

அதனால், அந்த வீரர்களுக்கு ஏற்படும் சிறிய காயங்களை அவர்கள் பெருட்படுத்தாமல், மகிழ்ச்சியுடன் தாங்கிக்கொள்கின்றனர். ஒரு சில வேளைகளில் ஆபத்தும் ஏற்படுவதுண்டு. ஆபத்து என்பது எல்லாவிதமான வீர விளையாட்டுகளிலும் (நவீனமோ, பாரம்பரியமோ) சில நேரங்களில் ஏற்படுவதுண்டு. அதை குறைபாடு என்று கூறிவிட முடியாது.

வேளாண்மை, உயர்தரமாடுகளின் இன அபிவிருத்தி, வியாபாரம், வீரம் சமுதாய இணைப்புகள் அனைத்துமே இதில் அடங்கியுள்ளன.

எவ்விதமான அரசின் அமைப்புக்கள் இருந்தாலும், அது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்து, அவர்களின் கலாச்சாரம், பண்பாடு நிறைந்த விழாக்களுக்கு மதிப்பு கொடுத்து, எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து அம்மக்களின் நலனுக்காக இயங்க வழிவகுத்திட வேண்டும். இது தான் மக்களின் கேள்வி.

அறவழிப்போராட்டம்

அறவழிப்போராட்டம் என்பது இந்தியாவிற்கே உரித்தானது. ஒவ்வொரு காலகட்டத்திலும், அரசின் தவறான கொள்கைகளை சுட்டிக்காட்டும் முக்கிய கருவியாக, மக்கள் இதைப்பயன்படுத்தி உள்ளனர்.

இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து 1810-11-ல் நடந்த ஒத்துழையாமை என்ற அறவழிப்பேராட்டம். ஆங்கிலேயர் விதித்த முரணாண வரிகளை எதிர்த்து காசி, பாட்னா, சாருன், முர்ஷிதாபாத், பகல்பூர் போன்ற இடங்களில் மிகத்தீவிரமாக அற வழிகளில் நடைபெற்றது.

காசியில் மட்டுமே, இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டமக்கள் போராட்டத்தில் கலந்த கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசோடும், சட்டத்தோடும் ஒத்துழைக்க மறுத்தனர். (ஒத்துழையாமை போராட்டமும் - இந்திய சமுதாயமும், தரம்பால் என்ற ஆசிரியரால் எழுதப்பட்ட நூலில் இதைப்பற்றிய விபரங்களைக் காணலாம்).

இதுபோன்று மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் ஆங்கிலேய அரசுக்கு எதிராக வரிகொடாப்போராட்டம் என்ற வகையில் அறவழிப்போராட்டம் நடத்தினார். குறிப்பாக அப்பகுதியைச்சார்ந்த வெள்ளலூர்நாட்டு பெரிய அம்பலகாரர் வீரணன் அம்பலகாரர் தலைமையில் மாபெரும் அறவழிப்போராட்டம் நடத்தி ஆங்கிலேய அரசை நிலை குலையச்செய்தனர்.

அடக்க முடியா கோபம் கொண்ட வெள்ளைய அரசு மேலூர் வெள்ளலூர் பகுதியிலிருந்த கள்ளர் கிராமங்களைத்தாக்கி கேப்டன் ரூம்ளே தலைமையில் படையினர், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் சுமார் 3000 பேர் ஒரே நாளில் கொடூரமாக கொலை செய்தனர்.

பின் வெள்ளலூர் நாட்டு பெரிய அம்பலகாரர், தளபதி கட்டக்காளை அம்பலகாரர் மற்றும் முக்கியமான தலைவர்களை கைது செய்து கொடுமைப்படுத்தினர்.

ஆனாலும் மக்களின் போராட்டம் சிறிது கூட குறையாமல், ஒரு சல்லிக்காசு கூட வரி என்ற பெயரில் கப்பம் கட்ட முடியாது என முழங்கினர், அறவழிப்போராட்டம் நடத்தினர்.

எனவே மீண்டும் வெள்ளைய அரசு கண்மூடித்தனமாக காக்கை, குருவிகளைப்போல் சுட்டு மேலும் சுமார் 2000 பேரை இனப்படுகொலையை அரங்கேற்றினார்கள் என கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன் தனது வெள்ளலூர் நாடு வரலாறு நூலில் ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார்.

ஆனாலும் ஆங்கிலேய அரசு, அவர்களுடைய கோரிக்கையை ஏற்க மறுத்தது. அந்த பிரிட்டிஷ் அரசைப் பொறுத்த வரை, போராட்டக்கூட்டங்கள் சட்ட விரோதமானவை. ஆனால் அன்று வெள்ளையரின் ஆட்சி, இன்றோ சுதந்திர இந்தியாவில், நம் மக்களின் சுய ஆட்சி.

சுதந்திர இந்தியாவில் அரசும் சமுதாயமும் ஒரேவித சமூக மற்றும் கலாச்சார பந்தங்களை நோக்கங்களை கொண்டதாக இருக்கவேண்டும்.

இப்பொழுது தமிழகத்தில் நடந்த சல்லிக்கட்டு போராட்டத்தின் போது, நம் சமுதாயத்தில் இருக்கும் முக்கியமான முரண்பாடு ஒன்று தெரியவந்தது.

அதாவது தமிழக சமுதாயத்தில் ஒரு பகுதியினர் மனநிலை இன்றும் ஆங்கிலேயர்களைப்போல் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அதற்கு முக்கிய காரணம் ஆங்கிலம் மட்டும் கற்ற, மேற்கத்திய மனநிலை உடைய மேல்தட்டு மக்களுக்கும், பெரும்பான்மை சமுதாயத்திற்கும் இடையே உள்ள சிந்தனை மற்றும் கலாச்சார வேறுபாடுகள்தான். இந்த மேல்தட்டு மக்கள் நம்மை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களைப்போல் சிந்திக்கின்றனர்.

மற்றும் ஒரு பிரிவினர் நமக்கும் சல்லிக்கட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று முட்டாள்தனமான கேள்விகளை எழுப்புகின்றனர். தமிழக பண்பாடு, கலாச்சார நீரோட்டத்தில் பங்கு கொள்ளாமல் தவிர்த்தால் ஆழிப்பேரலையில் அடித்துச் செல்லப்பட்டுவிடுவார்கள் என அறியாமல் உளறுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கும்,, தமிழகத்தில் உள்ள பெரும்பான்மை சமுதாயத்திற்கும் இடையே, சிந்தனை மற்றும் கலாச்சார வேற்றுமைகளும் ஆழ்ந்த பிளவுகளும் ஏற்படுகின்றன.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க, நாடு முழுவதும் உள்ள பல்வேறு சமூக மக்கள், சங்கங்கள், குழுக்கள் போன்றவை தங்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களை தொடர்ந்து நடத்த உரிமை உள்ளது என இந்திய அரசியல் சட்டம் தெளிவாக வரையறுத்துள்ளது.

பாரம்பரியமாகவே இந்திய சமுதாயத்தில் சுற்றுச்சூழலையும், விலங்குகளையும் பாதுகாக்கும் பழக்கம் உள்ளது. அதற்காக பல்வேறு சடங்குகள் தொன்று தொட்டு அனேக பகுதிகளில் இயங்கி வருவதை இன்றும் காணலாம். அவற்றைத் தடை செய்து, மக்களின் பாரம்பரிய உரிமைகளை சட்டம் இயற்றி பறிப்பதற்கு அரசிற்கு அதிகாரமோ, உரிமையோ கிடையாது.

அன்று ஆங்கிலேயர்கள், தீ மிதிப்பதை தடை செய்தனர், ஆனால் யாரும் அதைப்பொருட் படுத்தவில்லை. இன்றும் தீ மிதித்தல் விழா நடக்கத்தான் செய்கிறது. ஒரு சில பாரம்பரிய பழக்கங்கள் மறைந்து போகலாம், ஆனால் அவற்றின் மீது உடமையுள்ள மக்கள்தான் அதை முடிவு செய்யவேண்டும்.

நிர்வாகம், நீதி, சட்டம் என்ற அங்கங்களை உடைய அரசிற்கும், சமூகத்திற்கும் இடையில் பிளவுகள் இருந்தால், அந்த சமுதாயம் சரிவர செயல்பட இயலாது.

சுதந்திர இந்தியாவின் சுயாட்சியில், இன்று ஆழ்ந்த பிளவுகளைப்பற்றி சிந்திப்பது அவசியம். சமுதாயத்தில் அவ்வப்போது தோன்றும் அறவழிப்பேராட்டங்கள் இப்பிரட்சினைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அரசு அதை சீர்திருத்தத்திற்கான வாய்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல, சமுதாயத்தின் அனைத்து தரப்பினர் நலனை பிரதிபலிக்கும் வகையில் அரசு செயல்பட வேண்டும். அரசில், அவர்களின் பங்கேற்பை உண்டாக்கும் முறையிலான அமைப்புக்களை உருவாக்க வேண்டும். சுதந்திர இந்தியாவில் மக்களின் பழக்க வழக்கங்களுக்கு மதிப்பு கொடுத்து கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை நாம் கட்டிக்காப்பாற்ற வேண்டிய நேரம் இது !....

மக்களுக்கு மட்டுமல்ல அரசுக்கும்.......

தைத்திருநாளும் தமிழர் வீரமும்

உடற்பயிற்சி, பொழுதுபோக்கு, சடங்குகள் போன்றவற்றைத் தாண்டி தனிமனிதனிடம் குழு உணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் சமூகமாக மனிதன் கூடி வாழ்தல் அவசியம் என்பதை வலியுறுத்தி, அவனை சமூகத்தின் ஓர் அங்கமாக மாற்றும் கடமையைச் செய்கிறது விளையாட்டுக்கள்.

மல்யுத்தம், வில்போர், படகுப்போட்டி, யானை ஏற்றம், குதிரையேற்றம், ஏறுதழுவதல், (சல்லிக்கட்டு) சிலம்பம், சடுகுடு (கபாடி) ஆகியவை தமிழர்களின் விளையாட்டுக்கள்.

இவ்விளையாட்டுக்களை மரபார்ந்த வழியில் தனக்கேயுரிய பாணியில் பன்னெடுங்காலமாக நடத்திய தமிழர்கள் உலகில் வேறு எந்த இனத்தவருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் பறைசாற்றி நிற்கின்றனர்.

மனித சமூகம் பல்வேறு காரணிகளால் பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்தாலும் அப்பிரிவுகளால் ஏற்படுத்தப்படும் வேற்றுமைகளைப் புறந்தள்ளவும். உறவுகளைச் சீராகப்பேணவும் கலாச்சாரப் பண்பாட்டைப் போற்றிப்பாதுகாக்கவும் கொண்டாட்டங்கள் நடைபெறுதல் இயற்கையாகும்.

இக்கொண்டாட்டங்கள் திருவிழாக்கள், விளையாட்டுக்கள், பாரம்பரியக்கலைகள் எனப்பல்வேறு வடிவங்களில் வெளிப்படும். அந்த வகையில் தமிழர்களின் தலையாயத் திருவிழாவாகக் கருதப்படும் தைத்திருநாள் விழா உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

பொங்கும் பொங்கள்

சங்க காலத்தொட்டு தைத்திருநாள் விழாக்கள் பெருமிதத்துடன் கொண்டாடப்பட்டு வருவதை நம் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அடுப்பு மூட்டி, சுவைமிகு பால் கொண்டு, புத்தரிசி புதுக்கி (இட்டு) புது மண்பானையில் செங்கரும்புத் தோரணங்களுடன் வைக்கும் பொங்கல் ஆண்டாண்டுகாலமாய்த் தமிழர்களின் வீட்டு முற்றத்தில் பொங்கி வழிகிறது.

இந்நன்னாளில் தமிழரின் இல்லம் செல்பவர்களுக்கு இன்சுவை ததும்பும் பொங்கல் பரிமாறப்படுகிறது. இவ்வாறு இல்லத்தில் பொங்கல் பொங்கித் ததும்ப, மறுபுறம் களத்தில் தமிழர்களின் வீரம் எழிலுறும் பொங்கும் தைத்திருநாள் விழா மட்டும்தான் தமிழர் திருவிழாவா? என்பன போறை கேள்விகளை சிலர் எழுப்புகின்றனர்.

தொன்றுதொட்டு தமிழ்ச்சமுதாயம் தனக்கேயுரிய கம்பீரத்தை பறைசாற்றி நிற்பதற்கு காரணம் அதன் சீரிய கலாசாரம், மாற்றத்தை மதிக்கும் பண்பாடு, உயர் வாழ்வியல் நெறிகள், அறம்சார் வாழ்க்கை முறை போன்றவைகளாகும்.

இதனை சான்றுகளுடனும் ஆரவாரத்துடனும் அடையாளப்படுத்தி நிற்பதுதான் தைத்திருநாள் விழா. தமிழர்களின் பண்பாட்டுச் செழுமையின் அடையாளம், இயற்கைக்கு நன்றி நவிலும் நன்நாள், ஈரத்தையும், ஈடில்லா வீரத்தையும் காலம் காலமாய் இணைத்துக் கொண்டாடும் நாள், மண்ணின் பெருமையை உரக்கச் சொல்லும் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த விழா தைத்திருநாள்விழா

எனவேதான் தமிழர்கள் உலகில் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் தைத்திருநாள் விழா பல்வேறு நிலைகளில் உணர்வுப் பெருமூச்சுடன் கொண்டாடப்படுகின்றது.

தைத்திருநாளும் விளையாட்டுக்களும்

தொடக்கத்தில் தமிழர்களின் விளையாட்டுக்கள் சமயச்சடங்குகளுடன் தொடர்பு கொண்டதாக அறியப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் அது சமயச் சடங்களுடனும், பொது நிகழ்வுகளுடனும் தொடர்புடையதாக மாறியது.

தமிழர்களின் விளையாட்டுக்கள் ஆண்களின் வீரத்தையும், உடல் வலிமையையும் பறைசாற்றும் வகையில் அமைந்திருந்தது. அதிலும் குறிப்பாக ஏறுதழுவுதல் (சல்லிக்கட்டு) என்பது மரபு, கலாச்சாரம், பண்பாடு சார்ந்த வீர விளையாட்டாக இன்றும் போற்றப்படுகிறது.

தமிழர்களினின் வீர விளையாட்டுக்களில் முதன்மையானதாகக் கருதப்படும் சல்லிக்கட்டு, ஏறுதழுவுதல், மஞ்சுவிரட்டு, எருதுபிடி சண்டை, மாடுபிடி சண்டை என்று பாரம்பரியமாகப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது.

திராவிட நாகரிகம் அறியப்படும் சிந்துவெளி நாகரீக கால முத்திரைகள் மற்றும் நாணயங்களில் இவ்விளையாட்டு இடம் பெற்றிருப்பதன் மூலம், இதன் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் புலப்படுகிறது.

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் போன்ற நூல்களும், பிற்கால இலக்கிய இலக்கணங்களு ம் இதனைக் “கொல்லேறு தழுவுதல்” எனப் போற்றி வந்தன. அனைத்து நில மக்களாலும் இதனை வெகுசிறப்பாகக் கொண்டாடியதை அறிய முடிகிறது.

மக்களின் பொழுதுபோக்கிற்காகவோ, அல்லது சண்டையிட்டு வீழ்வதற்காகவோ இது நடைபெறவில்லை. மாறாக தமிழ் இனப்பெண்களுகு நல்ல வீரமிக்க கணவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வாகவும் இது நடைபெற்றுள்ளது.

மாறுதல்களுடன் சல்லிக்கட்டு

காலந்தோறும் ஏற்பட்ட மாறுதல்களின் அடிப்படையில் இன்றைய சல்லிகட்டும் சில மாறுதல்களுடன் நிகழ்த்தப்படுகின்றது. சல்லிக்கட்டில் பயன்படுத்துவதற்கே காளைகள் வளர்க்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு களத்தில் விடப்படுகின்றன.

காளைகளின் போக்கினை அறிந்த பயிற்சி பெற்ற கிராமத்து இளைஞர்கள் துணிச்சலாக காளைகளின் திமிலை அல்லது கொம்புகளைப் பிடித்தோ அடக்க முற்படுவர்.

அவ்வாறு காளைகளைப் பிடித்து அடக்கியவர்களுக்கு வீரத்தின் பெருமையைப்போற்றும் விதமாக பரிசுகள் வழங்கப்படும். உலகின் பல நாடுகளில் காளைகள் தொடர்பான விளையாட்டுக்கள் நடைபெற்றாலும் சாதி, மத பேதங்கள் கடந்து, தமிழர்களின் பாரம்பரியச் சிறப்பை வெளிப்படுத்தி நிற்கும் தமிழ்நாட்டு சல்லிக்கட்டு தனக்கான அடையாளத்தை உலக அளவில் என்றும் இழந்ததில்லை.

பண்டைத் தமிழினம் பகைமை பாராட்டவோ அல்லது சண்டையிட்டு மடிவதற்கோ இதுபோன்ற வீர விளையாட்டுக்களை உருவாக்கிடவில்லை.

இனத்தின் பெருமையும் இனப்பெண்களின் உள்ளத்து உயர்வு மற்றும் உளம் விரும்பிய காதலரின் வீரத்தையும் வெளிப்படுத்தும் வரலாற்று அடையாளங்களாகத்தான் இவற்றை உருவாக்கினார்.

அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து தமிழனத்திற்கு ஒரு பகை வந்தால், அதை அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்கொள்வோம் என்பதை உலகிற்கு உரக்கச் சொன்னார்கள்.

ஆண்டு முழுவதும் ஓய்வறியாமல் உழைக்கும் கிராமத்து மக்கள், மண்ணின் மகத்துவத்தை, தொன்மை மரபின் மாண்பினைப் பறைசாற்றும், தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் விழா தைத்திருவிழா!.....

சல்லிக்காசுக்கான விளையாட்டு கொஞ்சம் கொஞ்சமாக மருவி, சல்லிக்கட்டு விளையாட்டாகிவிட்டதாக ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. சல்லிக்கட்டு பெயரைக்கேட்ட மாத்திரத்தில் இளைஞர் முதல் பெரியவர்கள் வரை, நாடி நரம்பெல்லாம் முறுக்கெடுத்து களத்தில் நிறபர் என்றால், அந்தப்பெயர்தான் சல்லிக்கட்டு என்றால் மிகையாகாது.

இது மாடு அல்ல, எங்கள் கிராமத்து தெய்வம் என, இறந்த சல்லிக்கட்டு காளை நினைவாக அதன் உருவத்தை சிலை வடிவத்தில் வழிபடும் கிராமத்தினரிடம் பேசிப்பார்த்தால் தெரியும். சல்லிக்கட்டு எந்த அளவிற்கு அவர்களின் ரத்தத்தோடு ஊறியிருக்கிறது என்பதை!

முனியாண்டி முத்தாலம்மன் கருப்பணசாமி, காளியம்மன், ராக்காயி அம்மன் என அந்தந்த கிராம தெய்வங்களை வணங்கி மண்ணில் நன்மைக்காகவும், மக்களின் மேன்மைக்காகவும் ஒரு வழிபாடுபோல நடத்தப்படுவதே இந்த சல்லிக்கட்டு.

காலம் காலமாகப் போற்றிப் புகழ்ந்து நடத்தி வருகின்ற இந்த சல்லிக்கட்டை, மேலும் செவ்வனே நடத்துவதில்தான், நம் பெருமையும் புகழும் அடங்கியிருக்கிறது.

காது குத்துக் கல்யாணம்

காது குத்து கல்யாணம் என்ற வைபவம் தமிழன் மட்டுமே தெய்வவழிபாடாகக் கொண்டாடும் ஒரு விழா.

தமிழன் இறைபக்தி மிகுந்தவன். தனக்கு குழந்தை பிறந்தவுடன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, தன் குழந்தையின் முகமண்டலத்தைப் பார்க்கிறான், மூக்கைப் பார்க்கிறான். அழகான வாயைப் பார்க்கிறான்.

அதே சமயம் குழந்தையின் காதைப் பார்க்கிறான். அதன் வடிவத்தைப் பார்க்கிறான். தனக்கு இந்த குழந்தை பாக்கியத்தை அளித்த இறைவனின் ஓங்கார வடிவமாக காது அமைந்திருப்பதை எண்ணி மகிழ்கிறான்.

ஓங்கார வடிவமாக அமைந்துள்ள ஆண்டவனுக்கு நன்றி செலுத்த எண்ணி, தன் குழந்தைக்கு, முதன் முதலாக கொண்டாடும் வைபவத்தை காது குத்து கல்யாணமாக நடத்தி, ஓங்கார வடிவத்திற்கு நிரந்தர காணிக்கையாக தங்கத்தாலான ஒரு ஆபரணத்தை காதில் அணிவித்து, அதையே ஒரு விழாவாக நடத்துகிறான்.

கடவுள் நாத வடிவம், அந்த நாதத்தை அறிவது காதுதான். காதின் வழியாகத்தான் ஆதிகாலத்தில் மனிதன் ஞானம் பெற்றான். அதை உணர்ந்து காதணி வைபவத்தை இறைவனுக்குச் செய்யும் தொண்டாக எண்ணினான் தமிழன்.

விநாயகரை வணங்கும்போது துங்கக் கரிமுகத்துத் தூமணியே, நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா.. என்று வணங்குகிறான். பிள்ளையாரை ஞானக் கடவுளாக உணர்ந்து தான் வணங்கும்போது, இரு காதுகளையும் இழுத்து வணங்கி தலையில் குட்டிக்கொள்கிறான்.... ஏன்?

பழங்காலத் தமிழன், உடற்கூறு சாஸ்திரத்தை நன்கு உணர்ந்தவன், காதின் வழியாகச் செல்லும் சிறு நரம்புகள் இயங்கித்தான் தலையில் இருக்கும் மூளைக்கு ஞானம் செல்கிறது என்பதை உணர்ந்திருந்தான்.

ஆசிரியரிடம் படிக்க, குழந்தையை சேர்க்கும் தாய் தந்தையர்கள், ஐயா நல்லா காதைத்திருகி, தலையில் குட்டிச்சொல்லிக் குடுங்க என்பார்கள். ஏன் காதை திருகி, தலையில் குட்டச்சொல்ல வேண்டும்?

காதிற்கு சுறு சுறுப்பு ஏற்படுத்தி தூங்கும் முறையை எழுப்பிவிடத்தான், காதை முறுக்கி தலையில் குட்டச் சொல்கின்றனர், மூக்கைத் திருகவோ. கையை முறுக்கவோ சொல்வதில்லை.

இப்போதெல்லாம் பள்ளியில், வாத்தியார், மாணவன் காதைத்திருகி, தலையில் குட்டினால், பெற்றோர் கச்சை கட்டி, சண்டைக் கோழியாக அல்லவா மாறிவிடுகின்றனர்.

வளைகாப்பு செய்வது ஏன்?

கர்ப்பிணி பெண்களுக்கு கை, கால்களில் நீர் சுரந்து, வீக்கம் ஏற்படும் இதைத் தவிர்க்கத்தான், வளைகாப்பின்போது கை நிறைய கண்ணாடி, வளையல்களை போடுகிறார்கள். அந்த வளையல்கள், கை நரம்புகளில் உரசிக்கிட்டே இருக்கிறதால, ரத்த ஓட்டம் சீராகி கை, கால்களில் ஏற்படும் வீக்கம் மட்டுப்படும்.

அதோட வளையல்கள் உரசும்போது ஏற்படும் சத்தத்தோட அதிர்வால் வயிற்றில் இருக்கும் குழந்தை அசைந்து புரளும். இப்படி அடிக்கடி புரளுவதால், அதிக கஷ்ட மில்லாமல் சுகப்பிரசவம் ஏற்படும் அதனால்தான் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு சடங்கு செய்கிறார்கள்.

நம் முன்னோர் செய்யும் எல்லாகாரியமும், ஏதாவது காரணத்தோடுதான் இருக்குமென்பதை உணர வேண்டும்.

உலகின் முதல் பொறியாளர் (இஞ்சினியர்)

ஒரு கட்டடமோ, வீடோ அமைக்கவேண்டுமெனில் இஞ்சினியர் (பொறியாளர்) வரை படம் போட்டுத்தருவார்.

மதுரை நகரம் உருவாவதற்கு வரைபட போட்டுக் கொடுத்தவர் யார் தெரியுமா? சொக்கநாதரேதான் ! அவரே உலகின் முதல் இஞ்சினியர்.

குலசேகர பாண்டிய மன்னன் சொக்கநாதர் கோவிலைச்சுற்றி நகரம் அமைக்க எண்ணியபோது, எப்படி அமைப்பது எனத் தெரியவில்லை. குழம்பிய மன்னன் தீர்வு வேண்டி சொக்கநாதரை வேண்டினான். அப்போது சித்தர் வடிவில் மன்னரிடம் வந்த சொக்கநாதர் கோவிலை தாமரை மொட்டாகவும், அதைச்சுற்றி வீதிகளை இதழ்களாகவும் கருதி நகர் அமைக்கும்படி கூறினார். எவ்வாறு மதுரை நகரம் அமைய வேண்டும் என்று வரைபடம் போட்ட சொக்கநாதர் நம் வாழ்க்கைப் பாதைக்கு வரைபடம் போட்டுத் தருவார் என்பதால் சந்தேகமில்லை.

பொருள் மாறிய தமிழ்ப் பழமொழிகள்

மக்களிடையே புழங்கி வரும் தமிழ்ப் பழமொழிகளில் காலத்தால் உருமாறி சிதைந்து, அவற்றின் உண்மையான பொருளுக்கு நேர்மாறான பொருளைத் தரும் அளவுக்கு மாற்றம் கண்டுவிட்டன. தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றோர் அவ்வப்போது மேடைகளிலும், எழுத்துகளிலும் அவற்றின் உண்மைத் தன்மையை பதிவு செய்துவிட்டு சென்று உள்ளனர். அவர்களது விளக்கங்களால் புரிந்து கொண்ட மெய்ப்பொருள் இதோ....

'சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்' என்ற ஓர் உன்னதமான பழமொழி. தெய்வ நம்பிக்கையும் கருவுறுதலையும் தொடர்புபடுத்தும் இப்பழமொழி, இன்று அடுப்பங்கரை விவகாரமாகி விட்டது விந்தைதான். சஷ்டி விரதத்தை பெண்கள் ஒழுங்காய் மேற்கொண்டால், அவர்களதுகருவறை எனப்படும் அகப்பையில் குழந்தை வளரும் என்பது தான் இப்பழமொழியின் உண்மை பொருளாகும்.

அரசனும் புருசனும்

இதேபோல் பெண்களின் (மூட) நம்பிக்கையையும் கருவுறுதலையும் தொடர்புபடுத்தும் மற்றொரு பழமொழி. 'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை,' என்பதாகும். பெண்ணின் ஒழுக்க நெறிக்கும் இப்பழமொழிக்கும் சிறிதளவும் கிஞ்சித்தும் சம்பந்தமில்லை. 'அரச மரத்தைச்சுற்றி வந்தால் கரு உருவாகும்' என்பது அக்கால பெண்டிரின் அதீத நம்பிக்கை. இந்த நம்பிக்கையில் ஊறிப்போன பெண்கள் சிலர் இரவும் பகலும் தன் கணவரை தன்னருகே அண்ட விடாது, அரச மரத்தை மட்டுமே சுற்றிச்சுற்றி வந்தனர். அவர்களை கேலி செய்து, குத்திக்காட்டி நல்வழிப்படுத்த உருவான பழமொழி தான் இது.

கர்ணனும் ஈகையும்

'ஆறிலும் சாவு: நூறிலும் சாவு' என்பது எண்ணிக்கையை குறிக்கும் பழமொழியே அன்று வயதைக்குறிக்கும் பழமொழியன்று. இது வயதை குறிக்கிறது என்கிற தவறான புரிதலினால் 'நீல வானம்' படத்தில் பாலசந்தர் ஆறில் சாகலாம் - அது அறியாத வயது: நூறில் சாகலாம் - அது அனுபவித்து ஓய்ந்த வயது. ஆனால் பதினாறில் சாகலாமா, என வினா எழுப்புவார். உண்மையில் மகாபாரதத்தில் கர்ணன் பேசும் கூற்று அது. கர்ணனை தனது மகன் எனத்தெரிந்து கொண்ட குந்தி, அவனை தன் தம்பிகளோடு சேர்ந்து வாழ அழைக்கும் போது. ரத்தப்பாசத்தைக் காட்டிலும் நட்பை பெரிதாய் மதித்த கர்ணன் உதிர்த்த முத்துக்களே அப்பழமொழி.

ஐந்து தம்பியரோடு சேர்ந்து ஆறாவதாக நான் போரிட்டாலும், நூற்றுவராகிய கவுரவர்களுடன் இணைந்து போரிட்டாலும் எனக்கு சாவு உறுதி என்பதைத்தான் கர்ணன் அதன் மூலம் விளக்குகின்றானே தவிர, வயது பற்றி அவன் குறிப்பிடவில்லை.

'நமச்சிவாய' மந்திரம்

இறை நாமத்துடன் தொட்பு உடைய 'அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை' என்ற பழமொழி பிள்ளைகளின் எண்ணிக்கையை குறிப்பதாய் திரிந்து விட்டது. 'சிவாய நம' அல்லது நம சிவாய என்ற ஐந்தெழுத்து இறை நாமத்தை ஜெபித்து கொண்டேயிருக்க வேண்டும். அதற்கு நேரமோ, மனமோ, ஆர்வமோ இல்லாதவர்கள் குறைந்தபட்சம் 'சிவ, சிவ' என்ற இரண்டெழுத்து மந்திரத்தை ஜெபிக்கவேண்டும். அதுதான் 'அஞ்சுக்கு ரெண்டே' தவிர, தனக்கு பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை அல்ல (தற்காலத்தில் பலருக்கு ஐந்து பிள்ளைகள் இல்லை என்பதுவேறு விஷயம்).

இறை நம்பிக்கையுடன் தொடர்பு கொண்ட இன்னொரு பழமொழி 'அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்' என்பது அடித்து அடித்து துன்புறுத்துவது கிடையாது, மாறாக இறைவன் திருவடி என்பதே பொருளாகும். அந்த இறைவனது திருவடி உதவுவதுபோல், உடன் பிறந்தார் உட்பட யாருமே உதவ முடியாது என்பது, அது பறை சாற்றும் உண்மை.

வேல் விழி; மான் விழி

பொருள் திரிந்து விட்ட மற்றொரு பழமொழி 'வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை: போக்கத்தவனுக்கு போலீஸ் வேலை' என்பது. 'வாக்கு' கற்றவருக்கு வாத்தியார் வேலை. 'போக்கை' கற்றவருக்கே போலீஸ் வேலை என்பதே அதன் பொருள். பெண்ணின் சாமுத்திரிகா லட்சணத்தை சொல்லும் 'சேலை கட்டிய மாதரை நம்பாதே' என்ற பழமொழி. இது பெண்ணின் உடையை பற்றி கூறுவதாய் திரிந்து விட்டது. மீனின் கண் போன்ற சிறு விழி (கயல் விழி), மானின் மருண்ட பார்வை (மான் விழி), கூரான பார்வை (வேல் விழி) போன்றவை, பெண்ணுடைய கண்ணுக்கான சாமுத்திரிகா லட்சணம் என்று கூறப்படுகிறது. இவற்றுக்கு மாறாக அகன்ற விழிகளை உடைய (சேல் (கண்) மற்றும் நாணம் அகற்றிய பெண் நம்பிக்கைக்குரியவள் அல்ல என்பது அந்தக்கால கூற்று. (இதை ஏற்பதும் ஏற்காததும் அவரவர் நம்பிக்கை மற்றும் அனுபவத்தை பொறுத்தது).

திருமூலர் பாடல் வரி

காலப்போக்கில் முற்றிலும் சிதைந்து உண்மையான அர்த்தத்துக்கு சற்றும் சம்பந்தமில்லை பொருளை தரும் வகையில் உருமாறி விட்ட மற்றொரு பழமொழி. கல்லைக் கண்டால் நாயை காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பதே. நாயை விரட்ட கல்லை தேடுவதும் கல் கிட்டும் போது நாய் ஓடி விடுவதையும் குறிப்பதல்ல அப்பழமொழி. கைதேர்ந்த சிற்பியின் கை வண்ணத்துக்கு வழங்கப்பட்ட சான்றிதழே அப்பழமொழி, கல்லில் வடிக்கப்பட்ட நாயின் சிலையை கலைக்கண்ணோடு நோக்கினால், அங்கே கல்லைக் காணவியலாது, கல்லை மட்டும் காண்போருக்கு நாய் வடிவம் தென்படாது. இந்த பழமொழியின் மிகச்சரியான எதிரொலி தான் கவிஞர் கண்ணதாசனின் சாகாவரம் பெற்ற பாடல் வரிகள், 'தெய்வம் என்றால் அது தெய்வம் வெறும் சிலை என்றால் அது சிலை தான்' (பார்த்தால் பசி தீரும் படப்பாடல்).

‘களவும் கற்று மற’

சாப்பாட்டு பிரியர்கள் சம்பந்தப்படுத்துவது போல் தோன்றும் ‘சோறு கண்ட இடம் சொர்க்கம்’ என்னும் பழமொழி சாப்பாட்டு பிரியர்களை அல்ல: தீவிர இறை பக்தர்களை முன்னிறுத்தி சொல்லப்பட்டதாகும். தமிழ் நாட்டு கோயில்களிலே ஒன்றில் மட்டும் இறைவனுக்கு சோற்றால் அபிஷேகம் செய்யப்படுவதாகவும், அதை பக்தியுடன் கண்ணுறும் பக்தர்களுக்கு சொர்க்கம் நிச்சயம் என்ற ஐதீகத்தின் அடிப்படையில் எழுந்ததே இப்படிமொழி.

அனைத்து பழமொழிகளின் பொருள் மாற்றத்துக்கும் உச்சமாய்த் திகழ்ந்து எதிர்மறை பொருளை தரும் பழமொழி ‘களவும் கற்று மற’ என்பதே. திருட்டுக்கும் இப்பழமொழிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

பழந்தமிழ் சமூகத்தில் இல்லறவியல்-களவியல், கற்பியல் என இருகூறாகப் பிரித்து அணுகப்பட்டது. திருமணத்துக்கு முன்னரே காதல் வசப்பட்ட ஒருவர் தோழன் தோழியுடனோ, தனித்தோ சந்தித்து உரையாடி உறவாடி தமது காதலை வளர்த்து உறுதிப்படுத்துவதே களவியல் எனப்படும்.

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

குறள் - 355

எனக்கூறிள்ளார். அதாவது ஒரு பொருளை எத்தன்மை உடையதாயினும் அப்பொருளின் உண்மை நிலைகாண்பதே அறிவு என்பது இதற்கு பொருளாகும். இன்று நாம் தவறாக புரிந்து கொண்டு பயன்படுத்துகின்ற அந்த சரியான வாக்கியங்களைப் பார்ப்போம்.

“கோயில் இல்லாத ஊரில்

குடியிருக்க வேண்டாம்”

அக்காலத்தில் இடி, மின்னல் போன்ற இடர்பாடுகளில் இருந்து பாதுகாத்துகொள்ள மக்களுக்கு தெரியாது. பொதுவாக கோயில்களில் 12 ஆண்டுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடக்கும். அப்படி நடக்கும் போது கோபுர கலசங்களில் கம்பு, சோளம், கோதுமை, கேப்பை, வரகு போன்ற தானியங்களை வைத்து மருந்து பூசி கலசம் ஒட்டப்படும்.

இந்த தானியங்களுக்கு இடி, மின்னல் போன்றவற்றை தாங்கும் சக்தி உண்டு. ஆனால் 12 ஆண்டுகளில் அதன் சக்தியை இழந்துவிடும் என்பதால், ஏற்கனவே கலசத்தில் உள்ள தானியங்களை மாற்றுவதற்காகத்தான் கும்பாபிஷேகம் போன்ற விழாக்களும், சம்பிரதாயங்களும், சடங்குகளும் நடக்கின்றன. இதைத்தான் நமது முன்னோர்கள் கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் எனக் கூறியுள்ளனர்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்

தன் பிள்ளைதானே வளரும்"

இதன் பொருள், கணவனைப் பொருத்த வரை அவனது மனைவி ஊரார் பெற்ற பிள்ளைதான். மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் கணவன், அவளுக்கு சத்தான உணவுகளை கொடுப்பதன் மூலம், அவள் வயிற்றில் வளர்ந்து வரும் அவனது குழந்தைக்கு சத்துக்கள் தானாகவே சென்றுவிடும் என்பதைத்தான் முன்னோர்கள் அப்படிச்சொன்னார்கள்.

"சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி"

கரடி என்பது சிவன் கோவில்களில் வட்டவடிவமாக இருக்கும் வாத்தியத்கை குறிக்கிறது. அதாவது சிவன் கோவிலில் பூஜைகள், தீபாராதனைகள் போன்ற முக்கிய நிகழ்வுகள் நடக்கும்போது, இந்த வாத்தியம் இசைக்கப்படுகிறது. அதன் நோக்கம் அந்த நிகழ்வுகளின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகத்தான் இதைத்தான் சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி என்கின்றனர்.

நல்லதக்கு காலமில்லை

இதற்கு அர்த்தம் நல்ல செயல்கள் செய்வதற்கு காலம் நேரம் எதுவுமே கிடையாது. உழைப்பையும், திறமையையும் மட்டுமே நம்பி எந்த ஒரு செயலும் தொடங்கவேண்டும். மூட நம்பிக்கை, தவறான சம்பிரதாயங்களால் நல்ல செயல்களை தள்ளிப்போடக்கூடாது.

நாள், நட்சத்திரம் பார்க்காமல் உடனே செய்யவேண்டும் என்பதையே நல்லதுக்கு காலமில்லை என்றும், நாளும் கிழமையும், நலிந்தோர்க்கு இல்லை என்பதாகும்.

"பொன் கிடைச்சாலும், புதன் கிடைக்காது"

இதற்கான அர்த்தம் ஜோதிடத்தில் புதன்கோள் (மெர்க்குரி) அறிவாற்றலையும், திறமையையும் குறிக்கும். எனவே கல்வி என்பது ஒருவனுக்கு கிடைக்கவேண்டிய செல்வங்களுள் முக்கியமான செல்வமாகும்.

ஒருவனுக்கு பணம் கிடைத்ததும் பெரிய செல்வந்தனாகக்கூட ஆகிவிடலாம். ஆனால் கல்வி கிடைப்பது மிகவும் அரிதான விஷயம். இதைக் குறிப்பதற்காகத்தான் பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்கின்றனர்.

"கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
நாயைக் கண்டால் கல்லைக் காணோம்"

ஒரு சிற்பியின் சிலை வடிக்கும் திறமையைக் குறிப்பிடுவதற்காகவே இவ்வாறு சொல்லப்படுகிறது. அதவாது ஒரு சிற்பி, நாய் சிலை வடித்தால் அதை நாயாகவே நினைத்து பார்க்கும்போது அதில் இருக்கும் கல், நம் கண்களுக்குக்குத் தெரியாது.

ஆனால், நாம் ரசனையில்லாமல் அதை, வெறும் கல்லாக மட்டும் பார்த்தால், அந்த சிற்பி வடித்த நாய் சிலை தெரியாது இதைத்தான் நாம் கல்லைக்கண்டால் நாயைக்கண்டோம், நாயைக்கண்டால் கல்லைக்காணோம் என்கிறோம்.

“அடி உதவுவது போல் அண்ணன்

தம்பி உதவ மாட்டார்கள்”.

ராமாயணத்தில் ராமர் 14 ஆண்டுகள் வனவாசம் செல்ல நேர்ந்தது. அப்போது அவனது இளைய தம்பியான பரதனிடம் ஆட்சிப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் பரதன் அதை விரும்பவில்லை தன் ஆட்சியை அண்ணன் ராமனிடம் கொடுக்க விரும்பினான்.

ஆனால் ராமன் மறுத்து, தனது பாதுகைகளை விட்டுவிட்டு வனவாசம் சென்றான். தன் அண்ணன் மீது கொண்ட மரியாதை காரணமாக பரதன் அடிகளையே (செருப்பு) வைத்து வணங்கி ஆட்சி நடத்தினான். எனவே மக்கள் குறைகளை பாதுகைகளிடம் சொன்னாலே நிறைவேறிவிடும் என்பதைக் குறிக்கவே, அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என்றனர்.

“பந்திக்கு முந்து

படைக்கு பிந்து”

இதன்பொருள், பொதுவாக நாம் சாப்பிடுவதற்கு கைகளை உட்கார்ந்திருக்கும் பகுதிக்கு முன்புறமாக பயன்படுத்துகிறோம்.

ஆனால், படை பரிவாரங்களோடு வில் மற்றும் அம்புகளை வைத்து போரிடும்போது, வில்லினை இழுப்பதற்கு நமது கைகளை உடலுக்கு பின்புறமாக பயன்படுத்துகிறோம். இதை குறிப்பதற்காகவே பந்திக்கு முந்து, படைக்கு பிந்து என்று சொன்னார்கள் .

“கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை”

கழு என்பது ஒருவகை கோரைப்புல் அதை வைத்து பாய் தைக்கலாம், அந்த பாயில் படுத்து உறங்கும்போது, அதில் இருந்து கற்பூர வாசனை வரும். பாயின் அருகில் தேள், பூரான் போன்ற விஷ ஜந்துக்கள் நெருங்காது. அந்தப்பாயில் படுத்து உறங்கினால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். நிம்மதியான தூக்கமும் வரும். இதைத்தான், கழு என்ற கோரைப்புல் வைத்து பாய் தைத்ததால், கழு+தைப்பது=கழுதை, கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை என்று கூறினார்கள்.

நாம் தவறாக புரிந்து கொண்டு பயன்படுத்துகிற வாக்கியங்களை, அதன் பொருள் தெரிந்து சரியான முறையில் பயன்படுத்தினால், நமது வாழ்க்கை அழகாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை!

பழமொழி சொல்லும் பாடம்

அன்றைய தமிழர் வாழ்வில் காதலும், வீரமும் இரண்டறக் கலந்திருந்தால் ஒவ்வொருவர் வாழ்விலும் களவொழுக்கம் பேணப்படுதல் தவறு என குறிப்பிடாதது மட்டுமல்ல: அதை வலியுறுத்தியும் புனையப்பட்டதே இப்பழமொழி. களவொழுக்கத்தை பேண வேண்டும்.

ஒரு முறையே பேண வேண்டும். திருமணத்துக்கு பின் கற்பியலுக்கு மாற வேண்டும். 'பிறன் மனை நோக்கா போராண்மை வேண்டும்', ஒருவனுக்கு ஒருத்தி என்றே வாழ வேண்டும். என்ற பண்புகளை வளர்த்து கொள்ளும் விதமாகத்தான் களவொழுக்கம் அல்லது களவியல் எனப்படும் களவை கற்றுக்கொள். (களவும் கற்றும் மற).

ஆனால் திருமணத்துக்கு பின் அதை முற்றிலுமாய் மறந்து விடு என வலியுறுத்துவதே இப்பழமொழி. பழமொழிகளின் உண்மை பொருளை உணர்ந்து மகிழ்ந்து பயன்படுத்தினால், அதில் பொதிந்து கிடக்கும் எண்ணற்ற அர்த்தங்களை உணர்ந்து மகிழலாம்... அதற்கேற்ப வாழக் கற்றுக்கொள்ளலாம்.

இந்த நாள் இனிய நாள்

இன்னும் ஒரு நாள் கூடுதலாய் இந்தப் பூமியில் வாழ்வதற்கான வாய்ப்பு, இதோ விடியலின் விந்தைப்பூவாய் நம்முன் பூத்திருக்கும் இந்த இனிய நாள்.

இந்தநாள் இனியநாள், இந்தநாள் நொந்தநாள் என்பதும் நம் மனதில்தான் இருக்கிறது மனம் மலர்ந்த தினம், நம் வாழ்வின் மகிழ்வான தினம். நம் வாழ்க்கைப் பயணத்தின் கசந்த நினைவுகள் அழிந்த வசந்தவரவு இத்தினம். நீலவானம் நமக்கு நிறைய நம்பிக்கையைத் தருகிறது. எப்படி வாழ்வது என்று புரியாமலேயே வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்திருக்கிறோமே!

நம்பிக்கை

முந்தைய நாள் இரவின் இருட்டைத் தன் ஒளியால் ஓட்டியபடி, கதிரவன் தன் ஒளிக்கற்றைகளால் புலரும் புதுப்பொழுதில் மலரும் மகிழ்ச்சி, எங்கும் அந்த விடிகாலை எவ்வளவு அழகாக இருக்கிறது?

கீச்சிடும் பறவைக்கூட்டம், திசைகளைத் தீர்மானிக்காமல் இரைதேடி நம்பிக்கையோடு பறக்கவில்லையா? பஞ்சாரத்தில் அடைபட்டும் கிடக்கும் கோழி, தன் குஞ்சுகள் புடைசூழ புழுக்களைத் தேடி குப்பைகளைக் கிளறிக் கொண்டே நடப்பதில்லையா?

யாருக்கு இல்லை துன்பம்? கலங்குவதற்கோ, புலம்புவதற்கோ இந்த நாள் நம்மிடம் தரப்பட்டதோ? கேள்விகள் எழுகின்றன.

ஊக்கமது கைவிடேல்

முடிந்ததையே நினைத்துக்கொண்டிருந்தால் விடிந்த விடியலில் என்ன முன்னேற்றம் தரும் செயலைச் செய்வது? குறைகளின் தொட்டியா இந்தக் குவலயம்? வாழ்வும் தாழ்வும் ஒரு நாணயத்தின் அடுத்தடுத்த பக்கங்கள் என்று ஏன் எண்ண மறுக்கின்றன?

காசிக்குப் போய் வரும் நாம், பிரவாகமாய் ஓடி வரும் கங்கையை ஒரு காசிச்செம்பு வாங்கி கங்கை நீரால் நிரப்பி, அன்னை அன்ன பூரணிக்கு அடியில் வைத்து ஆரோதிக்கிறோமே! செம்புக்குள் அடங்குமா, அந்தப் புண்ணிய நதி? ஆனாலும் அப்படித்தான்.

நாளும் பலகாட்சிகளைக் காட்டி சின்னச் சின்ன ஆறுதல்களையும், சின்னச் சின்ன தேறுதல்களாலும் நம்மை நிலை குலையாமல் சமன்படுத்தி வைக்கிறது. புரிந்து கொள்கிறவர்களுக்கு சர்க்கரையாய் வாழ்வு இனிக்கிறது. வாழ்வின் போக்கு புலப்படாதவர்களுக்கு, அதே வாழ்க்கை சர்க்கரை நோயாய் சங்கடம் தருகிறது.

இயந்திரங்களா நாம்?

ஒரு தேரோட்ட நாளில் கூட நாம் தேராய் மாறி முன்பு தேருக்குப் பின் சுற்றினோமே, இன்று கல்யாண நாளில் கூட மனைவியோடு பேசப்பிடிக்காமல் கையில் அலைபேசியோடு தனியே வெறுமையோடு பேசிக்கொண்டிருக்கிறோமே, எப்படிக் கசந்தார்கள், நம் பிரியத்துக்குரிய இனிய மனிதர்கள்?

நம்மைச்சுற்றியிருக்கும் இயந்திரங்கள் ஏன் நம்மையும் மாற்றிவிட்டன? என்ன ஆயிற்று நமக்கு?

வாசல்களை மூடலாம், ஆனால் வானத்தை அல்லவா மூட முயல்கிறோம்! ரசிப்போம் நல்லவற்றைத் தேடி வாசிப்போம், அந்தந்த வினாடிகளில் வாசிப்போம். அந்த நாளும் ருசியாகும் ஒவ்வொரு விடியலும் விந்தையாகும்.

உற்சாகம்

காலையில் சாப்பிடும் தேநீர் நமக்கு அந்த இனிய நாளைத் தொடங்குவதற்கான உற்சாகத்தை அளிப்பதுபோல, நாம் நல்ல எண்ணங்களால் நம்மைத்தினமும் உற்சாகமாய் நம்பிக்கொண்டு புதுமையை நோக்கிப் பயணிப்பது எவ்வளவு சுகமானது! பூஞ்செடிகளைப் பதியன்போட்டோம்! புதுத்தளிர் துளிர்க் கையில் துள்ளிக் குதித்தோம்! ஒவ்வொரு நாள் விடியலைக் கொண்டாடுவோம்.

சிறகுகளைச் சிதலமாக்கிய பின்தான், நாம் பறத்தல் குறித்துப் பல நேரம் யோசிக்கிறோம். அழுக்கான கண்ணாடியில் முகம் கலங்கலாகத்தான் தெரியம். அழுக்கும், இழுக்கும் இல்லாத பரிசுத்தமான வாழ்க்கை நிம்மதியான மனதின் சந்நதியாக அமைகிறது. வெற்றியில் மமதையைத் தவிர வேறேதும் கற்க முடியாது. தோல்வியின் தோள்களில் நாம் கற்றுக் கொள்வதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் நிறைய பாடங்கள் உண்டு.

தோல்வியின் காரணங்களை நாம் ஆராய முற்படும்போது, அந்த நாளும் இனிய நாளாய் அமைகிறது.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

நம் கண்ணோட்டம் நல்லவையாக மாறும்போது நம்மைச் சுற்றியிருக்கும் சக மனிதர்களும் நல்லவர்களாகவே நமக்குத் தெரிகிறார்கள். எந்த முன் முடிவுகளோடும் யாரையும் அணுகாமல் இருத்தல் நல்ல உறவுகளைப் பேணுவதற்கான வழி.

உலகைத் தாங்குவது அன்பே! அன்பிற் சிறந்த தவமில்லை என்றார் பாரதியார். பிரதிபலன் பாராமல் எல்லோர்மீதும் அன்பு செலுத்துங்கள். சினம் இனத்தையே அழித்துவிடும், எனவே கோபத்தை ஆயுதமாக்கி நாளைத் தொடங்காதீர்கள்.

மனைவி, குழந்தைகள், சுற்றம் யாவரும் இறைவனின் அருட்கொடை என உணருங்கள். அவர்களிடம் இன்சொல்லே பேசுங்கள், சிரித்தமுகமும் இனிமையான நல்லபேச்சும், நம் நாளை இன்னும் அழகாக்கும் என்பதைப் புரிந்து செயல்படுவோம்.

அச்சம் தவிர்

நாம் செய்யும் பிரார்த்தனை அந்த நாளை இறைவனின் ஆசிகளோடு கூடிய அற்புதமான நாளாக மாற்றுகிறது. அந்த நாள் விடியும்போது தினம் ஐந்து நிமிடம் மனத்தை ஒருமுகப்படுத்தி, நமக்காகவும் உலக நன்மைக்காகவும் தியானம் செய்யும்போது மனமும், அத்தினமும் மகிழ்ச்சிக்குள்ளாகிறது.

நன்னெறி

ஆர்வத்துடன் நாம் செய்யும் வேலைகள் கலைநுணுக்கமான பேர்சொல்லும் நற்பணிகளக மாறுகின்றன. கர்மயோகம் ஒவ்வொரு நாளையும் அழகாக மாற்றுகிறது. சிந்தனை, சொல், செயல் இம்மூன்றிலும் நேர்மையும், உண்மையும், சத்தியமும் இருக்க வேண்டும். மன முதிர்ச்சியைக் கற்றுத்தரும் பயிற்சிக்கூடமே, இந்த உலகம் என்பதைப் புரிந்து கொண்டால், ஒவ்வொரு நாளும் நற்செயல் செய்யும் இன்னொரு இனிய நாளாக அமைகிறது.

நம்மால் உருவாக்கப்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும், நம் நாவே முக்கியப்பங்கு வகிக்கிறது. எனவே, தேவையில்லாதவற்றைப் பேசாமல் நம் நாவைக் காத்துக் கொள்வது சாலச்சிறந்தது.

சரியான திட்டமிடல்

திட்டமிடத் தவறுகிறவன் தவறு செய்யத் திட்டமிடுகிறான், காலை எழுந்தவுடன் சரியான செயல் திட்டத்தோடு அந்த நாளைத் தொடங்குகிறவர்கள் வெற்றியாளர்களாய் உறங்கச் சொல்கிறார்கள்.

அமெரிக்க அதிபராயிருந்த கென்னடியைப் பார்க்கப்போன இளைஞனிடம் அதிபர், நீ எதிர்காலத்தில் என்னவாக விரும்புகிறாய்? அதற்கு அந்த இளைஞன், ஒரு நாள் எதிரில் உள்ள அதிபரின் நாற்காலியில் அமர்வேன் என்று அவரிடமே உறுதியாய் சொன்னான். அவர்தான் பின்னாளில் அதே அதிபர் பதவியை அலங்கரித்த பில் கிளிங்டன். இதே சூழ்நிலை எனக்கும் வந்தது.

மத்திய சுங்க இலாகாவில் (காவலராக) சிப்பாயாக பணிபுரியும்போது மதுரை சுங்கக்கட்டுப்பாடு அறையில் (Control Room) பணியிலிருந்தேன். இரவு பத்து மணியைப்போல் இன்ஸ்பெக்டர் இல்லாத வேளையில் அவர் மேஜைக்கு முன் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து, அன்றைய மாலைச் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தேன்.

அந்த வேளையில் கட்டுப்பாடு அறை ஆய்வாளர், அப்பொழுதுதான் பணிக்கு வந்தார். என்னைப் பார்த்தவுடன் கோபமாக, நீ ஆய்வாளர் மேஜைக்கு முன், ஆய்வாளர் இல்லாத வேலையில் கூட எதிரில் போட்டிருக்கும் நாற்காலியில் அமரக்கூடாது என்று கடிந்தார். நான் உடனே எழுந்து, அவருக்கு முறையாக வணக்கம் தெரிவித்துவிட்டு ஐயா, எதிர்புறத்திலிருக்கும் ஆய்வாளர் நாற்காலியில் ஒரு நாள் அமர்வேன் என்று சபதம் கொண்டதுபோல் என்னையறியாமலேயே கூறினேன். பின்னர் பதினான்கு வருடம் கழித்து படிப்படியாக பதவி உயர்வு பெற்று, அந்த அதே கட்டுப்பாட்டு அறை ஆய்வாளர் ஆக அந்த நாற்காலியில் அமர்ந்தேன். அப்பொழுது என்னுடன் பணியிலிருந்த சிப்பாயிடம் (காவலர்) இதைப் பெருமையாகக் கூறினேன். மனம் சிலிர்த்தது. என்னை இந்த அளவுக்கு உயர்த்திய எனது குலதெய்வங்கள், என் வெள்ளலூர் நாட்டுத் தெய்வங்களுக்கும் அங்கிருந்தே நன்றியை காணிக்கையாக்கினேன்.

பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து உழைப்பவர்களையே நோக்கி இறைவன் ஆசியுடன், பதவி என்னும் அழகான சொல் வந்தடைகிறது.

ரிமோட் - கண்ட்ரோல்

ஒருவன் நிகழ்வுகளைப்பற்றி விமர்சிக்க முடியும் என்றாலே, அதைப்பற்றி நிறை குறையைப்பற்றி வாதிட வேண்டுமென்றாலோ அல்லது விமர்சிக்க முடியும். வாதிட முடியும் என்றால், அவன் சிந்திக்கும் போது, சிந்திப்பதற்கான நிதானத்தில் அவன் இருக்கும்போது அதற்கான அவகாசம் அவனுக்கு வாய்க்கும்போதும்.

சதா ஓடிக்கொண்டிருப்பதனால் எப்படி சிந்திக்க முடியும்? தான் சிந்திப்பதற்கே நேரம் எடுத்துக் கொள்ளாதவர்களால், சமூகத்தை பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்?

பிம்ப அரசியலின் பின்னிருந்த சக்திகள் பிம்ப அரசியல் மேலும் தொடர்வதால் ஏற்படும் அபாயங்கள் தொடர்பிலோ யாரும் நகர்வதில்லை. உடனுக்குடன் செய்திகள் கலாச்சாரத்தில், உடனுக்குடன் விமர்சனங்கள் என்றாகி வருகின்றன. யுகங்களே விமர்சனங்கள் என்றாகி வருகின்றன.

ஆக, மக்கள் நாள் முழுவதும் செய்தியைப் பார்த்தாலும் அரசியலை நோக்கி அவர்களை அது நகர்த்துவதில்லை, மாறாக செய்தியே பொழுது போக்காகிவிடுகிறது. அரசியலையும், பொழுது போக்காக்கி விடுகிறது.

பேஸ்புக்கில், வாட்ஸ்அப்பில் இப்போதெல்லாம் அரை மணிநேரத்துக்கு ஒரு முறை பிரேக்கிங் நியூஸ் வரவில்லை என்றால், கைகள் நடுங்க ஆரம்பித்துவிடுகின்றன.

இதுபொய் அல்ல. கைகள் நடுங்க ஆரம்பித்துவிடுகின்றன. ஒருவர் பேஸ்புக்கிலே குறிப்பிடுகிறார். நம்முடைய கைகள் நம்மைத்தாண்டி ரிமோட் கண்ட்ரோலை நாடுகின்றன. பரபரப்பான செய்திகளைச் சதா் நம் மூளைகள் தேடுகின்றன.

ரிமோட் கண்ட்ரோலை நாம் இயக்குவதாக நாம் நினைத்துக்கெண்டிருக்கிறோம், மாறாக ரிமோட் கண்ட்ரோலே நம்மை இயக்கிக் கொண்டிருக்கிறது.

நம்மை என்றால், பார்வையாளர்களை மட்டும் அல்ல, ஊடகங்களையும் தான்!

ஞாலம் உணரும் ஞானிகள்

கல்வியை ஒரு கடல் எனக்கூறி அதன் எல்லையை வரையறுக்கமாட்டார். கலை பயில தெளிவும் கட்டுரை வன்மையும் கொண்டோர், சாகும் வரை ஆற்றக்கூடிய ஒரே பணி கற்றலும். நிற்றலுமே தாம் கற்றதைப் புரிந்து, ஓர்ந்து (உணர்ந்து) நடைமுறைப் படுத்துவோரே நல்லோர்.

கற்றதை எடுத்தியம்பும் ஆற்றல் தனித்தன்மை கொண்டது. அதிலும் கேட்பவரை உணரச் செய்தல் அருங்கதையாகும். கேட்டவரின் இதயத்தை ஈர்த்து, தன் கருத்துடன் இசையச்செய்தல் சொல் ஆற்றலாகும்.

தன் கற்ற மேதையை இதுவரைக் கேளாதவரும் விரும்பி, வந்து கேட்கச்செய்வது. சொல்வன்மை ஆகும். மாற்றுக் கருத்துடையோரும் தம் சொல்லை விரும்பிக்கேட்டு, ஏற்றுக்கொள்வது சொல்லின் சிறப்பாகும். அவரே சொல்லின் செல்வர்.

எண்ணங்கள் வானில் பறக்கும் பறவைகள் அவை. வார்த்தைக் கூண்டில் அடைக்கப்படும் பொழுது, அவை சிறகு விரிக்கலாம், ஆனால் பறக்க முடிவதில்லை.

தலை மக்கட்கு வேண்டிய சொல்வன்மை எனும் பண்பியல் பற்றிக் குறளாசன் தெளிவாகவே கூறிவிட்டார்.

மலர் என்றாலே மணந்தரும் இயல்பினது. நாற்றம் உரைக்கும் மலர் உண்மை என்பது வழக்காறு. மணம் தரும் மலரைச் சூடுதல் மாந்தர்க்கு முக அழகு; எது அவர்கட்கு விருப்பமானதுதாகும். மணந்தராத

மலர் என்னதான் கவர்ச்சியாக இருந்தாலும், அதைச்சூடி மகழ்ச்சியடையார் மாதர்குலத்திலகங்கள். காகிதப் பூ என்ன மதிப்புப் பெறுமோ, அந்த மதிப்புத்தான் மணந்தராத பூக்களுக்கும் உண்டு.

சொல்லாட்சித் திறனின் தேவையை உணர்த்தும் வள்ளுவரும், மணக்கும் மலரையும் சிறக்கும் சொல்லழகையும் நமக்கு காட்டுகிறார்.

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரைந்துரையார் தார்.

- (குறள் 650)

பிறர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விரித்து உணர்த்த முடியாதவர்கள் கொத்தாக மலர்ந்திருந்தும், மணம் தராத மலர்களைப்போன்று ஆவார்கள். மலருக்கு மணம் வேண்டும். கல்விக்கு அழகு, கற்றதனைப் பிறர் புரியச் சொல்லுதல் ஆகும். கல்வியின் பயன் பிறர் உணரப்பேசுதல்.

தான் அறிந்ததை, பிறர் அறிய விட முடியாதவர்கள் கொத்தாக மலர்ந்தும் மணக்காத மலர்களைப் போன்றவர்கள் ஆவர்.

Those unable to coney their learnings are like infloresences without fragrance.

எண்ணங்கள் சொல்லாக விரிதல் கல்வி.

பேசும் சொற்கள் பிறரை உணரைச் செய்தல் கல்வி

உணர்த்தும் கல்விக்குக் கரை கிடையாது. தமிழ்சங்க கலைக்கனிவு வள்ளுவத்தில் வட்டமிடுவது ஒரு வனப்பாகும்.

சிறகு விரித்த எண்ணங்கள் பேச்சாகிப் பறப்பதில்லை என்ற கருத்தின் கன்னிமையையும் ஆய்வோம்! அறிவோம் மெய்ம்மையை.

கள்ளர் குலப் பட்டங்கள்

1. அங்கராயன் :

செவ்வாய் நிறமுள்ளவன், அரசு அதிகாரி, செந்நீர் முத்துக்களை அணியும் அரசரின் உறவினர்.

2. அசையாத்துரையார் :

கவிகளில் சிறந்தவர், செய்யுள் உறுப்பு, தாளம், சுவடி போன்ற துறை சிறந்தவர்.

3. அச்சுதப்பண்டாரம் :

அழிவில்லாத வலிமை கொண்டவர்.

4. அடைக்கப்பட்டார் :

அவயங்காத்தவர், (அரண்மனை, கோட்டம், கிராமம் காத்தவர்)

5. அடை வளைத்தார் :

செருக்குடன் வாழ்பவர், வரிச்சீட்டு, வரி ரசீது கொடுப்பவர்,

6. அண்ணுண்டார் :

அச்சத்தை விரட்டியவர்

7. அண்ணூத்திப்பிரியா :

அச்சத்தை விரட்டி மகிழ்ந்தவர் ஐநூற்றுப்பிரியன், அயிரப்பிரியன், அதிகாரிகளின் பட்டமே திரிந்து இருக்களாம்.

8. அதிகமான் :

ஆற்றல் நிறைந்த தலைவன், சங்ககாலம் முதல் சோழச்சிற்றரசர்களாக இருந்தனர். கொங்கு நாட்டின் ஒரு பகுதியை அரசாட்சி செய்தவர்கள்.

9. அத்திரியர் :

ஆன்மீகத்தில் ஈடுபாடுடையவர், முனிவர், அம்பையுடையவர்

10. அமர் அடக்கி :

நாட்டின் கலகங்களையும் குழப்பங்களையும் அடக்கி அரசருக்கும் குடிமக்களுக்கும் நலம் புரிந்த வீரர்களுக்கும் - அமர்அடக்கி என்ற பட்டம் அளித்துப்பாராட்டினர்.

11. அம்மாலைத்தேவர் :

வெற்றிமாலை அணிபவர்

12. அம்பலம் :

கிராமம், கோட்டம், நாடு ஆகியவைகளை நிர்வகிப்பவர்கள் நீதிபரிபாலனம் செய்பவர்கள். சோழமண்டலத்தின் பல பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள். இராசராச சோழனின் உள்ளாட்சி

முறைத் தத்துவத்துக்கு இன்றைய வரை தொடர்ந்து கடைபிடித்து வாழ்ந்து வருபவர்கள். அவர்களின் தலைவர்களை அம்பலகாரார் என்ற அழைத்து வருகின்றனர். பாண்டிய மண்டலத்தில் வாழ்ந்து வரும் பெரும்பாலான கள்ளர்களுக்கு அம்பலம் என்ற பெயரே பட்டப்பெயராக வழங்கி வருகிறது

13. அயிரப்பிரியர் :

பட்டத்து யானையுடையவர், இனிப்பு கண்ட சர்க்கரை விரும்புவர்.

14. அரசாண்டார் :

ஆட்சிக்கலை அறிந்தவர், ஆட்சி புரிந்தவர், ஆட்சியை இயக்கியவர்.

15. அரசுக்குலத்தேவர் :

அரசாங்கத்தின் உண்மையான விசுவாசிகள்.

16. அரியப்பிள்ளை :

கண்போன்றவர், ஆண் சிங்கத்தையொத்தவர்கள்.

17. அருமனைநாட்டார் :

கடார நாட்டுக்கு ஒரு பெயராகும், அந்நாட்டை வென்றதற்கான பெயர்

18. அருமைநாடார் :

அபூர்வம், பெருமை, எளிதில் பெற முடியாமையை பெற்றவர்

19. அருவாத் தலைவர் :

ஒரு நாட்டின் தலைவர், தமிழ் தலைவர், சோழன் கரிகாலன் வென்ற பகுதி, பள்ளத்தாக்கு பகுதி அருவாநாடாகும், வென்றதால் அருவா தேசத்தவர் பட்டம்.

20. அருவாநாட்டார் :

ஒரு நாட்டின் தலைவர், தமிழ் தலைவர், சோழன் கரிகாலன் வென்ற பகுதி, பள்ளத்தாக்கு பகுதி அருவாநாடாகும், வென்றதால் அருவா தேசத்தவர் பட்டம்.

21. அலங்காரப்பிரியா :

ஆபரணப்பிரியர், சிங்கார ரசனையுடையவர், சங்கீதந்தெரிந்தவர், கோட்டைகொத்தளங்களை ஆர்வமாக காப்பவர்.

22. அன்னவாசல்ராயர் :

உணவு கொடுத்து ஆதரிப்போர், அன்னம் (உணவு) வழங்கும் இல்லத்தின் தலைவர்.

23. ஆச்சாராயர் :

சமயத்தலைவர், நற்காரியங்கள் செய்வதற்கு உகந்த தலைவர்.

24. ஆட்சிப்பிரியர் :

ஆட்சிமுறை அறிந்தவர்

25. ஆதாழியார் :

சக்கராயுதம் உடையவர், கட்டளையிடுபவர்.

26. ஆதித்த நெடுவாண்டார் :

சூரியனைப்போல் செருக்குடையவர், உயரத்திலிருப்பவர்

27. ஆரம்பூண்டார் :

சந்தனம் பூசியவர், பதக்கம் பெற்றவர், முத்து மாலை அணிந்தவர் மணிவடம் பூண்டோர்.

28. ஆர்சுத்தியார் :

திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் மற்றும் போரில் வெற்றிபெற்ற பின்னர் ஆரத்தி எடுக்கும் பழக்கம் நம் நாட்டில் உள்ளது. சரஸ்வதி வெண்மை நிறம், லட்சுமி மஞ்சள் நிறம், மஞ்சளும் வெள்ளையும் (சுண்ணாம்பு) கலந்தால் சிவப்பு நிறமாகும். கண் திருஷ்டி ஏற்படுவதை தவிர்க்கவே ஆரத்தி சுற்றப்படுகிறது சோழ நாட்டில் மன்னன் வெற்றிபெற்று வரும்பொழுது ஆரத்தி எடுக்கும் வகையினருக்கு ஆரத்தியார் என்றழைக்கப்படுவர். ஆரத்தியார் காலப்போக்கில் மருவி ஆர்த்தியார் என்ற பட்டப்பெயரும் மக்களால் அழைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

29. ஆலம்பிரியர் :

கடல், ஆகாயம், நிலம் ஆகியவைகளை ஆட்சி செய்ய விரும்புவர்.

30. ஆவத்தியார் :

அம்பறாத்தூணி கொண்டவர்.

31. ஆளற்பிரியர் :

விடா முயற்சியுடையவர்

32. ஆள்காட்டியார் :

காலாற்படை வீர, ஆண்மகன், வீரன், தொண்டன், எதிரியை கண்டுபிடிப்பவர்.

33. இடங்காப்பிறந்தார் :

பிடி கொடுக்காமல் விவாதிப்பவர், முரட்டுச் செயல் செய்பவர்.

34. இராங்கிப்பீலியர் (இராங்கியர்)

அனுதாபம் காட்டுபவர், கருணை கொண்டோர்.

35. இராயமுண்டார் :

வெற்றிக்கு உடையவர், உண்டானவர், ஆளுமையர்.

36. இராஜாப்பிரியர் :

மன்னனின் உற்ற நண்பன், அன்புள்ளவன்

37. இராஜாளியார் :

ஆளும் சிங்கம், யாளி, யானை

38. இராரண்டார்

இரேணாட்டுச்சோழர் என்போர் தம்மைக் கரிகாற்சோழனின் வழித்தோன்றல் என்று கூறிக்கொண்டு சோழர் என்ற பெயருடன் கர்நூல், கடப்பா முதலிய தெலுங்குப் பகுதியை ஆண்டுவந்தனர். இவர்கள் இரேணாட்டுச் சோழர் என்றும் தெலுங்குச்சோழர் என்றும் அழைக்கப்பெற்றனர். கள்ளர் பட்டப்பெயர்களுள் ஒன்று இராரண்டார் என்பதாகும். இது ரேணாடாண்ணார் என்பதன் திரிந்த வடிவமாகக் கொள்ளலாம்.

39. இருங்கள்ளர் :

கரும்பொன் கள்ளர்.

40. ஈழங்கொண்டார் :

ஈழ நாட்டோடு பெரும்பாலான சோழ மன்னர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். கி.பி. 981 ஆம் ஆண்டு ஈழ அரசன் ஐந்தாம் மகிந்தனை இராசராசசோழன் வென்றான். கள்ளர் பட்டப்பெயர்களில் காணப்படும் ஈழங்கொண்டார், ஈழத்தரசு, ஈழத்தரையர், சிங்களராயர், சிங்களாந்தகர், சிங்களேந்தியர், சிங்களர், கண்டியர் முதலிய பட்டப் பெயர்கள் சோழனின் ஈழவெற்றியோடு தொடர்புடையனவாகத் தெரிகின்றன.

41. ஈழத்தரசு :

ஈழத்தை வென்றவர், ஆட்சி செய்தவர்

42. சிங்ளராயர் :

சிங்களத்தை வென்றவர், ஆட்சி செய்தவர்

43. சிங்களராந்தகர் :

சிங்களத்தை வென்றவர், ஆட்சி செய்தவர்

44. சிங்களேந்தியர் :

சிங்களத்தை வென்றவர், ஆட்சி செய்தவர்

45. கண்டியர் :

இலங்கையில் உள்ள கண்டியை வென்று ஆட்சி செய்ததால் கண்டியர் என்ற பட்டம் வழங்கப்பட்டன.

46. உத்தமுண்டார் :

எவற்றுள்ளும் சிறந்தவர்

47. உய்யக்கொண்டார் :

இராசராசசோழனின் விருதுப்பெயர்களுள் ஒன்று உய்யங்கொண்டான் என்பதாகும். இப்பெயரிலுள்ள ஒரு வளநாடு சோழர்காலத்தில் இருந்து, “அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யங்கொண்டார் வளநாடு திரைமூர் நாட்டுப் பள்ளிச் சந்தம் இறக்கின. நெற்குப்பை அளந்தபடி நிலம்” என்ற தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு ஒன்று இவ்வளநாட்டைப் பற்றிய குறிப்பை வெளிப்படுத்துன்றது. மேலும் உய்யங்கொண்டார் என்ற பெயரில் ஊர்கள், ஏரிகள், ஆறு முதலியன இருந்து வருகின்றன. திருச்சிக்கு அருகில் காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு ஆற்றுக்கு உய்யக்கொண்டான் எனும் பெயரில்

வாய்க்கால் வெட்டி மேட்டுப்பாங்கான நிலத்திற்கு நீர் கிடைக்க செய்தான் பேரரசன் இராசராசசோழன். உய்யங்கொண்டான் என்பதற்கு பொருள் : பிழைக்குமாறு அருள்செய்தான். சோழர் மன்னர் வழிவந்த கள்ளர்களின் ஒரு பிரிவினருக்கு உய்யக்கொண்டான் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

48.அ. உலகங்காத்தார் :

நிலம் காத்தார்

48.ஆ. உலகளந்தார் :

நிலங்களை முறையாக அளநது எல்கைகள் குறித்து வரி விதித்ததால் இராசராசனுக்கு உலகளந்தார் என்ற பட்டம் உண்டு.

49. உலகுடையார் :

நிலம் உடையவர் ஆகாயம், பூமி எட்டுத்திக்கும் உடையார்.

50. உழுவாண்டார் :

நிலம் காத்தார், நிலம் உடையவர் ஆகாயம், பூமி எட்டுத்திக்கும் உடையார்.

51. உறந்தைராயர் :

பெருமையை ஒழுகுபவர் பெருமை வாழ்பவர், வகிப்பவர்.

52. ஊமத்தரையர் :

மூங்கைத்தன்மை உடைய அரையர்

53. ஊரத்தியார் :

ஊர்முனிவர், ஊரில் வேதம் சொல்பவர்.

54. ஊரான்பீலியர் :

அனுதாபம் காட்டும் ஊரார், விவாதிக்கும் ஊரார்

55. எண்ணாட்டுப்பிரியர் :

நாட்டின் ஆலோசனையாளர், அறிவுரையாளர், மதிப்புடையவர்

56. எத்திரியப்பிரியர் :

ஒற்றறிபவர், எத்திசையிலும் செல்பவர்.

57. எத்தொண்டர் :

எந்த வதைப்பணியாலும் மனமுவந்து ஏற்படும் தொண்டர், சேவகர், பணியாளர், உண்மையாளர்.

58. ஒண்டிப்புலியார் :

தனியான புலியார், வீரம் செறிந்த படைவீரர்

59. ஒளியராயர் :

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒளியூர்க்கொற்றம் பகுதியை ஆண்ட கள்ளரின் சிற்றரசர் பரம்பரைக்கு ஒளியராயர் என்ற பட்டம் மருவி ஒளிராயர் என அழைக்கப்படுகிறது.

60. ஓசையார் :

ஒலி, சத்தம் கொண்டவர், சிறந்த கல்வி ஞானம் கொண்டவர்.

61. ஓட்டம் பிடிக்கியார் :

இராசேந்திரசோழன் ஒட்டரதேசத்தை (இன்றைய ஒரிசா மாநிலம்) வென்றதால், வெற்றியோடு தொடர்புடைய பெயராக கொள்ளப்படுகிறது. கள்ளர் பட்டப்பெயர்களில் ஒன்று ஓட்டம் பிடிக்கியார் என்பதாகும். இது ஒட்டரம் பிடிக்கியார் என்பதன் திரிந்த வடிவமாகும் ஓட்டம் பிடிக்கியார்.

62. ஓந்தரையர் :

கல்வி ஆராய்ச்சி செய்தவர், அரசமரபினருக்கும், குடிகளுக்கும் கல்வியைப் புகுத்தியவர்களும், கல்விப் பணி ஆற்றியவர்கள் ஓந்தரையர் மருவி ஓந்தியார் என அழைக்கப்பட்டனர். சுருங்கச் சொன்னால் ஆசிரியப் பெருந்தகைகளே!

63. ஓமாந்தரையர் :

கல்வி ஆராய்ச்சி செய்தவர் ஓமாந்தரையர் பட்டம் கொண்டனர். வேள்வித்தீயில் நெய்யிட்டு மந்திரங்கள் ஓதி இறைவனையே அழைப்பவர்.

64. ஓயாம்பிளியார் :

ஓய்வற்ற, இணையற்ற பொது தொண்டு செய்பவர்.

65. ஓனாயர் :

ஓய்வற்ற, இணையற்ற பொது தொண்டு செய்பவர்.

66. கச்சிராயர் :

தெலுங்குப்பகுதியிலுள்ள கச்சிப்பகுதியை வென்தற்கான பட்டப்பெயர். (இன்றைய ஐதராபாத் நகருக்கு அருகில் கச்சுக்குடா என்று அழைக்கப்படுகிறது).

67. கக்கொடையார் :

கடின முயற்சியுடையார்

68. கங்கநாடர் :

இராசராசனின் வென்ற பகுதி கங்கநாடாகும். கங்கபாடி என்பது மைசூர் நாட்டின் தென்பகுதியும் சேலம் மாவட்டத்தின் வடபகுதியும் இணைந்த பரப்பாகும்.

69. கட்டவெட்டியார் :

கஷ்டம் விரட்டியவர், நீக்கியவர்

70. கடாரம்கொண்டார், 71.கடாரம்தாங்கியார், 72. கடாரத்தரையர், 73. கடாரத்தலைவர் :

கடாரம் என்பது மலேசியாவின் மேற்கரையில் தென்பகுதியில் (இன்றைய மியான்மார் நாட்டின் ஒரு பகுதி) இன்று 'கெடா' என்ற பெயருடன் அமைந்துள்ள பகுதியாகும். இராஜேந்திர சோழனின் கடார வெற்றியோடு இப்பட்ட பெயர்கள் தொடர்புஉடையது.

74. கண்டபிள்ளை :

குறுவாள், உடைவாள் உடையவர்

75. கண்டசில்லி :

சிறு வாளுடையார்

76. கதவாடியம் :

கதை கூறுபவர், விளக்குபவர், சொல்பவர்

77. கரடியார் (கருடியார்) :

வெற்றிக் கொடிக்கம்பமுடையார், கல்விமான், கல்வி சிறக்க போதிப்பவர்.

78. கரமுண்டார் :

கரம் வென்றார், நஞ்சுண்டார், சிவனுடையார்.

79. கரம்பையார் :

இரண்டாம் இராசராச சோழனின் அரசியல் தலைவனாக குலோத்துங்க சோழகடம்பராயன் விளங்கினான். அவர்களின் வழித்தோன்றல்களுக்கு கடம்பராயர் என்ற பட்டம் வழங்கி வருகிறது. வண்டல் மண் படிந்த நிலமுடையார், வலுவுடன் வாழ்பவர். கரம்பையார் என்றும் கடம்பராயர் என்றும் அழைக்கப்படுகிறது.

80. கடம்பராயர் :

இரண்டாம் இராசராச சோழனின் அரசியல் தலைவனாக குலோத்துங்க சோழகடம்பராயன் விளங்கினான். அவர்களின் வழித்தோன்றல்களுக்கு கடம்பராயர் என்ற பட்டம் வழங்கி வருகிறது. வண்டல் மண் படிந்த நிலமுடையார், வலுவுடன் வாழ்பவர். கரம்பையார் என்றும் கடம்பராயர் என்றும் அழைக்கப்படுகிறது.

81. கருப்பட்டியார் :

உப்பு மிகுந்த நிலம் உடையார், கருத்து நிறைந்த ஊரார்.

82. கருப்பூண்டார் :

வாழ்க்கைக்கு தேவையான நல்ல கருத்துக்களை அறிந்தவர், கொண்டவர்

83. கரும்பூரார் :

போர்த்தழும்பு உடையவர்.

84. கலியனார் :

அதி - நுண்ணறிவுள்ளவர்.

85. கனகராயர் :

பொன்னுடையார்.

86. களத்தில் வென்றார், களம் வென்றார், களமுடையார், (போர்க்களம் வென்றவர்) :

தக்கோலம் என்ற இடத்தில் இராசாதித்த சோழருக்கும் எதிராக ராஷ்டிரகூத்து மூன்றாம் கிருஷ்ணதேவனும், பூதகனும் இணைந்து எதிர் கொண்ட போரில், பல சோழ சிற்றரசர்கள் படைகளை தலைமை ஏற்று நடத்தி சோழரின் படைகளுக்கு வெற்றி முகம் காணவைத்தார்கள்.

அப்போது பகைவன் பூதகன் சமாதனக்கொடியுடன் வந்து சரணடைய கைகூப்பிய கையிலிருந்து நஞ்சு கலந்த அம்பை எதிர்பாராமல் எய்ததால் யானைமீதமர்ந்தபடியே இராசாதித்த சோழன்

வீரமரண மடைந்தார். 'யானைமீதுஞ்சிய சோழன்' என்ற பட்டத்தை மரணத்திற்குப்பின் பெற்று புகழடைந்தார். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஓட முயற்சித்த பகைவரின் வீரர்களை துவம்சம் செய்து எதிரியின் எல்லைவரை விரட்டியடித்து மன்னர் இறந்த பின்னும் மனம் தளராது போர்க்களத்தில் வெற்றி பெற்றதால், அந்தப் படைதளபதிகளுக்கு களத்தில் வென்றார், களம் வென்றார், களமுடையார், (போர்க்களம் வென்றவர்) என்ற பட்டங்களைப் பெற்றதால் அக்கள்ளர்களையும், அவர் வம்சங்களுக்கும் மேற்படி பட்டம் வழங்கி வருவதாக அறியப்படுகிறது.

87. கன்னப்பட்டையார் :

செறிவுடையார், பெருமையுடைய வாளுடையார்.

88. கனைமுரித்தான் :

போர்க்களத்தில் ஒரு வீரன், பகைவன் விடுத்த அம்புகளைத் தன் நெடுங்கரத்தால் பிடித்து முரித்தான். அச்செயல் கண்டு வியந்த படைத்தலைவன், "அவ்வீரனுக்கு கணை முரித்தான்" என்ற பட்டம் அளித்தான்

89. கஸ்தூரிமுண்டார் :

கஸ்தூரிமானின் நாபியிலிருந்து எடுக்கப்படும் வாசனைப்பொருள், கஸ்தூரி வாசனையுடையார். செல்வவள மிக்கவர், உயர்பண்பு கொண்டவர்.

90. கஸ்தூரியார் :

கஸ்தூரிமானின் நாபியிலிருந்து எடுக்கப்படும் வாசனைப்பொருள், கஸ்தூரி வாசனையுடையார். செல்வவள மிக்கவர், உயர்பண்பு கொண்டவர்.

91. காலிங்கராயர் :

முதலாம் குலோத்துங்கன் சோழனின் படைத்தளைபதியாக கருணாகரத் தொண்டைமான் இருந்து பாண்டிநாடு, வேணாடு, மலைநாடு மற்றும் கோதாவரி ஆற்றுக்கும் மகாநதியாற்றுக்கும் இடையில் உள்ள காலிங்கநாடு என்ற பகுதியையும் வென்றான். இப்போர்கள் சோழர்களுக்கு அழியாப்புகழை பெற்றுத்தந்தன. இப்போர்சிறப்பை பாராட்டும் முகமாக கவிஞர் செயங்கொண்டரால் கலிங்கத்துப்பரணி என்ற புகழ்பெற்ற காப்பியத்தில் பாடப்படுகிறது. சோழர்களின் கலிங்க வெற்றியோடு தொடர்புடைய பெயர்தான் காலிங்கராயர் என்பதாகும். கருணாகரத் தொண்டைமானின் சொந்த ஊர் மணவில். இது தொண்டை மண்டலத்தில் உள்ளது.

92. காங்கெயர் :

பொன்னைப்போன்றவர், பிரகாசமிக்கவர், மதிப்புமிக்கவர், வீரசோழப் பெரிய காங்கேயன் என்பவன் சோழ வல்லரசில் பெரும் வீரனாக விளங்கியுள்ளான். இவன் பெரியகுலத் தலைவன். கங்கை முதல்வன் என அழைக்கப்பட்டான். இவன் கொங்கு மன்னர்களில் முதல்வனும் ஆவான். இவன் குடியேறிய இடம் காங்கேயம் என்று அழைக்கப்படுகின்றது.

93. காசிநாடார் :

காசி தேசத்தை சோழர்கள் வென்றபோது உண்டான பட்டப்பெயர்.

94. காடவராயர் :

தொண்டை நாட்டிலும், நடு நாட்டிலும் காடுகளை வெட்டி சிற்றரசுகளை உருவாக்கி பல்லவ பேரரசு உருவாக காரணமாயிருந்த இளந்தரையன் வம்சாவளி பட்டம்.

95. காடுவெட்டி :

காடுகளை வெட்டி சிற்றரசுகளை உருவாக்கி பல்லவ அரசை உருவாக்க காரணமாயிருந்த இளந்திரையன் வம்சா வழியினரின் பட்டம்.

96. களாக்கடையார் :

போர்க்களம் காண்பவர் அல்லது களம் புகுவோர். ஒளி நிரம்பியவர், செழிப்புடையார்.

97. காரைக் காச்சியார் :

நல்ல உடையுடன் காட்சிதருபவர்.

98. காலாக்குடியர் :

முக்காலம் அறிந்த மக்கள், போர்க்களம் சார்ந்த வீரர்கள்

99. காவாலி :

சிறைக்காவலாளி

100. காவெட்டார் :

காவல் ஆணை இடுபவர்

101. கிலியிநார் :

பயமற்ற மக்கள்

102. கருடையார் :

புகழுடையார்

103. கீரைக்கட்டையார் :

புகழுடையார்

104. சீவுடையார் :

புகழுடையார்

105. குங்கிலியர் :

எப்போதும் குங்குமம் இடுபவர்

106. குச்சிராயர் :

கன்னக்குச்சிராயன் என்பது இரண்டாம் இராசேந்திரசோழன் மகனுக்கு வழங்கிய பட்டப்பெயராகும். இவன் கன்னக்குச்சிரம் எனப்படும் இன்றைய கன்னோசியின் தலைவனாக பொறுப்பேற்றிருந்தான். (கொத்தளத் தலைவர்). குச்சிராயர் என்ற பட்டப்பெயர் சோழன் வெற்றிப்பெயரை குறிப்பதாக அமைந்துள்ளது.

107. குடிக்கமுண்டார் :

கோத்திரம், குலம், உயர், ஒழுக்கம், நிலஉரிமையுடையவர்.

108. குடிபாலர் :

கோத்திரம், குலம், உயர், ஒழுக்கம், நிலஉரிமையுடையவர்.

109. குமரையாண்டார் :

முருகன் கோயில் கட்டியவர்.

110. குலுக்கண்டார் கூர்சார் :

குத்துவாள் உடையவார், இராசேந்திரசோழன் கன்னோசியை வெற்றி அடைந்ததற்கான பெயர்.

111. கூசார் கன்னோசிக்கு :

அஞ்சிப் பின்வாங்கோர் கூர்ச்சரம், இராசேந்திரசோழன் கன்னோசியை வெற்றி கொண்டதற்கான பெயர்.

112. கூராயர் :

மிகச்சிறந்த ஆயுதம், அறிவு உணர்வு கொண்டோர்.

113. கூழாக்கியார் :

பின்னனி படையினர்

114. கையராயர்

காணிக்கை பொருளுடையவர், அன்பு பாராட்டி பரிசு கொடுப்பவர் :

115. கொங்கனர், 116. கொ'ங்காள்வார், 117. கொங்கரையர்:

கள்ளர் பட்டப்பெயர்களில் காணப்படும் கொங்காள்வார், கொங்கரையர் முதலிய பட்டப்பெயர்கள் சோழர்கள் வென்ற கொங்குப் பகுதியோடு தொடர்புடையனவாகத் தோன்றுகிறது.

118. கொடுப்புலியார், 119. கொடும்புராயர் (கொடுமளூர்ராயர்) :

கள்ளர் பட்டப்பெயர்களில் காணப்படும் கொங்காள்வார், கொங்கரையர் கொடுப்புலியார், கொடும்புராயர் கொடுமளூர்ராயர் முதலிய பட்டப்பெயர்கள் சோழர்கள் வென்ற சேரநாட்டின் பகுதியோடு தொடர்புடையனவாகத் தோன்றுகிறது. இதில் காந்தளூர் சாலை போர் வரலாற்றில் சோழர்களின பெருமை குறிப்பிடத்தக்கது.

120. கோட்டையாண்டார், 121. கொத்தப்பிரார், (கொற்றப்பிரியர்) :

மதில் அரண் கூடிய கோட்டையை பாதுகாத்தவர் (கொத்தளம்)

122. கொல்லத்தரையர், 123. கொழுந்தராயர் :

கொல்லம் என்பது கேரள நாட்டின் ஒரு பகுத. இராசராசன் இப்பகுதியை வென்றதால் கள்ளர்களில் ஒரு பிரிவினருக்கு வழங்கும் கொல்லத்தரையர், கொழுந்தராயர் என்னும் பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

124. கொன்றையர் :

வெற்றி, வீரம், வலிமை, ஆட்சி, நிறைந்தவர்

125. கொன்னமுண்டார், 126. கோதண்டமுண்டார், 127. கோதண்டப்புலியர், 128. கோபாலர்,

129. கண்டகோபாலர் :

தெலுங்குச் சோழர்களில் கோபாலன் சிறந்த அரசனாக ஆட்சி செய்ததாக பல கல்வெட்டுக்களில் உள்ளது. இவர்கள் சோழச்சிற்றரசர்கள் ஆவர்கள்.

130. கோழயர், 131. கோறர் :

சிங்கம் போன்றவர்கள், செழிப்பாக வாழும் மக்கள்

132. சம்புவராயர் :

சோழர்களில் உறவினர் ஆவார். குதிரைப்படைகளின் தளபதியாக இருந்தவர்கள்.

133. சக்கரர், 134. சக்கராயர், 135. சக்கரை, 136. சக்கரநாட்டார், 137.சமையர், 138. சக்கரத்தேவர், 139. சக்கரப்ப நாடாள்வார்:

முதலாம் இராசேந்திர சோழன் வேங்கி நாட்டின் வடபாலுள்ள சக்கரக்கோட்டம் என்ற நாட்டையும் வென்றான்.

சக்கரக்கோட்டம் என்பது விசாகப்பட்டினத்திற்கு வடமேற்கே இருந்த நாட்டின் ஒரு பகுதியாகும். இக்காலத்தில் அது சித்திரக்கோட்டம் என்று அழைக்கப்படுகிறது. கள்ளர் பட்டப்பெயர்களில் காணப்படும் சக்கரர், சக்கராயர், சக்கரை, சக்கரநாட்டார், சமையர், சக்கரத்தேவர், சக்கரப்ப நாடாள்வார் போன்ற பட்டப்பெயர்கள் சோழர்களின் சக்கரக்கோட்ட வெற்றியோடு தொடர்புடையது.

140. சவுட்டியார், 141. சவுளியார், 142. சன்னாடர், 143. சானூரரார் (சாணர்), 144. சாதகர், 145. சாமுத்திரியர், 146. சாளுவர், 147. சாவகர்

அழகு, வல்லமை பொருந்தியவர், நால்வகைப் பொன்களுள் ஒன்றானவர். நற்குணம், சான்றாண்மை கொண்டவர். தென்கிழக்காசியாவில் உள்ள ஜாவாத்தீவை சோழர்கள் வென்றதற்காக சவுட்டியார், சவுளியார், சன்னாடர், சானூரரார் (சாணர்), சாதகர், சாமுத்திரியர், சாளுவர், சாவகர் போன்ற பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டு வருகிறது.

148. சிங்கப்பீலியர், 149. சிங்கப்புலியர், 150. சிங்காரிக்கர் :

சிங்கம் போன்றவர் சிங்கம் போன்ற சோழர், அலங்காரம் உடையவர், சிங்கம் தாங்குவது போல் அமைக்கப் பெற்ற ஆசனம் கொண்டவர்.

151. சிட்டாட்சியர் 152. சிற்றாட்சியர் :

சோழப்பேரரசுக்குட்பட்ட சிற்றரசர்கள்

153. சிந்துராயர், 154. சிறுநாட்டுராயர், 155. சிறுமாடர் :

முதலாம் இராசராசசோழன் சாளுக்கிய நாட்டின் (கர்நாடகா) ஒரு பகுதியான சிந்துவாடி என்ற நாட்டின் மீது படையெடுத்து அதனை ஆண்ட கண்டராதித்தராசன் என்பவனை கி.பி. 1006 ஆம் ஆண்டில் வென்றான். கள்ளர் பெயர்களுள் ஒன்றான சிந்துராயர் என்பது சோழனின் இவ்வெற்றியோடு தொடர்புடைய பட்டப்பெயராகக் கொள்ளப்படுகிறது.

156. சீனத்தரையர் :

சோழர்களின் வணிகத்தின் பொருட்டுப் பல குழுக்களைச் சீன நாட்டிற்கு அனுப்பியுள்ளனர். கி.பி.1012 ஆம் ஆண்டில் இராசராசசோழனும் கி.பி. 1033 ஆம் ஆண்டில் முதல் இராசேந்திரசோழனும், கி.பி 1077 ஆம் ஆண்டில் முதல் குலோத்துங்கச்சோழனும் சீன நாட்டிற்கு வணிகத்தின் பொருட்டு தூதுக்குழுக்களை அனுப்பியதாக தெரியவருகிறது.

கள்ளர் பட்டப்பெயர்களில் ஒன்றான சீனத்தரையர் என்பது சோழர்களின் சீன உறவோடு தொடர்புடைய பட்டமாக கருதப்படுகிறது.

157. சுக்கிரர், 158. சுண்டையார், 159. சுந்தர் :

சுக்கிரன் ஆசிப்பெற்றவர் என்றும் அழகு கொண்டவர் ஆற்றல் நிறைந்தவர் என்றும் கருதப்படுகிறது.

160. சுரக்குடியார் , 161. சுரைப்பிடுங்கியார் :

ஆட்சியில் அக்கறைக் கொண்டவர், வெற்றியை எளிதாக்கி எடுத்துக்கொண்டவர்.

162. செம்படையார், 163. செம்பியமுத்தரசர், 164. செம்மைக்காரர், 165. செம்பியதரையன் :

மூன்றாம் குலோத்துங்கச்சோழன் காலத்தில் செம்படையார், செம்பியமுத்தரசர், செம்மைக்காரர், செம்பியதரையன் ஆகிய பட்டப்பெயருடைய அதிகாரிகள் இருந்துள்ளனர். சிவந்த நிறம் கொண்டவர்கள் என்பதாலும், போரில் எதிரிகளை களத்தில் அழித்து குருதியால், களத்தை சிவப்பு நிறமாக்கும் ஆற்றல் கொண்ட அதிரடி படையை கொண்ட சோழர்கள் என்பதற்கான அர்த்தம். செம்பியர் என்பது சோழருக்கு ஒரு பெயரும் உண்டு. நேர்த்தியானவர்கள் என்றும் கூறுவதுண்டு.

166. செயங்கொண்டார், 167. செயங்கொண்டபிரியர், 168. செனவராயர், 169. சன்னவராயர், 170. சனகராயர், 171. சேண்டப்பிரியர்

முதலாம் இராசராசசோழனின் வெற்றிகளுக்கு இந்த செயங்கொண்டார், செயங்கொண்டபிரியர், செனவராயர், சன்னவராயர், சனகராயர், சேண்டப்பிரியர் என்ற இந்த பட்டப்பெயர்களும் உண்டு.

172. சேதிராயர், 173. சேதுராயர், 174. சேப்பிழார் :

சோழ மண்டலத்தில் தென்னாற்காடு கோட்டத்தில் வடமேற்கு மலைப்பகுதியினை சேதிராயர் என்ற சிற்றரசர் ஆண்டுவந்தார். அவர் தலைநகர் கிளியூர். இராசராசசோழன், இராசேந்திரசோழன் காலத்திலும் சேதிராயர், சேதுராயர், சேப்பிழார் சிறப்புற ஆண்டு வந்தனர்.

175.அ. சேர்வைக்காரர் :

கூட்டுப்படை கொண்டவர் படைகளுக்குள் கூட்டுறவு ஏற்படுத்துபவர்.

175.ஆ. சேந்தராயர் :

கொங்கு மண்டலத்தில் உள்ள நாமக்கல் பகுதியில் உள்ள சேந்தமங்கலம் என்று குறுநில நாட்டை இராசராசன்சோழன் வென்றதால், சேந்தராயர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

176. சேலைக்கொண்டார், 177. சேனாபதியார், 178. சேனைகொண்டார், 179. சேனைநாடார், 180. சோணையர், 181. சோதிரையர்

தலைமைப் படைத்தளபதி, படைகளுக்கு அதிபதி, உரியவர், தலைவர், விசாரணை அதிகாரி ஞானம், விவேகம் நிறைந்த படைத்தலைவர், ரத்த மரபுடைய படைத்தலைவர்,

182. சோழரசர், 183. சோழகர், 184. சோழங்கதேவர், 185. சோழங்கநாடர், 186. சோழங்கா, 187. சோழதரையர், 188. சோழப்பிரியர், 189. சோழன்கிளையார், 190. சோழியரையவன், 200. சோழியத்தரையன் :

சோழ நாட்டவர் அல்லது சோழ மண்ணுக்கு உரிமையுடையவர் என்ற பொருளில் சோழரசர், சோழகர், சோழங்கதேவர், சோழங்கநாடர், சோழங்கா, சோழதரையர், சோழப்பிரியர், சோழன்கிளையார், சோழியரையவன், சோழியத்தரையன் இப்பட்டப்பெயர்கள் வழங்கப்படுகின்றன. செம்பியன் சோழியவரையன் சோழனோடு தொடர்புடைய பட்டமாகக் கொள்ளலாம். சோழன்கிளையார் சோழருக்கு உறவினர்.

201. ஞானிசேவகர் :

அறிவுசால் படையினர், பணியாளர்

202. தனஞ்சராயர், 203. தஞ்சைராயர் :

தஞ்சைத்தலைவர், தஞ்சைப் படைத்தளபதி ஆவார்.

204. தாக்கலக்கிலயார், 205. தாளிதியர், 206. தானதியார் :

ஊக்கம், விடாமுயற்சி, உறைவிடத்தை காப்பவர் ஆலயங்களை பாதுகாப்பவர்.

207. திண்ணாப்பிரியர், 208. திருக்காட்டியார், 209. திருப்பூவாட்சியார் :

வலிமை, உறுதி, கலங்கா நிலைமை உடையவர் நல்வழிகாட்டுபவர், சட்டம், தீர்மானம் ஏற்றி ஆள்பவர் சீர்படுத்துவர்.

210. துண்டுராயர் (துண்டிராயர்):

சோழர்கள் வென்ற பகுதிகளில் துண்டிரம் நாடு. துண்டிர நாடோடு தொடர்புடைய பெயர்தான் துண்டுராயர்.

211. துறையாண்டார், 212. தெத்துவென்றார், 213. தொறையாண்டார் :

முதலாம் இராசேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டில் இவன் இடைத்துறை நாடு. வனவாசி. கொள்ளிப்பாக்கை முதலிய நாடுகளை வென்ற செய்தி அறியப்படுகின்றது. இடைத்துறை நாடு என்பது கிருட்டிணா, துங்கபத்திரா ஆறுகளுக்கிடையே அமைந்த பகுதியாகும். இக்காலத்தில் அது மஹாராஷ்டிரா மாகாணத்திலுள்ள ரெய்ச்சூர் மாவட்டமாகும். கள்ளர் பட்டப்பெயர்களில் துறையாண்டார். என்பதும் ஒன்றாகும்.

214. தென்கொண்டார், 215. தென்னரையர் (தென்னதரையர்) :

மூன்றாம் இராசேந்திர சோழனின் அதிகாரிகளுள் தென்னதிரையன் என்பவனும் ஒருவனாவான். அவர்களுடைய வாரிசுகளுக்கு தென்கொண்டார், தென்னரையர் (தென்னதரையர்) என்ற பட்டம் வழங்கப் பட்டுவருகிறது. தென்னத்திரையன்பட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது.

216. தேவர், 217. தேவண்டார் :

இனியர் கல்வியில் உயர்ந்தவர், தெய்வத்தன்மை உடையவர்.

தே - கடவுள் என்று பொருள்

தேவாரம் - தே+ஆரம் கடவுளுக்கு சூட்டும் பாமாலை என்று பொருள் இதை போலவே தே+ஆர் தேவர் என்பர். தே - தெய்வம் + அர் = விகுதி

(வகர உடம்பட மெய் தோன்றித் தேவர் எனவாயிற்று)

தேவர் - தெய்வத்தன்மை பெற்றவர், ஒளி உடம்பு பெற்றவர், வானுலகத் தேவர்க்குத் தெய்வத்தன்மையும் ஒளியுடம்பும், மண்ணுலகத்தேவர்க்குத் தெய்வ நாட்டமும், புகழுடம்பும் உடையவர் என்று பொருள் பொருந்தும்.

218. தொண்டார், 219. தொண்டைமான், 220. தொண்டைமான் கிளையார் :

கள்ளர் ஒரு பிரிவினருக்கு இப்பட்டங்கள் வழங்கி வருகிறது. இதைப்பற்றி பல்லவப்பேரரசு உருவான நிகழ்வில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

221. நந்திராயர், 222. நரங்கியப்பிலியர், 223. நரங்கியர் :

சிவகணமுடையார், சிவனின் முதல் பணியாளர், நற்குணங்கள் நிறைந்தவர்.

224. நல்லவன்னியர், 225. நல்லிப்பிரியர் :

சிறந்த குதிரைப்படையினர் வலிமை, ஆற்றல் கொண்டவர்.

226. நாடாள்வார் (நாடாவர்), 227. நாட்டார், 228. நாட்டரையர் :

சோழ நாட்டவர் அல்லது சோழ மண்ணுக்கு உரிமையுடையவர் என்ற பொருளில் சோழ நாட்டில் ஆண்டவர்களை நாடாள்வார் (நாடாவர்), நாட்டார், நாட்டரையர் என்ற பட்டப்பெயருடன் அழைக்கப்படுகிறார்கள். நில ஆட்சியில் இவர்களுடைய பங்கைப் பெருமைப்படுத்தும் வகையில் இப்பட்டப்பெயர்கள் உள்ளன.

229. நாய்க்கர், 230. நாய்க்காடியர், 231. நார்த்தவார், 232. நாவிளங்கியவர் :

சோழர்படைத் தலைவர்கள், கோட்டை அகழிப்பொருப்பாளர்களுக்கு நாய்க்கர், நாய்க்காடியர், நார்த்தவார், நாவிளங்கியவர் இப்பட்டப்பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள்.

233. நெடுங்காரியார், 234. நெடுத்தார், 235. நெடுவாண்டார், 236. நெறிமுண்டார் :

மன்னன் போரில் வெற்றிப்பெற வேண்டும் என்று காளியின் முன் தன் தலையைதானே பலிகொடுப்பவர் அச்சமறியார், காளியின் முன் வீரசபதம் செய்து போருக்கு புறப்படுவர் போர்க்களத்தில் மார்பில் புண்பட்டு, வீழ்கிற மரபு நெறி சார்ந்தவர், எதிரியை ஒடிப்பவர், போரில் நெறி தவறாது போரிடும் மறவர்.

237. நைனியார் :

இரும்புகோட்டை அரண் போன்றவர்கள்

238. பசும்பிடியார், 239. பஞ்சரமார், 240. படையெழுச்சியார், 241. பணிபூண்டார், 242. பண்ணியமுண்டார் :

படையினரை உற்சாகமூட்டுவர், எழுச்சியை உருவாக்குபவார், வீரவெற்றிப்பாடல் பாடுபவர், உண்டக்குபவர். இராசேந்திர சோழனின் பட்டப்பெயர்களுள் ஒன்று பஞ்சரமார், பஞுசமரமார் பஞ்சவன்மாராயன்.

243. பதுங்கராயர் :

முதலாம் பராந்தகச்சோழன் வைதும்பரை வென்றான் என்று உதயேந்திரச் செப்பேடுகள் கூறுகின்றன. கி.பி. 961, 964, 965 ஆகிய ஆண்டுகளில் இருந்தனர் என்று திருக்கோவாலூர்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வைதும்பர்கள் பிற்காலத்தில் சோழர்களுக்குஅடங்கிய சிற்றரசர்களாயிருந்தனர். என வைதுங்கர் என்பது காலப்போக்கில் பதுங்கர் என்றாகிவிட்டது. பதுங்கரை வென்றதால் கள்ளர்களுக் பதுங்கராயர் என்ற பட்டமும் விளங்குகிறது.

244. பக்தாளர், 245. பம்பாளியர் :

இராசேந்திர சோழன் வென்ற பகுதிகளில் ஒன்று மாபப்பாளம். இப்பட்டப்பெயர் பக்தாளர், பம்பாளியர் என்றும் வழங்கி வருகின்றது.

246. பரங்கிராயர், 247. பருத்திகொண்டார் :

சோழர்படையில் குதிரைப்படை பொறுப்பாளராகவும், வீரராகவும் இருந்து வந்துள்ளனர்.

248. பல்லவராயர், 249. பல்வாண்டார் :

பல்லவர்களின் பட்டப்பெயர்.

250. பழங்கொண்டார் (பழனங்கொண்டார்), 251. பன்னிகொண்டார் (பன்றிகொண்டார்) :

முதலாம் இராசராச வென்ற பகுதிகளில் இலங்கையின் முந்நீர்ப் பழந்தீவு பன்னிராயிரம் என்பதாகும். இது பழந்தீவம் கொண்டார் என்ற அர்த்தத்தில் கள்ளர்களிடம் காணப்படும் பழங்கொண்டார் என்ற பட்டத்தை அறிந்து கொள்ளலாம்.

பழனி மலையைச் சுற்றியுள்ள நாட்டை வெற்றி பெற்றதற்காக, பழங்கொண்டார் (பழனங்கொண்டார்), பன்னிகொண்டார் (பன்றிகொண்டார்) எனப் பட்டப்பெயர் கள்ளர்களுக்கு வழங்கி வருகிறது.

252. பன்னையார் :

பன்னை என்பது சுமித்ரா தீவின் கீழ்க்கரையில் அமைந்துள்ள ஊராகும். அது இந்நாளில் பணி, பனை என்று வழங்குகின்றது. கள்ளர் பட்டப்பெயர்களில் பன்னையார் என்று ஒன்றாகும்.

253. பாண்டியர் (பாண்டியராயர்) :

கள்ளர் பட்டப்பெயர்களில் இந்த பட்டப்பெயர்கள், சோழர்கள் பாண்டியநாட்டை வென்றதற்கான வெற்றியுடன் தொடர்புடைய பெயர்கள்.

254. பாப்புடையார் (பாப்பு வெட்டியார்) :

பாவங்களை விரட்டியவர்.

255. பாலாண்டார், 256. பாலியார், 257. பால்நாட்டார், 258. பால்ராயர் :

முல்லை நிலத்தையாண்டவர், ஆலமரம் போன்று அனைவரையும் ஆதரிப்போர்.

259. பாவுடையார் :

வியாபித்தல், படர்தல்

260. பிசலண்டார் :

தோள்கொடுப்பவர்

261. பிச்சாடியார், 262. பிச்சையன் 263. கிளையார் :

வெண்கொடை கொண்டோர்.

264. பீலியராயர், 265. பீலிமுண்டார் :

மயில் வாகனன் உடையவர், ஒரு விதமான எறி ஆயுதம் கொண்டோர்.

266. புட்டில் கழித்தார், 267. புண்ணாக்கர் :

அம்பறாத்தூணி யுடையோர்

268. புலிக்குட்டியார் :

சோழர்களுக்குள்ள பெயரில் ஒன்று

269. புள்ளராயர் :

கொடுவாளுடையோர்

270. புறம்பயத்தார் :

திருப்புறம்பயம் போரில் வென்றோர்.

271. பூச்சியார் :

கௌரவமுடையோர், உளம் கனிந்து பேசுபவர்

272. பூழிராயர் :

சேர பாண்டியனை வென்றவர்

273. பூனையர் :

வெற்றிப்பூக்கொண்டோர், வெற்றிப்பூ அணிந்தவர்

275. பேதரையர் :

கருத்து வேறுபாடுகளை அகற்றும் தலைவர், அறியாதவர்களை அறியவைப்பவர்.

276. பொறைபொறுத்தார் :

சேரனை மன்னித்தவர், காத்தவர், பொறுமையானவர்

277. பொன்பூண்டார், 278. பொன்னமூண்டார், 279. பொன்னாரம் பூண்டார், 280. பொன்னானியார், 281. பொய்யாண்டார், 282. பொய்கையாண்டார் :

செல்வம், பொன், பொன்னுறை அணிந்தவர் பொன்னிறம் கொண்டவர் காவிரிநாடன், சோழநாட்டின் பொன் வேய்ந்தவர். சோழநாட்டின் ஒரு பகுதி பொய்கை நாடாகும், திருவையாறு, திருமழபாடி, பெரும்புலியார், இது கள்ளர்களுக்கு பட்டப்பெயராகும்.

283. போய்ந்தார், 284. போர்க்காட்டியார், 285. போரைச்சுற்றியார், 286.போர்பொறுக்கியார், 287. போர்மூட்டியார் :

போரில் வென்றவர் போரில் எங்கு சென்றாலும் வென்றவர், போர் மூளச் செய்பவர், போருக்காக எப்போதும் ஆயத்தத்துடனிருப்பவர்.

288. மங்கனிர், 289. மங்காத்தேவர் :

சோழ அதிகாரிகளில் ஒருவர், மங்கல நாட்டோடு தொடர்புடைய பெயர்.

290. மட்டையர் :

ஒருவகை ஆயுதமுடையவர் தகுதிக்கேற்ற மரியாதை கொண்டோர். பாண்டிய நாட்டில் குலசேகரபாண்டியனை வென்ற போர் நடந்த இடம் மட்டியூர், கழிக்கோட்டை.

291. மணவாளர் :

மாப்பிள்ளை என்பது திருமாலுக்கு மாப்பிள்ளை என்ற பெயரும் உண்டு.

292. மண்கொண்டார் :

மண்ணை கொண்ட (வென்ற) சோழன். சோழர்களின் சிற்றரசர்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்து வந்துள்ளனர்.

293. மண்டராயர் :

மண்டையரராயர் என்பதே மண்டராயர் மருவியுள்ளது. சோழ மன்னனிடம் அதிகாரியும், மண்டலங்களிலுள்ள கோயில்களில் எண்ணெய் விளக்குகள் எரிய உதவியவர்கள்.

294. மயிலாண்டார் :

முருகக்கடவுளின் பெயர்

295. மலையரார் :

போர்த்தொழில் புரிவோர்

296. மல்லிகொண்டார் :

தொண்டை மண்டலத்தை இராசராசன் வென்ற பகுதிகளில் ஒன்று மல்லியூர் என்பதாகும் அந்த பகுதியை வெற்றி கொண்டதன் பேரில் மல்லிகொண்டார் பட்டம் வழங்கப்படுகிறது.

297. மழவராயர் :

இளையவர், வீரம்செரிந்தவர் சோழர் அரச குடும்பப்பட்டப் பெயர்களில் ஒன்று.

298. மழுவராயர் :

கோடாலி, கொழு போன்ற ஆயுதம் தாங்கிபோர்

299. மண்வெற்றிக் கூழ் வழங்கியார் :

வெற்றி கொண்டவுடன் வீரர்களுக்கு உணவு வழங்கியோர், படையினரின் பின்னனியிலிருந்து உணவு தயாரிப்பவர்கள் வெற்றிக்கு உறுதுணையானவர்கள்.

300. மன்னையார் :

இராசேந்திர சோழன் வென்ற ஒரு நாடு மண்ணைக் கடக்கம் இது. இப்பொழுது 'மால்கெட்' என்று வழங்கப்படுகிறது. மானியகேடம் என்றும் அழைக்கப்படுகின்றது.

301. மாங்காட்டார், 302. மாதைராயர், 303. மாதையாண்டார், 304. மாதவராயர், 305. மாத்துராயர் (மாதூரார்) :

பெருமை கௌரவம் காத்தவர், வலிமை, வீர சபதம் காட்டியவர்.

306. மாந்தரையர் :

சேரநாட்டின் மாந்துரைப்பகுதியை சோழர்கள் வென்றதற்கான பட்டப்பெயர்.

307. மாமணக்காரர், 308. மாலையிட்டார் :

நிக்கோபா தீவுகளை வெற்றி கண்டவர். மாணிக்கம் போன்றோர், இந்திரன்போல் சொத்துகளுடையோர்

309. மாவலியார், 310. மாவெட்டியார் :

சங்ககாலம் முதல் சோழர்களின் சிற்றரசர்களாக இருந்து வந்தனர். பெரும் வெற்றியாளர் வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றரசர் மாவிலி மரபினர். இவ்வம்சத்தில் வாண கோவரையன் திருவண்ணாமலை கோயிலுக்கு பொன் வேய்ந்தமையால் பொன்பரப்பினான் எனப்பெயர் பெற்றான்.

311. மாளிக்கசுத்தியார் (மாளிச்சர்) :

அரண்மனை போன்ற மாடமாளிகையுடையவர்

312. மானங்காத்தார், 313. மானமுத்தரையர், 314. மானவிழுங்கியார், 315. மான்சுத்தியார் :

கௌரவம் காத்தவர் அன்பு, கணிப்பு, சபதம், தெளிவு, சேனைத்தலைவர்

316. முடிகொண்டார், 317. முனுக்காட்டியார், 318. முண்டார் :

இராசேந்திரசோழன் ஈழத்தின் மீது படையெடுத்து இலங்கையின் முடியையும் அடைக்கலமாக வைக்கப்பட்டிருந்த பாண்டியன் முடியையும் (கிரீடம்) இந்திர ஆரத்தையும் கைப்பற்றியவர்.

319. முதலியார், 320. மூனையரையர், (முனைதரையர்) 321. மூங்கிவியர், 322. மூவரையர் :

சோழர் காலத்தில் உயர்அதிகாரிகளை முதலிகள் என்று அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. முதலி என்ற சொல்லுக்கு முதன்மையானவர் என்று பொருளாகும். இவர்களுள் சோனைமுதலி, படைமுதலி, அகம்படி முதலி என மூவகை முதலிகள் உண்டு. தேவார ஆசிரியர்களை மூவர் முதலிகள் என்பர். சோழர் படையோடு தொடர்புடைய பட்டப் பெயர்களில் ஒன்றான முதலியார் பட்டம் கள்ளர்களுக்கும் இப்பட்டத்தோடு அழைக்கின்றனர்.

323. மெய்க்கண் கோபாலர் :

உண்மை, ஆன்மா, அறிவு, கடவுள் தொடர்புடைய பட்டம்.

324. மெனக்கடார் :

வேறு வேலைகளை விட்டு ஒன்றில் சிந்தை கொள்ளுபவர், கருமமே காண்ணாயினர்.

325. மேல்கொண்டார், 326. மேனாட்டரையன் :

வேள்+நாடு என்பது வேணாடு சேரநாட்டின் ஒரு பகுதியாகும். இராசராசன் வென்றதற்கான பட்டப்பெயராகும் மேல்கொண்டார், மேனாட்டரையர் என்பது திரிபாகும். குறுநில மன்னராகவும், சமீன்தாராகவும் இருந்துள்ளதாக தெரியவருகிறது.

327. மொட்டத்தேவர் :

முழுமையானவர்

328. வங்கார முத்தரையர் :

இராசேந்திர சோழனின் வங்கத்தை வென்றபோது பெருமை கொண்ட பட்டமாகும். சோழர் படைத்தளபதி ஒருவன் வங்கத்திலேயே தங்கிவிட்டதாகவும், பின் அவனது வம்சத்தில் வந்தவனே சாமந்த சேனன் என்ற பெயரில் வங்கப்பேரரசை நிலுவியன். சேந்தன் கூத்தாடுவான் இராசராசன் வங்கார முத்தரையன் என்பவர் பாடி காவல் தலைவனாக இருந்தவர். (போர்க்களத்தில் படையினர் தங்கும் வீடு பாடி என்றழைக்கப்பட்டது).

329. வடுராயர் :

வடுக நாட்டை வென்றதன் மூலம் அடைந்த பட்டமாக இருக்கலாம் வடு என்றால் யுத்தத்தில் உடலில் ஏற்பண்ட புண்கள் ஆறியபின் வடுக்கள் என கூறுவர். களத்தில் விழுப்புண் கொண்ட தலைவன் என்ற பட்டமாகவும் இருக்கலாம்.

330. வம்பாளியார் :

இராசேந்திர சோழன் வென்ற பகுதிகளில் ஒன்று மாபப்பாளம். இப்பெயர் மருவி வம்பாளியர் என்று வழங்கி வருகின்றது.

331. வல்லாளதேவர், 332. வல்லத்தரையர், 333. வல்லாண்டார், 334. வல்லிடியர், 335. வளம்பர் :

திருவண்ணாமலை என்னும் புனித நகரை தன் தலைநகரமாக தன்னுள்ளே கொண்டிருந்தது. போசளநாடு. சோழர் ஆட்சிக்காலத்தில் வல்லாளர் என்னும் அரசமரபினர் சோழர்களுடன் உறவு கொண்டு, போசள நாட்டின் சிற்றரசராக இருந்து வந்துள்ளனர்.

குன்றுகள் எல்லாம் சிவலிங்களைப்போலக் காட்சியளித்தன. நாடெங்கும் சிவலிங்கம் முளைத்து உள்ளனவோ என்னும் ஐயத்தைப் பக்தர்களுக்கு எழுப்பின. மலைப்பகுதியிலும் பயிரிட்டு தம் உழைப்பின் வலிமையை மக்கள் உணர்த்தினர்.

போசள நாட்டின் மன்னர் வீரவல்லாளத்தேவர் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்துள்ளார். சோழநாட்டின் முக்கியமான முடிவுகள் போசள நாட்டைக்கலந்து ஆலோசித்த பின்னரே தீர்மானிக்கப்பட்டது. தென்னகத்தின் எதிர்காலத்தைக் நிர்ணயிக்கும் நாடாக போசள விளங்கியது. வீரவல்லாளத்தேவரின் மைந்தன் வீரசோமேசுவரத்தேவர், பேரர்களான வீர.வல்லாளனும், வீர.ராமனாதனும் மாபெரும் வீரர்களாயிருந்தனர்.

தென்னகத்தின் வளமும், கோயில் நகைகளும், பொன்னும், மணியும், பொக்கிசப் பொருட்களும் தில்லியை ஆண்டுவந்த சுல்தான் அலாவுதின் கில்ஜிக்கு பேராசையைத் தூண்டின. தனது தளபதி மாலிக்கபூரை தென்னகம் நோக்கி கொள்ளையடிக்க பெரும்படையுடன் அனுப்பி வைத்தான். பல நாடுகளை வென்று பொன்னையும், பொருளையும் கொள்ளையடித்து மக்களைப் பலவகைகளில் துன்புறுத்தினான்.

திருவண்ணாமலைக் கோயிலைக் கட்டுவதற்காக மூன்றாம் வீரவல்லாளத்தேவர் சேகரித்து வைத்திருந்த பொருள் வளம் பற்றி கேள்வியுற்று, கொள்ளையடித்து செல்வவளத்தை கைப்பற்ற நினைத்து படையெடுத்து வந்தான்.

மூன்றாம் வீரவல்லாளத்தேவனின் போர்த்தந்திரம், வலிமையான படையின் போர் முறையால் மாலிக்கபூர் பின்வாங்கி மதுரையை நோக்கிச் சென்றதாக அறிய முடிகிறது.

கள்ளர் பட்டப்பெயர்களில் ஒன்று வல்லாளத் தேவர் என்றதாகும்.

336. வாண்டையார் :

வானத்தில் (விண்) அசைந்து கொண்டிருந்த பகைவரது மதிலை அழித்த வீரவளை அணிந்த தோளையுடையவர், குளமுற்றத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற சோழமன்னன் வானிலிருக்கும் மேகங்களை பூமியில் மழைபெய்யச் செய்தவர். அகத்திய முனிவரது கட்டளையால் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா எடுத்தார். சோழ நாட்டை சோணாடு என்ற அழைக்கக் காரணமாயிருந்தவர். அந்த வழியில் வந்தவர்களை வாண்டையார் என அழைக்கப்படுவதாக தெரியவருகிறது. பெருநிலச்சுவான்தார்களாகவும், சமீன்தார்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். வலிமையான வாளுடையவர் என்ற பெயரே வாண்டையார் என மருவியது. எனக்கொள்ளலாம். உலகப்புகழ்பெற்ற தஞ்சைப் பெரியகோயிலில் வாண்டையார்களின் பங்களிப்பைப்பற்றி கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக செய்தி அறியவருகிறது.

337. வன்னியர், 338. வன்னிமுண்டார் :

வலிமை, ஆற்றல் நிறைந்தவர்கள் நெருப்பு போன்றவர்கள். சோழநட்டில் குதிரைப்படைத் தலைவரை வன்னியர் என்றழைப்பர். ஈழத்தை வென்றபின் ஒரு பகுதியை நிர்வாகம் பண்ண பண்டார

வன்னியன் என்ற தளபதியிடம் சோழ மன்னர் பொறுப்பு ஒப்படைத்ததாக தகவலறிய வருகிறது. கள்ளர்களில் ஒரு பிரிவினருக்கு இப்பட்டப்பெயர் வழங்கி வருகிறது.

339. வாச்சார், 340. வட்டாட்சியர் :

வேகத்துடன் அம்பு எய்பவர்

341. வாயாடியார், 342. வாலியர், 343. வாள்வெட்டியார் (வாளுக்குவேலியார்) :

வாளுக்கு வலியவர், படைவீரர், வாட்படையாள்

344. விசுவராயர், 345. விசையத்தேவர், 346.விசலாண்டார், 347. விஞ்சைராயர், 348. விசைராயர் :

ஸ்ரீ விசயம் என்பது இன்றைய சுமத்திரா என்று வழங்கும் சுவர்ணதீவிலுள்ள (தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றாக சுமத்திரா அமைந்துள்ளது) பாலாம்பாங் என்னும் இராச்சியமாகும். இராசேந்திரசோழன் வென்ற கடல்கடந்த பகுதிகளுள் இதுவும் ஒன்றாகும். கள்ளர் பட்டப் பெயர்களில் காணப்படும் விசயத்தேவர் விசுவராயர் முதலிய பட்டப்பெயர்கள் இராசேந்திரசோழன் வென்ற ஸ்ரீ விசயவெற்றியோடு தொடர்புடையவனாகக் கொள்ளலாம்.

349. வில்வராயர் :

சேரமன்னனது இலச்சினை வில். சேரனை வென்றதால் வில்வராயர் என்ற பட்டம் வழங்குகிறது. வில்லவர்க்கு அரசர் என்று பொருள்.

350. விற்பனர், 351. வீசண்டார், 352. வீணதரையர், 353. வீரங்கொண்டார், 354. வீரப்புலியார், 355. வெட்டுவார், 356. வெண்டர் (வென்றார்)

போர்களில் வீரர்கள் ஆற்றிய வீரத்திறன்களை போற்றும் வகையில் இப்பட்டப்பெயர்கள் கள்ளர் வகுப்பினருக்கு வழங்கி வருகிறது.

357. வெள்ளங்கொண்டார் :

கரைபுரண்டோடிய காவிரியை கட்டுக்குள் கொண்டு வந்தவர், வெற்றிகொண்டார்.

358. வேணுடையார், 359. வேளுடையார் :

பயிர்த்தொழில் செய்வோர்

360. வைராயர், 361. வையராயர் :

குலோத்துங்கண் சோழன் வயிராகத்தையும், சக்கரகோட்டத்தையும் (ஆந்திரா) வென்றதற்கான பட்டப்பெயர்.

362. வைதும்பராயர் :

அரிஞ்சிய சோழ மன்னனுக்கு பெண் கொடுத்த வகையில் சம்மந்தி ஆவார். அந்த வகையில் கள்ளர்களுக்கு இப்பட்டப்பெயர் வழங்கி வருகிறது.

கடவுளும் மூன்று கதைகளும்

ஒரு கிறித்துவப் பாதிரியார், வீட்டிலுள்ள குழந்தைகள் போடும் சத்தத்தால் தினசரி பிரார்த்தனை கெடுகிறதென்று நினைத்தார். ஒரு நாள் இரவு, அவரது பொறுமை எல்லை மீறிப்போக, எல்லோரும் சத்தம்போடாமல் அமைதியாக இருங்கள் என ஆவேசத்துடன் கத்தினார்.

குழந்தைகளும் அவர் மனைவியும் அவரது ஆணையால் நடுங்கிப் போனார்கள். அடுத்த நாள் பாதிரியார் வீட்டுக்குள் நுழையும்போதே வீடு அமைதியாக இருந்தது. அவரும் ஆனந்தமாக பிரார்த்தனையைத் தொடங்கினார். ஆனால், தனது பிரார்த்தனைக்கு கடவுள் செவி கொடுக்கவில்லை என்று தோன்றியது.

இப்படியே நாட்கள் சென்றன. கடைசியாக ஒரு நாள் கடவுளிடம் தன் சந்தேகத்தை கேட்டேவிட்டார். என்ன நடக்கிறது? போதுமான அமைதி இங்கே இருக்கிறது. ஆனாலும் என்னால் பிரார்த்தனையின்போது உங்களை உணர முடியவில்லையே? என்று வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

எனக்கு உனது வார்த்தைகள் கேட்கின்றன. ஆனால், அங்கே சிரிப்பொலியே இல்லை. என்னால் உனது பக்தியைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் பின்னணியில் குதுகலமே இல்லை என்று பதில் கிடைத்தது.

உடனடியாக ஜெப அறைக்கு வெளியே வந்து நின்ற பாதிரியார், குழந்தைகள் வழக்கம்போல் சத்தமிட்டு விளையாடட்டும் என்று உத்தரவிட்டார்.

இப்போது கடவுள், அந்தப் பாதிரியாரின் பிரார்த்தனைகளைக் கேட்கத் தொடங்கினார்.

புனித மெக்காவில் ஒரு யாசகர்

மெக்காவுக்கு செல்லும் சாலையில் ஒரு பார்வையற்ற யாசகர், புனித யாத்திரை செல்லும் இறைப்பக்தர்களிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த இஸ்லாமிய பக்தர் ஒருவர் திருக்குரானின் வழிகாட்டுதலின்படி தாராளமாகத் தானம் செய்கிறார்களா? என்று அந்த யாசகரிடம் கேட்டார். அந்த யாசகர் தட்டைக் காண்பித்தார், ஒரு நாணயம்கூட தட்டில் விழுந்திருக்கவில்லை. அந்த கருணையுள்ள இஸ்லாமியர், அந்த பார்வையற்ற யாசகரின் அனுமதியுடன், அவர் கழுத்தில் ஒரு அட்டையை எழுதித் தொங்கவிட்டு தன் வழியில் போனார்.

நேரம் கடந்தது, யாசகர் தட்டில் சில்லறை கொட்டத் தொடங்கியது. அட்டையை எழுதித் தொங்கவிட்டுச் சென்ற அந்த இஸ்லாமிய பக்தர் திரும்பி வந்தபோது, அந்தப் பார்வையற்ற யாசகரைச் சந்தித்தார்.

“என் கழுத்தில் என்ன வாசகத்தை எழுதி தொங்கவிட்டுப் போனீர்கள். இத்தனை பணம் குவிகிறதே ” என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அவர் எழுதிச்சென்ற வாசகம் இதுதான். வசந்த காலத்தின் அழகான ஒரு நாள் இன்று, சூரியன் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறதை உணர்கிறேன். எனக்கோ பார்வை இல்லை.

யூத மரபு என்ன சொல்கிறது.

யூத அறிஞரான ஒருவரிடம், ஒருகேள்வி கேட்கப்பட்டது.

கடவுகளுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பவர்களை ஒருவர் பின் தொடர வேண்டுமா? கடவுளின் விருப்பத்தைத் தெரிந்து கொள்வதற்கான தேடலை நிகழ்த்தும் அறிஞர்களைப் பின்பற்ற வேண்டுமா?

குழந்தையின் வழியைப் பின்பற்றினால் போதுமென்று பதில் கிடைத்தது. குழந்தைக்கு என்ன தெரியம்.அது எதார்த்தம் என்பதைப் புரிந்து கொள்ளாத நிலையில் அல்லவா இருக்கிறது? என்று சந்தேகம் எழுப்பப்பட்டது.

நீங்கள் சொல்வது தவறு குழந்தையைப் பொறுத்தவரை மூன்று அருமையான பண்புகள் உள்ளன.

1. எக்காரணமுமின்றி அவர்கள் எப்போதும் குதூகலமாக இருக்கிறார்கள்.

2. அவர்கள் எப்போதும் தேனீக்களைப்போல் சுறு சுறுப்பாகவே இருக்கிறார்கள்.

3. அவர்களுக்கு ஒன்று தேவையென்றால், பிடிவாதமான உறுதியுடன், பெற்றுவிடத் தெரிந்தவர்கள்

என்றார் அந்த யூத அறிஞர்.

கர்ம வினையும் கடமையும்

பசுப்பாதுகாப்பு இயக்கத்தின் பிரச்சாரகர் ஒருவர், சுவாமியைச் சந்தித்து, தமது சங்கத்துக்கு சுவாமியின் உதவியை வேண்டினார்.

நம் தேசத்தின் கோமாதாக்களாகிய பசுக்களைக் கசாப்புகடைகாரர்களிடமிருந்து நாங்கள் காப்பாற்றுகிறோம். வயதான பசுக்களையும், நோயுற்றவற்றையும், கசாப்புகடைகாரர்களிடமிருந்து மீட்டு பசுக்களுக்கு, கோசாலைகள் அமைத்துப் பராமரித்து வருகிறோம் என்றார்.

சுவாமி அவரிடம் கேட்டார். இந்தியாவில் அடிக்கடி பஞ்சங்களும், வெள்ளங்கள் போன்ற இடர்பாடுகளினால் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் மாண்டுவிடுகின்றனர். இதை அரசும் அறிக்கையாக வெளியிடுகிறது. இப்படி இயற்கை இடர்பாடினால் பாதிக்கப்பட்ட பகுதியில் உங்கள் சங்கம் ஏதாவது உதவி செய்ததா?

அதற்கு அந்த பிரச்சாரகர் சொன்னார். “பஞ்சத்தின்போதோ” மற்ற இயற்கை இடர்பாடுகளின் போதோ நாங்கள் மக்களுக்கு எந்த உதவியும் செய்தது இல்லை. பசுக்களைப் பாதுகாக்கவே எங்கள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மனிதர்களின் கர்மவினை காரணமாக, அவர்கள் செய்த பாவங்களால் பஞ்சம், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் ஏற்படுகிறது. கர்மவினைப் பயன் அது.

அவர் சொன்னதைக் கேட்டு வெகுண்ட சுவாமி மனிதர்கள் மீது இரக்கம் கொள்ளாத அமைப்புக்கள், நம் நாட்டு சகோதர, சகோதரிகள் பட்டினியால் சாவதைக்கண்டும், அவர்களின் உயிரைக்காக்க கைப்பிடி உணவு கூடத்தராதவர்கள், பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் மூட்டை மூட்டையாகக் கொட்டுபவர்களின் மீது எனக்கு சற்றும் பரிவு கிடையாது, அத்தகைய சங்கங்கள், அமைப்புக்கள் எந்தவிதப் பயனையும் தரும் என்றும் நான் நம்பவில்லை.

மனிதர்கள் தாம் செய்த கர்ம வினைகளால்தான் செத்துப் போகிறார்கள் என்றால் இந்த உலகில் எதற்குமே போராடுவதோ, முயற்சிப்தோ வீண் என்பது உண்மையாகிவிடும். பசுக்களைப் பாதுகாக்கின்ற உங்கள் பணி வீண்தான். நீங்கள் கர்மவினையே காரணம் என்றால், பசுக்கள் அவற்றின் கர்மவினைப்படியே கசாப்புக்காரன் கைகளில் அகப்பட்டுக்கொள்கின்றன. அந்த விஷயத்திலும் நாம் எதுவும் செய்ய முடியாது? என்று சீறினார்.

இதை ஏற்றுக்கொள்ளாத பிரச்சாரகர் சுவாமி, தாங்கள் சொல்வது உண்மைதான் ஆனாலும் சாஸ்திரங்கள் பசுவை நம் தாயென்று சொல்கின்றனவே? என்றார்.

சுவாமி நையாண்டியாக, ஆமாம், பசு நம் தாய்தான், உங்களைப்போன்ற பிள்ளைகளை வேறுயாரால் பெற்றெடுக்க முடியும்? என்றார்.

அந்த சுவாமி - விவேகானந்தர்.

ஆடித்திருழா

ஆன்மீகத்துறையில் ஆரியத்தின் தாக்கம் அதிகமாகக் கலந்தபோது நம் தமிழ் வழிபாட்டிற்கும் புத்துயிரளிக்க தேவாரமும், திருவாசகமும் துணை புரிந்தன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் திருத்தலங்கள்தோறும் தமிழால் பாடி மகிழ்ந்தனர். சிவலிங்க வழிபாட்டிற்கு வல்லமை சேர்த்தனர்.

தமிழ் பண்பாடும், தமிழ் வழிபாட்டு முறையும் அழிந்துவிடக்கூடாது. என்பதற்காக, இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கெண்டார்கள் என்றே சொல்லலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், கங்கை கொண்ட சோழபுரத்தின் கோயிலும் சிவசக்தி வழிபாட்டின் தலங்களாக அமைந்தது. கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து ஆடி மாதம் தசமியன்று மன்னரும், மக்களும் நடைப்பயணமாகத் தஞ்சைக் கோயிலுக்கு சென்று ஆடிப் பௌர்ணமியன்று முழுநிலவு நாளில் விழாவில் கலந்து கொண்டனர்.

சோழ மண்டலத்திருந்து புலம் பெயர்ந்த பாண்டி மண்டலக் கள்ளர்கள், கள்ளழகர் கோயிலில் ஆடிப்பௌர்ணமியில் அழகருக்கு விழா நடத்தி வருகிறார்கள். அன்று விழாவின் உச்சக்கட்டமாக கள்ளழகர் கோயில் தேர்த்திருவிழா, பாண்டி மண்டலக் கள்ளர்களால் சிறப்பாக இன்றும் நடைபெற்று வருகிறது. அழகர்கோயிலில் நடைபெறும். ஆடித்திருவிழாவில் லட்சக்கணக்கான பாண்டி மண்டலக்கள்ளர்கள் தங்கள் பகுதியிலிருந்து மாட்டுவண்டி, இப்பொழுது கார், வேன், பஸ், லாரிகள் மூலம் வந்து தங்களது குலதெய்வமாக கருதும் கள்ளழகரை தரிசித்து, வணங்கிப் பயன்பெறுகிறார்கள். தஞ்சையில் நடைபெற்று வரும் ஆடித்திருவிழா தாக்கமே கள்ளழகர்கோயில் ஆடித்திருவிழா என்றால் மிகையாகாது.

தமிழ் வளர்ச்சியில் சோழர்கள்

தமிழ் புலவர்களுக்கு சோழ மன்னர்கள் புலமையை மெச்சி எழுதிய நூல்களை பாராட்டியும் நிலங்களை தானமாக வழங்கினர். அதற்கு சோழச்சிற்றரசர்கள் யாரும் நிலவரி எதுவும் விதிக்ககூடாது என்று ஆணையிட்டார்கள். புலவர்களுக்கு வாரிவழங்குவது தமிழ் மொழியை வளர்ப்பதற்காகத்தான், அவர்களுடைய புகழ் மொழிக்காக அன்று. புலவர்களுக்குத்தானம் வழங்கிய நிலத்தில் வரிவிதித்தால், வாழ்க்கைப் போராட்டம் அவர்களுக்குப் பெரும் பேராட்டமாகிவிடும், பின்னர் அவர்கள் மொழியை வளர்ப்பது எங்ஙனம்? கல்வியை அளிக்கும் ஆசிரியர், குருகுலத்தினர், புலவர் பெருமக்களான இவர்களுக்கு வரிவிதிப்பல் கூடாது. அறிவு வளர்ச்சியிலும், மொழி வளர்ச்சியிலும் அவர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும். வாழ்க்கைப் போராட்டத்தின் துன்பங்கள் அவர்களைத் தாக்காமல் காப்பது அரசின் கடமையென்று உணர்ந்து சோழமன்னர்கள் கடைப்பிடித்து வந்தனர்.

பாண்டிய மன்னர்களும் தமிழ்மொழி வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டார்கள். பாண்டியர்களால் மூன்று தமிழ்சங்கங்களும், கடைசியாக நான்காவது தமிழ்ச்சங்கம் உருவாவதற்கே இந்தக் காரணமே. அதன் தொடர்ச்சியாக செந்தமிழ்கல்லூரி நிறுவினர். ஆசிரியர்களையும், புலவர்களையும் ஆதரித்து வந்துள்ளனர். தமிழ்சங்கம் இருக்கும் சாலையையே தமிழ்சங்கச்சாலை என பெயரிட்டனர். இன்றைய அரசு மதுரையில் உலகத்தமிழ்ச்சங்கத்திற்கு மாபெரும் மாளிகையே உருவாக்கி தமிழுக்கு தொண்டு செய்து வருகிறார்கள்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு சோழர்களும், பாண்டியர்களும் உயிர்மூச்சாகக் கொண்டு ஆட்சி செய்தனர். தொடர்ந்து தமிழர்கள் அனைவரும் தங்களது தாய்மொழியின்மேல் கொண்ட அளவற்ற பற்றால் பல போராட்டங்கள் நடத்தி தமிழ்மொழிக்கு அரும்பெரும் பணிபுரிந்து வருகிறார்கள். நாமும் நம்மால் முடிந்த அளவில் தமிழர்கள் என்ற உணர்வோடு தமிழ் மொழியை பாதுகாப்போமாக!

அருவுருவான இறைவன்

இறைவன் உருவமாகவும், அருவமாகவும், அருவுருமாகவும் பக்தரை ஆட்கொள்கிறான். இறைவன் எப்படியிருப்பான் என யாருக்கும் தெரியாது, யாரும் பார்த்ததில்லை. புராணக்கதைகளில் கூறியபடி, நம் முன்னோர்கள் விளக்கியபடியும், நாம் நினைத்தவாறு உருவம் அமைத்து இறைவனை வழிபடுகிறோம்.

நம் நாட்டினர் அல்லாதார்கூட, அந்த உருவத்தைப் புரிந்து கொள்ளவியலும். இது உருவ வழிபாடு. அடுத்ததாக, மிகவும் முக்தி எய்தும் நிலையில் உள்ள பக்தர்கள் இறைவனை உள்ளத்தால் காண்பர்.

உருவம் தேவையில்லை, திருநீற்றைக்கண்டாலே போதும், இறைவனைக் கண்டதாகவே எண்ணி உள்ளம் உருகுவர். திருநீற்றுக்கு உருவம் இல்லை. மூன்று பட்டைகளாக இடலாம். உருவமற்ற நிலையில் அருவமாக நின்று இறைவன் பக்தனை ஆட்கெள்ளும் நிலை இது. இரண்டு நிலைக்கும் இடைப்பட்ட நிலையில் அருவுருவமாக நின்று சிவலிங்க வடிவில் காட்சியளித்துப் பக்தரை ஆட்கொள்கிறான். நமக்கு மட்டும்தான் சிவலிங்கத்தின் தாத்பர்யம் தெரியும். இது விளங்காத வேற்று நாட்டினர்க்கு இது என்ன வடிவமெனப் புரிந்து கொள்ளவியலாது. நமக்கு உருவமாகவும், விளங்காதவருக்கு அருவமாகக் காட்சியளிக்கிறான். உருவ நிலையிலும், அருவ நிலையிலும், அருவுருவ நிலையிலும் எம்பெருமான் பக்தரை ஆட்கொள்கிறான்.

சிவலிங்க வழிபாடு அனைவருக்கும் பொதுவானது. ஏற்றத்தாழ்வு இன்றி அவரவரே சென்று லிங்கத்திருவுருவை வழிபட இயலும். சிவசக்தி இணைந்த நிலையே சிவலிங்கம் என்பதால் திருவாரூர், திருநாகைக் காரோணம், திருக்காறாயில், திருத்தோளிலி திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் ஆகிய ஏழுதிருத்திலங்களில் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். இவை சப்தவிடங்கத்தலங்கள் என பெயர் வழங்கப்படுகின்றன.

கடவுள் மீது நம்பிக்கை இருந்தால்....

கடவுள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால், இந்த உலகத்தில் உங்களுடையது என்று கருதுகின்ற எல்லாமே உண்மையில் அவருடையது என்று நம்புங்கள். மிகப்பெரிய பலவீனங்கள், சில வேளைகளில் மிகப்பெரிய நன்மையாகவும், சிலநேரங்களில் மிகப்பெரிய வலிமையாகவும் வேடம் தரித்து வருகின்றன.

நம்மை எதிர்பார்த்துச் சிலர் வாழ்கிறார்கள். நாம் ஒருவருக்கு நன்மை செய்ய முடியும் என்று எண்ணுவது பலவீனம். இதுவே நம்முடைய பற்றுகள் அனைத்துக்கும் பிறப்பிடம், இந்தப்பற்றின் மூலமே நமது துன்பங்கள் எல்லாம் வருகின்றன.

இந்த உலகத்தில் ஒருவர்கூட நம்மை எதிர்பார்த்து வாழவில்லை என்பதை நாம், நம் மனதிற்கு எடுத்துக்கூற வேண்டும். ஒரு பிச்சைக்காரன்கூட நம் தானத்தை எதிர்பார்த்து வாழவில்லை. ஒரு ஜீவன்கூட நம் கருணையை எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை. நம் உதவியை எதிர்பார்த்து ஓர் உயிர்கூட வாழவில்லை. அனைவருக்கும் இயற்கையே உதவி செய்கிறது. நம்மைப்போல் லட்சக்கணக்கான மனிதர்கள் இல்லாவிட்டாலும் இயற்கை உதவிக்கொண்டுதான் இருக்கும். உங்களுக்காகவும், எனக்காகவும் இயற்கையின் போக்கு மாறாது.

பிறருக்கு உதவுவது என்பது, நம்மை நாம் பண்படுத்திக் கெள்வதற்காக, நமக்கு தரப்படுகின்ற மிகப்பெரும் பேறு.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பெரிய பாடம் இது. இதை முழுமையாக அறிந்துகொண்டால் நாம் துயரடையவே மாட்டோம். சமுதாயத்தில் எங்கும் எவரோடும் சேர்ந்து வாழலாம். அதனால் தீங்கு நேராது. மனைவி, கணவன், வேலைக்காரர்கள் அழகான வீடுகள் என்று நீ பெற்றிருக்கலாம். ஆனால் இந்த உலகம் உனக்காக அல்ல. நீ இருந்தேதான் ஆகவேண்டுமென்று என்ற தேவையும் உலகிற்கு இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் நீ செயல்படுவாய் என்றால் இவற்றால் உனக்கு எந்தத் துன்பமும் வராது.

வெள்ளலூர் நாட்டின் சுதந்திர வேட்கை

வெள்ளலூர் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிகளையும், உண்மைகளையும் தங்களது மன எண்ணங்களையும் அந்தக்கூட்டத்தில் வெள்ளலூரின் பெரிய அம்பலகாரனான வீரணனம்பலகாரரும், கட்டக்காளை அம்பலகாரரும் தங்களது அறிக்கையின் மூலம் சுதந்திர வேட்கையை வெளியிட்டார்கள்.

சதி வழிகளில் நாட்டைத்தங்கள் கைவசம் ஆக்குவது ஆங்கிலேயர்களின் பரம்பரைப் பழக்கம். இங்குள்ள ஆலயங்களின் திருப்பணிகளை நிறுத்தி விடுவார்கள். அறவழிபாடுகள் இல்லாமல் செய்து விடுவர். மக்களது சுதந்திர பயிரை கவ்விச்சிதைப்பார்கள். வெள்ளையர்கள் உப்பு முதல் அத்தனை விளைபொருட்களுக்கும் வரி விதிப்பார்கள், இந்நாட்டுச்செல்வ செழிப்பை வறட்சியாக்குவார்கள் மற்ற இடங்களையும் விளை நிலங்களையும் தங்கள் கைவசமாக்கி தமக்கே பயன்படுத்திக்கொள்ள முயல்வர். நிலவரி, வீட்டுவரி, தண்ணீர்வரி, பங்குவரி என்றும் பல்வேறு வரிகளை விதித்து மக்கள் எலும்புகளை பொடிகளாக்கி சூரணமாக்குவர். சிறு பிழைக்கு கொடுந்தண்டனை விதித்து மக்களை கொடுமைக்கு ஆளாக்குவார்கள், இன்னும் மனத்தில் தோன்றிய அட்டூழியங்கள் அனைத்தையும் தயங்காது செய்வார்கள்.

எனவே இத்தகைய அட்டூழியங்கள் எதுவும் நடக்காதபடிக்கும் இந்நாட்டின் மதிப்பையும் மானத்தையும் காப்பாற்றுவதற்கும் மனித முயற்சியின் எல்லைக்கோட்டில் நின்று ஆவன எல்லாம் செய்வதற்கு நாங்கள் தயாராய் உள்ளோம். இங்கு வாணிபத்துக்காக வந்த நாடோடிக்கூட்டம் இப்போது நம்மையே மிரட்டி அதிகாரம் செலுத்துகிறது. வலுவாக ஆதிக்கத்தை ஊன்றி சுரண்டல் தன்மையை வளர்த்து வந்த இவர்கள் அதிகாரம் காட்டி மக்களைகசக்கிப்பிழியத் தூண்டும் அளவுக்கு ஆகிவிட்டார்கள். இந்த நாடு மண்ணோடு மண்ணாய் போனாலும் அவர்களுக்கு வேண்டியது வரிப்பணம். அது கொடுக்கப்படாவிட்டால் நாட்டை கபளீகரம் பண்ணுவது என்று வெறி கொண்டு அலைகிறார்கள். அவர்களின் அதிகார சூழ்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் தயாராக வேண்டும்.

மேற்கண்டவாறு அறிவித்த அம்பலகாரர்கள் பின்னும் மக்களுக்கு தெரிவித்தது. இந்நாடு புராதனப்பெருமை கொண்டது. கலையும், கதைகளும் வளர்ந்து செழித்து பரிமளித்த நாடு இது. பக்தியின் விளை நிலம். இதற்கெல்லாம் மேலாக இங்கே வீரம் விளையாடி குதித்தது. ஆண்மை ஆனந்த நடைபோட்டது. இங்குள்ள தகர்ந்த கொத்தளங்களும், சிதைந்த இல்லங்களும் தூர்ந்தகுளம் குட்டைகளும் நம் மரபின் வீரக்கதைகளை விளக்கம் செய்யும். மான உணர்ச்சியோடு பகைவரை எதிர்த்து மார்பில் ஆழப்புண்ணேற்று மடிந்த வீரர்களது குருதியின் அணுக்களும் மண்டையோட்டின் பொடிச்சிதறல்களும் இங்குள்ள புழுதி மண்ணிலே, கலந்து வீர கீதம் இசைக்கின்றன. இத்தனை மாண்பு நிறைந்த மண்ணில்தான் நாம் பிறந்துள்ளோம். இத்தகைய அருமை பெருமை நிறைந்த வெள்ளலூர் நாட்டிற்கு இப்போது சோதனைநேர்ந்துள்ளது. ஒண்டிப்பிழைக்க வந்த கூட்டம், இப்போது ஓடத்துரத்துகிறது. நம்மை அழித்து தொலைக்க ஆர்ப்பரிக்கின்றது. இந்த நீசர்களை அடியோடு நாசமாக்க வேண்டும். இது இங்கு தோன்றிய ஆண் மக்களின் பிறவிக்கடனே என்றனர். இதைக்கேட்ட மக்கள் ஆத்திரமுற்றனர். சினவேங்கைகளாகவும் மதம்பிடித்த யானையாகவும்மாறி பொருமிச்சாடினர், புகைந்து சீறினர். பொங்கித்துடித்தனர்.

இனப்படுகொலை

18-ம் நூற்றாண்டில் மதுரையில் நாயக்கராட்சி முடிவுக்கு வந்தது. இந்நிலையில் ஆற்காட்டு நவாப்பு ஆட்சி ஏற்பட்டது.

அப்போது முகமது அலியும் (ஆற்காட்டு நவாபு) சந்தாசாகிப் (ஆங்கிலப்பிரதிநிதி இருவரும்) வரி வசூல் செய்தனர். பின் தன்னாட்சி வரி வசூல் உரிமையை நவாப்பிடமிருந்து ஆங்கிலேயர்கள் பெற்றனர். அப்பொழுது வெள்ளலூர் நாட்டில் வரி வசூல் செய்ய முயற்சி செய்யும்போது, நாங்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள் மண்ணுக்குச் சொந்தக்காரர்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடிகள் நாங்கள் எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டமாட்டோம். ஒரு சல்லிக்காசுகூட வரி என்ற பெயரில் கப்பம் கட்ட முடியாது என்று வெள்ளலூர் நாட்டு அம்பலகாரர்கள் முழங்கினர் என்றும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வரிகொடாப்போர் நடத்தினர் என்று தெரியவருகிறது.

இதனால் வெகுண்டெழுந்த கேப்டன் ரூம்ளே என்ற ஆங்கிலப் படைத்தளபதி மேலூர், வெள்ளலூர் நாட்டுக்கள்ளர்களைத் தாக்கி வரி வசூல் செய்ய முயற்சித்ததாகும், வெள்ளலூர் நாட்டு மக்கள் வரி செலுத்த மறுத்ததையும், ஆங்கிலேயோர், எதிரிகளாக சித்தரிக்கப்பட்ட சுதந்திர வேட்கை கொண்ட அரசுக்கு ஆதரவாக செயல்பட்டதனையும் மனதில் கொண்டு மேலூர் வெள்ளலூர் நாட்டுப்பகுதியிலிருந்த கள்ளர் கிராமங்களைத்தாக்கி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் சுமார் **3000 பேரை ஒரே நாளில் கொடூரமாக கொலை செய்தான்.**

சில நாட்கள் கழித்து குறிப்பட்ட தலைவர்களை (அம்பலகாரர்கள்) கைது செய்தனர். அப்போது கும்பினியார்கள் (ஆங்கிலேயர்கள்) சாயும்படைதாங்கி வீரணம்பலகாரரையும், கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரரையும் கைது செய்து, இருவரையும் வரிகட்டாததற்கு சிறையிலடைத்தார்கள். கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரர் அவர்கள், நாட்டுப் பாடலிலே இடம்பெற்ற எனது ஊத்தஞ் செய்யும், எனது பாடியப்பான்மார்களும் எனது காரண மரியாதையும் நீங்கலாக எனது சொத்தை எதை வேண்டுமானாலும் விற்று வெள்ளலூர் நாட்டு வரிப் பாக்கிகளை கட்டி எங்கள் இருவரையும் மீட்கும்படி தனது மக்களுக்கு உத்தரவு இட்டார். ஆனால் வரிபாக்கியை கட்டவேண்டாம் என ரகசியமாக மக்களுக்கு தெரிவித்தார். மேலும் வரிகொடாப்போர் தொடர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. கட்டக்காளையின் மக்கள், அரசு அதிகாரிகளின் மூலமாக உத்தரவை பெற்றுக்கொண்டு வரி கட்டுகிறோம் என்று ஆங்கிலேய அதிகாரிகளுக்கு பொய்யான வாக்குறுதி அளித்தனர். இந்த வாக்குறுதியை நம்பி வெள்ளையர்கள் இருவரையும் சமாதானமாக சிறையிலிருந்து விடுவித்தனர், வெளியில் வந்ததும் தலைவர்களை மக்கள் தப்பிக்க வைத்து மறைத்து வைத்தனர். ஆனால் வரி செலுத்த மறுத்ததோடு வரி வசூல் செய்ய வந்த ஆங்கிலேய அரசு உதவியாளர் 10 பேரை கொலை செய்து பதிலடி கொடுத்தனர். ஆங்கிலேயர் படைகள் தலைவர்களை பிடிக்க உறங்கான்பட்டி கிழக்கே சுமார் 2-மைல் தூரத்தில் காட்டில் முகாமிட்டிருந்தார்கள். அந்த இடத்திற்கு வெள்ளையன் காடு என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அதன் அருகில்தான் கட்டக்காளை அம்பலகாரரின் வண்ணாத்தி வயல் நிலங்கள் உள்ளன. மக்களின் கடும் எதிர்ப்பும் போராட்டத்தினாலும் வெள்ளையர்களால் தலைவர்களை கைதுபண்ண முடியவில்லை. எனவே மறுபடியும் அடக்கமுடியா கோபம் கொண்டு, கேப்டன் ரூம்ளே கண்மூடித்தனமாக மக்களை காக்கை குருவியைப்போல் சுட்டு **சுமார் 2000 பேரை மேலூர், வெள்ளலூர் மக்களை கொலைசெய்தான். இவ்வாறு மொத்தம் 5000 பேரை மேலூர், வெள்ளலூர் நாட்டுக் கள்ளர்களைக் படுகொலை செய்து, ஒரு இனப்படுகொலையை அரங்கேற்றினான்** என்று திரு.சுந்தரவைத்திதேவன் தனது பிறமலைக்கள்ளர் வாழ்வும் வாழ்வியலும் என்ற வரலாற்று நூலில் ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார்.

வரி செலுத்த மறுத்து தூக்கிலிடப்பட்ட, கட்டபொம்மன் வரலாற்றில் நிற்கின்றார். எதனால் அதேபோல் வரி செலுத்த மறுத்து, கொல்லப்பட்ட 5000 பேர்களை (கள்ளர்கள்) வரலாறு மறந்துவிட்டது. ஏனென்றால் கட்ட பொம்மன் மன்னன். இந்த 5000 பேரும் சாதாரன (போர்) குடிகள்தானே, சுதந்திரத்தை அடைய இங்கிருந்த மக்களும் தன்னாட்சி செய்த சிற்றரசர்களும் போரிட்டமை ஒரு மாபெரும் போராட்டமாகும். அதை சாதாரணக்கலகம் என்று சிலர் எழுதி உண்மையான வரலாற்றை மறைத்தனர்,

சூழ்ச்சியால் சரித்திரம் எழுதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் தமிழனின் வீரத்தை மறைக்க வேண்டுமென்று எழுதினார்கள் அதை இன்று சரித்திரமாக படித்து வருகிறோம், என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குறிப்பிடுகிறார்.

சாதிச்சண்டைகள் போடுவதற்கே, தமிழர்களுக்கு நேரம் கிடைக்காததால் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அரசியல்வாதிகள், இந்த உண்மையை எடுத்துச் சொன்னால் கிடைத்த பதவியும் போய்விடுமோ என அஞ்சினர். சரித்திர உண்மை அறிந்தவர்கள் கூறிய, தமிழகத்தில் நடந்த மானமும், வீரமுமிக்க போராட்டங்களுக்கு தக்க மரியாதை கிடைக்கவில்லை அதை எடுத்துச் சொல்லும் துணிவு இங்குள்ள தமிழர்களுக்கு கிடையாது.

இந்திய விடுதலைப்போராட்ட வரலாற்றில் தமிழன் கொடுத்த முதல் குரலையே எடுத்துச்சொல்ல நாதியில்லாமல் இருக்கும் நேரத்தில், இந்திய விடுதலைப்போருக்கு முதல் குரல் கொடுத்தது யார்? என்று கேட்பதை விடுத்து, தமிழகத்தில் நடந்த விடுதலைப்போரில் முதல் குரல் கொடுத்து யார்? என்னும் விவாதத்தை ஏற்படுத்தினர். இத்தகைய நிலை தமிழகத்தின் இருந்ததால், தமிழகத்தின் விடுதலைப்போர் தன்னுடைய முதன்மையை இழந்து பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

வரலாறு முறையாக எழுதப் பெறாமையே இதற்கு முதன்மையான காரணமாகும். அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறெல்லாம் வரலாறுகளை எழுதினர்.

சமீபத்தில் ஒரு தின இதழில் தமிழகத்தின் விடுதலைப் போர் பின்னுக்குத் தள்ளப்பட்டதேன்? எனும் கட்டுரையை வெளியிட்டது. அதில் விடுதலை போராட்ட வீரர்களை கொள்ளைக்காரர்களென்று என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் விடுதலைப் போராட்டத்தின் முதல் முழக்கம் முழங்கிய தமிழனின் (கள்ளர்கள்) செயல்பாடு மறைக்கப்பட்டதால், தமிழகத்தின் விடுதலைப் போர் பின்னுக்குத் தள்ளப்பட்டதனால் அதன் முதன்மையை இழந்தது.

அரசியல் சொல்வாக்குப் பெற்றவர்கள் எழுதியுள்ள வரலாற்றிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டியோ அல்லது மறுத்து, உண்மை அறிந்தோர் உண்மை நிலையை எடுத்துரைத்து நூல் வெளியிட்டால், அந்த எழுத்தாளர் எழுதிய முதல் நூலும் கடைசி நூலும் அதுவாகத்தான் இருக்க முடியும். இதனால் சுயநலம் படைத்தோர் தமிழகத்தின் விடுதலைப்போரை மறைத்தும் தங்களுக்கு வேண்டியவர்களை அறிமுகம் படுத்தியும், முன்னுக்கு கொண்டு வந்தும் வரலாற்றையே திசை திருப்பி எழுதியுள்ளனர்.

சுதந்திரத்தாகம்

வேதனையில் பொழுதுகள் விடிந்தாலும்,
எம் தேசத்தின் விடுதலையே, என் உயிரினும்
மேலானது என்று களமாடிய மறவர்களின்
வீரத்தால் வயப்பட்டது சுதந்திரம்!

எத்தனை உயிர்கள் மண்ணில் புதைந்திருக்கும்,
எத்தனை பெண்களின் கூக்குரல் விண்ணை பிளந்திருக்கும்,
எத்தனை குழந்தைகளின் அழுகுரல் கண்ணீரில் நனைந்திருக்கும்,
இன்னும் எத்தனை, எத்தனை துயரங்கள் மறைக்கப்பட்டிருக்கும்,
மண்ணில் கலந்த, கரைந்த பல தியாக வீரர்களின் ரத்தத்தின் மீதும்
கண்ணீர் ஆற்றிலும் பெறப்பட்டது சுதந்திரம்!

பத்து மாதம் சுமந்த தாயை விட
இறப்புக்கும் பின்னும் சுமக்கும் தேசத்தை உயிராக எண்ணி
இந்திய தேசத்தின் சுதந்திரக்கதவுகளை திறந்து வைத்தவிட்டு,
மண்ணுக்குள் புதைத்துக்கொண்ட உங்களை
எப்படி மறப்போம்? மறந்தால் எப்படி இந்தியனாவோம்?
எழுந்து வா இந்தியனே, அடிமைப்பட்டிருந்த தேசத்தின்
வளர்ச்சியைக்கண்டு அகிலமும் நடுங்கட்டும்!
இந்தியன் என்ற பெயரைக்கேட்டால் அண்டமும் அதிரட்டும்!
வாழ்வது ஒருமுறை, சாவதும் ஒருமுறை,
நம் தாயகம் காப்பது நெறிமுறை,
என்றுணர்ந்து இந்தியன் என்று பயணிப்போம்!

எப்படி மறப்போம், மறந்தால்

எப்படி இந்தியனாவோம்!

உங்கள் தன்னலமற்ற தியாகத்திற்கும்,

தாயகம் காத்த உணர்வுகளுக்கும்

நாடே தலை வணங்குகிறது!

- ஆசிரியரின் தாகம்

திருநீறு வழங்குதல்

திருநீறு சைவ சமயத்தின் சின்னம், பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை தருவது என்பது திருஞான சம்பந்தர் திருவாக்கு. இந்த வாக்கின்படி ஒவ்வொருவரும் திருநீறு அணிய வேண்டும் என்பது அவசியம். மேலும் சபையில் தவ வலிமையல், சைவ ஒழுக்கத்தால் சக்தி பெற்றோர் இருப்பர். அவர்களை அடையாளம் கண்டு திருநீறு அணிவிக்கச் செய்வது நடைமுறையாகும். எனவே வருகைதந்தோர் அனைவரையும் திருநீறு வழங்கி வாழ்த்தச் செய்வது வழக்கமாக உள்ளது.

வாழ்த்துப் பெறுதல்

மனித உடல் ஒரு காந்தம் போன்றது தலைப்பகுதி வடதுருவமாகவும், கால்பகுதி தென்துருவமாகவும் இயங்கி வருகிறது. நாம் விழுந்து வணங்கும்போது நம்முடைய தலை மற்றொருவருடைய பாதங்களில் படுகிறது. அப்போது பாதமாகிய தென்துருவத்தில் நம் தலையாகிய வடதுருவம் படிகிறது. மாறுபட்ட துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் என்பது நாம் அறிந்ததாகும். அவ்வாறு கீழே விழுந்து வணங்கும் போது பெரியவர்களின் காந்த சக்தி நம்முடைய தலையின் வழியாக நம்முடைய உடலுக்குப் பாய்கிறது

. மின் அழுத்தம் அதிகமுள்ள இடத்திலிருந்து குறைவாக உள்ள இடத்தை நோக்கி மின்சாரம் பாயும். உயரமான இடத்திலிருந்து தண்ணீர் தாழ்வான இடம் நோக்கிப்பாயும், அழுத்தம் கூடிய இடத்திலிருந்து காற்று குறைந்த அழுத்த இடத்தை நோக்கிப்பாயும். வெப்ப நிலையும் அது போன்றதாகும்.

சக்தி அதிகமுள்ள மனிதரிடமிருந்து காந்த சக்தி குறைவாக உள்ள மனிதரிடம் அது செல்லும். இந்த அடிப்படையில்தான் பெரியவர்களை வணங்க வேண்டும் என்று முன்னோர்கள் கூறினார்கள். சில திருமண விழாக்களில் மணமக்கள் திருமாங்கல்யம் பூட்டி (தாலிகட்டு) முடிந்ததும், வருகை தந்துள்ள

அனைத்துப் பெரியவர்களிடம் விழுந்து வணங்குவதைக் காணலாம். மனித காந்த சக்தியைப் பெறுவதே இதன் அடிப்படை உண்மை. எனவே மேலெழுந்தவாறு வணங்காமல் நம் தலை பெரியவர்களின் காலில் தொட்டு விழுந்து வணங்குவது நல்லது.

குங்குமத்தின் சிறப்பு

மங்கலப் பொருளாகக் கருதப்படுவது குங்குமம் ஆகும். மஞ்சளை ஒன்றிரண்டாக உடைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து பின் நிழலில் உலரவைத்து பொடியாக்கி குங்குமம் செய்வார்கள். இக்குங்குமத்தை புருவ மத்தியில் இடுவது வழக்கம். மனித உடலமைப்பில் எல்லா நரம்புகளும் கூடும் இடம் புருவ மத்தியாக உள்ளது. இதன் பின்னால் மூளையின் ஒரு பகுதியான (Pineal gland) நெற்றிக்கண் சுரப்பி உள்ளது. ஆதலால்தான் சிவபெருமான் நெற்றியில் கண் உள்ளதாகவும், அது அமுத சுரப்பியாகவும், அருள் ஒளியாகவும் திகழ்வதாகக் கூறுகின்றார்கள்.

நெற்றிக்கண்ணுடன் தொடர்பு உள்ள புருவமத்தி, சக்தி கசியும் இடம் எனக்கருதப்படுகிறது. இதனை யோகப்பயிற்சியினர் சுழுமுனை என்பர். இதனை ஞானக்கண் என்றும் அழைப்பர். இது மனிதனுக்கு ஞானம் பெற உதவுவது என்கின்றனர். அதனாலேயே நெற்றியில் பொட்டு வைத்து ஞானக்கண் பாதுகாக்கப்படுகிறது. மெஸ்மரிசம் போன்ற தீய செயல்கள் பொட்டு வைத்திருப்பவர்களைப் பாதிக்காது என்று நம்பப்படுகிறது.

குங்குமத்தில் மின் கடத்தும் சக்தி அதிகம் உள்ளது. நெற்றியில் குங்குமம் இடும்போது மூளையில் உள்ள பிட்யூட்டரி சுரப்பியோடு தொடர்பு ஏற்படுகிறது. தன்னை உணரும் நிலைக்கு குங்குமம் வழி வகை செய்கிறது. எல்லோரும் குங்குமம் அணிவீர், புருவ மத்தியில் நரம்புகளின் சேர்க்கை உள்ளது. அது மேற்படி சுழுமுனை என்ற புருவ மத்தியாகும். ஆகவே புருவமத்தியில் குங்குமம் அணியும்போது அது குளிர்ச்சியடைகிறது. இதைனையும் நம் முன்னோர் முன்னரே கண்டு செயல்பட்டனர். ஆனால் ஒட்டுப்பொட்டினால் இந்தப் பயனை அடையமுடியாது.

கற்பூரம் ஏற்றுதல்

கற்பூரம் எரிந்த பின் கரியோ, சாம்பலோ இல்லாமல் மறைந்து விடும். ஆன்மாவானது இறைவனுடைய அருள் ஒளியில் கரைந்து ஒன்றுபட வேண்டும் என்ற குறிப்பை உணர்த்துகிறது. அருளானது நீர்-தாரை போல் பெற வேண்டும்.

மாவிலைத் தோரணம்

வாழைமரத்தைப் போன்றதே மாவிலைத் தோரணங்கள். மாவிலை சிறந்த நோய்த்தடுப்பு மருந்து. மாவிலைகள் அழுகாமல் நாற்றம் எடுக்காமல், அப்படியே காய்ந்து விடும் தன்மை உடையது.

ஆதலால்தான் நோய் தடுப்பு மருந்தான மாவிலைத் தோரணங்களும்கட்டி அழகுக்கு அழகு சேர்ப்பதோடு, நோய் எதிர்ப்பு சக்திக்காகவும் பயன்படுத்துகிறார்கள். பசுஞ் சாணத்தால் மெழுகி கோலமிடுவதும் மேற்சொன்ன காரணங்களுக்காகவே. எல்லா மரங்களும் ஆக்சிஜன் பேக்டரிகள் என்பதை அறிவோமாக சாணம் ஒரு கிருமி நாசினி.

வாழை, தென்னை, பனை, கமுகு, தோரணம்

குலை தள்ளிய வாழை மரத்தைக் கட்டுகிறார்கள். குலை தள்ளிய மரம் மீண்டும் பயன்தராது. ஆனால் அதன் அனைத்துப் பகுதிகளும், குலைதள்ளிய பின் விசேடங்களும் முடிந்த பின் வாழையின் அனைத்து பகுதிகளும் மனிதனுக்கு ஏதாவது முறையில் பயன்படுகிறது.

மேலும் எண்ண அதிர்வுகளை ஈர்க்கும் சக்தி வாழைக்கு உண்டு. நோய் கிருமிகளையும் தன்பால் அதிகம் ஈர்க்கும் தன்மை வாய்ந்தது. காமாலை கண்டவர் வாழை மரத்தின் அருகில் தினமும் ஒரு மணி நேரம் நின்றால் வாழைமரம் மஞ்சள் நிறமாகிவிடும், நோயின் வேகம் கட்டுப்படும். பாம்பு கடித்தவர்களை வாழை மட்டையில் படுக்க வைத்தால், அது நஞ்சை உறிஞ்சிக் கொள்ளும் மருத்துவ குணம் உள்ளது. தீக்காயம் பட்டவர்களை வாழை இலையில் படுக்க வைப்பர். தீப்புண்ணில் கிருமிகள் சேர்ந்து அதிகப்புண் உண்டாக்காதவாறு வாழை இலை பாதுகாக்கிறது.

வாழை மரத்தைப் பிடுங்கிய பின்னும் காற்றில் உள்ள ஈரத்தை உறிஞ்சிக் கொண்டு அது பல நாட்கள் உயிர் வாழும். இதனால் திருமண மண்டபத்தில் பிராண வாயு அதிகமாகிறது. மேலும் பல்வேறு இடங்களிருந்து வரும் மக்களால் நோய் பரவாமல் பாதுகாக்கிறது. இவ்வாழைமரம் குடும்பங்கள் இணைந்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இதனால்தான் தென்னங்குலை, கமுகங்குலை, நொங்குக்குலைகள் கட்டப்படுகின்றன. மேலும் கண்ணுக்குக் குளுமை தரும் பல வண்ணங்களில் கட்டி அழகுக்கு அழகு சேர்க்கிறார்கள்.

பூமாலை, சாம்பிராணி

வீடுகளில் பூமாலை, சாம்பிராணி போன்ற, வாசனைப்பொருட்களைப் பயன்படுத்துவர். (இப்போது விதவிதமான காஸ்டியூம்ஸ்)

நல்ல மலர்களின் நறுமணம் கவர்ந்து மனமகிழ்ச்சியளிக்கும் நல்ல இசை, நல்ல மணம் போன்றவற்றால் தங்களை மறந்து மகிழ்ச்சியில் மூழ்கும்படி இவை உதவுகின்றன.

மிஞ்சியணிதல் (மெட்டி)

மனித உடலின் இயக்கங்கள் முழுவதும் கால்களில் அடங்கியுள்ளன. திருமண நாளன்று பெண்களுக்கு இடது வலது பெருவிரலுக்கு அடுத்த விரலில் மிஞ்சி அணிவிப்பது சடங்குபோல் நடைபெறும். வீட்டைப் பாதுகாக்க பூட்டுப் போடுவதுபோல, கர்ப்பப்பையும் இருதயத்தையும் பாதுகாக்க மிஞ்சி (மெட்டி) அணியப்படுகிறது.

கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில்தான் கருப்பையின் நரம்பு நுனியில் வந்து முடிவடைகிறது. திருமணத்திற்கு பின் மிஞ்சியுடன் (மெட்டி) நடக்கும்போது அவ்விரலில் ஒரு அதிர்வு ஏற்படுகிறது. அப்பொழுது ரத்த ஓட்டம் சீராக்கப்படுகிறது. இந்த ரத்த ஓட்டமானது கருப்பையை வளமுடையதாக மாற்றுகிறது. எனவே பிறக்கும் குழந்தை நலமோடு இருக்க உதவுவதோடு தாய்க்கு எந்த தீங்கையும் விளைவிக்காது. குழந்தைப்பேறும் எளிதாக அமையும்.

வலது காலில் மிஞ்சி (மெட்டி) அணியும்போது அற்புதமான மாற்றம் ஏற்படுகிறது. காலின் கீழ்பகுதியிலிருந்து இதயத்தை நோக்கிச் செல்லும் இரத்த நரம்புகள் இரத்த ஓட்டத்தை கட்டுப்படுத்தி விடும். எனவே திருமணமான பெண்ணுக்கு இருதயம் சார்பான நோய்கள் ஏற்படாது.

மேலும் திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குச் செல்லும்போது மனநிலையில் சில பாதிப்புக்கள் இருக்கும். பிறந்த வீட்டை விட்டுப் பிரிவதால் ஒரு வகை அச்சம் உண்டாகும். இடது காலில் மிஞ்சி (மெட்டி) அணிவதால் இந்த அச்சம் அகற்றப்படுகிறது. இந்த மிஞ்சி அதிர்வால் இரத்த ஓட்டம் சரியாக நிகழ்வதால் மூளை நரம்புகள் ஒழுங்காகச் செயல்படுகின்றன. அப்பொழுது பயம் சிறிது சிறிதாக அகற்றப்படுகிறது. கால் பெருவிரலுக்கு ரத்த ஓட்டத்திற்கும் நேரடித்தொடர்பு உண்டு. இதற்காகத்தான் இன்று கால்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுரை கூறுகிறார்கள்.

மனதால் திருமணமான பெண்கள் பாதிக்கக்கூடாது. உடல் நலனும் சரியாக இயங்க வேண்டும். கருப்பை சிறந்த முறையில் இயங்கவேண்டும் என்ற எண்ணத்தால்தான் பெண்களுக்கு மெட்டி அணிவிக்கும் பழக்கம் ஏற்பட்டது. மிஞ்சி (மெட்டி) ஒரு தானியங்கியாகச் (Remote Control) செயல்படுகிறது.

ஒரு பெண் திருமணம் ஆனவளா என்பதை தெரியப்படுத்துகிற ஒரு அடையாளமாகவும் மிஞ்சி (மெட்டி) பயன்படுகிறது. இதயம், மூளை, கருப்பை, மனம் ஆகியவற்றைச் சிறப்பாக இயங்கச் செய்ய மெட்டியணிதல் (மிஞ்சியணிதல்) என்ற சடங்கு ஏற்பட்டது. இதனுள் இத்தனை அறிவியலா? என வியக்கவைக்கிறது.

மொய் வந்த விதம்

மணமக்களை வாழ்ந்த வந்தவர்கள் சுற்றி நின்று பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதுபோல, தங்களின் அன்பின் அடையாளமாக வழங்கிய பரிசுகள் 'மொய்' என்று அழைக்கப்பட்டது. ஒரு காலத்தில் நம்மவர்களிடம் மொய் எழுதும் பழக்கம் இல்லை. திருமணத்தன்று உறவினர்கள், நண்பர்கள் மணமக்களுக்கு திருநீறு இட்டு வாழ்த்துவது பழக்கமாக இருந்தது. மணப்பெண்ணுக்கு வாழ்த்தும்போது வெற்றிலை பாக்குடன் பணம் கொடுப்பது முறை, இந்தப் பணம் மணப்பெண்ணுக்குரியது. இதற்கு கும்பிடு கட்டுப்பணம் என்று பெயர். ஒரு காலத்தில் அரிசி, நவதானியங்கள், காய்கறிகள் ஆடைகள் எனக் கொடுக்கப்பட்டு வந்தது. தற்சமயம் காலமாற்றத்தினால், இது குறைக்கப்பட்டு பணமாக வழங்கப்படுகிறது. திருமண காலத்தில் உடன் இருப்பவர்கள் பொருளாதார உதவி செய்யும் பொருட்டு எழுந்த ஒரு சடங்கு ஆகும். மொய் என்பது உள்ளத்தின் அன்பின் அடையாளச் சின்னமே, இது அளவுகோல் அல்ல, உறவு கலப்புக்குள் உராய்வு வராதவாறு இதனை மதிக்க வேண்டும்.

சமுதாய வீதிகள்

சமூகத்தின் நாகரிகமடைந்த வீதிகள் எல்லாம் அழகாகவும் அலங்காரமாகவும் நகரங்களில் தோன்றினாலும், அந்த வீதிகளில், வீடுகளில் ஆற்றல் நிறைந்த சந்தர்ப்பவாதிகளும், கொடியவர்களும், ஆதரவற்ற நியாயவாதிகளும், நல்லவர்களும் முறைமாறிய சரிசமமற்ற பலத்தோடு நிரந்தரமாக காலங்காலமாக போராடிக் கொண்டிருக்கத்தான் செய்கிறார்கள்.

எது தெரிஞ்சா என்ன? தெரியாட்டி என்ன? மனிதனோட உயர்ந்த மொழி பிறரிடம் பெருந்தன்மையாக நடந்துகொள்ளும் போதுதான் பேசப்படுகிறது.

அது தெரிஞ்சாலே போதும். அது தெரியாதவங்களுக்கு எத்தனை மொழிகள் தெரிந்தாலும், எண்ணற்ற கருத்துக்கள் கூறினாலும், பயனில்லை.

துக்கப்படுகிறபோது இரண்டு சொட்டுக்கண்ணீரும், சந்தோசப்படுகிறபோது ஒரு புன்னகையும் பதிலாக எங்கிருந்து கிடைக்குமோ, அங்கேதான் எல்லா மொழிகளும் புரியற இதயம் இருக்கு.

சமூகத்தில் நீண்ட வீதிகளில் எங்கும் பயப்படாமல் நடக்க வேண்டுமானால், பெண் பாதுகாப்புடன்தான் இறங்கி நடக்க முடியும் என்பது, பல்லாயிரம் தலைமுறைகளுக்கு முன்பே முடிவாகிவிட்ட விஷயம். சமுதாய வீதியில் நிரந்தரமாக இராவணர்கள் இன்னும் சுற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். பெண்ணுக்கு சரியான துணையும் வேண்டுமென்பது ஆண்மக்களில் முதல் இராவணன் தோன்றியபோதே, உலகம் முடிவாகிவிட்டது. இராவணர்கள் இருக்கிறவரை இந்த புழுதிபடிந்த வீதிகளில் பெண் துணையின்றித் தனியாக நடக்கவோ, முடியாதோ என்னவோ?

குழந்தைவரம் வேண்டி அரசமரத்தை சுற்றல்

அரசமரத்தைச் சுற்றிப்பார் அடிவயிற்றைத் தொட்டுப்பார் என்பது பழமொழி. இது ஒரு நம்பமுடியாத உண்மையா? என்ற கேள்வி எழும்பலாம். ஆனால் இது ஒரு அறிவியல் சார்பான உண்மை. அரசமரம் அத்திமரக் குடும்பத்தைச் சார்ந்தது. இதற்கு பைசஸ் ரிலிஜியாலா என்ற அறிவியல் பெயரும் உண்டு. (வித்துக்கள் விளையும் மரம்)

அரசமரம் ஒரு மணி நேரத்தில் 2250 கிலோ எடை கொண்ட கார்பன்டை ஆக்ஸைடு (கரியமல வாயு) எடுத்துக் கொண்டு 1700 கிலோ) ஆக்ஸிசனை (பிராண உயிர் வாயு) வெளியிடுகிறது. இப்படி வரும் ஆக்ஸிசன் சுத்தமானது. இது உணர்வுகளைத் (ஹார்மோன்களை) தூண்டுகிறது. இதனால் உடலில் ஏற்படும் குறைநீங்கிக் குழந்தைப் பாக்கியம் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது என்பது அறிவியல் சார்ந்த உண்மை. அதிலும் அதிகாலையில் இன்றும் அதிகப்படியான ஆக்ஸிஜன் வெளிவருகிறது.

அரசமரத்தடியில் பிள்ளையார் வீற்றிருப்பாதால், தெய்வ அனுகூலத்துடன் பலன் இரட்டிப்பாகக் கிடைக்கிறது. எனவேதான் குழந்தைப் பாக்கியம் பெற அரசமரம் தேடிப்பார், பின் மடியைப்பார் என்பார்கள்.

தவறுகள் குறைய

கால்மேல் கால்போட்டு அமராதே மரியாதை குறைவு என்பர். கால்மீது கால்போட்டு அமரும்போது மர்ம உறுப்புக்களின் தன்மை பாதிக்கிறது. இதனால் நீர் அடைப்பு, கல்லடைப்பு, இடுப்புவலி, கால்களல் குடைச்சல் போன்ற குறைபாடுகள் ஏற்படுகிறது. இதனைத் தடுக்க பெரியோர்களின் முன் கால்மேல் கால்போட்டு அமராதே என்றனர். மர்ம உறுப்புக்களைப் பாதுகாக்கவே இவ்வாறு கூறினர்.

ஆடி மாதம்

தமிழ் மாதங்களில் ஆடிக்கு தனிச்சிறப்பு உண்டு. ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை ஆடிப்பூரம் ஆகியநாட்கள் தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஆடிப்பெருக்கு, மாதத்தின் 18-ம் நாளில் வருகிறது. ஆடி மாதத்தில் தென்மேற்கு பருவ மழையினால் தமிழக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். இதனால் உழவர்கள் நம்பிக்கையுடன் பயிர்களை விதைப்பர். ஆடியில் விதைக்கும் பயிர் தை மாதத்தில் அறுவடைக்கு வரும். தமிழர் திருநாள் கொண்டாட்டத்துக்கு முன்னோட்டமாக ஆடிப்பெருக்கு இருக்கிறது.

ஆடி மாதத்தில் முன்னோரை நினைவுகூறவே ஆற்றங்கரைகளில் மக்கள் கூடுகின்றனர். அங்கு முன்னோர்களுக்கு படையலிட்டு அவர்களை நினைத்து வழிபடுகின்றனர். இந்த மாதத்தில் திருமண காரியங்களை மேற்கொள்ளாமல் இருந்தாலும், மற்ற விசேசங்களைச் செய்கின்றனர். புதிதாக,

திருமணமான தம்பதியினர் ‘தலை ஆடி’ கொண்டாடுகின்றனர். மக்கள் பொருட்களை வாங்கும் வண்ணம் ஆடித்தள்ளுபடியை வணிகர்கள் அறிவிக்கின்றனர். இதிலிருந்து சில மாதங்களில் தீபாவளி வருவதால் அதற்கு தேவையான பொருட்களை ஆடித்தள்ளுபடியிலேயே வாங்கி வைத்துக்கொள்ளலாம்.

ஆடிமாதத்தின் வெள்ளிக்கிழமைகளுக்கு தனிச்சிறப்பு உண்டு. இந்த நாட்களில் அம்மன் கோவில்களில் சிறப்புப் பூஜைகள் நடத்தப்படுகின்றன.

ஆடி அமாவாசை நாள் ஆண்டின் முக்கிய நாளாக கருதப்படுகிறது. இந்த நாட்களில் சிவாலாயங்களில் மக்கள் கூட்டம் அதிகம் காணப்படும். ஆடி மாதத்தில் பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது ஆடிப்பூரம் கொண்டாடப்படுகிறது. இந்த நாட்களில் தேவி கோவில்களில் சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன.

ஆடியும் விவசாயமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவை. ஆடியில் காத்தடித்தால் ஐப்பசியில் மழை பொழியும் என முன்னோர்கள் கணித்து ஆடிப்பட்டம் தேடி விதை என்றனர். வானம் பார்த்த பூமியில் பயிரிடும் விவசாயிகள் ஆடிப்பட்டம் எப்போ வரும்? எனக் காத்திருப்பர். ஆடி மாதம் துவங்கியதும் வறண்ட பூமியை ஆழமாக உழுது, மானாவாரி சாகுபடிக்காகப் பார்த்து பூமியில் விதைகளை விதைப்பர்.

ஆடிமழை பெய்ததும் விதைகள் துளிர்விட்டு, பயிர்களாக வளர்ந்து விவசாயிகள் வயிற்றில் பால் வார்க்கும். ஆடியில் விதைத்து ஐப்பசியில் அறுவடை செய்து தானியங்களை சேகரித்து வைப்பர். சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் விதமாக தை மாதம் கரும்புடன் பொங்கலிட்டு வணங்குவர். இது ஆண்டாண்டு காலமாக தமிழர்கள் கடைப்பிடிக்கும் விவசாயம் பண்பாடு.

கொடியின் தத்துவம்

கோவில் திருவிழாவின்போது கொடி ஏற்றப்படுவதன் தத்துவம் தெரியுமா? குண்டலினி சக்தியை (மூலாதாரம், பிரனவம், ஓம்) மேலெழுப்பும் யோகதத்துவத்தையும், இறைவனை வழிபடும் மனிதனின் எண்ணங்களை உயர்ந்தவையாக இருந்தால்தான் அவனது வாழ்வு உயர்வடையும் என்பதையும் உணர்த்துகிறது கொடியேற்றம்.

நவக்கிரகங்களை தொட்டு கும்பிடலாமா?

நவக்கிரகங்கள் மட்டுமில்லாமல், கோவில்களில் உள்ள அனைத்து விக்கிரகங்களும் மந்திரப் பிரயோகம் செய்து சக்தியூட்டப்பட்டவை.

அவற்றை நாம் தொடுவதால், நம்மிடம் உள்ள அசுத்தம், அதன் சக்தியைப்பாதிக்கும் அதனால் சிலைகளையோ, விக்கிரகங்களையோ தொடக்கூடாது. அதற்குப் பதிலாக அவர்களின் திருவடிகளை கண்களில் ஒற்றிக்கொள்ளலாம்.

அஞ்சறைப்பெட்டி

ஆன்மீகத்துக்கு அடையாளமாக கொஞ்சம் டோக்கன் பக்தி, கொஞ்சம் சங்கீத ரசனை, வருடத்துக்கு ஒரு தடவை ஏதாவதொரு வெளியூருக்குப் பயணம், ஏதாவது ஒரு அமைப்பில் ஒரு பதவி, தாய்மொழியில் கூடியவரை பற்றின்மை, சாத்தியமானால் அதன்மேல் வெறுப்பு, வீட்டுக் குழந்தைகளுக்கு நாட்டியம் சங்கீதம் கற்பித்தல். (சிறிதளவாவது) இவையெல்லாம் அடங்கியவை அஞ்சறைப்பெட்டி ஞானம் என்று கூறுவர்.

சமூக வாழ்வில் நல்ல மாறுதல்கள் காலத்திற்கேற்ப நிகழவேண்டுமானால், இப்படிப்பட்ட அஞ்சறைப்பெட்டி ஞானமுள்ளவர்கள் குறைய வேண்டும். எந்தத் துறையிலும் ஆழ்ந்த பற்றோ, அனுபவமோ இல்லாமல், எல்லாத் துறையிலுமே ஆழ்ந்த பற்றும் அனுபவமும் இருப்பவர்களைப்போல் நடிப்பவர்கள் பெருகி வருவதுதான், பெரிய குறைபாடு என்பதை நாம் உணர்ந்து தீர வேண்டிய நிலையில் இருப்பதைத்தான் நமக்கு காண்பிக்கிறது.

அவசர உபயோகத்துக்காக அடுப்படியில் வைத்துக்கொள்ள ஏற்ற முறையில் கொஞ்சம் கடுகு, கொஞ்சம் மிளகாய், கொஞ்சம் பருப்பு என்று போட்டு வைத்துக்கொள்ளும் ரசனை உள்ளவர்கள்தான் இன்று நிரம்பியிருக்கிறார்களேயொழிய, எந்த ஒன்றிலும் ஆழ்ந்த ரசனை உள்ளவர்களை எங்குமே காண முடியாமலிருக்கிறது. நமது நாட்டுக்கு இன்று இதுவும் ஒரு குறைதான். தன் நாட்டுக்கலைகள், வரலாறுகள் தெரியாது, தெரிந்தாலும் அரைகுறை, அதேபோல் மற்ற நாட்டுக்கலைகள, வரலாறு பண்பாடு எதுவும் சரியாகத் தெரியாது, ஆனால் இரண்டும் தெரிந்தது போல நடிக்கும் போலித்தன்மையே எங்கும். உண்டு.

இடி இடிக்கும்போது அர்ஜீனா சொல்வது ஏன்?

இதுவும் அறிவியலில் கலந்த ஆன்மீக ரகசியமாகும் மழை பெய்யும்போது இடி இடித்தால், அர்ஜீனா அர்ஜீனா என்பர் பெரியவர்கள்.

இடி பலமாக இடிக்கும்போது சிலருக்கு காது அடைத்து, ஒரு வகையான சத்தம் வரும், இதிலிருந்து தப்ப, அர்ஜீனா என்று சொன்னால் காது அடைக்காது, காரணம் ‘அர்’ என்றும் போது நாக்கு மடித்து மேல் தாடையைதோடும். ஜு எனும்போது வாய் குவித்து காற்று வெளியேறும் ‘னா’ எனும் சொல்லும்போது வாய் முழுமையாகத் திறந்து காற்று வெளியேபோகும். இப்படி காற்று வெளியேறுவதால் காது அடைக்காது.

பல்லாங்குழி புகட்டும் பாடம்

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவனுக்கோர் குணமுண்டு"

என்றார் நாமக்கல் கவிஞர்.

தனி ஒரு தமிழனுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கும் தனித்தன்மையான பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்கள் உண்டு.

அந்தத் தனித்து பண்பாட்டு அடையாளங்களை அழிவில்லாமல் பாதுகாக்கவே பண்டிகைகள் திருவிழாக்கள், சடங்கு சம்பிரதாயங்கள், சகுனங்கள் போன்ற எழுத்தில்லா கலைக்களஞ்சியங்களாக உருவாக்கப்பட்டன.

உழவுக்கு உயிரூட்டி அனைத்து ஜீவராசிகளுக்கும், உணவு புகட்ட மனிதனோடு உழைப்பை பகிர்ந்து கொள்ளும் காளைகளை காக்கவும், சிறப்பிக்கவும் தமிழ்ச் சமூகம் தன் பண்பாட்டோடு இணைத்தது தான் சல்லிக்கட்டு.

காளையின் மீது நமக்கு மிகுந்த அன்பு இருந்ததினால், மேற்கத்திய நாட்டினர் காளைச் சண்டை என அழைக்கும் நிகழ்வை 'நம்மவர்கள் ஏறுதழுவதல்' என்று பெயரிட்டு பண்பாட்டின் உச்சத்தில் காளையை ஏற்றி அமர்த்தினர்.

நம் தூரதிர்ஷடம் பல பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம் தெரியாத உலகிற்கு இடப்பெயர்வு ஆகிவிட்டது.

நம்மிடம் கொஞ்சம் உயிருடன் இருக்கும் விளையாட்டுக்கள் சடுகுடு,(கபடி) ஆடுபுலி ஆட்டம், தாயம், நொண்டி, பல்லாங்குழி எனச்சில மட்டுமே.

பாண்டி ஆட்டம்

சமூக வாழ்வை விளையாட்டின் வழியே எடுத்துரைக்க, பல விளையாட்டுக்கள் நம் தமிழ்ச் சமூகத்தில் உள்ளன. அவற்றில் சமூக வாழ்வோடு இல்லற வாழ்வையும் இணைத்து கற்றுத்தரும் விளையாட்டு பல்லாங்குழி.

பல்லாங்குழி ஆட்டத்தை பாண்டி ஆட்டம் எனவும் அழைப்பர். முத்தாட்டம், பகவாட்டம், கட்டாட்டம் என மூன்று வகை பல்லாங்குழி ஆட்டம் உண்டு. பொதுவாக பல்லாங்குழி பெண்களால் ஆடப்படும் என்றாலும், பூப்பெய்திய பெண்கள் பூப்பெய்திய நாள் முதல் 16 நாட்களும், கருவுற்ற பெண்களும் ஆட வேண்டும் என்ற மரபு விதி கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

தாய்மாமனும் பல்லாங்குழியும்

ஒரு பெண் பூப்படைதல் என்பது இயல்பான இயற்கையான நிகழ்வுதான் என்றாலும், பூப்படைதல் என்பது இல்லற வாழ்விற்குள் அடியெடுத்து வைப்பதற்கான முதல் தகுதியை ஒரு பெண் அடைந்துவிட்டதை குறிக்கும் விதமாகவே, அந்நிகழ்வு ஒரு மங்கல நிகழ்வாக கொண்டாடப்படுகிறது. பூப்படைந்த செய்தியை பெற்றோர்கள் முதலில் தெரியப்படுத்த வேண்டியது அப்பெண்ணின் தாய்மாமானிடம்தான்.

தாய்க்கு அடுத்தபடியாக அப்பெண்ணின் மீது முழு உரிமையுடையவன் தாய்மாமன் என்கிறது தமிழ்ச் சமூக வாழக்காறுகள். அப்பெண்ணின் மீது, உரிமை உடையவன் என்ற வகையில், அப்பெண்ணை எதிர்கால இல்லற வாழ்க்கைக்கு தேவையான நற்குணங்கள் கொண்டவனாக்கும் பொறுப்பும் கடமையும் தாய்மாமனுக்கு சற்று அதிகம்.

அது நாள் வரையில் ஓடியாடி விளையாட்டுப் பருவப்பிள்ளையாக இருநத பெண்ணானதால் வாழ்க்கை குறித்து விளையாட்டின் மூலம் முதன்முதலாக தாய்மாமன் உணர்த்த முயல்கிறார். அதுவே பல்லாங்குழி.

ஏன் பல்லாங்குழி

வீட்டிற்கு வெளியே ஓடியாடி விளையாடாமல், வீட்டுக்குள்ளே விளையாடும் விளையாட்டுக்கள் பல இருந்தாலும் பல்லாங்குழி தேர்வு செய்யப்பட்டதன் காரணம்;

பல்லாங்குழி உடல் ரீதியாக பெண்ணின் விரல் மற்றும் கைகளுக்கு வலுச்சேர்க்கிறது. இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் பெண்கள் குடும்பத்தின் வரவு, செலவுகள் சிக்கனம், சொத்துப்பங்கீடு, சேமிப்பு, பொருளீட்டல் ஆகியவற்றைப்பற்றி கண்டிப்பாக தெரிந்து கொள்ளுதல் அவசியம். மேற்சொன்ன அனைத்தையும் விளையாட்டின் வழியே பெண்கள் மனதில் பதிய வைக்க, நம்முன்னோர்கள் கண்டறிந்த பல்லாங்குழி விளையாட்டில் உள்ளது.

மணப்பெண் வீட்டார், பித்தளை அல்லது ஏதேனும் ஒரு உலோகத்தில் வாங்கித்தருகின்றனர். தங்கள் மகள் குடும்பத்தலைவியாவதற்கு தகுதியானவள் என உணர்த்தவே இந்த ஏற்பாடு.

மனைவி பல்லாங்குழி விளையாடுவதைப் பார்த்து, அப்பெண்ணின் நிர்வாகத்திறமை முடிவெடுக்கும் திறமை, வீட்டின் நிதிநிலைமையை சமாளிக்கும் திறன், சிக்கனம், மதி நுட்பம் ஆகியவற்றை கணவன்வீட்டார் அறிந்து கொள்கிறார்கள்.

வீட்டு நிதியமைச்சர்

பூப்படைந்த பெண்களும், மணமான பெண்களும் விளையாடும் பல்லாங்குழி வெறும் பொழுது போக்கு விளையாட்டல்ல. அப்பெண்களுக்கு வாழ்க்கை கலையை கற்றுத்தரும் விளையாட்டு, இருவர் ஆடும் பல்லாங்குழியில், 7 குழியில், குழிக்கு நான்கு முதல் பனிரெண்டு சோழிகள் கொண்டு

ஆட்டத்தைத் தொடங்குவர். முதல் பெண் ஆடத்தொடங்கும்போது எந்தக் குழியிலிருந்து தொடங்கினால் செல்வம் (வெற்றி) சேர்க்கலாம் என்று கணக்குப்போட்டு தொடங்குகிறார். "எதிர்காலத்தில் இல்லற வாழ்வில் நுழையப்போகும் பெண்" இவ்வாறு கணக்கிட்டு தொடங்குதல் மூலம், தன் குடும்பத்தில் நிதி நிலைமையை திறம்பட சமாளிக்க இயலும்" என பல்லாங்குழியின் தொடக்கம் உணர்த்துகிறது.

ஒரு குழியிலிருந்து சோழிகளை எடுத்து குழிக்கு ஒன்றாய் ஒவ்வொரு குழியிலும் இட்டு வருாள், அதுபோல் புகுந்த வீட்டிற்கு அந்தப் பெண் சென்றவுடன் தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு வரும் கணவன் வீட்டுச் சொத்துக்களை தான்மட்டும் அனுபவிக்க நினைக்காமல், தன் புகுந்த வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என பல்லாங்குழி உணர்த்துகிறது.

இழப்பு தற்காலிகமே

முதல் பெண் ஆடும்போது, எடுத்தவர் குழியில் இழப்பு ஏற்படுகிறது. தொடர்ந்து காய்களை இட்டு விளையாடும்போது ஒரு வெற்றுக்குழியினை துடைத்து, அதற்கடுத்த குழியில் உள்ள நிறைய சோழிகள் (செல்வம்) அவருக்கு கிடைக்கிறது. வாழ்வில் முதலில் வரும் இழப்புகளை நினைத்து வருந்த வேண்டியதில்லை, தொடர்ந்து முயற்சி செய்தால், வாழ்க்கையில் பெருஞ்செல்வம் சேர்க்கலாம் என்பதை அப்பெண்ணிற்கு உணர்த்துகிறது.

சில நேரங்களில் துடைத்த குழிக்கு அடுத்த குழி, வெற்றுக்குழியாக இருக்கும்போது எதுவும் கிடைக்காது.

வாழ்க்கையில் அவ்வப்போது கஷ்டங்களும் துன்பங்களும் வரும். எனவே தோல்வி ஏற்பட்டால் வருந்தக்கூடாது என்ற படிப்பினையை உளவியல் வழியாக உணர்த்துகிறது பல்லாங்குழி.

புகட்டும் பாடம்

தொடர்ந்து விளையாடி, ஒரு வெற்றுக் குழியில் 4 சோழிகள் பெருகியவுடன், அது பசு (செல்வம்) என்று அந்தக் குழிக்குரிய பெண் எடுத்துக் கொள்கிறார்.

கையில் எதுவுமில்லை என்று கலங்காமல், கிடைப்பதை கொஞ்சம் கொஞ்சமாக சேமிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சேமிக்கும் பழக்கத்தை உணர்த்துவதோடு சேமிப்பின் மூலம் வரும் பொருளாதார வசதி, மனதையும், வீட்டையும் வளமாக்கும் என்று பெண்ணுக்கு பாடம் புகட்டுகிறது. பல்லாங்குழி.

ஆட்ட இறுதியில் ஒரு பெண் தோற்கும்போது (ஏழு குழிக்குரிய குறைந்தபட்ச சோழிகள் 5 அல்லது 6 கூட இல்லாமல் இருந்தால்) குழிக்கு ஒவ்வொரு சோழி இட்டு ஆட்டம் தொடங்குகிறது. இதற்கு பெயர் கஞ்சி காய்ச்சுதல் என்று பெயர். வீட்டில் எவ்வளவு வறுமை இருந்தாலும், பிள்ளைகளுக்கு உணவு புகட்ட வேண்டியது தாய் தான் என்று தாய்மையின் மகத்துவத்தை உரக்க உணர்த்துகிறது பல்லாங்குழி.

தன் பிள்ளைகளுக்கு உணவு இட்டால் இழந்த செல்வத்தை மீண்டும் பெறலாம் என்ற செய்தியை உணர்த்துவதோடு, தன் பிள்ளைகளுக்கும் உணர்த்தினால் குடும்பமும் உயரும் என்று போதிக்கிறது பல்லாங்குழி.

இந்த உலகில் செல்வம் நிரந்தரமானதல்ல; எப்பொழுது வேண்டுமானாலும் மற்றொருவரிடம் (எதிர் விளையாடும் பெண்) சென்றுவிடும். அதனால்தான் அதற்கு செல்வம் (செல்+வம்=செல்வம்) என்று பெயர் என அப்பெண் உணரவேண்டும் என்று பாடம் புகட்டுகிறது பல்லாங்குழி.

பல்லாங்குழி போல வாழ்வியல் முறைகளை நமக்கு கற்றுத்தந்த பாரம்பரிய விளையாட்டுக்களை நாம் தொலைத்தது ஏராளம். பாரம்பரிய பதிவுகளையாவது விழியென காக்க முயற்சி செய்வோம்!

வேகமும் விவேகமும்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

- குறள் -

மனம் கூறுவதை கேட்டு உடனே தீர்வு காண நினைப்பது வேகம், சூழலுக்கு ஏற்ப, வரும் பயனை அறிந்து தெளிவு காண்பது விவேகம்.

திருவள்ளுவரும் தகுந்த காலத்தில் ஏற்ற இடத்தில் வேகத்துடனும், விவேத்துடனும் செயலை செய்தால் இவ்வுலகையே ஆளலாம் என அந்த திருக்குறளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிந்தனையில்லா வேகம், காட்டாற்று வெள்ளம் போல யாருக்கும் பயன்படாது. தீமையை விளைவிக்கும் அது தன்னையும் துன்புறுத்தி, பிறரையும் துன்பத்திற்கு ஆளாக்கி விடும். சிந்தனையுடன் கூடிய வேகம் விவேகமாக மாறி, நதியைப்போல செல்லும் இடமெல்லாம் பயன்தரும். நாணயத்தின் இரு பக்கங்கள்போல வேகமும், விவேகமும் ஒன்றினைந்தால்தான் ஆற்றல் உருவாகும். வேகத்திற்கும் விவேகத்திற்கும் இடையே சுவரை எழுப்புவதைவிட பாலத்தை உருவாக்கினால் வாழ்வு வளம்பெறும்.

கருவறையின் தேவரகசியம்

எந்த செயலும் வேகத்துடனும் விவேகமின்றி செயல்படுத்தப்பட்டால் தகுந்த பயன் தராது, தகுந்த பருவத்தில் விவேகத்துடன் செயல்படுவதே நன்மை பயக்கும். பருவத்தே முதிரும் காயே சுவையுள்ள கனியாகும். பருவத்தே முதிரும் கருவே சிசுவாகும். தற்போது வேகம் என்ற முறையில் செயற்கை முறையில் காய் கனியாக்கப்படுகிறது. குழந்தை பருவம் கனிந்து பிறக்கும் முன்னரே நல்லகாலம், நேரம் கருதி சில பெற்றோர்களால் குழந்தையின் பிறப்பு தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் கருவறை என்பது தேவரகசியம் என்று மந்திரம் உரைக்கிறது.

புகழ்வதும் இகழ்வதும் ஈசன் அறியும்;

எடுப்பதும் கொடுப்பதும் ஈசன் அறியும்;

பிறப்பும், இறப்பும் ஈசன் அறியும்;

எனக் கூறும் மந்திரம் குழந்தையின் பிறப்பின் ரகசியத்தை இறைவன் அறிவார் என்கிறது.

தன்னுடைய வலிமை, மாற்றானுடைய வலிமை, துணையின் வலிமை இவற்றை ஆராய்ந்து செய்வதே விவேகம் ஆகும் என திருக்குறள் விளக்குகிறது.

இரண்டாம் உலகப்போரில் ஹிட்லர், காலத்தை கணக்கிடாது, மாற்றானின் வலிமையை கருதாது ரஷ்யாவின் மீது போர் தொடுத்தார்.

பருவநிலை மாற்றத்தால் ரஷ்யாவில் ஏற்பட்ட கடும் மழை, பனியால் ஹிட்லரின் வீரர்கள் பல்லாயிரக்கணக்கில் இறந்தனர். வெற்றியை எட்ட வேண்டிய ஜெர்மனி, விவேகமில்லா வேகத்தால் தோல்வியைத் தழுவியது. காலமறியா வேகமே ஹிட்லருக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

வேகத்துடன் இணைந்த விவேகம்

காலத்திற்கு ஏற்ப வேகத்தையும் விவேகமாக மாற்றிக் கொண்டவர், சுதந்திர போராட்டத்தில் வேகமுள்ள புரட்சி வீரராகத் திகழ்ந்த அரவிந்த கோஷ்.

பிறப்பிலேயே கல்வியில் மேன்மையும், செல்வமும் மிக்க குடும்பத்தில் பிறந்து, பின் இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலையில் ஐ.சி.எஸ் பயின்று இந்தியா திரும்பிய பொழுது சுதந்திரப்போராட்டம் தீவிரமாக இருந்த நிலையில், அதில் இணைத்துக் கொண்டார்.

போராட்டம் கொழுந்து விட்டு எரியும் நிலையில் அலிபூர் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு அரவிந்தரே காரணம் என குற்றம் சாட்டி கைது செய்து அலிபூர் சிறையில் அடைத்தது ஆங்கிலேய அரசு. மிகவும் மோசமான அந்த சிறையில் தன்னுடைய வேகத்தை விடுத்து, விவேகத்துடன் தியானம், யோகா, இறைவழிபாடு என்று தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

சிறையில் இருந்து வெளியில் வந்தவுடன் மீண்டும் அவர்மீது கொலை குற்றம் சாட்டப்பட்டது. அதனால் 1910-ல் கோல்கட்டாவில் இருந்து தப்பி புதுச்சேரிக்கு இடம் பெயர்ந்தார். அங்கே ஆன்மீகத் தேடலுடன் இயல்பான தன்னுடைய வேகத்தை நிலைப்படுத்தி, விவேகத்தால் கவிஞர், யோகி, தத்துவஞானி என்ற பன்முகம் கொண்ட அரவிந்தர் என்ற ஞானியாக மாறினார்.

இறை அறமே நல்லறம்

சிங்கத்தின் வேகமும், யானயின் பலமும், விடுதலை வேட்கையும், யாருக்கும் அஞ்சாத நெஞ்சமும், எண்ணத்தில் ஈரமும் உடையவர்களாகத் திகழ்ந்தவர்கள் மருதுபாண்டிய சகோதரர்கள். இவர்களுக்கு கள்ளர்

நாடுகளின் அம்பலகாரர்களது ஆதரவும், பாதுகாப்பும் இருந்ததால் மருதுபாண்டியர்களை ஆங்கிலேயர்கள் வெற்றி கொள்ள முடியவில்லை. வேறுவழியின்றி மருது பாண்டியர்களின் உயிரினும் மேலாகக் கருதிய காளையார்கோவிலை பீரங்கிகுண்டுகளால் தகர்த்து விடுவதாக எச்சரித்தனர் வெள்ளையர்கள்.

பண்பாடிய அடியவர்களுக்கு இறைவன் மண் சுமந்து தன் பொன் மேனியால் புண் சுமந்தான் என புலவர்கள் பாடியது போல், மருது பாண்டியர்கள் தங்களின் இயல்பான வேகத்தை விடுத்து, விவேகத்துடன் மக்களுக்காகவும், மக்களை சுமக்கும் இறைவனுக்காகவும் தங்களையே அர்ப்பணித்துக்கொண்டனர்.

உயர்ந்து நிற்கும் காளையார் கோவிலைகாணும் போதெல்லாம் கண்களில் நீர் மல்கி கலங்கும் விழிகளுடன், மக்கள் மருதுபாண்டியர்களை நினைவு கூறுகின்றனர்.

இயற்கையின் சீற்றம் விபத்து போன்ற நிகழ்வுகளுக்கு வேகத்தை முதன்மைப்படுத்துவதே விவேகமாகும்.

பயன்கொடுக்கும் நதியும், கடலில் கலந்தவுடன், நதியின் நீர் பயிர்களுக்கு பயன்இன்றிப் போய்விடுகிறது. அதுபோல நலம் கொடுக்கும் வேகமும், விவேகமின்றி செய்தால் பலனின்றி போய் விடும். வேகம் என்ற செயல் அனைத்துயிருக்கும் உரியது.

ஆனால் விவேகம் என்ற பண்பு, மனிதனுக்கு மட்டுமே உரியதாகும். வேகத்துடன் செய்த செயல்களில் தோல்வி அடைந்தால், அதைக்கண்டு மனம் தளராது, விபரீத முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாது வெற்றி காண வேண்டும்.

சிறு துவாரத்தின் வழியே பரந்த வெளியை காண்பதுபோல விவேகம் என்ற சிறுதேடலால் விரிந்த உலகையே வெல்லலாம். வேகத்தை விவேகத்துடன் இணைத்து வளம் பெறுவோம், வெற்றி பெறுவோம்!...

அசோகரை ஏன் நினைவில் வைத்திருக்கிறோம்?

ஒருவருக்குமே அசோகரைப் பிடிக்கவில்லை. அமைச்சர்கள், சிறியவர்கள், பொதுமக்கள், அவ்வளவு ஏன், அப்பா பிந்துசாரருக்கும்கூட அசோகரைச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஏன்? இரண்டு காரணங்கள், ஒன்று அசோகர் பார்ப்பதற்கு கம்பீரமாக இருக்க மாட்டார். எப்போது பார்த்தாலும் சோர்வாக, ஊதினால் பறந்துவிடும் தூசிபோல் இருப்பார். இவரைப் பார்த்தால் யாராவது இளவரசர் என்று சொல்வார்களா? புகழ்பெற்ற மௌரியப் பேரரசின் குழந்தை, இல்லை இல்லை, அரச வாரிசு இப்படிக் கொத்தவரங்காய்போல் இருந்தால் யாருக்குப் பிடிக்கும்?

இது போதாது என்று தலைவலி, காய்ச்சல், உடம்பு வலி, கால் வலி என்று மாற்றி மாற்றி ஏதாவதொரு பிரச்சினை வந்து கொண்டிருந்தது இரண்டாவது காரணம், ஓடியாடி விளையாட வேண்டிய வயதில் 'லொக் லொக்' என்று இருமியபடி போர்வைக்குள் படுத்துக் கொண்டிருந்தார். அசோகர் எப்போதாவது

என்றால் பரவாயில்லை, நிரந்தரமான நோயாளியாக இருக்கும் ஓர் இளவரசரை யாருக்குதான் பிடிக்கும், சொல்லுங்கள்?

அதுவும், எப்பேர்பட்ட குடும்பம் அது ! அசோகரின் தாத்தா சந்திரகுப்தர், மௌரியப் பேரரசை நிறுவியவர். வீரத்துக்கும் தீரத்துக்கும் பெயர் போனவர். அப்பா பிந்துசாரரோ எதிலும் சளைத்தவர் அல்ல. இப்படிப்பட்ட குடும்பத்துக்கும் இப்படியொரு நோஞ்சான் வாரிசா கிடைக்க வேண்டும் என்று அரண்மனையிலும் வெளியிலும் எல்லோரும் பேசிக்கொண்டனர். வருத்தப்பட்டுக்கொண்டனர். கிண்டலுக்கும் குறைச்சலில்லை.

இது அசோகரின் காதில் விழுந்தபோது, அவர் உடைந்து போனார். சோகமும் அதைவிட அதிகமாகக் கோபமும் அவரைப்பிடித்து உலுக்க ஆரம்பித்தன. என் உடல் நிலை மோசமாக இருப்பது என் தவறா? ஆம், கண்ணாடி முன் நிற்கும்போது நான் கம்பீரமாக இல்லைதான். ஆனால், அதற்கு நான் என்ன செய்வது? என்னை ஏன் அனைவரும் வெறுக்க வேண்டும்? இதுதான் நான். என்னால் இப்படித்தானே இருக்க முடியும்?

சற்று வளர்ந்தபோது அசோகருக்குப் புரிந்துவிட்டது, இல்லை, நான் இப்படி இருப்பதால்தான் என்னை எல்லோரும் வெறுக்கிறார்கள். அவர்களை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்று எனக்குத் தெரியும். போர்வையை உதறித் தள்ளிவிட்டு வாளை எடுத்துக்கொண்டார் அசோகர். மின்னல் வேகத்தில் வாள் அவருக்குப் பழகிவிட்டது. ஆறாவது விரல்போல் கையோடு வாள் ஒட்டிக்கொண்டுவிட்டது. இப்போது அவர் எல்லோரையும் பழி வாங்க ஆரம்பித்தார். நோயாளி இளவரசன் என்று கிண்டலடித்தவர்களைத் துரத்திப் பிடித்துச் சிறையில் அடைத்தார். நோஞ்சான் என்று சிரித்தவர்களுக்கு வாளால் பதில் அளித்தார்.

அசோகரா, ஐயோ அவர் மிகவும் கொடூரமானவர் அல்லவா என்று அரண்மனைக்குள் எல்லோரும் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இளவரசரா, அவரிடம் எச்சரிக்கையாக இருங்கள், கொஞ்சம் தவறினாலும் கொன்றே போட்டுவிடுவார் என்று பாடலிபுத்திரம் மக்கள் அலறினார்கள். அவ்வளவு ஏன், அவரது தந்தை பிந்துசாரரே திகைத்துவிட்டார். உண்மையிலேயே இவன் என் மகன் அசோகன்தானா?

இப்படியாக அசோகர் வீர தீரமிக்க ஒரு மௌரியப் பேரரசராக மாறி எல்லோரையும் நடு நடுங்க வைத்தார் என்று முடித்துக்கொண்டுவிடலாம்தான். ஆனால், கிட்டத்தட்ட எல்லா பேரரசர்களும் இப்படித்தானே இருந்திருக்கிறார்கள்? வெட்டு, குத்து, ரத்தம், போர் ! இதுதானே அரசர்களின் வாழ்க்கை. அசோகர் அவர்களில் ஒருவர், அவ்வளவுதானே என்றால் இல்லை. 2000 ஆண்டுகள் கழிந்த பிறகும் அசோகரை நாம் இன்று கொண்டாடிக் கொண்டிருப்பதற்கான காரணமே வேறு.

அசோகர் மீண்டும் யோசித்தார். இப்படித்தான் என்னை வரலாறு நினைவில் வைத்திருக்குமா? எல்லோரும் என்னைக் கண்டு அஞ்சி ஓடுவதுதான் என் சாதனையா? முதலில் என்னைப் பரிகசித்தார்கள். இப்போது அஞ்சுகிறார்கள். ஒருவகையில் இப்போதும் என்னை அவர்கள் வெறுக்கத்தான் செய்கிறார்கள் இல்லையா? ரத்த நிறத்தில் மாறிப்போன தன் வாளைப் பார்த்தார். அதில் அவர் முகம் தெரிந்தது. இதுவா கம்பீரம்?

என்னை வெறுப்பவர்களை நானும் வெறுப்பது சுலபம். என்னைப்போல் இல்லாதவர்களைப் பரிகசிப்பது எளிது, ஒரே ஒரு வாள் இருந்தால் போதும், எல்லோரையும் வழிக்குக்கொண்டு வந்துவிடலாம். அதிகாரம் இருந்தால்போதும், ஒரு நாட்டையே அடக்கி ஒடுக்கிவிடலாம். ஆனால், இதுதான் என் சாதனையா? இதுதான் நானா?

நிச்சயம் இல்லை. வெறுப்பவர்களை அழிப்பதைவிட வெறுப்பை அழிப்பது கடினம் என்பது அசோகருக்குப் புரிந்தது. எல்லோரையும் பயப்படவைப்பது எளிது, நேசிக்க வைப்பது கடினம். போரிடுவது சுலபம், சமாதானத்தை ஏற்படுத்துவதுதான் சவாலானது. அசோகர் சில முடிவுகளை எடுத்தார். இனி அன்பே என் மதம். அதைக்கொண்டே என் எதிரிகளோடு நான் போரிடப்போகிறேன். என்னைப் பரிகசித்தவர்களை, என்னை வெறுத்தவர்களை, என்னைக்கண்டு அஞ்சியவர்களை அன்பால் வென்றெடுக்கப் போகிறேன்.

என் வாளை மட்டுமல்ல, என் கருத்தையும் யார் மீதும் செலுத்த மாட்டேன். என் நாடு இனி பலவீனமானவர்களை அரவணைத்துக்கொள்ளும். என்னோடு முரண்படுபவர்கள் வரவேற்கப்படுவார்கள். ஆதரவற்ற மனிதர்கள் மட்டுமல்ல, வாய் பேச முடியாத விலங்குகளும் என் நாட்டில் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். இனி எதிரிகள் என்று யாரும் இல்லை எனக்கு. எனவே, இனி இந்த வாள் எனக்குத் தேவைப்படாது !

அசோகர் வீசியெறிந்த அந்த வாள் பெரும் சத்தத்துடன் ஓர் ஓரத்தில் போய் விழுந்தது. அதற்குப்பிறகு யாருக்கும் அது தேவைப்படவில்லை. அசோகர் பின்பற்றிய அன்பு, அகிம்சை, அரவணைப்பு உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இந்திய அரசு தேசிய கொடியின் மத்தியில் அசோக சக்கரத்தை பதித்துள்ளது. அதுமட்டுமில்லாமல் அவருடைய இலச்சினையான சிங்க முத்திரையை இந்திய அரசின் அதிகாரப்பூர்வ முத்திரையாகவும் வைத்துள்ளது. எனவேதான் அசோகச் சக்கரவர்த்தியை என்றும் நாம் நினைவில் வைத்திருக்கிறோம்.

ஆலய வழிபாட்டில் நோக்கம்தான் என்ன?

ஆலயங்களில் நமக்குத் தேவையான சக்திகள், ஆலயம் அமைக்கும்போது டெபாசிட் மாதிரி போட்டுவைத்து அந்த விஞ்ஞானப் பூர்வமான சக்தியை அதிலிருந்து எடுத்துக்கொள்வது உண்மைதான். ஆலயங்களில் உள்ள தெய்வச்சிலைகளிலிருந்து தெய்வ அனுக்கிரகம் கிடைப்பதும் உண்மைதான். மந்திரப்பூர்வமான ஆராதனைகளால் நமக்கு ஆலயங்களிலிருந்து ஆத்மார்த்தமான நன்மை நிறைய உண்டாவதும் உண்மைதான்.

இத்தனையும் இருந்தாலும் ஆலய வழிபாடும் நாம் தனிப்பட்ட நம்மை சீர்செய்து கொள்வதற்கான அங்கம்தானேயன்றி, ஒரு சமூகம் முழுவதும் மோட்சம் பெறுவதற்காக அல்ல.

கோயிலில் பலபேர் சேர்ந்து பூஜைகள் உற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் (குடமுழுக்கு) செய்து பொன்னையும், பொருளையும், சந்தனம், பூ, நைவேத்தியம், மேளதாளம் எல்லாவற்றையும் அர்ப்பணம் பண்ணுகிறோமென்றால், இதற்கு நோக்கமே வேறு. இப்படிப்பட்ட கூட்டுப்பணிகள்தான் மதத்தின் முடிவு, எண்ணங்கள் என்ற சாராம்சத்தில் இதைச் செய்யவிலலை.

அப்படியென்றால் எதற்காக? இந்தச் சமூகம் இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக செய்யப்படுகிறது. இவ்வுலகத்தில் சமூகம் முழுவதும் இறைவணிடத்திலிருந்து பலவிதமான பலன்கள் பெறுவதாக நம்பிக்கை. அந்த நம்பிக்கை அடிப்படையில்தான், அடையாளமாக நன்றிக்கும், அன்புக்கும்தான் செய்யப்படுவதைதான் கோயில் விழாக்கள்.

இறைவன் நமக்கு கொடுத்ததிலிருந்தே திரும்ப சிறிதளவு வேண்டிய வஸ்திரங்கள், (உடைகள்) நைவேத்யம் (பொங்கல், பழம், தேங்காய்) வாகனங்கள் என்றெல்லாம் அர்ப்பணிப்பதுதான் நம்முடைய கூட்டு ஆலயப்பணியின் நோக்கமே!

பாவங்களிலிருந்து விடுதலை பெற்றுவிட்டோம் என்று நின்றுவிட்டால் போதாது. இறைவனின் அருளால் கோயிலைச்சுற்றி சுற்றி வந்தும், அங்குள்ள விக்கிரகங்களில் சொக்கி பக்தி பண்ணியுமே மோட்ச சாம்ராஜ்யத்துக்குப் போனவர்கள் உண்டுதான்! ஆனாலும் அங்கேயும்கூட தம்மளவில் மட்டும் செய்து கொண்டதுதானே?

பொதுவாக ஆலயத்திலிருந்து பெறுகிற சக்தியைத் தனி வாழ்க்கையின் மனச்சுத்தத்தால் விருத்தி செய்து கொள்வதாகவே நம் மதம் சொல்கிறது. அவனவன் மனச்சுத்தமாக, இதயப்பூர்வமாக இறைவனிடம் வேண்டித் தன்னைத்தானே தேற்றிக் கொள்வதற்கான சக்தியையும். கோயிலுக்குப் போய் வேண்டியதை பெறலாம்.

மிக சர்ச்சைக்கிடமான ஒரு புத்தகம் எழுதிய ஒரு வெள்ளைகாரர் மகான் காஞ்சிப்பெரியவரிடம் உங்கள் கோயில்களில் என்ன இப்படி ஒரே சத்தமும், கூச்சலுமாக இருக்கிறதோ? என்ற கேட்ட பொழுது பெரியவர் அவர்கள் தேவாலயங்கள், மசூதி, புத்தவிவாரம் போன்ற வழிபாட்டுத் தலங்களில் (Silent prayer) அமைதிப் பிரார்த்தனை செய்யப்படுகிறது. அதுபோல் எங்களது கோயில்களில் வழிபாடு செய்ய வேண்டும் என்பது உத்தேசமில்லை.

எங்களுக்கு மனத்தளவு தியானம்தான் முக்கியம். தியானம், கூடிப்பிரார்த்தனை சொல்லி வழிபடுவது ஆகியவற்றிற்காக கோயில் இல்லை. அரசன் நம்மை ஆள்கிறான் பாதுகாக்கிறான் என்பதற்காக அவனுக்கு அரண்மனை, அலங்காரம் ஆடம்பரம் எல்லாம் உண்டு. வரியும் கொடுக்கிறோம் அல்லவா?

அதே மாதிரி அனைத்துலகத்திற்கும் அரசனாகவும், ரட்சகனாகவும் இருக்கப்பட்ட இறைவனுக்கு பொன்னையும், பொருளையும் கொடுத்துப் பெரிதாகக் கோயில் கட்டி வைத்து மேளதாள விமரிசைகளோடு பூஜை உத்சவம் செய்யவே சமூக நன்றியறிவிப்பாகவும், இறைவனை வணங்கி, கூடிக்காணிக்கை செலுத்துவதாகவும் எங்கள் ஆலய வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது.

இங்கே அமைதியை எதிர்பார்க்க முடியாது. அமர்க்களம், ஆரவாரம், மேளதாளம், கண்டாமணி (கோயில்மணி) அதிர்வேட்டு இருக்கத்தானிருக்கும். அமைதியாகத் தியானம் பண்ண அவரவர் வீட்டிலும், பூஜை அறைஉண்டு, ஆற்றங்கரை, குளத்தங்கரை உண்டு.

இப்படிச் சொல்வதால் கோயிலில் அவரவர்களும் இரைச்சல் போட்டுக்கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டிருப்பதற்கு (லைசன்ஸ்) அனுமதி தந்ததாக அர்த்தமில்லை.

சாஸ்திர சம்பிரதாயமாய் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஓசைகளை, மணி அடிப்பது வேதகோஷம், தேவாரம், பஜனை, மேளதாளம், சாமி ஆடுவது புறப்பாட்டில் வெடி வெடிப்பது இவற்றைத்தான் பெரியவர்களும் கூறினார்கள்.

இந்த மாதிரி சாஸ்திர சம்பிரதாயமான சப்தங்களுக்கு, மௌன தியானத்தில் ஒருத்தனை ஈடுபடுத்த அபூர்வமான சக்தி உண்டு. இம்மாதிரி சப்தங்களுக்கு நடுவிலேயே சந்நிதானத்தில் சிறிது கண்ணை மூடிக்கொண்டால் அல்லது இறைவன் எதிரே ஜபம் பண்ண உட்கார்ந்துவிட்டால், சட்டென்று ஒரு லயிப்பு வந்துவிடும். மனம் ஒரு நிலைப்படுத்திவிட்டால் இறைவன் உங்கள் கண்முன்னே இருப்பதுபோல் உணர்வீர்கள். இதுதான் இந்து மதத்தின் உயிர்நிலை.

விமர்சனம்

அலைகளே இல்லாத சமுத்திரம் எங்குமே இருக்க முடியாது. இடம், காற்று முதலியவற்றுக்கு ஏற்ப சிறிய அலைகளாகவோ, பெரிய அலைகளாகவோ எப்படியும் அலைகள் இருப்பதுதான் கடலின் லட்சணம்.

முதல் தரமான மனிதர்கள் கருத்துக்களைப்பற்றிப் பேசி விவாதிக்கிறார்கள். சாதாரணமான மனிதர்கள் நிகழ்ச்சிக்களைப் பற்றி விவாதிக்கிறார்கள். மட்டரகமான மனிதர்கள் மட்டுமே தனி நபர்களைப்பற்றி புறம் பேசி விவாதிக்கிறார்கள் என்று ஒரு சீனப்பழமொழி உண்டு.

சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் இன்னொரு மனிதனைப்பற்றி சுதந்திரமாகப்பேசி விமர்சனம் செய்யும் உரிமை தனக்கு மட்டுமே உண்டு என நினைக்கிறான். அதே சமயத்தில் தன்னைப்பற்றி பிறர் அப்படி விமர்சனம் செய்தால் அதைப் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. அவனால். பிறரைப்புரிந்து கொள்வதையும், பிறரைப் பற்றிச் சிந்திப்பதையும் சிலர் ஒரு போதும் வெறுப்பதில்லை. ஆனால் ஒவ்வொருவரையும் பற்றி விமர்சிக்க நினைப்பவர் தங்களுடைய சொந்த விருப்ப வெறுப்புக்களை தராசு ஆக்கி நிறுப்பது எவ்வளவு நல்லது என்று எப்போது புரிந்து கொள்வார்களோ?

ஒவ்வொரு மனிதனைப் பற்றிச் சமுதாயமே ஒரு விமர்சனத்தைத் தயாராக வைத்திருக்கும். யாரும் அதைத் தவிர்க்க முடியாது, அதிலிருந்து யாரும் தப்ப முடியாது.

சிலரைப்பற்றி ஏதாவது ஒரு சமுதாய விமர்சனம் மொத்தமாக வராமலிராது. மனிதனை நல்லவனாகவோ, கெட்டவனாகவோ தீர்மானம் செய்கிற உரிமை, நல்லதும், கெட்டதும் தன்னிடமே உள்ள ஒரு தனி மனிதனிடம் விடப்படுவதைக் காட்டிலும், பல தனிமனிதர் சேர்ந்த சமூகத்திடம் விடப்படுவது உத்தமமான காரியம்.

எது தெய்வ நம்பிக்கை

தெய்வ நம்பிக்கையை இல்லாதவர்களைவிடப் பெரிய நாஸ்திகர்கள் மனிதப் பண்பிலும், ஒழுக்கத்திலும் நம்பிக்கை இல்லாதவர்கள்தான். அதை கடைப்பிடிக்காதவர்களும்தான்.

மனிதப் பண்பையும், சகலவிதமான ஒழுக்க நேர்மைகளையும் நம்பாமல், தெய்வத்தை மட்டும் நம்புவதாகச் சொல்லித் தற்காப்புச் செய்து கொள்கிற போலி பக்தியால் உலகத்துக்கு நியாயமான பயன் ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட போலிப் பக்தியினாலேயே இந்த உலகில் பெரிய மனிதர்களாக நிரூபித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் உலகம் அவர்களை சரியாக கணித்துக் கொண்டே இருந்து வந்துள்ளது என்று வரலாறுகள் நமக்கு எடுத்துக்கூறுகிறது.

பணிவு

துணிவோடும் நம்பிக்கையோடும் வாழ்ந்து வந்தால் எல்லா வேளையும் நல்ல வேளைதான். எல்லாக்காலமும் நல்ல காலம்தான். இந்த உலகில் வாழ்க்கையே அவசரமான சந்தர்ப்பமாயிருக்கிறது. அப்படியிருக்கும்போது காலத்தின் மேலும் நேரத்தின் மேலும், விருப்பு வெறுப்புக்கொண்டு என்ன சாதித்து விடப்போகிறோம்?

சிலர் பணிவுள்ளவர்கள்போல் குழைந்து, நெகிழ்ந்து பேசித்திரிந்தவர்களும், உண்மையில் அப்படியில்லாமல் ஏமாற்றுவதில்லையா? பணிவுள்ளவனும் உண்மையாக வாழாமல் இருக்கலாம். ஆனால் உண்மையாக வாழ்கிறவன் பணிவில்லாமல் இருக்க முடியாது. உண்மை என்பது எல்லா குணங்களையும் இணைக்கிற ஒரு பெருங்குணம். பணிவு அப்படி இல்லை. பிறரைக் கவர்கிற சிறிய குணங்களில் பணிவும் ஒன்று. பல பெரிய குணங்கள் இல்லாதவனிடம் பணிவு என்ற ஒரு சிறிய குணம் இருக்கலாம். ஆனால் உண்மை என்ற ஒரு பெருங்குணமோ எல்லாச் சிறிய குணங்களையும் கொண்டது.

ஒருவர் புரிந்து கொண்டு பாராட்ட வேண்டுமென்பதற்காக மட்டுமே, உண்மையாக வாழ வேண்டுமென்பதையே நோக்கமாக வைத்துத்தான் அப்படி வாழவேண்டும்.

உண்மையைப் பற்றியே சந்தேகமாயிருப்பவர்கள் உண்மையைப் புரிந்து கொண்டு பாராட்டுவார்கள் என்பதையும் எப்படி எதிர் பார்க்க முடியும்? உண்மை பெரிய கோபுரத்தைப் போன்றது. கோபுரத்துக்கு அது கோபுரமாக இருக்கிறது என்பதால்தான் பெருமையே ஒழிய, அதன் நிழல் பெரியதாக இருக்கிறது என்பதாலேயே பெருமையாகி விடாது. உண்மையாக வாழ்வதும் அப்படித்தான்.

சாதி

நினைப்பையும், செயலையும், சொல்லையும் சத்தியமாக அளவிட்டுக் கணித்து, அந்தக் கணிப்பினால் மட்டுமே மனிதர்களின் சாதியைப் பிரிப்பதாக இருந்தால் தூய்மை உள்ளவர்கள், தூய்மை அற்றவர்கள் என்று சாதிகள்தான் பிரியும்.

மனிதனுடையே முன்னிலையில் வேண்டுமானால் செல்வத்தையும், செல்வமின்மையும் வைத்து வளமும், வறுமையும் தீர்மானிக்கப்படலாம் ஆனால் கடவுளுடைய சந்நிதியில் வறுமையும், வளமையும் வேறுவிதமாகத் தீர்மானிக்கப்படுகின்றன.

மனம், மொழி, மெய்களால் (உண்மை) (உடல்) மனிதர்கள் எவ்வளவுக்கு சத்தியமாக உண்மையாக வாழ்ந்தார்கள் அல்லது வாழவில்லை என்பதை வைத்துத்தான் கடவுளுடைய சந்நிதானத்தில் செல்வமும் ஏழ்மையும் நிறுத்துத் தீர்மானிக்கப்படுகின்றன.

பணத்தை சம்பாதித்து பெரிய மனிதனாக முயற்சிக்கும் மனிதர்களும் பணத்தை தாராளமாக செலவழித்து அதன் மூலமாக பெரிய மனிதனாக முயல்கிறவனும் கடவுளின் சந்நிதானத்தில் நிச்சயம் ஏழைகளாகத்தான் நின்று கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் நிற்கும் இடத்தில் உள்ளத் தூய்மையானவர்கள், செயலில் தூய்மையானவர்கள் அபலைகளாக கடவுளின் கருணையோடு செல்வச் செழிப்போடு நின்று கொண்டிருப்பார்கள்.

திருப்பதி யாத்திரை

திருப்பதியிலுள்ள ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு, உலகத்திலே நாம் எங்கும் கேட்டறியாத ஓர் அபூர்வமான சபலம் இருந்து வருகிறது. தம்மிடம் வரும் பக்தர்களின் தலையை மொட்டையடித்துப் பார்ப்பதில் அவருக்கு ஒரு திருப்தி. வேற எங்காயாவது மொட்டையடித்துக் கொண்டு தலைமயிரையும் அவ்விடமேதான் அர்ப்பணம் செய்யவேண்டும். சாதாரணமாய்க் குழந்தைகளை அப்படிப் பார்ப்பதிலேதான் அவருக்கு அந்தியந்த ஆசை. ஆனால் சில சமயம் மீசை முளைத்த, தலை நரைத்த பெரியவர்களுங்கூட அங்கே போனதும், கடவுளுக்கு நாம் குழந்தைகள்தானே என்ற எண்ணத்திலே தலையை மொட்டையடித்துக் கொண்டு விடுகிறார்கள். சாமியாவது பூதமாவது? அப்படி ஒரு சாமி இருந்தால் அவர்தான் என்னை வணங்கட்டுமே? நான் ஏன் அவரை வணங்கவேண்டும்? என்று பேசும் பகுத்தறிவு பெரியவர்கள்கூடத்

திருப்பதிக்குப் போனதும் பகுத்தறிவெல்லாம் பறந்து போகத்தலையை மழுங்கச் சிரைத்துக் கொண்டு விடுகிறார்கள். கூந்தல் வளரும் தைலங்கள் தடவி அருமையாக வளர்த்த அளகபாரத்தை எத்தனையோ பெண்கள் அங்கே பறிகொடுத்துவிட்டு வருகிறார்கள்.

தை மாதப் பழமொழிகள்

தைப்பனி தரையைத் துளைக்கும், மாசிப்பனி மச்சைத்துளைக்கும் என ஒரு பழமொழி உள்ளது. நெல்லுக்குப் பின் எள் எனும் பழமொழி, நெல்லை அறுவடை செய்த வயலில் எள்ளை விதைப்பர் என்பதைக் காட்டுகிறது.

தை எள் தரையிலே, மாசி எள் மடியில், வைகாசி எள் வாயிலே என்ற பழமொழி எள் மூன்று மாதத்தில் அறுவடைக்குத் தயாராகும் என்பதைக் காட்டுகிறது. தை மாதம் மழை தவிட்டுக்கும் ஆகாது என்ற பழமொழி அறுவடையை பாதிக்கும் என்பதைக் குறிக்கிறது. தையில் முளைக்காத புல்லும் இல்லை, மாசியில் விளையாத மரமும் இல்லை என்ற ஒரு பழமொழி உள்ளது.

தலைமை கொள்

பெரும்பாலான நேரங்களில் நம்மைப்பற்றி நாம் நினைக்கும்போது தாழ்வு மனப்பான்மை மனதிலே குடியேறிவிடுகிறது. இந்த உலகிலே மிகச்சிறந்த மனிதர் யாரெனக் கேட்டால் தயங்காமல் உங்களை நீங்களே குறிப்பிட்டுச்சொல்லுங்கள். இந்தப் பண்புதான் உங்களை வையத்திற்கே தலைமையேற்க அழைத்துச் செல்லும்.

ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணி நேரமும் நம்மைப்பற்றி பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகிறோம். அந்த ஆர்வத்தில் ஒரு சிறுபகுதியை நம்முடைய வளர்ச்சியிலும், நம்முடைய சுயத்திலும்காட்ட ஆரம்பித்தாலே உலகம் நம்மிடம் வர ஆரம்பிக்கும்.

இந்த உலகினை தன் வசப்படுத்திய வரலாற்று நாயகர்கள் அனைவருமே தன்னை நம்பியவர்களாக இருந்தனர். பிறருடைய அங்கீகாரத்திற்காக நாம் செய்யும் செயல்கள், அவர்களுடைய அங்கீகாரம் கிடைக்காத தருணத்தில் அழகு இழந்து போய்விடும்.

நமது மன நிறைவோடும், நம்பிக்கையோடும் செய்யும் செயல்கள், உலகம் உள்ளளவும் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றுத்தரும். அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான். நம்மீதான நம்பிக்கையையும் முயற்சியையும் அதிகப்படுத்த வேண்டும்.

"தோல்விகள் அதிகம் வருகிறதா?

நீங்கள் வெற்றிக்கு மிக அருகில் இருக்கிறீர்கள்"

என்ற வாசகங்களை மனதிலே பதியம் போட்டு வையுங்கள்.

தோல்வியை சந்திக்காதவர்கள்

தோல்வியை சந்திக்காத மனிதர்கள் யாருமில்லை. ஆனால் தோல்விகளைக் கண்டு கலங்கி நிற்கும்போதுதான் அது தோல்வியாக உறுதி செய்யப்படுகிறது. மாறாக அதை ஒரு அனுபவமாக எடுத்துக்கொண்டு, வெற்றிக்கான பயணத்தை தொடர ஆரம்பிக்கும்போது, வெற்றியும் நம்முடைய விலாசத்தை விசாரிக்க ஆரம்பிக்கும்.

உங்களைவிட மதிப்பு வாய்ந்தவர்கள் இந்த உலகத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அடுத்தவரை காப்பி அடித்து அரை நிமிடம் கூட நம்மால் வாழ முடியாது. மாற்றங்களை உங்களிடமிருந்து தொடங்குங்கள்.

உங்களைத் தவிர வேறுயாராலும் உங்களைப்போல் வாழ்ந்திட முடியாது என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். சிறு குழந்தையைப் பாருங்கள்....எவ்வளவு மகிழ்ச்சியாக வளர்கிறது. அந்த குழந்தைகளுக்கு பல்வேறு சாயங்களைப் பூசி அவர்களின் வண்ணங்களை மாற்றியது நாம்தான்.

நாம் செய்ய ஆசைப்பட்டு இயலாமல் போனவற்றை எல்லாம், நம் குழந்தைகள் மீது திணித்து, நம் நகலாக மாற்ற முயற்சிக்கிறோம். அவர்களின் அசல் தன்மையை அழித்து விடுகிறோம்.

குணமே அடையாளம்

சிறு வயதில் இருந்த குழந்தைகளின் குணமே அவர்களின் அடையாளமாக மாறும். நம்மில் எத்தனை பேர் குழந்தைகளின் குணத்திற்கு வருகிறோம். தகுந்தாற்போல் வளர்த்து வருகிறோம். என மனசாட்சியோடு எண்ணிப் பார்ப்போம். குப்பையாக கொட்டி வைக்கும் குப்பைத்தொட்டியல்ல மனம் என்பதை உணருங்கள். நல்ல எண்ணங்களை மனதில் நிரப்புங்கள், நம்பிக்கை உடையவர்களையே உலகம் தேடுகிறது, விரும்புகிறது.

மனதினை அவ்வப்போது உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள், உங்களால் அடைய முடியாத இலக்கு என எதுவும் இல்லை. தகுந்த பயிற்சியும். இடைவிடாத முயற்சியும் இருந்தாலே எட்டமுடியாத, இலக்கையும் எளிதில் அடையலாம் என்பதே சாதனையாளர்கள் நமக்கு விட்டுச்சென்ற பாடமாக அமைகிறது. நம்மில் பலருக்கு விழிப்பதற்கும், எழுவதற்குமே அதிக இடைவெளி உள்ளது என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டியுள்ளது. காலையில் எழும்பும்போது மனதிற்கும், உடலுக்கும் இடையிலே ஒரு பெரிய சண்டையே நிகழ்கிறது. நம்பிக்கையோடு எழுங்கள், ஒவ்வொரு விடியலும் உங்களுக்காக வெற்றியோடு காத்திருக்கும்.

உங்களால் செய்ய முடியாத எந்த ஒரு செயலையும் இறைவன் உங்களிடம் ஒப்படைப்பதில்லை, எவ்வளவு உண்மையான வரிகள் இவை. உங்கள் படைப்பின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளும் தருணங்களிலே வெற்றி உங்களை தேட ஆரம்பிக்கிறது. வெற்றியோ, தோல்வியோ அதைப்பற்றி கவலைப்படாமல்

அவற்றிலிருந்து ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்களைச் சிறப்பாகவும், சிரத்தையாகவும் செய்யுங்கள். வேறு யாராலும் இவ்வளவு சிறப்பாகச் செய்திட முடியாது என்று வியக்கும் அளவிற்குச் செய்யுங்கள். இவைகள்தான் வெற்றியாளர்களின் ரகசியங்கள்.

அற்புத மனித இனம்

ஆயிரம் கணிணிகளைவிட (கம்ப்யூட்டர்) அற்புதமானது மனித மனம். உலகின் பல்வேறு அறிஞர்களாலும் இன்று வரை அறியப்படாத பல ரகசியங்களை தன்னுள்ளே வைத்திருக்கும் அதிசயமே மனித மனம். மிகப்பெரிய சாதனையாளர்களைப் பார்க்கையில் ஒரே ஒரு செய்தி மட்டும் நமக்குத் தெரிய வருகிறது. அனைவரின் வெற்றியும் பல்வேறு பேராட்டத்திற்குப் பின்னரே கிடைத்தது.

ஜெயித்தவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது, அவர்களைப் போல வாழவேண்டும். என்ற ஆசை எழுகிறது. அடுத்த நிமிடமே நமது சகஜ வாழ்க்கை நம்மை சிதைக்க ஆரம்பிக்கிறது. அதிலிந்து நம்பிக்கையோடு மீளவேண்டும்.

“நம்பிக்கையால் மனதை நிரப்பிக் கொள்ளுங்கள், உலகின் மிகப்பெரிய செல்வந்தா் நீங்களே”.

உங்கள் மனதை நம்பிக்கையால் நிரப்பிக்கொள்ளுங்கள் உங்கள் மனதும், செவியும் அடிக்கடி என்னென்ன வாசகங்கள் கேட்க ஆரம்பிக்கிறதோ, அவை எல்லாம் உங்கள் ஆழ்மனதில் பதிய ஆரம்பிக்கும். அதுவே உங்கள் சிந்தனைகளாக மாறி செயல் வடிவில் வெளிப்படும். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு நிமிடங்களிலும் வாழ்க்கை புதிதாகவே தோன்றுகிறது. மகிழ்வாகவே இருக்கிறது என்ற நம்பிக்கை மனதிற்குள் புகுத்தி விடுங்கள்.

மகிழ்ச்சியால் நிறைந்த மனமே நாம் சொல்வதையெல்லாம் கேட்கும். நீங்கள் சொல்வதை உங்கள் மனம் கேட்க ஆரம்பிக்கும்போதே உங்களின் வெற்றி ஆரம்பமாகிறது.

சராசரி வாழ்க்கை

திறமைகளின் மொத்த வடிவம்தான் மனிதன். மனிதர்கள் தங்களுக்குள் இருக்கும் திறமைகளை புரிந்து கொள்ளாதவரை அங்குசத்திற்கு அஞ்சும் யானையாகவே இருந்து விடுகிறார்கள், இறந்தும் விடுகிறார்கள். பலம் கொண்ட மிகப்பரிய யானை ஆலமரத்தையே அசைத்துப் பார்க்கும், இல்லை வேரோடு பிடுங்கி எறியும். அப்பேற்பட்ட யானையை அதன் பலத்தை அறியவிடாமல் சிறு குச்சிக்கு பயப்படும் சாதுவான பிராணியாகவே வளர்த்து விடுகிறோம். நாமும் நம் திறமைகளை அறியாதவர்களாக இருநது வருகிறோம். திறமைகளை உணர்ந்து கொள்ளுங்கள் உயிரோடு இருப்பது வேறு, வாழ்வது என்பது வேறு. இந்த வாழ்க்கை ஓட்டத்திலேயே குறைந்தபட்சமாக தனக்கும், தன் குடும்பத்தாருக்கும், அதிகபட்சமாக சமுதாயத்திற்கும் அல்லது அகில உலகத்திற்கும் ஒரு நன்மையைச் செய்து போனவர்களை லட்சியம் கொண்டு வாழ்ந்தவர்களைத்தான் சாதனையாளர்கள், வாழ்ந்தவர்கள் என்று சொல்ல வேண்டும். அடுத்த அடியில் கூட வெற்றி இருக்கலாம்.

சலிப்போடு திரும்பி விடாதீர்கள்;

வெற்றி ஏமாந்து விடும்...

முயற்சி செய்யுங்கள்.......!

விமர்சனங்களை எதிர்கொள்ளுங்கள்

ஒரு கருத்துக்கு மூன்று முகங்கள் உண்டு. ஒன்று உங்களுடையது. அடுத்தது மற்றவருடையது மூன்றாவது உண்மையானது. அந்த உண்மையை தேடுவதுதான் வாழ்க்கை. கருத்து மோதல்களும், கடுமையான விமர்சனங்களும், எதிர்வாதங்களும் இதற்கு அடிப்படையாக அமையும்.

உங்களைப்பற்றி யாரும் விமர்சிக்கவில்லையென்றால், நீங்கள் ஒரு தனித் தீவாகிவிட்டீர்கள் என்று பொருள். நீங்கள் யாரையும் விமர்சிக்கவில்லை என்றால், உண்மையைக் கண்டறியும் உத்வேகம் உங்களிடம் இல்லை என்று அர்த்தம், சமூக அக்கரை இல்லாமல் வாழ்கிறீர்கள் என்று பொருள், வெந்ததை தின்று விதி வந்தால் சாகும் வகையைச் சேர்ந்தவர் நீங்கள்

உங்கள் மீதான விமர்சனங்கள்

பொறாமையால் செய்யப்படும் விமர்சனங்களை இனம் காண கற்றுக்கொள்ளுங்கள், உண்மையில் உங்கள் வளர்ச்சிக்கான பாராட்டு அது, அதற்காக மகிழ்ச்சி அடையலாம். விளையாட்டாக உண்மையான அர்த்தமோ, விளைவுகளோ இல்லாமல் செய்யப்படும் விமர்சனங்களைப் புரிந்து கொள்ளுங்கள், புறந்தள்ளுங்கள். வெற்று விமர்சனங்களை வைத்துக் கொண்டு அதீதமாக கற்பனை செய்து அஞ்சாதீர்கள். அது எதிராளிக்கு வெற்றியைக் கொடுத்துவிடும்.

சரியும், தவறும் கலந்து விமர்சனமாக இருந்தால், தவறான விமர்சனங்களை ஒதுக்கிவிட்டு, சரியானதைப்பற்றி சிந்தியுங்கள். யாரோ சொன்னதாக சொல்லப்படும் விமர்சனங்களை ஏற்காதீர்கள்.

உங்கள் தகுதியை வளர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் பலத்தோடும், மனவளத்தோடும் நம்பிக்கையோடும், நேர்மையோடும் இருக்கும்போது விமர்சனங்கள் உங்களை காயப்படுத்த முடியாது. ஏன் உங்கள் அனுமதியின்றி யாரும் உங்களை காயப்படுத்த முடியாது.

விமர்சிக்கும்போது கவனிக்க வேண்டியவை

குறிப்பிட்ட நபரை விமர்சிக்காதீர்கள், பிரச்சினையை விமர்சியுங்கள், இப்போதைய சிக்கலை மட்டும் விமர்சியுங்கள். பழைய கதைகள் வேண்டாம். உங்கள் நோக்கத்தை தெளிவு படுத்துங்கள். விளக்கப்பெறும் விபரத்தை வெளிப்படுத்துங்கள். பணம், பதவியை காட்டிப் பயமுறுத்தாதீர்கள்.

விமர்சனங்களின் வகைகள்

1. சில விமர்சனங்களை எந்த ஆழமும் இல்லாமல், அடித்தளமும் இல்லாமல் மேம்போக்காக சொல்லப்படும் அவற்றுக்கு முக்கியத்துவம் தராமல் புறந்தள்ளுங்கள்.

2. சில விமர்சனங்கள் கண்ணாடிபோல், உங்கள் நிலையைக் காட்டி திருத்திக் கொள்ள உதவும்.

3. சில விமர்சனங்கள் விளையாட்டாக பொழுது போக்காகவும், நகைச்சுவையாகவும் சொல்லப்படுவதும் உண்டு. அதைப் பந்தைப்போல் உதைத்து விளையாட வேண்டும்.

4. சில விமர்சனங்கள் உள்நோக்கத்தோடு உங்களை காயப்படுத்துவதற்காகவே திட்டமிட்டு செய்யப்படும், நீங்கள் காயம்படாமல் லாவகமாக தத்தியின் கைப்பிடியை பிடித்து திருப்பி விடவேண்டும்.

5. அவமானப் படுத்துவதற்காகவே சில விமர்சனங்கள் ஏவப்படும். அதற்கு கொஞ்சம்கூட சலனப்படாமல் அவர்கள் வெட்கப்படும்படி சரியான பதிலை சாட்டையடிபோல் கொடுங்கள்.

6. முன்புறமாக இல்லாமல், பின்புறமாக இருந்து புற முதுகில் வீசப்படும் ஈட்டியாகக்கூட சில விமசர்னங்கள் அமையும், மொட்டை பெட்டிசன் என்பதை இந்த வகையில் சேர்க்கலாம்.

இவர்களிடம் மிகுந்த எச்சரிக்கையாக வேண்டும்.

விமர்சனங்கள் அவதூறு ஆகுமா?

விமர்சனங்கள் யார் யாரைப்பார்த்து சொல்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். காரண, காரியங்களோடு, புள்ளி விபரங்களோடு, ஆதாரங்களோடு செய்யப்படும் விமர்சனங்கள் வலிமையானதாக இருக்கும்.

விமர்சனத்திற்குட்பட்டவர்கள் அதை அவதூறாக ஆக்க முற்பட்டால், தப்பிப்பதற்கான முயற்சி அல்லது கிடப்பில் போடுவதற்கான ஏற்பாடு என்றே கருதவேண்டும்.

மொத்தத்தில் நல்ல விமர்சனங்கள் என்பது நீங்கள் செலவு செய்யாமல் கிடைக்கும் ஆய்வறிக்கை ஆகும். விளம்பரமாகவும் அமையும். எனவே விமர்சனங்களை எதிர்கொள்ளுங்கள் முகம் பார்க்கும் கண்ணாடி நம் அழுக்கை காட்டினாலும், நாம் கண்ணாடி பார்க்கத் தவறுதில்லை அல்லவா !

பொறுப்புணர்வு

சமூகம் சீரழிந்து கிடக்கிறது. அதைப்பற்றி யாருக்காவது குற்றவுணர்வு இருக்கிறதா? பொறுப்புணர்வு இருக்கிறதா?

என் தவறுகளுக்கே நான் பொறுப்பேற்பது இல்லை. யாரோ செய்யும் தவறுகளுக்கு நான் பொறுப்பேற்பது ஏன் என, குற்றவுணர்ச்சி அடைய வேண்டும்?

தனி நபர்களுக்கு மனசாட்சியிருப்பது போல (உண்மையில் அப்படியொன்று இருக்கிறதா என்றே சந்தேகமாகயிருக்கிறது) சமூகத்துக்கும் மனசாட்சி இருக்கத்தானே செய்யும். அந்த பொது மனசாட்சியின் குரல் ஏன் இப்போது வெளிப்படுவது இல்லை? அந்தக் குரல் நுகர்வு சந்தையின் ஓலங்களுக்குள் ஒடுங்கிப் போய்விட்டதா?

குற்றவுணர்ச்சி என்பதற்கு பதிலாக பொறுப்புணர்ச்சி என்று எடுத்துக் கொள்ளலாம். பொறுப்புணர்ச்சியற்றவர்களுக்கு எப்படி குற்றவுணர்வு உருவாகும்? பொறுப்புணர்வு என்பது சட்டம் போட்டு மட்டும் உருவாக்கிவிடக்கூடியதா? ஏன், தன் பொறுப்பை பலரும் அலட்சியம் செய்கிறார்களா? குற்றவுணர்ச்சி தொடர்பாக இந்தப் பிரச்சினையை அணுகும்போது, அது தொடர்பற்ற ஒன்றாக மாறிவிடுகிறது. அதுவே பொறுப்புணர்வு பற்றியதாக விவாதிக்கப்டும்போது ஒருவரின் கடமையாக மாறுகிறது இல்லையா. இன்று நம் முன் உள்ள பெரும் பிரச்சினை தங்களின் பொறுப்புணர்ச்சியைப் பலரும் மதிப்பதில்லை என்பதே !

பொதுக்காரியம், பொதுநலம், பொதுவிஷயம் எல்லாமும் இன்று தேவையற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன. பொது என்ற சொல்லே சிலருக்கு அசூசையாக இருக்கிறது. பொது என்ற சொல் எவ்வளவு சிறியதாக இருக்கிறது? ஆனால், அது எவ்வளவு பிரமாண்டமான தோற்றம் கொண்டது. பொது விஷயங்களில் நமக்கு ஒரு பங்கு இருக்கிறது. நாம் அதை மறந்துவிடக்கூடாது என்றுதான் கடந்த தலைமுறையினர் தங்கள் பிள்ளைகளைச் சொல்லிச் சொல்லி வளர்த்தார்கள்.

இன்று பொது விஷயங்கள் எதைப்பற்றியும் யோசிக்கவோ, செயல்படவோ கூடாதென்று குடும்பம் கட்டுப்படுத்துகிறது. பொது விஷயங்களைப் பற்றிக் கவலைப்படுகிறவன் முட்டாளாகக் கருதப்படுகிறான். பொது விஷயங்களை யாரோ பார்த்துக்கொள்வார்கள் என அனைவரும் நினைக்கிறார்கள். அந்த யாரோ என்பவர் யார்? ஏன் இந்த அலட்சியம்?

மாற்றங்கள் வேண்டும் என்று நினைப்பவர்கள், அதை யாரோ உருவாக்கித் தருவார்கள் என்று ஒதுங்கிக்கொள்கிறார்கள். ஒருவேளை யாரோ அதற்கு முயற்சித்தால்கூட உறுதுணை செய்வது இல்லை. ஒன்றுகூடிப் போராடாமல் எந்த மாற்றத்தையும் உருவாக்கிட முடியாது.

யாரும் தன் தவறுக்கு வருந்துவதில்லை, பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள், மேலும் சில தவறுகளுக்குப் பின்னால் அதிகாரத்தின் உச்சம் வரை தொடர்பிருக்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

மண்

நாடாயிருந்தால் என்ன? காடாயிருந்தால் என்ன? பள்ளமாயிருந்தால் என்ன? எங்கு உன்மேல் நடக்கும் மனிதர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ, அங்கு நீயும் நன்றாக வாழ்கிறாய் மண்ணே!

என்று மண்ணை வாழ்த்திப் பாடியிருக்காளே தமிழ் மூதாட்டி. அந்த வாழ்த்து சில ஊர்களுக்கு இன்றும் முற்றிலும் பொருத்தம். சில ஊர்கள் நகர ஆரவார வேகங்களிலிருந்து பரபரப்பான ஆடம்பரங்களிலிருந்து விலகி ஒதுங்கியிருந்தாலும், நாகரிகத்துக்கும், பண்பாட்டுக்கும் இருப்பிடமாக விளங்குகிறது.

நாகரிகம் பெரிய பெரிய நகரங்களிலிருந்து பிறந்து வளர்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய நகரங்களின் நெருக்கடியில் இருப்பதற்கு இடமில்லாமல் புறக்கணிக்கப்பட்டு பண்பாடு கலாச்சாரம் நிறைந்த சிறிய சிறிய ஊர்களில் ஒதுங்கிப் புகழிடம் பெறுகிறது.

அப்படிப்பட்ட கிராமங்களில் வாழ்க்கை இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்காது. நிதானமாக நடந்து கொண்டிருக்கும். தார் ரோடுகளும், சிமிண்ட் பூச்சுக்களும் தரையை மூடி மண்ணின் ஈர வாசசனையை தடை செய்ய மாட்டா. எல்லா இடங்களிலும் அந்த மண்ணின் மணம் தன் சகலவிதமான வளங்களோடும், எக்காலமும் மணந்து கொண்டிருக்கும், காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளும். தாகத்தோடு இங்கு மனிதர்கள் தேவைகளுக்கு மீறிய பரபரப்பு கொண்டு திரிய மாட்டார்கள்.

காரியங்கள் நியாயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடும், நாணயத்தோடும் நிதானமாக உழைத்துக் கொண்டிருப்பார்கள். இந்த மக்களைப்போலவே எவரையும், எப்போதும் வாட்டவோ, காயவோ விரும்பாததுபோல், ஆண்டு முழுவதும் சமமாக சீதோஸ்தன சூழ்நிலை நிலவ, இயற்கை ஒத்துழைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக!

ஸ்ரீ மீனாட்சி பஞ்சரத்னம்

ஆயிரம் கோடி சூரியர்கள் உதித்தாற்போல்
தோன்றுகின்றவளே ! தோளணியும் மாலை
வரிசைகளும் அலங்காரம் செய்ய ஜ்வலிப்பவளே !
செவ்விய இதழ்கள் புன்சிரிப்பால் விரிய,
பிரகாசிக்கும் பல் வரிசைகளையுடைய தேவீ !
மஞ்சள் பட்டாடையில் அலங்காரமாக நிற்பவளே !
விஷ்ணு, பிரம்மா, தேவேந்திரன் ஆகியோர்
ஸேவிக்கும் திருப்பாதங்களையுடையவளே !
தத்துவ ஸ்வரூபிணியாய் இருப்பவளே !
சிவ பத்தினியான அன்னையே ! கருணையின்
பெரு வடிவாய் விளங்கும் மீனாட்சி தாயே !
உன்னை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

முத்து மாலைகள் அசைந்தாட கிரீடம் ஒளிவீசப்
பூர்ணச் சந்திரன் போன்ற முகம் விளங்கி
பிரகாசிக்க, கிங்கிணி மணி கொண்ட நூபுரங்கள்
தரித்து தாமரை அழகென ஒளிர்ந்து நிற்பவளே !
அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும்
கல்பதரு வானவளே ! பர்வத குமாரியே !
சரஸ்வதியும், லக்ஷ்மியும் சேவை செய்ய
அதனால் ஆனந்தம் அடைபவளே !
கருணையின் பெருவடிவாய் விளங்கும் மீனாட்சி தாயே !
உன்னை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

ஸ்ரீவித்யா ரூபமனவளே !
சிவபெருமான் இடபாகத்தெரு பகுதியானவளே !
ஹ்ரீம் கார மந்திரப் பொருளாய் ஜ்வலிப்பவளே !
ஸ்ரீசக்ரத்தின் மத்தியிலுள்ள பிந்து ஸ்தானத்தை
இருப்பிடமாகக் கொண்டு வசிப்பவளே !
சபாநாயகியான திருவே ! ஆறுமுகனையும்
விநாயகப் பெருமானையும் ஈந்த தாயே !
உலகத்தை வசியப்படுத்தி மயக்குகின்றவளே !
கருணையின் பெரு வடிவாய் விளங்கும் மீனாட்சி தாயே !
உன்னை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

ஸ்ரீசுந்தரேஸ்வர நாயகியே ! பயங்களையெல்லாம
அழிப்பவளே ! அளவ்ற ஞானத்தைத் தருபவளே !
மனங்களுக்கு அப்பாற்பட்ட நிர்மலையே !
ச்யாமள ரூபிணியே ! கமலாஸனத்தில் வீற்றிருக்கும்
ப்ரம்மனால் அர்ச்சிக்கப்படும் திருப்பாதங்களை
உடையவளே ! நாராயண சகோதரியே !
வீணை முதல் குழல் மிருதங்கம் போன்ற
நானாவித வாத்தியங்களால்
எழுப்பப்படும் ஒலிகளை ரசித்து மகிழ்பவளே !
கருணையின் பெருவடிவாய் விளங்கும் மீனாட்சி தாயே !
உன்னை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

பல்வேறு யோகிகளுடையவும்,

முனி புங்கவர்களுடையவும் இதயத்தில் வசிப்பவளே !

பலவிதமான செல்வங்களையும் அளிப்பவளே !

பலவித மலர்களால் அலங்கரிக்கப்பட்ட

அழகிய இருதிருவடிகளையுடையவளே !

நாராயணனால் பூஜிக்கப்படுபவளே ! நாதபிரும்மம்

ஆனவளே ! பராத்பரமாக விளங்குபவளே !

பல பொருட்களின் தத்துவமாக விளங்குபவளே !

கருணையின் பெருவடிவாய் விளங்கும் மீனாட்சி தாயே !

உன்னை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

- ஸ்ரீ ஆதிசங்கரர் சுவாமி இயற்றியது

வாழ்வை உணர்த்தும் ‘வரம்’

ஜென் உலகில் ஒரு வழக்கம் பிரபலமானது. ஜென் குருக்களின் உபதேசங்களையும், அருளுரைகளையும் கேட்டு அவர்களின் பால் ஈர்க்கப்படும் மக்கள், ஜென் குருக்களை தனியாக சந்தித்து, அவர்கள் வாயால் தங்களுக்கென்று தனியாக ஏதாவது சொல்லும்படி கேட்டு எழுதி வாங்கி வைத்துக் கொள்வார்கள். அதனை தங்களின் வாழ்நாள் பொக்கிஷமாக பாதுகாப்பவர்களும் உண்டு.

அப்படி ஒரு வார்த்தையையே கேட்டுப் பெறுவதற்காகத்தான் அந்த ஞானியிடம் வந்திருந்தான் ஒரு அரசன்.

‘சுவாமி! எனக்கொரு சிறந்த வாசகம் எழுதித்தாருங்கள். நீங்கள் எழுதிக் கொடுப்பது வாழ்வின் உண்மையை வெளிப்படுத்துவதாக இருந்தால் சிறப்பாக இருக்கும்’ என்று ஞானியிடம் வேண்டினான்.

ஞானியும் மறுக்காமல் ஒரு துண்டு காகிதத்தில் ஒரு வாசகத்தை எழுதிக்கொடுத்தார்.

அதை வாங்கிப் படித்த அரசன் அதிர்ந்து போனான். ஏனெனில் அந்த துண்டுச் சீட்டில் இருந்த வாசகம் அப்படிப்பட்டது.

‘அப்பனும் இறப்பான்; பிள்ளையும் இறப்பான் அதன்பின் பேரனும் இறப்பான்’

இப்படி ஒரு வாசகத்தை எழுதிக்கொடுத்தால், யாருக்குத்தான் அதிர்ச்சி ஏற்படாது. ஆனால் வந்தவன் அரசனாயிற்றே. அவனிடம் இருந்து அதிர்ச்சியோடு, கோபமும் வெளிப்பட்டுவிட்டது.

ஞானியைப் பார்த்து, என்ன இது? இப்படி எழுதித் தந்துவிட்டீர்ளே என்று சினத்துடன் கேட்டான்.

அவனது கோபத்தைக் கண்டு மிரளாமல், நிதானமாக பதிலளித்தார் ஞானி. நீ வாழ்வின் உண்மையை எழுதித்தரச் சொல்லிக் கேட்டாய். அழியாத, நிலையான உண்மை இது தான். உன் தாத்தா எப்போதே இறந்துவிட்டார். உன் தந்தையும் சில நாட்களுக்கு முன்பு இறந்து போனார். நீயும் ஒரு நாள் இறப்பாய் அதேபோல் உன்னுடைய மகனும் கூட ஒரு நாள் இறந்து தான் ஆக வேண்டும்.

ஞானியின் பதிலைக்கேட்ட அரசன், பிறந்தவர்கள் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் உங்களைப் போன்ற ஞானிகள், மக்களுக்கு வரம் தருவதுபோல் வார்த்தைகளைச் சொல்லாமல் சாபம் தருவது போன்ற அபசகுனமான வார்த்தைகளும் எழுதித்தருவது முறையாகுமா? என்று மனக்குமுறலுடன் தெரிவித்தான்.

ஞானிக்கு சிரிப்பு வந்துவிட்டது. என்ன.. நான் எழுதிக்கொடுத்தது சாபமா? அது பெரிய வரமப்பா? நன்றாக சிந்தித்துப் பார். நான் எழுதித் தந்தது சுப சகுனம் என்பது உனக்குப் புரியும். முதலில் அப்பன் இறப்பான். பிறகு பிள்ளை இறப்பான். பிறகு பேரன் இறப்பான் இதுதானே முறை. உன் பெற்றோர் தங்களது இறுதிச் சடங்கை நீ செய்ய வேண்டும் என்றுதானே ஆசைப்படுவார்கள்? நீ மறைந்து உனக்கு, உன் மகன் ஈமக்கடன்கள் செய்தால்தானே அது இயல்பு. மாறாக, நீ இருக்க உன் மகன் மறைந்து அவனுக்கு நீ இறுதிச் சடங்குகளைச் செய்ய நேரிட்டால் அது உன்னை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை நினைத்துப்பார். அது தான் சாபம். அப்படிப் பார்த்தால் நான் எழுதிக் கொடுத்த வாசகம் வரம் தானே. மரணம் என்பது இயல்பானது. அது இயல்பான முறையில் நிகழ்வதே வரம்; இறையருள்; சுபம் எல்லாமே என்றார் ஞானி.

அந்த விளக்கத்தைக் கேட்ட அரசன், வாசகத்தை கண்ணில் ஒற்றியபடி அங்கிருந்து புறப்பட்டான்.

உலகத்தில் வாழும் மக்கள், உலகில் உள்ள பலவற்றையும் பார்த்து இது அதிசயம்.. அது அதிசயம் என்று வியப்படைகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அதிசயமானதும், வியப்பானதுமான விஷயம் ஒன்று இருக்கிறது. அது யாதெனில், தன் கண்ணெதிரில் ஏராளமானவர்கள் மடிந்து போவதைக் கண்டும், தான் மட்டும் நெடுங்காலம் இருக்கப்போவதாக மனம் எண்ணுகிறதே. அதுதான் மிகப்பெரிய அதிசயம் என்கிறது ஜென் தத்துவம்.

நம்மில் ஒருவன்

நம் காலத்தின் நெருக்கடிகளில் ஒன்று. நல்லவனாக இருப்பது யார் நல்லவர், யார் கெட்டவர்? எனப் பகுத்தறிவு எளிதாக இல்லை. 'நல்லவன்' என்ற சொல்லை இன்று பயன்படும் பொருளில் முந்தைய தலைமுறையினர் பயன்படுத்தவில்லை. நாம் இன்று பயன்படுத்தும் நிறைய சொற்கள், கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட அர்த்தத்தில் இருந்து வெகுவாக மாறியுள்ளன.

'நல்லவன்' என்ற சொல்லே இன்று கேலிக்குரியதாகிவிட்டது. திரையில் எல்லா கதாநாயகர்களும் கெட்டவர்களாக நடிக்கவே ஆசைப்படுகிறார்கள். பொது வாழ்க்கையிலோ குற்றவாளிகள், மோசடிப் பேர்வழிகள், கெடுசெயல் செய்தவர்கள் சகல வசதிகளுடன் வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள், அதிகாரத்தை ருசிக்கிறார்கள். நல்லவர்களோ நிழல்களைப்போல அடையாளமே இல்லாமல் ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கெட்டவர்கள் வேறு கிரகத்தில் இருந்து பூமிக்கு வந்து போகிறவர்கள் இல்லை. நம்மில் ஒருவரே கெட்டவர். எவர் முகமும் அந்த உருவத்துக்குப் பொருந்தக்கூடியதே.

நல்லவை குறித்து பேசுவதும், விவாதிப்பதும், கற்றுத் தருவதுமே பண்பாட்டின் ஆதாரச் செயல்கள். வீடும், ஊரும், சமூகமும் நன்மையின் விளைநிலங்களாகக் கருதப்பட்டன. இன்று, நிலைமை மாறிவிட்டது. எனக்கு எது நல்லதோ, அதுவே போதும் என்ற நிலை உருவாகியுள்ளது.

சுயநலம், பொதுநலம் என்ற இரண்டு வார்த்தைகளை நாம் முறையாக அறிந்திருக்கிறாமோ என சந்தேகமாகவே உள்ளது. உண்மையில், சுயநலம் என்பது விரிந்துகொண்டே போகிறது. பொதுநலம் என்பது சுருங்கிக்கொண்டே வருகிறது.

காலம் காலமாக நற்செயல்களே நல்லவனின் அடையாளமாகக் கருதப்பட்டன. ஆனால், இன்று கல்வி உதவிகள் தருவது, அன்னதானம் செய்வது, புனிதப் பயணங்களுக்கு உதவுவது, இலவச மருத்துவ வசதிகள் செய்து தருவது போன்றவற்றில் ஈடுபடுகிறவர்களில் பாதிக்கு மேல் கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள். தவறான வழிகளில் பொருள் ஈட்டியவர்கள். அவர்களின் செயல்கள் நன்மை தருவதால் அவர்களே நல்லவர்களாக அறியப்படுகிறார்கள். உலகை ஏமாற்றுவது எவ்வளவு எளிதாக இருக்கிறது பாருங்கள் !

தீமையின் வசீகரம் எப்போதுமே ஈர்ப்புடையது என்பார்கள். எந்த ஒரு குற்றச்செயலைப் பற்றி வாசித்தாலும், கேள்விப்பட்டாலும் மனது உடனடியாக அதில் நாமும் ஈடுபட்டிருக்கலாமோ என ரகசியமாக யோசிக்கவே செய்யும். கடவுள் என்ற ஒருவர் இல்லாமல் போயிருந்தால் எல்லாக் குற்றங்களும் அனுமதிக்கப்பட்டிருக்கும் என்ற தஸ்தாயெவ்ஸ்கியின் வரியே நினைவுக்கு வருகிறது.

நல்லது எது, தீயது எது? என்பதை பண்பாடே தீர்மானிக்கிறது. மதமும், சட்டமும் அதை வரையறை செய்யவும், நெறிப்படுத்தவும் முயற்சிக்கின்றன. சாமானிய மனிதன் நல்லது செய்வதை

மாபெரும் விஷயமாகக் கருதுவதில்லை. தன் உடல், மனம், செயல்களால் எந்த ஒருவருக்கும் தீங்கு இழைக்காமல் இருந்தால்போதும், அதுவே நல்லவனின் அடையாளம் என நினைக்கிறார்கள்.

சாமானிய மக்கள் தங்களால் முடிந்த நன்மைகளை உலகுக்குச் செய்யவே முயற்சிக்கிறார்கள். அதை வெளிச்சமிட்டுக் காட்டிக்கொள்வதில்லை, அவ்வளவுதான்.

சமுதாய வரலாறு

சமுதாய வரலாறு, தொடங்கி, குடும்ப வரலாறு வரை எல்லாமே காண பரம்பரையாகத் தொடர்வதுதான். இந்த வாய் வழி மரபில் பேச்சு மூலமாகவே ஒரு தலைமுறையிடமிருந்து இன்னொரு தலைமுறைக்கு எல்லாச் செய்திகளும் கடத்தப்படுகின்றன.

ஆக, இங்கே ஒரு பெரியவர் பேச யாருமற்றவராக ஆகும்போது, அவருடன் அவர் காலத்துச் செய்திகள் மட்டும் முடிந்து போவதில்லை. கூடவே தலைமுறை தலைமுறையாகக் கடந்து வந்து அவரிடத்தில் நிரம்பியிருக்கும் செய்திகள் யாவும் மடிந்து விடுகின்றன.

சிலர் அதை அப்படி விட்டுவிடுவதாக இல்லை. எப்படியாவது தங்களுக்குள் இருக்கும் விஷயங்களைக் கடத்திவிடத் துடிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் சமூகத்திற்கு நற்செயல் புரிந்து தங்களுக்கும், தன் சார்ந்த சமுதாயத்திற்கும் கடவுளின் அருள்கிட்ட முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளை அவர்களிடம் பேசவைப்போம் நாட்டின் நலன் கருதியேனும்.!

சோழர்களது செப்பேடுகள் - 18

கல்வெட்டுக்களைக் காட்டிலும் செப்பேடுகள் மன்னர் வழித்தோன்றல்களை வரிசையாக குறிப்பிடுவதுடன், அவர்கள் புரிந்த செயற்களும் செயல்களையும் குறிப்பிடுகின்றனர்.

சோழர்களின் வரலாற்றுக்கு செப்பேடுகளே சிறந்த ஆவணங்களாக, ஆதாரங்களாக உள்ளன.

1. உதயேந்திரம் செப்பேடு
2. வேலஞ்சேரிச் செப்பேடு
3. அன்பில் செப்பேடு
4. திருச்செங்கோடு பட்டயம்-1
5. திருச்செங்கோடு பட்டயம்-2
6. பள்ளங்கோயில் செப்பேடு
7. சென்னை அருங்காட்சியகச் செப்பேடு

8. பெரிய லெய்டன் செப்பேடு

ஐரோப்பிய கண்டத்தில் ஹலெந்து நாட்டில் உள்ள லெய்டன் நகர் அருங்காட்சியகத்தில் உள்ளது.

9. திருவாலங்காடு செப்பேடு

10. கரந்தைச் செப்பேடு

11. திருக்களர் செப்பேடு-1

12. திருக்களர் செப்பேடு-2

13. சிறிய லெய்டன் செப்பேடு

14. திருக்களர் செப்பேடு-3

15. திருக்களர் செப்பேடு-4

16. திருக்களர் செப்பேடு-5

17. சராலா செப்பேடு

18. எசாலம் செப்பேடு

செப்பேடுகள் கிடைத்த இடங்களை வைத்தோ, இப்போது இருக்கும் இடங்களை வைத்தோ செப்பேடுகள் அழைக்கப்படுகின்றன.

காவிரி நீரைத் தேக்கிய மைசூர் மன்னனின் அணையைத் தகர்த்தெறிந்த இராஜராஜ சோழன் !

உலகின் பல்வேறு நாடுகளில் உற்பத்தியாகி, உற்பத்தியாகும் அந்ததந்த நாடுகளை விட்டே அருகில் உள்ள நாடுகளின் வழியாகப் பாய்ந்தோடும் நதிகளின் நீர் பங்கீடு தொடர்பாக ஏதும் பிரச்சனைகளோ, வழக்குகளோ எழுந்ததாகத் தெரியவில்லை.

உதாரணமாக: புகழ்பெற்ற "நைல்" நதி எகிப்தில் உற்பத்தியாகி, சூடான், எத்தியோப்பியா, டான்சானியா, புருண்டி, உகாண்டா, கென்யா ஆகிய இந்த 6 நாடுகளின் வழியாக அமைதியாகப் பயணம் செய்து கடலில் போய் கலக்கின்றது.

அதைப் போன்றே "மேகாங்" என்ற நதி சீனாவின் ஒரு பகுதியில் உற்பத்தியாகி, சீனா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, வியட்நாம் ஆகிய இந்த 5 நாடுகளின் வழியே பயணம் செய்து கடலுக்கு போய்ச் சேருகிறது.

இந்த இரண்டு நதிகளின் நெடும்பயணத்தில் குறுக்கிடும் 11 நாடுகளையும் வளப்படுத்திக் கொண்டு அந்த மக்களுக்கும் வாழ்வளித்துச் செல்வதைப் பார்க்கலாம்.

ஆனால், இன்று ஒரே பாரதம், ஒரு தாய் மக்கள், ஒரே கொள்கை என்று போலித்தனமாக முழங்கிக் கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டின் நடுவே கர்னாடகக் குடகுப்பகுதியில் உற்பத்தியாகி தமிழ் நாட்டின் சோழ மண்டலம் நோக்கி ஓடிவந்து, உழவுத் தொழிலை செழிக்க வைக்கும் காவிரியை வழிமறித்து பல அணைகளைக் கட்டித் தடுத்துக் கொண்டு தமிழ்நாட்டின் விவசாய நிலங்களைப் பாலைவனமாக்கும் கர்நாடக மாநில அரசின் குறுகிய - சுயநலம் கொண்ட அற்பமனப் பான்மையை என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் வாங்கிய அந்த நாளில், எல்லாவற்றையும் பங்கிட்டுத் தந்தவர்கள், இராணுவம், இரயில்வே, பாதுகாப்பு, தபால்தந்தி, வரிவசூல் போன்ற அமைப்புகளை மத்திய அரசின் சொத்தென்று வைத்துக்கொண்டவர்கள் ஏன் இந்தியாவில் ஓடும் எல்லா நதிகளையும் மத்திய அரசின் பொதுச்சொத்தாக வைத்துக்கொள்ளத் தவறினார்கள் என்று தெரியவில்லை.

பிற்காலத்தில் மாநிலத்திற்கு மாநிலம் சண்டையிட்டு அடித்துப் பிடித்துக் கொண்டு சீரழியட்டுமென்று (பரந்த) மனநிலையிலா என்றும் புரிந்து கொள்ளமுடியவில்லை. இப்பொழுது கூட (வங்கிகளைத் தேசிய மயமாக்கியதுபோல்) நதிகளை எல்லாம் தேசியமயமாக்கி மாநிலங்களுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளை இல்லாமற் செய்யலாமல்லவா! செய்வார்களா? மக்களின் வாக்குகளுக்காக அவர்களின் தலையில் மிளகாய் அரைப்பதே அரசியலாக நடந்துவருவதில் மாற்றம் எப்படி வரும்? காவிரியின் நீர்வளத்தை சோழ மண்டலத்திற்கு பங்கிட்டுத் தந்து பாசன வசதியைப் பெருக்குவதற்காகவே கரிகாலன் கல்லணையைக் கட்டிவைத்தான் என்று வரலாறு பெருமைபட்டு நிற்கிறது.

இராஜராஜசோழன் ஆட்சிகாலமான 11வது நூற்றாண்டில் செய்து கொண்ட நதிநீர் ஒப்பந்தத்தை மீறிய மைசூர் மன்னன் காவிரியின் குறுக்கே அணைகட்டியதை அறிந்த இராஜராஜசோழன் தமது படையுடன் மைசூர் சென்று அணையைத் தகர்த்தெறிந்ததாக வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

இப்பொழுது உச்சநீதி மன்றம் ஒன்றுதான் விவகாரங்களுக்கான நீதியை வழங்கி மக்களுக்கு ஆறுதலாக இருந்து வருகிறது. கர்நாடகா அந்த நீதியையும் உத்தரவையும் மதிக்காது பம்மாத்து காட்டி வருகிறது. மேலும் தமிழ்நாட்டில் உள்ள ஆட்சிக்குப் பொருந்தாத பொறுப்பற்ற ஆட்சியாளர்களே கர்நாடகத்தில் ஆட்சிக்கு வருகின்றனர். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” தத்துவம் திராவிடனுக்கு உதவாதுபோல் தெரிகிறது.

தஞ்சைப்பெரிய கோயில்

ஆயிரம் ஆண்டுகளைத் தாண்டிநிற்கும்
பேரழகுப் பெட்டகமாம் பெரிய கோயில்

1. "மன்புகழ் பெருமை நுங்கள்"
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்
உயர்குணத் துயர்ந்த மனிதாய்!"
என்பதை கம்பன் அன்று
இராமனை நோக்கிச் சொன்னான்
மன்பதை இன்று நோக்கும்
மாமன்னன் இராச ராசன்!

2. தஞ்சையில் பெரிய கோயில்
தலைநிமிர்ந் தெழுந்து மேலோர்
நெஞ்சினை அள்ளு தென்றே
நெகிழ்கிறார் உலகின் மக்கள்
கொஞ்சிடும் அழகும் காணக்
குலுங்கிடும் சிற்பச் சான்றும்
விஞ்சிடும் திறனால் பாரில்
வேறேதும் இதுபோல் உண்டோ?

3. நூலிழை பிசகி டாமல்
    நுண்ணிய நுழைபு லத்தின்
ஆலிலை நரம்பு கள்போல்
    அளவுகள் முரண்ப டாமல்
காலினும் தலைவ ரைக்கும்
    கற்றளிக் கலைகள் கொஞ்சக்
கோலிட்டு வரைந்த தைப்போல்
    கோபுரத் தோற்றம் கண்டோம்!

4. எப்படிக் கட்டி னாரென்
    றெவருக்கும் புரிய வில்லை:
அப்படிப் புரிந்த போதும்
    ஆய்வினில் விளங்க வில்லை:
"குப்பனும் குடிசை கட்டும்
    சுப்பனும் சேர்ந்தே" இந்த
அற்புத வியப்பில் நம்மை
    ஆழ்த்தியே சென்றுள் ளார்கள்!

5. மணலிலே கோடு போட்டு
வரைபடம் தீட்டி னாரா?
தணலிலே இரும்பைக் காய்ச்சித்
தட்டியே நீட்டி னாரா?
உணவுக்கும் உழைத்தோ ருக்கும்
ஊக்கத்தைப் பங்கிட் டாரா?
கணமேனும் எண்ணிப் பார்த்தால்
கற்பனை ஓட வில்லை!

6. மின்விளக் கில்லா நாளில்
தீப்பந்தம் ஏந்திக் கொண்டே
உன்னதக் கலையின் தேரை
உயிர்தந்து நிறுத்தி னாரா?
பொன்னெனும் பணிவி ளங்கப்
புத்தகம் தேடி னாரா?
என்னதான் விந்தை என்றே
இதுவரை தெரிய வில்லை!

7. பொறியியல் பட்டம் பெற்று
புதுமையில் மூழ்கி னாரா?
அறிவியல் தெளிவு பெற்றே
அணுக்களை ஊதி னாரா?
சிறியதோர் சுவடி ஏட்டில்
சிந்தித்துன் கிறுக்கி னாரா?
குறிப்புகள் நினைவில் நிற்க
குடங்களில் அடுக்கி னாரா?

8. எழுதவும் படிப்ப தற்கும்
இயலாத வகையில் வாழ்ந்த
பழுதான பழமைக் காலம்:
பழுதில்லா மனித நேயம்
செழுமையில் வளமாய் ஓங்கி
செழித்ததன் விளைவால் வாழும்
விழுமியோர் போற்றிப் பாடும்
விந்தையைப் படைத்து வைத்தான்!

9. கட்டிடம் கட்டு வோரின்

கலைநயக் கலவை எல்லாம்

கட்டிய பத்தாண் டிற்குள்

தெரிந்திடும்; ஆனால் அன்று

கட்டினான் இராச ராசன்

கடல்கொள்ள வந்த போதும்

கட்டிடம் மலைபோல் நிற்கக்

கடல்நீரே திகைத்துப் போகும்!

10. ஆண்டுகளோ ராயி ரத்தை

அடக்கமாய் அமைதி யாகத்

தாண்டியே நிலையாய் நின்று

தமிழனின் ஆற்றல் தன்னை

வேண்டிய மட்டும் உலகில்

விளம்பிடும் பெரிய கோயில்!

ஆண்டவன் அறிவின் ஊற்றில்

அடையாளம் தெரிய வைத்தான்!

11. அணிதேர்கள் புரவி என்றான்

    ஆட்பெரும் படையைக் கொண்டான்

தணியாத மண்ணின் தாகம்

    நாடுகள் பலவும் வென்றான்

மணியான அவனின் ஆட்சி

    வாழ்கின்ற மரபே சாட்சி

பணிவேதும் காணா வேந்தன்

    பார்போற்றும் இராச ராசன்

12. சாதனை செய்த மன்னன்

    வாழ்க்கையின் இறுதி நாளில்

ஏதேனும் பின்னோர் பார்க்க

    எழுதிவைத் திருப்பா னென்று

சோதனை செய்தும் காலச்

    சுவடுகள் தெரிய வில்லை

மேதகு அவனின் வீர

    வரலாறு மீளக் காண்போம்.

பேரரசன் இராசராசசோழனின் ஆயிரமாவது (1000 ஆண்டு) நிறைவு விழாவின்போது தஞ்சையில், தமிழக அரசின் அகவை முதிர்ந்த தமிழறிஞர் - முத்தமிழ்க்கவிக்கோ

கவிஞர் **கோ.வேணுகோபாலன்** அவர்களால் இயற்றி வெளியிடப்பட்டது.

ரெப்கோ வங்கியின் முன்னாள் இயக்குனர் தென்னம நாடு கிராமம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை வழி தஞ்சை மாவட்டம்

1. சதய நாயகன் - இராசராசன் !

பொன்னின் வண்ணமும் தேனின் கன்னமும்
புலியின் நேர்நிலை விழிகளும்
மின்னும் மேனியும் மென்மை உள்ளமும்
மேதை என்பதன் பார்வையும்
என்ன மாதவம் செய்து வந்ததோ
இலக்கு சோழரின் வழிவழி
மன்னர் மன்னனாம் இராச ராசனும்
மண்ணில் தோன்றிய சதயநாள் !

பொருகடல் நுழையும் பொன்னி மார்பினில்
புரளும் ஆரமும் தரளமும்
திருவெனும் தொடரில் பெரும் ஊர்களும்
தெருவெலாம் வாழ்வின் சீர்மையும்
கருவில் வீரமும் செயலில் வேகமும்
கலையும் செல்வமும் கல்வியும்
மருவிலா அன்பில் ஆழ்ந்த மக்களின்
மனத்தில் வேர்விடும் மாண்புகள் !

கங்கப் பாடியும் குடகும் வேங்கியும்
　　கலிங்கும் ஈழும் கடாரமும்
தெங்கின் சோலைசூழ் கொல்லம் மாலமும்
　　தெற்கில் காந்தளூர் சாலையும்
பொங்கு கங்கரின் நுளம்பப் பாடியம்
　　பழமெனும் முந்நீர் தீவையும்
வெங்களம் தனில் வீழ்த்தி வென்றவன்
　　வீரன் மன்புகழ் சோழனே !

தஞ்சைப் பூமியில் வானைத் தொட்டிடத்
　　தரணி போற்றிடும் சின்னமாம்
நெஞ்சை அள்ளிடும் பெரிய கோயிலும்
　　நந்தியும் அவனின் எண்ணமாம்
பஞ்ச மென்பதோ பசியில் நின்றதோ
　　பார்த்த தில்லையாம் அந்தநாள்
அஞ்ச லென்றசொல் எங்கும் கேட்டதாம்
　　ஆட்சி தந்தவன் காட்சியில் !

உ. காவிரி மைந்தன் - வேங்கடசாமி நாட்டார்

கரைபுரளும் காவிரியின்
    பேரழகும் எழில்கூட்டும்
கவினார் சோலை
    நிரைபொருளாய்த் தென்னைகளும்
வாழைகளும் அசைந்தாட
    நெகிழும் பச்சைத்
திரைவிழுந்து மூடினற்போல்
    வயல்வெளியும் உழவர்களும்
தென்றல் பாட்டும்
    நரைவிழுந்த கொக்குகளும்
குருவிகளும் சிறகடிக்கும்
    நாட்டார் பூமி !

சிலம்புதரும் சிந்தனைகள்;
    திருக்குறளின் தெளிவுரைகள்
செறிவைக் காட்டும்
    கலம்பகத்தின் புதைபொருள்கள்
அரியபுற நானூற்றில்
    கனிந்து நின்றே
நலம்புரியம் இலக்கியங்கள்
    தொல்மரபின் காவியங்கள்
நாட்டார் நெஞ்சில்

மலர்ந்துமணம் வீசியதை
நுகர்ந்தாளே தமிழன்னை
மகிழ்ச்சி பொங்க !

மொழியறிவும் தமிழுணர்வும்
பரவிடவே மேன்மக்கள்
முனையா நாளில்
வழியறிந்து செம்மொழியன்
வாழ்வறிந்து காலத்தின்
வாய்ப்பை வைத்தே
அழியாத எழுத்தெனவே
பொன்னேட்டில் வரைந்திட்ட
அய்யா நாட்டார்
வழிநிற்போம்; எதிர்காலச்
சரித்திரத்தின் சுவடுகளில்
வாழ்வைக் காண்போம் !

3. வாழ்கின்றான் இராசராசன்!

செஞ்சுடர் தரையில் வீழாச்
சிறப்பினை உலகம் நோக்க
நெஞ்சினை அள்ளிக் கொண்டே
நிற்கின்ற பெரிய கோயில்
கொஞ்சிடும் செயலால் சோழர்
குலமக்கள் பெருமை காண

விஞ்சியே நிலைத்து நின்று
வாழ்கின்றான் இராச ராசன் !

வடக்கிலோர் இமயம் என்பார்
மனிதர்கள் படைத்த தல்ல !
கிடக்குமோர் தெற்கில் தஞ்சைப்
பெருங்கோயில் என்னும் அந்த
வடக்குவாழ் இமயம் போன்றே
படைத்தவன் இராச ராசன் !
நடக்குமோ இதுபோல் என்றே
உலகினர் திகைத்துப் போக !

கணையாழி முத்தொ துங்கும்
காவிரிக் கரைகள் தோறும்
அணையாத விளக்கில் ஒளிரும்
ஆலயம் அனைத்தின் உள்ளும்
இணையேது மில்லாப் பண்டை
இயலிசை கூத்தில் பாட்டில்
துணையாக நின்றே நம்மைத்
தொடர்கின்றான் இராச ராசன் !

மண்வெட்டிப் புரட்டும்போது
கிடைக்கின்றக் கல்வெட் டெல்லாம்
கண்வைத்து உணரும் வேளை
சோழர்தம் கல்வெட் டென்றே

பண்கொண்ட சான்றோர் மெச்சும்

படிமங்கள் பணிகள் ஆகா !

விண்கொண்ட புகழை வாரித்

தந்தவன் இராச ராசன் !

காலங்கள் கடந்து போகும்

மனிதர்கள் மறைந்து போவார்

காலத்தின் ஆட்சி கண்ட

சுவடுகள் நிலைத்து நிற்கும்

ஞாலமும் புகழும் ஒன்றி

நியதிகள் வழியே செல்லும்

மூலமென்றறிதற் கெல்லாம்

மூத்தவன் இராச ராசன் !

4. வறண்ட காவிரி !

மார்கழி நகர்ந்திடத் தைமகள் வருகையும்

மனமகிழ் பொங்கலும் மணந்திட

ஏர்வழி நின்றவர் அறுவடை நடந்திடும்

இடங்களைத் தரிசெனக் காண்கிறார்

நீர்வழி காய்ந்ததும் ஆறுகள் வறண்டதும்

நெஞ்சினைப் பிழிந்திடும் நிலையிலே

யார்வழி இப்படி ஆனது முடிவினில்

இயற்கையின் வழியிது என்பதா?

அலைகடல் சூழ்நில மாகிய தமிழகம்
ஆண்டுகள் கோடியைத் தாண்டியே
நிலைபெறும் மழைவளம் நீர்வளம் எனுமெழில்
நிறைவளம் சூழ்ந்திடும் நினைவிலே
தலைமுறை தலைமுறை தொடர்ந்திடும் உழவியல்
தரணியின் நியதியில் புகழ்பெற
அலைகடல் இருந்திட வான்முகில் வாழ்ந்திட
மழைவளம் போனது எவ்விடம்?

கங்கை மகாநதி இருபெரும் நதிகளை
காவிரி நதியுடன் இணைத்திடும்
பங்கினைச் செய்திட அரசியல் மாண்புகள்
பாங்குடன் செயல்படத் தூண்டுவோம்
செங்கதிர் ஆடிடும் தஞ்சையின் களஞ்சியம்
செழித்திடப் பசுமையில் திளைத்திடப்
பொங்கலின் பெருமையைப் பேசுவோம்; உழவர்தம்
வன்துயர் விலகிட வாழ்த்துவோம் !

5. ஆயிரம் ஆண்டுகளின் நினைவில் இராசேந்திர சோழன் !

பனிநிலவுக் குடையின்கீழ் பாராண்ட
    மன்னர்தம் படைவாழ் நாட்டில்
தனியொருவன் எனஉலகில் தலைநிமிர்ந்த
    மாமன்னன் இராச ராசன் !
இனியொருவன் அவனைப்போல் வையத்துள்
    நாமெல்லாம் எங்கு காண்போம்?
நனிமிகுந்த அவன்வழியின் திருமகனாய்
    வாழ்ந்தரா சேந்திர சோழன் !
சிங்களத்தை ஜாவாவை சுமத்திராவை
    கலிங்கத்தை செறிவாய் நின்ற
வங்கமதைக் கடந்துபல காதங்கள்
    பன்னாட்டை வளைத்துப் போட்டே
சிங்கமென நின்றவனாம் வரலாற்றின்
    ஏடுகளில் செம்மை சார்ந்த
தங்கமெனப் பெரும்புகழைத் தாங்கிநின்ற
    தமிழ்மன்னன் நமதுரா சேந்திரன் !
தென்னிலங்கை அரசர்தம் முடிகளையும்
    அவரவரின் தேவி யர்பால்
மின்னியபொன் முடிகளையும் படைநடத்தி
    வெற்றியுடன் மிளாப் போரில்
தென்னவர்கள் விட்டுவந்த "சுந்தர" மாம்

திருமுடியை இந்திரன் ஆரம்
முன்னவரின் சொத்தெனவே மீட்டுவந்த
"மும்முடி"ரா சேந்திர சோழன் !
வான்தழுவும் நிலையினிலே வளநாட்டின்
பேர்பெரிய கோயி லைப்போல்
தான்ஒருநற் கோயிலையும் எழுப்பித்தான்
கங்கைகொண்ட சோழ மண்ணில்
மேன்மைமிகு அக்கோயில் எழில்வடிவம்
உலகத்தார் வியந்து போற்ற
தேன்சிந்தும் தமிழன்னை பெற்றமகன்
அவன்பெயரும் புகழும் வாழ்க !

மேலே உள்ள அனைத்து பாடல்களும் இயற்றி வெளியிட்டவர்

கவிஞர் **கோ.வேணுகோபாலன்** மாதுரார்

(தமிழக அரசின் அகவை முதிர்ந்த தமிழறிஞராகத் தேர்வு பெற்றவர்)

முன்னாள் இயக்குனர் : ரெப்கோ வங்கி

உறுப்பினர் : அகில இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் தேசிய கவுன்சில்

தென்னம நாடு கிராமம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை வழி தஞ்சை மாவட்டம்

சுதந்திரப்போராட்டங்களில் சோழமண்டலத்தவர் பங்கு?

(கவிஞர் கோ. மோகனரங்கன், நேதாஜி INA-யில் பணி உறுப்பினர்)

தமிழகத்தின் புதுக்கோட்டை அரசைத் தவிர மற்ற இந்திய அரசுகளை அடிமைப்படுத்திய வெள்ளையர்களை எதிர்த்து விடுதலை பெற்ற சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்த பூலித்தேவன், மருது பாண்டியர், வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன் சின்னமலை, அழகுமுத்துக்கோன், சுந்தரலிங்கம் மற்றும் பெரியகுடி முத்தையர் போன்ற இவர்களை மரபின் வழித் தொடர்புபட்ட சிறைபிடித்து வன்முறையின் வாடை தூக்கு மேடையில் தொங்கி தங்கள் இன்னுயிர்களை இழந்து விட்டு பல்வேறு மக்களின் அனைவருக்கும் இங்கும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்ற சிறப்பினைத் தாங்கி தேசிய தலைவர்களின் இடம் பெற்று தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்ப்பதும் போன்ற வாய்ப்புகள் ஆண்டையார் மன்னர் வம்சத்தை சேர்ந்தவர்கள் உள்ளடங்கிய சோழமண்டலத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்காமல் போனதோடு, வரலாற்று ஏடுகளில் இடம்பெறாமல் போனது ஒரு துயரமான நிகழ்வென்றே நினைத்து வேதனைப்பட வேண்டியுள்ளது. மேலும், இன்றுவரையிலும் விடுதலைக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் நினைவு நாட்களில் சோழமண்டலத்தவர் இடம்பெறுவதில்லையே என்றும் சிந்திக்கப்பட வேண்டிய நிலையை நினைந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

சோழமன்னர்களின் ஆட்சி முற்றுப் பெற்றபின் அந்த நூற்றாண்டு இடங்களின் ஆங்கிலேயர்களுக்குப் பின் வந்த பாரதியார் காலம் சோழமண்டலத்தவர்களின் சுதந்திரப் போராட்ட ஈடுபாட்டை தியாக உணர்வுகளை வெளிக்கொணர்ந்து தட்டிப்பறித்த நிகழ்ச்சிகள் என்று சொல்லலாம். சோழமன்னர்களின் பரம்பரை ஆட்சியின் தொடர்ந்து வந்திருந்திருக்கவேயானால், இந்தியப் படையெடுப்பும் சுதந்திரப் போராட்டமும் சோழர்களே பெரும்படை கொண்டு தாக்குதல் நடத்தி வெள்ளையர்கள் சோழமண்டலத்திற்குள் நுழைந்ததையே விரட்டி அடித்திருப்பார்கள். மன்னர்களின் வைத்தியர்களாக அந்த மாத்தியர்கள் தமிழர்களின் வீரவரலாற்றின் மேன்மை பெருமைச் செல்வமும் போலித்தனமான ஆட்சியைக் காப்பாற்றிக் கொண்டதும் ஆட்சி செய்யும் நிலையின் வெள்ளையர்களிடம் மண்டியிட்டு மண்டியிட்டு அடிபணிந்து கொண்டு சுதந்திரப் போராட்டங்களின் சோழமண்டலத்தவர் பங்களிப்பை இல்லாமல் செய்து விட்டார்கள். இருந்தும் பிற்கால வரலாற்றின் பெருமையாகச் சேர்ந்து வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடிய சோழமண்டலத்தைச் சேர்ந்த இந்திய வீரர்கள். இரண்டாம் உலகப்போரில் சிங்கப்பூரில் ஜப்பானியரிடம் சரணடைந்து அப்படியே நேதாஜியின் INA இந்திய வீரர்களாக மாறி வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்டு வீர வீரமரணமடைந்ததை நினைத்து நாம் சற்று ஆறுதலடையலாம்.

தமிழ் புகழ்

இமயத்தில் நாட்டிய புலிக்கொடியின்
வீர வாசனை வீசுது இன்றும்
வந்தியத் தேவரின் வாள்வீச்சிலும்,
குந்தவையின் சொல் வீச்சிலும்,
சுழன்ற சோழத் தமிழ்நாடு
ராஜராஜன் ராஜேந்திரன் சமூக
வழியில் சாதனைகள் தொடரும்
பாற்கடலில் கடைந்தெடுத்த அமுதம் போலக்
கங்கையைக் கடைந்து கையிலேந்திக்
கலந்த சோழ கங்கம்
பிரகதீஸ்வரமும் கங்கை கொண்ட சோழேச்வரமும்
பக்திப் பறைசாற்றும் பீடங்கள்

- கவிஞர் டி.கவிதா

புகழ் கொண்டான்

சோழர் மரபில் பிறந்த
    சோழன் இராஜேந்திரன்
வெற்றி என்னும் வில்லேந்தி
    வீர அம்பு எய்து
கங்கை கொண்டான் என்று விளங்கினான்
    கங்கையில் போர் புரிந்து
சோழர் மரபில் பிறந்த
    கூறமுடியாத குலோத்துங்கனின் பெருமையைக்

கவிக்குயிலாக மாறிக்
        கவித்தமிழில் பாடுகிறேன்
கண்ணியத்தில் இடம்பெறப் பாடுகிறேன்
        சுங்கவரி நீக்கிப்
சுங்கம் தவிர்த்தவனாக விளங்கித்
        திருநீற்றுச் சோழன் என்று
தெவிட்டாத பட்டம் பெற்றுப்
        பெருமானடிகள் என்று

பெருமைக்கு உரியவனாகித்
        தரணி போற்றி வாழ்ந்து
பரணியில் புகழ் பெற்றான்
        ஈழத்தோடு உறவு கெண்டு
ஈழம் கெண்டான் என்று
        இலங்கையில் வெற்றி கண்டான்
இன்று எல்லோர் மனத்திலும்
        அவன் நிலைத்த புகழ் கொண்டான் !

- கவியரசி ச.ஜெயா

கங்கைகொண்ட சோழன் !

வண்ணமிகு தமிழகத்தை மேன்மை யோடு
மன்னர்கள் பலராண்டார்; பெருமை சேர்த்தார் !
விண்தவழும் நிலவாக மன்ன ருள்ளே
வெற்றிமிகு இராசேந்திர சோழன் வாழ்ந்தான் !
எண்ணரிய திறன்கொண்ட சிங்க மாக
இம்மண்ணில் உலவிட்டான்; ஏற்ற மோடு
மண்வியக்கும் வெற்றிகளைக் குவித்த அன்னான்
வரலாற்றில் மாமன்னன் ஆனான் ! உண்மை !

தங்குபுகழ் இராசராசன் மகனாய் ஆன
சீரோங்கும் இராசேந்திர சோழன் அன்று
கங்கைவரை வென்றிட்டான்; ஈழம் வென்றான் !
கடல்மீது படையெடுத்துக் கடாரம் வென்றான் !
கங்கைதனை வென்றதனால் புவனம் போற்ற
கங்கை கொண்ட சோழனெனும் சிறப்பைப் பெற்றான் !
கங்கைகொண்ட சோழபுரம் நகரைக் கண்டு
கவின்மிக்க தலைநகராய் ஆக்கிக் கொண்டான்!

கங்கைநீர் தனைக்கலந்து சோழ கங்கம்
கண்டிட்டே நீர்வளத்தைப் போற்றிக் காத்தான் !
கங்கைகொண்ட சோழபுரம் நகரந் தன்னில்
காலத்தை வென்றுநிற்கும் கோவில் கண்டான் !
சங்கத்தமிழ் தனைப்போற்றி வளர்த்த அன்னான்
சரித்திரத்தில் தனியிடத்தைப் பெற்றான்! மெய்யாம்
இங்கவனை முழுமையாகப் புகழ்ந்து பாட
எழுத்தில்லை ! சொல்லில்லை ! ஏடும் இல்லை !

- கவிஞர் நெடுமாறன்

ஸ்ரீ மாயாவுதார சுவாமி துணை

ஸ்ரீ நாட்டார்மூர்த்தி அய்யனார் துணை

ஸ்ரீ முத்துப்பிடாரி அம்மன் துணை

KSV CONTRACTING GROUP

(SINCE - 2006)

OUR COMPANIES

- ☞ K S V Carpentry & Flooring Contracting LLC
- ☞ Y S R Carpentry & Flooring Contracting LLC
- ☞ M A Y A Carpentry & Flooring Contracting LLC
- ☞ MADURAI Carpentry & Flooring Contracting LLC
- ☞ NASSER SALEH Building Contracting LL C
- ☞ A V R Carpentry & Flooring Contracting LLC
- ☞ V M R Carpentry & Flooring Contracting LLC
- ☞ TOP QUALITY Carpentry & Flooring Contracting LLC
- ☞ V V P Carpentry & Flooring Contracting LLC
- ☞ ALI EBRAHIM Carpentry & Flooring Contracting LLC
- ☞ ALI EBRAHIM ALI Carpentry & Flooring Contracting LLC
- ☞ ALI EBRHAIM ALSHEHHI Carpentry & Flooring Contracting LLC

Head Office Address:

312, 3rd Floor, Alnabooda Building, Opp Belhasa Driving Centre,
Al Quoz Industrial No.4, Dubai, UAE,
Tel No: +971 04 43383511, Email: info@ksvgroup.net, nsbcllc@gmail.com,
Web: www.ksvgroup.net
Mobile No: + 971 55 6834335, +971 55 3186791,
+ 971 55 9523684, +971 52 8379503

ஸ்ரீ மந்தைகருப்பண சுவாமி துணை ஸ்ரீ காளமேகபெருமாள் துணை ஸ்ரீ ராக்காயி அம்மன் துணை

SSEE

SAKTHI STEELS & ERECTION ENGINEERING

HENDRY STEEL PIPES - MADURAI

Uranganpatty, Melur Taluk, Madurai Dist.

Prop : K.KANDASAMY BE.,

Cell : 98436 39331, 92444 83111



M.S., G.I & C.R. உருண்டை பைப், சதுரம் மற்றும் ரூபிங் ஷீட் கிடைக்கும்

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் துணை ஸ்ரீ வல்லடிகாரசுவாமி துணை ஸ்ரீ கருங்கல்சுவாமி துணை

M.பெருமாள்

98400 64586

வல்லவன் செட்டிநாடு

A/C ரெஸ்டாரண்ட்

132, ஜவஹர்லால் நேரு சாலை, 100 அடி ரோடு,
அரும்பாக்கம், கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில்,
சென்னை - 600 106.

போன் : 044 23634045, 23635827

ஸ்ரீ மந்தைகருப்பண சுவாமி துணை ஸ்ரீ காளமேகபெருமாள் துணை ஸ்ரீ ராக்காயி அம்மன் துணை

சக்தி பைனான்ஸ்

H.O : உறங்கான்பட்டி,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்

Branches :
V.மலம்பட்டி & இடையமேலூர்
சிவகங்கை மாவட்டம்
செல் : 98431 75886

M.காளமேகம் (எ)
திருநாவுக்கரசு அம்பலம்

ஸ்ரீ மாயாவதார சுவாமி துணை

ஸ்ரீ திருவேஸ்வரி அம்மன் துணை

ஸ்ரீ மந்தைகருப்பண சுவாமி துணை

ஸ்ரீ அழகர் பைனான்ஸ்

மெயின்ரோடு, வெள்ளலூர்,

மேலூர் வட்டம்,

மதுரை மாவட்டம்

செல் : 98433 44564

M.ரகுபதி

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் துணை ஸ்ரீ சேவுகப்பெருமாள் அய்யனார் துணை ஸ்ரீ வல்லடிகாரசுவாமி துணை

Proprietor : **P.BALACHANDAR B.Sc.,**

Ph : 04575 - 240778
Cell : 90951 10430, 82703 45007

HARIBALA DRIVING SCHOOL

SIVAGANGAI
10A, Rani Nachiar Complex,
Aranmanai Valagam,
Sivagangai - 630 561
Ph : 04575 240778
Cell : 97159 48516

MANAMADURAI
76, Gunduraya Street,
Manamadurai - 630 606
Sivagangai (Dist)
Ph : 04574 258327
Cell : 97159 48520

KALAYARKOVIL
Madurai-Thondi
Main Road,
Neer Millgate Bus Stop,
kalayarkovil - 630 561
Cell : 97159 48519
Ph : 04575 232430

MELUR
Door No : 1, Melur - Sivagangai Road,
M.Malampatti, (Opp. to RTO Office).
Melur - 625 106, Madurai (Dist)
Cell : 9659905630
Ph : 0452 2416262

Excellent Driving Training thru Santro Car, Maruthi Car, Alto Sumo, Bolero, Tavera, Tata Lorry - By Professional Instructors.

ALL KIND OF RTO WORKS WILL BE UNDER TAKEN

HARI BALA TRUST

V.MALAMPATTI. Cell : 97159 48521 **MADHAGUPATTI. Cell : 97159 48518**

GENERAL INSURANCE AGENT

St. JOHN AMBULANCE
FIRST AID TRAINING CENTRE
SIVAGANGAI DISTRICT CENTRE

Honorary Secretary
B.MANJULA
Cell : 90951 10430
Ph : 04575-240778

70, South Raja Street, Aranmanai Valagam, Sivagangai. E-mail : haribaladrivingschool@gmail.com

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் துணை   ஸ்ரீ சேவுகப்பெருமாள் அய்யனார் துணை   ஸ்ரீ வல்லடிகாரசுவாமி துணை

M.A.ராஜஅம்பலம் BA., DME.,

Cell : 96268 94475

மாஸ்டர் ஆட்டோமோபைல்ஸ்
இன்ஜினியரிங் ஒர்க்ஸ்

We are undertaking all kind if Diesel & Petrol Vehicles
Mechanic, Tinkering, Welding & Spray Painting works

3/35, சிவகங்கை மெயின்ரோடு, கோட்டநத்தம்பட்டி அஞ்சல், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் துணை
ஸ்ரீ மந்தைகருப்பனசுவாமி துணை
DIAMOND FENCE
லெக்ஷ்மி
இண்டஸ்ட்ரீஸ்
லெக்ஷ்மி
இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேசன்
அ.மந்தக்காளை
சிவகங்கை - மேலூர் மெயின் ரோடு, கூட்டுறவுபட்டி. சிவகங்கை மாவட்டம்
எங்களது தயாரிப்புகள் : செயின் லிங்க், முள் கம்பிகள்.
சிறந்த முறையில் கல்கால் ஊன்றி முள்வேலி அமைத்து தரப்படும்.
எம்.மதிவாணன் MBA., 97515 52522, 96557 76499
M.Mathivanan MBA.,
SS Infotech
EPSON PRINTER SERVICE
All Models Specialist
27, 1st Floor, Periyasamy Tower,
Chathiram Bus Stand., Trichy - 620 002.
04314 - 216230, 97515 52522
ssinfo1985@gmail.com

ஸ்ரீ தீர்த்தக்கரை ராக்காயிஅம்மன் துணை

வணிக சேவையில் 39 ஆண்டுகள்

நாலுகோட்டை

இரா.இராமகிருஷ்ணன் D.E.E.E.,

LIC குரோர்பதி முகவர்

D.M. கிளப் மெம்பர்

ஆறூர் வட்டவகை நாடு

நாலுகோட்டை

செல் : 94423 85066

பொன்னான நேரங்களில் ஜொலிக்கட்டும்.....

ஸ்ரீ அபிராமி

ஜுவல்லர்ஸ்

105, சத்தியமூர்த்தி தெரு, சிவகங்கை

கிளை

ஸ்ரீ அபிராமி ஜுவல்லர்ஸ்

மெயின்ரோடு, சாலூர்.

சிந்தனைக்கு விருந்து !! சோம்பலுக்கு மருந்து !!!

ஸ்ரீ நிவாசா காபி ஒர்க்ஸ்

26, சிவன்கோயில் மேற்கு தெரு, சிவகங்கை

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் துணை ஸ்ரீ திருவேஸ்வரி அம்மன் துணை ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமி துணை

VALLABA VIDYALAYA

CBSE SYLLABUS

M.Vallappan B.Com.,
Chairman

Arun Vallappan B.E (Hons.) MBA (Canada)
Correspondent

VALLABA VIDYALAYA (CBSE Syllabus) Affiliated to C.B.S.E board, New Delhi.
Thiruvilanpatti, Alagarkovil Main Road, Arumbanur (P.O), Madurai – 625 104.
Phone : +91 96265 11011, Mobile : +91 96265 55655
Email : info@vallabavidyalaya.in

அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோவில், தஞ்சாவூர் (தஞ்சைப் பெரியகோவில்)

கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோவில், அரியலூர் மாவட்டம்

அருள்மிகு தாராசுரம் திருக்கோவில், கும்பகோணம்

அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோவில், காஞ்சிபுரம்

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில், காஞ்சிபுரம்

கடற்கரை திருக்கோவில், மகாபலிபுரம்,

அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோவில், திருவரங்கம், திருச்சி

அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோவில், திருவானைக்காவல், திருச்சி



அருள்மிகு உச்சிப்பிள்ளையார் கோவில், மலைக்கோட்டை, திருச்சி

அருள்மிகு வெக்காலிஅம்மன் திருக்கோவில், திருச்சி

அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், சமயபுரம், திருச்சி

அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோவில், கும்பகோணம்

அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோவில், மயிலாடுதுறை

அருள்மிகு வைத்தீஸ்வரன் திருக்கோவில், வைத்தீஸ்வரன்கோவில்

அருள்மிகு சட்டநாதர் சிவன் திருக்கோவில், சீர்காழி

அருள்மிகு தில்லை நடராசர் திருக்கோவில், சிதம்பரம்

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோவில், திருவண்ணாமலை

அருள்மிகு அன்னை அபிராமி திருக்கோவில், திருக்கடையூர்

அருள்மிகு சூரியபகவான் திருக்கோவில், சூரியனார்கோவில், கும்பகோணம்

அருள்மிகு சந்திரன் திருக்கோவில், திங்களூர்

அருள்மிகு வைத்தீஸ்வரர் திருக்கோவில், (செவ்வாய் ஸ்தலம்)

அருள்மிகு புதன்பகவான் திருக்கோவில், திருவெண்காடு

அருள்மிகு ஆபத்சகாய ஈஸ்வரர் (குரு) திருக்கோவில், ஆலங்குடி

அருள்மிகு சுக்கிரன் பகவான் திருக்கோவில், கஞ்சனூர்

அருள்மிகு சனீஸ்வரர்பகவான் திருக்கோவில், திருநள்ளாறு, காரைக்கால்



அருள்மிகு திருநாகேஸ்வரம் (ராகுபகவான்) திருக்கோவில்

அருள்மிகு கேதுபகவான் திருக்கோவில், கீழப்பெரும்பள்ளம்



அருள்மிகு குடும்பியான்மலை திருக்கோவில், புதுக்கோட்டை

அருள்மிகு நார்த்தாமலை திருக்கோவில், புதுக்கோட்டை

அருள்மிகு மூவர் திருக்கோவில், புதுக்கோட்டை

சித்தன்னவாசல், (குகை ஓவியங்கள்) புதுக்கோட்டை

அருள்மிகு முருகன் திருக்கோவில், பழநி

அருள்மிகு செந்திலாண்டவர் திருக்கோவில், திருச்செந்தூர்

அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோவில், சுவாமிமலை

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், திருத்தணி

அருள்மிகு தியாகராசர் சுவாமி திருக்கோவில், திருவாரூர்

அருள்மிகு சிக்கல் சிங்காரவேலன் சுவாமி திருக்கோவில், நாகப்பட்டிணம்

அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோவில், இராமேஸ்வரம்

அருள்மிகு வெங்கடேஷ்வர சுவாமி திருக்கோவில், திருமலை திருப்பதி

அருள்மிகு கள்ளழகர் சுவாமி

அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில்

அழகர் கோவில், மதுரை மாவட்டம்

அருள்மிகு பதினெட்டாம்படி கருப்பணசாமி

அழகர் கோவில், மதுரை மாவட்டம்

அருள்மிகு மடையடிகருப்புசாமி திருக்கோவில், வெள்ளையன்கண்மாய்,
வெள்ளரிப்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

அருள்மிகு வெள்ளிமலையாண்டி திருக்கோவில், அ.வல்லாளப்பட்டி, மேலூர் வட்டம், மதுரை

அரியப்பன்பட்டி கிராம பொதுமந்தை, அ.வல்லாளப்பட்டி மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

அருள்மிகு காஞ்சிவனம் சுவாமி திருக்கோவில், மேலூர்

அருள்மிகு பெரியபனையூர் அய்யனார்கோவில், அட்டப்பட்டி, சிறுகுடி நாடு, மேலூர்வட்டம், மதுரை மாவட்டம்

அருள்மிகு கருங்கல் மந்தைசுவாமி கோவில்

வெள்ளலூர், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

அருள்மிகு ஏழைகாத்த அம்மன் கோவில்

வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

அருள்மிகு வல்லடிகாரர் சுவாமி கோவில்

வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

மயில்ராயன் கோட்டை நாடு, சிவகங்கை மாவட்டம்

தமறாக்கி நாடு, சிவகங்கை மாவட்டம்

ஸ்ரீ தண்ணாயிரமூர்த்தி அய்யனார்

ஏனாதி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு அருள்மொழிநாதப்பெருமான் திருக்கோயில், சோழபுரம்

சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு அதிகுந்த வரத அய்யனார் கோவில், நாலுகோட்டை
சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு ஸ்ரீ தெட்சிணாமூர்த்தி, பட்டமங்கலம், சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு அழகு சௌந்தரிஅம்மன் கோவில், பட்டமங்கலம், சிவகங்கை மாவட்டம்

ஸ்ரீ கண்டு கொண்ட மாணிக்கநாச்சி அம்பாள், கண்டரமாணிக்கம்
சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு சுகந்தவனேசுவரர் (எ) ஆண்டபிள்ளை நாயனார்,

நவபாசான ஸ்ரீ காசி பைரவர், ஒற்றை ஸ்ரீ சனீஸ்வர பகவான்

பெரிச்சிக்கோவில், பெரிச்சியூர், சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு புல்வநாயகி அம்மன் திருக்கோவில்

பாகனேரி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு சொர்ணமுத்தீஸ்வரர் திருக்கோவில்

கண்டதேவி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு சௌமியநாராயண பெருமாள் கோயில்

திருக்கோஷ்டியூர், சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு சொர்ணகாளீஸ்வரர் திருக்கோவில்

காளையார்கோவி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோவில்

நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவில்

பிள்ளையார்ப்பட்டி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில்

தாயமங்கலம், சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு சேவுகப்பெருமாள் திருக்கோவில்

சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு குன்றக்குடி முருகன் திருக்கோவில்

குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில், மதுரை

அருள்மிகு பழமுதிர்சோழை முருகன் திருக்கோவில்

அழகர் கோவில், மதுரை மாவட்டம்

அருள்மிகு முருகன் திருக்கோவில், திருப்பரங்குன்றம், மதுரை

அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோவில், திருமொகூர், மதுரை மாவட்டம்

அருள்மிகு வேதநாயகி அம்பாள் சமேத திருமறைநாத சுவாமி திருக்கோவில்

திருவாதவூர், மதுரை மாவட்டம்

அருள்மிகு மாணிக்கவாசகர் திருக்கோவில் (மாணிக்கவாசகர் பிறந்த இடம்)

திருவாதவூர், மதுரை மாவட்டம்

அருள்மிகு கழுவநாதர் சுவாமி திருக்கோவில், கருமாத்தூர், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்

அருள்மிகு ஒச்சாண்டம்மன் திருக்கோவில், பாப்பாபட்டி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்

தெய்வத்திருவாளர்கள் : 1) பஞ்சபுலித்தேவர், 2) சின்னுடையாத்தேவர், 3) மதயானைத்தேவர், 4) பெரிய கருப்பத்தேவர், 5)காக்கும் வீரத்தேவர், 6) கேசத்தேவர், (பிறமலைக்கள்ளர் நாட்டின், எட்டு நாட்டு பெரிய தேவர்கள்) கோட்டை மந்தை கொத்தள பெரிய கருப்பு கோவில், கருமாத்தூர், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்

அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோவில், வீரபாண்டி, தேனிமாவட்டம்

அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோவில், திண்டுக்கல்

அருள்மிகு பாண்டிமுனிஸ்வரர் திருக்கோவில், பாண்டிகோவில், மதுரை

ஆதார நூல்கள்

1. கள்ளர் சரித்திரம் - தெய்வத்திரு. ந.மு.வேங்கடசாமி நாட்டார்

2. மாமன்னர் இராசராசனும் - கள்ளர் வரலாறும், வெளியீடு இராசராசன் கல்வி பண்பாட்டுக் கழகம், தஞ்சை மாவட்டம்

3. வெற்றி கொண்ட நம் வேந்தர்கள் - பேராசிரியர் முனைவர். சிவ.சீதளா

4. தமிழக சமுதாய வரலாறு - திரு.N.G.மணி

5. சோழர் வரலாறு - டாக்டர் திரு. மா.ராசமாணிக்கனார்

6. கதை சொல்லும் கல்வெட்டு - பாகை நாடன்

7. தி இந்து, தினமலர், தினத்தந்தி, தமிழ் நாளேடுகளிலிருந்து செய்திகள், கட்டுரைகள்.

இவ்வரலாற்று நூல் சிறப்பாக அமைய மெருகேற்ற உதவிய மேற்படி நூல்கள், தமிழ் நாளேடுகளுக்கும் எங்களது இதயங்கனிந்த நன்றி.

- ஆசிரியர் -

பணமா? மனமா?

கொடுப்பதற்கு என்ன தேவை பணமா? மனமா? பணம் வேண்டும்தான். ஆனால் வசதி உள்ளவர்கள் எல்லாம் தானம் செய்வர் எனக்கூறமுடியாது. கொடுப்பதற்கு மனம் வேண்டும் அத்தகைய மனம் கொண்டவர்களை, மனம் மகிழ்ந்து இவ்வுலகம் இசை பாடுகிறது.

அவ்வாறு தமிழக கள்ளர் வரலாறு நூல் அச்சிட்டு வெளியிட பணம் தானம் வழங்கிய வள்ளல் களை வாழ்த்துகிறோம் மற்றும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம். இப்படி உதவிக்கரம் நீட்டிய உத்தமர்களின் உன்னதைப் பணியினாலேயை ஒப்பற்ற ஈகையாளராக என்றும் திகழ்கிறார்கள்.அவர்களுக்கு, அவர்கள் செய்த தானம் மகிழ்ச்சியை மட்டுமா தருகிறது? மன நிறைவைத் தருகிறது: ஆத்ம திருப்தியைத்தருகிறது. மக்கள் மனதில் என்றும் வாழ்கிறார்கள். அப்படி நாமும் வாழ்வோம்!

நன்கொடை வழங்கிய நல்ல உள்ளங்கள்:

1. திரு. வே.பார்த்திபன் அம்பலம் B.Sc.,-திருநிறைச்செல்வம் B.Sc., ரூ.1,00,000/-
   கட்டக்காளை வகையறா, நய்க்கான் தேவன் கரை, உறங்கான்பட்டி,
   வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

2. திரு.K.கந்தசாமி BE., (Mech) மொந்தை உறங்கான் வகையறா ரூ.25,000/-
   (மொந்தை உறங்கான் வகையறா, சலுப்புலி கரை)
   M/s Sakthi Erection & Engineering Consultant, Cell : 98436 39331, 92444 83111
   உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

3. திரு.M.பெருமாள் அம்பலம் ரூ.25,000/-
   (நண்டன் கரை) கூட்டுறவு பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்
   வல்லவன் செட்டிநாடு A/C ரெஸ்டாரண்ட் அரும்பாக்கம்
   கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில், சென்னை
   செல் : 98400 64586, போன் : 044 23634045, 23635827

4. திரு,திருமதி.சுடர்விழிசேதுபதி B.E., M.B.A., ரூ.25,000/-
திருமான் கரை, கன்னிமார்பட்டி, வெள்ளலூர் நாடு,
சிவகங்கை மாவட்டம் (இ) துபாய்

5. திரு.க.பாண்டி ரூ.25,000/-
திருமான் கரை, கன்னிமார் பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்,
(தலைமை நிர்வாக அதிகாரி (ஓய்வு) நீதித்துறை, தமிழக அரசு)

6. திரு.K.திருக்குமரன் BE., மொந்தை உறங்கான் வகையறா ரூ.20,000/-
(சலுப்புலித் தேவன்கரை) உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

7. திரு.மா.ரகுபதி அம்பலம் ரூ.10,000/-
நரியன் வகையறா, செம்புலி கரை, குப்பச்சிப்பட்டி
ஸ்ரீ அழகர் பைனான்ஸ், வெள்ளலூர், செல் : 98433 44564
வெள்ளலூர் நாடு, மதுரை மாவட்டம்.

8. M.A.ராஜு அம்பலம் BA., DME., ரூ.10,000/-
வேங்கைப்புலி கரை, K.உசிலம்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்
மாஸ்டர் ஆட்டோமோபைல்ஸ், இன்ஜினியரிங் ஒர்க்ஸ், Cell : 96268 94475
3/35, சிவகங்கை மெயின்ரோடு, கோட்டநத்தம்பட்டி அஞ்சல், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

9. திரு.JC.இரா.இராமகிருஷ்ணன் D.EEE., ரூ.10,000/-

LIC.குரோர்பதி முகவர், நாலுகோட்டை, நாலுகோட்டை நாடு, சிவகங்கை மாவட்டம்

ஸ்ரீ அபிராமி ஜுவெல்லர்ஸ்

105, சத்தியமூர்த்தி தெரு, சிவகங்கை.

கிளை : மெயின்ரோடு, சாலூர், சிவகங்கை மாவட்டம்

செல் : 94423 85066

ஸ்ரீ நிவாசா காபி ஓர்க்ஸ்

10. திரு.P.பாலசந்தர் B.Sc., ரூ.10,000/-

வேங்கைப்புலித் தேவன் கரை, K.உசிலம்பட்டி,

வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

ஹரிபாலா டிரைவிங் ஸ்கூல், செல் : 90951 10430, 82703 45007

(அரசு அங்கீகாரம் பெற்றது - லைட் & ஹெவி லைசன்ஸ்)

சிவகங்கை, மானாமதுரை, காளையார்கோவில், மேலூர்

11. ம.ராமையா அம்பலம் - தெய்வத்திரு.ரா.ராக்காயி அம்மாள் ரூ.10,000/-

மகள்கள் மற்றும் பேரன், பேத்திகள்

சூறாவளி வகையறா, வேங்கைப்புலி கரை உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

12. திரு.K.செந்தில் BE., மொந்தை உறங்கான் வகையறா ரூ.10,000/-

(சலுப்புலித் தேவன்கரை) உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு,

மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

13. திரு.Er.M.மதிவாணன் M.B.A., வேங்கைப்புலி கரை ரூ.10,000/-

லெக்ஷ்மி இண்டஸ்ட்ரீஸ், லெக்ஷ்மி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேசன்

கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம், செல் : 97515 52522

14. திரு.P. இளங்கோவன் அம்பலம் D.M.E., A.M. I.E., ரூ.10,000/-

S/o R.C. பழனிவேல் அம்பலம், Ex. Army, Ex. ஊராட்சி மன்றத்தலைவர்

வேங்கைப்புலி கரை, கண்டாங்கிப்பட்டி ஊராட்சி, K. உசிலம்பட்டி,

வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

Industrial Construction Manager, Exterran Middle East Oman.

மகத்தான பங்களிப்பாளர்கள்

நிர்வாகிகள், வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம், வெள்ளலூர் நாடு

ம.ராமையா அம்பலம்
உறங்கான்பட்டி,
வெள்ளலூர் நாடு

கி.கதிரவன் அம்பலம்
புலிமலைப்பட்டி,
வெள்ளலூர் நாடு

சுப.கிட்டு (எ) கிருஷ்ணன் அம்பலம்
குப்பச்சிப்பட்டி,
வெள்ளலூர் நாடு

நாட்டார்.
செ.வீ.ராஜ்குமார் அம்பலம்
கூட்டுறவுபட்டி, வெள்ளலூர் நாடு
செயலாளர், இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம்,
சிவகங்கை மாவட்டம்

கா.கந்தசாமி அம்பலம் BE.,
M/s Sakthi Erection &
Engineering Consultant,
உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

இரா.மணிகண்டன் அம்பலம்
அல்லூர்,
ஆப்பிள் பிரிண்டர்ஸ்
மதுரை மற்றும் சிவகங்கை

தமிழக கள்ளர் வரலாறு நூல் சிறந்த முறையில் உருவாவதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும்தான் என்றால் மிகையாது. எப்படி எழுதப்போகிறேன் எவ்வாறு அச்சிட்டு வெளியிடப்போகிறோம் என்ற நிலையிலிருந்தவனை நாங்கள் இருக்கிறோம் என்ன உதவியோ, பணியோ நாங்கள் செய்து தருகிறோம் என்று ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு நம்பிக்கையை ஊட்டி என்னுடனே இவ்வரலாற்றுக்காக பயணம் செய்தவர்கள் என்று கூறி மட்டற்ற மகிழ்ச்சியடைந்து நன்றிகூறவும் அவர்களுக்கு காலங்காலமாக கடமைபட்டிருக்கிறேன்.

கட்டக்காளை மு. இராதாகிருஷ்ணன்

ஆசிரியர்

ஊக்கம் அளித்தவர்கள்

திருவாளர்கள்

Dr.A.R.சாந்தமோகன் களத்தில்வென்றார் M.S., மாநிலத் தலைவர், இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம்

S.திருமாவளவன் வல்லாளத்தேவர், M.Com., MABL., MBA., M.Phil., மாநில பொதுச்செயலாளர், இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம்

A.சத்திதானந்தம் மல்லிகொண்டார் B.Com., பொருளாலர், இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம்

Kr.அம்பலத்தரசு அம்பலம்,M.A.B.L., பெரியஅம்பலகாரர் கண்டமாணிக்கம் நாடு, சிவகங்கை மாவட்டம் தலைவர், தமிழ்நாடு வீர விளையாட்டு பாதுகாப்பு நலப் பேரவை

T.மணிமொழியன் விசுவராயர், M.Com., M.Ed., தலைவர், தஞ்சை மாவட்ட, இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம்

சொ.பகீரத நாச்சியப்ன் அம்பலம், தலைவர், சிவகங்கை மாவட்ட இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம் (மயில்ராயன்கோட்டை நாட்டார்)

K.சரவணன் அம்பலம், பொருளாலர், வடசென்னை மாவட்ட இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம் (கண்டரமாணிக்க நாட்டார்)

S.M.V.B.மகேந்திரன் அம்பலகாரர், பெரிய அம்பலகாரர், வெள்ளரிப்பட்டி, (மேலத்தெரு, மேலநாடு), மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

வே.பார்த்திபன் அம்பலம் B.Sc., கட்டக்காளை வகையறா, நய்க்கான் தேவன் கரை, உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

வழக்கறிஞர், சிவ.கலைமணி அம்பலம், மாநில செயலாளர், அ.இ,பா.பி, மேலூர், மதுரை மாவட்டம்

V.பாலமுருகன் B.A.B.L., வழக்கறிஞர், மணப்பட்டி, சிறுகுடி நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

K.ஐங்கரன் அம்பலம், அட்டப்பட்டி, சிறுகுடி நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

C.T.கண்ணதாசன் அம்பலம், வாளுக்குவேலிஅம்பலம், சம்மேளனசபை, நகரம்பட்டி, பாகனேரி நாடு, சிவகங்கை மாவட்டம்

M. தனபாலன் அம்பலம், வேங்கைப்புலி கரை, பெ.ஒக்கப்பட்டி, வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

M. அழகுபாண்டி அம்பலம், மூண்டவாசி கரை, V. மலம்பட்டி வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

M.வல்லப்பன் அம்பலம் B.Com., நரியன் வகையறா, செம்புலிதேவன் கரை, குப்பச்சிப்பட்டி, வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம். (நிறுவனர் வல்லபா வித்யாலயா (CBSE.Syllabus) திருவிழான்பட்டி, அழகர்கோவில் ரோடு, மதுரை மாவட்டம்)

M. மாணிக்கம் அம்பலம் I.R.A.S (Retd) Indian Railways, உறங்கான் வகையறா, சலுப்புலி கரை, வெள்ளலூர் நாடு, (இ) செகந்திராபாத், தெலுங்கானா மாநிலம்

M. அரிராமகிருஷ்ணன் அம்பலம், ACTO (Retd), வேங்கைப்புலி கரை, பழையூர்பட்டி, வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

பெ.மு.நாராயணன் அம்பலம், திருமான்கரை, கள்ளர் ஆதினிப்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

ஆண்டப்பன் இராசேந்திரன் அம்பலம், செம்புலி கரை, விவசாய கூட்டுறவு வங்கித் தலைவர், உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

M.ராஜேந்திரன் அம்பலம் - லெட்சுமிராஜேந்திரன் சிட்டன் வகையறா, சாயும்படை தாங்கி கரை, தம்பட்ட மலைப்பட்டி, முன்னால் தலைவர், உறங்கான்பட்டி ஊராட்சி ஒன்றியம், வெள்ளலூர் நாடு

M. ராமையா அம்பலம், சாயும்படை தாங்கி கரை, அம்பலகாரன்பட்டி வெள்ளலூர் நாடு

A.M.முத்துப்பாண்டி அம்பலம், வேங்கைப்புலி கரை, நயத்தான்பட்டி, வெள்ளலூர் நாடு,

S. மகேந்திரன் அம்பலம், சமட்டி கரை, அம்பலகாரன் பட்டி, வெள்ளலூர் நாடு,

Er.ம.மதிவாணன் அம்பலம் MBA., வேங்கைப்புலி கரை, (லெக்ஷ்மி இண்டஸ்ட்ரீஸ் & லெக்ஷ்மி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேசன்) கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

ஆ.மகாலிங்கம் அம்பலம், திருமான் கரை, அன்பு டிராவல்ஸ், வெள்ளலூர், வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

மு.முத்துலிங்கம் அம்பலம், வெக்காலிகரை, வெள்ளலூர், வெள்ளலூர் நாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

S. முத்தையா அம்பலம், தின்னப்பன் வகையறா, சலுப்புலி கரை, கொட்டாணிப்பட்டி, வெள்ளலூர் நாடு

M. காளமேகம் (எ) கொத்தாளம் அம்பலம், மொந்தை உறங்கான் வகையறா, சலுப்புலி கரை, உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

கரு.பாண்டியன் அம்பலம், சிட்டன் வகையறா, சாயும்படைதாங்கி கரை, புலிமலைப்பட்டி, வெள்ளலூர் நாடு

B.செல்வம் அம்பலம், சமட்டி கரை, (பேக்கரி) பழையூர்பட்டி, வெள்ளலூர் நாடு

கதி.பாண்டி அம்பலம், சிட்டன் வகையறா, சாயும்படைதாங்கி கரை, புலிமலை பட்டி, வெள்ளலூர் நாடு

பெரி.செல்லக்கண்ணு அம்பலம், சிட்டன் வகையறா, சாயும்படைதாங்கி கரை, புலிமலை பட்டி, வெள்ளலூர் நாடு

M.ரகுபதி அம்பலம், நரியன் வகையறா, செம்புலி கரை, குப்பச்சிப்பட்டி, வெள்ளலூர் நாடு

K.நீதிதயாளன் அம்பலம் (எ) ராஜா, தலைமை காவலர் (ஓய்வு), காவல்துறை, மூண்டவாசி கரை, V. மலம்பட்டி, வெள்ளலூர் நாடு

K.திருக்குமரன் DCT., மொந்தைஉறங்கான் வகையறா, சலுப்புலி கரை, உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

K.செந்தில்குமார் DCE., மொந்தைஉறங்கான் வகையறா, சலுப்புலி கரை, உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

R.அசோக்குமார் அம்பலம் MA., M.Sc., MBA., நய்க்கான் தேவன் கரை, உச்சரிச்சான்பட்டி, வெள்ளலூர் நாடு

பெரி.இளையராஜா அம்பலம், வல்லான் வகையறா, நய்க்கான்தேவன் கரை, உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு

ம.பாரதிவாசு அம்பலம், (டிஜிட்டல் ஸ்டுடியோ), மாங்குளம், மேலநாடு, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

A.K.பூபதி அம்பலம், வேங்கைப்புலி கரை, K.உசிலம்பட்டி, வெள்ளலூர் நாடு,
சிவகங்கை மாவட்டம், (இ) தூத்துக்குடி

க.பாண்டி அம்பலம், திருமான்கரை, நீதித்துறை (ஓய்வு) கன்னிமார்பட்டி, வெள்ளலூர் நாடு,
சிவகங்கை மாவட்டம்

பெ.மா.செல்வம் அம்பலம், செம்புலி கரை, சிவல்பட்டி, வெள்ளலூர் நாடு,
சிவகங்கை மாவட்டம் (இ) திருச்சி மற்றும் மஸ்கட்

திருமதி.சுடர்விழி சேதுபதி B.E., M.B.A., திருமான் கரை, கன்னிமார்பட்டி, வெள்ளலூர் நாடு, (இ) துபாய்

R.லோகநாதன் அம்பலம் DCE., வேங்கைப்புலி கரை, கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, (இ) சிங்கப்பூர்

P.குமரேசன் அம்பலம் BE., நண்டன் கரை, கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, (இ) மஸ்கட்

R.V.முத்துகிருஷ்ணன் அம்பலம் BE., மூண்டவாசி கரை, தேவன்பெருமாள்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம் (இ) துபாய்

பா.பிரேம்ஆனந்த் அம்பலம் மூண்டவாசி கரை, கூலிப்பட்டி, வெள்ளலூர் நாடு (இ) சிவகங்கை.

M.A. ராஜூ அம்பலம், B.A., DME., வேங்கைப்புலி கரை K. உசிலம்பட்டி, (மாஸ்டர் ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோட்டநத்தம்பட்டி) வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

V. சரவணன் அம்பலம், B.Sc., M.L.I.C., சீறும்புலித்தேவன் வகையறா, நய்க்கான் தேவன் கரை, கட்டக்காளைப்பட்டி, வெள்ளலூர் நாடு (M/S முருகன் டிராவல்ஸ் ஏஜன்சி, மதுரை)

K. சிரஞ்ஜீவி பிரேம் அம்பலம், B.Sc., பிரவலூர், ஆறூர் வட்ட வகைநாடு, சிவகங்கை மாவட்டம்

S. லோகநாதன் அம்பலம், DME., கீழப்பூங்குடி, ஆறூர் வட்ட வகைநாடு, சிவகங்கை மாவட்டம்

A. பாலமுருகன் அம்பலம், B.A.B.L., தமறாக்கி, தமறாக்கி நாடு, சிவகங்கை மாவட்டம்

R. கார்த்தி அம்பலம், இடையமேலூர், ஆறூர் வட்ட வகைநாடு, சிவகங்கை மாவட்டம்

M. செல்வமணி அம்பலம், குமாரபட்டி, தமறாக்கி நாடு, சிவகங்கை மாவட்டம், (செல்வா ஸ்டுடியோ, சிவகங்கை)

R. மழுவேந்தி அம்பலம், I.T.I , மூண்டவாசி கரை, தேவன்பெருமாள்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்.

K. கணேஷ்ராஜன் அம்பலம், வேங்கைப்புலி கரை, கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

தனபால் அம்பலம், மூண்டவாசி கரை, (கூட்டுறவுத்துறை ஒய்வு) முருகன்பட்டி, வெள்ளலூர் நாடு,

சோழர் வீர.செல்வம் அம்பலம், நண்டன் கரை, கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

மாஸ்டர் K. சரவணன் அம்பலம், வேங்கைப்புலி கரை, கூட்டுறவுப்பட்டி, வெள்ளலூர் நாடு, சிவகங்கை மாவட்டம்

S.P. முருகானந்தம் சின்னசமட்டி, கீழக்கண்டனி, சிவகங்கை

ஓம்சக்தி S. கேசவன் - ரேவதி K.உசிலம்பட்டி, வேங்கை புலிகரை, (இ) சிவகங்கை

S. நகுலேஷ்வரன், நண்டன்கரை, வெள்ளலூர் நாடு, கூட்டுறவுப்பட்டி, சிவகங்கை மாவட்டம்

பருசப்புலி V. ரவிச்சந்திரன்தேவர், பாகனேரி, பாகனேரி நாடு, சிவகங்கை மாவட்டம்

மயிலை பா.தேவேந்திரன் அம்பலம், பொன்குண்டுப்பட்டி, மயில்ராயன்கோட்டைநாடு, சிவகங்கை மாவட்டம் (வரலாற்று ஆய்வாளர்)

கா.மதிவாணன், தமறாக்கி, தமறாக்கி நாடு, சிவகங்கை மாவட்டம்

நா.சௌமியமூர்த்தி சேர்வை, கக்காட்டிருப்பு, புதூர், மட்டமங்களம் நாடு, சிவகங்கை மாவட்டம்

M. ராஜபாண்டி அம்பலம், மேலூர், பழைய நாடு, (நடுவி நாடு), மதுரை மாவட்டம்

B. கோபி, பனையூர், சலிப்புலிகரை, சிவகங்கை மாவட்டம்

A.P.J. முருகன் அம்பலம் BBA., இடையமேலூர், சிவகங்கை மாவட்டம்

M. ராஜசேகரன் BE., - மாலதி BA., இடையமேலூர், ஆரூர்வட்டவகை நாடு, சிவகங்கை மாவட்டம்

க.கண்ணன், மூண்டவாசிகரை, சேந்தி உடையநாதபுரம், சிவகங்கை மாவட்டம்

B. ராஜேஷ் MA., - சங்கர் DCA., பிரதர்ஸ், கூத்தாண்டன், சிவகங்கை

செவரை இளஞ்சேனை சி.ராதாகிருஷ்ணன், செவரக்கோட்டை, செல்வரசன் கோட்டை நாடு, கல்லல்

P.M. விஸ்வநாதன் B.A.B.L., மூ.மு.க மாவட்டத் தலைவர், கூத்தாண்டன், சிவகங்கை

அ.சத்தியசீலன் (எ) சேகர் அம்பலம், வேங்கைப்புலி கரை, கூட்டுறவுப்பட்டி, உதவி ஆய்வாளர் (SSI) காவல்துறை, (இ) சிவகங்கை

கண.கார்த்தி அம்பலம், B.A., நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம்

சத்தியமூர்த்தி அம்பலம், (மயில்ராயன்கோட்டை நாட்டார்), இருப்பு தர்மாசனப்பட்டி,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

M.முத்துராமலிங்கம் அம்பலம், Ex.சேர்மேன், தமறாக்கி, தமறாக்கி நாடு

apple printers

A range of latest machines

World - class quality

End - to - End facilities

Under one roof

Apple Printers has constantly looked ahead into the future and lead the way for rest. Its pioneering spirit has resulted in it placing orders for sophisticated equipment that other saw little reason to acquire until shown the way by Apple.

PRE - PRESS

- Concept Development
- Graphics and illustration
- Packaging design
- Photographic retouching
- Artwork
- Dye line
- Digital proofs

PRESS

- Product Catalog
- Promotional Material
- Magazine, Book Work
- Stickers, Tag Work
- Box work
- Rigid Box
- Packing Box

POST - PRESS

- Simple & Complex folds
- Die cutting & Creasing
- Varnish, UV
- Lamination
- Embossing, Foil Stamping
- All Kind of Binding

CONTACT US

www.appleprinters.in

MADURAI

Door No. 18, Vaithiyanathan Iyyer 1st Street,
Shenai Nagar, Madurai 625 020

+91 452 4500 977

+91 94884 60977

applemdur@gmail.com

SIVAGANGA

Door No. 1/86, Near Bus Stand
Thondi Road, Sivaganga 630 561

+91 4575 240 377

+91 94884 60977

applesvga@gmail.com